


கலைமகள்

18/-



ADWAVE/IB/1785

தரத்தைக் குறிக்கும் டிடிகே சின்னம்



பல வகைகளில் உங்களுக்கு உதவுகிறது...

ஆம். உங்கள் இல்லத்தில் இருக்கவேண்டிய எதுதானோ ஏராளமான பொருளகளை வழங்குகிறது டிடிகே குரூப்.

பிரஷர் குக்கர்கள். மிக்ஸி. ஹாட் பிளேட். பவர்பள்-ஜூட்கள். ஷேவிங் கிரீம். பிளேடுகள். ஷூ பாலிஷ். டேர் பிரஷ். கடிகாரங்கள். சுருக்குடை சாதனங்கள். மருந்துகள். அட்லாஸ்கள். மொத்தத்தில், உங்கள் இல்லத்திற்கு இன்றியமையாது தேவைப்படும் எல்லாவற்றையுமே வழங்கி, உங்கள் வாழ்வை முழுமையாக ஆக்குகிறது டிடிகே குரூப்.

டிடிகே மாபு

தொடக்கத்திலிருந்தே டிடிகே குரூப்பில் விளைந்து செயலாற்றும் திறனும் பலதொழில் ஆக்கமும் ஒரு மரபாக இருந்து வருகின்றன.

1928-ல் இங்கிலாந்தின் வீவர் பிரதர்ஸ் தயாரிப்புகளை விநியோகிக்கும் ஏஜென்சியாக மிக எளிய முறையில் தொடங்கி, இன்று டிடிகே குரூப் பல்வேறு பொருள்களைத் தயாரிப்பதிலும், பல்வேறு பொருள்களை விற்பனை செய்வதிலும் சிறப்பிடம் வகிக்கும் மாபெரும் நிறுவனமாக வளர்ந்துள்ளது.

டிடிகே குரூப்

பல்வேறு பொருள்களைத் தயாரிப்பதால் மிகவும் சக்தி வாய்ந்ததாக திகழ்கிறது டிடிகே குரூப்.

பல இலட்சக்கணக்கான மக்களுக்குப் பயன்படும் பலதரப்பட்ட பொருள்களை இது வழங்குகிறது. பிரஸ்டிஜ் பிரஷர் குக்கர்கள். உட்வர்டஸ் வீசரை வாட்டர், கோஹி னூர் கருத்தடை சாதனங்கள். டான்டெக்ஸ் பனியன்-ஜட்டிகள். பிரீத் மிக்ஸி மற்றும் சமையலறை சாதனங்கள். வெல்டலீனர்ஸ் கடிகாரங்கள். வில்லியம்ஸ ஷேவிங் கிரீம். சீவி ஷூ பாலிஷ். நேஷ் படங்கள் மற்றும் அட்லாஸ்கள்.

டிடிகே குரூப்பின் பார்சுகுட்டிக்கல் பிரிவு, பல முக்கிய மருந்துகளை உருவாக்கியுள்ளது.

தொழில்துறையில், பல வகைத் தேவைகளுக்கான பல்வேறு பொருள்களைத் தயாரிக்கிறது டிடிகே குரூப். துணி ஆலைகளுக்கு பேப்பர் கோன் மற்றும் ரிங் ஸ்பின்னரிங் டியூப். காட்டன் பாதுகாப்பு துறைக்குத் தேவையான வெடிமருந்துப் உறைகள்.

பசுமைப் புரட்சியை ஏற்படுத்தும் வகையில் விவசாயிகளுக்கு பம்புசெட்டுகள் மற்றும் பலதரப்பட்ட பொருள்களை டிடிகே குரூப் வழங்கி வருகிறது.

டிடிகே தரும் உத்தரவாதம்

டிடிகே குரூப் வழங்கும் எல்லாப் பொருள்களுமே நல்ல தரத்தைக் குறிக்கும் டிடிகே உத்தரவாதத்தைக் கொண்டவை.

நல்ல தரமான பொருள்களை, அனைவரும் திருப்தியடையக் கூடிய வகையில் வழங்கவேண்டும் என்ற நல்லெண்ணத்தால், தரக் கட்டுப்பாட்டில் தனிக் கவனம் செலுத்து கிறது டிடிகே குரூப்.

மூலப்பொருள்களைத் தேர்ந்தெடுப்பது முதல், ஒரு பொருளைச் செய்து முடிக்கும்வரை, தயாரிப்பின் எல்லா கட்டத்திலும் கடுமையான சோதனை செய்யப்படுகிறது. இத்தகைய பரிசோதனைக்கு, டிடிகே குரூப்பின் எல்லா தொழில்கூடங்களிலும் மிக நவீன சாதனங்கள் உள்ளன.

இதனால்தான் டிடிகே குரூப்பின் பொருள்கள் எல்லாமே மிக உயர்ந்த தரத்தைக் கொண்டிருக்கின்றன.

தரத்தில் நல்லவகளை மேலும்து வதால்தான் டிடிகே குரூப்பின் பொருள்கள் எல்லாமே இன்று இந்தியாவெங்கும் இலட்சக்கணக்கான இல்லங்களில் நல்ல மதிப்பைப் பெற்றுள்ளன.

டிடிகே குரூப்பின் ஈடுபாடு

மக்கள் நலனில் அக்கறையும் நாடும் கொள்வதுதான் டிடிகே குரூப்பின் ஒன்றுபட்ட கொள்கை.

நாட்டிலுள்ள பல இலட்சக்கணக்கான மக்களின் பெருகிவரும் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்யும் வகையில், தொடர்ந்துகிருந்தே பல்வேறு பொருள்களைத் தயாரித்து, வாழ்க்கைத் தரத்தை உயர்த்திவருகிறது டிடிகே குரூப்.

மேலும், சமூக மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு அதிக அளவில் மக்கள் பலருக்கு வேலைவாய்ப்பைத் தரும் வகையில், பின்தங்கிய பகுதிகள் பலவற்றில் தொழிற்சாலைகளை நிறுவியுள்ளது டிடிகே குரூப்.

இன்று, பெரிய அளவில் 14 உற்பத்தி நிறுவனங்களையும், 30,000 விநியோக ஸ்தலங்களையும் கொண்டுள்ள டிடிகே குரூப், மேலும் மேலும் வளர்ச்சிப் பாதையில் வீரநடை முன்னேறுகிறது.


தி TTK குரூப்
தரத்தின் சின்னம்

MTM-TTK-2488

ADDISON
ESTABLISHED-1873

உலோகம் வெட்டும் கருவிகள்

நாட்டின் பொறியியல் தொழிலின் அஸ்திவாரம்



பலப்பல வகை கட்டிங் கருவிகளின் டிசைன், ஆராய்ச்சி, தயாரிப்பு துறைகளின் தொன்மையும், பழுத்த அனுபவமும் பெற்ற "அடிஸன்", இந்தியாவின் முக்கியத் தொழில் களுக்கு மட்டுமல்ல, ஐரோப்பா, அமெரிக்கா, கானடா முதலிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கிறது.

அடிஸன் கட்டிங் டூல்களில் சில:

போர் டைப் மில்லிங் கட்டர்கள் ஃபார்ம் ரிலீவ்ட், ஃபார்ம் ரிலீவ்ட் அல்லாதவை, ஷாங்க் டைப் கட்டர்கள், ரீமர்கள், கோர் டிரில்கள், டேபர் ஷாங்க், ஸ்டிரெய்ட் ஷாங்க் டுவிஸ்ட் டிரில்கள், கிரவுண்ட் த்ரெட் ஸ்க்ரூயிங் டாப்புகள், கார்பைட் டிப்ட் பாயிண்ட்... மற்றும் நுகர்வோரின் தேவைகளுக்கும் அளவு களுக்கும் ஏற்றாற்போலத் தயாரிக்கப்படும் ஸ்பெஷல் டூல்கள்.

MAC/ADD/124/TAM

அடிஸன் & கம்பெனி லிமிடெட்

(அமால்கமேஷன்ஸ் குரூப் நிறுவனம் & இங்கிலாந்து கேஜெஸ் & டூல் மேக்கர்ஸ் அஸோசியேஷனின் அங்கத்தினர்)

பதிவு அலுவலகம் : 803, அண்ணா சாலை, சென்னை 600 002.

கிளை அலுவலகங்கள் : அகமதாபாத், பெங்களூர், பம்பாய், கல்கத்தா, எர்ணாகுளம், கான்பூர், லூதியானா, சென்னை மற்றும் புது டில்லி.

மலரினும் மென்மை
உடலினைக் கழுவு...

BISON



பைசன்

IS:4964

பனியன் ஜட்டி பிரா
பாவாடைகள்




பைசன் தயாரிப்புக்கள்


தனித்தன்மை, நீடித்த உழைப்பு, மென்மை, சுருங்கிவிரியும் தன்மை, அனைத்து விதத்திலும் இதமான சுகத்தில் சிறந்தவை. சிக்கனமானதும் கூட

பைசன் நிட்டிங் கம்பெனி திருப்பூர் -638604.

BUMA



तमसोमा
ज्योतिर्गमय





லக்ஷ்மி மில்ஸ்
கம்பெனி லிமிடெட்.
கோயம்புத்தூர்

அஞ்ஞானம் எனும் இருளிலிருந்து
ஞானம் எனும் ஒளிக்கு என்னை அழைத்துச் செல்லட்டும்...
இதுவே

லக்ஷ்மி மில்ஸ் கூறும்
தீபாவளி வாழ்த்துக்கள்

LM/1805

அன்று ஏற்றிய சிறு தீபம்
இன்று
ராம்கோ குரூப் எனும்
ஒளிவிளக்காக
பிரகாசிக்கிறது...

தொழில்
வளர்ச்சியிலும்

மக்கள்
பணியிலும்...





ராம்கோ குரூப் நிறுவனங்கள்

ராஜபாளையம் மில்ஸ் லிட். மதுரை சிமெண்ட்ஸ் லிட்
ஸதர்ன் ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் லிட்
ராமராஜ் சாஜிகல் காட்டன் மில்ஸ் லிட்
சுதர்சனம் ஸ்பின்னிங் மில்ஸ் லிட் ஜெயராம் மில்ஸ் லிட்
கௌரி ஹவுஸ் மெட்டல் ஒர்க்ஸ்
பி.ஏ.சி. ராமசாமி ராஜா பாலிடெக்னிக்
சினமயா வித்யாலயா பி.ஏ.சி. ராமசாமிராஜா
மெட்ரிகுலேஷன் ஹையர் செகண்டரி ஸ்கூல
பி.ஏ. சினனயாராஜா ஞாபகார்த்த மேல்நிலைப் பள்ளி
பி.ஏ.சி.ஆர். அம்மணி அம்மாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளி
பி.ஏ.சி. ராமசாமிராஜா கல்வி அறக்கட்டளை. ராஜா அறக்கட்டளை.

ACIL/0290/81

தென்னிந்தியாவின் பயணிகளுக்கான முதல் பஸ், சாலப்போக்குவரத்துத் தொழிலுக்கே பாதை அமைத்தது





1911 ஆம் ஆண்டு—அதுதான் டிவிஸ் முதன் முதலாகத் தென்னிந்தியாவில் சாலப் போக்கு வரத்தைத் தொழிலாக தொடங்கிய வருடம். அன்று முதல் டிவிஸ் இத்தொழிலின் வளர்ச்சியில் ஒரு முக்கிய பங்கேற்று வந்திருக்கிறது.

டி.வி. சுந்தரம் அய்யங்கார், பயனிகள் பஸ் போக்குவரத்தை ஆரம்பித்த பொழுது, அது சாலப் போக்குவரத்துத் தொழிலுக்குப் பல வகைகளிலும் பனிகளை அளிக்கும் ஒரு பெரிய நிறுவனமாகத் திகழப் போகிறது என்று நினைக்கவில்லை.

வளர்ச்சியின் தொடக்கம்

தமிழ் நாட்டில் முதல் பஸ் போக்கு வரத்து மதுரைக்கும், தேவகோட்டைக்கும் இடையே தொடங்கப்பட்டது. இத்தொழிலும் வள வள, நித்துறை விரிவடைது, பல்வேறுபட்ட தொழில்கள் உருவாக வாய்ப்பளித்தது.

புதிய துறைகளில் பயனுள்ள பனி

இக்கிறுவனம், 1919 இல் ஒரு முழுமையான மோட்டார் உறுப்புகள் விநியோ வாளராக மாறியது. ஆண்டுகள் கழிந்தன. டிவிஸ் விரைவிலேயே மோட்டார் மற்றும் சாலப் போக்குவரத்துத் தொழில் களுக்குத் தேவையான பலதரப்பட்ட பனிகளை அளிக்கும் அந்தரம் மிக்க பல நிறுவனங்களைக் கொண்டதாக வளர்ந்தது. இப்பனிகள்—மோட்டார் வண்டிகள் மற்றும் உறுப்புகள், விநியோகம், மோட்டார் வண்டிகளின் பழுது/பராமரிப்புப் பனி, டயர்கள ரீடிரெடு மற்றும் மோட்டார் உறுப்புகள் தயாரிப்பு—இவைகள் ஆகும்.

இன்றைய டிவிஸ்

இன்று, டிவிஸ், தென்னிந்தியா முழுவதிலும் பல கிளைகள், பனிமனைகள் மற்றும் விநியோயாளர்களைப் பெற்றுள்ளது.

தரம் நிருபிக்கப்பட்ட கார்கள், பஸ்கள் மற்றும் லாரிகளை விற்பனை செய்வதோடு, டிவிஸ், தன்னுடைய 30 கிளைகள் மூலம் நாம் மற்றும் நம்பகத்தன்மைக்கு பெயர் பெற்ற பல வகை மோட்டார் உறுப்புகளை விநியோகம் செய்கிறது.

டிவிஸ், தென்னிந்தியாவின் பல முக்கியமான கலங்களிலும், மிகச்சரலான பனிமனைகளைப் பெற்றுளளது. இப்பனி மனைகள் திறன் மிக்க இயந்திரங்கள், டூல்கள், தகுதி பெற்ற மெக்கானிக்குகள் மற்றும் தொழில் நுணுக்க வல்லுனர்களைக் கொண்டு எல்லா விதமான பழுதுகளுக்கும் ஏற்ற பனிகளை அளிக்கின்றன.

டிவிஸ், இந்தியாவின் சாலப் போக்கு வரத்துத் தொழிலுக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு அத் தொழிலின் வளர்ந்து வரும் தேவைகளைத் தொடர்ந்து எதிர் கொண்டு, அத்தருணத்தில் கொடுத்தும் பனிகளை அளித்து வருகிறது. வாடிக்கையாளர்களின் நம்பிக்கை

டிவிஸ், எப்பொழுதும் வாடிக்கையாளர்களின் தேவைகளை மனப்பூர்வமாகக் கவனிக்கிறது. அதனால்தான் பல தொடர்ந்து 30 வருடங்களுக்கும் மேலாக 'டிவிஸ் வாடிக்கையாளர்'களாக இருந்து வருகிறார்கள்.

அதுமட்டுமல்ல, டிவிஸ், எப்பொழுதும் தன் ஊழியர்களின் நலனைக் கருத்தில் கொண்டே இயங்கி வருகிறது.

சாலப் போக்குவரத்துத் தொழிலின் முன்னோடியாகத் திகழும் இந்நிறுவனம், மோட்டார் உறுப்புகளில் உளாட்டுத் தயாரிப்புகளுக்கு ஊக்கமளித்தது; மக்கள் பனியில் தன்னுடைய தொழில் நுணுக் கங்கள், ஊழியர்களின் திறன்மிக்க வைகள் மற்றும் வெளாற்றல் அனுதலையும் அளித்தது; எழுபதாண்டுகளுக்கும் மேலாக சீரிய சேவை மரபினைத் தொடர்ந்து செயல்படுகிறது.

SAA/TVS/1169

TVS

உங்கள் நம்பிக்கைக்குரியது டிவிஸ்

டி.வி. சுந்தரம் அய்யங்கார் அண்ட் சன்ஸ் லிமிடெட்
மதுரை மற்றும் கிளைகள்

சுந்தரம் மோட்டார்ஸ்
சென்னை மற்றும் கிளைகள்


மதரஸ் ஆட்டோ சர்வீஸ்
சென்னை மற்றும் கிளைகள்

இல்லத்தரசியை இன்னொரு வீட்டர்சியே
புரிந்து கொள்ள இயலும்!

LUX-RM-9/81 Tam

எனவே புதிய ராலிமிக்ஸ் ஸூப்பர் மிலக்ஸ்

எப்படி அமைய வேண்டும் என்று ஒரு குடும்பத்தலைவியைக் கேட்டறிந்தோம்.



ஆகவேதான் புதிய ராலிமிக்ஸ் ஸூப்பர் மிலக்ஸ் எல்லாச் சிறப்புகளும் கொண்டு விளங்குகிறது. நீங்களே பாருங்கள். வேறெந்த மிக்ஸரும் இதற்கு இணையாகாது என்பதை நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள்.

பல் முனைப் பயன்தரும் பிளேடுகள்
நிரந்தரமான, கூடுதல் கூர்மை கொண்ட ஒரு செட் பல்முனைப் பயன்தரும் பிளேடுகள். சீராகவும் சுமுகமாகவும் அரைப்பதற்கென்றே விசேஷ கோணத்தில் அமைக்கப்பட்டுள்ளன. பிளேடுகளே மாற்றும் அவசியமே இல்லை. உலர்ந்த மற்றும் ஈரமான அரவை வேலைகளை ஒரேபோல் சீராகச் செய்ய இந்த செட் ஒன்றே போதும். தவிரவும் சுழற்றி மாட்டக்கூடிய பிளேடுகள் சரியாகப் பொருந்தாதிருந்து, அடிக்கடி நேர்க்கூடிய பெரும் விபத்துகளின் அபாயம் தவிர்க்கப் படுகிறது.

இரட்டிப்பு ஆதாயம்
மற்றவர்களைப் போலல்லாமல், நாங்கள் இரண்டு கலவைக்கிண்ணங்களை அளிக்கிறோம். பருப்பு வகைகள் மற்றும் மசாலைகளை உலர்ந்த மற்றும் ஈரமான நிலையில் அரைக்க ஒரு ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் கிண்ணம். மில்க் ஷேக் மற்றும் மோர் தயாரிக்க, வெளிநாட்டு பிளாஸ்டிக்கில் தயாரான, இன்னொரு விசேஷ கலவைக் கிண்ணம்.

இடையூறின்றி இயங்கும் மோட்டார்
கூடுதல் சக்தி மிக்க புதிய மோட்டார். அரவை வேலை திறம்படநடக்க, மேம்பட்ட நிலையில்... வேகத்தோடு நடைபெற உருவாக்கப் பட்டுள்ளது.


வசதியான இஞ்சர் பட்டன்
சிக்கிக் கொள்ளாத, வசதிமிக்க புஷ் பட்டன் அமைப்பு.

உடனடியான ராலீஸ் பணிச்சேவை
ராலிமிக்ஸ் பணிச்சேவை—எப்போதும், எங்கும் கிடைக்கும் வண்ணம் உங்களுக்குச் சேவை செய்ய, நாடெங்கும் பரவியமைந்துள்ள ராலீஸ் விற்பனையாளர்கள்.

புதிய **ராலிமிக்ஸ்** ஸூப்பர் மிலக்ஸ்

உங்கள் எண்ணத்தை எடுத்து ராலீஸ் வண்ணம் கொடுத்துள்ளது.

தீபாவளி வாழ்த்துக்கள்



ஸ்பென்ஸர்ஸ்

பழரச பானங்கள்

அன்னாசி • திராட்சை

மாம்பழம் • ஆரஞ்ச்

ஸ்பென்ஸர்ஸ்

தயாரிப்பாளர்கள் :

ஸ்பென்ஸர் அண்ட் கோ. லிட்., சென்னை மற்றும் கிளைகள்

S 3575A TAM

அறிமுகப் படுத்துகிறோம்

புதிய

பிரெஸ்டீஜ்



காஸ்கெட் ரிலீஸ் வால்வை அகற்றிவிட்டோம்

ஒப்பற்ற காஸ்கெட் ரிலீஸ் ஸிஸ்டம் என்ற அமைப்பு இப்புதிய பிரெஸ்டீஜில் இருப்பதால் அது உங்களுக்கு மிகுந்த பாதுகாப்பைத் தருகிறது

100% பாதுகாப்பு

Patent pending

உணவுப் பொருள் வெயிட் வால்வை அடைத்துக் கொள்ளும் போது உங்கள் பிரஷர் குக்கரினுள் அதிக நீராவி அழுத்தம் ஏற்படுகிறது. இப்பொழுது உங்கள் குக்கரின் பாதுகாப்பு முழுவதும் சேப்டி பிளக் ஒன்றையே சார்ந்திருக்கிறது. ஆகும் உங்கள் சேப்டி பிளக் பேசியாக இருந்தால் என்ன செய்வது? எனெனில் எது பேசி எது அல்ல என்று உங்களுக்குத் தெரியாது.

எனவேதான் முற்றிலும் பாதுகாப்பான ஒரு அமைப்புடன் கூடிய புதிய பிரெஸ்டீஜை நாங்கள் தயாரித்துள்ளோம். இதன் ஒப்பற்ற காஸ்கெட் ரீலீஸ் ஸிஸ்டம் உங்கள் குக்கருக்கு மிகுந்த பாதுகாப்பைத் தருவதோடு சேப்டி பிளக்கைத் தேவையற்றதாக்குகிறது.



புதியபிரெஸ்டீஜை ஒப்பற்றகாஸ்கெட் ரீலீஸ் ஸிஸ்டம் 100% பாதுகாப்பு உள்ளதாகச் செய்வது எவ்வாறு?

சேப்டி பிளக் உருகும் வீடு ஏற்படுவதைத் தவிர்க்கும் முன்பே இந்த "காஸ்கெட் ரிலீஸ் ஸிஸ்டம்" பாதுகாப்பாகவும், கிச்சமாகவும் தேவைக்கு அதிகமான நீராவியை வெளி யேற்றுகிறது. இப்புதிய குக்கரில் போலியான அல்லது பழைய ஸ்பேர் பார்ட்டுகளே உபயோகித்தாலும், எப்பொழுதும் முழு பாதுகாப்புடன் இது வேலை செய்கிறது.



புதிய பிரெஸ்டீஜ்மிகவும் வசதியானது.

காஸ்கெட் தேவைக்கு அதிக நீராவியை வெளியேற்றிய பின் அதைச் சிறிது உள்ளே தள்ளினாலும் சில நொடிகளில் உங்கள் குக்கர் மீண்டும் உபயோகிக்கத் தயார், சேப்டி பிளக் தேவையில்லாததால், நீங்கள் அதை மாற்றிவர அல்லது அதைபற்றி கவலைப் பட்டோ தேவையில்லை.



நீடித்த அதிக உழைப்பிற்குப் புதிய பிரெஸ்டீஜ்

இந்த குக்கரில் பிரஷர் ஒரு போதும் அபாய அளவை அடைவதில்லை பாதுகாப்பு அதன் தேய்மானமும் குறைகிறது. புதிய பிரஸ்டீஜ் மற்ற குக்கர்களை விட அதிக நாட்கள் நீடித்து உழைக்கிறது.



மேலும் பல நன்மைகளால் கடந்த 30 ஆண்டுகளாக இந்தியாவில் மிக அதிகமாக எல்லோராலும் விரும்பப்படும் பிரஷர் குக்கர் "பிரெஸ்டீஜ்"

புதியபிரெஸ்டீஜின் மற்றும்பல சிறப்பு அம்சங்கள்.

- ★ நீடித்து உழைக்கும் அதிக கடினமான அடிப்பாகம்.
- ★ நீடித்து உழைக்கும் ஸ்டெயின்லெஸ் ஸ்டில் ஸ்பருக்கள் கொண்ட உறுதியான மைப் பிடிகள்.
- ★ குடோரு புதிய ஆக்ஸிலியரி ஹேண்டில் நல்ல பிடிப்பைத் தருகிறது.
- ★ அதிக பலமும், உறுதியும் கொண்ட புது டிசைன்.
- ★ அழகான பளபளப்பான கண்ணுடி போன்ற வெளித்தோற்றம்.
- ★ புதிய செய்முறைப் புத்தகம்.
- ★ தேர்ந்தெடுக்க வசதியான ஆறு அளவுகளில் கிடைக்கிறது.




பிரெஸ்டீஜ் முதன் முதலில் பிரஷர் குக்கரை இந்தியாவில் அறிமுகப்படுத்தியவர்கள்


To millions the world over a refrigerator means

Kelvinator

sold and serviced in over 140 countries



fitted with the world's most efficient and trouble-free **compressor** that is now warranted for **seven years.**



Kelvinator refrigerators are available in five sizes : 286 & 165 (with automatic defrost system), 135, 90 and 65 litre capacities. Kelvinator Deep Freezers are available in three sizes: 425. 275 and 85 litre capacities.

Sold & Serviced by :

Expo Machinery Limited

Pragati Tower, 6th Floor, 26 Rajindra Place, New Delhi-110008.

157, Habibullah Road, T. Nagar. Phone: 446463

KANARA

வளர்ந்து வரும் எங்கள் நிறுவனம் வளர்வது உங்கள் நம்பிக்கையில்

ஆம், சுந்தரம் பைனான்ஸ், நீங்கள் அளித்த ஊக்கத்தினால் இன்று, இந் நிலைக்கு வளர்ந்துள்ளது. 1954இல் இரண்டு லட்ச ரூபாய்கள் மூலதனத்துடன் சிறிய அளவில் துவக்கப்பட்ட இந்நிறுவனம், இன்று ரு. 200 லட்சங்கள் செலுத் தப்பட்ட மூலதனமாகப் பெற்றிருக் கிறது. அத்துடன் சுந்தரம் பைனான்ஸ் இன்று, 7000க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர் களையும், 30,000 டெபாசிட்தார் களையும் பெற்றுள்ளது.

இவ்வளமை நீங்கள் அளித்த பரிசு நீங்கள் எங்கள் வளர்ச்சிக்கு உதவியளித்தது மட்டுமல்ல நாங்கள் சாலைப் போக்குவரத்துத் தொழிலுக்குப் பணிபுரிய ஆதரவளித்திருக்கிறீர்கள். மேலும், உங்களுக்குச் சேவைசெய்ய வாய்ப்பளித் திருக்கிறீர்கள்

தவணைமுறை பண உதவிக்கு நம்பகமானவர்கள்
சுந்தரம் பைனான்ஸ் லிமிடெட்
180 மவுண்ட் ரோடு சென்னை 600 006



SAASFI/1807



தீபாவளி வாழ்த்துக்கள்
MAFATLAL
INDUSTRIES
மபத்லால்
இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
MAFATLAL
FINE
தி மபத்லால் ஃபைன்
ஸ்பின். அண்ட் மேன்யு. க. லி.

GW/T-1

மங்கலம் பொங்கிட
எங்கிலும் சென்றிடும்
சதர்ன் ரோட்வேஸ்



தீபாவளி வாழ்த்துக்கள்



TVS சதர்ன் ரோட்வேஸ் லிமிடெட்


லக்ஷ்மி பில்டிங், உசிலம்பட்டி ரோடு, கோச்சடை, மதுரை 625 016

கிளைகள்: சென்னை, கோயம்புத்தூர், செகந்திராபாத், விஜயவாடா, பெங்களூர், சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி,

SAA/SRL/2075

கோத்ரெஜ்® ஸ்டோர்வெல்!®

**கொடுக்கும் பணம் கொஞ்சம் கூடுதல் எனினும்,
கிடைக்கும் பயன்கள் கொஞ்சம் கூடவே!**



கூடுதல் உறுதி. நிறைந்த பாதுகாப்பு. தேர்ந்தெடுக்க அதிகமான வாய்ப்புகள். நீடித்த உழைப்பு.

கூடுதல் உறுதி:
நாளை எதில் நமக்கு தருப் பிடிக்காது என்பதை அலமாரிகளில் அதி கோத்திரமான தெருகு கொண்டது.

நிறைந்த பாதுகாப்பு:
தனிலும் வாக்கரிலும் நமக்க முடியாத கோத்ரெஜ் பூட்டு. மறைவான கீகள். கதவை மேலும் கீழும் இரு முட வைத்தும் மும்முனைப் பூட்டுமுறை அமைப்பு.

தேர்ந்தெடுக்க அதிக வாய்ப்பு:
மேலும் கீழுமாக அட்ஜஸ்ட் செய்யக்கூடிய தெல்ப்புகள், கூடயர். துணி தொங்கவிடும் ராட், லாக்கர், ஆபரண் கண்ணாடி, உங்கள் தேவைக்கு ஏற்றபடி இணைத்துப் பெறலாம்.

நீடித்த உழைப்பு:
முன்று நிலைமுறைகளுக்கு உழைக்கும். மேலும், உழைக்க உருவாக்கப்பட்டது.

மாடல்கள், ஸ்டோர்வெல் வார்ட்ரோப் (படத்தில் உள்ளபடி) காம்பாக்ட் மற்றும் மினார். இப்போது கோத்ரெஜ் லோ.ப்மைராவும் கிடைக்கிறது.

மேலும் விவரங்களுக்கு விளம்பர பத்திரத்திற்கு எழுதவும்:
கோத்ரெஜ் & பாய்ல் மானு. கம். பிவர். லிட்.,
விற்பனைப் பிரிவு, பிரோஜ்ஷா கதர், பம்பாய்-400 079.

ULKA/GBS/1/80TAM

உன்னதமான தயாரிப்புகளுக்கு ஒப்பற்றது— கோத்ரெஜ் ஜினார்®



SAVSCU73

இந்தியாவில், லாரி மற்றும் பஸ்களுக்கான ஏர் பிரேக் சாதனங்களை முதன் முதலில் உருவாக்கிய வர்கள் சுந்தரம்-கிளேட்டன் லிமிடெட்.

சாலைப் போக்குவரத்து மற்றும் மோட்டார்த் தொழில் முன்னேடி களான டிவிஎஸ் நிறுவனத்தைச் சேர்ந்த சுந்தரம்-கிளேட்டன் இங்கிலாந்திலுள்ள கிளேட்டன் டீவாண்டர் கம்பெனி லிமிடெட் டுடன் இணைந்து உருவாக்கப் பட்டது.

இன்று, சுந்தரம்-கிளேட்டன், லாரிகள், பஸ்கள், டிரெய்லர்கள், மற்றும் ஸ்த்ரமின் வண்டி களுக்கான ஏர் பிரேக் சாதனங் களை முழுமையாகத் தயாரித்து அளிக்கின்றது. அத்துடன் நம் நாட்டின் பல கோடி மக்களுக்கு நிச்சயமான மற்றும் நம்பகமான பாதுகாப்பினை அளிக்கின்றது.

இதுமட்டுமல்ல, மேல் நாட்டி னரும் சுந்தரம்-கிளேட்டன் ஏர்-பிரேக் சாதனங்களின் தரம், நம்பகத் தன்மை சீரிய உழைப்பு— இவற்றினைக் கண்டு மகிழ்ந்து தாங்கள் தயாரிக்கும் வண்டிகளில் அவைகளைப் பொருத்துகின்றனர்.

ஆம் அன்றும், இன்றும், லாரி, பஸ் மற்றும் எல்லா வாகன உரிமையாளர்களும் விரும்பிப் போற்றுவது CD-TVS ஏர் பிரேக் சிஸ்டம் தான்.


உங்கள் பாதுகாப்பு எங்கள் பொறுப்பு


CD TVS
We make your safety our business.


சுந்தரம்-கிளேட்டன் லிமிடெட்
பாடி, சென்னை 600 050.

ஈசன் தொழில் நிறுவனங்கள்

நாட்டுக்குப் பல வழிகளில் பணியாற்றுகின்றன











தயாரித்து அளிப்பவை :


- HHE பவர் டிரான்ஸ்பார்மர்கள்
- ஈசன் ஸ்விட்ச்கீயர் LT — ஈசன் மாகிளிடி டிசைன்கள்
- ஈசன் கண்ட்ரோல்கிரிலே பேனல்கள்
- டேப் சேஞ்சர்கள் – மெஷினைன் பாப்பிரிக் ரெய்ன்ஹாசன்
- ஈசன் ரேரோல ரிலேஸ்
- பிரஷர் வெசல்ஸ்
- ஸ்டாக்கரல்ஸ
- எஸ்பார் எலக்ட்ரிக்கல் ஸ்டாம்பிங்ஸ்

சேவை :


- தொழில் மற்றும் மின்சார உபயோகங்களுக்கு பூரண மின் திட்டங்கள்.

கீழ்க்கண்டவற்றிற்கு டில்ட்ரி பியூட்டர்கள் :

- பவர் & கண்ட்ரோல் கேபின்கள்
- WMW மெஷின் டூல்ஸ்
- வெல்டிங் ஹவுஸ் ப்ராசஸ் & கண்ட்ரோல் உபகரணங்கள்
- அல்லிஸ் சாமர்ஸ் எலெக்ட்ரிக்கல் பவர் எக்யுப்மெண்ட்
- மாக்கினி கலியோ – மினிமம் ஆயில் & SF 6E HT ஸ்விட்ச்கீயர்
- பம்புகள், மோட்டார்கள் மற்றும் தண்ணீர் சுத்திகரிக்கும் இயந்திரங்கள்
- ரேரோல் (NEI எலக்ட்ரானிக்ஸ்) ரிலேஸ்



ஈசன் இன்ஜீனியரிங் கம்பெனி லிமிடெட்
ஹாக்பிரிட்ஜ்—ஹேவிடிக் & ஈசன் லிமிடெட்
ஈஸ்வரன் & ஸன்ஸ் இன்ஜீனியர்ஸ் லிமிடெட்
ஈசன் ப்ராடக்ட்ஸ் ஆ:ப் இந்தியா பிரைவேட் லிமிடெட்
ஈசன் ரேரோல் ரிலேஸ் & டிவைசஸ் லிமிடெட்
சென்னை—600 001.



EP.EE –102.81-Tam

தீப ஒளிவீசும் இத்தீபாவளித் திருநாளில் எங்களது உளங்கனிந்த வாழ்த்துக்கள்!



அன்னியச் செலாவணியில்
வர்த்தகம் செய்ய
அங்கீகாரம் பெற்றது.

லக்ஷ்மி விலாஸ்
பாங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம் கரூர்-639 001
நிர்வாக அலுவலகம் சென்னை-600 086

என். வி. ஸ்ரீநிவாசன்
சேர்மன்

Tel: "SPIDER" Phone: 20160

பொன்னென நன்நாளாம்
இத்தீபாவளித் திருநாளில்
எங்கள் இதயங் கனிந்த நல்வாழ்த்துக்கள்



SHOW ROOMS

ஸ்பைடர் ஷோரூம்
104-A, காமராஜ் சாலை,
திருப்பூர்-638604.

ஸ்பைடர் ஷோரூம்
உரிமை பெற்ற விற்பனையாளர்:
ராஜாராம் டெக்ஸ்டைல்ஸ்
பஸ் ஸ்டாண்ட், மேட்டுப்பாளையம்.

ஸ்பைடர் ஷோரூம்
141, அண்ணா சாலை,
ஆர்ட்ஸ் காலேஜ் எதிர்புறம்
மதுரை-600002.

தயாரிப்பாளர்:

ஸ்பைடர் நிட்டிங் கம்பெனி

பூர்ண உரிமையாளர்:

P. சகுந்தலா பழனிசாமி

104-A, காமராஜ் சாலை, திருப்பூர் - 638604.

-PARAMOUNT

"Our Hearty Deepavali" Greetings
to all our Customers & well wishers



பரிசளிக்கச் சிறந்த

டான்சியின் படைப்புகள்!



சிறப்பு, அழகு, சிக்கனம்!
உழைப்பு, உறுதி, உயர்தரம்!

இல்லத்திற்கு எழில் கூட்டவும்
நாட்டுக்கு நலம் பெருக்கவும்
பல்வேறு படைப்புகள்
தயாரித்து வழங்கும் தனிச்சிறப்பு
பெற்ற நிறுவனம் 'டான்சி' ஒன்றே!





டான்சி
தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்
(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)
1, ஓயிட்ஸ் சாலை, சென்னை-600 014.
தொலைபேசி: 82161
தந்தி: டான்சி டெலக்ஸ்: 41-7496 TNSI

எல்லோருக்கும் எமது இதயபூர்வமான
தீபாவளி வாழ்த்துக்கள்!



பண்டிகை நாட்களில் வீடு
பளபளப்பாகக் காட்சி அளிக்க
நான் அக்சார்சேம்
சேமண்ட் பெயின்ட்
பூசி இருக்கிறேன்
நீங்களும் அப்படிச்
செய்யலாமே!

அக்சார்சேம்
வாட்டர் புரூப் சேமண்ட் பெயிண்ட்
36 கவர்ச்சிமிகு
வண்ணங்களில்
கிடைக்கிறது



EP.A 101-81 TAM

இப்போது...
அழகுக்கு ஒரு காலமைன்

பாண்ட்ஸ் காலமைன் லோஷன்

பூக்கும் அழகில் காக்கும் குணம்,
புதுமைப் பொலிவில் சருமநலம்.

சரும நலத்துடன் வேண்டும்
அல்லவா அழகுவளம்? இருவித
நன்மைகளுக்கும் இதோ,
புதுமையான பாண்ட்ஸ்
காலமைன் லோஷன். மாசு
மறுவற்ற நிர்மல பொலிவு,
மாறாத மலர்ச்சி. இளங்
தென்றலின் இதமான
குளிர்ச்சி. ஒப்பனைக்கு
முன்போ, அல்லது
தனித்தோ உபயோகிக்கத்
தக்கது—இன்மணம் கமழும்
எழில்மிகு பாண்ட்ஸ்
காலமைன் லோஷன்.



பாண்ட்ஸ்

Sri Venkateswara (Balaji) Pancharatnamala rendered by Smt. M.S. Subbulakshmi



LP 1

Sri Annamacharya
Sankirtanas
ECSD 3313 (Stereo)
Cassette No.
4TCS 03B 1165

LP 2

Sri Annamacharya
Sankirtanas
ECSD 3314 (Stereo)
Cassette No.
4TCS 03B 1166

LP 3

Ganesa Pancharatnam
Madhurashtakam
Dasavataram
Gita Govindam
Nama Ramayana
Hanuman Chalisa
ECSD 3315 (Stereo)
Cassette No.
4TCS 03B 1167

LP 4

Sri Venkateswara
Karavalamba Stotram
Kanakadhara Stavam
Lakshmi Ashtottarasatam
Durga Pancharatnam
Govindashtakam
Sri Ranga Gadyam
Dvadasa Stotram
Sikshashtakam.
ECSD 3316 (Stereo)
Cassette No.
4TCS 03B 1168

LP 5

Sri Annamacharya
Sankirtanas
ECSD 3317 (Stereo)
Cassette No.
4TCS 03B 1169

Available with all HMV dealers

HMV The Gramophone Company of India Ltd

HTC-GCI-2599

Allied Process

42, Peters Road Royapettah Madras-600014
Phone: 848892

Block-Makers of Repute,

Line,

Half Tone, Cut Colours Etc.

Quality Screen-Printers

Letterheads,


Visiting Cards, Greeting

Cards, Pamphlets Etc.,

Phone: 848892
42, Peters Road
Royapettah
Madras-600014

Allied Screens

The TV that meets the world Standards



ORIENT
VIJAY

The new wave TV

Marketed by

Orient Vision Limited

16 Haddows Road
MADRAS 600 006

Technical Consultants


Electronics Trade and Technology Development Corporation Limited

(A Government of India Undertaking)

Fill your home with divine melodies

Sangeetha-FIRST

LICENSED PRE-RECORDED CASSETTE MANUFACTURER IN SOUTH INDIA



Our releases:
Devotional

Subject	Artistes	Cassette No
Devotional Songs on Sri Raghavendra Swamy	Dr. Rajkumar	4 MSC 1001
Sri Purandara Daasaa Songs	Dr. M. Balamuralikrishna	*6 MSC 6007
Uthsava Sampradaya Krithis	Dr. M. Balamuralikrishna	*6 MSC 6008
Daasara Keerthanegalu	Bombay Sisters	6 MSC 1018
Songs on Sharadamba	Dr. Rajkumar	3 MSC 1019
Thiruppavai	Bombay Sisters	9 MSC 1027
Shri Shri Shankaracharya's Stotras	Bombay Sisters	4 MSC 1033
Purandara Daasara Songs	Dr. Bhanumathi Ramakrishna	3 MSC 1038
Purandara Daasara Kritis	Dr. Rajkumar	*6 MSC 1039
Vocal	T. N. Seshagopalan	*6 MSC 1043
Vocal	S. Kalyanaraman	*6 MSC 1047
Rudra-Namakam-Chamakam	Shri Yanamandra Narayana Sharma & Shri Hari Achutharama Sastri	6 MSC 1049
Shri Iyyappan Songs	K. J. Yesudas	*4 MSC 4001
Tamil Devotional Songs	S. Janaki	4 MSC 4007
Mukundamala	Dr. P. B. Sreenivos	*4 MSC 4011

Subject	Artistes	Cassette No
Devotional Songs on Shri Raghavendra Swamy	Dr. Balamuralikrishna	*4 MSC 4016
Arunagiri Nathar's Thiruppugazh	Bombay Sisters	*4 MSC 4017
Kanakadaasa Songs	Dr. Rajkumar	*4 MSC 4019
Bhadrachala Rama Suprabhatham & other Stotras	M. M. G. Krishna & Vijayalakshmi Sharma	6 MSC 6002
Songs on Sri Anjaneya	Dr. Rajkumar	4 MSC 1004
Vocal	Bombay Sisters	*6 MSC 1017
Shri Venkateshwara Suprabhatham & Prapatti	Dr P. B. Sreenivos	*6 MSC 6018
Rajeswari Suprabhatham & Ashtalakshmi Stotra	K. J. Yesudas & Bombay Sisters	*3 MSC 3001
Tamil Muslim Songs	Smt Sarala	4 MSC 4022
Tamil Devotional Songs	E. Arunagiri	4 MSC 4023
Iyyappan Songs	Sreepathi	4 MSC 4024
Yoga	Srivatsa Ramaswami	4 MSC 4025
Tamil Devotional Songs	Darapuram Sundararajan	6 MSC 6024
Vocal	R. Vedavalli	6 MSC 6025

*Stereo

Available with all leading dealers


SANGEETHA IS MUSIC



Sangeetha
LIVE CASSETTES & RECORDS

The Master Recording Co.,
33, First Main Road,
R. A. Puram,
Madras 600 028.
Phone: 71936

MAPP/MDS/MRC/171



கலைமகள்

தீபாவளி மலர்
1981

மூவண்ணப் போட்டோக்கள்

கல் உணர்த்தும் கரணங்கள் (நடனக் காட்சிகள்)

ஸ்ரீ ஆசாரிய சுவாமிகள் - ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் (குருவாயூரில்)

ஸ்ரீ வீரடி சாயி பாபா - (வாழ்க்கைச் சித்திரங்கள்)

ஸ்ரீ சத்திய சாயி - (அருள்செயல்கள்)

அன்னை தெரஸா (தெய்விகத் தொண்டுகள்)

மூவண்ணச் சித்திரக் கோவை

கமல மலர்க் கன்னி

முதல் நூலைத் தந்த முதல்வர்

பன்னிரு ஜோதிர்லிங்கம்

முகப்புப் படம்

கன்னிகா பரமேசுவரி

போட்டோக் கோவை

கறப்பது முதல் சுவைப்பது வரை

24 கதைகள்

+ 9 கட்டுரைகள்

+ நாடகங்கள்


+ கவிதைகள்

+ சிறுவர் பகுதி: விளையாட்டு

+ தீபாவளி நகைச்சுவைகள்

மகிழ்ச்சி பொங்கும் இந்நாளில்

பாரத் டிவி யின்
நல்வாழ்த்துக்கள்



பாரத் டெலிவிஷன் லிமிடெட்

ஹைதராபாத், பம்பாய், கல்கத்தா, சென்னை, பெங்களூர்.

APRC



தீபாவளித் கிருநாள்

எங்கும் ஆரவாரம்! எங்கும் கோலாகலம்! எங்கும் சிரிப்பு! எங்கும் வெடிகளின் ஒசை, புடைவைகளின் சலசலப்பு, ஆடைகளின் ஒலி, வீருந்தின் மணம், அளவளாவும் பேச்சு! 'கங்கா ஸ்நானம் ஆச்சா?' என்ற குசலப்ரச்னம். இது தீபாவளியின் வடிவம்.

பலவகையிலும் ஊக்கத்தையும் களிப்பையும் உண்டாக்கும் தீபாவளித் திருநாளின் சிறப்புக்கு மெருகூட்டுவது போலக் கலைமகள் தீபாவளி மலர் மலர்கிறது. இந்த மலரை மலர்த்துவதில் பல பேருடைய பங்கும் உண்டு. எழுத்தாளர்கள் கதைகளையும் கட்டுரைகளையும் எழுதி உதவினர்கள். ஓவியர்கள் அருமையான ஓவியங்களைப் படைத்துத் தந்தார்கள். எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தது போல ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிகளாகிய சங்கராசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கியிருக்கிறார்கள்.

இந்த மலரில் பல சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. பயனுள்ள கருத்தை விளக்கும் கட்டுரைகள் நம் சிந்தனையைக் கிளரச் செய்யும் வகையில் அமைந்துள்ளன. சிரித்து மகிழும் இடங்கள் பல. இந்த மலரைத் தமிழ்த் தாயின் திருவடிகளில் வணக்கத்துடன் சமர்ப்பிக்கிறோம்.

ஆசிரியர்

மங்களகரமான தீபாவளி வாழ்த்துக்கள்.





காரிருள் நிகர்த்த
நரகாசுரனை
கண்ணன் சாய்த்து
கவின் ஒளி தந்தான்
— அன்று

வாழ்வினில் வந்திட்ட
இடர்தனைக் களைந்திட
கவின்பெறு திட்டங்கள்
கனிவுடன் பணிவுடன்
தீபாவளி வாழ்த்தோடு நல்கி
பெருமை கொள்கிறது
கரூர் வைஸ்யா பாங்க்
— இன்று



கரூர்
வைஸ்யா
பாங்க்
லிட்..

பதிவு அலுவலகம்: கரூர்,
தமிழ்நாடு

G. வெங்கடேசம்
சோமன

ELEGANT

ஏதாவதொரு மிக்ஸரை வாங்கிவிடாதீர்கள்
... உங்கள் தேவைக் கேற்றது ஸுமீத்



அற்புதமான ஸுமீத்! இதன் வகையில் இந்தியாவிலேயே முதலாவது. ரேடெங்கிலும் மேன்மேலும் அதிக இல்லத்தரசிகளுக்கு வியப்பூட்டிவருகிறது.

ஸுமீத்தில் மட்டுமே, எல்லா வேலைகளுக்கும் பயனும், விசேஷமாக வடிவமைக்கப்பட்ட, பல-பயனுள்ள ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ஜாடி. அதன்மீது உள்ளே பார்க்கக் கூடிய அக்ரிலிக் மூடி. னவே ஸுமீத் இயங்குவதைக் கண்ணெதிரில் காணலாம்.

பல்வேறு வேலைகளை விரைவிலும் எளிதிலும் செய்து முடிக்க, இப்போது இதில் 4 அலகு அமைப்பு பாகங்கள்:

ஈரப் பண்ட அரைவைக்காக.
உலர் பண்ட அரைவைக்காக.
கூடைய, கலக்க, சாறு பிழிய.
மிருதுவாக்கி அரிக்காய்களை நறுக்க.


இவை தவிர, சப்பாத்தி, பூரி மற்றும் அப்பளத்துக்காக மாவை விழுதுபோல் பிசைய விசேஷ இணைப்புப் பாகம். அதேபோல் கேக் மாவை நன்றாகக் கலவை செய்ய விசேஷ 'றபிக்'...

இவை மட்டுமா? ஸுமீத்தில் 30 நிமிடங்கள் வரை நிற்காமல் ஓடக்கூடிய ஹெவி டியூட்டி மோட்டார்.


அற்புதமான ஸுமீத் ஒன்றுதான் முழுமையான கிட்சன் மெஷின். இதை அடையத்தான் நாள் வேண்டுமெனும் காக்கலாம்.



ஈர அரைவை—கட்டி, இட்லி, தோசைக்காக உகந்தம் பருப்பு மற்றும் அரிசிய அரைக்க—3½ நிமிடங்களில்.



அரைக்க—2 நிமிடங்களில் தேங்காய் சட்னி அரைக்கலாம். அல்லது விநாடிகளில் கொத்துமல்லி சட்னி அரைக்கலாம்.



உலர் அரைவைக்காக— எல்லா வித மசாலாக்கள்— மிளகாய் வற்றல், மிளகு, மஞ்சள், கொத்துமல்லி விதை ஆகியோரை அரைக்க.



கூடைய—ஸ்பெஷலிஸ்டுகே ஆகியவற்றை ஒரே நிமிடத்தில் கூசாக அல்லது நிமிடங்களில் மொளனல் தயாரிக்க. வீட்டிலேயே வெண்ணெய் கடையலாம்.



பொருக்க—1 நிமிடத்தில் மாம்பழத்துப் பொருக்க. கரெட், வெங்காயம், தேங்காய், மற்றும் கொட்டைகளை நறுக்க—விநாடிகளில்.



மாவு பிசைய—சப்பாத்தி பூரி, ஆன தயாரிக்க 2 நிமிடங்களில் மாவு பிசையலாம். கேக் மாவை மிகவும் எளிதாகப் பிசையலாம்—3½ நிமிடங்களில்.

ஸுமீத்®

இது ஒன்றே முழுமையான கிட்சன்மெஷின்


OBM/1628/81 TM

இது தவிர கிடைக்கிறது ஸுமீத் டேபஸ்டிக் (பிசையும் இணைப்பு இல்லாமல் கிடைக்கிறது. அதை தனியாகவும் வாங்கிக் கொள்ளலாம்.)

அற்புதமான ஸுமீத் பாலகளும் பல்வேறு பணிகளைச் செய்கிறது— மற்ற எல்லா வீட்டுவேலைகளை விட சிறப்பாக.

சப்போது நாங்கள் இலவமாக இயக்கிக் காட்டுகிறோம் என்பதைக் கவனித்து வாருங்கள். உங்களுக்கெனவே ஸுமீத் சிறப்பாக இயங்குவதைக் காணுங்கள்

சர்வீஸ் சென்டர்கள் : சென்னை : பிரதேஷிராயர்ஸ் அண்ட் என்ஜினீயர்ஸ், போன் : 445700/442055. விவேக் எஞ்சின்ஸ், போன் : 76923/75661; மெசர்ஸ் விவேக் அண்ட் கோ., போன் : 444129. மெசர்ஸ் விவேக் அண்ட் கோ., போன் : 663545; வி. ஜி. பன்னீர்தாஸ் அண்ட் கம்பெனி, போன் : 81212, 81184 கோயமுத்தூர் : ஜே. என்ஜினியரிங் கார்ப்பரேஷன், போன் : 24579, மதுரை : ஜே. என்ஜினியரிங் கார்ப்பரேஷன், போன் : 24028. திருச்சி : டோன்டாட் எலெக்ட்ரிக் கம்பெனி, போன் : 24343.


ஒளியே, ஏ ஒளியே நீ எங்கே
உதயமாகுய் ?
காரிருளே அகற்றும்
கதிரவன்தான் உன் கருவறையா?
கானகத்தில் மணம் பரப்பும்
பூக்களில் நீ பூத்தாயா?
அல்லது வானவெளிப் பறவைகளின்
கானமழையில் நீ பிறந்தாயா?
ஆம் ஒளிப்பிழம்பே ஆம், உன்னைக்
கண்டு கொண்டோம்.
மகிழ்ச்சி துள்ளும் விழிகளில்
நீ கொஞ்சிச் சிரிக்கிறாய்!
பொங்கி வழியும் புன்னகையில் களிநடம்
புரிகிறாய், ஆனந்த ஊற்றின் உருவெடுத்து.
உங்கள் சேமிப்பு எனும் அகல் விளக்கு
களிப்பையும் பாதுகாப்பையும்
நாடெங்கும் பரப்பட்டும்.
ஸ்டேட் பாங்க்
நேசக்கரம் நீட்டி
நெருங்கியே வளர்வோம்.

எவ்வகை உணவாயினும்
அதனை முழுமையாக்குவது
டி.எஸ்.ஆர். ஊறுகாய்களே!

புதிய
கிடாரங்காய்
ஊறுகாய்



டி.எஸ்.ஆர்

டி.எஸ்.ஆர். & கோ.
"கோகுல் கார்டன்ஸ்"
கும்பகோணம்.

Criterion T.S.R. 3750


மனம் குளிர்ந்த தீபாவளி..... மணம் கமழும் காப்பி

சிறந்த முறையில் காப்பி தயாரிப்பது எப்படி?


எப்பொழுதும் புதியதாக வறுத்து அவ்வப் பொழுது அரைத்த காப்பிப் பொடியை உபயோகியுங்கள். காப்பி ஃபில்டரை நன்கு கழுவவும். பழைய காப்பித்தூள், காப்பி ஃபில்டரின் துளைகளை அடைக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.



பிடிவைத்த மேல் பாத்திரத்துக்குள் ஃபில்டரை வைத்து காப்பிப் பொடியை ஃபில்டருள் சமமாகப் பரப்பவும். ஒரு கோப்பை காப்பிக்கு ஒரு ஸ்பூன் தூள் போதுமானது.



பிளஞ்சரை ஃபில்டரின் உள் நுழைத்து லேசாக அமுக்கவும். கொதிக்கும் நீரை ஊற்றி ஃபில்டரை மூடவும்.



ஐந்து நிமிடங்களில் டிகாக்ஷன் இறங்கி விடும். தேவையான அளவு பால், சர்க்கரை சேர்த்து அருந்தவும்.

புள்ளி விவரங்களின் படி, அருஞ்சுவையான காப்பியை தயாரிக்கக்கூடிய மங்கை ஒருத்தி கண்கவரும் கணவனை எளிதில் அடைவாள். அதேபோல சிறந்த காப்பியை தயாரிக்கக்கூடிய ஆடவனுக்கு வாழ்க்கைத் துணைவியின் அவசியம் எதற்கு?






இரண்டு கோப்பைகள் கொள்ளும் பில்டர் ரூபாய் 93. வரிகள் தனி. நான்கு கோப்பைகள் கொள்ளும் பில்டர் ரூபாய் 136.50. வரிகள் தனி. காப்பி போர்டின் எல்லா இந்தியா காப்பி டிப்போக்களிலும் கிடைக்கும்.

- எப்பொழுதும் புதியதாக வறுத்து அவ்வப் பொழுது அரைத்த காப்பிப் பொடியை உபயோகியுங்கள்.
- காப்பி ஃபில்டரை நன்கு கழுவவும்.
- பழைய காப்பித் தூள், காப்பி ஃபில்டரின் துளைகளை அடைக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.


நாள் முழுவதும் புத்துணர்ச்சியளிக்கத் தேவையான புரதப் பொருட்களும், வைட்டமின்களும் மூன்று கோப்பை காப்பியில் பெறலாம்.

காப்பி அருந்துபவர்களுக்கு தேவைப்படும் காப்பிக் கொட்டை, காப்பித்தூள் மற்றும் காப்பி ஃபில்டர்கள் காப்பி போர்டின் இந்தியா காப்பி ஹவுஸ் மற்றும் டிப்போக்களில் கிடைக்கும்.



காப்பி போர்டு
பெங்களூர்

CAS-CB-8178



S.Kumars bring you the best of both worlds.

It's a rare combination. Quality plus economy. Yes, S. Kumars have been bringing it to you for years. Ensuring excellent fabrics while keeping costs low. Our dealers too, believe in our code of ethics. So the next time you shop, look for the S. Kumars symbol and our Price Code. And get the best of both worlds!

S. Kumars®

TERENE Suitings, Shirtings, Sarees and 'Terene' worsted Suitings.

"Niranjan", 99, Marine Drive, Bombay 400 002.

The highest possible quality. At the lowest possible price.

Nalli CHINNASAMI CHETTY

SILK CLOTH & PIECE GOODS MERCHANTS

OPP. PANAGAL PARK
THYAGARAYA NAGAR – MADRAS-17



உங்கள் அனைவருக்கும்
எங்கள் மனமார்ந்த மங்கள
தீபாவளி வாழ்த்துக்கள்

நல்லி சின்னசாமி செட்டி

பட்டு ஜவுளி வியாபாரிகள்

PHONE:
444115
445657

தியாகராயநகர் • பனகல் பார்க் • சென்னை-600 017

தீபாவளி வாழ்த்துக்கள்

தீப-ஒளி உங்களது
வளமான வாழ்விற்கு அளவற்ற
சுபிட்சத்தையும் இனிவரும் ஆண்டுகளிலும்
இ:தே போன்று வழி விளக்காக நின்று
ஒளி வீசட்டும் என்று
இந்நாளில்
பாங்க் ஆப் தஞ்சாவூர் லிமிடெட்
இன்றுபோல் என்றும் விரும்புகிறது

SERVICE · SECURITY · STABILITY
ESTD: 1901

பாங்க் ஆப் தஞ்சாவூர் லிமிடெட்

பதிவுபெற்ற அலுவலகம் : 1087, மிஷன் தெரு,
தஞ்சாவூர்-613 001 (தமிழ்நாடு)

R. சொக்கப்பா
ஜெனரல் மானேஜர்

B.K. மாதவன்
சேர்மன்





தீபாவளிக்கு

- கைத்தறிச் சேலைகள்
- வேஷ்டிகள்
- மில் ஜவுளிகள்
- சூட்டிங்குகள்
- பேன்ஸி சில்க்குகள்
- பிரிண்டட் சேலைகள்
- 2×2 பிளவுசுகள்

இதர எல்லாவிதமான, தரமான ஜவுளிகளைக் குறைந்த விலைகளில் வாங்க நம்பிக்கையான ஒரே இடம்

நல்லி ஸ்டோர்ஸ்

(ஸ்ரீ நவசக்தி விநாயகர் கோவில் அருகில்)
லஸ், மயிலாப்பூர், சென்னை-600 004.

Hearty Deepavali Greetings

Gram : MAIDA *Phone : 29031-29032*

Jupiter Flour Mills (P) Limited

24, SUB-JAIL ROAD, TRICHY-620 008

Manufacturing : **"JUPITER BRAND" MAIDA, SOOJI, ATTA AND BRAN**

Factory at : **SENTHANEERPURAM, TRICHY - 620 004**

Managing Directors : **N. Subramania Chettiar,** *Ex M.L.A.*
R. M. Krishnamurthy

Associates :

M/s. Srinivasa Lorry Weigh-Bridge
30 Tons Avery Automatic Dial Recorder
Madras Bye-Pass Road, Trichy-620 004

—நாகசந்தரம்

Watch a star performer...

...Watch a Dolphinar

Diwali is the time to get yourself a Dolphinar. Because Dolphinar is the best entertainer in town. And it's a time of bonus & plenty.

Dolphinar is a fascinating television to watch at work—be it Mark I or Mark II.

Equipped with smooth sliding controls, and turbulence-free sound output, especially on rainy evenings, Dolphinar is the family's best friend.

Dolphinar Mark I gives you

- 20" screen
- Hi-fi speaker coupled with pick up connection.
- Double shutters
- L.E.D Indicator

And a Dolphinar Mark II gives you

- 24" Screen
- 10 Watt Versa Watt amplifier with both treble and bass controls.
- 20 cms dual cone hi-fi speaker
- Pick up connection for tape recorders and record players
- L.E.D Indicator
- Double shutters
- Channel Indicator

And above all Dolphinar has a superb After Sales Service Cell that renders excellent service on any day. At any time.



KayJaytronics P. Ltd.
Madras-Phone: 415030, 411938
Bangalore-Phone: 577141
Hyderabad-Phone: 821402
New Delhi-Phone: 682620

DOLPHINAR

IC BASED SOLID STATE TV

Tomorrow's Technology-Today

MAPP/MDS/KJP/169

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு
நாட்டின் வளர்ச்சியில் நாட்டம் கொண்டு
நாடி வருவது "பாங்க் ஆப் தமிழ்நாடு."

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எங்களது உளமார்ந்த
தீபாவளி நல்வாழ்த்துக்கள்

பாங்க் ஆப் தமிழ்நாடு லிட்.,

(பதிவு அலுவலகம்: 62, கீழ ரதவீதி, திருநெல்வேலி டவுன்)

V. ரங்கநாதன்
சேர்மன்

—T. S. சொக்கலிங்கம்

தொழில் முன்னேற்றம் நோக்கி தொடர்ந்து முன்னேறும் 'பிப்டிக்'

தொழில்துறையில் எங்கள் உதவி பெற்றுத் தொழில் துவக்குபவர்கள் வளர்ச்சியும் முன்னேற்றமும் அடைந்து பயன்பெற பாடுபட்டு வருவதே எமது குறிக்கோளாகும். 1975-ஆம் ஆண்டில் நாங்கள் சிறிய அளவில் செயல்படத் துவங்கினோம். துவக்கம் முதற்கொண்டே நாங்கள் அயராது பாடுபட்டு வருவதால், பாண்டிச்சேரியில் இன்று பல்வேறு தொழில்கள் துவங்கிட நாங்கள் காரணமாக இருந்து வருகிறோம். ஐந்தே ஆண்டுகளில் நாங்கள் பெற்ற வளர்ச்சியே இதற்குச் சான்றாக இருந்து வருகிறது.

நாங்கள் வழங்கும் மாபெரும் சலுகைகளையும் ஊக்குவிப்பு உதவிகளையும் காணீர்:

- சலுகை வட்டி விதிக்களில் நடுத்தர மற்றும் நெருகடித் தொழிலுக்கு நீண்ட காலக் கடன்.
- நியாயான சொத்துக்களின் மொத்த முதலீட்டின் பேரில் புதிய தொழில்களுக்கு 15% மத்திய அரசு மானியம்.
- நிறுவிட்டுகள் தயாரிக்கும் பொருட்களை அரசுத் துறைகள் விலை முன் பாத்யதை அளித்து வாங்கும்.
- சிறு ரகத் தொழில்களின் அடமானங்களுக்குப் பத்திரக் கட்டணத்திலிருந்து விலக்கு.
- உள்ளமைப்பு வசதிகளுடன் அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகளையும் மற்றும் தொழில் கூடங்களையும் குத்தகைக்கு அளிப்பது.
- ஈக்விடி பங்கு மூலதனத்தில் ஈடுபாடு, மற்றும் பொதுப் பங்கு வெளியீடுகளை அண்டர்ரைட் செய்வது.
- புதிய தொழில்கள் உற்பத்தி செய்து அளிக்கும் முழுமைத் தயாரிப்புகளுக்கு ஐந்தாண்டுக் காலத்திற்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு.
- மிகச் சிறு துறைகளுக்கு (Tiny sector) கடன் வழங்கச் சிறப்புச் சலுகைகள்.
- கை நுட்பக் கலைஞர்கள், கிராம மற்றும் குடிசைத் தொழில்களுக்கு இயந்திரம் மற்றும் அலுவல் மூலதனத்துக்கு (Working capital) நிதி உதவி.
- போக்குவரத்துத் தொழிலுக்கு நிதி உதவி.
- ஓட்டல் தொழிலுக்கு நிதி உதவி.
- தொழில் நுட்ப ஆலோசனை.
- விற்பனைக்கு உதவி.
- IDBI—வித்து மூலதன (Seed capital) உதவித் திட்டத்தின் கீழ் வித்து மூலதன உதவி.
- அரசு இந்த இனையத்திற்கு இந்த வருடம் வழங்கியுள்ள பங்கு மூலதனத்தில் 16 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மற்றும் மலைஜாதி வகுப்பைச் சேர்ந்த தொழில் வல்லுநர்களுக்கு என்று ஒதுக்கப்பட்டது. பாண்டிச்சேரியில் உங்களது தொழிற்சாலையைத் துவக்கினால் இவை அனைத்தும் கிடைப்பதுடன் மேலும் பல சலுகைகளும் கிடைக்கும்.

மேலும் விவரங்களுக்குத் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்:

'நிர்வாக இயக்குநர்'

பாண்டிச்சேரி தொழில் உயர்வு, வளர்ச்சி மற்றும் முதலீட்டு இனையம்,

பதிவு அலுவலகம்: 38, ரோமெயின் ரோலண்ட் தெரு,
பாண்டிச்சேரி—605001 தொலைபேசி: 4361, 4606 & 5116

PRODUCTS TESTED IN INDIA & ABROAD TO SURPASS WORLD STANDARDS!

MVB Laboratories Germany

W.S.I Laboratories


KEMA, Holland

Haefely Laboratories Switzerland

Indian Institute of Science

Central Power Research Institute

Indian Institute of Technology



All W.S. products score the highest quality ratings! Our care for every unit manufactured by us is reflected in its performance reliability.

Photograph shows a 400 KV Instrument Transformer under special high voltage tests in W. Germany

YOU CAN BE SURE IF IT IS

W.S. INSULATORS OF INDIA LIMITED

PORUR, MADRAS-602 104

APRC

ராமேசுவரம் வாருங்கள்

ஸ்ரீ ராமநாதஸ்வாமி கோயில், ராமேசுவரம்

ராமேசுவரத் தீவு ஸ்ரீராமாயண இதிகாசத்தால் சிறப்புப் பெற்று விளங்குவது. 'சார் தாம்' என்னும் நான்கு புண்ணிய ஸ்தலங்களில் ஒன்றுவும், பாரதத்தின் பன்னிரண்டு ஜோதிர் லிங்க க்ஷேத்திரங்களில் ஒன்றுவும் திகழ்கிறது. இம் மாபெரும் கோயில். தேசிய ஒற்றுமையின் சின்னமாகவும் மிளிர்கிறது. நம் புராதனக்கலியின் பொக்கிஷமாகத் திகழ்வது; உலகெங்குமுள்ள கலியார்வமுள்ளவர்களைக் கவரும் பிராகாரங்களைக் கொண்டும் மிளிர்கிறது.

பயணிகள் யாவரையும் கோயில் தேவஸ்தானத்து ஸ்டால்களிலிருந்தே தூய கோடி தீர்த்தம், ஸ்வாமி படங்கள், பிரசாதம் முதலியவற்றை வாங்கும்படி கேட்டுக் கொள்கிறோம். அருள்மிகு ராமநாதஸ்வாமிக்கும் பர்வதவர்த்தனிக்கும் ஸ ஹஸ்ர நாம அர்ச்சனை செய்ய அர்ச்சனை ஒன்றுக்கு ரூ. 12 தான். இந்தத் தொகையை மணியார்டர் செய்து அனுப்பினாலும் பிரசாதம் தபாலில் அனுப்புகிறோம்.

அறக்கட்டளை வட்டித் தொகையிலிருந்து ஆண்டுதோறும் குறிப்பிட்ட தேதியில் பூஜை நடத்தும் இட்டம்:

ஸ்ரீ ராமநாதஸ்வாமிக்கு ருத்ராபிஷேகம்	ரூபாய் 1500/-
ஒரு கால பூஜை	,, 500/-
11 பேர் ருத்ர ஜபத்துடன் கங்காபிஷேகம்	,, 500/-
கங்காபிஷேகம் மட்டும்	,, 100/-

நவீன வசதிகள் எல்லாவற்றுடன் கூடிய ஒவ்வு இல்லங்களும் நல்ல வசதியான குடில்களும் தேவஸ்தானத்தில் கிடைக்கும். பக்தர்கள் கோயிலுக்குச் செலுத்தும் காணிக்கைகளை அந்த அந்தச் சந்நிதிக்கு முன்புள்ள உண்டியில் செலுத்தக் கேட்டுக் கொள்கிறோம். தனிப்பட்ட நபரிடம் அளிக்க வேண்டாம்.

வசதியான வழிபாட்டுக்கும் சுகமாகத் தங்குவதற்கும் ராமேசுவரம், அருள்மிகு திரு ராமநாதஸ்வாமி திருக்கொயில், ஆலய நிர்வாகியை அணுகுங்கள்.

பூஜை நேரங்கள்:

		காலை.			மணி. காலை
1.	பள்ளியறைத் தீபாராதனை (சயன திருஹஸ்ரதீபம்)	மணி. 5.00	5.	கால சந்தி பூஜை	10-00
2.	ஸ்படிக லிங்க பூஜை (மணி மூர்த்தி தரிசனம்)	5-10	6.	உச்சிக் கால பூஜை	12-00 பகல்
3.	திருவனந்தல் பூஜை	5-45	7.	சாயரட்சைப் பூஜை	6-00 மாலை
4.	விளாப் பூஜை	7-00	8.	அர்த்த ஜாம பூஜை	9-00 இரவு
			9.	பள்ளியறைப் பூஜை	9-30 ,,

முக்கியமான திருவிழாக்கள்

1.	பிரதிஷ்டா உத்சவம் (ஜூன்-ஜூலை)	மூன்று நாட்கள்.
2.	திருக்கல்யாணத் திருவிழா ஜூலை- ஆகஸ்டு)	17 ,,
3.	மகா வெராத்திரித் திருவிழா (பிப்ரவரி-மார்ச்)	10 ,,

பி. கந்தஸ்வாமி, பி. எஸ்ஸி.,
உதவி கமிஷனர்/எக்ஸிக்யூடிவ் ஆபீசர்
ராமேசுவரம் தேவஸ்தானம், ராமேசுவரம் - 623526.

மங்கள வாழ்வுக்குத்
தீபங்கள் ஏற்றும்
திருநாளில்


நல்வாழ்த்து எங்கும் ஒலித்திட

இந்தியன் டெலிபோன்
இண்டஸ்ட்ரீஸ்

பெங்களூர், ஸ்ரீநகர், நைனி, ரேபரேலி

இணைச்சொல்லின் இன்சொல்

—Clarion — Bangalore.


உல்லாசம் பொங்கிடும் தீபாவளி,
நல்லாசி வழங்கிடுது தீபஒளி!
உங்களுக்கு
மகிழ்ச்சி கூட்
டட்டும் எமது
புகழ் பெற்ற
தயாரிப்புகள்:
டேட் டிடர்ஜெண்ட் பவுடர், கேக்,
லிக்விட், ஸ்வஸ்திக் டிடர்ஜெண்ட்
பவுடர், பார், சூபர் 777 டிடர்
ஜெண்ட் பார், ஸ்வஸ்திக் பாப்புலர்
டிடர்ஜெண்ட் பவுடர், ஜெண்டில்
லிக்விட் டிடர்ஜெண்ட்,
ஜெண்டில் அழகு சோப்,
ஸ்வஸ்திக் கைக்காய் அழகு
சோப், ஸ்வஸ்திக் நீம் சோப்,
மாக்ஸ் ஃபாக்டர் அழகு
சாதனங்கள், ஸ்வஸ்திக்
ஸ்பார்க்கல் துலக்கும் பவுடர்,
ஸ்வஸ்திக் பெர்ஃப்யூம்டு காஸ்டர்
ஹேர் ஆயில், ஸ்வஸ்திக் பிராமி
அம்லா ஹேர் ஆயில், இன்டஸ்ட்
ரியல் டிடர்ஜெண்ட்ஸ்.
ஸ்வஸ்திக் ஹவுஸ்வோல்ட்
அண்ட்
இண்டஸ்ட்ரியல் ப்ராடக்ஸ்
அம்பலால சாராபாய் எண்டர்பிரைசஸ்
லிமிடெட்டின் ஒரு பிரிவு
13/15, வால்சந்த் ஹீராசந்த் மார்க்
பம்பாய் - 400 038
வளமும் நலமும் பெருகிட,
உங்களுக்கு எமது தீபாவளி
மற்றும்
புத்தாண்டு வாழ்த்துக்கள்

WHEELS FOR
ANY LOAD, ANY ROAD
You can
Depend on **TVS-DUNLOP**


Manufactured by



WHEELS INDIA LIMITED

Padi, Madras 600 050

தித்திக்கும் தீபாவளித் திருநாளில் ஆனந்தாவின்
புடைவைகளை அணிந்து மகிழும் அனைவருக்கும்
ஆனந்தா தங்களது நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கிறது.



ஆனந்தா
கார்ப்பரேஷன்

திருமணப் பட்டுப் புடைவைகளுக்குச் சிறந்த இடம்

போன்: 24763

39, N.S.B ரோடு, தீருச்சி.2.

வண்ணப் பெட்டிகளுக்கு!

அழகிய டிசைன்கள்

சீரான பிரிண்டிங்

லெட்டர் பிரஸ் & ஆப்ஸெட் (விரைவில்)

வார்னிஷிங், எம்பாஸிங்

உங்கள் தேவைக்கான அழகிய வண்ணப் பெட்டிகளுக்கும், லேபில்களுக்கும் நாங்கள் டிசைன்கள் தயாரித்து, சிறந்த முறையில் அச்சிட்டுத் தருகிறோம்.

அழகிய வண்ணப் பெட்டிகள் வியாபாரத்தைப் பெருக்கும். 10 ஆண்டுக் காலத்திற்கு மேல் இத்தொழிலில் வெற்றிகரமாகத் தொண்டாற்றி வருகிறோம்.

CARTONS & CONTAINERS

Office : 87, M.K. Amman Koil St., Mylapore, Madras-4 (76011)
Works : F.A/1. Industrial Estate, Madras- 600 058 (632799)

SOUTHERN RAILWAY

DEEPAVALI IS ROUND THE CORNER

Passengers are hereby requested not to carry fire works crackers and other inflammable goods with them when they perform train journeys since it is extremely dangerous to carry explosive material which may endanger their own lives as well as those of their co-passengers.

Carriage of explosives by passenger trains also attracts the provisions of Sections 59 and 107 of the Indian Railways Act and persons contravening those provisions are liable for prosecution.

Southern Railway Administration wishes its patrons a VERY HAPPY DEEPAVALI.

Issued by : Chief Public Relations Officer
Southern Railway, Madras-3

POB4|II|I|R|324

ORKAY
INSTANT MIXES

Delicious Gulab Jamoons



Tasty-Spongy-Soft Idlies



Delicious Vadais



Instant Sambar & Rasam Mix



also Jilebi Mix

ORKAY®
INSTANT FOODS
The Food Tempters...

Marketed by
KRISHNA AGENCIES
Bangalore 560 004. Ph: 603482

Delteram-RD-11

HEARTY DEEPAVALI

GREETINGS

from

LOTUS OFFSET PRESS


(QUALITY PRINTERS OF MULTI-COLOUR LABELS, POSTERS, MAGAZINE WRAPPERS ETC.,)

9, Lotus Ramasamy Street

Royapuram, Madras 600013

PH. 553422

தீபாவளி வாழ்த்துக்கள்



சுந்தரம் பாஸனர்ஸ் லிமிடெட்

பாடி, சென்னை - 600 050.



உங்கள்
தேவைக்குத்
தகுந்த
மிகச் சிறந்த
ரெப்ரிஜிரேட்டர்கள்

Godrej

Leonard

FEDDERS LLOYD
ZENITH



உங்களது
நம்பிக்கையான
இடம்

VIVEK & CO

Mylapore Ph: 76923
Purasawalkam Ph: 662462
T. Nagar Ph: 444129

V·863



கன்னிகா பரமேசுவரி
(மதனபள்ளி)

படம்: ஹரலிங்கம்

கன்னிகா பரமேசுவரி

ஜோதி

உலகங்கள் யாவையுமே ஈன்ற அன்னை,
உயிர்க்கூட்டம் வாழும்வகை செய்த தேவி,
பலகற்றும் அறியாத நுட்பச் சோதி,
பத்தர்மனம் அகலாத சுடர்வி ளக்கம்,
அலகற்ற அமரர்களும் பிரமன் தானும்
அம்மையென வணங்குகின்ற தெய்வ மாதா,
கலிகற்றூர் பரவுகின்ற கன்னி யாகிக்
கன்னிகா பரமேசு வரியாய் நின்றுள்.

அண்டங்கள் பலபலவும் ஆக்கிக் காத்தே
அவற்றையெலாம் நீருக்குத் தனியாய் நீல
கண்டனுடன் நடமாடும் தேவி, என்றும்
கன்னியாய் ஒளிருவது வியப்பே அன்றே?
பண்டன்முத லாமகரர் அழிய வீரப்
பாவையாய்ப் போர்செய்து வெற்றி பெற்றாள்;
கண்டறியா ஆனந்தம் அன்பர்க் கீயும்
கன்னிகா பரமேசு வரிதாள் போற்றி!

அன்னியமென் றில்லாமல் அனைத்து மாகி
ஆருயிர்க்குள் உயிராகி அண்ட மெல்லாம்
தன்னியக்கந் தனிலியங்கச் செய்தே ஆளும்
தயாபரைநால் வேதங்கள் போற்றி நின்றும்
இன்னும்அறி யோமென்றே கூறும் தேவி,
எவ்வுயிர்க்கும் எக்காலும் அன்னை யாயும்
கன்னியென நிற்கின்ற வியப்பார் அம்மை,
கன்னிகா பரமேசு வரிதாள் போற்றி!

ஆணல்லள், பெண்ணல்லள், அலியும் அல்லள்,
ஆனாலும் பெண்ணென்றே போற்று கின்றோம்;
பேணுகின்ற தாயல்லள், மகளும் அல்லள்;
பேசுங்கால் அவள்மாதா என்று சொல்வோம்,
பூணுகின்ற இமையோடு பொலிந்து கன்னி
போலிருப்பாள்; அவள்நிலைமை இன்ன தென்று
காணுவது புந்தியன வாகுங் கொல்லோ?
கன்னிகா பரமேசு வரிதாள் போற்றி!



பசுவைக் காத்துப் பண்பை வளர்ப்போம்

அமைச்சர் இராம. வீரப்பன்

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்று நமது பெரியவர்கள் சொல்லி இருக்கிறார்கள். மனிதன் மற்ற உயிரினங்களிடமும் அன்பு காட்டுகிறவன் என்ற பண்பைப் பெற்றதனால்தான் அவன் மனிதன் என்று சிறப்பாக அழைக்கப்படுகிறான்.

ஆனால், அந்த மகத்தான சிறப்பைப் பெற்றுக் கொண்டிருக்கிற மனிதன், இன்றைக்கு, பண்பாடுகளோடு, முழுமையாக வாழ்ந்துகொண் டிருக்கின்றானா? அதற்கு அவனுக்குக் கிடைத்திருக்கிற அறிவும், ஆற்றலும், சித்தனைத் தெளிவும் பயன்படுகின்றனவா? இதுதான் நம் முன் எழுந்துள்ள கேள்வி.

இன்றைச் சூழ்நிலையில் மனிதனுக்குக் கிடைத்திருக்கிற அரிய வசதியை, ஆராயச்சித் திறனைப் பயன்படுத்தி, சந்திர மண்டலத்தையே எட்டுகிற அளவுக்கு உயர்ந்து இருக்கிறான். ஆனால் அந்த அறிவு வளர்ச்சி எப்படி மனிதனை உயர்த்தியிருக்கிறதோ அதே நேரத்தில் பண்பிலே அவனை மிகவும் கீழே வீழ்த்தியும் இருக்கிறது என்பதை இன்றைக்கு உலகம் உணரத் தலைப்பட்டுவிட்டது.

இங்கே பசுவைப் பராமரிக்கிறோம், பாதுகாக்கிறோம் என்பதால் இதை விஞ்ஞான அறிவு படைத்தவர்கள், படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள் பலர் கேலி பேசக் கூடும். பசுமாட்டை, கிழட்டு மாடுகளையெல்லாம் சேர்த்து வைத்துக் கொண்டு, 'கோ சம்ரட்சணம்' என்று பேசிக் கொண்டிருப்பது, ஒரு பழைய காலத்துத் தலை முறையினர் செய்ய வேண்டிய காரியத்தை இருபதாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில், இந்த விஞ்ஞான யுகத்தில் செய்து கொண்டிருக்கிறார்களே என்று சொல்லும் உணர்வு படைத்தவர்களும் சிலர் இன்றைக்கு இருக்கக் கூடும்.

அன்றைக்கு, ஒரு காலத்திலே நாம் நம்முடைய மனித வாழ்க்கைக்கு அடிப்படைத் தேவையாகக் கால்நடைச் செல்வங்களை வைத்திருந்தோம். நம்முடைய தமிழகத்தில் இந்தக் கால்நடைகளுக்குச் 'செல்வங்கள்' என்றே பெயர் கொடுத்திருக்கிறோம். பெற்ற பிள்ளைகளுக்குச் 'செல்வம்' என்று பெயர்; பெறுகிற பொருளுக்குச் 'செல்வம்' என்று பெயர்; கால் நடைகளுக்கும் 'செல்வம்' என்றுதான் பெயர். ஆகவே ஒரு மனிதன் பெற வேண்டிய செல்வங்களில் கால்நடைகளுக்கும் உரிய சிறப்பான பெருமையைத் தந்து, நம்முடைய மூதாதையர்கள் அந்தக் கலாத்தில் அவற்றை வளர்த்தார்கள், ஆதரித்தார்கள்.

இந்தக் கால்நடைகள் நமக்கு எப்படியெல்லாம் உதவியன என்பதை இன்று நாம் மறந்துவிட்டோம். இன்றைக்கு மனிதன், மற்ற மிருக இனங்களை எல்லாம் விட தான் உயர்ந்தவன் என்ற மமதையினாலே, இந்த உலகத்திலே தோற்றுவிக்கப்பட்ட ஜீவராசிகள் அனைத்தும் தனக்காகத்தான் தோற்றுவிக்கப் பட்டன என்ற ஆணவ எண்ணத்துக்கு ஆட்பட்டு, அவற்றை இல்லறத்துக்கு உலகத்தைவிட்டே அழித்துக் கொண்டு வருகிற இரக்கமற்ற அரக்கனுக மாறிக் கொண்டு வருகிறான்.

நம்மைப் பெற்று தாய் பாலூட்டி நம்மை வளர்க்கிறாள். தாய் தருகிற பாலுக்கு அடுத்தபடியாகப் பால் தருவது பசுதான். தாயிடம் பால் இல்லாத போது குழந்தையை வளர்க்கப் பால் தருவது பசு. நோயினால் சக்தி யிழந்த மனிதன் சக்தி பெற, பாலை வழங்குவது பசு. முதுமையில், உயிர் வாழும் அளவுக்குச் சக்தி கொடுப்பதும், பசுவின் பால். ஆக, குழந்தைப் பருவம் தொட்டு, முதுமைப் பருவம் வரையில் பாலை ஈந்து மனித குலத்தைக் காப்பது பசு. ஆகவே, தாய்க்குத் தருகிற இடத்தைப் பசுவுக்குத் தர வேண்டும். எனவேதான் ''கோமாதா'' என்று அதற்குப் பெயரிட்டு அழைக்கிறோம்.

செட்டிநாட்டுப் பகுதியிலே ஒவ்வோர் ஊரிலும் கோயிலும், கோயில் பக்கத்திலே நந்தவனமும், அதற்குப் பக்கத்திலே பசுமடமும் இருக்கும். பசு மடம் என்று பசுக்களை வைத்துப் பராமரிப்பதற்கு அந்தக் காலத்திலே ஏற்படுத்தப்பட்டிருந்தது. இது நமது பண்பாட்டில் ஓர் ஒளி வீசும் கூறாக இருந்தது. ஆகவே, தாயினும் சாலச் சிறந்த பசுக்களைத் தக்கபடி எக்காலத்திலும் காப்பது மனித குலத்தின் தலையாய கடமை.

ஆனால் இக்காலத்தில் அந்தப் பசுவை அடித்துக் கொல்லுகிற உணர்வை மனிதன் பெற்று விட்டான். நல்ல வேளை, மனிதன், மனிதனையே அடித்துச் சாப்பிடுகிற பழக்கத்தை இன்னும் பெறவில்லை. அதுவும் ஒரு காலத்தில் வந்துவிடுமோ என்னவோ நமக்குத் தெரியாது.

புலிகளுக்குச் சொல்லுவார்கள் 'மேன் ஈட்டர்' (Man Eater) என்று. அது சாதாரணமாக ஆரம்பத்தில் மனிதனை அடிக்கப் பழகுவது இல்லை. ஆனால் ஒரு முறை மனித னுடைய ரத்தத்தை ருசி கண்டுவிட்டால் அதற்குப் பிறகு மனிதனைத் தேடியே அலையுமாம். அதைப் போல மாம்சத்தைச் சாப்பிட்டுப் பழக்கப்படுகிற மனிதன் முதலில் கோழியில் ஆரம்பித்துப் பிறகு ஆட்டுக்கு வந்து, பிறகு மாட்டுக்கு வந்து, பன்றிக்குப் போய், பிறகு எதுவுமே கிடைக்கவில்லை என்றால் எதிரே வருகிற மனிதனையே அடித்துச் சாப்பிடுகிற காலம் வந்தாலும் வரலாம். அதனால்தான் அந்த நிலைக்குப் போகாமல், மனிதகுலத்தடுத்து நிறுத்த வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு நமக்கு வந்திருக்கிறது.

'நமக்குப் பால் தந்த தாய்க்கு வயதாகி விட்டது. கிழவி ஆகி விட்டாள்; நடக்க முடியாத முதுமை அடைந்து விட்டாள்' என்று அந்தத் தாயை நாம் கொன்றுவிடுகிறோமா? அந்தத்தாயைப் போல நமக்குப் பால் தந்து உயிர்காக்கும் அந்தப் பசுவையும், அது வயதாகிவிட்ட காரணத்தினாலே நமக்குப் பலன் தரவில்லை என்று அடித்துக் கொன்று விடக்கூடாது. பசுவைப் பாதுகாக்க வேண்டுமென்ற உணர்வை இந்த நாட்டில் நாம் வளர்த்தாக வேண்டும். காரணம், பசு கடைசிவரை நமக்கு உதவிக்



பசுவைக் காக்க வகை செய்த புனிதர்

றோம். வாயில்லா ஜீவன்களைக் கேவலமாகப் பேசுகிறோம். மிருகங்கள் எல்லாம் பேசலில்லை என்ற தைரியத்தில் மனிதன் சொல்லிக்கொண்டிருக்கிறான். ஆனால், ஏதாவது ஒரு நல்ல செயலுக்கு மனிதனை உதாரணப் பொருளாக எடுத்துச் சொல்லி இருக்கிறோமா? இருந்தாலும் இந்த மனிதன் செய்கிற தவற்றைச் சுட்டி காட்ட, 'அந்த மனிதன் மிருகமாக மாறிவிட்டான்' என்று சொல்லிக் கொண்டே மிருகங்களைக் கேவலப் படுத்துகிறோம்.

அதற்கு ஒரு கதையைச் சொல்வார்கள். இந்த உலகத்திலே இருக்கிற மிருகங்கள் எல்லாம் கூடி ஒரு மாநாடு போட்டதாம். ''இந்த மனிதர்கள் நம்மைக் கேவலப்படுத்துகிறார்கள். அவர்கள் செய்கிற தவறுகளுக்கு நம்மை உதாரணம் காட்டுகிறார்கள். ஆனால் நாம் அப்படிப்பட்ட தவற்றைச் செய்வது இல்லை. அந்த மனிதர்கள்தாம் கேடு கெட்ட மிருகங்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த மனிதர்கள் மீது நாம் மான நஷ்ட வழக்குத் தொடர வேண்டும்'' என்று அந்த மிருகங்கள் எல்லாம் தீர்மானம் போட்டதாக ஒரு கதையைச் சொல்லுவார்கள். அந்த அளவுக்கு மனிதன் தான் பல நேரங்களில் மோசமான ஒரு மிருகமாகச் செயல்படுகிறான்.


வயது முதிர்ந்த தாய் வீட்டில் இருந்தால் இந்தக் கிழடு இங்கே இருந்து கொண்டு உயிரை வாங்குகிறதே என்று உயிர் கொடுத்த தாயையே சொல்லத் துணிகிற காலந்தான் இது. எனவே, தமிழ்நாட்டில் வணக்கத்துக்கு உரிய வயது முதிர்ந்த தாய்மார்களை, தந்தையர்களை அரசாங்கம் பாதுகாக்கவேண்டிய மிகப் பெரிய பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதுடன் அதை நிறைவேற்றிக் கொண்டும் இருக்கிறது.

அப்படிப்பட்ட தாயைப் போன்ற பசுவைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இன்றைக்கு மக்களுக்கு இருக்கிறது. பசுவைக் கொன்று குவிக்கிறான் மனிதன். எதிலும் சம்பாதிக்க நினைக்கிறான்; எப்படியும் சம்பாதிக்க எண்ணுகிறான்; எதைச் செய்தாவது சம்பாதிக்க எண்ணுகிறான். பணத்துக்கு மனிதன் அடிமையாகிவிட்டான்.

அப்படிப்பட்ட பண்பற்ற சூழ்நிலை வளர்ந்துகொண்டு வரும்போதுதான் காலம் நமக்குக் 'காஞ்சிப் பெரியவர்கள்' போன்ற தத்துவ முனிவர்கள் மூலம் பசுவைக் காக்கும் கடமையை உணர்த்துகிறது. வயது முதிர்ந்த பசுக்களைக் கொண்டு வந்து காப்பாற்ற முடியுமானால், செய்யுங்கள். முடியாதவர்கள் அசுத்திக்கரை ஒருகட்டு வாங்கிக்கொண்டு வந்து கொடுங்கள், அது போதும். முடிந்தவர்கள் அதற்கு வேறு ஏதாவது நீனியைக் கொண்டு வந்து கொடுங்கள், அது போதும். அங்கே ஒரு பசு காப்பாற்றப்படுகிறது; வள்ளுவர் பெருந்தகை தாயையும், பசுவையும் ஒரே இடத்தில் வைத்துப் பார்க்கிறார்: 'பசுவை மந்தை மந்தையாக ஓட்டிக்கொண்டு செல்கிறார்கள். வெட்டிக் கொல்லுகிறார்கள், பணத்துக்காக. தடுத்துக் கொண்டிருக்கிறோம் சட்டத்தின் மூலம். ஆனால் பசுவதையைச் சட்டம் கொண்டுதான் இருக்கிறது. பசு கடைசிவரை சாணம் போட்டுக் கொண்டுதான் இருக்கிறது. அந்தச் சாணந்தான் நாம் மிகப் பெரும் அளவில் பயன்படுத்திய எருவாக, இயற்கை உரமாக அமைகிறது. இன்றைக்குச் சாணத்திலிருந்து எரி சக்தி வாயு கண்டுபிடித்திருக்கிறோம்.

விஞ்ஞான அறிவு சக்கரம் போல் சுழன்று வந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு உலக ஆராய்ச்சி நிபுணர்கள் நிலத்தில் உணவுப் பொருள்களுக்குச் செயற்கை ரசாயன உரங்கள் பயன்படுத்தப்படுவதால்தான் 'கேன்சர்' போன்ற நோய்கள் அதிகமாகிக் கொண்டு வருகின்றன என்று ஆராய்ந்து சொல்லியிருக்கிறார்கள்.

ஆகவே, அந்தக் காலத்தில் நாம் கண்டுபிடித்த இந்த இயற்கை உரங்களான தழை உரம், சாணத்தைப் போடுகிற உரங்களே சிறந்தவை என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் கடைசிவரை இந்த மனிதனைப் பாதுகாப்பதற்காகத்தான் இந்த மாடுகள் எல்லாம் இருக்கின்றன. எதற்கெடுத்தாலும் 'ஒரு மனிதன் தவறு செய்துவிட்டான் என்றால், 'அவன் மிருகமாகிவிட்டான்' என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். வாயில்லா ஜீவன்களைக் கேவலமாகப் பேசுகிறோம். மிருகங்கள் எல்லாம் பேசலில்லை என்ற தைரியத்தில் மனிதன் சொல்லிக்கொண்டிருக்கிறான். ஆனால், ஏதாவது ஒரு நல்ல செயலுக்கு மனிதனை உதாரணப் பொருளாக எடுத்துச் சொல்லி இருக்கிறோமா? இருந்தாலும் இந்த மனிதன் செய்கிற தவற்றைச் சுட்டி காட்ட, 'அந்த மனிதன் மிருகமாக மாறிவிட்டான்' என்று சொல்லிக் கொண்டே மிருகங்களைக் கேவலப் படுத்துகிறோம்.



சென்னைப் பராமரிப்பு இல்லத்தில் பசுக்கள்

மட்டும் தடுத்து விடாது. சமுதாயத்திலும் மனிதர்களுக்கு மனச்சாட்சி இருந்தால்தான் அதைத் தடுக்க முடியும். சட்டம் எத்தனை போரைத்தான் தடுத்து நிறுத்த முடியும்?

கடந்த ஐம்பது ஆண்டுக் காலத்தில் இந்த நாட்டின் வரலாற்றிலே மிகப் பெரிய தவற்றை நாம் தெரிந்தோ தெரியாமலோ இழைத்து விட்டோம். அதற்கு யாரு டைய தவிப்பட்ட செயலும் காரணம் அல்ல. சமுதாயம் மொத்தமாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டாக வேண்டும். நாம் பண்புகளே இழந்தவர்களாக மாறிக் கொண்டு வருகிறோம். நாம் அந்தப் பண்பினை மீண்டும் பெற்றவர்களாக மாறவேண்டும். இழந்துவிட்ட அந்த உயரிய பண்பினை, மீண்டும் பெறச் செய்யத்தான் இன்றைக்குக் காஞ்சிப் பெரியவர்கள் வாழ்ந்து வழிகாட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

பசு வாழ்ந்தால் கடைசி வரை நமக்குப் பயன் தரு கிறது. அப்படித்தான் உலகத்திலிருக்கிற அத்தனை ஜீவராசிகளும் மனிதனுக்குப் பயன் தருகின்றன. அவற்றைக் கொன்று குவிப்பதை, அழிப்பதை, ஏன் மரங்களைக் கூட இன்றைக்கு அழிப்பது ஆபத்து என்று மனிதன் கண்டு கொண்டிருக்கிறான்.

மரங்களை அழிப்பதால்தான் மனிதன் பஞ்சத்திற்கு ஆட்பட்டுத் தவிக்கிறான். மழை இல்லாமல், குடிக்கத் தண்ணீர் கிடைக்காமல் திண்டாடுகிறான். அப்படிப்பட்ட இயற்கையின் சோதனைக்குத் தன்னை ஆட்படுத்திக் கொண்ட பிறகு தான் மனிதனுக்குப் புத்தி வருகிறது. இன்றைக்கு உலக நாடுகள் எல்லாம் மரம் வளர்க்க வேண்டும், மரம் வளர்க்க வேண்டுமென்று, துடித்துக் கொண்டிருக்கின்றன. மரத்தையே வளர்க்க வேண்டும் என்கிறபோது மாதாவைப் போன்ற பசுவை வளர்ப்பதும் பாதுகாப்பதும் மனித குலத்தின் தலையாய கடமை அல்லவா? மனிதப் பண்பு அல்லவா?

நரசிம்மத்தை வணங்குவோமே!

சௌந்தராகைலாசம்

ஸ்ரீ:
ஸ்ரீமதே லக்ஷ்மீநரஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:



மந்திரத்தை மனத்துக்குள் வாங்கி நித்தம்
மாறுபடா நிலையிலிலே ஒதி வந்தால்
எந்தவிதக் குறைதானும் இல்லா தென்றும்
இறைவனவன் காத்திடுவான் என்றும் சொல்வார்.

சொந்தமென ஐசுவர்யம் தர்மம் கீர்த்தி
சுடர்கின்ற வைராக்யம் செல்வம் ஞானம்
தம்பிறனுக்குக் கொண்டிருக்கும் பகவான் இன்பத்
தான்பற்றி மந்திரங்கள் ஒது வோமே.

ஜாக்கிரமும் சொப்பனமும் சுழுத்தி தானும்
சட்டெனவே விழுங்கி,அதற் கப்பா லுள்ள
சூக்குமமாம் துரியமெனும் சமாதி தன்னைத்
துல்லியமாய்க் காட்டுவது நரசிம் மந்தான்.

காக்குமிறை எனஅவனை வணங்கி நின்றால்
கருதுகிற பலன்மிகவும் விரைவில் கிட்டும்;
தூக்கமிலா தெப்பொழுதும் துங்கு கின்ற
சுகம்முழுதும் வரவாகி இன்பம் கொட்டும்!


உக்ரம்சேர் வீரமது பொருந்தி, இங்கே
உலவுகிற அண்டமெலாம் நிறைந்து நின்று
மிக்கவொளி வீசுகிற முகத்தைக் கொண்டு
விளங்கி, வெரு பயங்கரத்தை விரித்து வைத்துத்
தக்கவிதம் மங்களத்தைச் செய்து காலன்
தனக்குமொரு காலனெனத் திகழு கின்ற
சக்கரத்துக் கையனவன் நரசிம் மத்தைத்
ததும்புகிற பக்தியுடன் வணங்குவோமே.

''உக்ரம் வீரம் மஹாவிஷ்ணு ஜ்வலந்தம்
சர்வதோ முகம் ந்ருசிம்ஹம் பீஷணம் பத்ரம்
ம்ருத்யும் ருத்யும் நமாமி அகம் ஒம் உக்ராய
ஸ்வாஹா!'' (ஸ்ரீநரசிம்ம பூர்வதாபின் உபநிஷத்)

அரியஇந்த மந்திரத்தைச் சொன்னால் போதும்;
ஆங்கார நரசிம்மர் ஓடி வந்து
பெருகிநிதம் நமைப்பெரிதும் வாட்டும் துன்பப்
பேய்களினீ விழுங்கிநமக் கின்பம் சேர்ப்பார்.

திருவரைக் கல்நலங்கள் செழித்தே ஒங்கச்
சிந்தையிலே நல்லமைதி தெளிந்து சூழ
ஒருகுறையும் இல்லாத வாழ்வை எய்தி
உலகத்தில் உயர்ந்திடுவோம் உறுதி தானே!

அவ்வினைக்கு இவ்வினை



நாம் அரும் பாடுபட்டுத் தேடிய செல்வமும், பெரும் பொருள் செலவழித்து அழகாகக் கட்டிய வீடும், பொன்னும், அணிகலன்களும் இங்கேயே நின்று விடும். நம்முடன் தொடர்ந்து வரமாட்டா. நாம் செய்த நல்வினை தீவினை மட்டும் நம்முடன் நிழல் போல் தொடர்ந்து வரும்.

''பற்றித் தொடரும் இருவினை புண்ணிய பாவமுமே'' என்பது பட்டினத்தார் திருவாக்கு.

நாம் செய்த நல்வினை தீவினைப் பயன்களை எந்தப் பிறப்பிலேனும் அநுபவித்தே தீர வேண்டும். உண்ட ஒரு பொருள் வெளிப்பட்டே தீரும். இதனை இங்கே கூறும் வரலாறு விளக்குகின்றது.

ஒரு குளக்கரையில் ஒரு பிராமணர் அமர்ந்து காயத்ரீ மந்திரம் ஜபம் செய்து கொண்டிருந்தார். காயத்ரீ மந்திரம் பிறந்த மகா மந்திரம். அதனை ஜபிப்பதனால் வினைகள் விலகி ஞான ஒளி உண்டாகும்.

ஒரு புலியன் பசுவைக் கொல்ல கத்தியைத் தீட்டிக் கொண்டிருந்தான். அறிவுள்ள பசு, 'இவன் நம்மைக் கொல்லமுயல்கிறான்' என்று கருதி, சுட்டுத் தறியை அறுத்துக் கொண்டு குளக்கரை வழியே ஓடி விட்டது. அந்தப் பசுவைத் தேடிக் கொண்டு புலியன் அங்கு வந்து, ''ஐயரே பசு இந்த வழியாகச் சென்றதா?'' என்று கேட்டான்.

ஜபம் செய்து கொண்டிருந்த பிராமணர் மந்திரத்தை உச்சரிப்பதனால் வாய் இறத்து பேசாமல் இரண்டு கைகளையும் நீட்டிப் பசு போன வழியைக் காட்டினார். புலியன் அவ்வழியே சென்று பசுவைக் கொன்று விட்டான்.

வட நாட்டில் நாராயணபுரம்



கிருபானந்தவாரி

என்ற ஊரில் தாழ்ந்த குலமாகிய ஓருகு குலத்தில் ஒருவர் பிறந்தார். அவர் இளமையிலிருந்தே பண்டரி புரம் பாண்டுரங்கவிட்டலில் ஆழ்ந்த அன்பும், நீராத காதலும் பூண்டிருந்தார். சாதுக்களுடன் சேர்ந்து பகவன் நாமஸங்கீர்த்தனம் செய்வார். அதனால் அவரை எல்லோரும் ஸ்ரீஜன ஓருகர் என்று அழைக்கலாயினர்.

ஓருகர் யாருக்கும் மனத்தாலும் தீமை செய்யாதவர். உயிர்க் கருணையும், நல்லொழுக்கமும் பூண்டவர். மாதரை மனத்தாலும் தீண்டாத பெருந்தகை.

'ஜய் ஜய் விட்டலா பண்டரி நாதா!

''ஜய் ஜய் விட்டலா பாண்டுரங்கா! ''பாண்டு ரங்க விட்டலே பண்டரி நாத விட்டலே!

''புண்டரிகாட்ச விட்டலேரகுமாயி விட்டலே!''

இவ்வாறு கையில் தாளம் போட்டு, மெய்ம் மறந்து, உள்ளம் உருகி, கண்ணீர் பெருகி ஆடுவார், பாடுவார். பண்டரிபுரம் சென்று பாண்டுரங்கனைக் கண்ணுரக் கண்டு சேவிக்க வேண்டுமென்று பெரிதும் விரும்பினார். பண்டரி நாதனிடம் பக்தி மேனீட்டால் கபிலையை நாடிக் கன்று போவது போல் பண்டரி புரத்தை நாடிச் சென்று கொண்டிருந்தார்.

வழியில் ஒரு நகரத்தை அடைந்தார். பொழுது போயிற்று. பிட்சை எடுத்து உண்டார். ஒரு தனவந்தரின் வீட்டுத் திண்ணையில் அமர்ந்து அஷ்டாக்ஷர மந்திரத்தை ஜபித்துக் கொண்டிருந்தார். அந்தத் திண்ணை விசாலமாக இருந்தது. அவர் ஓவியம் போல் அசைவற்று இருந்து தியான சமாதியில் கட்டை போல் இருந்தார். அவருடைய முகத்தில் அருள் ஒளி வீசிக்கொண்டிருந்தது.

இரவு மணி பன்னிரண்டு. எங்கும் இருள் மூடியிருந்தது. பேயும், நாயும் உறங்கும் அந்த நள்ளிரவில் எங்கும் பேரமைதி நிலவிக் கொண்டிருந்தது.

அந்த வீட்டிலுள்ள பெருந் தன வந்தரின் மனைவி நிறு நீர் கழிக்க வீட்டைத் திறந்து வெளியே வந்தாள். திண்ணையில் அமர்ந்திருந்த ஜீஜன ஜாருகரைக் கண்டாள். அவர் மீது காதல் கொண்டாள்!

''ஆ! ஆ! இவர் என்ன மன்மதனு! இந்திரன் மகனுகிய ஜயந்தனு? எத் தண்டப் பேரழகு! அன்ற மார் பும், உயர்ந்த தோளும், விசாலமான நெற்றியும் உடையவராக விளங்கும் இந்தச் சுந்தர புருஷனுடன் வாழ் வுகல்லவா வாழ்வு!'' என்று எண்ணி அவர் அருகில் சென்று கை தட்டி அவருடைய நிஷ்டையைக் கலைத் தாள்.

''ஐயா! தாங்கள் யார்? இந்திரனு? சந்திரனு? அழகின் கெழமாக விளங்கு கின்றீரே! இன்று முதல் நீர் என்னு டைய இதய நாயகர், நான் தங்கள் இதய நாயகி'' என்று பலவித இன்னுரைகளைக் கூறினுள்.

ஜீஜன ஜாருகர் இந்த வார்த் தைகளைக் கேட்டு நடுநடுங்கினுர். ''அம்மா, நான் ஒரு தூய பிரம்ம சாரி. உலகில் உள்ள பெண்கள் அனைவரும் என்னுடைய தாய்மார் கள். நான் மாதரை மனத்தாலும் நிண்டாதவன். இத்த உலக இன்பம் கடுகளவு. நிற்றின்பத்தால் வரும் பாவம் மலையளவு. என்னிடம் இத்தத் தகாத வார்த்தைகளைப் பேச வேண்டாம். பெண்களுக்குக் கண வன்தான் தெய்வம். தாங்கள் இந்த இடத்தை விட்டு விலகிப் போங் கள். இங்கே நீர் நின்று கொண்டிருந் தால் உன்னை உறங்குகின்ற உங்கள் கணவரை எழுப்பி உங்கள் அடாத செயலே அறிவிப்பேன்'' என்ருர்.

உடனே அவள் பத்திரகாளியாக மாறி உள்ளே சென்று நீண்ட வாளி னுல் அமைதியாக உறங்கிக்கொண் டிருந்த கணவனுடைய தலையை வெட்டிக் கொண்டு வந்து அவர் முன்னே வைத்தாள்.

''ஐயனே! இது என் கணவருடைய தலை. ஆதலால் இனி நீர்தான் என் கணவர்'' என்று கூறி அவரைக் கட்டித் தழுவ வந்தாள். அவருடைய கொடுஞ் செயலைக் கண்டு ஜீஜன ஜாருகர் நடு நடுங்கினுர். பதை பதைத்தார். ''அடி! பாவி! நீ பெண்ணு பேயா? தாலி கட்டிய தெய் வத்தின் தலையை வெட்டி விட்டாயே! உனக்கு என்ன நரகம் வருமோ? உண்மைப் பார்த்தாலும் பாவம் வரும். இந்த அடாத செயலைப் பேய்கூடச் செய்யாது'' என்று கூறி, நிண்ண யை விட்டுக் குதித்து வேகமாக ஓடினுர். அவள் அவரைத் தொடர்ந்து ஓடினுள். ''நம்பி வந்த என்னை நட்டாற்றில் விடாதே'' என்று கூறினுள். அவர் வேகமாக ஓடிக் கொண்டிருந்தார்.

இனி இவர் நமது வலையில் அகப் பட மாட்டார் என்று தெரிந்து கொண்ட அவள், 'ஓ' என்று ஒல மிட்டாள். அவள் ஓலத்தைக் கேட்டுப் பலர் கூடினர்கள். அவள், ''பெரி யோர்களே! இந்தப் பாவி என் வீட்டுத் திண்ணையில் தங்கி நான் நிறுநீர் கழிக்க வெளியே வந்தபோது என் கையைப் பிடித்து என் கற்பை அழிக்க முயன் ருன். நான் கணவரை அழைத்த உடனே என் கணவருடைய தலையை வெட்டிவிட்டு, என்னைக் காதலித்து இழுத்துக் கொண்டு வந்தான். இந்த அநியாயம் உண்டா?'' என்று கூறிக் கதறி அழுதாள்.

அங்குள்ளவர்கள் அந்தச் சாதுவை அடித்து, காவல் துறையினரிடம் ஒப்படைத்தார்கள்.

பொழுது புலர்ந்தது. அந்த நக ரத்தை ஆளுகின்ற அரசன் இந்த வழக்கை விசாரித்தான். ஜீஜன ஜாருகரை அரசன் பார்த்து, ''நீ இந்தக் கொலையைச் செய்தாயா?'' என்று



வைரம்

மனைவி: நம்ம ஜாதகத்தைப் பார்த்துட்டு, 'ரொம்ப விசேஷ ஜாத கம். அடுத்த ஜன்மத்திலேயும் நாம் ரெண்டு பேரும் தம்பதியாத்தான் இருப் போம்' னு ஜோயிர் சொன்னுர்.

கணவன்: அட பாவமே! பரிகாரம் ஏதாவது இருக்கான்னு கேட்டுண்டு வரப்படாதோ!

கேட்டான். அவர், ''பண்டரிநாதன் அறிவான். நான் நிரபராதி'' என்ருர்.

''குற்றம் செய்தவன் குற்றத்தை ஒப்புக் கொள்வானு?'' என்று மற்ற வர்கள் கூறினுர்கள்.


''கொலை செய்த இவனது கரத்தை வெட்டுங்கள்'' என்று அரசன் தண்டனை விதித்தான். சாதுவுடைய கை வெட்டப்பட்டது.

ஜீஜன ஜாருகர் துன்பத்தால் துடித்து, ''பண்டரிநாதா? பாண்டு ரங்கா! குற்றம் செய்யாத எனக்கு இந்தத் தண்டனையா? என்னுடைய தூய்மையைத் தேவரின் திருவுள்ளம் அறியுமே! அப்பனே! அருட்கடலே!'' என்று துதித்து அழுதுகொண்டே பண்டரிபுரத்தை நாடி விரைந்து சென்ருர்.

பண்டரிநாதர், பண்டரிபுரத்தி லுள்ள அர்ச்சகர், அறுகாவலர்கள் முதலிய ஆன்ருர்களின் கனவில் தோன்றி, ''என்னுடைய பரமபக்தன் ஜீஜன ஜாருகன் வருகின்ருன். அவனைக் குடை, சாமரம், மேளதாளத் துடன் சென்று வரவேற்பு செய்து அழைத்து வாருங்கள்'' என்று கட் டளையிட்டார்.

எல்லோரும் ஜீஜன ஜாருகருக்கு முன்னே வந்து கோயில் மாலியை அவர் கழுத்திலிட்டுப் பண்டரிநாத ருடைய கட்டளையைக் கூறினர்கள். ஜீஜன ஜாருகர் பண்டரிநாதர் திரு முன் சென்று, ''அப்பனே! உன் னைக் கைகூப்பி வணங்கவும் முடிய வில்லையே! இவர்கள் கனவில் வந்து கட்டளையிட்ட நீ, அரசனுடைய கனவிலே வந்து என்னைத் தூயவன் என்று சொல்லியிருக்கக் கூடாதா? அல்லது அசரீரியாகவாவது சொல்லி யிருக்கலாமே. என்மீது கருணை காட்டவில்லையே!'' என்று துதித்துக் கதறி அழுதார்.

பண்டரிநாதர், ''அப்பனே! நீ முப் பிறப்பில் ஒரு பிராமணன். குளக் கரையில் அமர்ந்து காயத்ரீ ஜபம் செய்து கொண்டிருந்தாய். பசுவைக் கொல்ல வந்த புலியனுக்குப் பச சென்ற வழியைக் நீட்டிக் காட்டி னுய். அதனுல் உன் கை துண்டிக்கப் பட்டது. அவ்வினைக்கு இவ்வினை. கொலையுண்ட பசு அந்தப் பெண். கொலை செய்த புலியன் அவள் கணவன். தன்னைக் கொன்ற புலியனுகிய கணவனை அவள் கொன் ருள். அவள் கொலைக்குக் காரண மாகிய உன் கை அரசனுல் துண்டிக் கப்பட்டது. அவ்வினைக்கு இவ்வினை'' என்று அருளிச் செய்தார். ஜீஜன ஜாருகருக்குக் கை வளர்ந்தது. பண் டரிநாதனைத் தொழுது இன்புற்ருர்.❋





ராமாபுரத்தில் அன்று தேர் விழா. ஒரே கூட்டம். வாத்தியங்களின் முழக்கமும் மக்களின் ஆரவாரமும் கடலோசைபோல ஒலித்தன. நான் தேரிலுள்ள கவாமியைத் தரிசித்துக்கொண்டு கோயிலுக்குள் நுழைந்தேன். அங்கே பொன்னப்ப சாமியார் தனியே அமர்ந்து ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். ''என்ன சாமியாரே, நியாயம் பண்ணுகிறீர்களா? அல்லது ஏதாவது யோசித்துக் கொண்டிருக்கிறீர்களா?'' என்று கேட்டேன்.

அவர் கண்ணைத் திறந்து பார்த்தார். ''நீங்களா? வாருங்கள், இப்படி உட்காருங்கள்'' என்றார். நான் அருகில் அமர்ந்தேன்.

''ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தீர்கள். நான் கலைத்து விட்டேனே? தேரோட்டம் பார்க்கப் போகவில்லையா?'' என்று கேட்டேன்.

அவர், ''தேரோட்டத்தைப்பற்றித் தான் சிந்தித்துக் கொண்டிருந்தேன். இப்போது நடக்கிற தேரோட்டம் அல்ல. மூன்று வருஷங்களுக்கு முன்பு நடந்ததைப் பற்றி எண்ணமிட்டேன்'' என்றார்.

''அந்தப் பழைய சங்கதியை இப்போது ஏன் நினைக்க வேண்டும்?'' என்று கேட்டேன்.

''நீங்கள் ஊரை விட்டுப் போய் இப்போதுதான் வந்திருக்கிறீர்கள். அதனுல் நடுவில் நடந்தவை யெல்லாம் உங்களுக்குத் தெரிய நியாயம் இல்லை. உங்களுக்குப் பொறுமை யிருந்தால் சொல்லுகிறேன்; கேளுங்கள்'' என்றார்.

''கேட்கிறேன்'' என்று அவர் வாயைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவர் சற்றே யோசனையில் ஆழ்ந்து, பிறகு கண்ணத்தைக் கொண்டு சொல்லத் தொடங்கினார்.

ராமபுரமும் வட்சுமணபுரமும் அடுத்தடுத்து இருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியும். ராமாபுரத்தில் தேர் என்றால் இரண்டு வண்டிக்காரர்களும் திரண்டு வந்து தேரை இழுத்து நிலைக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பார்கள். ராமாபுரத்துக்காரர்கள் வலப்பக்கத்து வடத்தையும் லட்சுமணபுரத்துக்காரர்கள் இடப் பக்கத்து வடத்தையும் பிடித்து இழுப்பார்கள்.

நான் சொல்ல அந்த வருஷத்தில் ஒரு தகராறு வந்தது. லட்சுமணபுரத்தில் இருந்த முக்கியமான தலீவர்களுக்கு ஒரு நீண்ட வந்து விட்டது. அதனுல் தேரை இழுக்கும் தகுதி இல்லாமல் போய் விட்டது. அவர் தேரை இழுக்கப் போகவில்லே. ஆனுல் ராமாபுரத்துக்காரர்கள் அவர்கள் வராததைக் கண்டு தாங்களே இரண்டு வடங்களையும் பிடித்து இழுத்தார்கள். வெளியூரிலிருந்து சுவாமி தரிசனத்துக்கு வந்திருந்த பக்தர்களும் இந்தக் கைங்கரியத்தில் ஈடுபட்டார்கள். தேரை நிலைக்குக் கொண்டு போய்ச் சேர்த்தார்கள்.

இந்தச் செய்தி லட்சுமணபுரத்தில் இருந்த பெரிய புள்ளியாகிய வீரப்பனுக்குத் தெரிந்தது. அவருக்குக் கோபம் வந்து விட்டது. தம்முடைய உரிமையே பறி போய் விட்டது போல அவர் எண்ணினர். ''இந்தப் பயல்கள் நம்மை ஒரு வார்த்தை கேட்டார்களா? 'நீங்கள் வர முடியாமையில் நாங்களே இழுத்து விடுகிறோம்' என்று என்னிடத்தில் சொல்லியிருந்தால் நான் வேண்டாமென்று சொல்லப் போகிறேன்? நம்மை அவட்டியல்படுத்தி விட்டு, 'உங்கள் உதவி இல்லாவிட்டாலும் நாங்கள் தேரை இழுக்க முடியும்'என்று காட்டுவதைப் போல அல்லவா செய்துவிட்டார்கள்? அடுத்த வருஷம் இவர்கள் தேரை இழுப்பதைப் பார்த்து விடுகிறேன்! யாராவது வடத்தைத் தொட்டும்; அந்தக் கையை அங்கேயே வெட்டிப் போட்டு விடுகிறேன்!'' என்று உறுமினர். அவர் தாம் சொன்னபடி செய்யும் பயங்கரமான ஆசாமி என்பது எல்லாருக்கும் தெரியும்.

''டே! பசங்களா? அடுத்த வருஷம் அந்தப் பயல்கள் நம் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்க வேண்டும். அப்படிக் கேட்டால் வழக்கப்படி தேரோட்டம் நடக்கும். இல்லையானுல் ரணகளந்தான்'' என்று மீசையை முறுக்கிக் கொண்டு வீரப்புப் பேசினர். ''கடுத்த வருஷம் என்ன ஆகப் போகிறதோ?'' என்று எல்லாரும் ஒலே நடுங்கிக் கொண்டிருந்தார்கள்.

அடுத்த வருஷம் வந்தது; மாசி மாசத்தில்தான் தேரோட்டம். 'லட்சுமணபுரத்துக்காரர்கள் இந்த வருஷம் தேரை இழுக்கப் போவதில்லையாம். ஏதோ கலகம் செய்யப் போகிறர்களாம்?' என்ற செய்தி ஊரெங்கும் பரவியது. ''அவர்கள் என்ன செய்ய முடியும்? சாமி காரியத்துக்குத் தடை பண்ணுகிறவர்கள் உருப்படுவார்களா? அவர்கள் வந்தால் வரட்டும்; வராவிட்டால் போகட்டும், தேரை நம் ஊர்க்காரர்களே இழுத்து விடலாம்'' என்று ராமாபுரத்துப் பெரிய புள்ளிகள் பேசிக்கொண்டார்கள்.

தேருக்கு அலங்காரம் செய்து கவாமியை அதில் எழுந்தருளப் பண்ணினர்கள். வழக்கம் போல் கூட்டம் கூடியிருந்தது. தேரை இழுக்க வேண்டும்.

வீரப்பன் இப்போது கலகம் செய்யத் தயாராகி விட்டார். ''எத்தப் பயல் நம்முடைய வடத்தைத் தொடு இரும். பார்க்கலாம்!'' என்று கிட்டிய கத்தியும் கையுமாகப் புறப்பட்டார். ''சாமி காரியத்துக்குத் தங்கல் வரக் கூடாது. உங்கள் கொத்தை வீட்டோடு வைத்துக் கொள்ளுங்கள்'' என்று சில முதியவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

''சாமியாவது; பூதமாவது! நாமாக வைத்துக் கும்பிடுகிற சாமிதானே? சாமி பேரைச் சொல்லிக் கொண்டு அமமரியாதை செய்கிறவர்களைச் சும்மா விட்டு விடுவதா? இன்றைக்குச் சாமி காரியத்தில் காட்டுகிற அக்கிரமத்தை நானேக்கு மற்றக் காரியங்களிலும் காட்டத் துணிவார்கள். அந்தப் பயல்களுக்கு இப்போதே புத்தி புகட்டா விட்டால் அவர்களுக்குத் திமிர் அதிகமாகி விடும்.''

அவர் பேசும்போது ஏதோ தம் முடைய சொத்தை அடாவடியாகப் பறித்துக் கொண்டவர்கள் போல ஆத்திரப்பட்டு, இரண்டில் ஒன்று பார்த்து விடுவது என்ற புறப்பட்டவர் போல் இருந்தது. அவருடைய கட்டளைக்கு அஞ்சி லட்சுமணபுரத்துக் காரர் யாரும் தேரை இழுக்கப் போகவில்லே.

வீரப்பனுக்கு ஒரு மகன். அவன் தகப்பனுர் சொல்லியதையெல்லாம் கேட்டான். ''அப்பா, சாமி காரியத்தில் நம்முடைய கோபதாபங்களைக் காட்டக் கூடாது. சாமி எல்லாருக்கும் பொது. சமாதானமாக இருந்து எல்லாரும் சேர்ந்து இரு விழாவை நடத்த வேண்டும்'' என்றன்.

''போடா பொன்னப்பா! நீ எனக்குப் புத்தி சொல்ல வந்து விட்டாயோ? இந்தப் பயல்களே இப்படியே விட்டு விட்டால் நாளைக்கு நம் தலேமேலே ஏறி மிதிப்பார்கள்.''

அந்தப் பொன்னப்புவுக்குக் கல்யாணம் ஏற்பாடாகியிருந்தது. மாரியம்மள் என்ற பெண்ணை மணப்பதாகத் தீர்மானம் ஆகியிருந்தது.

இந்தத் தேர்க் கலவரத்தில் அந்த முகூர்த்தத்தைத் தள்ளி வைத்து விட்டார்கள்.

அவர்களிடையே நேர்ந்த மன வேற்றுமையால் சுபகாரியத்தைக் கூடத் தள்ளி வைத்து விட்டார்களே என்று வருந்தினாள் மாரியம்மாள். 'இந்தக் கலகம் இதோடு நிற்குமோ? அல்லது அடிதடி, கொலை என்று வளர்ந்து விடுமோ?' என்று அஞ்சினாள் அவள்.

''கடவுளே, ஏதாவது சமாதான மான வழியைக் காட்டி இவர் களுடைய சண்டை சச்சரவுகளைத் தீர்க்க மாட்டாயா? எதற்கும் அஞ்சு உன் பெயரைச் சொல்லிக் கொண்டு இப்படிக் கலகம் செய்கிறார்களே!'' என்று அவள் அங்கலாய்த்தாள்.

தேர் புறப்படப் போகிறது. லட்சுமணபுரத்துக்காரர்களில் ஓர் ஈ காக்கை கூட அங்கே போகவில்லை. ''எந்தப் பயல் இழுக்கப் போகிறான்? பார்த்து விடுகிறேன்'' என்று வீரப்பன் அரிவாளும் கையுமாகப் புறப்பட்டார். தேரின் இருவடங்களையும் ராமாபுரத்துக்காரர்களும் வெள்ளூர்க் காரர்களும் பிடித்துக் கொண்டிருந்தார்கள். தேர் மெல்ல நகர ஆரம்பித்தது. வீரப்பன் அரிவாளை ஓங்கிக் கொண்டு ஓடி வந்தார்.



சாத கொலைகாரப் பாவிகள் என்று நாடே சொல்லும்படி இந்தச் சண்டை வளர்ந்தால் என்ன செய்வது? எங்கள் கல்யாணம் நடக்காமல் போனதும் போகட்டும். இந்தச் சண்டை முற்றாமல் ஒரு நல்ல வழிகாட்ட வேண்டும் ஆண்டவனே!'' என்று அவள் மனம் உருகிப் பிரார்த்தித்தாள்.

''எனக்குக் கல்யாண மே வேண்டாம். நான் கன்னியாகவே செத்துப் போகிறேன். இந்த ஊரில் பழைபடி ஒரு கலகமும் இல்லாமல் தேர்த் திருவிழா நடந்தால் போதும், கடவுளே, நீ மனசு வைத்தால் நல்லது நடக்காதா?

அப்போது, ''ஐயோ! ஐயோ!'' என்ற ஒலி கூட்டத்தில் எழுந்தது. நகர்ந்த தேரின் சக்கரத்தின் கீழ் மாரியம்மாள் ஓடி வந்து தலையைக் கொடுத்து விட்டாள். தலை நசுங்கிப் போயிற்று. அவ்வளவுதான்; ஜனங்கள் திக்குக்கு ஒருவராக ஓடினார்கள். ''கொலை! கொலை!'' என்று லெர்கத்தினார்கள். ''பலி! பலி!'' என்று லெர் கூச்சல் போட்டார்கள். தேர் நின்று விட்டது. அதன் சக்கரத்தின் கீழ் நசுங்கின தலையுடன் மாரியம்மாள் கிடந்தாள்.

அந்தக் கோலத்தைக் கண்டவர்கள் மனம் கலங்கினார்கள். ''ஐயோ! பாவம்!'' என்று பலரும் வருந்தினார்கள். சடலத்தை அப்புறப்படுத்தினார்கள். புண்யாகவாசனம் செய்து தேரை ஓடவிட்டார்கள். தேரின் மேலிருந்து குருக்கள் கத்தினார்: ''மகா பாவிகளா! அநியாயமாக ஒரு பெண்ணைக் கொலை செய்து விட்டீர்களே! இது அடுக்குமா?'' என்று கதறினார். கூட்டம் ஸ்தம்பித்து நின்று விட்டது. தேரும் நின்றது.

வீரப்பனை இந்த நிகழ்ச்சியைக் கண்டு அதிர்ந்து போனார். அவருடைய மனைவிக்குப் பேரன பெண் தேருக்குப் பலியாகிவிட்டதை அறிந்து அவர் மயக்கம் முற்றவரைப் போல நின்றார். அவர் கையிலிருந்து அரிவாள் நழுவியது.

பக்கத்தில் நின்றிருந்த பொன்னப்பன், ''அப்பா, உங்கள் ஆத்திரத்தால் என்ன நடந்து விட்டது, பார்த்தீர்களா? அநியாயமாக ஒரு பெண்ணைப் பலி கொடுத்து விட்டீர்களே! அடுத்த மாதம் தாலியும் கழுத்துமாக மணக்கோலத்தில் இருக்க வேண்டிய பெண்ணைப் பிணக் கோலம் ஆக்கி விட்டீர்களே!'' என்று கதறினான்.

வீரப்பன் சிறிது நேரம் கண்ணை மூடியபடியே நின்றார். பிறகு கண்ணைத் திறந்தார். தம் தலையில்



மடேர் மடேர் என்று அடித்துக் கொண்டார். ''என்ன காரியம் செய்து விட்டேன்! இப்படியெல்லாம் நடக்குமென்று நான் எதிர் பார்க்க வில்லையே! கோபம், பாபம், சண்டாளம் என்று பெரியவர்கள் சொல்வது இப்போதுதான் புரிகிறது. தெய்வம் என்னை மன்னிக்குமா?'' என்று கண்ணீர் துளும்பக் கதறினர்.

அருகில் நின்ற பொன்னப்பன், ''அப்பா! இன்று முதல் உங்கள் கோபத்தை ஒழியுங்கள். அறியாயமாக மாரியம்மாள் தன் உயிரைத் தியாகம் செய்து விட்டாள்; நீங்கள் பண்ணின அக்கிரமத்துக்கு அந்த ஒரு தியாகம் போதாது'' என்று கண்கலங்கச் சொன்னான்.

அருகில் நின்றவர்கள் அவன் எதை நினைந்து இப்படிப் பேசுகிறான் என்று தெரியாமல் விழித்தார்கள்.

பொன்னப்பன் உரத்த குரலில் பேசினான்: ''எனக்குச் கொடுக்க இருந்த பெண் தன் உயிரையே தியாகம் செய்து விட்டாள். இனி நான் யாரையும் கல்யாணம் செய்து கொள்ளப் போவதில்லை. இதோ இன்று முதல் நான் சாமியாராகி விட்டேன்'' என்றான்.

அவ்வளவுதான். லெ பேர் அவனிடம் வந்து ஏதேதோ சொன்னார்கள். அவன் பிடிவாதமாக, ''என் மாரியம்மாள் உயிர் பிழைத்து வந்தால் நான் அவளை மணப்பேன். அது நடக்காத காரியம். ஆகவே நான் சாமியார் ஆவதை யாரும் தடுக்க முடியாது'' என்று சொல்லிப் புறப்பட்டு விட்டான்.


எங்கே போனானென்று யாருக்கும் தெரியாது, அடுத்த வருஷம் அவன் காவியுடையும் ருத்திராட்ச மாலையுமாக இந்த ஊருக்கே வந்து சேர்ந்தான்; இந்தக் கோயிலே கதியென்று வாழத் தொடங்கி விட்டான்.

''அந்தப் பொன்னப்பன்தானு நீங்கள்?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டேன்.

''அதை நான் வாய்விட்டுச் சொல்ல வேண்டுமா? மாரியம்மாள் தன் உயிரைத் தியாகம் செய்தாள். நான் என் இல்லற வாழ்க்கையையே தியாகம் செய்து விட்டேன்'' என்று சொல்லிப் பொன்னப்ப சாமியார் கண்ணைச் கசக்கிக் கொண்டார்.

*

சாலையில்
உங்கள் பாதுகாப்புக்கு -
ப்ரேக்ஸ் இந்தியா



தயாரிப்பாளர்கள்:
பி.ஐ. கார்லிங் ப்ரேக்குகள், ப்ரேக் உறுப்புகள், மற்றும் கார்கள், ஜீப்புகள் வாணிகத்துறையில் பயன்படும் வாகனங்கள், விவசாய டிராக்டர்கள்— இவைகளுக்கான ஹைட்ராலிக் ப்ரேக் மற்றும் கிளட்ச் ஆக்சுவேஷன் சாதனங்கள்.

அசல் பி.ஐ. கார்லிங் உதிரி உறுபுகளையே கேட்டு வாங்குங்கள்.

ப்ரேக்ஸ் இந்தியா
லிமிடெட்
பாடி, சென்னை 600 050

SAA/BI/1830

தேவை ஒரு வீடு

அகிலன்



சேட்ஜியின் கார் அந்தத் தெரு வையே அடைத்துக்கொண்டு வந்து கந்தசாமியின் வீட்டுக்கு முன்னால் நின்றது. கந்தசாமியும் அவர் மாணிக்களான பிள்ளைகளும் சேட்ஜியின் காரிலிருந்து இறங்கினார்கள். காரின் முன் இருக்கையில் உட்கார்ந்திருந்த சேட்டிடம் கைகூப்பி அவருக்கு விடை கொடுத்தார்கள். கார் நகர்ந்தது.

கந்தசாமியினுடைய வீட்டின் வலப்புறப்பகுதியில் [ரூடியிருந்த சுந்தரம் இந்தக் காட்சியைக் கவலையோடு சன்னல் வழியே உற்றுப் பார்த்தார். அவர் வயிற்றுக்குள் குடல்கள் கண்டி இழுப்பது போல் வலி தோன்றி மறைந்தது.

''பத்திரம் பதிஞ்சு முடிச்சிட்டாப் பிலே இருக்கு. கணக்கிலே ரெண்டு லட்சம்; கையிலே ரெண்டு லட்சம்னு கேள்வி. ஹும்! காலி பண்ணச் சொல்லி நோட்டீஸ் [வந்திருச்சு'' என்று தமக்குள் 'பேசிக் கொண்டார் சுந்தரம். அவருக்கு வயது இம்பத்து இழுத்தார் முன்னுள் அதிகாரி.

''காலி வீடாவது! பட்டணத்திலே இப்ப காலிமனியே கிடைக்க மாட்டேங்குது. அதனலே தான் இந்த வீட்டையே இடிச்சிட்டு அடுக்கு மாடியாக் கட்டப் போறார் சேட்டு'' என்றார் கந்தசாமி.

'எருதின் புண்ணுடை வேதனை அதைக் கொத்தித் தின்கற காக்காய்க்கு எப்படித் தெரியப் போகுது? கையிலே கெடைக்கிற கறுப்புப் பணமும் வெள்ளைப் பணமும் இப்படி அவரைப் பேசச் சொல்லுது' என்று [நினைத்துக் கொண்டார் சுந்தரம்.

''ஆமா, சொல் லீட் டேன், நானோக்கு எம்மேலே வருத்தப்பட்டுக் காரிங்க. அந்தச் சேட்டு றொம்பப் பொல்லாத ஆளு. வீட்டுச் சாமானெத் தூக்கி நடுத்தெருவிலே எறியற நிலேமைக்கி வச்சுக்காதிங்க,'' வெடுக்கென்று கந்தசாமி பேசி விட்டு வீரப்போடு போய் விட்டார்.

''அயோக்கியன்! என்ன திமிர் இவனுக்கு!'' என்று [தமக்குள் கறுவிக் கொண்டார் சுந்தரம்.

அரசாங்கத்தில் ஒருவர் வேலே பார்த்தால் உழைத்தும் சம்பளம் வாங்கலாம்; உழைக்காமலும் சம்பளம் வாங்கலாம். லஞ்சம் வாங்கியும் பிழைக்கலாம்; லஞ்சம் வாங்காமலும் பிழைக்கலாம். சுந்தரம் ஓர் அப்பாவி. எல்லா வேலேகளேயும் தம் தலேமேல் தூக்கிப் போட்டுக் கொண்டு முப்பத்தைந்து ஆண்டுகளுக்குமேல் பம்பரமாய் உழைத்தவர், நேர்மையாகவும் கண்டிப்பாகவும் நடந்து கொண்டதால், தம் உத்தியோக வாழ்வில் பல்வேறு தொல்லேகளுக்கு ஆளானவர். கடைக்கால தில்லாவது தம் சொந்த ஊரான சென்னேக்கு வந்து, ஓய்வு பெற்ற வுடன் தரும் மொத்தப் பணத்தைக் கொண்டு ஒரு வீட்டை வாங்கிக் கொண்டோ கட்டிக் கொண்டோ வாழலாம் என்று நினத்தவர்.

பரம்பரையாக அவர்களுக்குச் சொந்தமாக இருந்த வீட்டை விற்றுத்தான் அந்தக் காலத்தில் சுந்தரத்தின் அப்பா அவளப் படிக்க வைத்தார்.

சுந்தரத்தின் மூத்த மகன் கைலாசம் சென்னேயில் [தவியார் கல்லூரி ஒன்றில் ஆசிரியராக வேலே பார்க்கிறான். மூத்தமகளுக்கு கல்யாணம் செய்து கொடுத்து அவள் கணவனோடு திருச்சியில் வாழ்கிறாள். ஒரு பையனும் ஒரு பெண்ணும் கல்லூரியில் படிக்கிறார்கள். அவர் மனேவியைச் சேர்த்து இப்போது ஐந்து பேர்களேக் கொண்ட குடும்பம். அது. அறுநூறு ரூபாய் வீட்டு வாடகை.

சுந்தரத்தின் மனம் வீட்டுச் சொந்தக்காரரின் பேச்சால் மிகவும் நொந்து போய்விட்டது. நாற்காலியில் உட்கார்ந்து தம்முடைய மேஜை 'டிராயரை' த் திறந்தார். வங்கியின் சேமிப்புக் கணக்குப் புத்தகத்தை எடுத்துப் பிரித்தார். மாதமாதம் சம்பளத்தில் பிடித்த 'பிராவிடண்ட் பண்ட்', மற்றும் ஒய்வு பெற்ற வுடன் அரசு அளித்த தொகை எல்லாமாகச் சேர்ந்து மொத்தம் எழுபத்தையாயிரமும் சில்லரை யும் இருந்தன. இது சொந்தமாக ஒரு வீடு வாங்கவோ அல்லது வீடு கட்டவோ அவர் ஒதுக்கி வைத்த பணம். இளமைக் காலத்தில் தம் சொந்த வீட்டில் பிறந்து வளர்ந்தவராதலால், முதுமைக் காலத்தில் பிள்ளேகளுக்கு வீட்டுச் செல்ல ஒரு வீடு தேவை என்பதைப் பல அனுபவங்களுக்கு முன்பே அவர் உணர்ந்திருந்தார்.

'வாடகைக்கு இருந்த வீட்டைக் கந்தசாமி சேட்டுக்கு வீலே பேக திரர்' என்று தெரிந்த நாளி லிருந்து, சுந்தரமும் மூத்த மகன் லைகாசும் வீடு தேடும் படலத்தில் வீரமாக இறங்கினர்கள். வாடகைக்குக் கிடைத்தாலும் சரி, விலேக்குக் கிடைத்தாலும் சரி என்று மும்முரமாக மூன்று நாட்கள். ஞாயிற்றுக் கிழமை தோறும் அப்பாவும் பிள்ளேயுமாகத் தரகர்களின் பின்னல் அலேந்து திரிந்ததுதான் மிச்சம்; பத்திரிகைகளில் வாடகைக்கும் விலேக்கும் வீடுகள் இருப்பதாக வரும் விளம்பரங்களேப் பார்த்து முயற்சின் செய்ததும் வீண்.

சுந்தரத்தின் கையிலிருந்த எழுபத்தையாயிரத்துக்கு வீடு வீலேக்குக் கிடைப்பதாக இல்லே. வீட்டை வாடகைக்கு விடத் தயாராக இருந்த வர்களோ அதன் வீலே மதிப்பில் கால்பங்கை முன்பணமாகக் கேட்

டார்கள்; அல்லது அப்போதைக்கு அவர்கள் குடியிருந்த வீட்டின் பாதி அளவு வீட்டுக்கு,அவர்கள் கொடுத்து வந்த வாடகையைப் போல் ஒன்றரை மடங்கு கேட்டார்கள்.

'வெறும் காலிமனே கூட ஒரு கிரவுண்டு இந்த எழுபத்தஞ்சாயிரத்திலே வாங்கமுடியாதுபோலிருக்கே!' தம்முடைய கணக்கில் இருந்த ஆயுட்காலச் சேமிப்பைப் பார்த்துப் பெருமூச்சு விட்டார் சுந்தரம். 'வீட்டுக்காரியோட நகை, பெண் சுளோட நகையெல்லாம் அடகு வைக்கலாம் இல்லேன்னு வித்திடலாம். அந்த வகையிலே இருபத்தஞ்சு முப்பது தேறும். ஒரு லட்சத்திலே கூடவா ஒரு சின்ன வீடு வாங்க முடியாது?'

அப்போது வெகுநாட்களாகச் சுந்தரத்தை எட்டிப் பார்க்காமல் இருந்த நண்பர் ராமநாதன் அவரைச் சந்திக்க வந்தார். அவரைப் பொறுவே அரசில் வேலை பார்த்து. ஓராண்டுக்கு முன்பாக வேலையிலிருந்து ஓய்வு பெற்றவர் ராமநாதன். ஆனால் ராமநாதன் முன்யோசனையோடு திருவான்மியூரில் காலிமனை ஒன்றை வாங்கிப் போட்டிருந்தார். எனவே ஓய்வு பெற்றவுடன் முதல் வேலையாக வீட்டைக் கட்டத்தொடங்கிவிட்டார்.

நண்பரைக் கண்டவுடன் தம்முடைய சொந்தக் கவலையை மறைத்துக்கொண்டு, ''வீட்டைக்கட்டிமுடிச்சிட்டிங்களா? எப்ப என்னே விருந்துக்குக் கூப்பிடப் போறீங்க?'' என்று கேட்டார் சுந்தரம்.

''வீடு பாதியிலே நிக்குது; அது எப்ப மேலே எழும்புமனு தெரியலே'' என்றார் ராமநாதன்.

''என்ன இப்படிச் சொல்றீங்க?''


''ஆமா, செங்கல் இருந்தால் சிமெண்ட் இல்லே; சிமெண்ட் கைடைச்சால் ஆளில்லே; இவ்வளவும் கைடைக்கறப்போ பணம் இல்லே. முழு வீட்டுக்குத் தேவையான பணமும் பாதி வீட்டுக்கே பத்தலே.'' சலித்துக் கொண்டார் நண்பர்.

''ஊருக்குள்ளே எங்கே பார்த்தாலும் நாலடுக்கு மாடி, எட்டடுக்கு மாடின்னு எழும்பிக்கிட்டே இருக்கு?'' என்ற சுந்தரம், ''இந்த வீட்டை வாங்கி இடிச்சுத் தள்ளிட்டுப் பக்கத்திலே இருக்கிற காலி இடத்தையும் சேர்த்து, இதிலே கூடப் பதினாறு 'ஃப்ளாட்' கட்டப் போறார் ஒரு சேட்டு. இவருக்கெல்லாம் சிமெண்ட், ஆள் கைடைக்காமலா இருக்கு?'' என்றார் வியப்போடு.

''அவங்களுக்குத்தான் எல்லாம் கைடைக்கும். அவங்களுக்கு மட்டுந்தான் கைடைக்கும். கஷ்டப்பட்டு உழைச்சுச் சிறுகச் சிறுகச் சேமிச்சுச் சொந்தமாக ஒரே ஒரு வீடு கட்டணுங்கறது ஆசைப்படறவங்க, பாருங்க அவங்களுக்கு ஒண்ணுமே கைடைக்காது. இலிமே இந்த ஊரிலேயும் வெள்ளைப் பணம் சம்பாதிக்கிறவன் வீடு கட்ட முடியாது. கள்ளப் பணக் கொள்ளையிலே வர்த்தகச் சூதாட்டம் நடத்தறவன் பாருங்க, அவனாலே மட்டுந்தான் இங்கே வீடு கட்ட முடியும். ஒவ்வொரு கட்டிடத்திலேயும் இங்கே கள்ளப் பணம் துள்ளி விளையாடுது.''

வீடு கட்டத் தொடங்கிய நண்பர் ராமநாதனின் சொந்த அநுபவம் இவ்வளவு கசப்பாக இருக்கும் என்று சுந்தரம் சிறிதும் எதிர்பார்க்கவில்லே. ராமநாதனே ஒவ்வொரு நிலையிலும் தமது முயற்சிக்குப் போடப்பட்ட தடங்கல்களையும் விவரித்தார்.

''அப்படின்னு நான் வீடு கட்ட நெனக்கிற யோசனையைக் கைவிட



வேண்டியதுதானே?'' என்ஞர் சுந்தரம் ஏக்கத்தோடு.

''எவ்வளவு உங்க கையிலே இருக்கு?''

''ஏழுபத்தஞ்சாயிரம் இருக்கு; இன்னும் ஒரு இருபத்தஞ்சு புரட்டலாம்.''

''இதிலே பட்டணத்துக்குள்ளே ஒரு பிரவுண்டு காலி மனை கூட நீங்க வாங்க முடியாது. பேசாமல் இங்கே கட்டப் போற மாடிவீட்டிலே ஒரு போர்ஷன் வாங்கப் பாருங்க. அதுதான் இப்போ நடக்கக்கூடியது.''

ராமநாதனின் யோசனைதான் அப்போதைய அவருடைய பொருளாதார நிலைமைக்கு மிகவும் ஏற்றதாகத் தோன்றியது. உடனடியாக ஒரு முடிவுக்கு வந்துவிட்டார், சுந்தரம். இந்த வீட்டை விலைக்கு வாங்கிய சேட்ஜி வெளியூருக்குப் போகும்போது அடுக்கு மாடி கட்டிக் கொண்டிருந்தாராம். அதில் ஒரு ஃபிளாட் வீலைக்குக் கேட்க வேண்டும்; அல்லது தாற்காலிகமாக ஒரு வாடகை வீட்டில் குடியிருந்து கொண்டு கட்டப் போகும் வீடுகளில் ஒரு பகுதியை வாங்கிவிட வேண்டும்.

நண்பர் ராமநாதன் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டார். புறப்படும்போது, ''நம்மோட வாழ்நாள் முழுவதும் பாடுபட்டு உழைச்சும் நம்மாலே ஒரே ஒரு வீடு கூடக் கட்ட முடியலே. ஒவ்வொருத்தனும் டில்லியிலே நாலு வீடு, பம்பாயிலே பத்து வீடு, கல்கத்தாவிலே ரெண்டு, நம்ம ஊரிலே நாற்பது வீடுன்னு கட்டிக்கிட்டுப் போருன். விவாரய நெலத்தை வசீச்சுப் போட்டு ஜமீன்தார் அந்தக் காலத்திலே இருந்தான். இப்போ இருக்கிற ஜமீன்தாராளு நகரங்களிலே கோட்டைகள் கட்டத் துணிஞ்சிட்டான். இதெல்லாம் எங்கே போய் முடியுமோ தெரியலே'' என்று கலக்கத்தோடு சொல்லிவிட்டுப் போனர்.

கல்லூரியிலிருந்து மூத்த மகன் கைலாசம் திரும்பிய பிறகு, வீட்டுச் சொந்தக்காரர் கந்தசாமி தமக்கு அளித்துள்ள கெடுவையும் ஃபிளாட் வாங்குவதற்கான ராமநாதனின் யோசனையையும் அவனிடம் வெளியிட்டார், சுந்தரம். இருவரும் அடுத்த நடவடிக்கைகளைப் பற்றிக் கலந்து பேசினர்கள்.

சேட்ஜியின் அடுக்குமாடிக் கட்டிடம்பற்றிய விளம்பரம் ஒன்று இரண்டு நாட்களுக்கு முன்பு வந்த தினசரிப் பத்திரிகையில் வெளியாகி இருந்தது. தேடிப் பார்த்துக் கண்டுபிடித்தான் கைலாசம். தந்தையிடம் காட்டினான். எழும்பூரில் இருந்தது கட்டடம்.

'வாங்குவோர் வசதிக் கேற்ப இரண்டு மூன்று வகையான பகுதிகள் அந்த அடுக்கு மாடியில் இருந்தன, குறைந்த பட்சம் அளவுள்ள வீடு சுமார் எழுநூறு சதுர அடிகள். விலை ரூபாய் ஒரு லட்சம். யார் முதலில் வருகிறார்களோ அவர்களுக்கு அளிக்கப்படும்.'

''இப்போதைக்கு இதையும் விட்டால் நமக்கு வேறே வழியில்லே; எப்படியும் நகை நட்டுக் கூடியும் சேர்த்து ஒரு லட்சம் ஏற்பாடு செய்திடலாம். நாளைக்கே போய்ப் பார்த்து அட்வான்ஸ் கொடுத்திடலாம்'' என்ஞர் சுந்தரம்.


இறுநாள் காலே தந்தையும் மகனும் பத்திரிகையில் குறிப்பிட்டிருந்த முகவரிக்குச் சென்ஞர்கள். அலுவலகத்தில் சேட்ஜியைப் சந்திப்பது முதலில் அவ்வளவு எளிதாக இல்லே. சுந்தரத்திடம் முழுவதும் பணம் கட்டக்கூடிய வசதி இருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்ட பிறகே சேட்ஜியின் ஆட்கள் அவரைக் காண அனுமதித்தார்கள். சேட்ஜி இருவரையும் இன்முகத்தோடு வரவேற்ஞர். கந்தசாமியின் வீட்டில் வாடகைக்குக் குடியிருப்பவர்கள் எவ்வதைக் கேள்விப்பட்ட பிறகு, அவர்களுக்கு முன்னுரிமை வரவழைத்துக் கொடுத்து உபசரித்தார்.

வந்த வேலையைச் சந்தரம் தெரிவித்தபோது, ''என்ன ஃபிளாட் டுக்குத்தான் டிமாண்ட் ஜாஸ்தி. நீங்க ஒரு நாள் லேட்! நேத்துதான், ஒரு பார்ட்டி கிட்டே கடைசியாக இருந்த வீட்டுக்கும் வாக்கு குடுத்திட்டேன்; இருந்தாலும் நீங்க நம்ப சந்தசாமிக்கு வேண்டியவர். அதை வேறே பார்க்க வேண்டியிருக்கு.''

''ஏழுபத்தையாயிரம் ஒரே 'செக்' கா இப்பவே குடுத்திடறேன். பாக்கி இருபத்தஞ்சு நீங்க கேக்கறப்ப தர்ரேன்'' என்ஞர் சுந்தரம்.

''எதுக்கும் நான் நம்ப மானேஜர் கிட்டச் சொல்லி அனுப்பறேன்.''

''நீங்க அப்படிச் சொல்லப்படாது. இப்பவே ஒப்பந்தப் பத்திரத்தை முடிச்சுட்டு, நீங்க





அட்டைப் படம்

'ஓம் விச்வம் விஷ்ணும்' என்று விஷ்ணு சகஸ்ரநாமம் தொடங்குகிறது. அதில் உலகங்களையும் அண்ட சராசரங்களையும் பிரம்மாதி தேவர்களையும் தன்னுள் அடக்கி, சிருஷ்டியின்போது தோற்றுவிக்கிறஸ்ரீமந் நாராயணன். குருக்ஷேத்திரப் போர்க்களத்தில் அவனுடைய விசுவ ரூப தரிசனத்தைக் காணும் பேறு பார்த்தனுக்குக் கிடைத்தது. மகிழ்ச்சியும் உற்சாகமும் பெருகும் இந்தப் புனிதத் திருநாளில் மகாவிஷ்ணுவின் விசுவரூப தரிசனக் காட்சியைக் கல்கி மகள் தீபாவளி மலர் அட்டைதாங்கி வெளிவருகிறது.

'செக்' வாங்கிக்கணும். வீட்டைக் கூடப் பிறகு நான் போய்ப் பார்த்துக்கறேன். நீங்க எந்த லிஸ்டோ ரிலே' வீடு குடுத்தாலும் சரி.''

''செக் எங்கே போகுது? மானேஜரை அனுப்பறேன். முதல்லே லீவாட்டைப் போய்ப் பார்த்துட்டு வாங்க.''

சேட்டிக்குச் சொந்தமான கார்கள் ஒன்றில் சேட்டியின் மானேஜர் அவர்களை எழும்பூருக்கு அழைத்துக்கொண்டு சென்றார். மூன்றுவது மாடியில் இருந்த சிறு 'அபார்ட்மெண்ட்' ஒன்றுதான் கொடுக்கக் கூடிய நிலையில் இருந்ததாம். அதுவும் சுந்தரத்துக்காக இந்தச் சலுகையாம்.

இரண்டு சிறு படுக்கை அறைகள், ஒரு வரவேற்பறை, ஒரு சமையற் கட்டு, குளியல் அறை என்று குறைந்த இடத்துக்குள் போதிய வசதிகள் செய்யப்பட்டிருந்தன. இந்து பேர்களைக் கொண்ட குடும்பத்துக்கு அது அவ்வளவு போதுமான இடப் பரப்பைக் கொண்டது என்று சொல்ல முடியாது. ஆனாலும் அதை விட்டால் அவர்களுக்கு வேறு வழி? மாடிப் படிகளில் இறங்கி வரும் போது சுந்தரத்தைத் தனியே அழைத்துச் சேட்டியின் மானேஜர் ஒரு செய்தியை நாகுக்காக அவர் காதுகளில் போட்டு வைத்தார்.

''வின்பாரத்தில போட்டிருக்கிற வீலுக்குத் தான் நாம ஒப்பந்தம் செய்து கொள்ளப்போகிறோம். ஆனால் காமன்மே வாங்கறதிலே யிருந்து, மெயின்ட் வாங்கறதிலே யிருந்து, இன்னும் சட்டம் பேச றவங்களச் சரிக்கட்டறதிலிருந்து, ஒவ்வொண்ணுக்கும் நாங்க 'பினாக்' லே பணம் குடுக்க வேண்டி யிருக்கு. விளம்பரத்திலே போட்டிருக்கிறதைத் தவிர, நீங்க ஒரு முப்பது சதவிதம், அதாவது முப்பதாயிரம் கையிலே ரொக்கமாய்த் தரணும் அதை முன்குலே குடுத்திடணும்.''

சுந்தரத்துக்கு இதைக் கேட்டபடியே அந்த அடுக்குமாடியே பிளந்து அவர் தலை உச்சியில் விழுவது போல் இருந்தது. தம்முடைய அதிர்ச்சியையும் பெருஞ்சினத்தையும் அவர் எவ்வளவோ சிரமப்பட்டு அடக்கிக்கொள்ள முயன்றார். என் றூலும் அவரால் முடியவில்லே.

''லட்சம்னு விளம்பரத்திலே போட்டுட்டு, பக்கத்திலே வந்தா மூப்தாயிரம் அதிகமாக் கேக்கிறிங்களே, இது நியாமா?''

''நாங்க உங்களைக் கட்டாயப் படுத்தலே. வீடு வாங்கறதும் வாங்காததும் உங்க இஷ்டம். எத்தனேயோ பேர் காத்துக்கிட்டிருக்காங்க.''

வீடு காட்டுவதற்காகக் கூட்டிக் கொண்டு வந்தவர்களே எழும்பூரிலேயே நடுத்தெருவில் விட்டுவிட்டுக் காரில் சேட்டியிடம் பறந்தார் மானேஜர்.

லைலாசம் அன்றைக்குக் கல்லூரிக்கு விடுமுறை கேட்டுக் கடிதம் அனுப்பியிருந்தாள். ஆகவே அவசரம் ஏதும் இல்லே. அப்பாவும் பின்னேயும் எழும்பூரிலிருந்து திரிப்பேட்டையை நோக்கி நடந்தார்கள். வழியில் குறுக்கே ஓடிய கூவம் சாக்கடையின் கரையில் ஏகப்பட்ட குடிசைகள். மட்கிப் போன தென்னங் கீற்று, கிழிந்த சாக்கு, ஓட்டைத் தகரம், ஜினிமாப் போஸ்டர், மூங்கில் தட்டி முதலிய பலவகையாவ மூலப் பொருள்களைப் பயன்படுத்தி அவர்கள் குடிசை கட்டியிருந்தார்கள். வெயில் மழை குளிர் எல்லாவற்றையுமே தாராளமாக வரவேற்கும் உறைவிடங்கள் அவை.

''இவ்வளவு நாளா இவங்க இந்த நிலைக்குத் தள்ளப்பட்டதுக்கு நாமும் தெரிந்தோ தெரியாமலோ உடந்தையா இருந்திருக்கோம். இப்ப நமக்கே இந்த நிலே வந்திடும் போல இருக்கு'' என்முன் லலைசல்.

''குடிசை மாற்று வாரியம்னு அடுக்கு மாடிக் குடிசைகளைக் கட்டி இவங்களைக் குடியவைக்க முயற்சி செய்யறுங்க. ஆனல் இதலேயே யும் பிரச்சினே தீரப் போவதில்லே'' என்றார் சுந்தரம்.

சிந்தாதிரிப் பேட்டையின் சாலே யோரத்தைத் திறந்த வெளிப் பிளாட் பாரங்களே பலருக்கு வீடுகளாகப் பயன்பட்டன. திறந்த வெளியிலேயே அடுப்புகள் மூட்டிச் சிலர் சோறு பொங்கிக் கொண்டிருந்தார்கள். வேறு சிலர் இடம், காலம், சுற்றுப்புறம், சூழ்நிலே எனப்பெற்றியுமே கவலேப்படாமலும் வெறுந்தரையில் முடங்கிக் கிடந்தார்கள். சண்டைகள், சச்சரவுகள், சல்லாபங்கள், இனிருத்தி எல்லாமே அவர்களுக்கு அன்கேதான் போலும்! இந்தக் காட்சிகளே இருவரும் மௌனமாக பார்த்துக் கொண்டே நடந்தார்கள்.

''இலிமே அடுத்தாப்பலே நாம என்ன செய்யறது?'' என்று கேட்டார் சுந்தரம், மௌனத்தைக் கலைத்துக் கொண்டு. ''இன்னும் ஒரு வாரத்திலே நாம வீடு பார்த்தாகணும்.''

''இதோ பார், தாம்பரத்திலேயோ செங்கல்பட்டிலேயோ எங்கேயாவது ஒரு வீட்டை வாடகைக்குப் பார்த்து முடிச்சிடு. எனக்கென்னவோ வேறெ வழி இருக்கிறதாத் தெரியலே.''

''என்னப்பா இது? வேலேக்கு நாலும் படிப்புக்குத் தம்பி தங்கச்சிகளும் இனமும் வந்திட்டுப் போக முடியுமா? எவ்வளவு நேரம், எவ்வளவு பணம் செலவாகும்?''

சுந்தரம் சட்டென்று தெருவோரத்துப் பிளாட்பாரத்தில் நின்ருர். ஒருபுறம் பிரம்மாண்டமாக எழும்பியிருந்த மூன்றடுக்கு மாடி வீடுகளையும் மறுபுறம் பிளாட்பாரத்தையே வீடாகக் கொண்டு வாழும் மக்கள் கூட்டத்தையும் மாறி மாறிப் பார்த்தார். மகளின் தோள்மீது கையை வைத்து அவள் விழிகளே உற்றுப் பார்த்தார். அவர் விழிகள் கலங்கியிருந்தன.

''லைலாசம், எதிர்காலத்திலே இந்தப் பட்டணத்திலே உன்னைப் போல என்னைப் போல ஒழுங்கா வேலே பார்த்து நியாயமாப் பணம் சம்பாதிக்கிறவன் வாடகைக்கு வீடு கிடைக்காது. நம்மகிட்ட லாபமடிக்கிறவன், வரி ஏய்க்கிறவன், லஞ்சம் வாங்கறவன், ஜாரைச் சுரண்டி உலேயிலே போடறவன் இப்படிப்பட்டவன் தான் இங்கே வசதியா வாழமுடியும். இவன்களுக்கு அடிமை வேலே செய்ய இந்தக் நெருவோரத்துப் பட்டாளமும் குடிசை வாழ் பட்டாளமும் இங்கே தேவைப்படும். இந்த ரெண்டு கூட்டத்தை விட்டா, இடையிலே அகப்பட்டுத் தவிக்கிற நமக்கு இங்கே இலி இடம் இல்லே. இப்போ நாமெ மரியாதையா வெளியேறிடப் பார்க்கணும்.''

சுந்தரத்தின் குரல் தழதழத்தது.

நடுத்தெருவிலே நின்று அவன் தந்தை அப்படிப் பேசியது லைசாசத்துக்கு என்னவோ போல் இருந்தது.

''வாங்க, போகலாம்; இது நடுத்தெரு அப்பா!'' என்முன் மகன்.

''நடுத்தெருவிலே வீட்டுச்சாமானேத் துக்கி எறிகிறதிலே வந்திடும் என்முன் சுந்தராமி; அவனே அந்த அளவுக்குப் பேச வச்சது சேட் குடுத்த கள்ளப் பணம். அவனே நம்மகிட்டவே அதைக் கேக்கிறான். இதுக்கு என்ன அர்த்தம்? வெள்ளேப் பணம் வச்சிருக்கறவனுக்கு வீடு கெடைக்காது.!''

சென்னே நகரத்துக்குள் ஒரு சின்னஞ்சிறு வீடு சொந்தமாகவோ அல்லது நியாயமான வாடகைக்கோ கிடைத்து விட்டால்தான் அப்பாவின் புண்பட்ட மனசு ஆறுதலடையும் என்று நம்பினுள் லைலாசம். ஆனல் வீடு கிடக்குமா?

ஆயிரக்கணக்கான குடும்பங்கள் கால்ங்காலமாக
பயன்பட்டுவரும் கிராம்புத் தைலத்தின்
நன்மைகளை ப்ராமிஸில் கண்டுணர்ந்தனர்.

கிராம்புத் தைலம் கொண்ட இணையற்ற டூத்பேஸ்ட் ப்ராமிஸ்

நீங்களும் ஏன் அதை உபயோகிக்கக்கூடாது?





ப்ராமிஸ்
பற்சிதைவிலிருந்து பாதுகாக்கிறது,
வாய்க்குப் புத்துணர்ச்சி
தருகிறது மற்றும்
அசுத்தத்தை அகற்றுகிறது.

பம்பாரா தயாரிப்பு

ஆரோக்கியமான பற்கள்,
ஈறுகள் மற்றும் புத்துணர்ச்சிமிக்க
மூச்சுக்கு ப்ராமிஸ்.

CHAITRA-BLS-453 TAM

மனத்தில் புழுக்கமாக இருந்த ஒரு வேதனையான சூழ்நிலையில் மிகவும் வேண்டிய நண்பர் ஒருவர் அவனே அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார். அறமுகம் மனத்தில் பதிவதாக அமைந்திருந்தது.

அந்த மன நிலையில், அந்தச் சூழ்நிலையில், அவளுடைய அறிமுகம் இதமாகவும், மனப் புழுக்கத்தைத் தணிப்பதாகவும் கூட இருந்தது. உணர்வில் உல்லாசத்தைக் கலந்தது.

''இவள் மாதவி. கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிறாள். உங்கள் விசிறி.''

அவளிடமிருந்து மனத்தைக் கிறங்க அடிக்கிற ஒரு புன்னகை, ஒரு கை கூப்பல் ஆகியவை இந்த அறிமுகத்தோடு உடன் நிகழ்ந்தன. அவளே அழகாக இருந்ததால் புன்னகையும், கை கூப்பலும் அந்த அழகை அதிக மாக்கிக் காண்பித்தன.

''ரசிகை என்று சொல்லுங்கள், 'விசிறி' என்ற வார்த்தை எனக்கு அவ்வளவாகப் பிடிப்பதில்லை. சினிமா நாடக அன்பர்கள் வேண்டுமானால் அப்படிச் சொல்லிக் கொள்ளட்டும். இலக்கியத்துக்கு விசிறிகள் வேண்டாம், ரசிகர்கள்தாம் வேண்டும். ரசிகன் கண் மூடித்தனமானவன் இல்லே. ஆனால் விசிறி கண்மூடித் தனமானவன்.''

''உங்கள் எழுத்துக்கோப் பொறுத்த வரை இவளும் கண் மூடித்தனமான வள்தான்.''

அவருடைய அறிவு இந்தக் கண் மூடித்தனத்தை வெறுத்தது. உணர்வு அதை விரும்பி வரவேற்றது.

''உங்கள் எழுத்துக்கோ விமர்சனம் செய்ய முயலுபவர்களோடும், செய்பவர்களோடும் கூட இவள் சண்டை போட்டிருக்கிறாள்.''

''சண்டைகள் சந்தைகளில் நடக்கலாம். ஆனால் இலக்கியத்தில் எவ்வளவு பெரிய கருத்து வேறுபாடாலும் அது அபிப்பிராய பேதம் என்ற எல்லையைத் தாண்டிச் செல்ல முடியாது; செல்லக் கூடாது.''

''உங்கள் மேலுள்ள அபாரமான பிரியத்தின் காரணமாக உங்களே எதிர்ப்பவர்களே இருக்கக் கூடாது என்று நினைக்கிற அளவுக்குப் பிடிவாதம் உள்ளவள் இவள்.''

கேட்பதற்குக் கர்வமாக இருந்தது. அவருக்கு. அறிவுக்கு ஒவ்வாளிக்காத இந்தக் குருட்டுப் பக்தி உணர்வுக்கு இதமாக இருந்தது.

அடுத்த தடவை முதலில் அறிமுகப்படுத்திய நண்பர் இல்லாமல் மாதவியே கல்லூரியிலிருந்து வீடு திரும்பும் போது தானாக அவளைத் தேடிக் கொண்டு வந்தாள்.

அவர் எழுதிப் புத்தகமாக வெளி வந்திருந்த புதிய நாவலின் பிரதி ஒன்றைக் கையோடு விலைக்கு வாங்கிக் கொண்டு வந்திருந்தாள்.

''இதில் உங்கள் கையெழுத்து ஒன்று வேண்டும்.''

''எல்லாப் புத்தகங்களும் வாங்கி வைத்திருக்கிறீர்களா?''

''உங்கள் புத்தகங்கள் எல்லாவற்றையும் கையெழுத்தோடு சேர்த்து வருகிறேன். இதற்கு முன் உங்களிடம் அறிமுகம் இல்லாமலே பல



பொது இடங்களிலும், கூட்டங்களிலும் உங்களுடைய கையெழுத்தை வாங்கியிருக்கிறேன். அறிமுகமான பின் இப்போதுதான் உங்களிடம் நேரில் கையெழுத்து வாங்குகிறேன்.''

''வேறு யார் யாருடைய புத்தகங்கள் உங்களுக்குப் பிடிக்கும்?''

''மற்றவர்களுடைய எழுத்துக்களைக் கிடைத்தால் படிப்பேன். படிப்பதோடு வீட்டுக்கு வாங்கி அலமாரியில் சேர்ப்பது உங்கள் எழுத்துக்களை மட்டுந்தான்.''

இவள் அப்படிக் கூறியது மிகவும் பிடித்திருந்தது. இப்படி ஒரு பதிலைத் தான் அவர் அவளிடமிருந்து எதிர்பார்த்தார். ஆனாலும் நேர்மாறான சொற்களை அப்போது அவருடைய வாய் பேசியது.

''ஒரு விசிறி கண் மூடித்தனமாக விரவணக்கம் புரியலாம். ரசிகைக்கு அது கூடாது. ரசனைக்குரிய எல்லாவற்றையும் சமநிருஷ்டியோடு பார்க்க வேண்டும்.''

''நான் ரசிகையாக இருக்க விரும்பவில்லே; உங்களுடைய கண்மூடித்தனமான விசிறியாகவே இருக்க விரும்புகிறேன்.''

புழுக்கத்தைத் தணித்து இதம் அளிக்கும் தென்றலாக இந்தப் பதில் அவரைக் குளிர்வித்தது.

விமர்சகர்களின் தாக்குதல், எதிரிகளின் புகைச்சல், எழுத்திலுள் தொடர முடியும் உயரத்தை வாழ்க்கைக் கவ்வைகளால் இழக்கும் வேதனை, எல்லாவற்றிலிருந்தும் தம்மை மீட்டு ஆசுவாசப்படுத்தும் காற்றை அந்த 'விசிறி' தனக்கு மட்டுமே அளிக்கத் தயாராயிருந்தது என்ற எண்ணமே அப்போது அவர் கர்வப்பட்டுக் கொள்ளக் காரணமாயிருந்தது.

வெளி உலகத்துக்கு ஜனநாயகம், பெருந் தன்மை, சமத்துவம், பொது நோக்கு, விருப்பு வெறுப்பின்மை, எல்லாவற்றையும் தாராளமாக எழுதுகிற, பேசுகிற அரசியல்வாதி, அறிவாளி, பிரமுகன், அத்தனே பேருக்கும் அந்தரங்கமாக இப்படி ஒரு கண் மூடித்தனமான விசிறிதான் தேவை. இப்படி விசிறிகளுக்குத்தான் அவர்கள் உள்ளூறத் தவிக்கிறார்கள். இந்த விசிறிகள் தங்களே மட்டுமே குருட்டுத்தனமாக வழிபட வேண்டும் என்ற சர்வாதிகார ஆசைதான் அவர்களைக் கீறிப் பார்த்தால் உள்ளே தெரியும். ஆனால் வெளியே பேசும் போது, ''வீர வணக்கம், தனி நபர் வழிபாடு, தனி நபர் ஆதிக்கம் எல்லாம் ஒழிக்கப்பட வேண்டும்'' என்று நாகரிகமாகப் பாசாங்கு செய்ய ஒவ்வொருவரும் கற்றிருக்கிறார்கள். அவரும் அதைக் கற்றிருந்தார். தங்களே மட்டுமே புகழ்பவர்கள் மேல் புகழப்படுகிறவர்களுக்கு ஓர் இனிய அக்கறையே ஏற்பட்டு விடுகிறது.

மூன்றாவது முறை அவள் அவரைச் சந்தித்தது அவருடைய அலுவலகத்தில். அவர் ஆசிரியராக இருந்தபத்திரிகைக் காரியாலயத்தில் அவருடைய ஏ.சி. அறையில் அச்சந்திப்பு புனடந்தது.

அன்று அவள் வேண்டும் என்றே சாரமில்லாத கேள்விகளைக் கேட்பதாக அவருக்குத் தோன்றியது.

''கதை கட்டுரைகளுக்குப் பத்திரிகைகளில் எந்த விதிநாசாரத்தில் சன்மானம் கொடுக்கிறீர்கள்?''

''ஒவ்வொரு பத்திரிகை ஒவ்வொரு மாதிரி கொடுக்கிறது; ஒரு காலத்தில் எங்கள் பத்திரிகையில் ஒவ்வோர் இதழிலும் வெளியாகிற சிறந்த கதைக்கு ஒரு பவுன் கொடுத்துக் கொண்டிருந்தோம். இப்போது பவுன் விலை ஏறி விட்டது. வருஷத்தில் ஒரு முறை மட்டும் மிகச் சிறந்த கதைக்கு ஒரு பவுன் கொடுக்கிறோம்.''

தான் அவர் அவளிடமிருந்து எதிர்பார்த்தார். ஆனாலும் நேர்மாறான சொற்களை அப்போது அவருடைய வாய் பேசியது.

''ஒரு விசிறி கண் மூடித்தனமாக வீர வணக்கம் புரியலாம். ரசிகைக்கு அது கூடாது. ரசனைக்குரிய எல்லாவற்றையும் சமநிருஷ்டியோடு பார்க்க வேண்டும்.''

''நான் ரசிகையாக இருக்க விரும்பவில்லே; உங்களுடைய கண்மூடித்தனமான விசிறியாகவே இருக்க விரும்புகிறேன்.''

புழுக்கத்தைத் தணித்து இதம் அளிக்கும் தென்றலாக இந்தப் பதில் அவரைக் குளிர்வித்தது.

விமர்சகர்களின் தாக்குதல், எதிரிகளின் புகைச்சல், எழுத்திலுள் தொடர முடியும் உயரத்தை வாழ்க்கைக் கவ்வைகளால் இழக்கும் வேதனை, எல்லாவற்றிலிருந்தும் தம்மை மீட்டு ஆசுவாசப்படுத்தும் காற்றை அந்த 'விசிறி' தனக்கு மட்டுமே அளிக்கத் தயாராயிருந்தது என்ற எண்ணமே அப்போது அவர் கர்வப்பட்டுக் கொள்ளக் காரணமாயிருந்தது.

வெளி உலகத்துக்கு ஜனநாயகம், பெருந் தன்மை, சமத்துவம், பொது நோக்கு, விருப்பு வெறுப்பின்மை, எல்லாவற்றையும் தாராளமாக எழுதுகிற, பேசுகிற அரசியல்வாதி, அறிவாளி, பிரமுகன், அத்தனே பேருக்கும் அந்தரங்கமாக இப்படி ஒரு கண் மூடித்தனமான விசிறிதான் தேவை. இப்படி விசிறிகளுக்குத்தான் அவர்கள் உள்ளூறத் தவிக்கிறார்கள். இந்த விசிறிகள் தங்களே மட்டுமே குருட்டுத்தனமாக வழிபட வேண்டும் என்ற சர்வாதிகார ஆசைதான் அவர்களைக் கீறிப் பார்த்தால் உள்ளே தெரியும். ஆனால் வெளியே பேசும் போது, ''வீர வணக்கம், தனி நபர் வழிபாடு, தனி நபர் ஆதிக்கம் எல்லாம் ஒழிக்கப்பட வேண்டும்'' என்று நாகரிகமாகப் பாசாங்கு செய்ய ஒவ்வொருவரும் கற்றிருக்கிறார்கள். அவரும் அதைக் கற்றிருந்தார். தங்களே மட்டுமே புகழ்பவர்கள் மேல் புகழப்படுகிறவர்களுக்கு ஓர் இனிய அக்கறையே ஏற்பட்டு விடுகிறது.

மூன்றாவது முறை அவள் அவரைச் சந்தித்தது அவருடைய அலுவலகத்தில். அவர் ஆசிரியராக இருந்தபத்திரிகைக் காரியாலயத்தில் அவருடைய ஏ.சி. அறையில் அச்சந்திப்பு புனடந்தது.

அன்று அவள் வேண்டும் என்றே சாரமில்லாத கேள்விகளைக் கேட்பதாக அவருக்குத் தோன்றியது.

''கதை கட்டுரைகளுக்குப் பத்திரிகைகளில் எந்த விதிநாசாரத்தில் சன்மானம் கொடுக்கிறீர்கள்?''

''ஒவ்வொரு பத்திரிகை ஒவ்வொரு மாதிரி கொடுக்கிறது; ஒரு காலத்தில் எங்கள் பத்திரிகையில் ஒவ்வோர் இதழிலும் வெளியாகிற சிறந்த கதைக்கு ஒரு பவுன் கொடுத்துக் கொண்டிருந்தோம். இப்போது பவுன் விலை ஏறி விட்டது. வருஷத்தில் ஒரு முறை மட்டும் மிகச் சிறந்த கதைக்கு ஒரு பவுன் கொடுக்கிறோம்.''

''பத்திரிகைகளில் போட்டிகள் வைக்கிறார்களே? போட்டிகளின் மூலம் நல்ல கதைகளோ, நல்ல எழுத்தாளர்களோ கிடைப்பதுண்டா?''

''உண்டு என்றும் சொல்வேன், இல்லை என்றும் சொல்வேன். சாதாரணமாக நமக்குத் தபாலில் கிடைக்கும் பிரமாதமான கதைகளும் இருக்கும். பிரமாதமாக அறிவிக்கப்பட்டுச் சாதாரணமான தேர்வைப் பெறும் போட்டிகளும் இருக்கும். போட்டியா போட்டியில்லையா என்பது அல்ல முக்கியம். எழுதுகிறவனுக்கு எழுத்து என்பது பயிலகவும், தாகமாகவும், வும் வைக்கிறுள் என்று அவருக்குத் தோன்றியது.

'புகழை எதிர்பார்த்து ஏங்கித் தவிக்கும் பழுத்த ஞானி கூட அந்த வினாடிகளில் சாதாரணச் சிறு பிள்ளியாகி விடுகிறுன். புகழை எதிர் பார்த்து ஏங்காத சிறுபிள்ளி கூட அந்தக் கணத்திலேயே, அந்த வினாடியிலேயே பழுத்த ஞானி ஆகி விடுகிறுன் என்கிற தத்துவம் அவருக்கு ஞாபகம் இருந்துங்கூட அவருடைய அழகிய இளமை பொங்கும் அந்த விநாடி அவரைக் கோமாளி போலப் பீத்துப் பிடித்துப் போகச் செய்திருந்


போது, முழுத் தாள், அரைத் தாள், ஒன்னைட் பேப்பர், எது கிடைத்தானும் எழுதி விடுவேன்.''

''மூட்' வந்தால் தான் எழுதுவீர்களா?''

''செய்ய இயலாமையை நியாயப் படுத்தவும், செய்யத் தவறியவற்றுக்குக் காரணம் கற்பிக்கவும் சிலி மாக்காரர்கள் கற்பித்த வார்த்தை அது.''

''எங்க காலேஜ் டாமில் யூனியனில் வலிதைப் போட்டி என்று வைத்திருக்கிறார்கள். ஒரு வாரமாக எழுத முயற்சி செய்கிறேன். முடியவில்லே.''

அவருக்குச் சிரிப்பு வந்தது. தன்னு



அடக்க முடியாத உணர்வாகவும் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் தோறுது.''

பேச்சு இப்படியே தொடர்ந்தது.

அந்த வாரம் வெளியாகியிருந்த அவரது புதிய நெகதையைப் பற்றி அவள் ஏதாவது பிரஸ்தாபித்துப் புகழ்வாள் என்று எதிர்பார்த்தார் அவர். அவள் அதைப் பார்த்ததாக வோ, படித்ததாகவோ காண்பித்துக் கொள்ளவில்லே. வேறு ஏனைகங் கனியே மேலும் விசாரித்துக் கொண்டிருந்தாள்.

அநாவசியமாக அவள் தம்மை எதிர்பார்க்கவும், ஏங்கவும், காக்க தாள். அவள் விசாரணைகளிலிருந்து மீண்டும் தம்மைப் புகழ இருக்கும் நிமிஷங்களுக்காகக் காத்திருந்த படியே அந்தச் சாரமற்ற விசாரணை களைப் பொறுத்துக் கொண்டிருந்தார் அவர். அவளோ அவருடைய ஏக்கத் தைப் பற்றிக் கவலேப்படாமலே சாரமற்ற கேள்வியைக் கேட்டாள்.

''உங்களுக்கு ரீஃபில்கேப் பேப்பரில் எழுதப் பிடிக்குமா? அதையே இரண்டாக மடித்து எழுதப் பிடிக்குமா?''

''பேப்பர் முக்கியம் இல்லே. எழுத வேண்டும் என்கிற உணர்வுதான் முக்கியம். அந்த உணர்வு வரும்

டைய இயலாமையைச் சொல்லுவதற்குமுன் அவள் தம்முடைய மன நிலேயற்றி விசாரித்திருக்கிருள் என்பதையே அவரால் பொறுத்துக் கொள்ள முடியாமல் இருந்தது. அந்தச் சமப்படுத்தல் அவருக்குக் கொஞ்சம் எரிச்சல் ஊட்டியது; ஆனலும் 'விசிறி' என்பதற்காகப் பொறுத்துக் கொண்டார். ஆசை வெட்கமறியாது என்பார்களே, அப்படி வெட்கத்தை விட்டு விட்டு அவரே அவளேக் கேட்டார்:

''என்னுடைய சமீபத்துக் கதை - நீங்கள் இன்னும் படிக்கவில்லே போல் இருக்கிறதே!''

''இல்லே. ஒரு வாரமாக வேலே அதிகம். கொஞ்சம் நேரம் டைச் சதும் படித்து விடுவேன்.''

இத்தப் பதிலும் அவருக்கு அவ்வள வாகத் திருப்தி யளிக்கவில்லே. எழுத் துக்களேப் படிப்பதை விட அவளுக்கு வேறு ஒரு வேலே இருக்க முடியும் என்பதையே அவரால் ஏற்க முடிய வில்லே.

முதல் இரண்டு சந்திப்புக்களில் அவள் காட்டிய குருட்டுப் பக்தியும், அந்நியோன்யமும் அவரை அப்படி ஆக்கி வைத்திருந்தன. புகும்கிற வரின் அடிமைத்தனத்தை விட அபாயகரமானது புகழப்படுகிறவரின் அடிமைத்தனம். புகழப்படுகிறவனே புகழ்கிறவரிடம் அடிமைப்படுவது பரிதாபகரமானது. அவர் அப்போது இப்படிப் பரிதாபகரமான நிலேயில் இருந்தார்.


இரண்டு நாட்கள் கழித்து அவள் அவரை நான்காவது முறையாகச் சந்திக்க வந்தாள். அப்போது வெளி யில் மழை பெய்து கொண்டிருந்தது.

கையில் ஒரு கற்றைக் காகிதங்களுட னும், பைண்டு செய்த நோட்டுப் புத் தகங்களுடனும் வந்திருந்தாள்.

''தப்பாக எடுத்துக் கொள்ளக் கூடாது! உங்கள் விசிறிக்கு நீங்கள் உதவி செய்யணும்.''

''என்ன செய்ய வேண்டும்?''

''இது காலேஜ் போட்டிக்கு நான் எழுதின கவிதை. இதெல்லாம் நான் பல சமயங்களில் எழுதின கதைகள், குறுநாவல்கள். சிரமத்தைப்



'டேய், உன் நன்மைக்குத் தாண்டா சொல்றேன். இப்பவே ஒரு சாதம், ஒரு ரசம், சாம்பார் வைக்கக் கத்துக் கோடா!'

பாராமல் நீங்க கொஞ்சம் படிச்சுத் திருத்திக் கொடுக்கணும்.''

பற்றிக் கொண்டு வந்தது அவ ருக்கு. 'நான் இவளுக்குப் புரூப் ரீடரா என்ன?' என்று எரிச்சலோடு எண்ணிக் கொண்டே அதை முகத் தில் காட்ட முடியாமல் அசடு வழிய முகமலர்ந்து சிரித்தார். எதிரிகளே விட விசிறிகள் அபாயகரமான வர்கள் என்று புரிந்தது அவருக்கு. தம்முடைய கதையைப் படித்தது பற்றி அவள் ஏதாவது கூறுவாள் என்று எதிர் பார்த்தது வீணுயிற்று.

அவள் தன் கவிதையை அவர் திருத்திக் கொடுத்து வாங்கிப் போவதற்காகக் காத்திருந்தாள்.

''மத்ததை எல்லாம் நீங்க அப்புற மாக் கூடப் படிச்சுக் கொள்ளலாம். கவிதை மட்டும் கொஞ்சம் அவசரம். போட்டிக்குக் கொடுக்கணும்.''

கவிதையைப் பிரித்து அவள் முன்னிலேயிலேயே படிக்கத் தொடங் கினர்:

'ஐந்தமிழில் கவிபாட லிந்தித் தேன்'

என்று கவிதை ஆரம்பமாகியது. 'தமிழ்' என்பதற்கு எந்த எழுத்துச் சரியானது என்பது கூடத் தெரியா மல் எழுதப் புறப்பட்டு விட்ட அந்த விசிறியை அவர் ஏறிட்டுப் பார்த் தார். முறை சொன்னுல், 'என் மேல் உங்களுக்குப் பொறுமையா ஸார்?' என்று மேலும் தன்னேடு அவளேச் சமப்படுத்திக்கொண்டு அவமானப்படுத்திக் கொச்சை யாக்கிவிடுவாளோ என்று பயமா யிருந்தது அவருக்கு. அதனுல் அவளே எதுவும் கேட்கவில்லே.

அது ஏ.சி. அறையாயிருந்தும் இரு ரென்று வெளியே மழைக் குளிர்ச்சி இருந்தும் புழுக்கம் அதிகமாவது போல் உணர்ந்து குளிர்ச்சித் திருப் பானே அதிகமாக்கினர். அவர் முகத் தில் வியர்த்து விடும் போலிருந்தது.

முதல் தடவையாக விசிறி அருகே இருந்தும் அதிலிருந்து காற்று வரா மல் புழுக்கம் மட்டுமே வருவதை உணர்ந்தார் அவர்: ✻

With best compliments from

M|s Sunil Paper Company

30, ANDERSON STREET, MADRAS 600 001

Telephones: 21738 - 23466

Whole Salers for;

M|s. Paper & Pulp Conversions Ltd.

PUNE



ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபராகிய ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் அருளிய நல்லாசி

இந்த உலகத்தில் பகவானே, பகவானுடைய அம்சமாக வந்தவர்களோ அவ்வப்போது தோன்றித் தீயவர்களை நல்வழிப்படுத்தவும் நல்லவர்களை உஜ்ஜீவிக்கவும் அருள் பாலிக்கிறார்.

இப்படி, பகவானே பகவான் அம்சமானவர்களோ தர்மத்தை நிலைநாட்டும் வகையில் காரியங்களைச் செய்யும் பொழுது, இவன் நமக்கு வேண்டியவன், அவன் நமக்கு வேண்டாதவன் என்று எண்ணுமலும், இவன் நமது ஜாதியைச் சேர்ந்தவன், நமது மதத்தைச் சேர்ந்தவன் என்று எண்ணுமலும், தன்னுடைய பந்துவாக இருந்தாலும் தன்னுடைய ஜாதியைச் சேர்ந்தவராக இருந்தாலும் தன்னுடைய மதத்தைச் சேர்ந்தவராய் இருந்தாலும் தீய வழியில் சென்றவர்களைச் சிட்சிப்பதும் நல்வழிப்படுத்துவதுமே தம்முடைய குறிக்கோளாகக் கொண்டு செய்து வந்தார்கள்.

ஸ்ரீகிருஷ்ண பகவான் கீதையிலும் இந்த உபதேசத்தைத்தான் வலியுறுத்துகிறார், "நமே த்வேஷியஹ நஸ்பிரியஹ" என்று.

தற்காலத் தம்நிலையில் ஒவ்வொருவரும் வேண்டியவர்கள் வேண்டாதவர்களெனப் பிரித்துக் கொண்டு, அதை வைத்து அவர்களுக்கு நல்லதையும் தீயதையும் செய்து கொண்டு வருகிறார்கள். தர்மத்தின் அடிப்படையிலும் நியாயத்தின் அடிப்படையிலும் பகவான் சொன்ன உபதேசத்தின் அடிப்படையிலும் பகவான் செய்த காரியத்தின் அடிப்படையிலும் காரியங்களைச் செய்ய வேண்டும். இராகத் துவேஷத்தின் அடிப்படையில் காரியங்களைச் செய்யக்கூடாது. ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவினுல் அனுக்கிரகிக்கப்பட்ட தீபாவளி நன்னாளில் நல்லதைச் சங்கல்பம் செய்து கொள்வோம்; நல்லதைச் செய்வோம்!



குருவாயூரில் ஸ்ரீஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

எஸ். வி. ரமணி

'ஹர ஹர சங்கர! சிவ சிவ சங்கர!' என்ற கோஷம் விண்ணை எட்டுகிறது. முகப்பாமும் தடாம்பும் தரித்த யானைகள் பவனி; தாளமுழக்கு என்ற மங்கள ஆரத்தி ஏந்தி நிற்கும் கோரதமது மங்கையர் வரிசை.

ஆயிரக்கணக்கான மக்கள், சமயச் சின்னம் தரித்துக் கையில் தட்டுப் பாதை நெடுகிலும் பக்தி புடன் காத்திருக்கும் காட்சி.

பக்தியும் பரவசமும் பெருக் கெடுக்கும் சூழ்நிலை.

பஞ்சமுக வாத்தியம் முழங்கி, சூழ்நிலைக்குப் புனிதத்தை ஊட்டும் மங்களகரம்.

கொட்டும் மழை; சோ என்ற பேரிசைச்சல். அந்த மழை இழை கனீர், இறைவனே வர்ஷிக்கும் மலர் இதழ்களாக எண்ணி மகிழும் அன் பர் கூட்டம்.

சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் நிகழ்ந்த ஓர் அரு ட் செயல், இன்று மீண்டும் நடக்கப் போகிறது என்ற எதிர்பார்ப்பு.

'அன்று நடந்ததைக் கேட் கிறோம், இன்று நடக்கப் போவ தைக் கண்டு களிக்கப் போகிறோம்' என்ற துடிப்பு.

கொட்டும் மழை நிற்கவே நிற் காதா? முடிவே இருக்காதா?

பக்தர்கள் கூட்டம் வானைப் பார்க்கிறது.

புனிதமே உருவெடுத்தது போல், சித்த சுத்தியின் தெளிவு முகத்தில் ஒளிர்வதுபோல் குழந்தைப் புன் னகையுடன் எழுந்தருளும் புண்ணி யரைக் கண்டு கைகு வித் து வணங்குகிறது.

உலகத்து மக்களெல்லாம் வள வாழ்வு வாழவேண்டும் என நித்தம் தவம் செய்யும் தவச் செல்வருக்கு வருணபகவான் புனித நீராட்டுச் செய்வதுபோல் இருக்கிறது அந்தக் காட்சி. மேனியெங்கும் மழைநீர் வழிய அந்தப் புனிதர், பக்தர்களுக்கு அபயக்கரம் காட்டி நடக்கிறார்.

புனித நீராட்டுக்குச் செல்லும் அந்தச் செம்மலுக்கு, போகும் வழியிலேயே புனித நீராட்டுப் நடக்கிறது.

திருப்பதி ஏழுமலையானுக்கு அடுத்தபடி, அதிக வரு வாயும் பக்தர்கள் கூட்டமும் நிறைந்தது குருவாயு ரப்பன் கோயில்தான். வேண்டிய வேளை பலவேறு அழகுக் கோலம் கொள்ளும் கண்ணனைத் தரிசிக்கப் பக்தர்கள் கூட்டம் நாளுக்கு நாள் அதிகரிக்கிறது.

குருவாயூர்க் கோயிலைச் சுற்றிச் சுமார் பத்துத் திவ்யத் தலங்கள் உள்ளன. மம்மியூர்ச் சிவன் கோயில், திருவேங் கடம் வேங்கடாசலபதி கோயில், பார்த்தசாரதி கோயில், ஹரிகன்னலூர் விஷ்ணு மாயா கோயில் என்று பல.

சுமார் அறுபது ஆண்டுக்கு முன்புவரை வேங்கடாசலபதி கோயில் மேல்சாந்தியே, அருகில் இருந்த பார்த்தசாரதி கோயிலுக்கும் திருவாராதனம் செய்து வந்தார். காலத் தின் கோலம். எத்தனையோ மாறுதல்கள்; இயற்கை உண் டாக்கிய தடைகள் ஒரு பக்கம்; மனிதர்களின் புறக் கணிப்பால் உண்டான சீர்கேடு மற்றொரு பக்கம்; அர்ஜுனனுக்குச் சாரதியாக இருந்த பகவான் கிருஷ்ணன் கோயில் கவனிப்பாரற்றுப் போய் விட்டது. மரங்களும் செடிகளும் கொடிகளும் நிறைந்து, அங்கே கோயில் இருந்தது என்பதையே மறைத்துவிட்டன. பார்த்தசாரதி கோயில் கொண்டிருந்த கோரதத்துக் கூர்க் கோபுரத்தைத் தவிர, மற்றச் சுற்றுச் சுவர்கள் எல்லாம் இடிந்து தரைமட்ட மாகிவிட்டன.

இளந் தலைமுறையினருக்கு அங்கே பார்த்தசாரதி கோயில் என்று ஒன்று இருந்தது என்பதே தெரியாத நிலை. இத்தலங்கள் புகழ் பெற்ற திருவாயூர்க் கோயி லுக்கு அரை மைலுக்கு உட்பட்ட பிரதேசம் இது.

பார்த்தசாரதி

கனகமாக வளர்ந்துவிட்ட இடத்துக்குப் பக்கத்தில் சிறுவர் கள் விளையாடுவது வழக்கம். 1972-இல் ஒரு நாள் என்று நினைக் கிறேன்: நல்ல காற்று, மழை. பெரிய தென்ன மரம் மடமட வென்று முறிந்து விழுந்தது. மழைக்கு மரத்தடியில் ஒண்டி யிருந்த சிறுவர்கள், மரம் விழும் சத்தத்தைக் கேட்டுப் பயந்தனர். மரம் சாயும் சப்தம் மட்டும் அல்ல; ஒரு தகரக் கொட்டகை யின்மேல் விழுந்தால் 'கரகர' வென்று எப்படிச் சத்தம் கேட் குமோ, அப்படிச் சத்தம் கேட் டதை உணர்ந்து, சிறுவர்கள் திகைத்தார்கள். மழை நின்றதும், தைரியம் மிகுந்த சில சிறுவர் கள், தென்னமரம் முறிந்து விழுந்த இடத்தருகில் போய்ப் பார்த்தார்கள். தகரக்கூரை வேய்ந்த, கோயில் போன்ற ஓர் அமைப்பு இருப்பதைக் கண்டு வியந்தார்கள்.

எம்பெருமானின் லீலைக்குக் கணக்கு உண்டா? எப்படி எல்லாம் அன்பர்களை ஆட்டுவிக்கிறான்! 'ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே' என்கிறார் திருநாவுக் கரசர்.

'நாராயணீயம்' என்ப தை, ஸ்ரீமத் பாகவத பிரவசன வித்தகர் ஸ்ரீ அஞ்சல் மாதவன் நம்பூதிரி யின் இல்லம். அங்கே அவருடன் இரண்டு மூன்றுஅன்பர்கள் பேசிக்கொண் டிருந்தார்கள். அவர்களே ஆடவைக்கத் நிருவளம் கொள்கிறான் பகவான்.

கானகத்தில் கோயில் போன்ற அமைப்பைக் கண்ட சிறுவர்கள் நேராக இங்கே வந்தார்கள். தாங்கள் கண்ட அதிசயத்தைச் சொன்னார்கள். அன்பர்கள் அஞ்சல் நம்பூதிரி, வழக்கறிஞர் ராதாகிருஷ்ணன், டல்லப் கிருஷ்ணன் ஆகியோர் வியப்புடன் கானகத்தை நோக்கிப் புறப்பட்டார்கள். கட்டிடத்தை நெருங்கவே முடியாதபடி முட்புதர்கள், செடி கொடிகள். மெதுவாக ஒரு மரத்தின் வழியாக மேலே ஏறி, இடிந்திருந்த மேல் கூரையின் வழியாகப் பார்த்தார்கள், அன்பர்கள். என்ன ஆச்சரியம்! குருக்ஷேத்திரத்தில் பார்த்தனுக்குச் சாரதியாக இருந்த பகவான் அங்கே விக்கிரமாகக் காட்சியளித்தார். அந்தக் காட்சியைக் கண்ட மெய்ன்பர்களுக்கு எப்படி இருந்திருக்கும்! அந்தப் பிராந்நியத்தில் பார்த்தசாரதி கோயில் இருந்தது என்பதைக் கேட்டபோதே கேட்டிருந்த ஆஞ்சலுக்கு மெய் சிலிர்த்தது. ''அப்பா கிருஷ்ணா, உன்னைக் கண்டுகொண்டோம், கோயில் கட்டும்வரை ஓய மாட்டோம்'' என்று அந்த அன்பர்கள் உறுதி கொண்டார்கள்: அவன் அருள் புரிந்தான்:

புனிதமான திருக்கோயில்- புராதனமான பகவானின் விக்கிரகம். மகா க்ஷேத்திரமாக விளங்கிய இடம். அதைப் புனருத்தாரணம் செய்வது என்றல் நினைத்தபடி செய்து விட முடியுமா? ஆகம சாஸ்திரப்படி, கேரள தந்திர முறைப்படி செய்ய வேண்டும்.

கேரளத்தில் கோவில் சம்பந்தமான ஜயம் ஏதாவது ஏற்பட்டால் பிரச்னம் பார்ப்பது வழக்கம். புதுச்சேரி

விஷ்ணு நம்பூதிரியிடம் போனார்கள். பிரச்னம் பார்த்துச் சொல்வதில் பேர் பெற்றவர் அவர். ஒரு தடவை அல்ல, இரண்டு தடவை பிரச்னம் பார்த்தார்கள்.

முதல் பிரச்னத்தில் தெளிவாகிய உண்மைகள், கதை போலத்தான் இருக்கின்றன.

சுமார் 1135 ஆண்டுகளுக்கு முன்பு, புகழ் பெற்ற குருவாயூர்க் கோயிலில் ஏகாதசி உற்சவம் நடக்கிறது. பஞ்சமுக வாத்தியம் முழங்க, தடம்புரி அலங்காரம் செய்த யானையின்மேல் குருவாயூரப்பன் பிராகாரத்துக் குள் பவனி வருகிறான். கண்கொள்ளாக் காட்சி. 'நாராயண, நாராயண' என்ற முழக்கம் வைகுண்டநாதனைக் கண்முன்னால் கொண்டு வந்து நிறுத்துகிறது.

சங்கர பகவத்பாதரும் (சிஷ்யர்கள் ஏற்படுவதற்கு முன்பு) நாரத மகரிஷியும் கன மார்க்கத்தில் நாராயணனத் தரிசிக்க வைகுண்டம் செல்கிறார்கள். குருவாயூர்க் கோயில் உற்சவத்தைக் கண்ட நாரத மகரிஷி, ''நாராயணனே அங்கே போய்த் தரிசிப்பதற்குப் பதில் பூலோக வைகுண்டமான இங்கேயே தரிசிக்கலாமே'' என்று பகவத்பாதரை அழைத்தார். ''வைகுண்டத்தில் போய்த் தரிசிப்பதே மேல்'' என்று கூற எண்ணினர் பகவத்பாதர். அந்தக் கணத்திலேயே அவருடைய பறக் கும் சக்தி மறைந்தது. தொப்பென்று குருவாயூர்க்கோயில் பிராகார வடக்கு நடையில் விழுந்துவிட்டார். மயங்கிய நிலை. மூன்றுவது முறை அந்த நடையில் குருவாயூரப்பன் சீவேலி வந்துகொண் டிருக்கிற நேரம். மேளம், தாளம், கோஷம் எல்லாம் சட்டென்று ஒய்ந்தன. ஒரே நிசப்தம்.

குருவாயூர்க் கோயில் பிராகார வடக்கு வாயில் உள்ள பகவதியின் அருள் வாக்கின்படி, பகவத்பாதர் இப்போது பார்த்தசாரதி கோயில் கட்டியுள்ள இடத்தில் நாற்பத்தைந்து நாட்கள் பஜனம் இருந்தார். ''கங்கையில் மூழ்கியிருக்கும் பார்த்தசாரதி விக்கிரகத்தைக் கொண்டு வந்து, பஜனம் இருந்த இடத்தில் பிரதிஷ்டை செய்து கோயில் கட்டுக'' என்ற அசரீரியும் கேட்டது. நாரத மகரிஷியின் உதவியுடன், பகவத்பாதர், திருக் கோயிலைக் கட்டி அபிமான விக்கிரகமான (யாரும் செய்யாத) பார்த்தசாரதியையும் பிரதிஷ்டை செய்தார்.

குருவாயூர்க் கோயிலில் ஏகாதசி உற்சவம் நடக்கும் அன்று, பார்த்தசாரதி கோயிலில் தீதை உபதேச நாள் உற்சவம் நடக்கும். ப வ னி யி ல் குருவாயூரப்பன் இந்தக் கோயிலுக்கு எழுந்தருளுவான்; மாலே மரியாதை யுடன் திரும்புவான். மாலேயில் பார்த்தசாரதி, குரு வாயூரப்பன் கோயிலுக்குப் பவனி செல்வார். இது பகவத் பாதர் தொடங்கி வைத்த வழக்கம்.

சரி, பிரச்னத்தில் தெளிவான இந்த வரலாற்றுக் கெல்லாம் இன்று ஆதாரம் ஏதாவது இருக்கிறதா?

குருவாயூர்க் கோயில் வடக்கு நடைச் சுவரில் பெரிய துவாரம் ஒன்று இருக்கிறது. பவத்பாதர் நடையில் விழுந்த அடையாளம் அது.

மூன்றும் முறை குருவாயூரப்பன் சீவேலி வரும்போது, வடக்கு நடை யில், இந்த இடத்துக்கு வந்ததும், வாத்திய முழக்கம் எல்லாம் ஒரு நிமி ஷம் இன்றும் நின்றுவிடும். ஒரே நிசப்தம். சற்றுப் பொறுத்தே வாத்திய முழக்கத்துடன் பவனி தொடங்கும்.

குருவாயூர்க்கோவிலுக்குக் கிழக்கே ஒரு பர்லாங் தூரத்தில் பெரிய ஆலமரம் ஒன்று இருக்கிறது. அதன் மீதே கருடனின் நிருவுவம். மஞ்சுவால் என்று இந்த இடத்தைக் கூறுவார்கள். இந்த மரத்துக்கு வடக்கே இரண்டு பர்லாங்கில் பார்த்தசாரதி கோயிலும், அதற் கும் வடக்கே சற்றுத் தூரத்தில் வேங்கடாசலபதி திருக்கோயிலும் இருந்தன. ஏகாதசி நாளில் குருவாயூ ரப்பன் பார்த்தசாரதி கோயிலுக் குப் பவனி போவது வழக்கம் அல்லவா? ஆஞ்சு நாளடைவில் பார்த்தசாரதி கோயில் புகழ் மங்கிக் காணகத்தில் மறைவுற்றதும், அந்த வழக்கம் நின்று போய்விட்டது. ஆஞ்சு குருவாயூரப்பன் கோயிலிலிருந்து புறப்படும் யானைப் பவனி, மஞ்சுவால் வரை மட்டும் போய்த் திரும் புவது வழக்கமாக இருந்தது.

''இந்த உற்சவத்தைவிட வைகுண்டநாதனைத் தரிசி பதே மேல் என்று சொன்னயே! இங்கேயும் எப்படி எப்படி ஆராதனைகள், வழிபாடுகள், உற்சவங்கள் எல்லாம் நடக்கவேண்டும் என்று விரும்புகிறாயோ, அதே மாதிரி விதி முறைகளே உருவாக்கு!'' என்று குருவாயூரப்பனே, பகவத்பாதருக்குக் கட்டளையிட்டாராம். ஆதிசங்கர பகவத்பாதர் நிறுவிய விதிவிலக்கப்படியே இன்றும் குருவாயூரப்பன் கோயிலின் வழிபாட்டு முறைகள் நடந்து வருகின்றன.

பகவத்பாதரும் நாரத மகரிஷியும் பிரதிஷ்டை செய்து கட்டிய மகத்தான கோயில் என்பது தெரிந்துவிட்டது. அதை எப்படிப் புனரந்நிர்மாணம் செய்வது? இரண்டாம் முறையும் பிரச்னம் பார்த்தார்கள். அதில் தெளிவானது:

குருக்ஷேத்திரப் போர்க்களத்தில் கீதோபதேசம் நடந்த பிறகு கண்ணனின் விசுவரூப தரிசன பாக்கியம் கிடைத்து பார்த்தனுக்கு. அத்தகைய மகாபாக்கியம் தமக்குக் கிடைக்கவில்லையே என்ற தாபத்துடன் போய்ப் பகவானே வேண்டிக்கொண்டார் நாரதர்.

பகவான் திருவாய் மலர்ந்தார்: ''நாராயண ஸரஸில் (குருவாயூரப்பன் கோயில் இருக்குமிடத்தின் பெயர்) போய்த் தவம் செய்க. கலியுகத்தில் பார்த்தசாரதியாகவே தரிசனம் அளிக்கிறேன்.''

பகவான் பார்த்தசாரதியாக இங்கே நாரதருக்கு விசுவரூப தரிசனம் அளித்தார். பகவத்பாதராக அவதாரம் செய்த சங்கரருக்கும் அந்தப் பாக்கியம் அப்போது கிடைத்தது.

ஆதிசங்கர பகவத்பாதர் பிரதிஷ்டை செய்த புனித மான பார்த்தசாரதி அவர். பிதத்தால் குழந்தைகள் தாயிடம் தஞ்சம் அடைவதைப் போல, அன்பர்கள் மூவரும் பிரச்ன விவரத்துடன், காஞ்சிப் பெரியவர்களிடம் போய்த் தரிசித்தார்கள். அறுகிரகம் கிடைத்தது, ஸ்ரீமடத்தில் பத்தாயிரத்தொரு ரூபாய் நன்கொடை யுடன்.

காஞ்சிப் பெரியவர்கள் தொடங்கி வைத்த புண்ணிய காரியம் மகமடனென்று வெற்றிநடை போடுவதில் என்ன வியப்பு? ஆகம விதிப்படி பார்த்தசாரதி திருக்கோயில் பழைய முறையிலேயே குருவாயூரில் எழும்பியது.

இரண்டாம் முறை

ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதர் குடமுழுக்குச் செய்த திருக்கோயிலில், அந்த மகானுடைய திருவுருவத்தையும் பிரதிஷ்டை செய்வது எவ்வளவு பொருத்தமான செயல்! பார்த்த சாரதி திருக்கோயிலைப் பத்து லட்சத்துக்குமேல் செலவழித்து உருவாக்கிய அன்பர்கள், ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்களின் அருளாணையின்படி, மூன்றே மாதத்தில் பகவத்பாதர் திருவுருவைத் தயாரித்தார்கள். பெரியவர்கள் தங்கியிருக்கும் ஸாதாரா வுக்கு எடுத்துச் சென்றனர். அவருடைய ஆயுட்கால பம்பாய், நாசிக், ஹைதராபாது, தார்வார், பெங்களூர், தமிழ் நாடு வழியாக அன்பர்களுக்கெல்லாம் அருள் வழங்கிச் சென்ற பகவத்பாதர் திருவுரு, குருவாயூர்ப் பார்த்தசாரதி திருக்கோயிலில், தனிச் சந்நிதியில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது:

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து, மேலும் பல பணிகள் நடந்து வருகின்றன. ராஜ கோபுரம், பெரிய நவக்ரஹ மண்டபம், அகமேதாகம் செய்தாளும், பிறப்பு ஏணிகளும், அகவமேதாகம் செய்தாளும், பிறப்பு உண்டு. கண்ணன் கழியல் பற்றினும் பிறவியே இல்லை. (ஏகோபி க்ருஷ்ணே ஸுக்ருத: ப்ரணும: [தனச்ச மேதாவப்ருதேந ஸுசாச்சமேதி புநரேதி ஜந்து. க்ருஷ்ணப்ரணமி ந புநர்பவாய:) புனிதம்நிறைந்த பணிகளில் உதவ நம்மை யாரும் அழைக்க வேண்டாம். நம்மை நாமே வலுவில் அதில் ஈடுபடுத்திக்கொள்வது தான் விவேகத்துக்கு அடையாளம்.

• • •

ஸ்ரீ சுவாமிகள் சாதுர்மாஸ்ய பூஜைமட்டும் நிகழ்ந்திவைகும் தழைக்க உதவினார்? இந்து மதத்தைப்பற்றி அவர் கூறிய திருவாக்குகளை எண்ணி எண்ணி, இந்துவாகப் பிறந்த ஒவ்வொருவரும் பெருமைப்பட வேண்டும்.

"இந்தியா புராதன நாடு. மன அமைதியை நாடிப் பல நாட்டினர் இங்கே வருகிறார்கள். வேற்றுக் கொள்கை உள்ள பல மதத்தினர் இந்தியாவைப் போல் வேறு எந்த நாட்டிலும் ஆட்சி செய்ததில்லை. 'தானும் வாழ வேண்டும். பிற மதங்களும் வாழ வேண்டும்' என்ற அடிப்படையில் அமைந்தது நம் மதம். வேற்றுக் கொள்கைகளும் இந்து மதம் ஆதரித்து வளர்த்திருக்கிறது என்பதே உண்மை. பிற மதத்தினரின் ஆதிகம், சிர்வாசம், சட்டம், ஒழுங்கு என்ற அளவில் இருந்தவரை, பிரச்னைகளே எழவில்லை. மத விஷயங்களில் தலையிடும்போதுதான் பிரச்னைகள் உருவாகின்றன. இந்து மதம் உலகம் முழுவதையும் தழுவியது.

"மத மாற்றம் என்று சொல்கிறார்கள், இறைவனின் அருளைப் பெற வேறு மதத்துக்கு மாறவேண்டிய அவசியமே இல்லை. இறைவன் எல்லா மதத்துக்கும் பொதுவானவன். ஒவ்வொரு மதத்துக்கும் தனித்தனி இறைவன் என்று சொல்ல முடியாது. வாழ்க்கைச் சௌகரியத்துக்காக ஒருவன் மதம் மாறுகிறான் என்றால், அதில் கடவுள் சம்பந்தமே இல்லை. அரசியலில் ஒரு கோட்பாட்டை விட்டு வேறு ஒன்றுக்குத் தாவுவது போன்றதே அது. பொருளாதார நிலை காரணம் என்றால், உடம்புக்குத் தேவை பொருள்; ஆனால் ஆத்மாவுக்கு வேண்டியதோ தர்மம். இரண்டையும் போட்டுக் குழப்பக் கூடாது.

"சமீபத்தில் இன்னாரைத் தழுவிய யாரும், 'அதில் சேர்வதால் மோட்சம் கிடைக்கும்; அதனால் சேர்ந்தோம்' என்று கூறவில்லை. இந்து மதத்தைவிட இஸ்லாம் மோட்சம் அடைய எளிய, மேலான பாதையைக் காட்டுவதாகவும் கூறவில்லை. 'ஹரிஜனங்களாக வாழ்வதில் என அனைகிலியங்கள் இருக்கின்றன, அதனால் மாறுகிறோம்' என்றே கூறுகிறார்கள். சங்கரர், ராமானுஜர், மத்வாசாரியர் ஆகிய மூன்று மகான்களின் வாழ்க்கையிலும் ஹரிஜனங்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். இந்து மத ஓட்டத்தில் அவர்களும் முக்கியமான வர்களாகவே இணைந்திருக்கிறார்கள். நந்தனார், கனகதாஸர் போன்றோர்கள் இருந்திருக்கிறார்கள். இந்து மதம் இறையடியார்களாக அவர்களை ஏற்றுப் போற்றுகிறது. வேண்டுமென்றே சில மிதிரபேதம் செய்திருக்கிறார்கள்.

"வருணாசிரம தர்மத்தை அவரவர்கள் விடாமல் கடைப்பிடித்தவரையில் இந்த மாதிரியான பிரச்னை எதுவும் எழவில்லை. அவரவர்கள் தர்மத்தைப் பொருளாதார நோக்கில் மாற்றிக்கொண்டதனால் வந்த விளைவு இது. மக்கள் கடைப்பிடிக்கவில்லை என்பதால் நல்ல அம்சங்களைப் புறக்கணித்து விட முடியாது. எதிர் காலத்தில் இதன் பிறப்பை உணர்ந்து நிறையப் பேர் மேற்கொள்ளும் வாய்ப்பைப் பாழ்படுத்திவிடக் கூடாது.

"கர்மா, நியதி இவை பற்றிப் பலர் தவறான கருத்துக் கொண்டிருக்கிறார்கள். விதிப்படி நடக்கும் என்று சும்மா உட்கார்ந்திருக்கச் சொல்லவில்லை நம் தர்மம். நம் உள்ளம் உயரவும், ஆத்மா மேல்நிலை அடையவும் உதவும் செயல்களைச் செய்துகொண்டே இருக்கவேண்டும் என்றுதான் சொல்கிறது. அதாவது மேல்நிலையை அடைய மனிதன் உழைத்துக்கொண்டேதான் இருக்க வேண்டும்!"

இதே கருத்தைத்தான் புதுப் பெரியவர்கள் தம்மைக் குருவாயூரில் போய்த் தரிசித்த ஹரிஜன சகோதரர்களிடமும் கூறியிருக்கிறார்கள்.

ஸ்ரீ பார்த்தசாரதி ஆலயக் கும்பாபிஷேகம், சங்கர பகவத்பாதர் திருவுருவப் பிரதிஷ்டை, பெரியவர்களின் சாதுர்மாஸ்ய பூஜை இவற்றைத் தரிசித்தும், ஆன்மிகக் கருத்துக்களைக் கேட்டும் மகிழ்ந்தவர்கள் புண்ணியம் செய்தவர்கள். நிமைகள் மறைந்து நன்மைகள் பெருகும் தீபாவளித் திருநாளில் ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதரின் திருவடிகளில் சிரம் தாழ்த்தி, அகிலமெல்லாம் அன்பு பரவிட அருளும்படி இறைஞ்சுவோம். *

(ஸ்ரீ சுவாமிகள் ஆரெழையில் வெளியாகியுள்ள படங்கள்: ஓம் சுப்பிரமணியம்)



ஸ்ரீ ஆஞ்சன் நம்பூதிரியும், ஸ்ரீ சுவாமிகளும்

உள்ளத்து உணர்வுகள் இழையாய் பின்னிட
நல்முத்து வெண்மை நகையாய் மின்னிட
தீபாவளி
வாழ்த்துக்கள்




SAA/STL/2076

சுந்தரம் டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்
கோச்சடை, மதுரை 625 016.

ஒரே டேபிள் மாடல் டிவி TS62

சீரான உன்னத ஹை-ஃபை ஒலிக்கு 10 வாட் ஒலிபெருக்கியும், 20 செ.மீ. டியூயல் கோன் ஸ்பீக்கரும் கொண்ட ஒரே டேபிள் மாடல் டிவி சாலிடெர் TS62. இத்துடன் உங்கள் ரெக்கார்டு பிளேயர், டேப் ரெக்கார்டர், எப்எம்/ஏஎம் (FM/AM) டியூனர் முதலியவற்றை இணைத்து, டிவியில் நிகழ்ச்சி இல்லாத நேரங்களிலும் சாலிடெர் டிவியை உபயோகிக்கலாம்.

செய்தி வாசிப்பவரின் கண் இமைகள் கூட தெளிவாகத் தெரியும் படத்தோற்றம். இதில் சாலிடெருக்கு நிகர் சாலிடெர் ஒன்றே. வார 7 நாட்களிலும் சர்வீஸ் வசதி உண்டு. சிறந்த பராமரிப்புக்கு காஞ்சீபுரத்திலும் ஒரு சர்வீஸ் சென்டர்.



ஹை-பீம் எலக்ட்ரானிக்ஸ்
பி. லிட்.,
சென்னை-600 020.
சர்வீஸ் போன் : 412642

சாலிடெர்

சென்னை நகரத்துக்குப் அப்பால் விற்பனையாளர்கள்: பிரத்தியேக விற்பனையாளர்கள்: ✻ எஸ். எஸ். டிராவிக்ஸ், 17—B, ஜி. எஸ். டி. ரோடு, செங்கல்பட்டு, போன்: 317. ✻ அப்ஸரா டிராவிக்ஸ், 22, 23, ஜவான் மார்க்கட், ஆபீஸர்ஸ்லேன், வேலூர் 632 001, போன்: 23305. ✻ அனோனியேட்ட இந்தோ-வியட்நாம் சகம், 38 ஜவஹர்லால் நேரு தெரு, புதுச்சேரி-1, போன்: 4292. ✻ பி. எஸ். டிரேடர்ஸ், 172, ஜவஹர்லால் நேரு ரோடு, திருவள்ளூர். ✻ சௌதாம்பிகா எலக்டிரானிக்ஸ், 439, காந்திரோடு, காஞ்சிபுரம், போன்: 2405. ✻ சன்-பீம் எலக்ட்ரானிக்ஸ், 137, மகாத்மா காந்தி ரோடு, புதுச்சேரி-605 001, போன்: 4033. அங்காரம் பெற்ற விற்பனையாளர்கள்: ✻ அண்ணாமலை சகம். 1-A, பெரிய தெரு, திருவண்ணாமலை, போன்: 42. ✻ ஜயந்தி ரேடியோ & எலக்ட்ரிக்ஸ், 1/4-5, கவர்மெண்ட் ஹாஸ்பிட்டல் ரோடு, வேலூர் 632 001, போன்: 22995. ✻ சௌதாம்பிகா சைக்கிள் ஸ்டோர்ஸ், 31-A, காந்தி ரோடு, ஸ்டுவர்ட்புட், அரக்கோணம். ✻ சௌதாம்பிகா சைக்கிள் ஸ்டோர்ஸ், 6, விநாயக நிலையம். தேர் வீதி, திருவண்ணாமலை-606 601 டி. வி. எம்போரியம், 72-ஏ, ஜவஹர்லால் நேரு தெரு, புதுச்சேரி-1, போன்: 2305. ✻ கல்பனஸ் ஹார்பி ஹோம், 6-A, கடை வீதி, திருப்பதி-517 501-போன்: 2505. ✻ வீடியோ டிராவிக்ஸ், 305, டிரங்க் ரோடு, பூந்தமல்லி, சென்னை-600 056. ✻ ஸ்ரீநிவாசா சகம். 187, எம். டி. எச். ரோடு, பட்டாபிராம்-சென்னை.

கல் உளர்த்தும் கரணங்கள்



— டாக்டர் பத்மா சுப்பிரமணியம் —

கரணம் என்றால் சம்ஸ்கிருதத்தில் செய்கை என்று பொருள். ஆகவே கரணம் என்பது ஒரு கிரியை ஆகும். நடனத்துக்கான கரணத்தை நிருத்த கரணம் என்று பரதமுனிவர் தம் நாட்டிய சாஸ்திரத்தில் குறிப்பிட்டுள்ளார். கரணம் என்பது மூன்று அம்சங்களின் சேர்க்கை ஆகும்.

அவையாவன:—

1. ஸ்தானம் - உடலுக்கான நிலை.

2. நிருத்த ஹஸ்தம் - கைகளுக்கான நடன அசைவு

3. சாரி - கால்களுக்கான அசைவு.

மேலே குறிப்பிட்டுள்ள மூன்றின் சேர்க்கையே கரணம் என்பதாகும். ஒவ்வொரு கரணமும் ஒவ்வொரு நடன அசைவாக விளங்குகிறது. இது போன்ற 108 பிரத்தியேக அசைவுகளே 108 கரணங்கள் என்று நாட்டிய சாஸ்திரத்தில் விவரிக்கப்பட்டுள்ளன. இந்தக் கரணங்கள் பரதர் கால நடனச் செய்முறையின் ஆதார அசைவுகளாகும். அதாவது, தற்போது நடைமுறையில் காணப்படும் அடவுகளோடு கரணங்களை ஒப்பிடலாம். அடவுகள் எவ்வாறு அசைவுகளையே குறிக்கின்றனவோ அதே போல் பரதரின் கரணங்களும் அசைவுகளையே குறிக்கும்.

சுமார் 500 ஆண்டுக் கால மாகப் பரதரின் கரணங்கள் நடைமுறையில் இருந்து மறைந்திருக்கின்றன. ஆனால் அதற்கு முந்திய காலச் சிற்பங்கள் பரதரின் கரணங்களை உயிர்த்துடிப்போடு சித்திரிக்கின்றன. ஆகவே இந்தக் கரணங்கள் பண்டைக் காலத்தில் பரவலாக ஆடப்பட்டு வந்தன என்பதை நன்கு அறியலாம்.

நடனத்துக்கும் சிற்பத்துக்கும் நிரந்தரமான நெருங்கிய உறவுண்டு. இந்தக் கலைகள் ஒன்றையொன்று தழுவி அதன் பாதிப்பில் வளர்ந்தவை; வெற்றிடத்தைச் சம சீர் என்ற அடிப்படையில் நிரப்புவதையே இவ்விரு கலைகளும் ஆதாரக் கொள்கையாகக் கொண்டவை. சிற்பிகள் நடனக் கலையை நன்கு கற்றறிய வேண்டும் என்று ஆகமம் கூறுகிறது. ஆகவே பல கடவுளர்களையும், மனிதர்களையும், தேவர்கள், கந்தர்வர்கள், அப்சரர்கள், பூத கணங்கள் என்று பலதரப்பட்ட உருவங்களையும் சிற்பங்களில் நடனச் சாயலோடு காண்கிறோம்.

பரதரின் கரணங்களைப் பிரத்தியேகமாக அவர் கூறிய வரிசைக் கிரமப்படி கல்லிலே வடித்தெடுக்க எடுத்துக் கொண்ட முதல் முயற்சியைத் தஞ்சைப் பெரிய கோயிலில் காண்கிறோம். இது 11-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தஞ்சைப் பேரரசன் ராஜராஜ சோழனால் கட்டப்பட்ட ஆலயம். 108-இல் இங்கு 81 கரணங்களே செதுக்கப்பட்டுள்ளன. மற்றக் கரணங்களைச் செதுக்க வெற்றிடமாக விடப்பட்ட கற்களைக் காணும்போது மனத்தில் நிறைவேறாத ஆசையின் ஏக்கம் தென்படுகின்றது.

12-ஆம் நூற்றாண்டில் செதுக்கப்பட்ட கரணச் சிற்பங்களைக் கும்பகோணத்தில் சாரங்கபாணி ஆலயத்தின் மேற்குக் கோபுரத்தில் காண்கிறோம். இங்கே பல கரணங்களின் உருவங்களுக்கு மேற் அந்தக் கரணங்களின் பெயர்களும் பரதர் கூறிய வரிசைக் கிரமத்தில் அவற்றின் எண்களும் சோழர்காலக் கிரந்தத்தில் கல்வெட்டாகக் காட்சியளிக்கின்றன. அடுத்து 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கரணச் சிற்பங்களைச் சிதம்பரத்தில் நடராஜர் ஆலயத்தின் நான்கு கோபுரங்களிலும் காண்கிறோம்:

இங்கே ஒவ்வொரு கோபுரத்திலும் 108 கரணங்கள் முழுமையாகச் செதுக்கப்பட்டுள்ளன. மேற்கு, மேற்கு ஆகிய கோபுரங்களில் உள்ள கரணங்களின் உருவங்களோடு அந்தக் கரணங்கள் செய்ய வேண்டிய விவரத்தைக் குறிக்கும் நாட்டிய சாஸ்திரச் சுலோகங்களின் மேற்கோள்களும் செதுக்கப்பட்டுள்ளன. இங்கே சம்ஸ்கிருதச் சுலோகங்கள் தமிழ்த் திரத்தக் கல்வெட்டாகக் காணப்படுகின்றன. ஆகவே இவை வெறும் கட்டடக் கலைக்கு அணிகலனை இல்லாமல் கல்லிலே வடித்தெடுத்த கரணக் களஞ்சியமாக விளங்குகின்றன. இவை போல இன்னும் பிற வண்ணமே, விருத்தாசலம் ஆகிய ஊர் ஆலயங்களிலும் கரணச் சிற்பங்கள் விளங்குகின்றன.

இந்தச் சிற்பங்களின் கவர்ச்சியால் ஈர்க்கப்பட்ட பலர் இந்தச் சிற்பங்களில் காணும் நிலைகளை அப்படியே தம் நடனத்தில் நிலைகளாகப் புகுத்திக் கொள்வதை அடிக்கடி சமீப காலத்தில் காண்கிறோம். இந்தச் சிற்பங்கள் புகைப்படங்களுக்கே ஒப்பாகும். ஒரு நடனக் கலைஞர் ஆடும்போது எடுக்கப்பட்ட புகைப்படம் அவர் ஆடும் அடவின் ஏதோ ஒரு நிலையை மட்டுந்தான் சித்திரிக்கிறது. அதே போல ஒவ்வொரு கரணச் சிற்பமும் முழுமையான சனத்தின் ஏதேனும் ஒரு நிலையைத்தான் சித்திரிக்கிறது. ஆகவே அப்படியே அதை நிலைத்த நிலையாகக் கையாண்டால் அது கரணமாகாது. மனத்துக்கேற்ற வண்ணம் எப்படி வேண்டுமானாலும் உடலை அசைத்தால் அதும் பரதர் கூறிய கரணமாகாது. கரணங்கள் ஆட விரும்பினால் அவற்றின் செய்முறை அறிந்து ஆடுவதே சிறப்பு என்று தோன்றுகிறது. இதற்கு நாட்டிய சாஸ்திரத்தையும் அதற்கு எழுதப்பட்ட உரையாகிய அபிநவ பாரதியையும் கற்றுத் தேர்ந்தால்தான் சாத்தியமாகும்.

கரணம் என்ற சொல் ஒரிரு நூற்றாண்டுக் காலமாகக் கழைக்கூத்தாடியின் அபிநிமதமான சில செய்கைகளோடு மட்டுமே பிணைக்கப்பட்டு விட்டது. முன்னந்தம் (முன்னுல் போடும் குட்டிக் கரணம்), பின்னந்தம் (பின்புறமாகப் போடும் குட்டிக்





கரணம்) போன்ற கழைக்கூத்து அனைவருமே கரணம் என்று குறிப்பிடத் தொடங்கிவிட்டனர். அதனால் தான், 'கரணம் தப்பினால் மரணம்' என்பது போன்ற தொடர்கள் ஏற்பட்டிருக்க வேண்டும். இவையும் கரணந்தான். ஏனென்றால் கரணம் என்றால் செய்கை என்று பொருள். ஆனால் எந்தச் செய்கை யாரால் எதற்குச் செய்ய வேண்டும் என்ற கருத்துணர்ந்து செயல்படுவது அவசியம்.

பரதர் கூறிய 108 கரணங்களுள் ஒளவுக்குக் கழைக் கூத்தை ஒத்திருக்கும் கரணங்கள் ஏழோ எட்டோ இருக்கலாம். அவையும் வீணையாடும் பாலகன், கோமாளி போன்ற பாத்திரங்களுக்காக ஆட வேண்டியவை என்றும் குறிப்புகள் உள்ளன.

பெரும் பாலான கரணங்கள் லலித மானவை; நடனத்தின் எல்லா அமுகிய அம்சங்களையும் தம்முள் அடக்கிக் கொண்டவை. பார்ப்பதற்குச் சுலபமாகவும் தனினமாகவும் இருப்பினும் ஆடுவதற்குப் பல நுண்ணிய விஷயங்களைக் கொண்டவை. உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை அங்கங்கள் அசைந்தும் அசையாமலும் செயல்பட வேண்டியவை. இந்தக் கரணங்கள் இரு பாலாரிக்கும் பொதுவானவை. தாண்டவம், லாஸ்யம் ஆகிய இரு முறையிலும் கையாளக் கூடியவை.

கரணங்களை முறையோடு ஆண்டால் ஒரு வேள்வியின் பயனை அளிக்கும் என்று நாட்டிய சாஸ்திரம் கூறுகிறது. கரணங்களை உடல், அறிவு, உணர்வு, ஆன்மா ஆகிய நான்கு நிலைகளிலிருந்தும் ஆடுவோரும் காண்போரும் அவரவர் தன்மைக் கேற்ற வண்ணம் அநுபவிக்கலாம்.

சிதம்பரம் நடராஜர் ஆலயத்தின் கிழக்குக் கோபுரத்தில் காணப்படும் கரணச் சிற்பங்களின் சில படங்களையும் அவற்றில் அடிப்படையில் நான் ஆடிய கரணத் தோற்றங்கள் சிலவற்றையும் அடுத்து வரும் பக்கங்களில் காணலாம். படங்களுடன் அந்தக் கரணங்களின் பெயர்களையும், அந்தக் கரணத்திற்கான நாட்டிய சாஸ்திரச் சூத்திரத்தையும், அதன் மொழிபெயர்ப்பையும் மேலே கொடுத்திருக்கிறேன்.

கரணம் - 19 - கடிஸமம்.

ஸ்வஸ்திகாபஸ்ருத: பாத: கரேள நாபிகடிஸ்திதெள பார்ச்வ முத்வாஹிதம் சைவ கரணம் தத் கடிஸமம்.

- நாட்டிய சாஸ்திரம். IV-79.

பொருள்: பாதத்தை ஸ்வஸ்திகத்தி லிருந்து விடுவித்து, கைகளை நாபியிலும், இடுப்பிலும் வைத்து, பக்கத்தை உத்வாஹிதமாக வளைத்தால், 'கடிஸமம்' என்ற கரணமாகும்.

கரணம் - 23 - அஞ்சிதம்.

வ்யாவ்ருத்த பரிவ்ருத்தஸ்து ஸ்ஏவ துகரோ யதா அஞ்சிதோ நாஸி காக்ரே து ததஞ்சித முதாஹ்ருதம்.

- நாட்டிய சாஸ்திரம். IV-83.

பொருள்: ஒரே கையை வ்யாவ்ருத்த மாகவும், பரிவ்ருத்தமாகவும் சுழற்றி, அஞ்சிதமாக, மூக்கினருகே வளைத்து, அசைதற்கு 'அஞ்சிதம்' என்று பெயர்.

கரணம் - 24 - புஜங்க த்ராளிதம்.

குஞ்சிதம் பாதம் உக்ஷிப்ய த்ரயஸ்ரம் ஊரும் விவர்த்தயேத்.

கடிஜானு விவர்த்தாஸ்ச புஜங்க த்ராளிதம் பவேத்.

- நாட்டிய சாஸ்திரம். IV-84.

பொருள்: புஜங்கத்ராளிதம் என்னும் கரணத்தை ஆடுவதற்கு குஞ்சிதமாக வளைத்த ஒரு பாதத்தை உயர்த்தி, அதனுடன் தொடை, இடுப்பு, முழங்கால் ஆகியவற்றைத் திருப்ப வேண்டும்.

கரணம் - 25 - ஊர்த்வ ஜானு:

குஞ்சிதம் பாத முக்ஷிப்ய ஜானு ஸ்தன ஸமம் ந்யஸேத் ப்ரயோக வசகௌள ஹஸ்தௌள ஊர்த்வஜானு ப்ரகீர்த்திதம்.-நாட்டியசாஸ்திரம்IV.85

பொருள்: குஞ்சிதமாக வளங்கும் ஒரு பாதத்தை உயர்த்தி, முழங்காலை மார்புக்கு நேராக வளங்க வைத்து, கைகளை அதற்குத் தக்கபடி நகர்த்தினால், அது, ''ஊர்த்வஜானு'' என்று குறிக்கப்படும்.

கரணம் - 39 - சதுரம்:

அஞ்சித: ஸ்யாத் கரோ வாம: ஸவ்யஸ் சதுர ஏவ து

தக்ஷிண: குட்டித: பாதஸ் சதுரம் தத் ப்ரகீர்த்திதம்.

- நாட்டிய சாஸ்திரம். IV. 99

பொருள் - இடது கை அஞ்சித மாகவும், அதே கை சதுரமாகவும் இருந்து, வலது பாதத்தைக் குட்டிதமாகத் தட்டினால், அது சதுரம் என்று பெயர் பெறும்.

கரணம் - 81 - ஸர்ப்பிதம்:

அஞ்சிதாபரிவ்ருதௌள பாதௌள சிரஸ்ப பரிவாஹித்த ரேசிதௌள சததா ஹஸ்தௌள தத்ஸர்ப்பித முதாஹ்ருதம்.

- நாட்டிய சாஸ்திரம்.IV. 141

பொருள்: அஞ்சிதமாகப் பாதங்களை நகர்த்தி, தலையைப் பரிவாஹித மாக அசைத்துக் கொண்டு, கைகளை ரேசிதமாக வைத்துக் கொள்வது 'ஸர்ப்பிதம்' என்று குறிக்கப்படும்.

கரணம் - 98 ஊருத்வ்ருத்தம்:

கரமாவ்ருத்த கரணமூருபரிஸ்ருடே அஞ்சிதம் ந்யஸேத் ஜங்காஞ்சித தரோவ்ருத்தா ஸ்ஊருத்வ்ருத்தம் து தத்பவேத்.

- நாட்டிய சாஸ்திரம். IV. 158

பொருள்: கைகள் ஆவ்ருத்த கரணத்தைச் செய்து, பின்னர் அஞ்சித மாகத் தொடைக்குப் பின்னால் வளைந்து இருக்க வேண்டும். அஞ்சித மாக வளைந்து, உத்வ்ருத்தமாக நகர வேண்டும். அதற்கு 'ஊருத்வ்ருத்த'' கரணம் என்று பெயர். ✻

வண்ணப்படம்:
எஸ். பாலகிருஷ்ணன்




அஞ்சிதம்



கடிஸமம்





ஊர்த்வஜானு



ஊரூத்வ்ருத்தம்





ஸர்ப்பிதம்

தாலி தீபாவளி



தேரட்டத்தின் புல்வெளியில் இல்லத்தின் இறப்பு விழா நடந்தது. நாட்கள் பல கடந்த போதிலும் அத்துப் புதுக் கட்டிடம் பூண்டவிழாக் கோலத்தின் எண்ணங்கள் பல அருமிங்கும் தெரித்தன.

மதில் சுவரின் வெளியில் கேட்ட ருகே பதித்திருந்த வெள்ளைச் சலவைக் கல்லில் பளிச்சிட்ட 'சக்தி' என்ற கறுத்த எழுத்துக்களின் அருகே யாரோ ஒரு பள்ளிச் சிறுவன் பிவப்புச் சாக் கட்டியால் 'நான்தான்' என்று எழுதியிருந்தான்.

சுகந்தி தன் கைக்குட்டையால் அதை அழிக்குமுன் படித்தாள். எழுதியவன் மண்டையில் கட்டாயம் மூனு இருக்கிறது முதுமையின் பிடியில் தெம்பையிழந்து, நம்பிக்கை குலைந்து, நிம்மதியையும் அஞ்சரணையையும் தேடி வந்த குடியிருந்த அந்த இல்லத்துப் பெண்களுக்கு அபயம் அளித்து, 'நான் தான் சக்தி; பயப்படாதீர்கள், தனே இருக்கிறேன்' என்று உற்சாகப்படுத்துவது போல் இருந்தது, அந்தக் கறுக்கல். தனக்குள்ளே புன்னகை பூத்துக்கொண்டு அவள் அதை அழித்துச் சலவைக் கல்லைச் சுத்தம் செய்தாள்.

'சக்தி' என்று அந்தக் கட்டிடத்துக்குப் பெயர் சூட்டியது சமூக சேவகி, மாதர் சங்கத்துத் தலைவி காயத்திரிதான்.

'உங்களின் ஒன்றுபட்ட சக்தியின் உருவந்தான் இந்தக் கட்டிடம். உலகத்து இயக்கங்களுக்கெல்லாம் உயிர் கொடுக்கும் அன்னை சக்தி தேவியின் நினைவுக்கு எழுப்பிய இல்லம் என்று நீங்கள் உற்சாகமாக இங்கே வாழவேண்டுமென வாழ்த்துகிறேன்.' விழாத் தலைவர் வாழ்த்தி விட்டு மாலை மரியாதைகளுடன் வெளியே நிஜர்!

விழாவுக்குக் கட்டிய தோரணங்களை ஆட்கள் அவிழ்த்தபோது புல்தரை மீதும் சில காகிதத் துண்டுகள் பரந்து கிடந்தன.

சுகந்திக்கு வீடும் வெளியும் எப்போதும் சுத்தமாக இருக்கவேண்டும். சுத்தம், சுறுசுறுப்பு என்று அவள் பேசப் பேச அவளுக்கும் அவள் மருமகள் ராதிகாவுக்குமிடையே மோதல் ஏற்பட்டது. ஆனாலும் இரத்தத்தில் ஊறிப் போயிருந்த வழக்கங்களை யாரால் உதறி எறிய முடியும்?

அவள் அப்படி என்ன தவறு செய்து விட்டாள்?

ஒவ்வொரு நேரத்தில் மணிக்கணக்காகத் தோழிகளுடன் தொலைபேசியில் பேசுவதை விட்டு முன் அறையில் மண்டிக்கிடக்கும் குப்பையைப் பெருக்கி, சாமான்களை ஒழுங்கு செய்து வைக்கக்கூடாதா?

''சாமான் அறையிலுள்ள அரிசி பருப்பு டின்களை ஏன் கையோடு மூடவில்லை?

''இத்தச் சின்ன வயசில் மறதிக்கு இடம் கொடுக்கலாமா?

''அழுக்குத் துணிகளை அன்றைக்கு தோய்க்காமல் குளியலறை மூலையில் குவித்துவைப்பதன் நோக்கம்?''

இப்படி அவள் கூற ஆரம்பித்த பொ சங்கள் பூசலாக மாறி, அப்ப்ப்பா!

முக்காலித் தொன்றைப் ப்பாட்டுக் கொண்டு மெல்ல ஏறி மரக்கிளைகளில் தொங்கிய தோரணத் துண்டுகளை அகற்றினாள். புல்தரை மீது கிடந்த காகிதங்களைப் பொறுக்கிக் குப்பைக் கூடையில் சேர்த்தாள்.

''உங்களுக்கு வேறே வேலை இல்லையா? நமக்கேன் இந்தத் தொல்லைகள்? இதைச் செய்ய ஆட்கள் இருக்கிறார்களே?'' பக்கத்து அறையில் தங்கியிருக்க வந்த பத்மா கூறினாள்.

''இது நமது வீடு. இதைச் சுத்தமாக வைத்துக்கொள்வது நமது பொறுப்பு. நீங்கள் இப்போது என்னுடு எழுந்து சமையலறைப் பக்கம் வாருங்கள். கும்மா சோம்பேறியாக நாற்காலியில் சாய்ந்து கொண்டிருப்பது நல்லதல்ல.'' அதட்டி அழைத்தாள் சுகந்தி.

அலியாப் பணி புரிந்து ஓய்வு பெற்றவள் சுகந்தி. மாணவிகளிடம் கண்டிப்பாகப் பேசிய வழக்கம். அடுத்த அறையில் தூங்கிக்கொண்டு சதா தொணதொணத்த அந்தக் கிழவியை அதே தோரணையில் அதட்டி விட்டாள்.

''முட்டி வலிக்கிறது. விரல்களில் விக்கம். என்ன வேலை செய்ய முடியும்?'' எடுத்த எடுப்பிலே இடக்குச் செய்தாள் பத்மா.

''நிறைய நடக்கவேணும். ஏதாவது வேலை செய்துகொண்டிருக்கவேணும். நோய் நொடிகளைப் பற்றிப் பேசக்கூடாது. வயது ஆகி விட்டது என்று அலுத்துக் கொள்ளவே கூடாது என்று நேற்று ஒரு டாக்டர் டிவியில் சொன்னது அதற்குள்ளே மறந்து போச்சா?'' பத்மாவைச் சமையற் கட்டின் பக்கம் தள்ளிக் கொண்டு போனாள்.

சமையற்காரர அம்மாள் அவர் கீண்ப் போன்ற வயதான பெண் மணிதான்; அவர்களைக் கண்டு புன்முறுவல் செய்தாள்.

கதவில் பிம்பமாட்டியிருந்த மெலு காகிதத்தைக் வனமாகப் படித்தாள் சுகந்தி.

''நீங்களெல்லாம் கூட்டம் கூடி இந்த மார முழுதும் காலை மாலை என்ன சமைக்கிறது, என்ன டிபன்னு முடிவு செஞ்சு அந்தக் காகிதத்திலே எழுதி வச்சுக்கிங்க. நீங்க நீர்மாளிச்சதை நான் மறுப்புச் சொல்லாமே சமைச்சுப் போடத் தயார்.''

''நாங்க வேறு, நீங்க வேறுன்னு நெனக்கவேண்டாம். நீங்களும் இந்த வீட்டுக்கு உறவினர் போல. அதனுல் தான் எல்லாருமும் ஆளுக்கு கொஞ்சம் உதவியா இருந்துண்டு இந்த இல்லத்தை நிர்வகிக்க முயலுகிறோம்.'' மெல்லச் சிரித்த சுகந்தி மேடையிலிருந்த காய்கறிக் கூடையைத் தூக்கிக்கொண்டு அங்கிருந்த மேஜையில் பக்கத்தில் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தாள்.

''பத்மா அம்மா, அந்தப் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு வாங்க. நாம் சமையலுக்குத் தேவையான வற்றை நறுக்கிக் கொடுப்போம்'' என்று உத்தரவிட்டாள்.

பத்மாவின் முகம் வெந்தது. ஐம்பது வயதைத் தாண்டிய இருபது பெண்கள் அந்த இல்லத்தில் குடியேறியிருந்தனர். 'சக்தி இல்லம்' அநாதைப் பெண்களுக்கு அபயம் அளிக்கும் முதியோர் விடுதியல்ல. வேலையிலிருந்து ஓய்வுபெற்ற பெண்கள், கல்யாணமாகாமல் காலத்தை ஓட்டுகிறவர்கள், விதவைகள், நெருங்கிய உறவினர்கள் இல்லாதவர்கள் முதலியோர் சகஜமாகத் தங்கிக் கொள்ள முன்கூட்டியே கவிசமான நன்கொடை வழங்கிவிட்டு வரிசையாகக் கட்டப்பட்டுள்ள அறைகளில்

ஆளுக் கொன்றை எடுத்துக்கொண் டிருக்கிறார்கள்.

அந்த அமைப்பை உருவாக்கச் சிர மப்பட்ட மாதர்சங்கத் தலைவி காயத் திரிக்கு அவர்கள் நன்றி பாராட்டு கிறார்கள். ஆளும் அங்கே யாரும் இல் லாக இருக்கவில்லை. சாப்பாட்டுக்கும் அறையில் தங்களுக்குக் கிடைக்கும் வசதிகளுக்கும் மாதம் மாதம் பணம் கட்டுகிறார்கள். தலைவலி, கால் வலி என்ருல் கவலிக்க வரும் டாக்டருக் குப் பணம் கொடுக்கிறார்கள்: மருந்துகளேச் சொந்தச்செலவில் வாங் கிக் கொள்கிறார்கள். தொலேபேசியை உபயோகித்தால் கூடப் பணம் கொடுத்து விடுகிறார்கள். இந்த நிலே யில் சமையற்காரிக்கு அவள் ஏன் உதவ வேண்டும்? எண்ணிக் குறுகிய படி வேண்டா வெறுப்பாக அருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள் பத்மா.

'என்னுல் முடியாது. நீங்க யார் என்னே மிரட்டி வேலே வாங்க?' என்று ஒங்கிக் கூச்சலிட்டுவிட்டு எழுந்து போக அரை நொடியாகாது அவ ளுக்கு. அடுத்த அறையிலே கூந்தி தங்கியிருக்கிறாள். சுவராடாவது சொலவித் தொலிக்கவேண்டுமென்று குமுறிக்கொண் டிருக்கும் அவளுடைய மலக் குறைகளே வெளியே கொட்ட, அவற்றைக் கேட்டு ஆறுதல் சொல்ல ஒரு தோழி அவசியமாயிற்றே!

''உங்களுக்கு இந்த வேலேயெல் லாம் அனுப்பைத் தரலேயா?'' கோபத்தை அடக்கிக் கொண்டு பத்மா கேட்டாள்.

''எதைச் சொல்லுறது அதிலே முழு மனசுடன் ஈடுபடவது என் வழக் கம். நான் வேலேக்குப் போன காலத்தில் கூட வீட்டுச் சமையல், தோட்டத்து மேற்பார்வை எல்லாத் தையும் நானே கவனிச்சுக்கிற பழக் கம்.''

''இங்கே வந்தும் அவற்றைத் தொடரணுமா?'' பத்மா மெல்ல முணுமுணுத்தாள்.

''பணம் கொடுத்து நாம் இங்கே தங்கியிருக்கோம் என்று நினேத்தால், ஒரு ஹோட்டலில் இருப்பதைப் போன்ற தொரு தனிமை உணர்வை உண்டாக்கிவிடும். நாமும் கூடமாட வேலேயாட்களுட்ன் கூடி வேலே செஞ் சால் இது நம்முடைய வீடு என்ற உறவை அமைச்சுக் கொடுக்கும். அப்படி நமக்கு ஒரு வீடு இல்லாதலுல் தானே நாமெல்லாம் இங்கே வந் திருக்கோம்? நமக்கு வசதி கொஞ்சம் இருக்கு. அதனுல் பணத்தைக் குடுத் துட்டு இங்கே சாப்பிட் டுண்டு வாழ முடியுறது; பாவம்! சமையக் காரம்மா நம்மைப் போல அவங்களும் வயதான வங்கதான். ஒவ்வா உட்கார்ந்து சாப்பிட வசதியில்லாத தால் கடைசி மூச்சு வரை உழைச்சுச் சாப் பிட இங்கே வந்திருக் காங்க. அவங்களுக்குக் கொஞ்சம் உதவி னு நாம என்ன தேஞ்சா போயிடுவோம்? அவங் கீன வேலேயாளுன்னு மதிக்காம நம்ம உறவுக்காரங்கன்னு கொண்டா, குறைஞ்சா போயிடு வோம்? நாப் யாரை உறவினர் என்று மதிச்சமோ, அவங்க நம்மை ஒரு வேலேயாளாக்கூட மதிக்காம வெரட்டி விட்டாங்க இல்லியா?'' நிதித்தட்டி கசந்தி காய்கறிக் கட்டைமீண மீது வைத்துக் கத்தியால் அலமாகத் துண்டமிட்டுக் கொண்டிருந்தாள். பத்மாவின் நெஞ்சைத் துக்கம் அழுத் தியது; கண்ணில் நீர் கட்டியதை மூக்கை உறிஞ்சிக் கொண்டு, முகத் தைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டாள்.

''உங்களுக்காவது மகன் மரு மகள் இருக்காங்க. நான் கல்யாணமே செஞ்சுக்காமே குடும்பத்துக்கே உழைச்சுப் போட்டவ. பின்ன வய தில பெத்தவங்க போயிட்டாங்க. குடும்பத்துக்கு நான்தான் மூத்தவ. பெரிய அண்ணனேப் போல, குடும்பப் பாரத்தை என் தலேயில் நானே ஏத்தி வச்சுக்கிட்டேன். ஓர் அலுவலகத்திலே தட்டெழுத்தரா வேலே எத்துண்டு, மாடாய் உழைச்சுப் போட்டு, தம்பிகளேப் படிக்கவச்சு, தங்கைகளுக்குக் கல்யா ணம் செஞ்சு வச்சு..இம்..ஓடாப் போனேன்;

''கல்யாணமானதும் தம்பிகள் தனிக் குடித்தனம் போயிட்டாங்க. தங்கைகள் புக்ககம் போயிட்டாங்க. தன்னந் தனியே வேலேயிலிருந்து ஓய்வடையும்வரையில் நான் பட்ட பாடு! ஓய்வு பெற்ற பின் தம்பிக்குக் கடந்தம் எழுதிப் போட்டேன். 'சும்மா இருக்க வரேம். என் செலவுக்காகும் பணத்தைக் தந்துவிடறேன். உங்க ளோடு இருக்க அனுமதிக்கம்'னு கேட்டுக் கொண்டேன். தம்பி மனி ஒரு கார்டில் ரத்தினச் சுருக்கமாகப் பதில் போட்டுட்டான். 'இருவரும் வேலேக்குப் போறோம்; வயசு காலத்தில் நீங்கள் தனியே ஒரு வீட்டில் நாள் முழுவதும் இருப்பது சாத்தியப் படாது.'

''இன்னொரு தம்பியிடமிருந்து மறுப்பு வேறு ஒரு தொனியில் வந்தது. தங்கைகள், அவர்கள் புக்ககத்தில் நான் வந்து தங்குவது முறையல்ல என்று எழுதி விட் டாங்க. பிச்சை கேட்கலே: பணம் குடுக்கறேன். என்னே வயசு காலத் தில் தனியா விடாதீங்கன்னுதான் கெஞ்சிக் கேட்டேன், உறவினர்கள் என் உதவியால் முன்னுக்கு வந்த



வங்க. பிடி குடுத்துப் பேசலியே!'' அக்கம் பக்கம் தாளாமல் தினறினாள் பத்மா.

''நாங்கள் எல்லாரும் இருக்கோம். இப்போ ஏன் அதையெல்லாம் நெனச்சு வருத்தப்படறீங்க? சமையல் காரம்மாளை நம்முடைய சகோதரின்னு நெனச்சுப்போம். தோட்டக்காரப் பையனைப் பேரன்னு நெனச்சுண்டால் போச்சு. ஏன் வருத்தப்படணும்?'' அன்புடன் சுகந்தி தோளைத் தட்டிய போது பத்மாவுக்கு மிக ஆறுதலாக இருந்தது. மௌனமாக வேலையைக் கவனித்தாள்.

அன்று பகல் உணவு நேரத்தின் போது தன் உறவினர் அனுப்பிய தீபாவளி வாழ்த்து மடலைப் பிரித்துப் பார்த்தபடி சாப்பாட்டறைக்குள் நுழைந்தாள், பம்பாயைச் சேர்ந்த குஜராத்தி அம்மாள்.

பத்மாவையும் சுகந்தியையும் தவிர அங்கிருந்த மற்றப் பெண்கள் வேவ்வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். சிலர் வேற்று மொழியினர் கூட. அந்தக் குஜராத்திப் பெண்ணுக்கு யாரோ சொந்தக்காரர் தீபாவளி வாழ்த்து மடல் அனுப்பியிருக்கிறார்.

உறவினர்களோடு வசித்த அவளுக்கு யாரும் ஏதும் அனுப்பவில்லையே! பண்டிகை நாள் நெருங்கியும் கூட அவளுடைய உறவினர்களுக்கு அவள் நினைப்பு வரவில்லையே! நெஞ்சு கல்லாகக் கனக்கப் பத்மா சுகந்தியின் பின்னால் மெல்ல நடந்தாள்.

''தீபாவளிப் பண்டிகைக்கு வீட்டுக்கு வரும்படி உன்கள் மனுஷரும் மருமகளும் வந்து கூப்பாடுவாங்க, இல்லியா?'' என்று கேட்டாள் பத்மா.

''கூப்பிடுவாங்க.'' சுகந்தி பளிச்சென்று பதிலளித்து விட்டுச் சாப்பிட உட்கார்ந்து விட்டாள்.

உணவுக்குப் பின் எல்லாரும் பகல் முழுதும் தங்கள் அறையில் ஓய்வு எடுத்துக் கொள்வது வழக்கம். கதவைச் சாத்தித் தாழிட்டுக் கொண்டு படுக்கையில் வந்து சாய்ந்துகொண்டாள் சுகந்தி.

மகன் மருமகள் ஒரு சமயம் வந்தாலும் வருவார்கள். மகன் ஸ்ரீதரன்



நிதானத்தபோது அவள் நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டாள். நெஞ்சு படபடவென்று அடித்துக்கொண்டது.

எத்தனையோ துணிவுடன் பத்மாவுக்கு எதிரில் தன்னம்பிக்கை மிக்க வளாக அவள் நடந்து கொண்டது என்ன வேடமா உண்மை. ஆனால் அவளுடைய மனத்தின் ஆழத்தில் ஸ்ரீதரன் செய்த அசட்டை, எப்படி நெட்டிக் கொண்டிருந்தது?

பத்மாவைப் போலத் கண்ணீரைப் பொலபொலவென்று உதிர்த்துக் கொட்டி விட முடியாது. ஆழமாக, அழுத்தமாக நெஞ்சுக்குள்ளே கும்மென்று அடைத்துக் கொண்டு, ஓர் இரவில் உறக்கத்தைக் கலைத்து மூச்சைத் திணறச் செய்த ஒரு துயரம் அது.

பத்து மாதம் வயிற்றில் இடம் கொடுத்து வளர்த்த பிள்ளை, மனிஷியுடன் சேர்ந்து கொண்டு அம்மாவுக்கு வீட்டில் தங்க இடம் இல்லை என்பதை எப்படிச் சொல்லாமல் சொல்லிவிட்டான்!


''ஏம்மா? கோடைக்காலத்திலே இங்கே கெடந்து ஏன் வேகணும்? பத்து நாள் பங்களூரிலோ, ஊட்டியிலோ உங்க பெரெஞ்சிகள் வீட்டிலே தங்கி ஒய்வா இருக்கக் கூடாதோ?''

இது அவளுக்குச் சொன்னது அல்ல. அவள் சொல்லிக் கொடுத்துச் சொன்ன வார்த்தைகள்.

அடக்கமான பெண். வரதட்சிணை வேண்டாம், சீர் தேவையில்லே; வலக்காலே எடுத்து வைத்து உள்ளே வரும் மகளே என் மகாலட்சுமி என்றே சுகந்தி, தானே தேர்ந்தெடுத்து ராஜி காவைத் தன் மகனுக்குக் கல்யாணம் செய்து வைத்தாள். அவள் பார்த்துச் செய்து வைத்த திருமணத்தால். அம்மாவின் பேச்சுக்குக் கட்டுப்பட்டு வளர்ந்த பிள்ளை, தாயின் பேச்சுக்கு மறுப்புக் கொடுத்து அவள் தேர்ந்தெடுத்த ராஜிகாவுக்கு மாலே இட்டான். அதனால் அவனிக் குற்றம் சொல்லமுடியாது. வந்த லெநாட்கவிலேயே ராஜிகாவின் உண்மை உருவம் வெளிப்பட்டத் தொடங்கிவிட்டது.

வேலைக்குப் போகும் மருமகள் அவள். வேலேயிலிருந்து வரும்போதே சிடுசிடுப்பு. வேலே செய்கிறவள் ஊர் உலகத்தில் அவள் ஒருத்தினர் என்ற நினேப்பு. மும்பத்தைந்து வயதிலே மாரடைப்பில் போய்விட்ட கணவனுக்குப் பின், தன்னந் தனியே தன் ரெறு பிள்ளையைப் பாடுபட்டு வளர்த்து ஆளாக்க அத்தனே வயதுக்குப் பிறகு சுகந்தி பட்டப்படிப்புப் படிக்கப் போகவில்லேயா? வேலேயை மேற்கொள்ள வில்லேயா? அத்துடன் வீட்டையும் கவனிக்கவில்லேயா? மகனே வளர்த்துப் படிக்க வைத்து உயர்ந்த நிலேக்குக் கொண்டு வரவில்லேயா? உட்கார்ந்து ஒரு பிடி சோறு தின்ன நேரம் இல்லாமல் ஊைத்து மகனே முன்னுக்குக் கொண்டு வந்ததற்கு கிடைத்த பரிசு? குருவி சேர்ப்பது போல் சேர்த்து வாங்கிய வீட்டை மகன் பெயரில் எழுதி வைத்தது எத்தனே பெரிய பிசகாகிவிட்டது!

வீட்டையும், அதிலுள்ள பொருள்களையும் மாமியார் கொடுத்தும் ராஜிகாவுக்கு ஆசை அடங்கவில்லேயே!



பெண் நாய்: வாங்க சாப்பிடலாம்! தீபாவளி ஸ்வீட்டாக் கெடக்குது! லட்டு, ஜிலேபின்னு, கொண்டாட்டந்தான்!

ஆண் நாய்: ஜபோ, வாணுண்டி. கண்ட கண்ட கலப்பட எண்ணெய்ல செய்யறுங்க. உடம்புக்கு ஒத்துக்காது!

அடுத்த அறையில் படுத்திருக்கும் மாமியாருக்குக் கேட்க வேண்டுமென்று அவள் உரத்த குரலில் எப்படித் தன் கணவனுடன் சண்டை போட்டாள்!

''இந்தக் கிழ வயசில் உங்கம்மாவுக்கு நகள் எதுக்கு? அந்த வைரத் தோட்டையும் வளகளேயும் கழுத்துச் செவியேயும் கழட்டி எனக்குத் தரக் கூடாதா?''

''அப்பா வாங்கித் தந்த நகைகள்- அவர் நேனவுக்காக அம்மா வச்சிருக்காங்க'' எப்படிக் குழைந்து பேசினுள்!

''பெள்ஷன்தான் வரதே; பாங்கியில் தன் மேல் போட்டுக்கொள்ளும் பணத்தை நமக்குக் கார் வாங்க எடுத்துக் குடுத்தால் என்னவாம்?''

''ராஜிகா, கார் வாங்க நமக்குக் கட்டுப்படியாகாது. அம்மா அந்தப் பணத்தைத் தன் செலவுக்கு, ஆபத்துக்குக் கைகொடுக்க வச்சிருக்காங்க''

''உங்கம்மாவை வச்சுச் சாப்பாடு போட்டுக் காப்பாத்த மட்டும் நமக்குக் கட்டுப்பட்டியாகுமா?''

''அப்படிச் சொல்லாதே. அது என் கடமை. போதாததுக்கு அம்மா தன் சாப்பாட்டுச் செலவுக்கு மாசம் மாசம் பணம் தந்துடறுங்களே! அதோட வீட்டு வேலேகளைக் கவனிச்சுக்குறுங்க. நமக்குச் சமைச்சு வைக்கிறுங்களே!''

''பிரமாத பணம் கொடுத்துடறுங்க! என்ன அதிசயமான சமையல்! குக்ரைத் தூக்கிக் காஸ் அடுப்பில் வச்சு எத்தி எறுகிறது பெரிய வேலேயாக்கும்! நொடியில் செய்து காட்டுவேன் நான்.''

''வீட்டை நாள் முழுவதும் பத்திரமாப் பாத்துக்குங்களே!''

''ஒரு நாயை வளர்த்தா அது கூட பத்திரமாப் பாத்துக்கும். பதில் பேசாது. தெரிஞ்சுக்கோங்க.'' தன் கணவனேப் பெற்ற தாய் ஒரு நாய்க்கும் குறைந்து போனவளா? நிடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள்சுகந்தி. அன்று முழுதும் அவள் உறங்கவே யில்லே.. ஒவென்று அழுது புலம்பி முடியாத ஆத்திரம் நிறைந்த ஒரு துயரம், நெஞ்சிலே நெருப்பாகக் குமுறிக் கொண்டிருந்தது.

மறுநாள் ஸ்ரீதரன் அவளிடம் வந்து கார் வாங்கப் பணத்துக்காக எப்படிக் குழைந்து பேசினுள்!

மாரடைப்பில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு ஆபத்தான நிலேயில் கிடந்த அவள் கணவன், அந்த நிலேயிலும் தாடை செய்து அவளே அழைத்து என்ன சொன்னுள்?

''சுகந்தி! நீ ஓளவு படிச்சவ. புத்திசாலி. ஆனாலும் புள்ளேப் பாசம் கண்ணே மறைக்கும். ஏமாந்து போயிடாதே. காலம் வேகமாக மாறிக்கொண்டு போகுது. உன் மாமியாருக்கு நீ பணிவிடை செஞ்சது போல உன் மருமகள் உனக்குச் செய்வான்னு எதிர் பார்க்காதே. உன் கையிருப்பை எக்காரணம்கொண்டும் உன் மூச்சு அடங்கும் வரை, மகன் பிட்டியோ மருமகள் பிட்டியோ குடுத்துடு, நடுத்தெருவுலே நிக்காதே.''

பொன்னான வார்த்தைகள். அவள் மறக்க முடியுமா? மறந்தால் தான் இனி அகப்படுமா?

''என்பிட்ட இருக்கிறதை இப்போ என்னுல் கொடுக்க முடியாது.''

''என் அவசரத்துக்கு உதவ முடியாதா? அப்புறம் தாய்பன்னேன்னு நமக்குள் உறவு இல்லேயா?'' மகன் சீறினுன்.

தூக்கிவாரிப் போட்டது அவளுக்கு. அம்மாவிடித்த கோட்டைத் தாண்டத் தெரியாமல் வளர்ந்த சாதுப்பிள்ளே ஸ்ரீதரன், மனேவி வந்தும் எப்படி மாறிப் போய் விட்டான்!

அன்று இரவு அவனும் மனேவியும் வெகுநேரம் சென்றபின்தான் ஒரு பார்ட்டியிலிருந்து திரும்பி வந்தனர்.

''பின் வராந்தாவிலே ஏதோ சத்தம் கேட்டது. நான் தவியாக இருந்தேனு? எழுந்து போய்க்கதவைத் திறந்து பார்க்கப் பயமா இருந்தது. நல்ல வேளே! நீங்க வந்துட்டிங்க.'' அவள் சொல்லி முடிப்பதற்குள் மருமகள் கோபத்தில் வெடித்தாள்.

''நாள் முழுக்க உங்களுக்குத் துணேயா நான் வீட்டிலேயே இருக்க முடியுமா?''

சுகந்தி பதில் பேசவில்லே. ஆனுலும் படுக்கை யறையில் தல் கணவனிடம் ராஜிகா சுத்தினதுகாதில் விழுந்தது.

''இதைத்தான் ஜெனரேஷன் காப் புன்னு சொல்வாங்க. உங்கம்மா பழைய தலேமுறையைச் சேர்ந்தவங்க. வேலேக்குப்பிறகு வீடு, வீட்டுக்குப் பிறகு வேலேன்னு வாழ்ந்தவங்க. நாம் இன்ய தலேமுறையைச் சேர்ந்தவங்க. வாழ்க்கை வாழறதுக்குன்னு நெனக்கிறவங்க.''

''என்ன சொல்றே ராஜிகா?''

''உங்கம்மா இங்கே இருந்து புறப்பட்டுப் போனுத்தான் நாம் நிம்மதியா வாழ முடியும்.''

''அவங்க எண்ணே விட்டு எங்கே போவாங்க?''

''பணம் இருக்கு; பெள்ஷன் வரது. ரெண்டுலேன் இருக்காங்க. கொஞ்ச காலம் நம்மை நிம்மதியா இருக்க விட்டு, வெளியூரில் போய்த் தங்கிக் கிறதுதானே?''

''ஐய்யய்யோ! வயசான அவங்களே விட்டை விட்டு வெளியே அனுப்பி பிஞ்''

''அப்போ என்னே அனுப்பிவிட்டு நீங்களும் உங்கம்மாவும் குடித்தனம் பண்ணுங்கோ.''

''ஆத்திரப்படாதே. அவசரப் படாதே. அம்மாவிட்ட மெள்ளப் பேசிப் பங்களூர்ச் நெருதில் வீட்டுக்கு முதல்லே அனுப்பி வைக்கிறேன்.''

கதந்தி அதற்கு அவளும் வைக்க வில்லே. மறுநாள் அவர்கள் வேலைக் குப் புறப்பட்டுப் போனதும் தன் பெட்டியில் தேவையான சாமான்களே அடுக்கிக் கொண்டு தான் ஊட்டுக்குக் கிளம்பிவிட்டதாக ஒரு கடிதம் எழுதி வைத்துப் புறப்பட்டு விட்டாள். நேரே தங்கள் மாதர் சங்கத் தலேவி காயத்திரி வீட்டுக்குச் சென்றுள். ''எனக்குத் தங்குமிடம் தேலை. யார் வீட்டாக இருத்தாலும் பரவாயில்லே. 'பேயிங் கெஸ்ட்'டாக இருக்கத் தயார். உதவி செய்ய முடியுமா?''

தனது ஆழ்ந்த துயரத்தை அடக்கிக் கொண்டு கேட்டாள் காயத்திரியிடம். பெண்களுக்கும் பழரசம் தயாரிக்கும் கேக் செய்வஙகுற்றுக்கொடுக்கலாம். சமூகத்திலே பெண்களுக்கு ஏற்படும் பல பிரச்னைகளுக்குத் தீர்வு காண என்ன வெல்லாம் செய்யலாம் என்று நிதிமாசச் சித்திரத்துச் செலவ்பட்டுக் கொண்டிருக்கிறுன் காயத்திரி என்பது உண்மையை அப்போதுதான் புரிந்து கொண்டாள் கதந்தி.

அவர்கள் சங்கம் நிறு நிரட்டிப் பூத்த மல்லிலிருந்த பழைய பங்களாவை வாங்கி இடித்து,அதை ஒய்வு பெற்றத் தனியாகி விட்ட பெண்கள் தங்கும் இல்லமாகக் கட்டிக் கொண்டிருப்பது தெரிந்தது.

''காயத்திரி, உனக்குப் புண்ணிய மூண்டு. நானும் என் சார்பில் நன் கொடை கணிசமாகத் தந்து விடுகி றேன். எனக்கு அந்த இல்லத்தில் இடம் தந்து உதவு'' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள் கதந்தி.

இல்லம் அமோகமாகக் கட்டி முடித்திருந்தது. ஒரே ஒர் அறை தான் மிஞ்சியிருந்தது. தன் வைரத் தோடுகளே விற்று இல்லத் துக்குப் பத்தாயிரம் ரூபாய் தன் கொடை வழங்கி அதில் குடியேறி விட்டாள் கதந்தி.

ஊட்டிக்குப் போல தாய் அப் படியே ஒய்வு இல்லத்தில் குடியேறி விட்டதைத் தெரிந்துகொண்ட ஸ்ரீதர் மனத்தைக் குற்ற உளர்வு பாதித்தி ருக்கவேண்டும். ''என்னம்மா! இப்ப டிப் பண்ணிட்டங்களே.எப்போ வீட் டுக்குத் திரும்பி வரப்போறீங்க?'' அலுவலகத்திலிருந்து தொலேபேசியில் முழைந்தான்.

''இங்கே என்னே ஒத்த வயசுக் காரங்க இருக்காங்க. இவர்களோடு இருக்க நல்லாவே இருக்கு. கவலேப் படாதே. நான் சந்தோஷமாக இருக்கேன்.'' பட்டென்று போனை வைத்துவிட்டாள் தாய்.

அதற்குப் பிறகு நீண்டமௌனம். விட்டது தொல்லே என்ற நினப்புப் போலும் மகனுக்கு.

நீண்டியும்அறியாது தூங்கிவிட்ட வன் திடுக்கிட்டு விழித்தபோது மாலேப் பொழுது அமிழும் நேரம். அசரமாக முகத்தைக் கழுவிக்கொண்டு முடியைச் சீர்திருத்தி ஆடையைச் சரிப்படுத்திக் கொண்டு நேதீர் அருந்த அறையை விட்டு வெளிவந்தவளுக்கு ஒரு பெரு அதிர்ச்சி.

அவனைக் காண மகனும் மருமக னும் வரவேற்பறையில் வந்து காத் திருந்தனர். இருவரையும் தன்கூட அமைத்துக்கொண்டு சாப்பாட் டறைக்குச் சென்றுள். அவர்கள் இருவருக்கும் தன் செலவில் நேதீர் விழுங்க ஏற்பாடு செய்தார். அங் கிருந்த பெண்களுக்குத் தன் மகனேயும் மருமகனேயும் அறிமுகம் செய்து வைத்தாள். பிறகு அவர்களே அழைத்துக்கொண்டு நடந்தபடி கட்டி டத்தைச் சுற்றிக் காண்பித்தாள். தன் அறையைக் காட்டினுள். உட்காரச் சொல்லி வராத்தாவி விருந்த நாற்காலிகளே இழுத்துப் போட்டு உபசரித்தாள்.

''இபோவளிப் பண்டிகைக்கு வீட் டுக்கு வரணும்னு கூப்பிட வந்தோம். நீங்க பண்டியை எங்களோடு வந்து கழிக்கணும் அம்மா.'' மகன் மெல்லிய குரலில் ஆரம்பித்தான்.

''நீங்க எப்படி நல்லர் சமைப் பீங்க! பலகாரங்கள் எல்லாம் ஜோராச் செய்வீங்க.அத்தை எனக்கு உங்க கைப் பலகாரம் சாப்பிட ஆசையா இருக்கு.'' ராதிகா புன்னகை செய்தாள்.

''சமையல் என்ல பிரம்ம வித்தை! பிரஷர் குக்கர்,காஸ் அடுப்பு, ரெண்டும் இருக்கு. கும்மா எத்தி



ஒருவர்: என்னங்க! பொண்ண பேச்சுப் போட்டின்னு போட் டிருக்கு! எல்லாரும் மிழிங் களா இருக்காங்களே!

மற்றவர்: பேச ஆரம்பிச்ச போது பொண்ணாத்தான் இருந்தாங்க!

இறக்க எத்தனே நாழியாகும்?'' சிரித்தாள் கதந்தி.

''நீங்க வீட்டிலிருந்தப்போ வீட் டைப் பத்திரமாப் பாத்தின்டீங்க. கவலே இல்லாம வேலேக்குப் போஞேம் அம்மா.''

''நான் என்ன சதமா? வயசாக வேயா? என்னே நம்பறதனிட ஒரு நல்ல அபெசெலியஸ்ப் பார்த்து வாங்கி வளர்த்திங்ஙுனும் பயன் உண்டு.''

மகன் முகம் கருங்கிப்போயிற்று. ராதிகா தரையைப் பார்த்தான்.

''நீங்க ரொம்பக் கடுமையாப் பேசறீங்க அம்மா. என்ன இருந் தாலும் நான் உங்க மகன். ராதிகா மருமகள். உங்க இபோவளியை எங்க ளோட கழிக்கணும்னு கூப்பிட வந் திருக்கோம். எப்படியோ பேசறீங் களே!''

''நீ கூப்பிட்டதும் நான் உடனே புறப்பட்டு வந்துவிட முடியுமா, என்ன? இது எங்கள் தலே தீபாவளி.''

''என்னம்மா சொல்றீங்க?''

''ஆமாம் அப்பா. இந்த இல்லத் நிலே நாங்கள் எல்லாம் குடியேறின பிறகு வரும் முதல் தீபாவளி. நாங்க ஒருத்தரை ஒருத்தர் உறவா மதிப்பதால், இது எங்க வீடு. இதில் நாங்க எங்க தலேதீபாவளி யைக் கொண்டாடப் போறோம். நான் உன் தாய், நீ என் மகன். இந்த உறவைப் பதிக்க முயாது, ஒத்துக்கறேன். அத்தப் பத்தத்துக்காக உங்க ரெண்டு பேரையும் மனமாரத் தீபாவளிக்கு வாழ்த்தறேன். ரொம்ப நாளாக் கேட்டுக்கிட்டிருந் தியே ராதிகா. இந்தா எடுத்துக்கோ. எனக்கு இது இனித் தேவையில்லே. இந்த வளேகள் நான் உனக்குக் குடுக்கும் தீபாவளிப் பரிசு.'' சரக் கென்று தன் கையிலிருந்த இரு தங்க வளேகளையும் உருவி மருமகளிடம் கொடுத்தான் கதந்தி.

''அத்தை!'' தழதழத்த ராதிகா வைத் திரும்பிப் பாராமல் எழுந்தான் கதந்தி.

''காலம் மாறிப்போச்சு. குடும் பம் என்கிற அமைப்பும் அதோட மாறிப்போச்சு. பிறகு மோசச்ச பறவையாக் குழந்தைகள் அவரவர் வாழ்க்கையைத் தேடிக்கொண்டு பிரிந்த போயிருங்க. அதனுலே பெரியவங்க மனசைத் திடப்படுத்திக் தங்கள் நம்பிக்கையை ஆதாமாப் பிடித்துக்கொண்டு வேறு வகையான அமைப்புகளுடன் ஒன்றி வாழத் தெரிஞ்சுக்கனும் என்பதைப் புரிஞ்சுகொண்டுவிட்டேன்.


''ஸ்ரீதரா,உன்னுடையும் அப்பாவோ டேயும் எத்தனேயோ தீபாவளி சேர்ந்து கொண்டாடிட்டேன். அந்த நெனவுகள் பசுமையா மனசில் இருக்கு. ராதிகா வந்தபிறகு நில தீபா வளிகள் சேர்ந்து கொண்டாடிட் டேன். இனி என்னேட இங்கே வாழ் கிற புதிய உறவினர்களோடதான் நான் என் இன்ப துன்பங்களேப் பகிர்ந்துக்கனும். மகிழ்ச்சியான தீபாவளி, உங்கள் இருவருக்கும். நல்லது: போய் வாருங்கள்.'' சொல்லிக்கொண்டே அவர்களேத் தாண்டி அவள் பொது ஹாலே நோக்கி மென்ன நடந்தாள். ※

"DEEPAVALI GREETINGS"

Our album records 273,000 success stories

273,000 diesel engines functioning successfully in various applications —agricultural, industrial and vehicular —speak their own story of engineering excellence.

Simpsons diesel engines have earned a reputation for economical operation and reliable service. With a nationwide network of efficient parts and after sales service, dependability is built into each prime mover. As the 273,000 success stories amply prove.




MAC/S/811 R

Simpson & Co. Ltd

861/862, Anna Salai, Madras-600 002.

Simpsons
an impetus to Indian industry.

A Unit Company of the Amalgamations Group, Madras



அண்மையில் குடமுழுக்கு நடந்த தாயுமானவர் சமாதிக் கோயில்.



இராமநாதபுரத்தில் தாயுமானவருக்குப் புதிதாகக் கோயில் எழுப்பி இருக்கிறார், தவத்திரு சித்பவானந்த சுவாமிகள்.

தாயுமானவரைப் பற்றித் தெரிந்து கொள்வதற்குமுன் தாயுமானவரின் கொள்கையைச் சென்ற நாற்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து பரப்பி வரும் தவத்திரு சித்பவானந்த சுவாமிகளைப் பற்றித் தெரிந்து கொள்வது அவசியம்.

தவத்திரு சித்பவானந்த சுவாமிகள் இந்த நாட்டின் தனிப் பெரும் ஞானச் செல்வம். அசாதாரணமான நிறைமையும், ஆழ்ந்த புலமையும், நுண் உணர்வும் பெற்ற தவயோகி. நிசை திரும்பிய தமிழ் மக்களே, அவர் தம் பேச்சாலும், வாழ்க்கையாலும் சமயப்பற்றும் மொழிப்பற்றும் உடையவர்களாக மாற்றி வருகிறார். சுவாமிகளின் தன்னலமற்ற சேவையால் தமிழ் நாட்டில், தமிழ் இலக்கண அறிவு, தமிழ் இலக்கிய அறிவு, தமிழ்ப் பண்பாட்டு அறிவு ஆ கி ய வை தழைத்து ஓங்குகின்றன; தெய்வ நம்பிக்கை மக்களிடம் வளர்ந்து வருகிறது. இறைவனின் திருநாமங்களே எங்கும் எதிலும், காணும் சூழ்நிலை உருவாகி வருகிறது. 'நான் தெய்வ நம்பிக்கை உள்ளவன்' என்று சொல்லிக்கொள்வதில் தமிழ் மக்கள் பெருமை அடைகிறார்கள்.

இந்தக் காலக் கல்லூரிப் படிப்பைப் படித்து, அதில் பட்டங்கள் பெற்றவர்களிடையே, 'தெய்வநம்பிக்கை இருப்பதுகூடாது; அது படிப்பதற்கு இழிவு' என்று ஓர் அறியாமை உருவாகி வந்த கேவல நிலையை மாற்றி, படித்தவர்கள் மத்தியில் தெய்வநம்பிக்கை, சமய உணர்ச்சி, சாத்திர அறிவு, சமரச மனப்பான்மை ஆகிய நலங்களே வளர்த்து வரும் ஒப்பற்ற தவ ஞானி சுவாமி சித்பவானந்தர்.

இந்த இருபதாம் நூற்றாண்டில் எத்தனையோ பேர் எவ்வளவோ வழிகளில் வாக்கு வன்மையுடன் பேசி மக்களைத் திசை திருப்பிக் கொண்டிருக்கும்போது, அதில் அவர்கள் மயங்கி வீணாகி விடாமல் சுவாமிகள் மாதந்தோறும் நடத்தி வரும் அந்தர் யோகம், மக்களே நல்வழிப்படுத்தி வருகிறது. அந்தர் யோக நிகழ்ச்சிகளில் சுவாமிகளின் பேச்சிலே ஓர் அற்புதத்தைக் காணலாம். அவர்கள் முடிவான ஒரு கருத்தை நோக்கிப் பல துணைச் செய்திகளை இணைத்துச் சொல்லும்போது, ஒவ்வொன்றையும் சிறு சிறு தொடர்களாகச் சொல்லி இறுதியில் முழுக் கருத்தையும் விளக்கி முடிப்பார்கள்.

சுவாமிகளின் பேச்சுக்களிலே நம் வேதகால ஞானிகளிலிருந்து ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் வரையில், வாழையடி வாழையாக வந்து கொண்டிருக்கும் அருளாளர்களின் வாழ்க்கை அநுபவங்கள் இணைந்து நின்று கொஞ்சும். தமிழ், சம்ஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலிருந்தும் அருளாளர்களின் அருள்வாக்குகள் அற்புதமான மேற்கோள்களுடன் எழுந்து பவனி வரும். சுவாமிகளின் பேச்சு, ஆழமும், தெளிவும் நிறைந்த அருமையான தமிழ்க் கங்கையாக, காவிரியாகப் பெருக்கு எடுத்துப் பாயும்.

இந்த ஞான நதிகளின் சங்கமத்தில் மூழ்கி எழுந்தவர்கள் மனத்தூய்மை பெற்று விளங்குவார்கள்.

''எழுபது வயது நிரம்பிய பிறகே மனித வாழ்க்கையே தொடங்குகிறது; பரிபூரண அநுபவம் கிடைக்கிறது. வாழ்க்கை வளம் பெறுவதற்கு அத்தகையவர்களின் வாழ்க்கை வழிகாட்டுகிறது'' என்று உலக மேதைகள் சொல்லியிருக்கிறார்கள்.

நம்மைபெல்லாம்விடச் சுவாமிகள் வயது முதிர்ந்தவர்கள்தாம். உடல் நலம் குன்றி வயது முதிர்ந்திருக்கும் நிலையில் தாயுமானவர் சமாதித் திருக்கோயில் திருப்பணியை மேற் கொண்டார்கள். ஓய்வு எடுத்துக் கொள்ளவேண்டிய இந்த வயதில் இவ்வளவு பெரிய பொறுப்பை ஏற்றுக்கொண்டு டிருக்கிறார்களே என்று அன்பர்கள் பலர் எண்ணினார்கள். எடுத்த காரியத்தைச் செம்மையாக நிறைவேற்றக் கூடிய பேராற்றல் படைத்த தவ ஞானி அவர்கள். கட்டுப்பாடான வாழ்க்கை யையும், வேதாந்தப் பெருநெறியை யும் கடைபிடித்து வரும் சமரச ஞானி ஆவார்கள். கடமை உணர்வு நிறைந்த கண்ணியம் மிகுந்த நிர்வாகியும் ஆவார். சுவாமிகள் ஜுடைய திருப்பராய்த்துறை இராமகிருஷ்ண தபோவனம், திருவேடகம் கல்லூரி, சேலம் சாரதா பெண்கள் கல்லூரி ஆகியவை அவர்களுடைய சாதனைக்குச் சாட்சி களாக மிளிர்கின்றன.

சுவாமிகள் வயது முதிர்ச்சி காரணமாக அயர்ந்து போனதில்லை. மேலே, மேலே உயர்ந்து சென்று கொண்டிருக்கிறார். நமது மக்கள் நல்வாழ்வு பெறவேண்டும் என்றே அல்லும் பகலும் அயராமல் உழைத்து வருகிறார். வாழ்க்கையில் உயர வேண்டுமானால் உழைப்பதன் மூலமாகத்தான் உயரமுடியும் என் பதைச் சுவாமிகளின் வாழ்க்கை காட்டிக்கொண் டிருக்கிறது.

மனிதன் ஒழுக்கத்துடன் இருப் பதற்கு அவன் என்ன செய்ய வேண் டும்? ஒரு கொழுகொம்பைப் பற்றிக் கொள்ள வேண்டும். அந்தக் கொழு கொம்புதான் அறமும் ஒழுக்கமும் ஆகும். இதற்கு அறத்தையும், ஒழுக் கத்தையும் வளர்த்து வரும் ஞான யோகிகள் வாழ்க்கைதான் மக்க ளுக்கு வழிகாட்டியாக அமையமுடி யும். இவ்வாறு அறத்தையும் ஒழுக் கத்தையும், சமய சமரச ஞானத் தையும், வேதாந்தத்தையும், சித் தாந்தத்தையும் ஒன்றுக அத்வைத மாகக் கண்ட ஞானி தாயுமானவர்.

தாயுமானவர் வாழ்க்கையைத் தெரிந்துகொள்வதும், அவர் போத னைகளை அறிந்து கொள்வதும், அவற்றை வாழ்க்கையில் கடைப் பிடித்து வருவதும் மனிதன் மனித னுகவும், மாமனிதனுகவும் உயர்ந்து எல்லா வளங்களும் பெற்று வாழ் வதற்குத் துணை புரியும்.

நாம் எதைப் போற்றுகிறோமோ அதுதான் வளரும். ஞானிகளைப் போற்றுகிற நாட்டிலேதான் ஞானி கள் தோன்றுவார்கள். ஒழுக்கத் தையும், அறத்தையும் போற்று கிற நாட்டிலேதான் அவை ஓங்கி வளரும். அப்போது தான் நம்மிடையே இன்று இருக்கும் ஞானிகளையும் நம்மால் கண்டு கொள்ளமுடியும். எது ஒழுக்கம், எது அறம் என்பதைப் புரிந்து கொள்ளவும் முடியும்.

இந்த உண்மையை நன்கு உணர்ந் தவர் தவத்திரு சித்பவானந்த சுவாமி கள் அவர்கள். அதனுல்தான் சமரச ஞானி தாயுமானவர் சமாதித் திருக் கோயில் திருத்த முறையில் திருப் பணி செய்திருக்கிறார்.

தாயுமானவர் வாழ்க்கை மனித குலத்தவர்கள் எல்லாரும் தெரிந்து கொண்டு பின்பற்ற வேண்டிய புனித மான வாழ்க்கையாகும். அவருடைய உபதேசங்கள் சமயம் கடந்தவை. சன்மார்க்கத்தைப் பற்றிப் பேச வைகளை மனிதன் மனிதனுக வாழ்வதற்கும், மகிழ்ச்சியுடன் வாழ்



தாயுமானவர் திருவுருவச் சிலை

வதற்கும் வாழ்க்கையில் உயர்ந்து செல்வதற்கும் வழி காட்டுபவை. எல்லாச் சாதியினரும், எல்லா மதத்தினரும், எல்லா நெறியினரும் கடைப்பிடித்து உயர்வதற்குத் துணை புரிபவை.

தாயுமானவர் ஒரு சமரச ஞானி. அவரைப்பற்றி நமது நாட்டு மக்க ளில் பெரும்பாலோர் நன்கு அறிவார் கள். தாயுமானவர் பாடல்களைப் பண் பாடு உள்ளவர்களும், பண்பாட்டை விரும்புகிறவர்களும் ஆர்வத்துடன் படிக்கின்றனர். இறைவனைப் பற்றி யும், அவனை வழிபடும் அன் பர்களைப் பற்றியும் அவர் சொல்லி யிருக்கிற கருத்துக்களைப் பெரும் பாலோர் போற்றுகின்றனர்.

தாயுமானவர் பாடல்கள் மிகப் பிரசித்தமானவை. பல அன்பர்கள் தாயுமானவர் பாடல்களை உள்ளம் உருகிப் பாடுவதைக் கேட் கிறோம்.

தாயுமானவர் பாடல்கள் படிப் பதற்கும் பாடுவதற்கும் இனிமை யானவை. எல்லாருக்கும் பொருள் விளங்கக் கூடியவை. எளிய நடை யில் அமைந்திருப்பவை.

மொழியின் வளர்ச்சியில் மட்டும் இல்லாமல், ஆன்மிகத் துறையில் வளர்ச்சியையும் சமசர ஞானத்தின் வளர்ச்சியையும், தாயுமானவர் பாடல்களில் காணலாம். தாயுமானவர் பதினெட்டாம் நூற்றாண் டிலே வாழ்ந்தவர். தாயுமானவர் பாடல்களில் சன்மார்க்க போதனை களை நிறைந்திருக்கின்றன. அவருடைய பாடல்கள் வித்தைப் பற்றிப் பேசுகின்றன. வித்தை மதக் கண் கொண்டு பார்க்காமல் பொது நோக்கோடு பார்த்துப் போற்றுகின்றன. அவர் பாடல் களிலே மத வெறுப்பையோ, சமய வேறுபாட்டையோ காண முடியாது. தாயுமானவர் எல்லாக் தெய்வங் களையும் போற்றிப் பாடியிருக்கிறார். எல்லா மதங்களையும், சமயங் களையும் வேற்றுமை இல்லாமல் பார்த்திருக்கிறார்.

''தெய்வம் ஒன்றே, தெய்வத்தை அவரவர்களும் தங்கள் உள்ளேயே காணலாம். அன்பு, அருள், அறிவு, இன்பம், ஜோதி இவை தெய்வ வடிவங்கள்'' என்று கூறு கிறார். இந்த இறைத் தத்துவம் எல்லாராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய பொதுவான தத்துவம்.

தாயுமானவர் வெறும் தத்துவ ஞானி மட்டும் அல்லர். பரிபூரண மான உலக அநுபவங்கள் நிறைந்த வர். இதை அவருடைய பாடல் களிலே பல இடங்களில் தெளிவாகக் காணலாம். அவர் சம்ஸ்கிருதத்தை யும் தமிழையும் நன்முகக் கற்றவர். மக்கள் எல்லாரும் ஒன்று என்ற கொள்கையுடன் வாழ்ந்தவர்.

அவர் உலகில் நடைபெறும் வஞ் சனை, சூதுகளை எல்லாம் எடுத்துக் காட்டி இருக்கிறார். அவற்றிலிருந்து மக்கள் விடுதலை பெற வழியும் காட்டி இருக்கிறார். மக்களின் பல நிறப்பட்ட பண்புகளையும் எடுத்துக் காட்டி விளக்கியிருக்கிறார்.

தாயுமானவர் பலசய காலத்தவர் அல்லர். இடைக்காலத்தவரும் அல் லர். மிகவும் பிற்காலத்தவரும் அல் லர். ஐரோப்பியர்கள் தமிழ்நாட் டுக்கு வந்த பின் வாழ்ந்தவர். தாயுமானவர் வரலாறு உள்ளபடி நமக்குக் கிடைக்கவில்லை. கதையும் கற்பனையும் உண்மைச் சம்பவங் களும் கலந்த ஒரு கதம்ப வரலாறு தான் கிடைத்திருக்கிறது.

தாயுமானவர் வாழ்க்கையின் சாரம் அவர் பாடல்களிலே காணப் படுகிறது. அவருடைய வாழ்க்கை யின் ஜீவநாடியே அவருடைய பாடல் களில் துடிக்கிறது.

தாயுமானவர் வெறும் பக்தர் மட்டும் அல்லர். ஞானயோக சித்த ராகவும், இணையற்ற கவிஞராகவும் விளங்கியவர். அவரைப் போன்ற சமரச ஞானிகள் நம் நாகரிகத்துக் கும் பண்பாட்டுக்கும் முதலெழுப்பு போன்றவர்கள்.

தாயுமானவர் பதினெட்டாம் நூற் றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்

தவர். இன்றைக்கு ஏறக்குறைய இருநூற்று ஏழுபதுதைந்து ஆண்டு களுக்கு முன்னுல் தமிழ் நாட்டில் அவர் தோன்றினர். சோழ வள நாட்டில் இருக்கும் திருமறைக்காடு என்னும் வேதாரண்யத்தில் வாழ்ந்த கேடிலியப்பர் என்ற பெரக்தருக்கு இரண்டாம் மகனுகப் பிறந்தார். கேடிலியப்பர் திருச்சிராப்பள்ளியில் நாயக்கர் மன்னர் அரசவையில் பெருங்கணக்கர் என்ற உயர் பதவி யைத் திறமையுடன் வகித்தவர்.

தாயுமானவர் திருச்சியில் பிறந் தாரா, வேதாரண்யத்தில் பிறந் தாரா என்பதைத் தெரிந்துகொள்ள முடியவில்லே. ஆனுல் அவர் சம்பவிரு தமும் தமிழும் நன்கு கற்ற கவிஞர்.

தாயுமானவர் என்பது திருச்சிராப் பள்ளியில் கோயில் கொண்டிருக்கும் விவபெருமானின் பெயர். அத்தப் பெயரையே அவருக்குப் பெற்றோர் கள் இட்டிருக்கிறார்கள்.

தாயுமானவர் இளம் பருவத்தி லேயே கருணே உள்ளம் கொண்டு விளங்கினர். சன்மார்க்க நெறியி லேயே சுபட்டார். தாம் கண்டறிந்த இயற்கை உண்மையின் இரகசியங் களே, எண்ணிய எண்ணங்களே, அநுப வித்த இறை அநுபவங்களே அருமை யான பாடல்களாகத் தித்திக்கும் இத் தமிழில் பாடி வைத்திருக்கிறார்.

தாயுமானவர் பாடல்களில் சமய, மத சமரசத்தைக் காணலாம். இறை வனே, 'அன்பு, ஆனந்தம், இன்பம் கருணே, வெட்டவெளி, அறிவு, ஜோதி' என்றெல்லாம் போற்று கிறார். மனிதர்கள் தம்முள் வேற் றுமை பாராட்டிக் கொள்வதையும் 'என் தெய்வம் பெரிது, உன் தெய்வம் சிறிது' என்று வீண் சண்டை போட்டுக் கொள்வதையும் அடியோடு வெறுத்தார்.

கடவுள் எங்கும் நிறைந்தவர். நாம் காணும் எல்லாப் பொருள் களிலும் நீக்கமற நிறைந்திருப்பவர். இறைவனே எங்கும் எதிலும் காணலாம் என்ற தம் அநுபவத் தைத் தாயுமானவர் பல பாடல் களில் வற்புறுத்தி விளக்கியிருக்கிறார்.

'அங்கு இங்கு எனதபடி எங்கும் பிரகாசமாய் விளங்குபவன்' இறை வன் என்று தெளிவாகக் கூறுகிறார். இருந்தாலும் இறைவனே ஒவ்வொரு வரும் தம் உள்ளேயே காணமுடியும் என்பதையும் வற்புறுத்தி யிருக்கிறார்.

''எந்தெந்த நாளும் எண்ப்பிரி யாது
என் உயிராய்ச்
சிந்தகடி கொண்டருள் தேவே பராபரமே!''

என்று பாடியிருக்கிறார் தாயுமானவர். இதனுல் இறைவன் ஒவ்வொருவர் உள்ளேயும் இருக்கிறார் என்ற உண் மையை உணர்ந்துகொள்ளலாம்.

''எந்த நாளும் என்னே விட்டுப் பிரிவதில்லே. என்னுடனேயே என் உயிருக்குள் உயிராக வாழ்கிறாய். என் சிந்தையிலே குடிகொண்டிருக் கிறாய். அருள் உருவமாக இருக் கிறாய். எல்லாவற்றுக்கும் மேலான பொருளாக என் உள்ளேயே இருந்து எனக்கு அருள் புரிந்துகொண் டிருக் கிறாய்'' என்று வலியுறுத்துகிறார்.

''அன்புடையவர்களும், அறிவுடை யவர்களும் மக்களுக்கு அன்பையும் அறிவையும் ஊட்டக்கூடியவர்கள். இதனுல் அன்பர்களோப் போற்ற வேண்டும். அறிவுடையவர்களேக் காப்பாற்ற வேண்டும். அன்பர் களுக்கும் அறிவுடையவர்களுக்கும் தொண்டாற்றுவதே இறைவனுக் குச் செய்யும் தொண்டாகும்'' என்று வற்புறுத்துகிறார் தாயுமானவர்.

உலகத்து மக்கள் எல்லாரும் இன் பத்தைப் பெற்று வாழவேண்டும் என்னும் விரிந்த நோக்கம் உடையவர் தாயுமானவர். வேதாந்த சித்தாந்த சமரச நெறியைப் போதிப் பதே அவருடைய கொள்கை.

தாயுமானவர் காலத்தில் தமிழ் நாடு எப்படி இருந்தது? சாதிச்சண் டைகள் மலிந்து கிடந்தன. பல தெய்வங்களே மக்கள் வணங்கி வந்தனர். தெய்வங்களின்



சுவாமி சித்பவானந்தா

பெயரால் சண்டை போட்டுக்கொண் டனர். மதவெறியும் வெறுப்பும் மக் கள் மத்தியில் குடிகொண் டிருந்தன.

தாயுமானவர் இவற்றை முற்றும் வெறுத்தார். மக்கள் ஒற்றுமை இல்லாமல் இருப்பதைக் கண்டு மனம் வருந்ினர். எனவே, ''தெய் வம் ஒன்று. மதங்கள், மதத் தத் துவங்கள் எல்லாம் ஒரே நோக்கம் உடையவை. மக்கள் எல்லாரும் ஒரே குலந்தான். வீண் சண்டைகள் போட்டுக்கொள்ள வேண்டாம். எல்லா மக்களும் இயற்கை உண்மை யை உணர்ந்து உயர்ந்த நெறியிலே வாழ வேண்டும்'' என்பதற்காக இனிய தமிழில் எல்லாரும் எளிதில் புரிந்துகொள்ளும்படி அருமையான பாடல்களேப் பாடியிருக்கிறார்.

தாயுமானவர் பாடல்கள் படிப் பதற்கு இனிமையானவை. பாடப் பாடப் பத்திச் சுவையைப் பெருக் கும் பண் புள்ளவை. அவர் பாடல்களிலே தமிழும் வடமொழி யும் கலந்தே இருக்கின்றன. இருந் தாலும் வடமொழிச் சொற்கள் கலந்திருப்பது போலவே தெரியாது. உள்ளம் உருக்கும் ஓசை நயமும், பாவமும், உயர்ந்த கருத்துக்களும் படித்தவர்களேயும், ஓரளவு எழுத்துப் பழக்கம் உள்ள பாமரர்களேயும் கவரக்கூடியவை.

அருளாளர்கள் தம் உள்ளத்தில் தோன்றும் உண்மைகளேத் தாராள மாகத் தங்கு தடை இல்லாமல் வெளியிடும்போது மக்கள் வழக்கில் இருக்கும் சொற்களே ஒதுக்கிவிடாமல் பயன்படுத்துவார்கள். இதனுல் தான் அவர் பாடல்கள் நிறந்து விளங்குகின்றன. சிருஷ்டித்துவம் பெற்று நிற்கின்றன.

பக்தகோடிகளுக்குத் தாயுமானவர் பாடல்கள் சாத்திர நூல்களாகவும், நோத்திர நூல்களாகவும் பயன்படக் கூடியவை. ஞானயோகத்தில் விருப் பம் உள்ளவர்களுக்கு ஞான நவநித்த மாகவும், புனித நன்னீராகவும் உத வக்கூடியவை. அவர் பாடல்கள் சிறந்த ஞானிகளுக்கும், பக்தர் களுக்கும், யோகிகளுக்கும் பயன் படுவதுபோலவே சாதாரண மக்க ளின் உலகியல் வாழ்க்கைக்கும் பயன் படக்கூடியவை. உலகியலில் இருப்ப வர்களுக்கு ஞானயோகத்தில் மிகவும் ஆர்வத்தை உண்டாக்கக்கூடியவை.

ஞானயோக நெறியின் தொடக்கப் படி முதல், உயர்ந்த அநுபூதிப்படி வரை தாயுமானவர் பாடல்கள் அநுபவத்துடன் பேசுகின்றன. துற வறத்தாருக்கும், இல்லறத்தாருக்கும் அவருடைய பாடல்கள் பயன் தரக் கூடியவை. அவர்கள் மனத்துய்மை பெற்று உயர்வதற்கு வழிகாட்டக் கூடியவை. அதை, ''ஈர்த்தி தலம் நீர்த்தம் முறையாய்த் தொடங்கி னர்க்கு, ஓர் வார்த்தை சொலச் சற் குருவும் வாய்க்கும் பராபரமே!'' என்று பாடியிருக்கும் இந்தக் கண்ணி யிலும் காணலாம்.

இத்தகைய உயர்ந்த ஞான பொக் கிஷம் தமிழில் இருக்கிறது என்பது தமிழ் மக்களிலே கூடப் பலருக்குத் தெரியாது. தமிழ் மக்களில் படித்த வர்கள் இதுபற்றிப் போதுமான வகனம் செலுத்தவில்லே. இந்த நிலேயில் மற்ற மொழிக்காரர்களுக்கு இதன் அருமையும் பெருமையும் எங்கே தெரியப் போகிறது?

கபிர்தாசரின் நூறு பாடல்களேத் தேர்ந்தெடுத்து ரவீந்திரநாத் தாகூர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக் கிறார். அதுபோல, தேவாரம், திரு வாசகம், திருவாய்மொழி, தாயு மானவர் பாடல்கள், திருஅருட்பா, சித்தர் பாடல்கள் எல்லாவற்றிலும் சிறந்த பாடல்களேத் தேர்ந்தெடுத்து அவற்றின் ஆற்றலும், கவிதை நய மும், பாவமும் தோன்றும்படி ஆங்கி லத்தில் மொழிபெயர்த்துக் கொடுக் கத் தமிழ் நாட்டுப் பல்கலேக் கழகங் கள் ஏற்பாடு செய்ய வேண் டும்.

தமிழ் நாட்டில் பெரும் சித்தராக விளங்கியவர் திருமூலர். அவர் மரபில் வந்தவர் மௌன குரு தேசிகர் என்ற ஞானயோகி. தாயுமானவர் மவுன குரு தேசிகரைக் குருவாகக் கொண்டு அவரிடம் உபதேசம் பெற்றவர்.

தாயுமானவர் தோற்றத்திலும் மிக அழகுடன் விளங்கியவர். அவருடைய

கம்பீரமான மேதாவிலாசத்தைப் பார்த்து வியந்து தம் அரசியல் பெருங்கணக்கராக நாயக்க மன்னன் நியமித்தான் என்று வரலாறு கூறுகிறது. தாயுமானவர் சிறிது காலம் இல்லற வாழ்வையும் மேற்கொண்டிருந்தார். அவர் மனைவியின் பெயர் மட்டுவார் குழலி. அவருக்குக் கணகசபாபதி என்ற ஒரு புதல்வரும் இருந்தார். கணகசபாபதி பிறந்த லெ காலத்துக்கெல்லாம் மட்டுவார் குழலி காலமாகிவிட்டார். தம் மனைவி மறைந்தபின் திரும்பவும் இல்லறத்தில் தாயுமானவர் ஈடுபடாது துறவறத்தை மேற்கொண்டார்.

திருச்சிக்கு அடுத்துள்ள விராலி மலையில் அந்த நாளில் ஏராளமான சித்தர்கள் இருந்தார்கள். அவர்களுடன் சிலகாலம் தாயுமானவர் தங்கியிருந்து பல சித்துக்களும் கைவரப் பெற்றிருக்கிறார்.

பரமபோகினியும், உண்மை ஞானிகளையும், ஜீவன் முத்தர்களையும், சமரச ஞான வித்தகர்களையும் போற்றி வந்த தாயுமானவர் 'சதாசிவப் பிரம்மம்' என்ற மௌன யோகியைத் சந்தித்ததாகச் சொல்வார்கள். இந்தச் சந்திப்புக்குப் பின் தாயுமானவர் வேதாந்த சித்தாந்த சமரச நிலையை மேலும் உறுதிப் படுத்திக் கொண்டார் என்றும் கூறுவர். அவர் துறவறத்தை மேற் கொண்டதலும் நாட்டையும் நாட்டு மக்களையும் மறக்க வில்லை.

1762-ஆம் ஆண்டு இராமேசுவரம் தீவு போர்த்துக்கியர் வசமாகிவிட்டது. இராமேசுவரம் கோபுரத்தில் போர்த்துக்கியர் கொடி பறந்தது. மறவர்களுக்குள் ஒற்றுமை இல்லை. இதைப் போர்த்துக்கியர் நன்கு பயன்படுத்திக் கொண்டனர்.

பல மறவர் தலைவர்கள் தாயுமானவரிடம் வந்து தஞ்சம் அடைந்தனர். தாயுமானவர் மறவர்களை எல்லாம் ஒன்று திரட்டினார். அவர்களுக்குள் ஒற்றுமையை ஏற்படுத்தினார். முப்பு தாயிரம் மறவர் படை வீரர்களைத் தயார் செய்தார். இந்த மறவர் படைக்கு ஒரு சிற்றரசனுக்கு விளங்கிய ரகுநாத சேதுபதியைத் தாயுமானவர் தளபதியாக நியமித்தார்.

ரகுநாத சேதுபதியின் தலைமையில் முப்பதாயிரம் படைவீரர்கள் ராமேசுவரம் தீவைப் போர்த்துக்கியரிடமிருந்து மீட்கப் புறப்பட்டனர். மறவர் படையைத் தயார் செய்து அனுப்பி விட்டுத் தாம் மட்டும் தனியாக இராமேசுவரம் சென்றார்.

போர் இன்றியே இராமேசுவரம் தீவை மட்டும் பணியில் ஈடுபட்டார். கிறித்துவ சமயத் தலைவர்களான பாதிரிமார்களை அழைத்து நிலைமையை விளக்கிக் கூறினார். இராமேசுவரத்தி லிருந்து போர்த்துக்கியர் காலி செய்ய வேண்டும் என்று கட்டளை யிட்டார். பாதிரிமார்கள் தாயுமானவரின் ஆணைக்குப் பணிந்தனர். ஆனால் போர்த்துக்கியப் படைத் தலைவன் தன் படையையும், தன் கடற்படையையும் அதன் ஆற்றலையும் எண்ணி மயங்கினான்.

தாயுமானவர் போருக்குத் தயாரானார். போர்த்துக்கியனின் கடற் படைக்கு எதிராக டச்சுக் கடற் படையுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு மறவர் படையையும் இணைத்துப் போர் முரசு கொட்டினார்.

போர்த்துக்கியப் படைத்தலைவர்கள் இராமேசுவரம் நீவுகளிலிருந்து வெளியேறினர். ரகுநாத சேது பதியை இராமேசுவரம் நீவைப் பாதுகாக்கும் தளபதியாக நியமித்தார் தாயுமானவர். மறவர்குடி மக்கள் ரகுநாத சேதுபதியைத் தலைவராக ஏற்றுக் கொண்டனர். அதற்கு வேண்டிய சட்டதிட்டங்களையும் தாயுமானவர் உருவாக்கிக் கொடுத்தார். அந்தச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு நடக்கும்படி ரகுநாதசேது பதிக்குக் கட்டளையிட்டுவிட்டு தாயுமானவர் மீண்டும் ஆன்மிக வாழ்வில் ஈடுபட்டார்.

ராமநாதபுரத்தில் புறநகர மாயில லட்சுமிபுரம் என்ற ஊருக்குச் சென்றார்.

அவர் தம் கடைசிக் காலத்தில் லட்சுமிபுரம் என்ற இந்த ஊரிலேயே தங்கி இருந்தார். அந்த ஊரில் இருந்த ஒரு நந்தவனத்தின் புளிய மரத்துக்கு அடியில் பரமானந்த நிட்டையில் இருந்தார் என்று தாயுமானவர் வரலாற்றை எழுதியிருக்கும் நூலாசிரியர்கள் கூறியிருக்கிறார்கள். அவருடைய திருமேனி அங்கேயே சமாதியானது என்றும் தெரிவிக்கிறார்கள்.

தாயுமானவருடைய குருநாதர் திருமூலர் மரபில் வந்தவர். அதனால் தாயுமானவர் திருமந்திரத்தையே தம் ஞான யோகத்தின் வழிகாட்டியாகக் கொண்டார் என்பதை அவர் பாடல்களிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது.

தாயுமானவர் திருமந்திரத்தை, 'மந்திர மாலிகை' என்று குறிப்பிடுகிறார். ''திருமந்திரத்தைத் தமிழ் அறிஞர்கள், தாம் கற்ற இலக்கண இலக்கிய ஞானத்தைக் கொண்டு மட்டும் புரிந்துகொள்ள முடியாது. இந்த நூலில் வரும் பரிபாஷைகளைத் தெரிந்து கொள்வதற்குச் சம்ஸ்கிருத மொழியின் ஞானமும் வேண்டும். யோக நூல்களில் பயிற்சியும் ஞான



''இடது கையில் இருக்கிறது மணிவி தந்த மிக்சர், வலக் கையிலே டாக்டர் கொடுத்த மிக்சர் இருக்கு! எதை முதல்லே சாப்பிடலாம், மாமா?''

மும் வேண்டும். ஞானயோகிகளின் உதவியும் வேண்டும்'' என்று தாயுமானவரே தம் பாடல்களில் சொல்கிறார்.

''திருமூலர் காட்டும் வழியில் உடம்பைப் பரிசுத்தம் செய்து கொள்வது யோக நெறிக்கு அவசியம். இறைவனின் திருவருளையும், ஞான குருவின் துணையையும் கொண்டதான் இந்த நெறியில் வெற்றிபெற முடியும்'' என்கிறார் தாயுமானவர். வெற்றி என்பது சுத்த அத்வைதம் என்கிற சமரச சன்மார்க்க வெற்றிதான்.

தாயுமானவரின் பாடல்களிலே மனத்தைப் பண்படுத்தும் வார்த்தை களையும் காணலாம்; மோனத்தையும் காணலாம்; செயல்களையும் காணலாம்; செயல் அற்ற உள்ளீயே இன் புற்றுக்கொண்டு 'சும்மா' இருக்கின்ற நிலையையும் இறைவனை அநுபவித்துக் கொண்டு இருக்கிற நிலையையும் காணலாம்; நியானத்தையும் காணலாம்; அமைதியையும் காணலாம்; ஆனந்தக் களிப்பையும் காணலாம்.

தாயுமானவர் பாடல்களிலே அவர் தெய்வ வாழ்க்கை வாழும் பரம ஞானியாகவே காணப்படுகிறார். உலகத்துடன் ஒன்றுகுவும் வேருகவும் வாழ்ந்து அருள் ஒளி பரப்ப முயலும் அருளாளராகத் தோன்றுகிறார்.

அலுதாபத்துடனும் இரக்கத்துடனும் உலக நிகழ்ச்சிகளைக் காணும் கருணை நிதயம் படைத்தவராக விளங்குகிறார். எத்தகைய பயங்கர நிகழ்ச்சிகளாலும், குழப்பங்களாலும், கொலை வெறிகளாலும் சிறிதும் கலக்கம் அடையாத வித்தகச் சித்தராகவும் காட்சி தருகிறார்.

தாயுமானவர் வாழ்ந்த காலத்தில் ஐரோப்பியர்கள் கடல் கடந்து தமிழ் நாட்டுக்கு வந்தார்கள். வியாபாரம் செய்தார்கள். பிறகு அரசைக் கைப் பற்றி ஆதிக்கம் செலுத்தவும் முயன் றார்கள். இதைத் தாயுமானவர்,

''ஆசைக்கோர் அளவில்லே;
அதிலும் எல்லாம் கட்டி
ஆளினும் கடல் மீதிலே
ஆணை செலவே நினைவர்''

என்று சொல்கிறார். இதில் வரலாற்றுச் செய்தியும் ஞானயோகச் செய்தியும் பிணைந்து கிடப்பதைக் காணலாம்.

வேதாந்தம் என்றால் வேதத்தின் முடிவு. வேதாந்தம் என்றல் அறிவின் சிறந்த முடிவுகள் நிறைந்தது என்று பொருள். சித்தாந்தம் என்றாலும் அறிவின் முடிவு என்றுதான் பொருள்.

இப்போது வேதாந்தம் என்பது ஒரு தனித் தத்துவமாக விளங்கு கிறது. சித்தாந்தம் என்பதும் தனித் தத்துவமாக விளங்குகிறது. ஆதி சங்கரரை வேதாந்த தத்துவத்தின் போதக ஆசிரியர் என்று போற்று கிறார்கள். மெய்கண்டாரைச் சித்தாந்தத்தின் தலிவர் என்று வாழ்த்து கிறார்கள்.

வேதவியாசர் இயற்றிய பிரம்ம சூத்திரம் வேதாந்தத்துக்குத் தாய் நூல். மெய்கண்டார் இயற்றிய சிவஞானபோதம் சித்தாந்தத்துக்குத் தாய் நூல். சிவஞான போதத்தின் வழிவந்த தத்துவந்தான் சைவ சித்

தாந்தம். ராமானுஜர், வேதாந்த தேசிகர் இவர்களின் வழிவந்த தத்துவத்தை உபயவேதாந்தம் என்று போற்றுவார்கள்.

இவ்வாறு தத்துவங்கள் தனித் தனிப் பெயர்களுடன் விளங்கினாலும் எல்லாவற்றின் முடிவுக் ஒன்றுதான் என்பது ஞானயோகிகளின் கருத்தாகும். அந்த நாளில் பலவகையான மதத் தத்துவங்களை வைத்துக் கொண்டு அறிவுள்ளவர்கள் தங்களுக்குள்ளேயே சண்டை போட்டுக் கொண்டனர். இந்தத் தத்துவச் சண்டைகள் காரணமாக அன்பையும் அறிவையும் கருணையையும் வளர்ப்பதற்குத் தோன்றிய மதங்கள், ஆத்திரத்தையும், வெறுப்பையும் மக்களிடையே பரப்பத் தொடங்கிவிட்டன.

இந்த நிலையைக் கண்ட தாயுமானவர் வேதாந்தத்தையும், சித்தாந்தத்தையும் சமரசப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார்.

"இறைவன் ஒருவனே! அவன் எங்கும் நிறைந்தவன்; அவன் இத்தகையவன் என்று எழுதிக் காட்ட முடியாதவன். அவன் ஆண் அல்ல. அவன் பெண் அல்ல. அவன் நிறம் என்ன, அவன் உருவம் என்ன என்று கூற முடியாது!" என்று போதித்தார்.

சமரச ஞானத்தை அறைகூவி அழைப்பதைப் போல எடுத்த ஒப்புமை யே,

"அங்கு இங்கு எனதபடி
எங்கும் பிரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்தது எது?"

என்று கேட்டு, அதுதான் இறைவன் என்கிறார். இறைவன் எங்கும் இருக்கிறார். ஒளிமயமாக இருக்கிறார். இந்த இறை ஒளியை ஆனந்த ஒளி என்கிறார். அரை குறை ஆனந்தம் அல்ல; ஆனந்த பூர்த்தி என்கிறார்.

எங்கும் உள்ள பரம்பொருளை, 'என்றைக்கும் உள்ளது' என்கிறார்; 'அது கருத்துக்கு நிசைந்தது' என்று அஞ்சலி செய்கிறார்.

தாயுமானவருக்கு இறைவன் சித் தாந்தப் பெரொளியாகவும், வேதாந்தப் பெருவிளக்காகவும் தோன்று கிறான். இறைவனோ 'பெரிய பொருள்' என்கிறார். மலரில் மணம் போல, எள்ளில் எண்ணெய்போல, உடலில் உயிர் போல அமர்ந்திருக்கும் இறைவனைக் 'கற்பனை கடந்த செல்வம்' என்கிறார்.

இறைவனின் திரு அருளால் தமக்குப் பற்றற்ற நிலை கிடைத்தது என்கிறார். அன்பு நெறிகாட்டி, ஞானத்தில் நிலையாக நிற்கும் நிலையைத் தமக்கு அளித்ததும் இறை அருள் என்கிறார். வேதாந்த சித்தாந்த ஒருமைப்பாட்டை உணர்த் தியதும் திரு அருளே என்கிறார்.

"தந்தது உன் தன்னைக்
கொண்டது என்தன்னை"

என்று மாணிக்கவாசகர் கூறியிருக் கும் அநுபவம் தமக்கும் கிடைத்த தாகக் கூறுகிறார். 'தன்னைத் தந்து என்னைத் தடுத்து ஆண்ட' பெருங் கருணையை வியாரர, மனமார வாழ்த்துகிறார். இவர் தம் கொள் கையைப் 'புனிதமெனும் அத்து விதம்' என்கிறார். தாயுமானவருக் குச் சித்தாந்தம் வேறு, வேதாந்தம் வேறு என்பதில்லை.

தென்முகமாக எழுந்திருக்கும் கோலத்தான் தட்சிணமூர்த்தித் திருக் கோலம். இதை ஞான யோக நெறி யின் திருக்கோலம் என்பார்கள். ஞான ஆனந்தங்களே அருளவல்ல கோலம் தாங்கியவரைச் 'சின் மயானந்த குரு' என்கிறார் தாயுமான வர்.

இந்த மூர்த்தி பிரபஞ்சத்தை வகுத்து, உயிர்கள் எல்லாவற்றையும் வகுத்து, நல்லறிவையும், வேதம் முதலான நூல்களையும் படைத்து, பல்வேறு சமயங்களையும் வகுத்தளித் தவர் என்கிறார் தாயுமானவர்:

"சைவ முதல்ஆம் அளவில்
சமயமும் வகுத்து, மேல்
சமயம் கடந்த மோன
சமரசம் வகுத்த நீ!"

என்று சமய சமரச நிலையையும் விளக்குகிறார். இறைவன் அருளுப் பரிபூரணமாகப் பெற்றவர்களுக்கு, சாவு இடையாது என்பதைத் தாயு மானவர் வலியுறுத்துகிறார்.

இறைவனின் அருளை எப்படிப் பெறுவது? "மற்ற உயிர்களிடம் நாம் காட்டும் கருணையிலும் பேரு ளாம். சான்றோர்களுக்குப் பணி செய்வதன் மூலமாகப் பெறலாம்" என்கிறார். அத்தகைய சான்றோர் களுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்றும் துடிதுடிக்கிறார். அதே நேரத்தில் வஞ்சகர்கள் நட்பை கூடாது என்றும் வன்மையாகக் கண்டிக்கிறார்.

"நல்ல பேச்சாற்றல் உள்ளவர் களாக இருக்கலாம். எல்லாரும் வியக் கும்படி ஆயிரக்கணக்கான அறிவுரை கூறி அள்ளி வீசக் கூடியவர்களாக இருக்கலாம். எவ்வளவு கல்வித் திறமை உடையவர்களாக இருந் தாலும் அவர்களுக்கு இறைநம்பிக்கை இல்லை என்றால், இயற்கை உண் மையை உணராதவர்களாக இருந் தால், இரக்கமும் அன்பும் அற்றவர்க ளாக இருந்தால், அவர்களைக் கொடிய வர்கள் என்றே சொல்ல வேண்டும்.

"அவர்கள் மனத்தில் ஒன்றும், வாயில் ஒன்றும் பேசும் வஞ்சக நெஞ்சத்தவர் ஆவார்கள். அவர்கள் எல்லாக் கல்விகளையும் கற்றிருந் தாலும் செல்வங்களைப் பெற்றிருந் தாலும் அத்தகையவர்களுடன் சேரக்கூடாது" என்கிறார்.

"ஆயிரம் சொன்னாலும் அயிரந வஞ்ச நெஞ்சப் பேயரோடு கூடிற் பிழைகான பராபரமே!" என்ற கண்ணியின் முலமாக மக்களுக்கு எச்சரிக்கை விடுகிறார் தாயுமானவர்.

உயர்ந்த பண்பு படைத்த மனிதர் கள் எப்படியிருப்பார்கள்? அவர்கள் மனப்பான்மை எப்படி இருக்கும்? இதற்கும் விளக்கம் சொல்கிறார் தாயுமானவர்.

எல்லா உயிர்களிடமும் பேதம் இல்லாமல் இருப்பதுதான் மனிதத் தன்மை. எந்த உயிர் துன்பம் அடைந் தாலும், அந்தத் துன்பத்திலிருந்து அந்த உயிரை விடுவிக்க முயல்வதே இறை உணர்வு. எந்த உயிரையும் தம் உயிர்போல் எண்ணுவதே தயவு உடையவர்கள் தன்மை.

"அறிஞர்கள், அன்புடையவர் கள், தன்மை அடைய விரும்புகிற வர்கள், இத்தகைய குணம் உள்ளவர் களுடன்தான் சேர்ந்திருக்க விரும்பு வார்கள். இதுவே உயர்ந்த பண் பாடு" என்று அழுத்தமாகக் கூறு கிறார்.

"என் லட்சியம் ஒன்றுதான். இவ் வுலகில் உள்ள எல்லாரும் இன்பத்து டன் வாழவேண்டும். எந்த மதத்த வராக இருந்தாலும், எந்தச் சாதியின ராக இருந்தாலும், எந்த மொழி பேசுபவராக இருந்தாலும், எந்த நாட்டைச் சேர்ந்தவராக இருந் தாலும் அவர்கள் எல்லாரும் இன் பத்துடன் வாழவேண்டும். இந்த நோக்கத்தை நிறைவேற்றவே நான் உழைத்துக் கொண்டிருக்கிறேன்.

"மக்களுக்குள் இருக்கும் வேற்று றுமை உணர்ச்சி ஒழிய வேண்டும். எல்லாரும் ஒன்றுபடவேண்டும். அவர் கள் பயம் இல்லாமல் வாழ வேண்டும். இதுதான் என் முடிவான, தீர்மான மான லட்சியம். இதைத் தவிர எனக்கு வேறு எந்தக் குறிக்கோளும் இல்லை. வேறு ஒன்றைப்பற்றியும் நான் நினைக்கமாட்டேன்" என்று கூறுகிறார் தாயுமானவர்.

இதையே, "எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பவரே அல்லாமல் வேறு ஒன்று அறியேன் பராபரமே!" என்ற கண்ணியில் காணலாம். இது போன்ற வாழ்க்கைக்கு வழி காட்டும் உயர்ந்த சுருதிகளையே ஆசிரத்து நானூற்று ஐம்பத்து இரண்டு பாடல்களில் பல்வேறு கோணங்களில் தம் அநுபவத்துடன் இசைத்து அற்புதமாகப் பாடியிருக் கிறார்.

தாயுமானவரின் இந்த உயர்ந்த லட்சியத்தை, ஒப்பற்ற குறிக்கோளை, நாம் பின்பற்ற வேண்டும் என்பதற் காகவே தவத்திரு சித்பவானந்த சுவாமிகள் இராமநாதபுரத்தில் அவர் சமாதி அடைந்த இடத்தில் அற்புத மான தாயுமான சுவாமி கோயிலை எழுப்பியிருக்கிறார். தமிழகம் பிறந்த ஒவ்வொருவரும் தரிசித்துப் பயன் அடைய வேண்டிய திருக்கோ யில் தாயுமானவர் திருக்கோயில். உலக உயிர்களுக்கு எல்லாம் தாயாக இருக்கிறார் தாயுமானவர். இவ்வாறு இருக்கும் தாயுமானவரைப்பற்றி மகாகவி பாரதியார் பாடுவதைக் கேளுங்கள்:

"என்றும் இருக்க எம்மைகொள் தாய்; இன்பத் தமிழுக்கு இலக்கி மாய் இன்றும்இருத்தல் செய்கின்றாய்: இறவாய் தமிழோடு இருப்பாய்நீ நின்ற பரத்து மாதி நிரமோ? நில்லா இருத்தும் நிறப்பாய் நீ, ஒன்று பொருள் அஃது இன்பம் என உணர்ந் தாய் தாயுமானவனே!" ✻

பன்னிரு ஜோதிர்லிங்கம்

ஸோமநாதம் :

இந்த ஜோதிர் லிங்கத் தலம் மிகவும் புராதனமானது; முதலில் இந்தக் கோயில் தங்கத்தினும், பிறகு வெள்ளியினும் கட்டப்பட்டிருந்ததாக வரலாறு கூறுகிறது. இதன் (செல்வச் செழிப்பைக் கண்ட முஸ்லிம்கள் பலமுறை இந்தக் கோயிலைச் சூறையாடி அழித்திருக்கின்றனர். இப்போதைய அமைப்பு 1951-இல்தான் ஏற்பட்டது. சூஜராத் மாநிலத்தில் வீரவல் ரெயில் நிலையத்திலிருந்து மூன்று மைலோ மீட்டர் தொலைவிலுள்ள பிரபாஸ பட்டணத்தில் இந்தக் கோயில் அமைந்திருக்கிறது. தேவ பட்டணம் என்றும் இதை அழைப்பார்கள்.

இந்தத் தலத்தைப்பற்றி ஸ்காந்தபுராணத்தில், பிரபாஸ காண்டம் என்ற பகுதியில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ரிக்வேதம், ஒன்பதாம் மண்டலத்தின் இறுதியில் இந்தத் தலம் சிறப்பித்துக் கூறப்பட்டிருக்கிறது.

தக்ஷனின் அசுவினி முதலிய இருபத்தேழு பெண்களையும் சந்திரன் மணந்தான். ஆனால் ரோஹிணியிடம் மட்டும் விசேஷ அன்பு பாராட்டினான். தங்களை அலட்சியம் செய்வதைப் பொறுக்காத மற்றப் பெண்கள் தங்களை நந்தையான தக்ஷனிடம் போய் முறையிட்டனர். சந்திரன் மனோவியரிடையே அன்பு பாராட்டுவதில் பாரபட்சம் காட்டுவதை அறிந்த தக்ஷன் மிகவும் கோபம் அடைந்தான். தன் மருமகனை சந்திரனைக் கண்டு, 'நீ நல்ல குலத்தில் பிறந்தவன். மனோவியர் அனைவரையும் ஒரேமாதிரி நடத்துவதுதான் தர்மம்'' என்று சொல்லிப் பார்த்தான். மாமனாரின் வார்த்தையை அலட்சியம் செய்தான் சந்திரன். அதனால், கோபம் கொண்ட தக்ஷன், ''சந்திரா, என் வார்த்தையைக் கேட்கவில்லை. உன் கலைகள் நாளடைவில் தேய்ந்து குறைந்து போவாயாக!'' என்று சாபம் இட்டுவிட்டான்.

சந்திரன் வெலவெலத்துப் போய் உடனே முனிவர், பிரமதேவன் எல்லாரிடமும் முறையிட்டான். 'முன்பு குருபத்தினியிடம் தகாத முறையில் நடந்துகொண்ட சந்திரனுக்கு இந்தத் தண்டனை வேண்டியதுதான்' என்று எண்ணினாலும், அவன் படும் வேதனை தாங்காமல் பிரபாஸ பட்டணம் போய், அங்கு ஒரு தீர்த்தத்தை உருவாக்கி, பார்த்திப லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து ஆறுமாதம் பூஜை செய்யும்படி அவர்கள் யோசனை கூறினர்கள். சந்திரன் அப்படியே செய்தான். மிருத்யுஞ்சய மந்திரத்தைப் பத்துக் கோடி முறை உருவேற்றினான்.

சிவபெருமான் அவன்முன் தோன்றி அபயம் அளித்தார். ''தக்ஷன் அளித்த சாபத்திலிருந்து முழுதும் காக்க முடியாது. பாதிநாள் தேய்ந்தும் பாதிநாள் வளர்ந்தும் வருவாயாக!'' என்று வரம் அருளினர். சந்திரன் பூஜித்த லிங்கமானதால் ஸோமநாதர் என்ற திருநாமம் ஏற்பட்டது.

ஸோமவார (திங்கட்கிழமை) அமாவாசையில் இந்த லிங்கத்தைத் தரிசிப்பது சிறப்பாகும். சந்திரன் நிருமாணித்த சந்திரகுண்டம் என்ற தீர்த்தம் சகல பாவங்களையும் ரோகங்களையும் போக்க வல்லது.

ஸ்ரீசைலம் :

சீமயகுரவர்கள் மூவர்களும் பாடிய புண்ணியத் தலம் இது. தேவாரப் பாடல்களில் இத்தத் தலம் திருப்பருப்பதம் என்று குறிக்கப் பெற்றிருக்கிறது. சைலாதி என்ற நந்திதேவர் சிவனே வழிபட்டு உய்ந்த தலம். அதனால் தான் நந்திதேவரே பர்வத வடிவில் உருக் கொண்டு சிவபெருமானேத் தாங்கிக்கொண்டு படுப்பதாக ஐதிகம். நந்தியால் ரெயில் நிலையத்திலிருந்து 73 மைல் தொலைவில் இத்தத் தலம் இருக்கிறது.

இந்தத் தலத்தின் சிறப்பை மகாபாரதத்தில் காணலாம்.

சிவபெருமானும் பார்வதியும், தங்கள் குமாரர்களுடன் உரையாடிக் கொண்டு அமர்ந்திருந்தனர். வாவிப் பருவத்தை அடைந்த தன் பிள்ளைகளுக்கு மணம் முடிக்க வேண்டும் என்ற விருப்பத்தை அம்பிகை சிவபிரானிடம் கூறினள். தாய் கூறியதைக் கேட்ட முருகப் பெருமானும் விநாயகரும், திருமண விஷயத்திலும் போட்டியிடத் தொடங்கினர். விநாயகர், ''நான்தான் பெரியவன், எனக்கே முதலில் திருமணம் செய்விக்க வேண்டும்'' என்றார். முருகப் பெருமானும் தமக்கே முதலில் மணமுடிக்க வேண்டும் என்று முரண் செய்தான்.

இந்தப் போட்டியைத் தவிர்க்க, சிவபெருமான் ஒரு யோசனை செய்தார். யார் முதலில் இந்த உலகத்தைச் சுற்றி வருகிறார்களோ, அவர்களுக்கே முதலில் மணம் முடிப்பதாகக் கூறினர். முன்பே ஒரு முறை ஏமாந்த முருகப்பெருமான் மயில்மேல் ஏறிப் பறந்தார். விநாயகர், தம் பெற்றோரை ஏழுமுறை வலம் வந்து, சாஸ்திரங்களில் கூறியபடி, உலகத்தைச் சுற்றி வந்துவிட்டதாகக் கூறினர்.

மூத்த பிள்ளையின் சாதுர்யத்தை வியந்த பெருமான், சித்தி, புத்தி என்ற இரு பெண்களை மணம் செய்து வைத்தார். நாரதர் மூலம் இதையறிந்து சினந்த முருகப்பெருமான், கிரௌஞ்ச மலையில் கோயில் கொண்டு விடுகிறார்.


கோபம் கொண்ட இரண்டாவது மகனைச் சாந்தப்படுத்த பார்வதியும், பரமவினும் அவனை நாடிச் செல்கிறார்கள். முருகன், தாய் தந்தையரைக் காணப் பிடிக்காமல் வேறு இடத்துக்குப் புறப்படுகிறான். 'பெற்றோர்களிடம் சினந்து இப்படி வேறிடம் போகக்கூடாது' என்று தேவர்கள் முருகனிடம் வேண்டிக் கொண்டனர். அதனல் கிரௌஞ்ச மலையிலிருந்து மூன்று மைல் தொலைவில் குமரன் கோயில் கொண்டான். பார்வதி பரமேசுவரர் தங்கி அருள்பாலித்த தலம் ஸ்ரீசைலம். இங்கே சிவபெருமான் மல்லிகார்ஜுனர் என்ற திருநாமத்துடன் ஜோதிர்லிங்கமாக விளங்கி அருள்பாலித்து வருகிறார்.

சந்திரருப்த மன்னனுக்குச் சத்தியவதி என்ற அரசகுமாரி இருந்தாள். அவள் ஸ்ரீசைலத்தில் தங்கியிருந்த போது, அவளிடம் இருந்த பசுக்கள், மாலேயில் தொழுவத்தில் வந்தபும் பால் சுரப்பில்லே. அந்தப் பசுக்கள் மேய்ப் போகும்போது ஒரு லிங்கத்தின்மேல் பால் சொரிவின்றன என்பதை அறிந்தாள். லிங்க உருவில் இருந்த பெருமான், அவள் கனவில் தோன்றி, தம்மைப் பூஜிக்கும்படி அருளினர். நாள் தவறுமல் மல்லிக மலர்களைக் கொண்டு அந்த லிங்கத்தை அரசகுமாரி பூஜித்தாள். அதனல் அந்த லிங்கத்துக்கு மல்லிகார்ஜுனர் என்ற பெயர் நிலவுவதாகவும் ஒரு வரலாறு உள்ளது.

வேடனாக வந்த சிவபெருமான் செஞ்சு மரபைச் சேர்ந்த அழகிய யுவதியை மணந்தார் என்ற வரலாறும் இருக்கிறது. அதனல் இறைவனைச் செஞ்சுலக்ஷ்மா என்றும் அழைக்கின்றனர்.

அம்பாளின் திருநாமம் பிரமராம்பிகை, பாதாள கங்கையில் மூழ்கி, இந்த ஜோதிர் லிங்கத்தைப் பக்தர்கள் தாமே பூஜித்து வழிபடலாம். ஸ்ரீசங்கர பகவத்பாதர் சிவானந்த லஹரியில் மல்லிகார்ஜுனனையும் (கி. பி. 50), பிரமராம்பாஷ்டகம் என்ற துதியில் அம்பிகையையும் துதித்திருக்கிறார். இந்தத் தலமூர்த்தியைத் தரிசித்தால் பிறவித் தீனை அறும்.

சோமநாதம்





ஸ்ரீசைலம்

உஜ்ஜைனி

ஏழு மோட்ச நகரங்களில் இதுவும் ஒன்று. அயோத்தி, மதுரா, ஹரித்வாரம், காசி, காஞ்சி, அவந்திகை, துவாரகை என்பன அவை. சுதன்வா என்ற ஜைன அரசன்தான், அவந்திகை என்ற இந்த நகரத்துக்கு உஜ்ஜைனி என்று பெயரிட்டான். கார்த்திகைமாதப் பௌர்ணமி இங்கே சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அந்தச் சமயத்தில் கவி காளிதாசரின் நினைவு விழாவும் நடக்கிறது.

இந்த நகரத்தின் அருகில், நிணமுக்தேசுவரர், மங்களேசுவரர், பரசுகணபதிக் கோயில், கண்ணனின் குருவான ஸாந்தீபனி முனிவரின் ஆசிரமம், பார்திருஹரியின் குகை முதலியன காணவேண்டிய முக்கிய இடங்கள். சிப்ரா நதிக்கரை இயற்கை எழில் மிகுந்தது. ஜயவிம்ஹன் நிறுவிய வான ஆராய்ச்சி நிலையம் உள்ளது.

ஏரியின் அருகில் அமைந்துள்ள இந்த ஆலயம் ஐந்து அடுக்குகளைக் கொண்டது. அதில் ஒரு தளம் பூமி மட்டத்துக்குக் கீழே இருக்கிறது. ரெயில் நிலையத்திலிருந்து கோயில் சுமார் இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. போபாலிலிருந்தும் போகலாம்.

மகாகாளர் என்ற ஜோதிர்லிங்கத்தைப் பற்றிச் சிவபுராணத்தில் கூறியுள்ள கதை இது:

அவந்திமாநகரில் வேதப்பிரியன் என்ற அந்தணன் இருந்தான்; சிறந்த சிவபக்தன். அவனுக்கு நான்கு பிள்ளைகள். இரத்தினமாலே என்ற மலேயில் வாழ்ந்த தூஷணன் என்ற அரக்கன், இந்த நகரைச் சூரையாடி, மக்களைத் துன்புறுத்தினான். குடிகள் வேதப்பிரியனை அணுகி, தங்களைக் காக்கும்படி வேண்டினர்.

சிவலிங்கம் பிடித்து வைத்து அன்றுடம் பூசை செய்வது அந்தனர் வழக்கம். ஒரு நாள் அவர் அப்படிச் செய்யத் தொடங்கியபோது, அந்த அரக்கன் வந்து, பூஜைப் பொருள்களைத் தூக்கி எறிந்து, சிவலிங்கத்தையும் அழித்தான். அந்தக் கணத்தில் பெருத்த சப்தம் எழுந்தது. எல்லாரும் திடுக்கிட்டனர். அந்த லிங்கத்திலிருந்து வெடித்துப் பிளந்து கொண்டு மகாகாளர் தோன்றி, தூஷணனை அழித்தார். அரக்கன் அழிந்த மகிழ்ச்சியில் மக்கள், மகாகாளரை அங்கே தங்கித் தங்களைக் காக்கும்படி வேண்டினர். பக்தர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி, மகாகாளர் லிங்க உருவில் ஆவிர்ப்பவித்தார்.

தேவகிக்கு எட்டாவது குழந்தையாகப் பிறந்த கண்ணனே யசோதையின் வீட்டில் விட்டு, அங்கே பிறந்திருந்த பெண்ணை வசுதேவர் தூக்கிவந்தார் அல்லவா? அந்தப் பெண்ணைக் கம்சன் விண்ணில் தூக்கி எறிந்து வாளால் வெட்டப் போனான். ஆனால் அந்தக் குழந்தை காளி உருக்கொண்டு இங்கே தங்கிவிட்டதாக்வும் ஒரு வரலாறு கூறுகிறது. காளிதாசருக்கு அருள் புரிந்த காளி மாதா இவள்தான்.

ஒரு தடவை பூரித்த பொருள்களை நிர்மால்யம் என்பார்கள். நிர்மால்யத்தைக் களைந்து புதிதாக அலங்கரிப்பது மரபு. ஆனால், இந்த வழக்கத்தை இந்த ஜோதிர்லிங்கத்தைப் பொறுத்தவரை அநுஷ்டிப்பதில்லை. பிரசாதத்தையும், வில்வம் போன்ற தளிர்களையும் மீண்டும் உபயோகிப்பது வழக்கமாக இருக்கிறது. மகாகாளவனம் என்று இத்தத் தலத்தை ஸ்கந்தபுராணம் கூறுகிறது. 'பெர்ரா நதி புண்ணிய தீர்த்தங்களில் மிகவும் முக்கியமானது' என்று அக்கினி புராணம் குறிக்கிறது. இந்த நதியில் மூழ்கி மகாகாளரை வணங்கி, காளி தரிசனம் செய்தால், கல்வியும் அறிவும் பெருகும், அசர குணம் மறையும் என்பது அநுபவ உண்மை.

ஓங்காரம்

மாளவத்தில் நர்மதை நதிக்கரையில் அமைந்திருக்கிறது இந்தத் தலம். இக்ஷ்வாகு மன்னர் பரம்பரையில் தோன்றியவரும், தம்முடைய ஐம்பது பெண்களை ஸௌபரி முனிவருக்கு மணம் செய்து கொடுத்தவரும், மாந்தாதா என்ற பெயர் உடையவருமாகிய மாமன்னர் இங்கு ஆட்சி செலுத்தியதால் மாந்தாதா என்றும் இத்தத் தலம் அழைக்கப்படுகிறது. ஓங்காரேசுவரர் திருக்கோயிலில் மாந்தாதாவின் விக்கிரகமும் உள்ளது; பூஜையும் நடக்கிறது.

நர்மதை இந்தத் தலத்தருகில் இரண்டாகப் பிரிந்து மீண்டும் கூடுகிறது, ஸ்ரீரங்கம் போல். ஓங்காரேசுவரர் திருக்கோயில் மலேமேல் அமைந்திருக்கிறது.

படலில் ஆற்றைக் கடந்து ஆலயத்துக்குச் செல்ல வேண்டும். கார்த்திகைப் பௌர்ணமி இங்கும் விசேஷம். படலில் போகும்போதே ஆலயத்தின் கும்பிர்யம் நம்மைக் கவரும்.

உஜ்ஜைனி காண்ட்வா ரெயில் பாதையில் உள்ள மோர்க்கூட ரெயில் நிலையத்திலிருந்து பத்து மைலில் இந்தத் தலம் உள்ளது. பல் வசதியும் இருக்கிறது.

பஞ்சமுக கணபதி கோயில் இங்கே விசேஷமானது. வைரீய மணிபர்வதம் என்ற குன்றின்மேல் கௌரி ஸோமநாதர் ஆலயம் உள்ளது. இந்த ஸோமநாதரின் உயரம் ஐந்து அடி இருக்குமாம்.

கோகர்ணம் (பசுவுடைய காது) என்ற தலத்திலுள்ள சிவபெருமானே வழிபட்டுவிட்டுத் திரும்பினார் நாரதர். மூலுக சஞ்சாரியான அவர் திரும்பும்போது விந்திய மலேயை அடைந்தார். நாரதரைக் கண்டதும் விந்தியமலே அவரை வணங்கிப் பெருத்த வரவேற்பு அளித்தது. அந்த மலேயின் செயலில், 'தானே மிக உயர்ந்த மலே' என்ற இறுமாப்புக் காணப்பட்டது. அதை உணர்ந்த நாரதர் மட்டந்தட்ட நினைத்தார்.

'ஹே விந்திய மலேயே! உன்னேவிட மேரு மலேதான் மிகவும் உயரமானது, புனிதமானது, தங்கமயமானது. சிவபெருமாவின் அருளால் அதன் மகிமை வளர்ந்து வருகிறது. தேவர்களும் அதை வணங்கிப் போற்றுகிறார்கள்' என்று நாரதர் கூறியதைக் கேட்டதும், விந்திய மலேக்குத் தாங்காத வருத்தம் உண்டாயிற்று.

ஓங்கார ரூபமாய் ஓர் இயந்திரத்தைத் தயாரித்துப் பஞ்சாட்சர உச்சாரணம் செய்து, வெபூஜை செய்யத் தொடங்கியது விந்திமமலே. மனம் மகிழ்ந்த சிவபெருமான், அம்மலே வேண்டியபடியே மேலும் உயர்ந்து வளர வரம் அளித்தார். ஆனால் உயர்வு காரணமாக மீண்டும் விந்தியமலே இறுமாப்புக் கொண்டால், சிவனடியார் ஒருவரால் அடக்கப்படும் என்றும் கூறினர்.

யந்திரத்தில் சுயம்புலிங்க மூர்த்தம் ஒன்றும், விந்தியமலே பூசித்த பார்த்திவலிங்க மூர்த்தம் ஒன்றுமாக, இரண்டு லிங்கங்கள், ஓங்காரநாதர், அமலேசுவரர் என்ற திருநாமங்களில் வழங்கப்படுகின்றன. நர்மதை பிரிந்து கூடும் சங்கமத்தைக் காவேரி என்று அழைக்கிறார்கள். இந்தச் சங்கமத்தில் முழுகி, ஓங்காரரேசுவரரைத் தரிசித்தால் வாழ்வில் எல்லா வளங்களும் பெருகும். நர்மதையின் பிரிவும் சேர்தலும் ஓங்கார வடிவமாக அமைந்துள்ளதே இந்தத் தலத்தின் சிறப்பு.

வைத்தியநாதம்

இந்த ஜோதிர்லிங்கத் தலமென்று பல இடங்களைச் சொல்கிறார்கள்: தென்னாட்டில் ஒன்று, மேற்கு வங்காள, லந்தல் பார்க்காணலில் தேவ்கர் என்ற இடம் மற்றொன்று, பிஹார், மத்தியப் பிரதேசத்தில் உள்ளது ஒன்று; மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. சிவபுராணத்தில் இவ்வாறு காணப்படும், 'வைத்தியநாதம் தொடுமெள' என்ற வாக்கின்படி, பிஹார் மாநிலத்தில் கயைக்குக் கிழக்கே உள்ள தலமே ஜோதிர்லிங்கமாகக் கருதப்படுகிறது, இங்கே வைத்தீசுவரன் கோயிலில் நடப்பது போல், முடியிறக்குதல், மாவிளக்குப் போடுதல் எல்லாம் நடக்கின்றன. பஞ்சாப், குஜராத் மாநிலங்களில்கூட வைத்தியநாதத் தலங்கள் உள்ளன.

தசமுகன் இராவணன், கைலயங்கரியில் உக்கிரகமாகத் தவம் செய்தும் சிவபிரானின் தரிசனம் கிட்டவில்லை. அதனால் கைல மலையின் தென்திசையில் யாகக் குண்டம் அமைத்து, அதன் அருகே பார்த்திவலிங்கப் பிரதிஷ்டை செய்து, அக்கினி வளர்த்து ஹோமம் செய்தான். அப்படியும் சிவபிரான் அருள் கிட்டவில்லை. 'எம்பெருமான் தரிசனம் அளிக்க வேண்டும், இல்லையேல் உயிரைத் தியாகம் செய்வேன்' என்று நீர்மாலித்து, ஒன்பொரு தலையாக அறுத்து, அக்கினியில் ஆகுதி செய்தான். ஒன்பது தலைகளையும் அக்கினியில் இட்டாயிற்று. பத்தாவது சிரத்தை அறுக்கத் தொடங்கியதும் சிவபெருமான் பிரசன்னமானார். இராவணனின் வேண்டுகோள் ஏற்றார்: 'பகைவருக்கு இனிக்காத வலிமையைப் பெறவேண்டும்; அறுந்த தலைகள் மீண்டும் பொருந்தவேண்டும்' என்று வேண்டிக் கொண்டான். அடியாருக்கு எளியரான சிவபெருமான் அப்படியே வரம் தந்து அருளினார்:

கைலை சென்று ஸாமகானம் இசைத்து, எம்பெருமானுக்கு மகிழ்ச்சி ஊட்டி, ஆத்மலிங்கம் ஒன்றைப் பெற்றான் இராவணன். அந்த லிங்கம் மிகப் பெரியதாக இருந்தால், இரண்டு பகுதியாகச் செய்து, காவடியில் வைத்துத் தூக்கிச் சென்றான். போகும்போது பூமியில் எங்கும் வைக்கக்கூடாது என்றும், தவறி வைத்துவிட்டால் அங்கேயே நிலைத்துவிடும் என்றும் இறைவன் எச்சரித்திருந்தார்.

தேவர்கள் திட்டமிட்டபடி, இராவணனுக்கு வழியில் இயற்கை உபாதை ஏற்படவே, அந்தணர்போல் வந்த விநாயகரிடம் அந்தக் காவடியைக் கொடுத்துவிட்டு நகர்ந்து போனான். பஞ்சவைத் தாங்க முடியாத விநாயகர், அந்தக் காவடியைப் பூமியில் வைத்துவிட்டார். திரும்பி வந்த இராவணன் விங்கத்தைப் பெயர்த்து எடுத்துப் போக முடியாமையால், அங்கேயே ஒரு தீர்த்தத்தை உண்டாக்கினான் என்றும் ஒரு வரலாறு. இந்தக் கதை சிவபுராணத்தில் உள்ளது.

இராவணன் இறந்த பிறகு, வெகுகாலம் இந்த லிங்கத்தை யாரும் பூஜிக்கவில்லையாம்: மண் மூடி விட்டதாம். பைஜு என்ற வேடன் இந்த லிங்கத்தைக் கண்டுபிடித்து வழிபட்டானாம்; அதனல் பைஜ்யநாத் என்ற திருநாமம் உண்டாகி, வைத்தியநாத் என்று மருவியதாகவும் கூறுகிறார்கள்.

மாரி பங்குவி மாதங்களில் வரும் யாத்திரிகர்கள் லிங்கத்தை நீராட்டை, கங்கை, யமுனை போன்ற புனித நீரைக் கொண்டு வருகின்றனர். ஹைதராபாதிலிருந்து ரெயில் வழியே பரலி செல்ல வேண்டும்: கோயில் ஓர் உயர்ந்த இடத்தில் அமைந்திருக்கிறது. மண்டபங்கள், சாளரங்கள் ஆயவற்றின் மரக்கதவுகளில் அற்புதமான சிற்ப வேலைப்பாடுகள் காணப்படுகின்றன. வைத்தியநாதப் பெருமான் பக்தர்களின் துயரைத் தீர்ப்பார் என்பது பிரசித்தம்.

பீமசங்கரம்

இந்த ஜோதிர்லிங்கத் திருக்கோயில் ஒரு கானகத்தின் நடுவே அமைந்துள்ளது: புணேயிலுள்ள கேத் என்ற இடத்துக்கு வடமேற்கே முப்பது மைல் தொலைவில் போவாகிரி என்ற நிராமம் இருக்கிறது. அந்தக் கிராமத்தின் புறத்தே இந்தக் கானகம் அமைந்திருக்கிறது. பீமா அல்லது சந்திரபாகா நதியின் தொற்று வாயில் இந்தக் கோயில் உள்ளது: நாகுபட்னவில் என்ற பக்தர் இந்த ஆலயத்தைக் கட்டினார். புணேயிலிருந்து பல்லிலும் போகலாம். வெளிப்புறத் தரைமட்டத்துக்கு மேலே, ஒருமுழ உயரத்தில் கருப்புக்கிருகத்தில் இந்த லிங்கம் அமைந்திருக்கிறது. அமைதியான, மனத்துக்கு இதம் அளிக்கும் சூழ்நிலை.

மூன்று அரக்கர்கள் பிரம்மாவைக் குறித்துத் தவம் இருந்தனர். அவருடைய அருளினல் இணையற்ற பலத்தைப் பெற்றனர். நிண்ட்ர நேரத்தில் நிண்ட்ர இடத்துக்குச் செல்லும் ஆற்றலையும் பெற்றனர்; தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் இடையூறு விளைத்தனர்.


தாங்கொணாத துன்பம் அநுபவித்த தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டனர். அந்த மூன்று அரக்கர்களையும் அழிக்கச் சிவபெருமான் மாபெரும் உருத் தாங்கி, பல ஆயுதங்களுடன் போரிட்டார்:

சிவபெருமான் எடுத்த உருவம் அச்சுறுத்தும் வகையில் அமைந்திருந்தது: அதனல்தான் டாகினி என்றும் இந்தத் தலத்தைச் சொல்லுவார்கள். அதனல் இறைவனுக்குப் பீமசங்கரர் என்ற திருநாமம் உண்டாயிற்று. தேவர்களும் முனிவர்களும் வேண்ட அங்கேயே தங்கி அருள் புரியத் தொடங்கினார் இறைவர்: கும்பகர்ணனுக்குக் கற்சியி என்ற அரக்கிக்கும் பிறந்த பீமன், தன் தாய்வழிப் பாட்டனைச் சுதிக்ஷ்ணன் என்ற முனிவரும், பெரிய நந்தை ராவணன் ராமனும் கொன்றனர் என்பதை அறிந்து, அந்தணர்களையும் அரசர்களையும் அழிக்க எண்ணி, நான்முகனை நோக்கித் தவம் செய்து, அவன் அருளால் வலிமை பெற்றான். தன்னிகர் இல்லாத பலம் பெற்றதும் மன்னர்களைத் துன்புறுத்தத் தொடங்கினன். காமரூபத்து அரசன் பிரியதர்மனையும் அவனுடைய மனைவி தக்ஷணாதேவியையும் சிறையில் அடைத்தான்: இந்தத் தம்பதி சிவ பக்தர்கள். சிறையிலும் இவர்கள் சிவபூஜை செய்தார்கள். இப்படிப் பூஜை செய்ய அனுமதித்தால் சிவபெருமான் அருளால், தன்னையே அழிக்கக்கூடும் என்று உணர்ந்து, பூஜையை நிறுத்தும்படி கட்டளை யிட்டான் பீமன். அவர்கள் அவன் சொல்லைக் கேட்கவில்லை. அதனல் கோபம்கொண்ட பீமன், அவர்களை வெட்ட வாளை உருவினன். அவர்கள் வழிபட்டுவந்த விங்கத்திலிருந்து சிவபெருமான் தோன்றிப் பீமனைச் சங்காரித்தார். அந்த அரச தம்பதிகளின் வேண்டுகோளின்படி அங்கேயே கோயில் கொண்டார்: பீமனைச் சங்காரித்ததால் பீம சங்காரம் என்ற திருநாமம் உண்டாயிற்று. இப்படியும் ஒரு வரலாறு இருக்கிறது.


சந்திரபாகா நதியில் நீராடி, பீமசங்கரப் பெருமானை வழிப்பட்டால், மனிதர்களின் மனோரதங்கள் நிறைவேறும்.

ரூ.5.00

ரூ.5.00



ராமேச்வரம்



நாகேசம்



ராமேசுவரம்:

பாரதத் துணைக்கண்டத்தினின்றும், பாம்பன் கால்வாயால் பிரிக்கப்பட்டு, தனித் தீவுபோல் இந்தத் தலம் விளங்குகிறது, 'ஆஸேது ஹிமாசல பர்யந்தம்' என்பார்கள். தென்குமரி முனையிலிருந்து வடக்கே ஹிமாசலம் வரையில் பாரத புண்ணிய பூமி என்பதை இந்தத் தொடர் கட்டுகிறது. தெசிய ஒற்றுமைக்குச் சிறந்த உதாரணமாகவும் இந்த ஜோதிர்லிங்கத் தலம் விளங்குகிறது. கங்கையில் நீராடி, அங்கிருந்து மணலையும் நீரையும் இங்கே கொண்டுவந்து, மணலைக் கடலில் சேர்த்து, நீரை இறைவனுக்கு அபிஷேகம் செய்தால் தான் புனித யாத்திரை பூர்த்தியடைந்ததாக ஐதிகம்.

நளன் என்ற வானர வீரனின் உதவியால் சேதுவில் பாலம் அமைத்து, இராமபிரான் இலங்கை சென்று ராவணனைக் கொன்று சீதையை மீட்டுவந்தார். அந்தணனை இராவணனைக் கொன்ற பிரம்மஹத்தி தோஷம் நீங்க, பெரியோர்களின் உபதேசப்படி, இத்தத் தீவில் ஜோதிர்லிங்க பிரதிஷ்டை செய்து வழிபட வண்ணினர் இராமர். அறுமானைக் கைலாசத்துக்கு அனுப்பி லிங்கத்தைக் கொண்டுவரப் பணித்தார். அறுமன் திரும்ப நேரமானதால், சீதா பிராட்டி மணலில் பிடித்துக் கொடுத்த லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து வழிபடத் தொடங்கினர் இராமர். சிவபிரானைத் துதித்து, ஒரு சிவலிங்கத்துடன் திரும்பிய அறுமன், வேறு லிங்கம் பிரதிஷ்டை ஆகிவிட்டதை அறிந்து கோபம்கொண்டான். மணல் லிங்கத்தை எடுத்துவிட்டுத் தான் கொண்டுவந்த லிங்கத்தையே பிரதிஷ்டை செய்யவேண்டும் என்று அறுமன் கோரினான். ராமரும் அவன் கோரிக்கையை ஏற்றார்; அறுமன் மணல் லிங்கத்தைத் தன் வாலினல் கட்டி இழுத்தான்; அவன் வால்தான் அறுந்தது. லிங்கத்தை நகர்த்தமுடியவில்லை. அறுமன் மயங்கிவிழுந்தான். ராமர் அவனைத் தெளிவித்து, அவன் கொண்டுவந்த லிங்கத்தையும் பக்கத்தில் நிலைப்படுத்தினர்; தான் பூஜைசெய்த இராமநாத லிங்கத்தை வழிபடுவதற்கு முன், காசி விசுவநாதர் என்ற அறுமன் கொண்டுவந்த லிங்கத்தை வழிபடவேண்டும் என்று விதியுண்டாக்கினர் ராமர்.

சேதுப் பாலத்தைக் கடந்து இலங்கைக்குப் போகுமுன் ராமர், வானர சேனைகளுடன் இந்தத் தீவில் தங்கியிருந்தார்; சங்கரனே வழிபடாமல் நீரும் அருந்தும் வழக்கமில்லாத ராமர், தாகம் மேலிட்டதும், நீர் கொண்டுவரச் சொன்னர். அறுமன் போய்க் கொண்டுவந்து கொடுத்தான். அப்போதுதான் சிவபிரானை வழிபடாமல் நீர் அருந்த நினைத்தது ராமருக்கு நினைவு வந்தது; உடனே மணலால் ஒரு லிங்கத்தைப் பிடித்து, தாகமாற்றிக் கொள்ள வந்த நீரைக் கொண்டு, அந்த மணல் லிங்கத்துக்கு அபிஷேகம் செய்து வழிபட்டார். ராமரின் பக்திக்கு மகிழ்ந்த எம்பெருமான், வெற்றியுடன் இலங்கையிலிருந்து திரும்பப அருள் புரிந்தார்.

இங்கே பல தீர்த்தங்கள் உள்ளன. அக்கினி தீர்த்தம், ராமர் தீர்த்தம், இலக்குமண தீர்த்தம், முக்கியமானவை. ராமேசுவரம் கோவில் பிராகாரம் உலகப் புகழ் வாய்ந்தது. சிற்ப எழிலும் பிரம்மாண்டமான தூண்களும் மாடங்களும் கொடுங்கைகளும் நிறைந்த அந்தப் பிராகாரமே, ராமேச்வர லிங்கத்தின் அருள். பிரவாகத்தை வெளிப்படுத்துகிறது. சேதுவில் முழுகி எம்பெருமானைத் தரிசித்தால் முழுத்தைப்போற உண்டாகும், அதனல் அன்பர்கள் பலர் சேது யாத்திரை செல்கிறார்கள்.

நாகேசம்

சூஜராத் மாநிலத்தில் துவாரகைக்குச் செல்லும் வழியில் ஒன்றும், ஹைதராபாதுக்கு வடக்கே, வேரண்டி ரெயில் நிலையத்திலின்றும் சுமார் பதினெரு மைல் தூரத்தில் அமைந்துள்ள ஒன்றுமாக, இரண்டு தலங்கள் இந்தப் பெயரில் இருப்பதாகச் சொல்கிறார்கள். தாருகாவனம் என்றும் வேறு பெயர் உண்டு. தாருகையும் தாருகனும் தங்கி வழிபட்ட தலமானலின் இப் பெயர் அமைந்தது. ஜோதிர்லிங்கப் பெருமானுடைய நாகேசர் கோயில் அமைந்த ஊர் அவண்டா என்று வழங்கப்படுகிறது. போகேசர் என்ற திருநாமமும் இந்த லிங்கத்துக்கு உண்டு.

இந்தத் தலத்தில் லிங்கம் தெற்கு முகமாகத் திரும்பியிருக்கிறது; அதாவது, பாணம் இருக்கும் பீடத்தினுள்ள கோமுகம் மேற்கு நோக்கியுள்ளது. மேற்கு நோக்கியிருக்கும் கோமுகத்தோடு கூடிய சிவலிங்கத்தை வேறு எங்கும் காண முடியாது. நந்தி, பலிபீடம் முதலியனவும் மேற்புறமாகவே அமைந்துள்ளன. திருப்புன்கூரில் நந்தனருக்கு நந்தி விலகியிருப்பதற்குரிய கதைபோல, இங்கேயும் ஒரு சிவனடியாருக்காக நந்தி விலகியிருப்பதாக வரலாறு இருக்கிறது.

இந்தச் சிவலிங்கம் முன்னலில் நீரில் மூழ்கியிருந்ததாகவும் பாண்டவர் வந்து வணங்கிய பிறகு மேலெழும்பியதாகவும் கூறுகிறார்கள். குடைவரைக் கோயிலினுள் சிவலிங்கம் இருக்கிறது. இந்தக் குகையில் தாருகாவன முனிவர்கள் இந்தக் கொள்கை தவருனது என்பதைக் காட்டத் திருமால் மோகினி உருவத்துடனும் சிவபெருமான் பிக்ஷாடனர் உருவத்துடனும் எழுந்தருளினார்கள்.

தாருகை, தாருகன் என்ற அரக்கத் தம்பதியர் இருந்தனர். தாருகை, பார்வதியைக் குறித்துக் கடுந்தவம் இயற்றிப் பல வரங்களைப் பெற்றாள். தான் நினைத்தபடி பறந்து செல்லக்கூடிய மிகுந்த பரப்பளவுள்ள நந்தவனத்தை அமைத்து, அதில் கணவனுடன் வாழ்ந்து வந்தாள். தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் தொல்லை கொடுத்து வந்தான் அரக்கி. அவ்ரவ முனிவர் இட்ட சாபத்தினுல் பல அரக்கர்கள் மாண்டார்கள். அதனுல் பயந்த தாருகை, எஞ்சியவர்களுடன் கடலின் நடுவே ஒரு தீவை உண்டாக்கி அதில் வசித்து வந்தாள்; ஒரு நாள் அவள் வானவீதியில் பறந்து சென்றபோது, ஸுப்ரியன் என்ற அழகிய வணிகரைப் பார்த்தாள். அவன் சிவபூஜை செய்துகொண்டிருந்தான். அவனைத் தூக்கிச் சென்று சிறைப்படுத்தி விட்டாள். சிறையில் இருந்த மற்றவர்களையும் அவன் சிவ பூஜை செய்யத் தூண்டினன். இதை யறிந்த தாருகன் அந்த வணிகனைக் கொடுமைப்படுத்தினன்; கருணைக் கடலான எம்பிரான், அந்த லிங்கத்திலிருந்து தோன்றி, தம் நெற்றிக் கண்ணுல் தாருகனைச் சாம்பலாக்கினர். மலைமகள் வரம் பெற்ற தாருகை மனம் திருந்தி, சிவனை வேண்டினுள்; அவள் விருப்பப்படியே சிவபெருமான் அங்கேயே கோயில் கொண்டு அருள் பாலித்து வருகிறர்;

இந்த ஜோதிர்லிங்கத்தைத் தரிசித்தால் பகைவர்களும் எதிர்ப்பும் மறையும்;

வாரணசி :

காசி எனவும் வழங்கும் புராதனமான இந்தத் தலம், கங்கையின் ஸ்நான கட்டங்களினால் மேலும் பெருமை பெற்றிருக்கிறது; வரணை-அசி என்ற இரண்டு நதிகளின் சங்கமத்தில் இந்தத் தலம் அமைந்திருக்கிறது. காசியில் சிவபெருமான் உகந்து கோயில் கொண்டிருப்பதால் அவிமுக்தம் என்றும் ஆனந்தவனம் என்றும் மகாசமசானம் என்றும் இத்தலம் அழைக்கப்படுகிறது. 'காசியைப் போன்ற புண்ணியப் பட்டணம் இல்லை, இவோதானன் என்ற மன்னன் நிறுவியது இது' என்று ஸ்காந்தப் புராணத்தில் கூறப்பட்டிருக்கிறது.

லிங்கம் இருக்கும் கருவறை தாழ்ந்து உள்ளது. சிகரத்தில் தாமிரத் தகடும் லிங்கத்தைச் சுற்றிலும் உள்ள கட்டுக்கு வெள்ளித் தகடும் பொருத்தியிருக்கிறார்கள்.

அன்னபூரணி ஆலயம், விசாலாட்சி கோயில், அஷ்டலட்சுமி முதலியன முக்கியமானவை. அன்னபூரணி கோயிலில் தீபாவளியை மிகவும் விமரிசையாகக் கொண்டாடுவார்கள்.

புகழ் பெற்ற ஸ்நான கட்டங்கள் பல இருக்கின்றன. ஐந்து நதிகளைக் குறிக்கும் ஐந்து படிகளைக் கொண்ட பஞ்சகங்கா கட்டம் மிகவும் புனிதமான ஸ்நானத் துறை.

காசியைச் சுற்றி யாத்திரை செய்யும் ஒரு பழக்கம் இருக்கிறது. சுமார் ஐம்பது மைல் தொலைவுள்ள இந்த யாத்திரை மார்க்கத்தில் பல திருத்தலங்கள் இருக்கின்றன. இந்த யாத்திரையைப் 'பஞ்சக்ரோசி' என்று சொல்வார்கள்.

காசிப் பல்கலைக் கழகமும் சம்ஸ்கிருதப் பல்கலைக் கழகமும் இங்கே புகழ் பெற்றவை:

விசுவேசுவர லிங்க மகிமை என்ற நூல், இந்த ஜோதிர்லிங்கத்தின் பெருமையைக் கூறுகிறது. இந்தப் பிரபஞ்சம் உண்டாவதற்கு முன்பே இந்தத் தலம் தோன்றிவிட்டதாக இதில் கூறப்பட்டிருக்கிறது.

கர்மங்களை நாசம் செய்வதால் இதற்குக் காசி (கர்மணும் கர்ஷணத் காசி) என்று பெயர்.

விசுவநாதர் கோடி இந்த ஆலயத்தைத் தவரமட்டம்மாகியபோது, சுமார் எழுபதாண்டுக் காலம் இந்த ஆலயத்தைச் கட்டப் பலர் முயற்சி செய்தார்கள், ஆனல் நிறைவேறவில்லே. பின்னர் நாட்டில் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. குடிக்க நீரே கிடைக்காத அளவும். இந்த உத்பாதத்துக்கு, காசி விசுவேசர் இல்லாததே காரணம் என்று நாராயணபட்டர் என்ற பக்தர் எண்ணினார். அந்தச் சிவனடியாரின் கனவில் எம்பெருமான் தோன்றி மணிகர்ணிகையில் தாம் மூழ்கியிருப்பதாகவும், நீரில் மூழ்கி எழுந்தால் அவர் கையில் அகப்படுவதாகவும் தெரிவித்தார். சங்கைக் கரையில் கருவறை மட்டும் கட்டி, கர்ப்பூரத்தை அதனுள் போட்டால், எந்த இடத்தில் கர்ப்பூரம் தானுகப் பற்றி எரிகிறதோ அந்த இடத்தில் தம்மைப் பிரதிஷ்டை செய்யும் படியும் இறைவர் ஆணையிட்டார்: நாராயணபட்டர் அவ்விதமே செய்தார். கர்ப்பக் கிருகத்தின் வலப்பக்க மூலையில் கர்ப்பூரம் பற்றி எரிந்தது. அங்கேயே லிங்கப் பிரதிஷ்டை செய்தார் அந்தப் பக்தர்.

அப்போதைய மன்னனிடம் நாராயணபட்டர் இவற்றைக் கூறினர். 1569-இல் கோயிலைப் புனர் நிர்மாணம் செய்ய மன்னன் அநுமதியளித்தான். அப்போது கட்டிய கோயில் சுமார் நூறு ஆண்டுகளுக்குப் பின் ஔரங்கசீப்பினல் அழிக்கப்பட்டது. 1783-இல் ராணி அகல்யாபாய்தான் இந்தக் கோயிலைப் புதிதாகக் கட்டினுள். இப்போதுள்ளது உருவம் இந்த ராணி எழுப்பியதே.

தேவரதி தேவர்களே காசியிலே இறக்க விரும்புவார்களாம். நமது கர்மங்களை எல்லாம் அழித்து முக்தியைத் தரவல்லது இந்தத் தலம்.

திரியம்பகம் :

மிகவும் புராதனமானது இந்த ஜோதிர்லிங்கத் தலம். இந்தத் திருக்கோயிலுக்குக் கிழக்கே பாண கங்கா நதி உற்பத்தியாகிறது. பிரம்மகிரி என்ற பெரிய மலைக்கு உள்ளது. இந்த மலையிலிருந்தான் கோதாவரி, அகல்யா, வைதர்ணு, மேற்கு நோக்கிப் பாயும் கங்கை முதலிய நதிகள் தோன்றுகின்றன.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை குரு சிம்மராசியில் சஞ்சரிக்கும்போது, இங்குள்ள கோடி தீர்த்தத்தில் நீராடுவது சிறப்பு. கார்த்திகை மாதப் பௌர்ணமியில் ரத உற்சவம் மிகச் சிறப்பாக இங்கே நடைபெறுகிறது.

கருங்கல்லால் அமைந்த ஆலயத்தின் கருவறையில் அமைதியான குழ்நிலே நிலவுகிறது. கருவறையின் மத்தியில் உள்ள ஒரு குழியில் லிங்கத்துக்குப் பதிலாக ஒரு குழி காண்கிறது. அந்தச் சிறு பள்ளத்தில் எப்போதும் நீர் நிறைந்திருக்கிறது; நீரின்மேல் பிறிதளவே மேலே தெரியும் வண்ணம் சிவலிங்கம் உள்ளது. அந்த லிங்கத்தின் மூடியிருள்ள பினலில் எப்போதும் நீர் சுரந்துகொண்டே இருக்கிறது. ஐந்து முகங்கள் கொண்ட தங்கக் கவசத்தை லிங்கத்தின்மேல் சார்த்தியிருக்கிறார்கள். பேஷ்வா சதாசிவராவ் அளித்த தங்கக் கிரீடமும் பெருமானுக்கு உள்ளது.

குசாவர்த்தம், கனகம், கஞ்சனம், கங்காத்வாரம், பில்வம், கோடி என்று சில புண்ணிய தீர்த்தங்கள் தீர்யம்பகேசுவர் திருக்கோயிலைச் சுற்றி உள்ளன. பிரம்மகிரியில், சித்தர் கோரக்நாதர் தவம் செய்த குகை இருக்கிறது. அவருடைய திருவுருவை அதனுள் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள்.

பம்பாயிலிருந்து வட மிழக்கே மன்மாட் செல்லும் பாதையில் நாசிக்கிலிருந்து பதினெட்டு மைல் தொலைவிலுள்ளது இந்தத் தலம். பல்கலும் செல்கின்றன. மலேப்பாதையில் சிரமத்தைப் பாராமல் மேலேறிப் போனுல் ஆற்றின் உற்பத்தியைக் காணலாம்.


போதிய மழை இல்லாமையால், உலகத்தின் நன்மையின் பொருட்டுக் கௌதம முனிவர், தம் மனைவி அகல்யையுடன் பிரம்மகிரியில் கடுந்தவம் செய்தார். வருணன் கட்டளைப்படி ஒரு குளத்தை உருவாக்கினர்: வருணனின் அருளால், அந்தக் குளத்தில் வற்றுமல் நீர் சுரந்தது. நீர் வளம் மிருந்து அவருடைய ஆசிரமம் செழிக்கத் தொடங்கியது. மற்ற முனிவர்களும் தம் தம் பத்தினிகளுடன் இங்கே வந்து தங்கினர்: சின்னட்களில் ரிஷி பத்தினிகளுக்குள் விரோதம் உண்டாயிற்று. அகல்யையின் கர்வத்தை அடக்க, அவரே இந்த இடத்தை விட்டே தூரத்த வேண்டும் என்று மற்ற ரிஷிபத்தினிகள் தீர்மானித்து, விநாயகரின் உதவியை நாடினர். விநாயகர் நியாயத்தை எடுத்துக் கூறியும் அவர்கள் கேட்கவில்லே.

பசு உருத் தாங்கியே விநாயகர், கௌதமர் பயிரிட்டிருந்த கெடிகளேப் போய் மேய்ந்தார்; பலவைத் துரத்தக் கோலுடன் கௌதமர் ஓடியதுமே, அந்த மாயப் பசு உயிர் துறந்தது. அதனுல் பசுவதை செய்த தோஷம் ஏற்பட்டுவிட்டதாக மற்ற முனிவர்கள் கூறினர்கள்:


இந்தத் தோஷம் நீங்க, பிரம்மகிரியை 101 முறை வலம் வரவேண்டுமென்றும், ஒரு கோடி மண் லிங்கங்களேப் பிடித்துவைத்து வணங்க வேண்டுமென்றும், கங்கையை இந்த இடத்துக்கு வரவழைக்க வேண்டுமென்றும் அந்த முனிவர்கள் கூறினர்கள். கௌதமரும் கடுந்தவம் இயற்றத் தொடங்கினர்:

அவருடைய தவத்துக்கு இரங்கி, வெரும்பரன் தரிசனம் அளித்தார். ரிஷிபத்தினிகளின் கெட்ட எண்ணத்தைக் கூறி, தோஷம் எதுவும் விடையாது என்றும் சொன்னர். தம் சடைமுடியிலிருந்து சிறிதளவு கங்கா நீரையும் கொடுத்தார். அந்த நீரைப் பிரம்மகிரியில் வளர்ந்திருந்த பெரிய அத்தி மரத்தின் வேரில் விட்டார் கௌதமர்: கங்கை பெருகத் தொடங்கிற்று, கௌதமர் இந்த நதியைக் கொண்டு வந்தமையால் கோதாவரி அல்லது கௌதமி என்று அழைக்கப்படுகிறது. தம்மிடமிருந்த குசத்தினுல் (தர்ப்பை) கங்கையின் போக்கை மாற்றி, மற்ற முனிவர்களும் தூய்மையடையச் செய்தார் கௌதமர்:


'பவித்திர தேசம்' என்று அழைக்கப்படும் இந்தத் தல மூர்த்தியைத் தரிசித்தால் மனமாசுகள் அகன்று ஆன்ம ஒளி பிறக்கும்:




வா
ரா
ண
ஸி



ம் க ட ம் ப ர த்.



கேதாரம்



குஸ்மேசம்

கேதாரம் :

இத்தத் தலம் இமயமலையின்மேல் 11,735அடி உயரத்தில் அமைத்துள்ளது. ருத்ர இமாலயம், சுமேரு பர்வதம், பஞ்சபர்வதம் என்று, இந்தக் கோயில் அமைந்துள்ள மலைப் பகுதிக்குப் பெயர்கள் உள்ளன. ருத்ர இமாலயம், விஷ்ணுபுரி, பிரம்மகிரி, உத்காரி கண்ட, சொர்க்கா ரோஹிணி என்ற ஐந்து சிகரங்கள் உள்ளதால் இந்தப் பெயர் அமைந்தது.

தெற்குப் பார்த்த சந்நிதி கேதாரீசுவருடையது. லிங்கரூத்தம் பெரிய வடிவில் இருக்கிறது. இந்த லிங்கத்தின்மீது நெய்யைத் தடவி மக்கள் அணிந்துகொள்வது வழக்கம்.

கேதாரலிங்கத்தைத் தரிசிக்கச் செல்பவர்கள் முதலில் கங்கோத்தரிக்கும் யமுனோத்தரிக்கும் சென்று புனித நீர் எடுத்துப் போய் அபிஷேகம் செய்வது வழக்கம். போகும் வழியிலுள்ள கௌரி குண்டத்தில் வெப்ப நீரூற்றுக்கள் உள்ளன. பல்லிக் கிட்டச் செய்யும் அந்தக் குளிருக்கு இறைவனே பார்த்து அமைத்திருக்கும் வெப்ப நீர் ஊற்றுக்கள் அவை. அரிசியைக் களைந்து முரட்டுத் துணியில் முடிந்து, ஐந்து நிமிஷம் அந்த ஊற்றுக்குள் விட்டால், சாதம் பதமாகிவிடுமாம்.

பனிக் காலத்தில் கேதாரம் உறைபனியால் மூடப்பட்டிருக்கும். குரியன் மேஷ ராசியில் சஞ்சரிக்கத் தொடங்கும்போது இந்தத் திருக்கோயில் திறக்கப்படுகிறது. மற்தாகினி இந்த இடத்தில்தான் உற்பத்தியாகிறது. இதைக் காளி கங்கை என்று இங்கே அழைக்கிறார்கள்.

காத்தருளும் நிருமால் பதரிகாசிரமத்தில் நரநாராயணர் திருவுருவில் இருந்து தவம் இயற்றினர். பார்த்திவலிங்கத்தைப் பீடித்து வைத்துச் சிவபூஜை செய்தார். திருமாலின் பக்தியால் மகிழ்ந்த சிவபெருமான், அவருக்குத் தரிசனம் அளித்தார். ''நீங்கள் செய்த பூஜையில் மகிழ்ந்தேன். சகல சம்பத்துக்களும் உங்களுக்கு இருகின்றன. யாது வேண்டும்?'' என்று சிவபெருமான் மகிழ்சியுடன் கேட்டார். ''தங்கள் திவ்ய தரிசனத்தால் நாங்கள் பெரும் பேறு பெற்றோம். இதுபோல் சாதாரண மக்களும் தங்களைத் தரிசித்து முக்திப் பேறு அடைய வேண்டும். அதனால் தாங்கள் இந்த மலைமுகட்டிலேயே தங்கி, பக்தர்களை ரட்சிக்க வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார்.

'கேதாரம் என்ற பெயரைச் சொன்னமாத்திரமே மக்களின் வினைகளைக் களைந்து தூய்மையாக்க வேண்டும்' என்றும் கேட்டுக்கொண்டார். அவ்விதமே எம்பெருமானும் அங்கேயே கோயில் கொண்டார்.

கந்தமாதன மலைப் பகுதிக்குப் பாண்டவர்கள் பல தடவை வந்துள்ளதாகப் பாரதத்திலிருந்து தெரிகிறது. பாசுபதம் பெறச் சிவனை நோக்கித் தவமிற்ற அர்ச்சுனன் இங்கே வந்தான். அவனைத் தேடிப் பாண்டவர்கள் இங்கே வந்தனர். நிரௌபதி கேட்ட சௌகந்திக மலரைப் பறிக்கப் போய்த்தான் பீமன் அநுமனிடம் கர்வபங்கம் அடைந்தான்.

குரு, கும்ப ராசியில் சஞ்சரிக்கத் தொடங்கும்போது ஹரித்துவாரத்தில் கும்பமேளா நடக்கும். அந்தச் சமயத்தில் கேதாரநாதரைத் தரிசிப்பது விசேஷமானது.

குச்மேசம் :

இத்தக் கோயிலைக் கட்டியவள் இந்தோர் மகாராணி அகல்யாபாய். எல்லோராக் குகைச் சிற்பங்களைக் கண்டு களிக்கப் போவோர் ஔரங்காபாது வழியே போவார்கள். இந்த வழியில் தேவகிரி என்ற இடத்துக்கு அருகில் இந்தத் திருத்தலம் அமைந்திருக்கிறது.

வெவ்வேறு கன்றிச் வெந்த நிறத்துடன் விளங்குவதால் கிருஷ்ணேச்வரர் என்று அழைக்கப்படுகிறது. பார்வதி தேவி குங்குமப் பூவால் சிவனை வழிபட்டதால், இந்தப் பெயர் அமைந்தது. 'கிருஷ்ண' என்ற மராட்டிய மொழியில் குங்குமப் பூ என்று பொருள்.

இந்தத் திருக்கோயிலுக்குப் பக்கத்தில் அழகான கோயிலும் பைரவர் கோயிலும் உள்ளன. குச்மேசக் கோயில் கருவறைக்கு எதிரில் அழகிய சபாமண்டபம் ஒன்று உள்ளது. அதில் பெரிய கச்சப மூர்த்தியின் (ஆமை வடிவம்) சிலை ஒன்று இருக்கிறது. இந்தக் கச்சப மூர்த்தியை, குச்மேசரைத் தரிசிக்கப் போகும்போதும் திரும்பும்போதும் தொழவேண்டும் என்ற நியதி இருக்கிறது.

தேவகிரி என்ற மலைப் பிராந்தியத்தில் சுதர்மர் என்ற அந்தணர் வாழ்ந்து வந்தார். அவர் மனைவியின் பெயர் சுதேகை. இருவரும் இல்லறம் வழுவாமல் தானதர்மங்கள் செய்து வாழ்ந்தனர். பிள்ளைப்பேறு இல்லாத குறையைத் தவிர, மற்றப்படி வளவாழ்வு வாழ்ந்தனர். அந்தக் குறை கூடச் சுதர்மருக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. எப்போதும் வேத அத்தியயனம் செய்தல், செய்வித்தல், சிவ பூஜை செய்தல் என்று காலம் கழித்தார். ஆனல் சுதேகை பிள்ளை இல்லாத குறையைப் பெரிதாக எண்ணி வருந்தினள். கணவரை மறுமணம் செய்துகொள்ளும்படி வற்புறுத்தினள். ''குழந்தைப் பேறு இல்லாத வாழ்வு பூர்ண வாழ்வாகாது. நம் வீட்டில் குழந்தை தவழ்ந்து விளையாட வேண்டும்'' என்று கண்ணீர் மல்கக் கணவரிடம் கூறி, அவர் மனத்தைக் கரைத்து, தன் சகோதரன் மகள் குணலையை, இரண்டாந் தாரமாக மணம் செய்வித்தாள்.

குணலையும் சிறந்த சிவபக்தை. அன்றுடம் மணலினல் சிவலிங்கம் பிடித்துப் பூசிக்காமல் உணவருந்த மாட்டாள். அப்படிப் பூசித்த லிங்கங்களே மாலையில் குளத்தில் விஸர்ஜனம் செய்துவிடுவாள்.

இறைவன் அருளால் குணலை கருவுற்று, ஓர் ஆண்மகவைப் பெற்றெடுத்தாள். அவனுக்குச் சுபரியன் என்று பெயரிட்டுச் செல்லமாக வளர்த்தார்கள். சுதேகையும், குணலையும் ஆரம்பத்தில் சுமுகமாகப் பரிவுடனும் பாசத்துடனும் பழகினலும், குழந்தை பிறந்த பிறகு குணலைக்குச் செல்வாக்கு அதிகரிப்பதை உணர்ந்த சுதேகை, அவனைச் சக்களத்தியாகக் கருதத் தொடங்கினுள். ஒரு பிள்ளை வீட்டில் வினையாடவேண்டும் என்று தவித்த சுதேகை, அந்தக் குழந்தையையே கொன்றுவிடும் அளவுக்குப் பொருமை கொண்டாள். ஒரு நாள் இரவு சுபரியனைக் கொன்று, குணலை லிங்க விஸர்ஜனம் செய்யும் குளத்திலேயே போட்டுவிட்டு வந்துவிட்டாள்.

விடியற்காலையில் மணல் லிங்கம் பிடித்துப் பூசை செய்தாள். முதல் நாளை லிங்கத்தைக் குளத்தில் விஸர்ஜனம் செய்து விட்டுத் திரும்பியபோது, குணலை தன் பிள்ளையின் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள்: ''அம்மா! நான் செத்துப் பிழைத்தேன்'' என்று கூறிக்கொண்டு, சுபரியன் குளத்திலிருந்து ஓடி வந்தான்.

நடந்ததை அறியாத குணலை, தூங்கிய குழந்தை விடியற்காலையில் குளத்திலிருந்து ஓடி வருகிறனே என்று எண்ணித் திகைத்தாள். அவள் பூசித்த மணல் லிங்கத்திலிருந்து சிவபெருமான் பிரசன்னமாகி, நடந்ததைக் கூறினார். பொருமையால் பிள்ளையை அழித்த சோதரி சுதேகையை அழிக்க எண்ணினர் எம்பிரான். ஆனல் குணலை, ''என்ன இருந்தாலும் என் தகப்பனுடன் கூடப் பிறந்தவள்; அத்தை: அவளை மன்னிக்கச் செய்ய வேண்டும்'' என்று சிவபிரானிடம் வேண்டிக் கொண்டாள். அவள் விருப்பப்படி, குச்மேசர் என்ற நாமம் தாங்கி, அங்கேயே கோயில் கொண்டார் கைலயம்பதி. பக்தையின் பெயரையே தம் திருநாமமாகவும் ஏற்றுக்கொண்டார்:

இந்த ஜோதிர்லிங்க மூர்த்தியைத் யதரிசித்தால் சிறந்த சத்புத்திரப் பேறு உண்டாகும் என்ற நம்பிக்கை மக்களுக்கு உண்டு. ஜோதிர் லிங்கக் கதையைப் படித்தாலோ, படிக்கக் கேட்டாலோ, தரித்தாலோ சிவ சாயுச்யம் கிடைக்கும் என்று சிவபுராணம் கூறுகிறது. அடுத்த பக்கத்திலுள்ள நியான சுலோகங்களைப் படித்தால், தரிசன பலன் கிடைக்கும்.)

தியான சுலோகங்கள்

ஸோமநாதம்

1. ஸோமலிங்கம் நரோ த்ருஷ்ட்வா ஸர்வபாபாத்
ப்ரமுச்யதே
லப்த்வா பலம் மநோபீஷ்டம் முக்தல்
ஸ்வர்க்கம் ஸமீஹதே

ஸ்ரீசைலம்

2. அத:பரம் ப்ரவக்ஷ்யாமி மல்லிகார்ஜுந
லிங்கபவம்
யம் ச்ருத்வா பக்திமான் நீமான் ஸர்வபாபை:
ப்ரமுச்யதே

உஜ்ஜைநி

3. ஆகாசே தாரகம் லிங்கம் பாதாளே
ஹாடகேச்வரம்
முத்யுலோகே மஹாகாளம் லிங்கத்ரயம்
நமோஸ்து தே

ஓங்காரம்

4. யதபீஷ்டம் பலம் தச்ச ப்ராப்துயாந்நாத்ர
ஸம்சய:
ஏதத்தே ஸர்வமாக்யாத மோங்கார ப்ரபவே
பலம்

வைத்யநாதம்

5. அத: பரம் ப்ரவக்ஷ்யாமி வைத்ய
நாதேச்வரஸ்ய ஹி
ஜ்யோதிர் லிங்கஸ்ய மாஹாத்ம்யம் சர்வபாதம்
பாபஹாரகம்

பீமசங்கரம்

6. அத: பரம் ப்ரவக்ஷ்யாமி மாஹாத்ம்யம்
பீமசங்கரம்:
யஸ்ய ச்ரவண மாத்ரேண ஸர்வாபீஷ்டம்
லபேத்நர:

ராமேச்வரம்

7. இதிவிச்வலமாக்யாதம் ஜ்யோதிர் லிங்கம்
சிவஸ்ய து
ராமேச்வராபிதம் நித்யம் ச்ருண்வதாம் பாப
ஹாரகம்

நாகேசம்

8. ஏதத் ய: ச்ருணுயாந் நித்யம் நாகேசோத்பவம்
ஆதராத்
ஸர்வான் காமான் இயாத் தீமான் மஹாபாதக
நாசநாத்

வாராணஸி

9. இத்யேவம் ப்ரார்த்திதஸ் தேந விச்வநாதேன
சங்கர:
லோகாநாம் உபகாரார்த்தம் தஸ்தாஸௌ
தத்ராபி ஸர்வராட்

த்ரயம்பகம்

10. அத:பரம் ப்ரவக்ஷ்யாமி மாஹாத்ம்யம்
த்ர்யம்பகஸ்ய ச
யச்ச்ருத்வா ஸர்வ பாபேப்யோ முச்யதே
மாநவ: க்ஷணாத்

கேதாரம்

11. த்ருஷ்ட்வா ரூபம் நரஸ்யைவ நதா
நாராயணஸ்ய ஹி
கேதாரேச்வர சம்போஸ்ச முக்தபாகீ ந ஸம்சய:

குஸ்மேசம்

12. குஸ்மேசாக்யம் இதம் லிங்கம் தேஜோ ராசிம்
முநீச்வரா:
தத்த்ருஷ்ட்வா பூஜயித்வா ஹி ஸுகம்
ஸம்வர்ததேஸதா

விளக்கம்

1. ஸோமநாதரைத் தரிசித்தாலே சகல பாவங்களும் விலகுகின்றன; விருப்பங்கள் நிறை வெய்துகின்றன: இறப்புக்குப் பின் மோட்சத்தை அடையும் தகுதி பெறுகிறோம்.

2. மல்லிகார்ஜுன ஜோதிர்லிங்கத்தின் வரலாற்றை ஒருவன் கேட்டாலே, வாழ்க்கைப் பந்தங்கள் எல்லாம் விலகுகின்றன: இறைவனின் மெய்யடியானாக மாறுகிறோம்.

3. விண்ணிலே தாரகலிங்கம்; பாதாள லோகத்திலே ஹாடகேசுவரலிங்கம்; மருத்து லோகத்தில் மகாகாளலிங்கம்-மூன்று லிங்க மூர்த்திகளையும் வணங்கினால் ஜன்ம சாபல்யம்.

4. ஓங்காரேசுவரரின் புனிதக் கதையைக் கேட்டாலோ, படித்தாலோ வாழ்வில் எல்லா வளங்களும் பெருகும். அவரைத் தரிசித்தால் பிறவிப் பிணி அறும்.

5. பரலி வைத்தியநாதப் பெருமானின் அருள் கதையைக் கேட்டாலோ, படித்தாலோ மன மாசுகள் அகலும். பக்தர்களுக்குப் பரம சுகத்தையும் முக்தியையும் அளிக்கவல்லது.

6. பீமசங்கரம் என்ற ஜோதிர்லிங்கத்தின் திவ்ய வரலாற்றைக் கேட்டாலோ படித்தாலோ மனிதர்களின் நிறைந்த விருப்பங்கள் எல்லாம் நிறைவெய்தும்.

7. ராமேசுவரத்திலுள்ள லிங்கமூர்த்தி, பாவத் தளையிலிருந்து மனிதனை விடுவித்து முக்திப் பேறு அளிக்கிறார். இந்த இறைவனின் திவ்ய வரலாறு தேனிலும் இனிது.

8. நாகேசுவரப் பெருமானுடைய புனிதக் கதையைக் கேட்பவர்கள் சிறந்த அறிவாளிகள். பாவங்களை மன்னித்து, மனோரதங்களை நிறைவேற்றி வைப்பான்.

9. பக்தர்களின் வேண்டுகோளை ஏற்று லோகநாயகன் அருள் புரிந்த புனித பூமி காசி க்ஷேத்திரம். தெய்வ சாந்நித்தியம் நிறைந்த நகரம். பிறவாப் பேறு அளிக்கிறது.

10. செய்த வினைகளை மனமுருகச் சொல்லி வேண்டினால், அந்தக் கணத்திலேயே எல்லாப் பாவங்களையும் போக்கியருள்வான் த்ரயம்பகேசுவரப் பெருமான்.

11. பிறவிப் பயனை மோட்சத்தை அடையப் பதரியிலுள்ள நர-நாராயணர் என்ற மாமுனிவர்களையும் கேதாரேசுவரரையும் எண்ணிப் பூஜித்தாலே போதும்.

12. சாதுக்களே! குச்மேசப் பெருமானை வழிபடுங்கள்; முத்தியும் மகிழ்ச்சி நிறைந்த வாழ்வும் வளமும் இறையுணர்வும் உங்களுக்குச் சித்திக்கும்.


—படங்கள்: உதவி: காரனேஷன் லித்தோ ஒர்க்ஸ், சிவகாசி

FUTURA®

polyester fiber



INDIAN ORGANIC CHEMICALS LIMITED



காலை வண்ணம்

நீல வானின் நித்திலபழம் பந்தர்கீழ்
கோல எழில் காட்டிக் கூடி மகிழ்ந்தான்
பாலை நிலத்தில் பாயும் நதியானான
வாலைக்குமரி என் வாழ்வின் ஒளியானான்

விலையிலா இன்பம் வாரித் தந்தபின்
அலையுறு நெஞ்சில் அனலைத் தெழித்தான்
இலையுதிர் காலத்தில் எனைவிட்டுச் சென்றான்
கொலைகழல் மன்னவன் மீண்டும் வருவானே?



ஒவ்வொரு
காலத்திற்கும்
உகந்த வண்ணம்
அப்கோலைட்
ஸூப்பர் அக்ரிலிக்
எமல்ஷன்
தருமே திண்ணம்!



ஏஷியன் பெயிண்ட்ஸ்

Prompt after-sales service –cuts down-tool time.



Wolf

That's value added to reliability.




In the field for decades, Wolf has the age, the experience, and the understanding of power tool users' needs. We know that your industrial development and growing production needs call for more efficient servicing of your power tools. Our nationwide service network is organised to provide preventive, regular and breakdown maintenance services within easy reach— and to render them promptly.

Wolf ELECTRIC TOOLS

Manufactured by Rallwolf Limited.
Marketed by Rallis India Limited.
Bombay • Calcutta • Delhi • Madras

Creative Unit 4579



Twenty five eventful years

Reminiscing in the Silver Jubilee Year, VTV's growth keeps pace with the industrial growth of the country. Seizing opportunities, to serve needs of core industries, is the guiding philosophy that has brought us to our present unique position.

CRYOGENICS

Country's self-reliance in this field is assured by our design and construction capability amply evidenced by our performance at home and abroad.

TURN-KEY PROJECTS

Detailed engineering and construction of Pilot Distillation Facilities for Gujarat Refinery, LPG Handling Facilities for Salem Steel Plant, Ammonia Handling Facilities for SPIC at Tuticorin, Aircraft Re-fuelling Facilities at KAFCO in Kuwait, Aircraft Fuel Handling Facilities at Maldive Islands are few of the prominent ones.

OVERSEAS ASSIGNMENTS

900 million rupees worth of orders having been successfully handled in Kenya, Kuwait, Iraq, Syria, Libya, Saudi Arabia, U.A.E., Sri Lanka, Burma, Bangla Desh and Maldive Islands, sizeable turn-key projects would come our way as a natural corollary—the recent one being a complete Petroleum/LPG Installation at Sebha, Libya for 270 million rupees.

SUMMARY OF ACHIEVEMENTS IN 25 YEARS

250,000 tonnes of Steel Storage Tanks—floating, dome and cone roofs—68 pressure spheres, 1200 pressure vessels, 16 liquid ammonia tanks, 5 liquid oxygen/ nitrogen tanks, 80 heat exchangers, 60 process columns, 10 gasholders, 9 fired heaters and 13 digesters for Petroleum, Fertilizer, Steel, Power, Paper and Chemical Industries, is a resume of production achievements of 3500 men and 300 engineers dispersed over 35 work centres.

The dedicated work-force of VTV, supported by expanding manufacturing facilities at Bombay, Madras, Baroda and Haldia, looks to the future with confidence.

VIJAY TANKS & VESSELS PRIVATE LIMITED

93 L.B.S. Marg, Mulund (West), Bombay 400 080. Phone: 591894 • Telex: 011-4486/011-6486

PISCES/VTV/118

நெஞ்சாலே அற்புதமாய்க் காட்சி அளித்தது. இரு மருங்கிலும், எத்தனையோ தலைமுறைகளுக்கு முன்பே தளிர் விட்டு இன்று கம்பீரமாக நிற்கும் மரங்கள். அநேகமாகப் புளிய மரங்கள். பௌர்ணமிச் சந்திரனுடைய ஒளி வானத்தின் உச்சியிலிருந்து பொழிய, பாதை நீண்டதோர் வெள்ளிப் பாய் போலத் தோன்றியது. இவ்வளவு ரம்யமான காட்சியின் இன்பத்துக்கு வருடிக் கொடுப்பது போன்ற காற்று; இதமான குளிர் காற்று.

எனக்குக் காரை வேகமாக ஓட்டிக் கிராமத்தைச் சீக்கிரத்திலேயே அடைய மனம் வரவில்லை. சாப்பிட்டாகி விட்டது. கடையொக்குப் புறப்படும் முன் இளநீர் வேறு குடித்திருந்தேன். உடலெல்லாம் பரவசம் ஓடி விளையாடியது. எனக்குப் பிடித்த கேதாரத்தில் பாட்டு நினைத்த கணம் நான் பயப்படுகிறேனா? ஏன் உடல் வியர்க்கவேண்டும்? ஓர் எஞ்ஜினியர்; கல்லூரியில் விளையாட்டு வீரர். சாட்சிக்குச் சென்னியில் ஒரு பீரோ நிறைய வெள்ளிக் கோப்பைகள். ஏன் பயப்படவேண்டும்? அதுவும் ஒரு பெண் உருவத்தைக் கண்டு?

திடீரென்று அவள் பாதைக்கு நடுவே வந்து நின்று வலது கையைத் தூக்கி ஆட்டினாள். இடது கையில் ஒரு 'ஹாண்ட் பேக்.'

நிறுத்த அச்சமாக இருந்தது. இடப்புறமோ வலப்புறமோ ஒடித்து, அவளைத் தாண்டிப் போக மனம் வரவுமில்லை.

நிறுத்தினேன். கார் அருகே வந்தாள்.

''மன்னிக்க வேண்டும், ஸார்; போகிற வழியில், பஞ்சவர்ணத்தில் என்னை இறக்கிவிட முடியுமா?''

பேய் என்னதான் வேஷம் போட்டாலும், ஒரு தடவையாவது கோரச் சிரிப்புச் சிரிக்கும். நான் கேட்ட கதைகளில் பேய்களின் குணம் அப்படித்தான் இருந்திருக்கிறது. இவள் பேய் அல்ல. பெண். பெயர் மயூரா.

''ஏறிக் கொள்.''

''நன்றி ஸார்!'' அவள் பின் பக்கத்துக் கதவைத் திறக்கப் போனாள்.

''முன் சீட்டுக்கு வா.''

''பயமா?'' சிரித்துக்கொண்டே, காரை ஒரு சுற்றுச் சுற்றி முன் கதவுக்கு வந்தாள்.

சிரிக்கிறாளே! ஆனால் சிரிப்புக் கோரமாக இல்லை. ஒரு வேளை இப்படித்தான் ஆரம்பித்து அப்புறம்?

பயத்தில் தொண்டை சற்றே கமற, ''என்ன பயம்?'' என்றேன்.

என் வீறுப்பு அபசுருதியுடன் மனத்தின் பலவீனத்துடன் வெளிப்பட்டது. இதை அவள் உணர்ந்திருக்க வேண்டும்.

''என்ன பயனு அப்படி லோக இழுக்காதிர்கள் ஸார்'' என்ற அவள் காரின் கதவைத் திறந்து விட்டு என் அருகே அமர்ந்தாள். ஏதோ ஒரு விதமான ஜாகீன் நிடரென்று வீசியது. தாமரையா? மருக்கொழுந்தா? மல்லிகையா? ஜவ்வாதும் இருப்பது போலத் தோன்றுகிறதே! ஒருவேளை எல்லாம் கலந்த ஒரு வாசமா?

அவள் காரைக் கதவைச் சார்த்த நான் ஓட்டலானேன்.

பஞ்சவர்ணம் என்ற ஒரு கிராமம் அருகே இருக்கிறது என்று எனக்குத் தெரியும். சித்தப்பாவைப் பார்க்க ஒருவர் அந்தக் கிராமத்திலிருந்து இரண்டு மூன்று தினங்கள் முன்பு வந்திருந்தார். ஆனால் அது எங்கே போகிற வழியில்தான்? எத்தனை மீலோ மீட்டர் இருக்கும்?

அவள் நிடரென்று பேசலானாள்.



உதடுகளை அடைத்தது. 'இது ஒரு பொன்மாலைப் பொழுது.'

மூப்பது மீலோ மீட்டர் வேகத்தில் ('ஏன், அறுபதுக்குக் குறைந்து காரை ஓட்ட மாட்டாயோ?' என்று இரண்டு மூன்று நாட்களாக நித் றப்பா குறைப்பட்டுக் கொள்கிறார். அவர் இப்போது உடன் இருந்தால் குஷியுடன் பேசுவார்.) நான் வருகையில், தூரத்தே ஒருத்தி நின்று கொண்டிருந்தாள்.

எனக்குத் 'திக்' கென்றது.

இரவு பன்னிரண்டு மணி. நெடுஞ்சாலே. மரங்கள். அநேகமாகப் புளிய மரங்கள். இந்த வேளையில் எப்படி ஒரு பெண் துணிந்து பாதையில் இருக்க முடியும்?

சின்ன வயதில் கேட்ட மோகினிக் கதைகளும் பேய்க் கதைகளும் கண் முன் ஓடின. கேதாரம் நின்றது. இதமான குளிர்காற்றுச் சுருவலிபோல் தோன்றியது. ஒரு மேகத் திட்டில் சற்றே சந்திரன் மறைய இருள் கவ்வியதான பிரமை உண்டாயிற்று.

சிவப்புப் புடைவை. சிவப்புச் சோளி; நெற்றியில் சிவப்புப் பொட்டு. பல்லே இளித்துக் காரக் கதவைத் திறந்து கொடுக்கவில்லே.

''நீ யார்?''

''மயூரா.''

''இப்படி ஒரு பெயரா?''

''மயூரவல்லி.''

''இந்த வேளையில்?''

''டெலிபோன் எக்ஸ்சேஞ்சில் ஒன்பது மணிக்கே வேலே முடிந்திருக்க வேண்டும். எனக்குப் பார்த்தியா வர வேண்டியவர் வீட்டில் குழந்தை பிறந்திருக்கிறது. அவர் வரத் தாமதமாகிவிட்டது. நடந்து செல்லப் பயமாக இருக்கிறது.''

''எப்படிப் பயப்படாமல் இப்படி வந்தே.''

''டெலிபோன் எக்ஸ்சேஞ்சு பக்கத்தில்தான். ஒரு பஸ்ஸ் கொண்டுவந்து விட்டுவிட்டு இப்பத்தான் போனுன்.''

ஒரு பேய்க்கு எப்படி இங்கிலீஷ் வார்த்தைகள் தெரிய முடியும்? ஒரு

''சில சமயங்களில் பயப்படவும் ஒரு தைரியம் வேணும் ஸார். கோழைத்தனத்தில் 'பயம் இல்லே' என்று நுனி நாக்கால் சொல்லிக் கொள்ளுவது ஆபத்தாக்கூட முடியும்.''

''வாயை மூடு!''

''மன்னிக்க வேணும்.''

என்னுடைய பயத்தில் நான் ஆவேசமாக அலறியிருக்கிறேன். அவள் உடனேயே கேட்ட மன்னிப்பு என்னைச் சின்னவனுக்கிற்று.

''அது சரி, நான் இங்கே எதைக் கண்டு பயப்பட வேண்டும்?''

''நீங்க இந்த இடத்துக்குப் புதுசா?''

''ஆமாம்.''

''நாங்கள், சிறுத்தைகள், ஒரொரு சமயம் கரடிகள், பாம்புகள், அதுவும் ராஜ ஸர்ப்பங்கள். ஆஹ இவற்றை எல்லாம்விடப் பெண்களின் கொள்ளக்கூட்டம் ஒன்று, அப்புறம் அப்புறம்...''

''அப்புறம்?''

''பேய்!''

''பேயா?''

''நீங்கள் பேய்களே நம்புகிறீர்களா?''

''பேய் இருப்பதை நம்புகிறேனு என்ன கேட்கிறாய்?''

''ஆமாம், ஸார்.''

''இல்லே. பேய் இல்லே.''

''என் அப்பா பார்த்திருக்கிறார். என் பெரியப்பாவைப் பத்து நாள் படுக்கையில் வீழ்த்தியிருக்கிறது. ரத்தம் ரத்தமாக...''

''போதும் நிறுத்து.''

''பயப்பட்டார்கள். ரெண்டு பேரா இருந்தால் பேய் வராதாம்.''

''பேய்க்குப் பெரிய சக்தி இருந்தால் ஏன் இரண்டு பேரைக் கண்டு ஓடுங்க வேண்டும்?''

''தெரியாது. அப்பா சொல்லித் தான் தெரியும்.''

''நாம் சந்நிதானையே பிடித்துவிட்டீர்களே இருக்கிறோம். பேய், பிசாசு எல்லாம் ஏமாற்றம்.''

''அது உங்க கருத்து. மூப்பது வருஷம் முன்னலே ஓர் இருபத்து நிரண்டு வயசுப் பெண் கொலே செய்யப்பட்டாளாம். அவள் இத்தப் பாதையில் தனியாகச் செல்லும் ஆண்களைப் பயமுறுத்துகிறாளாம். சிரித்துப் பேசிக் கடைசியில்...''

''பஞ்சவர்ணம் எங்கே இருக்கு?''

''அதோ ஒரு வெளிச்சம் தெரி கிறதே, அங்கே. பாவத்துக்கு முன்னலேயே காரை நிறுத்துங்கள்.''

ஏதோ விடுதலே கிடைத்துவிட்டதான நிருப்தியில் காரை நிறுத்தி னேன்.

''நன்றி!'' என்ற அவள், ''நீங்கள் யாரென்று தெரிஞ்சுக்கலாமா?'' என்றாள்.

''என் பெயர் மோகன்; எஞ்ஜினியர். கஞ்சிக்கோட்டில் ஒரு தொழிற்சாலே கட்ட இருக்கிறோம். அது விஷயமாகத் தாற்காலிகமா வந்திருக்கிறேன்.''

''எங்கே தங்குகிறீர்கள்?''

''இந்தப் பாலம் தாண்டியதும் ஒரு நிராமம் வரும்.''

''ஓ, ஞானபுரமா?''

''ஆமாம்.''

''தாங்க்ஸ் ஸார்; நல்ல சமயத்தில் வந்தீர்கள்.''

அவள் சென்றாள்.

நான் காரை ஓட்டினேன்.

நிடீரென்று என் பின்புத்தியை நிடீத்து என் மீதே எரிந்து விழுந்தேன் அவளுடைய உடையைப் பார்த்த நான் நடையைப் பார்க்க வில்லையே!

பேய்கள் என்றால் கால் தரையைத் தொடாதோ! நான் படித்த, கேட்ட பேய்க் கதைகளில் ஒரு பேய் கூட டான்ஸ் ஆடியதில்லே. தரையில் கால் தொட்டு நடந்ததில்லே.

இவள் யார்? மயூராதானு? விசாரித்தால் தெரிகிறது.

டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் இருக்கவே இருக்கிறது.

ன் சிற்றப்பா, தம் ஊரில் ஒரு பெரிய புள்ளி. நியாயம் சொல்ல, தீர்ப்புக் கூற, சண்டையை ஏற்படுத்த, விலக்க எல்லாவற்றிற்கும் அவர்தாம். இந்த ஜெட் யுகத்திலும் அவர் தம்முடைய 'கௌரவமான' இரட்டை மாட்டு வண்டியை விட வில்லே. சில சமயங்களில் வண்டியைத் தாமே ஓட்டிச் செல்வார்.

அவர் தான் கூறின கதையை நம்பினார். ஆஹ மயூராவை நம்ப வில்லே.

''நீ ஒரு மோஹினிப் பேயுடன் மூணு மிலோ மீட்டர் பக்கத்தில் உட்கார்ந்து வந்திருக்கிறே?'' என் ருர்.

''இல்லே சிற்றப்பா, அவள் மூழுப் பெயர் மயூரவல்லி.''

''செவப்புப் புடவையா?''

''ஆமாம்.''

''ஹாண்ட் பேகா?''

''ஆமாம். ஏன் சிற்றப்பா, இதெல் லாம் நான் சொல்லித்தானே உங்களுக்கே தெரியும்?''

''பேசாம இருடா. நீ நேத்து வந்து நான் போகிறவன். நான் என் ஆயுசு பூராவும் இங்கேயே இருக்கிறவன். மூப்பது வருஷம் முன்னுடி...''

''இருபத்திரண்டு வயசுப் பெண் கொலே செய்யப்பட்டாள். அவளுடைய...''

''யார் சொன்னு?''

''மயூரா.''

''அவளே அவ கதையைச் சொல்லி விட்டாளா? பேஷ்!''

''அவள் பெண். பேய் அல்ல.''

''நடக்கிறப்போ பார்த்தாயா?''

''இறங்கிப் போறப்போ பார்த் தேன்.''

''கால் தரையில் பட்டிருக்காது.''

''நான் அதைக் கவனிக்கவில்லே.''

''மூட்டாள்! அதுதானே முக்கியம்? மயூரா...மயூரா...''

''கஞ்சிக்கோடு எக்ஸ்சேஞ்சுக்கு டெலிபோன் பண்ணிப் பார்க்கலாம், சிற்றப்பா!''

''என்னேப் பொறுத்தவரையில் அது தேவை இல்லே, அது மோஹினி தான்.''

''நீங்கள் பார்த்திருக்கிறீர்களா, சிற்றப்பா?''

''உன் சிற்றப்பா விளக்கு வெச்சா வெளியே போகமாட்டார்!'' என்று சித்தி கூறினுர்.

''அதுதான் இப்படி அலர்ரூர்'' என்றேன்.

''நீ அலறவேண்டியவன்? அலற மாட்டேன் என்கிறாய்.''

இரவில் உண்டாகும் பயமும் பிதி யும் பகலில் ஏற்படுவதில்லே. நான் தென்புடன் புறப்பட்டேன்.

அன்று இரவு திரும்புகையில் பாதையில் யாரும் தென்படவில்லே. நரிகளின் ஊளேச் சத்தம் அவ்வப் போது கேட்டது. ஒரு பெரிய பாம்பு வெகு வேகமாகப் பாதையின் குறுக்கே ஓடி மறைந்தது.

பஞ்சவர்ணம் பாலம் நெருங்கு கையில், மயூராவின் உருவம் தெரிந் தது. அவள் பாலத்தை ஒட்டினுற் போல் இருந்த இறக்கத்தில் நடந்து சென்று கொண்டிருந்தாள். இடது கையில் ஒரு பெரிய பை. வலில் ஹாண்ட் பாக். வெள்ளேப் புடவை. அவள் கைக் கனத்தையும் பொருட் படுத்தாமல் விரைந்து கொண்டிருந் தாள்.

கால் தில்த்தில் பாவுகிறதா என்று பார்த்தேன். குகிவும் வரையில் புடவை வழிந்தது. சரியாகத் தெரியவில்லே. ஆஹ நடை மனித நடையாகத்தான் தோன் றியது.

மறுநாள் காலேயில் டெலிபோன் எக்ஸ்சேஞ்சுக்குப் போன் செய்தேன். கிடைத்த தகவல் ஒன்றை ஏமாற் றியது. ஒரு பெண் பிப்பரிநிகட அந்த எக்ஸ்சேஞ்சில் வேலே புரிவதில்லே யாம்.

சிற்றப்பா ஐயித்துவிட்டாரா? நான் பார்த்தது பேய்தானு? என் அருகில் ஒரு மோஹினியா உட்கார்ந் திருந்தாள்? அவளா சிரித்தாள்? கலகலப்பாகப் பேசினுள்? 'நன்றி' என்னுளே. 'மன்னிக்க வேண்டும் ஸார்' என்று குழைந்தாளே!

அன்று இரவு திரும்புகையில் மயூரா தென்படவில்லே.

அதற்குப் பிறகு இரண்டு மூன்று நாட்கள் சிக்கிரமே வீடு திரும்பி விட்டேன். பேய் என்றால் அது நடு நிசிக்குப் பிறகுதானே உலா வர வேண்டும்?

ஞாயிற்றுக்கிழமை வந்தது. பஞ்சவர்ணம் கிராமத்துக்குச் சென்றேன். நான்கே நான்கு ஓட்டு வீடுகள். ஒரு சிறிய கோவில். பல குடிசைகள் அங்கும் இங்குமாய்த் தாறுமாறுய்க் காணப்பட்டன.

என்னேயும் என் காரையும் கண்டு பெரியவர்களும், சிறியவர்களும் ஓடோடி வந்து காரைச் சூழ்ந்து கொள்ளுவார்கள் என்று நீனத்தேன். நேர் மாருக, வெளியே இருந்த ஒரிரு வர்கூட, என்னப் பார்த்ததும் வீட் டுக்குள்ளும் குடிசைக்குள்ளும் சென்று விட்டார்கள்.

கோவில் அருகே நிறுத்தினேன். தவஜஸ்தம்பம் இன்னும் இரண்டாக ஒடியவில்லே. அவ்வளவுதான். தாமிரக் கவசத்தைக் காணேம். ஸ்தம்பத்தின் உச்சியில் ஆஞ்சநேயர் உருவம் தெரிந்தது.

நிகரேன்று கோவிலினுள்ளிருந்து ஒருவர் வெளியே வந்தார். வயது அறுபதுக்கு மேல் இருக்கும். மழிக் காத முகத்தில் வெள்ளே ரோமங்கள்



உலர்ந்த தேங்காய் நார்களைப் போல அவர்கோலமாகக் காணப்பட்டன.

இறங்கினேன்.

''சுவாமி!''

''என்ன வேணும்? பூஜைக்காலம் முடிந்து கர்ப்பக்கிருகத்தைச் சாத்தி யாயிற்று.''

''என்ன உதவி.''

''என்ன?'' அவர் குரலில் நயம் இல்லை. ஒரு மிரட்டல் தொனி.

''மயூரா இந்தக் கிராமத்தில்தானே இருக்கிறாள்?''

''மயூராவா? அப்படி யாரும் இல்லையே! அவள் யார்?''

''தெரியாது.''

''தெரியாத பெண்ணைத் தேடி அலையற புள்ளியா? கையிலே ஒரு கார் இருந்தா சதைக் கொழுப்பு ஏறும்போல இருக்கு.''

''சுவாமி!''

அவர் பதில் பேசாமல் நடந்தார். கோவிலில் வழிபாடு செய்கிறவரா இப்படி நடந்து கொள்கிறார்?

கிராமத்தை விட்டு வெளியேறும் முன், ஒரு பதினைட்டு வயதுக் காரன் எதிர்ப்பட்டான்.

''மிஸ்டர்!'' காரைத் திடீரென்று நிறுத்தி அழைத்தேன்.

''என்ன?'' அவள் அருகே வர்தான்; நைலான் வேஷ்டி. டெரிலின் முழுக்கைச் சட்டை. மணிக்கட்டில் எலக்ட்ரானிக் வாட்ச். விரல்களிலிடையே சிகரெட்.

''என் பெயர் மோகன்.''

''நல்லது.''

''நான் ஓர் என்ஜினியர்.''

''ரொம்ப நல்லது.''

''கஞ்சிக்கோட்டில் புதிசா ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கிறேம்.''

''ரொம்ப ரொம்ப நல்லது.''

''நன்றி.''

''என்ன வேணும்?''

''மயூரா என்கிற ஒரு பெண் இந்த ஊரில் இருக்கிறாள். எந்த வீடு என்று தெரியவில்லை.''

''பெண்ணு?''

''ஆமாம்.''

''இந்த ஊரில் பெண்ணே இல்லை. தாய்மார்களே இருக்கிறார்கள்.''

''மயூராவுக்குக் கிட்டத்தட்ட இருபத்திரண்டு வயசு இருக்கும்.''

''அப்படி யாரும் இந்த ஊரில் இல்லையே!''

''சரி. நன்றி.'' காரைப் புறப்படச் செய்தேன்.

''மிஸ்டர்!'' என்ருன் அந்த வாலிபன்.

ஏறிட்டுப் பார்த்தேன்.

''இன்னொருவாட்டி ஏதாவது ஒரு பெண் பெயரைச் சொல்லிட்டு இத்தப் கிராமத்துக்குள்ளே பூந்தே, உன் கை, கால், கார் எல்லாம் அக்கு வேறு ஆணி வேறுக ஆயிடும்! புரிந்ததா?''

''மிரட்டுகிறயா?''

''செயல்லே காட்டணும்னு நான் தயார். ஆனு முதல்லே ஓர் எச்சரிக்கை. ஓர் எச்சரிக்கை கொடுக்கறது இந்த ஊர்ப் பழக்கம். ஒடிவிடு!''

நான் காரைச் சமீபத்தில்தான் வாங்கியிருந்தேன். அதுவும் கம்பெனி அளித்த கடன் உதவியில். அது அக்கு வேறு ஆணி வேறு ஆவதா?

நகர்ந்தேன். பிறகு விரைந்தேன். மயூரா! மயூரா!!

அவள் எங்கே இருக்கிறாள்? இல்லை, இல்லவே இல்லையா? பெண்ணு? அல்லது பேயா?

சிற்றப்பா ஜயிக்கிறாரா, இல்லை, நான் ஜயிக்கிறேனு? உலகத்தில் உண்மையாகவே பேய்கள் உண்டா? உண்மை என்ருல், மயூரா ஒரு பேய். பேய்களே இல்லை என்ருல் மயூரா என்பவள் யார்?

நாட்கள் மெதுவாக ஊர்ந்தன. மயூரா என்னை அறியாமலே என்னை ஆக்கிரமித்துக்கொண்டாள். நான் இதுவரையில் எந்தப் பெண்ணையும் நிலையாக மனப் பீடத்தில் ஏற்றி வைத்ததில்லை. ஏன் மயூரா விதிக்கு விலக்காக இருக்கிறாள்?

சிற்றப்பா இன்னும் அவளை ஒரு பேயாகவே கருதியதால் நான் அவருடன் பேச்சையே ஆரம்பிக்கவில்லை.

மயூரா ஒரு பெண்.

மர்மம் பெண். என் மனத்தை ஈர்த்த ஓர் இளம்பெண். அவ்வளவு தான்.

அன்று இரும்புகையில் பாதை இருட்டில் மூழ்கிவிருந்தது. இருளின் ஒளியில் சாலை ஒரத்து மரங்கள் பூதங்களாகத் தோன்றின.

திடீரென்று ஒரு சத்தம்.

கார் தாறுமாறாக ஓடியது. சிரமத்துடன் ஸ்டியரிங்கைப் பிடித்து, பிரேக்கையும் போட்டேன். இறங்கிப் பார்த்தபோது, பின் பக்கச் சக்கரங்களில் ஒன்று காற்று இழந்து நிற்பதைக் கண்டேன். மாற்றுச் சக்கரம் போடலாம் என்ருல் விளக்கு இல்லை. யார் ஜாக்கி போட்டு, காரை உயர்த்தி, சக்கரத்தைக் கழற்றி, மாற்றுச் சக்கரம் இணைப்பார்கள்? அதுவும் இருளில்?

ஒருமாதிரி காரை நிறுத்திப் பூட்டி விட்டு நடக்கலானேன், கைக்கடிகாரம்

பதினெந்தரையைக் காட்டியது. தொழிற்சாலையிலிருந்து ஐந்து மினி மீட்டர் வந்துவிட்டேன். இன்னும் எட்டுக் மினிமீட்டர் போக வேண்டும். மினி மீட்டர் கற்களோ எண்ணிக்கொண்டே போக வேண்டியதைத் தவிர வேறு கதி இல்லை, என்று நடக்கனானேன்.

சுமார் அரை மணி நேரம் நடந்திருப்பேன். கரடிகளும் சிறுத்தைகளும் ராஜ சர்ப்பங்களும் எப்போது எங்கேயிருந்து பாய்ந்து வருமோ என்ற பயத்தில் முதுகுத் தண்டு சில்லிட்டது.

திடீரென்று பாதையில் வெளிச்சம்; ஒரு கார் வரும் சத்தம். கடவுள் இல்லை என்று எந்த முட்டாள் சொன்னது? ஆபத்து வேளையில் உதவி செய்ய வருகிறவன் கடவுள் தான்.

நான் கையை ஆட்டினேன். அது தேவை இல்லை என்பது உடனடியாகப் புலனுகியது.

"ஓ! மிஸ்டர் மோகன்! உங்க காந்தான் அங்கேஓரமா நிக்கிறதா?"

பார்த்தேன்.

மதுரா! அவளே கார் ஓட்டிக் கொண்டு வந்திருக்கிறள்! பேய் கார் கூட ஓட்டுமா?

"ஏன் நிக்கறீங்க? கெட் இன்." மூன் கதவைத் தொட்டேன்.

"மின் இருக்கையில் ஏறுங்கள்." பின் இருக்கையில் உட்கார்ந்தேன். அவள் மெதுவாக ஓட்டினுள். மூன் இருக்கையில் அவள் அருகே ஒரு பெரிய பை. அதில் என்னஇருக்கிறது?

"டெலிபோன் எல்லாசேஞ்சில் வசிாரித்தீர்கள்!"

"ஆமாம்" என்றேன்.

"அச்சகர் நிமிராகப் பேசி இருப்பாரே!"

"உங்களுக்கு எப்படித் தெரியும், மில் மதுரா? மில்தானே?"

"அந்த இளைஞன் உங்களையும் காதலையும்..."

"அக்கு வேறு ஆணி வேறு..."

நான் சொல்லி முடிப்பதற்குள் அவள் சிரிக்க ஆரம்பித்தாள்.

"நீங்க யார்?"

என் கேள்விக்குப் பதில் சொல்லாமல், "என் நினைவாகவே இருக்கிறீர்கள் போலிருக்கு. அது சரி, உங்க சித்தப்பா எப்படி இருக்கிறார்? உங்க அப்பா எம்.எல்.வீக்குப் போட்டியிட்டுத் தோற்றார் இல்லையா?"

"ஆமாம். உனக்கு எப்படித் தெரியும்?"

அவள் சிரித்தாள்.

"மதுரா, நீ பேய் அல்ல என்பதை இப்பொழுது முழுசா நம்புறேன். ஆனுல் நீ யார்?"

"பாலத்துக்கு முன்னுல் இறங்கிக் கொள்ளுங்கள். அங்கிருந்து ஒரு மினி மீட்டர்தான் ஞானபுரம்"

என்னை அவள் பேச விடவில்லை. இறக்கிவிட்டு, ஒரு பள்ளத்தில் இறங்கி மறைந்தாள்.

நான் நடந்ததைச் சிற்றப்பாவிடம் சொல்லவே இல்லை. மோனிவீக்சென்ஸ் இல்லாமல் காரும் ஓட்டும் என்று நாக்கூசாமல் கூறுவார்.

ஏழாம் நாள்.

அப்பாவிடமிருந்து ஒரு தந்தி வந்தது. சென்னைக்கு அன்றே புறப்பட்டேன். அப்பா காரணம் என்று எதுவும் குறிக்கவில்லை. அம்மாவுக்கு ஆஸ்த்மா. ஒருவேளை அது அதிகமாகி இருக்கிறதோ? சென்னையில் போய்ப் பார்த்தேன். அம்மா ஆரோக்யமாக இருந்தாள்.

"டேய், உன்னை ஒரு பொண்ணு விரும்பறதா அவ அப்பா சொல்லி என் கழுத்தை அறுக்கிறார். உனக்கும் அவளைத் தெரியுமாம். நீயும் விரும்புகிறயாம்."

"யார் அவள்? எனக்கு யாரையும் அவளை விரும்பும் அளவுக்குத் தெரியாதே!"

"பெயர் சீதாலட்சுமி."

"சத்தியமா எனக்குத் தெரியாது. நான் பார்த்ததுகூட இல்லை."

"பெத்த தோப்புனர் கிட்டேயே பொய் சொல்றியே!"

"சத்தியம். சத்தியம்!"

"இன்னிக்கு மத்தியான்னந்தான் போகிறேமே. அந்தப் பொண்ணும் தேத்துத்தான் வெளியூர் போயிட்டு வந்திருக்கிறள்."

"இப்பக் கல்யாணம்..."

"வாயை மூடிண்டு வா."

வீடு பிறியதுதான். ஆனுல் நோத்தியாக இருந்தது.

பெண்ணைப் பெற்றவர் அப்பாவைக் கண்டதும், "ஸார், இந்த வருஷம் என் பொண்ணுக்கு நிச்சயம் பிரஸிடென்ட்ஸ் அவார்டு உண்டு. ஒரு பெரிய கடத்தல் கும்பலைச் சுற்றி வளைச்சுப் பிடிச்சிருக்கா. கல்டம்ஸ் டிபார்ட்மென்ட் பெரிய சாதனையைச் செய்திருக்கு ஸார். என் பொண்தான் கஸ்டம்ஸ் கோஷ்டிக்குத் தலைவி" என்றார், மூச்சுக் கூட விடாமல்.

எனக்குத் தலை சுற்றியது.

"எந்த ஊரில்?"

"வானையார் காட்டில். பஞ்சவர்ணம் என்கிற ரொமம் யாராலும் சீண்டப்படாத இடமாம். ஒரு பழைய கோவில். அங்கே ரகசிய அறைகளிலெல்லாம் துபாய்ச் சரக்குகள், அர்ச்சகரை அடக்கி வைச்சிருந்தாங்க. அதனுலே அவரையே என் பொண் தன் வசம் இழுக்க முடிஞ்சது. பெரிய சாதனை!"

"அப்ப எனக்குப் பொண்ணைப் பார்க்க வேண்டாம்."

"என் அப்படிச் சொல்கிறீர்கள்? நீங்க பார்த்தது மதுரவல்லி. போலிவிப் பிசாசு. இப்பப் பார்க்கப் போறது, சீதாலட்சுமி, அஸிஸ்டன்ட் கலெக்டர், கஸ்டம்ஸ், கொச்சின். கொஞ்சம் நிறங்கள்."

இந்த நிமிஷங்கள் காத்திருந்த தேன். இந்து யுகங்கள் போலத் தோன்றியது.

அவள் வந்தாள். பார்த்தாள்.


அர்த்தத்துடன் புன்முறுவல் செய்தாள். சிவப்புப் புடைவை. சிவப்புச் சோளி. சிவப்புப் பொட்டு. சிவப்புக் காதணி;

"ஸாரி, நான் அங்கே கடத்தல் காரர்களை ரகசியமாக வேட்டை ஆடிக்கொண்டிருக்கையில், நான் என் உண்மைப் பெயரைச் சொல்ல நேரவில்லை."

"சீதாலட்சுமி என்பது உண்மைப் பெயர்தானே? இல்லை அதுவும்.."

எல்லோரும் சிரித்தார்கள். ஏன்? என் அப்பா கூடத்தான்! ※






ரைஸ்மில் பேன் பாக்ஸ்


தந்தி: SIEVES
த.பெ.என் 7

ASOK


போன்
ஆபீஸ் : 3192
பேக்டரி: 3193



ரைஸ் ஹல்லர் சல்லடைகள்



நீலக்கடலை உடைக்கும்
டிகார்டிகேட்டர்கள்



(1) "அசோக்" ரைஸ் ஹல்லர் சல்லடைகள். (4) நெல் அவியல் தொட்டிகள்-சல்லடைகள் (7) ரைஸ் மில் பேன் பாக்ஸ்
(2) "அசோக்" காபி ஹல்லர் சல்லடைகள், (5) கடலைப்பெட்டி - சல்லடைகள் (8) கடலை உடைக்கும் மிஷின்கள்,
(3) பருப்பு அலசு கை சல்லடைகள், (6) தேவையான சல்லடை ரகங்கள், (9) பருப்பு அலசும் மிஷின்கள்

நவீன அரிசி ஆலை ஹல்லர் சல்லடைகளும் கிடைக்கும்.

"சிறந்த முறையில் 37 வருட காலமாகத் தயாரிப்பவர்கள்;"


ஸ்ரீராமகிருஷ்ணை & கோ.,


சல்லடை தயாரிப்பாளர்கள், விருதுநகர்.

Famous Fragrances from Onam Agarbathi Company

ONAM

An earthy fragrance, rich and sensuous– that unfolds slowly and lingers on and on. As close to Nature as you will ever want.





mogra

A small white flower – the jasmine. Packed with a rich fragrance all its own. An exotic perfume favourite down the ages. A symbol of love.

vaishak

It's the fragrance you find in Nature – a bouquet. Blended as cleverly as Nature does in her fields and gardens.





chaitra –the latest

Signalling the arrival of 'Chaitra', the Spring, and memories of chariot festivals of the past, Chaitra, the latest fragrance from the Onam people radiates an appeal for those to whom home is the beginning of heaven.



Onam Agarbathi Company

156, III Main Road, Chamarajpet, Bangalore - 560 018

CAS-OAC-80196



சமையலறையில் சத்தமாவது சத்தம். மாலதியின் குரல் எல்லாருடைய குரல்களையும் மீறிக் கேட்டது.

''என்னே யாராவது ஒரு மனுஷியா மதிச்சாத்தானே? இன்விக்கோ நாளேக்கோ சாகப் போறவ தானேன்னு அலட்சியம். உங்க யாருக்குமே என்னைப் பத்திக் கவலையில்லே.''

மாலதி, அழுகை வெடிக்க இரைகிறாள்.

''மாலும்மா, சும்மா சத்தாதே! உன் உடம்பு இருக்கற நெலமையில இப்படிக் கத்தினு என்னத்துக் காறது? போ, போய்ப் படு. எல்லாத்தையும் நான் கவனிச்சுக்கறேன்.''

இது, குமாரின் தாயார் பார்வதியின் குரல்.

இடையிடையே, ஒரசுத்திகள் மாலதியைச் சமாதானப்படுத்தும் குரல்கள் வேறு.

''மன்னி, இது மாதிரியெல்லாம் பேசாதீங்கோ. அம்மா நொந்து போயிருக்கா. நாங்க என்ன தப்புச் செஞ்சிருந்தாலும் மன்னிச்சுடுங்கோ, நீங்க எங்க ளோட சொந்த அக்கா மாதிரி. இனிமே உங்களைக் கேட்காம எதையுமே செய்ய மாட்டோம்.''

''நான் அப்படியா சொன்னேன்? உசிரோட இருக்கறப்பவே என்னை ஒதுக்கி வச்சா என் மனசு என்ன பாடு படும்?

''மாலதி!''

இது நேரம் வரையில் கூடத் தில் அமர்ந்து பிள்ளைக்குப் பாடம் சொல்லிக் கொடுத்த குமார் எழுந்து வந்து விட்டான்.

அவனைப் பார்த்ததுந்தான் சற்று அடங்குகிறாள் அவள்.

அவளை அதட்டி மாடிக்குப் போய்ப் படுக்கச் சொல்ல வேண்டுமென நினைத்து வந்தவன், மாலதியின் பிரிய விழிகளில் குளமாகத் தேங்கி நிற்கும் கண்ணீரைப் பார்த்ததும் 'சட்'டென அடங்கிப் போனான்.

அவளை ஏறிட்டுப் பார்த்தவன், மௌனமாய்த் தலை குனிந்தான். அடியோற்றில் தாளமுடியாத வேதனை. அவளுடைய முடிவு நிதர்சனமாகத் தெரிந்திருந்தும் ஏதும் செய்ய முடியாத நிலைமையிலுல் ஏற்பட்ட வேதனை. கண்ணுக்குத் தெரியாமல் அவளுடைய உடம்பில் விளையும் எடுத்திருக்கும் நோய் அரக்கனை எதிர்த்து நின்று தோற்றுப் போனதிலுல் ஏமாற்றம்.

''மாலதி, வா, மாடிக்குப் போகலாம்.''

அவன் அவளுடைய தோளை ஆதரவாய் அணைத்தபடி அழைத்துச் சென்றான்.

ஆறு மாதங்கள் முன்பு வரையில் சாதாரணமாய் இருந்தவள் தான் மாலதி. இந்தக் குடும்பத்தின் மூத்த மருமகளாய், பார்வதி நடேசன் தம்பதியருக்குப் பொறுப்பான மருமகளாய், குமாரின் அன்பு மனைவியாய், குழந்தை ரவியின் பாசம் மிகுந்த அன்னையாய் நன்முகத் தான் இருந்தாள்.

அவளுக்கு ஏன் இப்படி ஒரு வியாதி வந்தது? வியாதி? குமாரின் வம்சத்திலோ, மாலதியின் வம்சத்திலோ ஒரு பாவம்கூட இல்லையே? யார் செய்த பாவம் இப்படி இந்தத் தம்பதியரை ஆட்டுவிக்கிறது?

குமாரின் பெற்றவர்களும், சகோதரர்களும் சென்னையில் இருக்க அவன் மட்டும் திருச்சியில் இருந்தான். அவனுக்கு வேலை அங்கே. மாலதியும், ஏழு வயசு மகன் ரவியும் அவனுடைய வாழ்க்கையைச் சொர்க்கமாக்கிக் கொண்டிருந்த நேரம்.

செக்கச் செவேலெனத் தக்காளிப்பழம் போல இருந்த மாலதியின் உடம்பு நாளுக்கு நாள் இளைத்து வந்தது. அடிக்கடி தலை சுற்றலும் மயக்கமும் வேறு சேர்ந்து கொண்டன.

''ரத்தச் சோகையா இருக்கும். நல்ல டாக்டர் கிட்டே காமிச்சு டானிக் ஏதாவது வாங்கிச் சாப்பிடு.''

''இதுக்கெல்லாம் ஹோமியோபதி தேவலே.''

''இதெல்லாம் திருஷ்டிதாங்கறேன். பார்வதி மாமிக்கு நாலு நாட்டுப் பொண்களும், பளிச்சுனு அமைஞ்சுட்டாளேன்னு தெருக்காரா எல்லாரும் வச்ச கண்தான். நம்ம தெரு முக்குலே ஒரு புதன் கிழமை சாயந்தரம் ஒரு பிடி மண் எடுத்துண்டு வந்து குழந்தைகளே உட்கார்த்தி வச்சுச் சுத்திப் போடு.''

இப்படி ஆளுக்கொருசுச் சொல்ல ஒரு நாள், குமார் ஆபீஸிலிருந்து வருவதற்குள் தாளமுடியாத வயிற்று வலியில் துடித்துப் போய் விட்டாள் மாலதி.

அப்பொழுது, அடுத்த வீட்டுக்காரியுடன் ஆசுபத்திரிக்குப் போனவள்; அவசரமாய் ரத்தப் பரிசோதனை செய்து பார்த்த டாக்டர், அவளிடம் எப்படி விஷயத்தைக் கூறுவதென்று பிரமித்து நின்றுவிட்டார்.

இன்றைக்கெல்லாம் இருந்தால் முப்பது வயசு இருக்கும். இருபத்தொரு வயசில் கல்யாணம். ஆறு வயசில் மகன். இன்று சாவின் விளிம்பில்.

இரத்தப் புற்று நோய்.

அன்று மாலை குமாரிடம் தனித்துப் பேசிய டாக்டர் அவள் நிலைமையை விளக்கிச் சொன்னபோது கதறி விட்டான் அவள்.

''டாக்டர், எப்படியாவது அவளைப் பொழைக்க வச்சிடுங்க. என்ன செலவானாலும் சரி.''

குமார் படித்தவன் தான். இந்த வியாதியின் தொடையைப் பற்றி அவனுக்குத் தெரியும். இருந்தாலும் வகியில் மாட்டிய விஸ்ங்கு முடிந்த வரையில் தப்ப வழியைத் தேடத் தானே செய்யும்?

''சென்னையில் கான்ஸர் இன்ஸ்டிடியூட்டுக்குப் போங்கள். வியாதி எந்த நிலையில் இருக்கிறது என்று அவர்கள்தாம் சொல்லவேண்டும். சிகிச்சையும் அங்கே தான் செய்ய வேண்டும்.''

வேலையைச் சென்னைக்கு மாற்றிக் கொண்டு, குழந்தையையும் மாலதியையும் அழைத்துக் கொண்டு குமார்

வந்து நின்றபோது, பார்வதியின் அழுகையை யாராலும் கட்டுப் படுத்த முடியவில்லை. ஏன், அந்தக் குடும்பமே மாலதிக்காக அழுதது.

''மன்னி, உங்களுக்கு தெய்வம் ஆயிடாது. நாங்க எல்லாரும் தெய்காக இருக்கோம்? உங்களை நல்ல படியாத் தேற்றி விட்டுட்டுத்தான் மறு வேலை.''

ஓரகத்திகள், மாலதியைக் கட்டிக் கொண்டு அழுதார்கள்.

''என் கண்ணே! உன் நல்ல மனசுக்கு எதுவும்கெடுதல் நேராதுடி. என் புள்ளைக்குப் பொண்டாட்டியா, என் பேரனுக்குத்தாயா நீ பொழைச்சு எழுந்திரு, போதும். குருவாயூரப்பனுக்கு எடைக்கு எடை சர்க்கரை வாங்கிப் போடறேன்.''


பார்வதி, மருமகளை மடியில் சாய்த்துக் கொண்டு கதறினாள்.

குமாருந்தான் ஏதோ கடவுள் சந்நிதிகளில் கரம் கூப்பி நின்று பிரார்த்திருக்கிறான்!

''இறைவா, எனக்கு அவளைத் திருப்பிக் கொடு. எனக்கு வேறு எதுவுமே வேண்டாம்.''

ஒவ்வொரு முறை ஆபத்திரிக்கு அவளை அழைத்துப் போய் விட்டுத் திரும்பும்போதும் குமார் நடைப் பிணமாக வருவான்.

இதுதான் முடிவு. இதை மாற்ற மனித யத்தனத்தில் இனியேல் எதுவும் இல்லை. இந்த வியாதியிலிருந்து விடுதலை பெற மருந்து ஒன்றையும் கண்டுபிடிக்கவில்லையே!



மாலதியின் உயிர் எந்த நிமிடமும் போகலாம். அடுத்த கணமே அந்தப் பயங்கரம் சம்பவித்தாலும் சம்பவிக்கலாம். மேலும் சில நாட்கள் தாங்கினாலும் தாங்கலாம். மிஞ்சிப்போனால் ஏழெட்டு மாசங்கள்.

மாலதியிடம் அத்தனை பேரும் கனிவாக நடந்து கொண்டார்கள். மும்பு மாமியார் மருமகள் ஸ்தானத்தில் ஏற்படும் சில்லறைச் சண்டைகள், கோபதாபங்கள் எதுவுமே இப் பொழுது இல்லை.

''பாவம்! தாயில்லாப் பொண். ஒவ்வொரு நாளும் எமனோட போராடிண்டிருக்கா. அவ கிட்ட எதுக்குச் சண்டை?''

இப்படி அத்தனை பேருமே விட்டுக் கொடுக்கப் பழகிவிட்டார்கள். குழந்தை ரவிகூட அம்மாவின் நிலை தெரிந்து அனுசரித்துப் போகிறான்.

தன் நிலைமை தெரிந்ததும் 'ஓ' வென அழுதவள், ''ஐயோ, என்னை எப்படியாவது காப்பாத்துங்கோ'' என்று கதறியவள், ஒவ்வொரு முறை ரேடியம் சிகிச்சைக்குப் போய் வரும் போதும் ''என்னை உங்களுக்கு எத்தனை கஷ்டம்?'' என்று குமாரின் கையைப் பிடித்துக்கொண்டு விசும்பிய வள், நோயின் கொடுமை தாளாமல், ''சாவு வந்தாலே தேவலே'' என்று நொந்துகொண்டாள்.

டாக்டர்கள் விதித்த ஆறு மாசக் கெடுவையும் தாண்டி, அவளுடைய ஜீவமரணப் போராட்டம் தொடர்ந்து கொண்டிருந்தது.

ஆற்றமை தாளாமல் கோபம் வெடிக்கிறது. எடுத்ததற்கெல்லாம் அழுகை, பிடிவாதம், எல்லாரிடத்தும் சந்தேகம்.

'மாலதியா இப்படி மாறினாள்?'

பார்த்தவர்கள் அதியப்படவில்லை. என்னதான் அவளுடைய நிலைமையை உத்தேசித்துக் குமார் அனுசரித்துப் போக முயன்றாலும், சில சமயங்களில் அவளால் தாக்குப் பிடிக்க முடியாமல் போய்விட்டது. அன்று, குமாருக்குச் சாதம் பரிமாறிக் கொண்டிருந்தாள், இரண்டாவது மருமகள் தேதா. ஆபீசுக்கு நேரமாகி விட்டது.

அவசர அவசரமாக இலை முன் வந்தமர்ந்து, ஒரு கவளம் சோற்றைக்கூட அவன் வாயில் போட்டிருக்கமாட்டான். மாலதி அவன் பின்னாலேயே ஓடி வந்து சமையலறைக்குள் நுழைந்தாள்:

''என்ன மன்னி?''

''அவருக்கு நான் சாதம் பரிமாறறேன். நீ போ!'

''சரி.''

தேதா லிலி நின்றாள். நாலு தரம் சமையலறைக்கும் சாப்பாட்டுக்கூடத்துக்கும் நடந்தது மாலதிக்கு மூச்சு வாங்கியது.

''எதுக்கு மாலதி வீண் ரெமம்? நீ இப்படியே உட்கார்ந்துக்கோ. அவா எல்லாரும் போடறா.''

''அப்போ நான் வேண்டாங்கறேளாக்கும்.''

''உன்னை முடியாதப்ப எதுக்கு இழுத்த விட்டுக்கறே?''

குமார் சமாதானப்படுத்தும் குரலில் சொல்ல, அவள் சீறி வெடித்தாள்.

''எனக்குத் தெரியும்; என்னோட மூஞ்சியைப் பார்க்கவே உங்களுக்குப் பிடிக்கல்லே. அவாளே மாதிரி, அழகா டிரஸ் பண்ணிண்டாத்தான் உங்களுக்குப் பிடிக்கும். அவா யாராவது போட்டாச் சிரிச்சுச் சிரிச்சுப் பேசிண்டே சாப்பிடுவேள்.''


''மாலதி!''

அதிர்ந்து நின்ற குமாரை, உள் இருந்தபடியே சாடை காட்டி அடக்கினாள் பார்வதி.

'போனப் போறு, விடு. இதுக்காக அவனைத் திட்டாதே.''

''ஆமாம், மன்னி, அவளுக்கு என்ன வேதனையோ என்னவோ? அதான் இப்படிக் கத்தறு. இதையெல்லாம் பெரிசா எடுத்துக்காதீங்கோ. தேதாவைச் சொல்ல மன்னிக்கு உரிமை இல்லேயா என்ன?''

குமாரின் தம்பி, தேதாவின் கணவன், அண்ணனிடம் ரகசியமாய்க் கூறினான். குமாருக்குமே மனசு வரவில்லை.



"தீபாவளி நல்வாழ்த்துக்கள்"


மங்கல மதிமுகத்தில் மெருகூட்ட

ஐடெக்ஸ்

லிக்ஸ் குங்குமம்

matt finish

நாடெங்கணும் நாகரீக நங்கையர்
நாடி அணிவது ஐடெக்ஸ் குங்குமம்.
மங்கையரின் மலர்முகத்தின் இன்னழகை
எடுத்துக் காட்டுவதற்கெனவே
14 கண்கவர் வண்ணங்களில் கிடைக்கிறது.
சாஸ்திரிய முறைப்படி தயாரிக்கப்படும்
ஐடெக்ஸ் குங்குமம் சருமத்திற்கு எவ்வித
தீங்கும் விளைவிக்காதது.



ஐடெக்ஸ்
38 ஆண்டுகளாக உங்கள்
நம்பிக்கையின் மகத்தான சின்னம்

அரவிந்த் லாபரடரீஸ், சென்னை-600 033.

'எம்கேயாவது நான் நிட்டிட்டு இவளுக்கு ஏதாவது ஆயிடுத்துன்னு என்ன பண்றது?'

இந்த நிகேபப்பு அவனுடைய நாவைக் கட்டிப் போட, செயலற்றுப் போய் உட்கார்ந்திருந்தான் அவன்.

இதுபோல் பல தடவை அவனே இக்கட்டான நிலைமையில் மாட்டி விட்டிருக்கிறான் மாலதி.

"நான் இருக்கறப்பவே ரவிக்குப் பிரம்மோபதேசம் செஞ்சுடுங்கோ."

'சரி மாலதி, எவ்வளவு சீக்கிரம் முடியுமோ செஞ்சுடறேன்.'

பிரம்மோபதேசம் ஆன சிறுவனே ஒரகத்திகள் அன்பும் அசையும் பொங்க இழுத்து வைத்து வீபூயாட்டாய்க் கேலி செய்து கொண்டிருந்தார்கள்.

"ரவ்ஸ், வா மாடிக்குப் போகலாம்" என்றள் மாலதி.

அம்மாவின் முகத்தில் கனலாய்த் தெறிக்கும் கோபத்தை லட்சியம் செய்யாத குழந்தை, சித்திகளின் நடுவில் உட்கார்ந்து கதை பேசினுள்.

"ரவி, வரப்போறயா, இல்லியா?"

"இதோ வரேம்மா."

"ரவி, சந்தியாவந்தனம் பண்ணத் தெரியுமாடா?"

இதா சித்தபடி கேட்டாள்.

"இதோ பாரு, பூணூல் போட்டாச்சு இல்லியா? இனியே குழந்தை மாதிரி சித்தி மடியில் எல்லாம் உட்காரக் கூடாது. என்ன? நீ பிரம்மச்சாரி. பெரம்பளங்களத் தொடவே கூடாது."

"தொடுவேன்."

"ஐயய்யே! தொடக்கூடாது."

தன்னைச் சேர்த்துக்கொள்ளாத அந்தச் சிறு கும்பல் தன் குழந்தையில் பேச்சில் கலகத்துச் சிரித்தது கூடப் பொறுக்கவில்லே அவளுக்கு.

விடு விடுவெனக் குழந்தையின் கரத்தைப் பிடித்து இழுத்துக் கொண்டு தன் அறைக்குக் கிளம்பிஞாள்.

"என்ன மாலதி, இது?"

கணவன் தடுப்பதை எரிச்சலுடன் ஒதுக்கினுள்.

"என்ன நிரிப்பு வேண்டிக் கெடக்கு? எல்லார் வீட்டுலேயும் குழந்தைக்குப் பூணூல் கல்யாணம் நடக்கறப் பலயா நம்ம வீட்டுலேயும் நடந்திருக்கு? நான் செத்தாத் தெவசம் பண்ணறதுக்கு முன்னேற்பாடா என் புள்ளைக்குப் பூணூல் போட்டிருக்கு. இல்லேன்னு இத்தன கருக்குப் போட வேன்னு யார் அழுதா?"

அவள் வெறி பிடித்தாற்போலக் கத்தினுள்.

இரவு, சாப்பாடு முடிந்து பின் புறத் தாழ்வாரத்தில் உட்கார்ந்திருந்த பார்வதியின் அருகில் வந்து நின்றான் சிறுவன்:

"என்னடா?"

"ஏன் பாட்டி, தெவசம் பண்றதுக்காகத்தான் எனக்குப் பூணூல் போட்டிருக்கா?"

பார்வதி, பேரனே இழுத்து அணைத்துக் கொள்கிறள்:

"போடா அசடு! உங்கம்மாதான் ஏதோ உளர்ருன்னு நீயும் அதை நெஜம்னு நம்பறயே! அதெல்லாம் ஒண்ணுமில்லே. போ. போய் அம்மா பக்கத்துல படுத்துத் தூங்கு."

ஒரு நாள் குழந்தையை அருகில் அழைத்துக் குமார் காதில் விழும்படி யாகச் சொன்னள்:

"ரவி, அம்மா போயிட்டா அப்புறம் அப்பா வேற கல்யாணம் பண்ணிண்டுடுவார். சித்தியிட்டே சமர்த்தா நடந்துக்கோ. என்ன?"

"யாரு, தோ சித்தி கிட்டயா?"

"இல்லேடா; அப்பா கல்யாணம் பண்ணிக்கப் போற புதுப் பொண்டாட்டி கிட்ட. அவளும் உனக்குச் சித்திதான். சின்னம்மா. நீ சமர்த்தா நடந்துக்கலேன்னு சூடு போடுவா."

"மாலதி குழந்தைகிட்ட என்ன பேசறதுன்னே இல்லியா?"

குமார் அழாத குறையாகக் கேட்டான்.

"ஏன், சொன்னு என்ன? நானேக்கு நடக்கப் போறதைத்தானே சொன்னேன்? நிசார்ல ஒருத்தி வந்து என் புள்ளையப் பாடாப் படுத்திலு அவன் அதிர்ந்து போயிடமாட்டானு? முன்னடியே சொல்லிவச்சா நல்லது தானே?"

"நான் கல்யாணம் பண்ணிக்கவே மாட்டேன் மாளும்மா."

"உங்களாலே அப்படியிருக்க முடியாது. இப்ப அப்படித் தான் சொல்லுவேள். வேணும்குப் பாருங்கோ, நான் போனதும் ஆறு மாசத்துக்குள்ளே உங்களுக்குக் கல்யாணம் நடக்கறதா இல்லியான்னு. உங்கம்மா இன்னொரு தடவை வரதட்சிணை வாங்குவா. இன்னொரு தடவை கல்யாணத்துக்குக் கெளம்புவா."

"மாலதி, என்ன பேசறதுன்னு ஒரு வெவஸ்தை இல்லியா?"

"பேசினு என்ன? அவனும் நானேக்கு எல்லாத்தையும் புரிஞ்சுக்க வேண்டியவன்தானே?"

குமார், மாலதியையே பார்த்த படி நிற்க, ரவி புரிந்தும் புரியாம லும் மலங்க மலங்க விழித்தான்.

சட்டென நகர்ந்து அறையை ஒட்டினாற்போல் அமைந்திருந்த பால் கனியில் போய் உட்கார்ந்தான் குமார். தன்னை மீறிக் கண்களில் படர்ந்தது ஈரம்.

எப்படி இருந்தவள் எப்படி மாறி விட்டாள்?

சாவு இத்தனை கொடுமையானதா? பாழாய்ப் போன எமன் இவனை எத்தனை தூரத்துக்கு அப்பக் கறுக்கி ரிருன்? இருந்தாலும், இவனுப் பிரிவதை நினைத்துப் பார்க்க முடிய வில்லையே அவளுல்;

அவளுடன் வாழ்ந்த நாட்கள் இன்னமும் அவன் நெஞ்சில் பசுமையாய் இருக்கின்றனவே!

இப்படி எதற்கெடுத்தாலும் சிறு பவன், உயிருக்காக டிமுத்துப் பறித்துக்கொண்டு டெக்கிறபோது, 'காப்பாற்று, காப்பாற்று' என்றதானே பாற்று, காப்பாற்று' என்றதானே பாற்று, காப்பாற்று' என்றதானே

மந்திரத்தை வெகு வேகமாய்ச் சொல்லிரர்.

குமார், ரவியின் கரத்தை அழுத்திப் பிடிக்கிருன்.

''கண்ணு, அம்மாவுக்காகச் சுவாமியை வேண்டிக்கோடா, அம்மாவுக்குத் தேவலேயாயிடணும்னு.''

குழந்தை, தாயின் முகத்தையே உற்றுப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான். முகத்தில் ஒருவித தீவிரம்.

''அப்பா, அம்மா இன்னமும் சரி மப்படாம சட்டுனு போயிடணும்னு வேண்டிக்கோ.''

அத்தனே துக்கத்திலும், மகனின் வார்த்தைகள் நெஞ்சில் ஈட்டியாய்ப் பாய, பளீரெனச் சிறுவனின் முதுகில் ஓங்கி அறைந்தான் குமார்.

''அந்தண்டை போடா. உன் கரிநாக்குப் பலிச்சுடப்போறது.''

அவன் மீண்டும் அடிக்கக் கையை ஓங்கினன். ரவி பாட்டியின் அரவணைப்புக்குள் கோழிக்குஞ்சாய் ஒதுங்கினன்.

''உங்களுக்கெல்லாம் அம்மாவோட பொணத்தைப் பார்க்கப் பயம். எனக்குக்கூட அம்மா உசிரோட இருந்தாத் தேவலேன்னுதான் இருக்கு. ஆனு, வீட்டுல இருக்கற அத்தனே பேரையும் அம்மாவோட வியாதி கொல்லாமக் கொல்றது. அம்மா பதித்ததலேநந்து யாருமே நிம்மதியாவே இருக்கலாள்ளு அதுவும் இல்லே. ஒவ்வொரு நாடவையும் படுத்து எழுந்துட்டா அம்மா இன்னமும் தொந்தரவு கொடுக்கரு. தண்ணீத் தானே நிரம்பப் படுத்திக்கரு. போரும். அம்மாலை விடுப்பா. போகட்டும். வலி தெரியாமப் போகட்டும்னு சுவாமியை வேண்டிக்கோங்கோ.''

அந்தச் சிறுவனுக்குத் தெரியும், தன் தாய் மற்றவர்களின் தெய்வில் வாணுமுள்ளாய் உறத்துவது. என்ன தான் அவளுக்காக இவர்கள் ஒடி ஒடி உழைத்தாலும், தாள முடியாத எரிச்சலில் லெ வார்த்தைகள் தங்களுக்குள் சொல்லிக்கொள்ளாமல் இல்லே. அதெல்லாம் குமாருக்கோ பார்வதிக்கோ தெரியாது. ஆனல் ரவிக்குத் தெரியும்.

நாலேந்து நாட்களுக்கு முன், தோவின் பிறந்தகத்து மனிதர்கள் வந்திருந்தபோது அவளது அனுப்பு, பேச்சிலே தெரிந்தது.

தோவின் தாய், ரவியைச் சுட்டிக் காட்டி மகளிடம் கேட்டான்.

''இவன் அம்மாவுக்கு எப்படி இருக்கு?''

''அப்படியேதான். ஆறு மாசம் கூடத் தாங்காதுன்னு டாக்டர் சொன்னர். ரெண்டு ஆறு மாசம் போயிடுத்து. படுக்கையோடபடுக்கையாக் கெடந்தாலும் செஞ்சுடலாம். அப்பப்பா, என்னமா ஆட்டுவிக்கரு? எதிர்த்துப் பேசவும் கஷ்டமா இருக்கு. நாலேக்கே பொசுக்குனு போயிட்டா, நம்ம வார்த்தைதானே மிஞ்சும்? [எல்லாருக்கும் சிரமத்தைக் குடுத்துண்டு தானும் அவதிப் பட்டுண்டு கெடக்கா.''

இந்த வார்த்தைகள் ஒரு கணம் நெஞ்சை அதிரச் செய்தாலும் தனியே அமர்ந்து யோசித்துப் பார்த்தில் அவர்களின் நிலம் புரிந்தது.

'அம்மா நிரும்பவும் எழுந்து, நிரும்பவும் காலண்டரிலே ஒவ்வொரு தேதியையா எண்ணிண்டு, நிரும்பவும் இவர்கள் எல்லாரையும் விட்டு, அழுது, அடம் பிடித்துக்கொண்டு, இப்படி இருக்கறதுக்குப் போயிட றதே தேவலாம் இல்லேயோ?

'எதுக்காக இந்த அப்பா இன்னமும் சுவாமிகிட்ட அம்மாவைப் பிழைக்க வைக்க வேண்டிக்கருர்?'

அவன், எதிரே மாட்டியிருந்த சுவாமி படங்களையே வெறிக்கப் பார்க்கிருன்.

''வேண்டிக்கோடா. அம்மாவுக்குத் தேவலேயாயிடணும்னு'' என்று பார்வதி, அழுகையுடன் கூறினன்.

ரவியின் உதடுகள் எதையோ முணுமுணுத்தன.

குமார், அவனேயே உற்றுப் பார்க்கிருன்.

'என்ன வேண்டுகிருன் இவன்?'

'அம்மாவின் மரணத்தையா, சுகத்தையா?'

சிறுவனின் முகம் நிச்சலனமாயிருக்கிறது.

''என் பிரார்த்தனேயைச் சாமி கேட்பார் அப்பா. கவலேப்படாதே.''

நிர்க்கமாய்ச் சொல்கிருன் அவன்.



OUR HEARTY DEEPAVALI GREETINGS

TO ALL OUR CUSTOMERS

Meenaakshi Trading Corpn.

Manufacturers of

"BRITE" WOOD SCREWS


I-2, 3 and 6, Industrial Estate

PUDUKKOTTAI-622 004

Phone : 2461 & 2785

Grams : BRITESCREW

உங்கள் பாத்ரூமை வண்ணமயமாக அழகு படுத்த பாரிவேரைப் போல வேறு ஏதுமில்லை!



வெனிஷியன் சிவப்பு, மரகதப் பச்சை, வானத்து நீலம், வெளிர் மஞ்சள், பவழச் சிவப்பு அல்லது கண்ணைப் பறிக்கும் வெள்ளை, அது எந்த வண்ணமாக இருந்தாலும் இந்தியாவிலும், அயல் நாடுகளிலும் உள்ள லட்சக்கணக்கானோர் தேர்ந்தெடுப்பது பாரிவேர்தான். சானிட்டரிவேர்களில் பாரிவேர் ரகவரிசை தன்னிகரில்லாதது. இணையில்லாத ஸ்டைல், வேலைப்பாடு, அசாதாண உறுதி, நீடித்த உழைப்பு, நெஞ்சை அள்ளும் எழில் தோற்றம், இவ்வளவும் கொண்டிருப்பதால் சானிட்டரிவேர் என்றாலே பாரிவேர் என்றுகிவிட்டது.

Parryware
VITREOUS

சொரமிக்ஸ் டிவி.
ஈ.ஐ.டி.-பாரி (இந்தியா) லிட்.,
"டேர் ஹவுஸ்", சென்னை 600 001.

K. ORR & COMPANY

28, STRINGERS STREET, MADRAS 600 001

Phone: 23019, 23526 Grams: "PRESUNDRY"

Agents and Stockists

- PAPER
- PRINTING Inks: "UNITED", "MONARK", "COATES" and "HOOGHLY" Brands
- Printers Sundries
- MONO SPOOLS

Indents Booked For

- Paper Process Zinc and Copper Sheets, Rubber Blankets, Lithographic Zinc Sheets, Hardware
- Bronze Powders From ENGLAND
- Art Paper From JAPAN
- Bolts and Nuts From Partap Fasteners Pvt. Ltd., PATANCHERU—A.P.

BAGS & PRINTS

62, CHINNATHAMBI STREET, MADRAS 600 001

Phone: 29541 Grams: "PAPERBAG"

Manufacturers of Tele Tapes & Teleprinter Paper Rolls

மீனுவுக்குப் படுக்கையிலிருந்து எழுந்திருக்கத் தோன்றவில்லை. அளவுக்கு மிஞ்சிய அசதி. வாசல் தெளிக்கும் சத்தம் கேட்டது. எதிர் வீட்டு நாய் எழுந்து குரைக்கும் ஒலி.

இதே போன்ற ஒரு மயக்கத்தை, அசதியை அவள் உணர்ந்திருக்கிறாள். உணவு செல்லாத கும்மட்டல், சுறுசுறுப்பில்லாத உணர்வை அநுபவித்திருக்கிறாள். அது ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு, முதல் குழந்தையாக ராதா அவர்களுடைய வாழ்வில் வந்து புகுந்தபோது.

இந்த ஐந்து ஆண்டுகளாக அவர்கள் எப்படியோ பாதுகாப்பாகச் சமாளித்து விட்டார்கள். அடுத்த குழந்தை வேண்டாம் என்பது இல்லை. அதற்கு அவசரப்பட வேண்டாம் என்ற உணர்வுதான். கொஞ்ச நின்று விடும். ராதாவை நடுவில் வைத்துக் கொண்டு, அவள் மூலமாகப் பேசுவார்கள். அவர்களுக்கிடையே குழந்தை பாலமாக விளங்குவாள். தலையை அப்பாவின் மடியிலும், கால் கீழே தாயின் மடியிலும் போட்டுக் கொண்டு, சொகுசாகப் புரண்டு சிரிப்பாள். அந்தச் சிரிப்பில் சச்சரவுகள் மறைந்து போகும்.

ராதாவுக்கு அவள் பாடம் சொல்லிக் கொடுப்பாள். சரியாகப் படிக்கா விட்டால் அடிப்பாள். அதில் கணவனுக்கும் மனைவிக்கும் சண்டை வரும். போட்டிக்கு அவன் குழந்தையைத் தனியாக அழைத்துப் போய்ப் பாடம் சொல்லிக் கொடுப்பான். அப்போதும் ராதாவுக்கு மனசு கேட்காது. சரியான பாடத்தை மறுபடி அவளிடந்தான் வந்து ஒப்பிப்பாள்.

இந்த வாழ்க்கை அலுக்கவில்லை.

தேவகி சிரித்துக் கொண்டாள். ''அப்படித் தான் தோன்றும். ஐந்து ஆண்டுகளாக உனக்கு இந்த அநுபவம் தொடரவில்லையே? இருக்கட்டும். இதில் ஒன்றும் சிரமம் இல்லை? இன்னொரு குழந்தை இருந்தால் தேவலை என்று தோன்றினால், இப்போது பெற்றுக் கொள்வதுதான் நல்லது. உனக்கு வயது முப்பதை நெருங்கிக் கொண்டிருக்கிறது. இதை விடத் தாமதமானால், பிரசவத்தில் சிரமம் இருக்கும்.''

டாக்டரை நிமிர்ந்து பார்க்கக் கண் கூசிற்று. மனத்துக்குள் ஏதோ ஊசச்சல்.

''நானுக்கு வந்து தெரிந்து கொள்கிறேன் டாக்டர்.'' படி இறங்கி வெளியே வந்து விட்டாள்; பீரீட்சை முடிவுக்குக் காத்திருக்கும் மாணவியைப் போல நெஞ்சில் ஒரு தவிப்பு:



சின்ன மலர் சொன்ன கேதி

எஸ். லட்சுமி சுப்பிரமணியம்

நாளாக ராதா பள்ளிக்கூடத்துக்குப் போய்க் கொண்டிருக்கிறாள். வீட்டில் இருந்து வீண் பொழுதுபோக்க மனம் இல்லாமல், மீனுவும் வேலைக்குப் போய்க் கொண்டிருக்கிறாள். இந்த அமைதி சில ஆண்டுகள் ஓடட்டுமே என்ற ஆசைதான்.

மீனு எழுந்து பல் தேய்த்து விட்டு வந்து, அடுப்பை மூட்டினாள். ராமு இன்னும் எழுந்திருக்கவில்லை. அன்று ஞாயிற்றுக்கிழமை. மெதுவாகத்தான் எழுந்திருப்பான்.

ராதாவைப் பக்கத்து வீட்டில் விட்டுவிட்டு இருவும் இரவு இரண்டாவது காட்சி சினிமாவுக்குப் போய் விட்டு வருவார்கள். மூவரும் கடற்கரைக்குப் போய் அமர்ந்து, இரவு வரை பொழுதைக் கழித்து விட்டு, வெளியே சாப்பிட்டு விட்டு வருவார்கள். ராதா வழியிலேயே தூங்கி விடுவாள். மாறி மாறி அவளைத் தோளில் தூக்கிக்கொண்டு வருவதும் ஓர் இன்பமாகவே தோன்றும்.

இருவருக்கும் சில சமயம் சச்சரவுகள் ஏற்படும்; அப்போது பேச்சு இதிலிருந்து ஒரு மாறுதலைத் தேடும் எண்ணம் அவர்களுக்கு இன்னும் வரவில்லை. ராதா இன்னும் கொஞ்சம் வளர்ந்த பிறகு, இன்னும் சில ஆண்டுகள் நீண்டபிறகு, அடுத்த குழந்தையை அவர்கள் வரவேற்கிறார்கள். அந்த அளவுக்குப் பொறுக்கவில்லை. அவள் பிரார்த்தனை செய்து கேட்கவில்லையே? இன்னொரு குழந்தைக்கு இப்போது என்ன அவசரம்?

டாக்டர் தேவகி அவளைச் சோதனை செய்து பார்த்துவிட்டு மோவாயைத் தடவிக் கொண்டாள். ''யூனி சாம்படீவிங்கே இருக்கட்டும். நானுக்கு முடிவைச் சொல்லிறேன்'' என்ஞர், எதையோ எழுதிக் கொண்டே.

''அதில் நிச்சயமாகத் தெரியுமா டாக்டர்?''

''தெரியும். சுமார் நாற்பத்து இரண்டு நாட்களில் ஹார்மோன்கள் தெளிவாகவே புலப்படும். உனக்கு நாற்பத்தைந்து நாட்கள் ஆகிவிட்டன.''

''நாற்பத்தைந்து ஆண்டுகள் ஆன மாதிரி இருக்கிறது டாக்டர்!''

இலே மறைவில் அலரும் பூவாய் அந்த ஆசை தலே காட்டாமல் இல்லே. பால் மணம் தெரிய வாயைக் கன்னத்தில் அழுத்தி முத்தமிடும் குழந்தை. ஏன் இருக்கக் கூடாது?

மறு நாள் காலையிலேயே டாக்டரிடம் போய் விட்டாள். அவள் அறைக்குள் நுழைந்ததுமே தேவகி புன்னகையுடன் நிமிர்ந்தாள்.

''பாடில். இதோ உன் ரிசல்ட்'' என்று உறையை அவளிடம் நீட்டினாள். மீனுவின் முகம் விழுந்தது.

''ஏன் 'உம்'மென்று ஆகிவிட்டாய்? உனக்கு மறுபடி தாய்மை அடைய விருப்பம் இல்லேயா? அப்படியானால் சொல்லிவிடு. இப்போதும் சிக்கல் ஒன்றும் இல்லே. பத்திரமாய் அகற்றி விடலாம்.''

மீனுவின் முதுகில் ஒரு சிலிர்ப்பு. டாக்டருக்கு அது இன்னொரு அறுவைச் சிகிச்சை; அவ்வளவுதான். அவளுக்கு அது ஓர் உயிர்ப் பிரச்னே. ராதாவுக்குத் துணேயாக வர இன்னொரு குழந்தை காத்திருக்

கிறது: அதைக் கருவின் இருட்டி லிருந்து வெளியே வர விடாமல், அப்படியே அழித்து விடுவதா? நீங்க கும்போதே உதறல் எடுத்தது.

''இன்னொரு குழந்தைக்கு உங்கள் குடும்பத்தில் இடம் இருக்கிறதா? உன் கணவரைக் கேட்டு வந்து சொல்லு. பிறகு நான் உனக்கு யோசனை சொல்கிறேன். இடம் இல்லை என்றால் அதையும் தயங்காமல் சொல்லிவிடு. எந்த விதச் சிரமமும் இல்லை. மூன்று வாரம் தாமதம்; அவ்வளவுதான்! இயற்கையை மறுபடி செயற்பட வைத்து விடலாம்.''

டாக்டர் சிரித்துக் கொண்டாள். அவளால் சிரிக்க முடியவில்லை. அவளால் நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை. ஒவ்வொரு வியப்பும் ஒரு பிறவி. ஒவ்வொரு பிறவியும் சந்தேகத்தின் பரிட்சை.

இரவு ராதா தூங்கிய பிறகு தலியணைக்குக் கீழே ராமுவின் கை விரல்களைப் பிடித்துக் கொண்டு சொன்னாள். ''டாக்டர் நிச்சயமாகச் சொல்லி விட்டாள். நாம் நிச்சயம் செய்துகொள்வது நம் கையில் இருக்கிறது. என்ன சொல்கிறீர்கள்?''

அவள் அவள் கழுத்தை அணைத்து அருகே இழுத்துக் கொண்டான். ''நீ என்ன நினைக்கிறாய்? இன்னொரு குழந்தைக்கு இப்போது அவசரமா?'' என்று கேட்டான். மூச்சுக் காற்று முகத்தின்மேல் படர்ந்தது.

''அவசரமா, அவசியமா என்பது இப்போது கேள்வி இல்லை. சந்தர்ப்பம் வந்து விட்டது. நீங்கள் என்ன முடிவு எடுக்கிறீர்கள்?''

''உண்மையைச் சொல்லப் போனால் கொஞ்சம் தள்ளிப் போடலாம் என்று தோன்றுகிறது. இன்னொரு குழந்தை இப்போது வேண்டாம்.''

''அப்படியானால்?''

ராமு அவளைக் குழந்தையைப் போல அணைத்துக் கொண்டான். கூந்தலில் பரிவுடன் கோதிவிட்டான். அதற்கு மேல் பேசினால் அவள் அழுது விடுவாள்போல இருந்தது. ஆனால் சொல்லாமலும் இருக்க முடியவில்லை.

''யோசித்துப் பார் மீனு! இந்தச் சுதந்தரமான வாழ்க்கை போய்விடும். நீ வேலை பார்ப்பது நின்று விடும். எனக்கு ஆறு மாதங்களில் டில்லிக்கு மாற்றலாகப் போகிறது. நிறு குழந்தையை அங்கே, கடும் வெயிலுக்கும் கடும் குளிருக்கும் நடுவில், கொண்டு போக முடியாது. உன்னையும் ராதாவையும் விட்டு விட்டு நான் அங்கே தனியே இருக்கவும் முடியாது. எத்தனையோ பிரச்னைகள். நம் முடைய வாழ்க்கையில் அடுத்த நிலை இப்போது வேண்டாம். நம் குடும்பத்தில் இன்னொரு குழந்தைக்கு இடம் இல்லை.''

அவளுடைய கண்கள் கலங்கின. கணவனுக்கு அது சந்தர்ப்பச் சௌகரியத்தை அலசும் பிரச்னை மட்டுந்தான். அவளுக்கு அப்படி இல்லை. அவள் அந்தக் குழந்தைக்கு வயிற்றில் இடம் கொடுத்து விட்டாள். இப்போது அதுவரையிலும் இடம் பிடித்துக் கொண்டு விட்டது. வீட்டில் இடம் இல்லை என்று மறுக்கலாமா?

''இருந்து விட்டுப் போகட்டுமே! மறுக்க எனக்கு மனம் இல்லை.'' அவளுடைய குரல் கெஞ்சிற்று. இருளில் ஆதரவைத்தேடி, அவள் கை விரல்கள் ராமுவின் விரல்களுடன் கோத்துப் பின்னிக் கொண்டன. அவனுடைய மார்பில் முகத்தைப் பதித்துக் கொண்டாள்.

''அப்புறம் உன் இஷ்டம். ஆனால் இதுதான் கடைசி.'' அவனுடைய குரல் விம்மாய் இறுகிற்று.

''அப்படியே இருக்கட்டும். ஒர் ஆண் குழந்தையும் இருந்தால் மாறுதலாக இருக்குமே? நீங்களே ஆசைப்படலில்லையா?''

''ஆசைப்பட்டதுண்டு. இதுவும் பெண்ணைப் பிறந்து விட்டால்?''

''பிறந்து விட்டால் என்ன செய்யப் போகிறோம்? வேண்டாம் என்று தள்ளிவிடப் போகிறோமா? நாம் வளர்க்கமாட்டோமா?''


''நான் வளர்க்க மாட்டேன். உன்னுடைய அப்பா அம்மாவோடு இங்கேயேதான் இருக்க வேண்டும்.''

அதிர்ச்சியில் பெட்டியைத் திறந்தது போல நெஞ்சு குலுங்கிற்று. முதுகைத் தடவித் தோளை லேசாய் அணைத்த கை விலகுவதை உணர்ந்தாள். அவளால் மட்டும் நேர்ந்ததா இந்தப் படைப்பு?

நாட்கள் நழுவத் தொடங்கி விட்டன. நெஞ்சைச் சில்லெனக் கவ்வும் குளிர் நாட்கள். காற்றில் கனலைக் கக்கும் வெப்ப நாட்கள். ஏழு மாதங்கள் ஓடிவிட்டன.

எத்தனையோ நினைவுகள்! குழந்தைக்குத் தலையில் நிறைய மயிர் இருக்குமா? கண்கள் என்ன நிறத்தில் இருக்கும்? குழந்தை சிவப்பாக இருக்குமா? யாருடைய ஜாடையாக இருக்கும்? என்ன பெயர் வைக்கலாம்? ஆண் குழந்தையாக இருந்தால் முருகனின் பெயரை வைக்கலாம். பெண்ணாக இருந்து விட்டால்? அப்படி நினைக்கும்போதே மனம் நலுங்கிற்று. குழந்தையை ஏற்றுக் கொள்வது என்று நிச்சயமாகி விட்டதுமே, ராமு அது ஆணைத்தான் இருக்க வேண்டும் என்று நினைத்து விட்டான். அவனுடைய பேச்சிலும், செயலிலும் அந்த ஆசை தெரிந்தது. அவனே ரெயிலேற்றி விட வந்தபோது கூட அதே பேச்சுத்தான்.

ராதாவைத் தூக்கி அருகே உட்கார வைத்து விட்டு, ரெயில் ஜன்னல் வழியாக் கையை நீட்டி, ராதாவுடன் கை குலுக்கினான். ''வரும்போது அம்பிப் பாப்பாவுடன் வரணும்!'' என்றுள் சிரித்துக் கொண்டே.



''ஏம்மா? தங்கச்சிப் பாப்பான்னு வேண்டாம்னு சொல்லிவிவையோ?'' என்றுள் ராதா, குறும்புத்தனமாக. உடனே ராமுவின் முகத்தில் சிரிப்பு மறைந்து விட்டது. அந்த மாறுதலைப் பார்த்தபோதே, மீனுவுக்குக் கலக்கமாக இருந்தது. இப்படி ஒரு பிரமையா? இப்படி ஒரு பிடிவாதமா?

பல மாதங்களுக்குமுன், அத்த இரவில் தவியாக இருவரும் எடுத்த முடிவு? அப்போது நாற்பத்தைந்து நாட்கள். நினைக்கவும் மாற்றிக் கொள்ளவும் சந்தர்ப்பம் இருந்தது. இப்போது எதுவுமே செய்வதற்கில்லை.

ரெயில் இரம்பி விட்டது. நகரும் பெட்டியுடன் ராமு கொஞ்சதூரம் கூடவே நடந்து வந்தான். அவன் வாய் இறந்து பேசவில்லை. கண்கள் தாம் பேசின. அவனுடைய ஆசையை மீண்டும் மீண்டும் சொல்லிக் காட்டின. அப்படி அவன் நடந்து வந்ததைப் போல, அந்த நினைவும் தொடர்ந்து வந்தது.

ஊருக்கு வந்தாயிற்று. காற்றுப் படாமல் நீபக் கொழுந்தைக் காப்பது போல, அம்மா அவளைப் பத்திரமாகப் பார்த்துக் கொண்டாள். கேட்டுக் கேட்டுச் செய்து கொடுக்கும் சிற்றுண்டிகளில், கை நிறைய ஊற்றும் தயிரில், தலை அழுந்தத் தேய்க்கும் எண்ணெயில், அந்த ஆதரவு தெரிந்தது. அப்பா, அம்மா இருவருக்கும் அது பெரிய எதிர்பார்ப்புதான்; அதுவும் ஆறு ஆண்டு இடைவெளிக்குப் பிறகு.

காலையிலும் மாலையிலும் குளித்துவிட்டு, பூஜை அறையில் கண் மூடிக்கொண்டு அமர்ந்திருப்பாள். மூடிய கண்களின் முன் தெரியும் சிரிப்பையும், பூக்களின் ஆட்டத்தையும், புரளலையும் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருப்பாள். அதில் குழந்தையின் மலர்ந்த முகம் தெரியும். ''ஆண் குழந்தையைக் கொடு! என்னை ஏமாற்றிவிடாதே! என்னைச் சோதித்து விடாதே!'' என்று வேண்டிக்கொள்ளுவாள்.


நடுரென ஒரு நிலில் இருநயத்தைக் கவ்வும். தன்னைத்தானே தேற்றிக் கொண்டு விட்டால்தான் என்ன? அவள் விட்டுவிடப் போகிறாளா? அப்படித் தேற்றிக் கொள்ள அவளுக்குத் தைரியம் இருந்தது. ராமு ஒப்புக் கொள்வானு?

வலியெடுத்ததும், அப்பா டாக்ஸியைத் தேடிக்கொண்டு ஓடியதும், அம்மா துணியும் கூடையுமாகக் கூடவே ஏறியதும், கனவென்றே நினைவென்றே பிரிக்கமுடியாத அநுபவங்கள். படி இறங்கி உள்ளே போனதும், டாக்டர் கட்டிலில் படுக்க வைத்து ஊசி போட்டதும் நினைவு வந்தது. அப்புறம் நினைவில்லை.

குழந்தையின் அழுகை முதல் முதலாகக் காதில் விழுந்தது, முகத்தைத் திருப்பிப் பார்த்தாள். அவள் பார்க்கும் முன்பே, அம்மாவின் கை அவள் கையைப் பிடித்துக் கொண்டது. பெண் குழந்தை! இப்போது அவளுக்கு அழுகை வந்தது.


பத்து மாதங்களாக உணர்ந்த காலத்தின் முழு உருவம், ஒரு கணம் ராமுவின் முகம் தோன்றி மறைந்தது. அவள் ஏமாற்றிவிட்டதைப் போன்ற உணர்வு. தனக்கே தெரியாமல் தான் ஏதோ ஒரு குற்றம் செய்துவிட்டதைப் போன்ற ஒரு நடுக்கம்.

அம்மா அவளுடன் கூடவே ஆறு தலாக இருந்தாள். அவளுடைய ஏக்கத்தின் முழு அளவை, அவ்வளவு அருகில் இருந்தும் அம்மா புரிந்து கொள்ள வில்லை என்றே தோன்றிற்று. குழந்தையை எடுத்துவைத்துக் கொண்டு கொஞ்சுவாள். பால் நிற உடம்புக்குப் பவுடர் போட்டு ஒற்றுவாள். ''ராஜாத்திக்குக் கண்ணைப் பார் 'பல்பு' போட்ட மாதிரி'' என்று பெருமைப் பட்டுக் கொள்வாள்.



அதிகச் செய்திகள்! அதிகப் படங்கள்!

தினசரி



படியுங்கள்

★

சென்னையிலும் மதுரையிலும்
ஆஃப்செட்டில் அச்சாகும் நாளிதழ்
தமிழ்நாட்டில் இது ஒன்றே!

★

சென்னை - திருச்சி - மதுரை - திருநெல்வேலி

அவளால் குழந்தையைக் கொஞ்ச முடியவில்லே. அவளால் பெருமைப் பட்டுக்கொள்ளவும் முடியவில்லே: கண்களில் ஏக்கக் கனல் கண்ணீராய்த் ததும்பும்: ராமுவின் நினவு நெஞ் சில் ஊவாமுள்ளாய் உறுத்திற்று. அவன் இதை எப்படி எடுத்துக் கொள்ளப் போகிருன்?

அவனுடைய சந்தேகம் தீர அதிக நாள் காத்திருக்க வேண்டியிருக்க வில்லே. ராமுவின் கடிதம் சுருக்கமாக இருந்தது: ''பிரசவம் நிரமம் இன்றி நடந்ததைத் தெரிந்துகொள்ள மகிழ்கிறேன்.அசரப்படாமல் மெதுவாக வந்து சேரலாம். உன் உடம்பைப் பார்த்துக்கொள். நான் இவிமேல் ராமாயணம் படிக்கப் போவதில்லே. பலன் புரிந்துவிட்டது.''

குழந்தையுடன் வீடு திரும்பியாகி விட்டது. அவன் வராமலே பெயரிட் டாகிவிட்டது.

இரவு நேரத்தில் குழந்தையைக் கைக்கெட்டும் தூரத்தில் போட்டுக் கொண்டிருப்பாள். அயர்ந்த தூக் கத்தில் அது விழித்துக் கொண்டு அழுவது கனவுக் கோலமாகத் தோன் றும்: மார்போடு சேர்த்து அணைத் துக்கொள்வாள்.

பட்டுப் பாயில் மல்லாந்து படுத் துக்கொண்டு, கையால் காற்றைப் பிடிப்பது போல வீசிக்கொண்டு, பொக்கை வாயைத் திறந்து சிரிப் பாள் சாந்தா: மைதீட்டிய கண்கள் தீபம் போலப் பளிச்சிடும்.

குழந்தையைப் பார்க்கும் போ தெல்லாம் அவளுக்கு உள்ளூற ஓர் ஏக்கம் குமுறும்: விவரம் தெரியாத கலவரம் இருக்கிப் புரளும்: ராமுவின் ஏமாற்றத்தின் உக்கிரம் எப்படி இருக்கும்? அது எப்படி வெளிப்படும்? ஊர் திரும்ப நாளாகிவிட்டது: புறப் படும் நாள் நெருங்க, நெருங்க, அந்தப் பயம் ஜ்வாலேயிட்டு எழுந்து தகித்தது:

''என்ன அம்மா இப்படி எழுதியிருக் கார் மாப்பிள்ளே?'' என்று பிரித்த கடிதத்துடன் வந்தார் அப்பா: அவர்முகத்தில் கலவரம் தெரிந் தது: அவள் அதை வாங்கிப் பார்த்தாள். ''இப்போது டில்லியில் ரொம்பக் குளிர்: அதனல் இன்னும் இரண்டு மாதங்கள்கழித்துக்கொண்டு வந்து விடலாம்: மீனு மட்டும் வந் தால் போதும். குழந்தை உங்களோ டேயே வளரட்டும்.''

அவளுக்குத் தெரியும், ராமு கண் டிப்புக்காரன் என்பது: சாந்தா அவ ளுடன் வரமுடியாது. பிடிவாதமும் கோபமும் மிகுந்தவன். அதை யாரும் தடுக்க முடியாது: மார் பைச் சுவத்துக் கொண்டிருந்த குழந்தையைக் கட்டிக் கொண்டு குலுங்கக் குலுங்க அழுதாள் மீனு.

இரண்டுக்கு மூன்று மாதங்களாகக் கழிந்து விட்டன: டில்லியில் அவனே ரையில் நிலையத்துக்கு வந்து அழைத் துப் போக அவன் தனியாகத் தான் வந்திருந்தான். அவளும் தனி யாகத்தான் போய் இறங்கினுள். அவ்வளவு மாதங்கள் பிரிந்திருந்த பின் அப்படி ஒரு சந்திப்பா? இப் போது எது பிரிவு? இதில் எந்தப் பிரிவு மேல்?

ராமு தனக்கு அவள் மீது, அந்தக் குடும்பத்தின்மீது இருந்த உரிமையை நிலைநாட்டிக் காட்டி விட்டான்: அவளால் தனது தாய் மையின் உரிமையை நிறுத்திக் காண் பிக்க முடியவில்லே. கணவனின் பரிவும் நெருக்கமும் அவளுக்கு வேண்டி இருந் தன. மனேவியின் அன்பும் கவனிப் பும் அவனுக்குத் தேவையாக இருந் தன. குழந்தைக்குத்தான் இடமில் லாமல் போய்விட்டது.

சூடித்தனம் தொடங்கிவிட்டது: பழைய வாழ்க்கை திரும்பிவிட்டது. ராதாவுடன் அவர்கள் இருவராய் மூவர் மட்டுந்தான்.

ஊரிலிருந்து குழந்தையைப் பற் றிக் கடிதங்கள் வரும். குழந்தை யின் புகைப்படம் கூடவரும். அதை மார்போடு அணைத்துக் கொள்வாள்.



''யாருமே இல்லாத தனி இடத்திலே நான் என் மனவி யுடன் ஆசையாய்ப் பேசி வீசா யாட, உங்க படம், தீபாவளி ரிலீஸ் தியேட்டர் ரொம்ப உதவியா இருந்தது, சார்! நன்றி, சார்!''

குப்பென்று பூத்த வேப்பமரச் சாலேயில், பளபளவென்று தளிர்த்த நாவல் மரச்சாலேயில், நடக்கும் போது குறுநடை நடந்து குழந்தை கூடவரும். புத்தர் பார்க்கில் ராதா வுடன் வியாயடும்போது, புதுடில்லிக் கால்வாயில் படகில் செல்லும்போது, குழந்தை கூடவே இருந்து சிரிக்கும்; பின்பு அழும்: எல்லாம் கனவுதான். ஆனல் அத்தனேயும் உயிருள்ள நினவுகள். சாந்தாவைப் பிரிந் திருக்கையில்: ஆனல் அந்தரங்கங் கண் விலக்கிக் கொள்ள முடியவில்லே.

வைராக்கியமாக ராமு நாட் கணக்குத் தள்ளிவிட்டான். சாந்தாவைப் பற்றிப் பேச்செடுக்க மாட்டான். கூரோல்பாக் கடைத்தெருவில் ராதா வுக்கு வண்ணச் செருப்புக்கள் வாங் கும்போது, அவள் சாந்தாவுக்கும் வாங்குவாள். அவன் தடுத்தில்லே. ஆனல் 'இது யாருக்கு?' என்று கேட் டதும் இல்லே. நாட்கள்— மாதங் கள்—ஆண்டுகள் அவன் பிடிவாதம் சற்றும் தளர்ந்த பாடில்லே.

ஆண்டுக்கு ஒரு முறை, ராதா வின் பள்ளிக்கூட விடுமுறையின் போது, அவள் மட்டும் ஊருக்குராதா வின் துணேயுடன் போய்வருவாள். அவள் வரமாட்டான். முதலில் ஏதோ காரணம் சொல்ஞன். அப்புறம் அதுவும் சொல்ல வில்லே. அவன் கேட்பதில்லே.

அது அவர்கள் சேர்ந்து பெற்ற குழந்தை இல்லேயா? அவனுடைய உடல், உயிர், உணர்வு அதிலும் வளரவில்லேயா? ஏன் இந்தப் பார தப்சம்? தர்தையின் பரிவும், ஆதர வும், நிழலும் அந்தக் குழந்தைக்கு மட்டும் ஏன் கிடைக்காமற் போய் விட்டன? அப்பா விரும்பாமலே வந்து சேர்ந்தது அவள் குற்றமா? அப்பா விரும்பியபடி ஆணும் பிறக் காததுதான் அவள் குற்றமா?

ஐந்து ஆண்டுகள் ஓடிவிட்டன: அப்போதுதான் ஊரிலிருந்து திரும்பி இருந்தாள். குழந்தையுடன் கழித்த நாட்களின் கலவுகூடக் கலேந்த பாடில்லே. இடரோன்று அந்தத் தந்தி வந்தது: ''குழந்தைக்கு அதிக ஜுரம். டைபாய்டு என்று டாக்டர் சொல்லுகிருர். உடனே வரவும்!''

படிப்புக்காக ராதையை அங்கேயே விட்டுவிட்டு அவள் மட்டும் ஊருக்கு வந்தாள். அவள் வந்ததுகூடக் குழந்தைக்குத் தெரியாது: கண் திறக் காத ஜுரம்:

அதுவரை குழந்தைக்காக அவளிடம் மன்முடியிலில்லே, குழந்தையின் நிலையைச் சொல்லா மல் இருந்துவிடவும் மனம் கேட்க வில்லே. குழந்தை பிழைக்குமோ, பிழைக்காதோ? குழந்தையை ஒரு முறையேனும் பார்க்க ராமுவுக்கு வாய்ப்பு இருக்குமா, இராதோ? அவள் வரும்படி எழுதவில்லே. அயினும் உள்ளம் எதையோ எதிர் பார்த்திருந்தது.

அன்று முதல் சுரம் இறங்க ஆரம் பித்தது: அதே நிலே தொடர்ந்தால் கவலே இல்லே என்று டாக்டர் சொல்லி யிருந்தார்:

விசலில் ஆட்டோ ரிக்ஷா வந்து நின்றது. கையை அப்படியே கழுவிக் கொண்டு வாசலுக்கு ஓடிவந்தாள். அவளே நோக்கி ஓடி வந்த ராதாவை அப்படியே அணேத்துக் கொண்டாள்: மீனுவைப் பார்க்கும் ஆவலில் ராமு நின்ருன்:

அப்பாவுக்கு மகிழ்ச்சி பிடிபட வில்லே: அம்மாவுக்கு வேலே செய்யக் கை கால் ஓடவில்லே. அவளுக்கு மட்டுந்தான் அப்படி ஒரு விபரீதம், மனப்போ இல்லே. ஐந்து ஆண்டு களாக இருந்த மோனத் தவத்தைக் கலேத்துக் கொண்டு ராமு எதற்காக வந்திருக்கிருன்? கடைசியாக ஒரு தடவையேனும் தன் குழந்தையைப் பார்த்து விடலாம் என்று? அந்தச் சந்தர்ப்பம் நழுவினுல், அப்புறம் சாந்தாவைப் பார்க்கவே முடியாமற் போய்விடுமோ என்ற பயமா?

அவனுகவே வந்து குழந்தையின் அருகில் உட்கார்ந்து கொண்டான். தலேமுதல் கால்வரை பரிவுடன்

தடவிக் கொடுத்தான். சாந்தா கண்ணீர் நிறைந்து பார்க்கவில்லை. வெளுத்த உதடுகள் மட்டும் உள் வலியில் லேசாக அசைந்தன.

ராமு வாய் நிறவாமல் பார்த்துக் கொண்டிருந்தான். விதிகள், விழாத கண்ணீரின் ஈரத்தில் படபடத்தன. விரல்கள் கல்லத்த தலையணைப் பரிவுடன் ஒதுக்கி விட்டன.

குளித்துச் சாப்பிடும் வேளை தவிர, மற்ற வேளைகளில் குழந்தையின் அருகில் அமர்ந்திருப்பான். கலகல வென்ற பேச்சு இல்லை. அவனுடைய உலகமே அந்தக் கட்டிலின் அருகில் அடங்கி விட்டது போல ஒரு சுருக்கம். வேளா வேளைக்கு மருந்தும் மாத்திரையும் கொடுப்பான். குழந்தை கண்ணை விழித்து மிரளப் பார்க்கும். அவனைப் பார்க்கும் பார்வையே புதுமையாக இருக்கும்.

இரண்டு வாரத்தில்:

குழந்தை தேறி விட்டாள். எழுத்து உட்காருவாள். அவன் தூக்கிக் கொண்டு போய் அமர்த்துவான். மடியில் உட்கார வைத்துக் கொண்டு பேசுவான். குழந்தை மிழைத்து மறு ஜென்மமே எடுத்து விட்டது போன்ற ஒரு மகிழ்ச்சியில், அவனைச் செல்லமாகக் கொஞ்சுவான்.

அத்தனை ஆண்டுகளாக அடக்கி மறைத்து வைத்திருந்த ஓர் ஆவல் கரை புரண்டு வெளிப்பட்டது போல் இருந்தது. மீனுவுக்கு அது வியப்புத்தான் ஆனால் அதை வெளியே சொல்லி, அவளிடம் கேட்டு விடத் தயக்கம்.

ஊருக்குத் திரும்ப நாளாகி விட்டது.

இந்தத் தடவையும் சாந்தாவை விட்டு விட்டுப் போக வேண்டியது தானு? இனியும் குழந்தையைப்பற்றிக் கனவு கண்டு கொண்டே டில்லி வாழ்க்கையை நடத்த வேண்டியதுதானு?

இரவு நேரம். குழந்தைகள் தூங்கி விட்டார்கள். அவளும் ராமுவும் தவியே கொல்லையில் நிலா முற்றத்தில் உட்கார்ந்திருந்தார்கள். எதையோ சொல்ல ராமு தன்னைத் தயார் செய்துகொண் டிருப்பது தெரிந்தது. அவள் உள்ளம் எதிர் பார்ப்பில் உயர்ந்து நின்றது.

''இந்தத் தடவை சாந்தாவையும் அழைத்துக் கொண்டு போகலாம் மீனு!'' என்றான் ராமு. அவள் பதில் சொல்லவில்லை.

''என்ன மீனு? பதிலைக் காணோம்?''

''குழந்தையைக் கேட்டீர்களா? அவள் என்ன சொன்னாள்?''

''அது அவ்வளவு முக்கியமா மீனு?''

''அதுதான் முக்கியம் என்று நீனைக் கிறேன். சின்னக் குழந்தையாக இருக்கலாம். ஆனால் அவளுக்குப் பிடிவாதம் அதிகம் அப்பாவைப் போல!''

''நானேக்குக் கேட்டுப் பார்க்கி றேன்'' என்றான் ராமு. அவள் குரலில் தயக்கம்.

மறுநாள் எல்லாரையும் வைத்துக் கொண்டுதான் அவன் சாந்தா விடம் அந்தக் கேள்வியைக் கேட்டான். குழந்தை ஒரு நிமிடம் பேச வில்லை. அப்பாவையும் அம்மாவையும், தாத்தாவையும் பாட்டியையும் ஒரு முறை மாறி மாறிப் பார்த்தான். தலையை லேசாக ஆட்டினான்.

''நீங்க போயிட்டு வாங்க! நான் இங்கேயே இருக்கிறேன்.'' பளிச் சென்று வந்த அந்தப்பதில், தெறித்து விழுவதைப் போல இருந்தது. ராமு ஒரு கணம் உடல் கூசக் குறுகிப் போய் அமர்ந்திருந்தான். குழந்தை பதில் சொல்லுகிறாள். ஐந்து ஆண்டுகளாக அவளுக்குள்ளே எழுந்த கேள்விக்கு களுக்கு இப்போது நிர்மானமாகப் பதில் சொல்லுகிறாள். அன்று அவள் இடம் தரவில்லே. இன்று குழந்தை இடம் கொடுக்கவில்லே. அவ்வளவு தான்.

''டில்லிக்கு வர வேண்டாமா சாந்தா? அப்பாவை நீ தானே கவனிச் சுக்கணும்?'' என்றாள் மீனு.

''உங்கப்பாவை நான் நீகவனிச் சுக்கறேன் அம்மா! என் அப்பாவை நீ கவனிச்சுக்கோ! அது போதும்.''

எல்லாரும் 'கலகல' வென்று சிரித் தார்கள் — ராமுவைத் தவிர. அவன் உள்ளத்தில் சற்று முன் எழுந்த வேதனை இன்னும் தணிந்த பாடில்லே.

அது போதும். சின்ன மகர் சொன்ன அந்தச் சேதியை அவன் மனம் அடையாளம் கண்டு கொண்டு விட்டது. அந்தப் பிஞ்சு நெஞ்சில் அவனுக்கு இடம் இருக்கிறது. ❋

காது கேளாதவர்களே! வாருங்கள்....



கடந்த 20 **ஆண்டுகளாக,** கோவை மாநகரிலே பல்லாயிரக்கணக்கான காது கேளாதவர்களுக்குக் காது கேட்கச் செய்து பல்லாயிரக்கணக்கான பாராட்டுப் பத்திரங்கள் பெற்றிருக்கிறார். வெளிநாட்டினரும் காது சிகிச்சை பெற்றுக் குணமடைந்து வியந்து செல்கிறார்கள். தினந்தோறும், இந்தியப் பேரரசின் எல்லா மாநிலங்களிலிருந்தும், காது கேளாதவர்கள் வந்து சிகிச்சை பெற்று, காது கேட்டு மகிழ்ச்சியோடு சென்றவண்ணம் இருக்கிறார்கள்.

காதில் வலியா? இரைச்சலா? சீழ் வடிகிறதா? சரியாகக் காது கேட்கவில்லையா?

உங்கள் நலனில் அக்கறை கொண்டோருடன் நேரில் வாருங்கள். 3 நாள் - 6 வேளை, சித்த வைத்திய சிகிச்சை பெறுங்கள். * சந்தேகமில்லாத சந்தோஷத்தோடு காது கேட்டுச் செல்லுங்கள். * காதுக் கருவி உபயோகித்தவர்களுக்கும் ஊமைத்தன்மை உள்ளவர் களுக்கும் சிகிச்சை அளிப்பதில்லை. * அறுவைச் சிகிச்சை செய்தும் குணமாகாதவர்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படும். * இயற்கைச் சிகிச்சை இது: என்றும் பலன் அளிக்கும். காதுகளைப் பரிசோதித்த பிறகே சிகிச்சைக்கு ஏற்கப்படுவர்.

கடித விவரங்களுக்கு:

Dr. சாமிகிரி சித்தர் காதொலி நிலைய மருத்துவமனை

97, சரோஜினி ரோடு, ராம் நகர், கோயமுத்தூர் - 641009, தமிழ்நாடு.

மதுரையில்
உத்திரவாதமுள்ள தங்க நகைகள்
வெள்ளிப் பாத்திரங்களுக்கு
நம்பிக்கையான ஸ்தாபனம்.

R. R. C.

போன்: 22200 தந்தி: "ஜுவல்லரி"

R.ராமனுதன் செட்டியார்

40/41, கீழ ஆவணி மூல வீதி, மதுரை-1

B. P.

ஆயுட்காலம் பூராவும் பலன் தரக்கூடிய



ஸ்பெஷல் ஸ்ரீ மஹாலக்ஷ்மி தங்க ரக்ஷை

பூஜா செலவும் இதரமும் ரூ. 1111.00

ரக்ஷை வேண்டியவர்கள் அவர்கள் கோரிக்கைகளை எழுதி ரூ. 1111.00 அனுப்பவும். ½ மண்டலம் பூஜை செய்து அனுப்பப்படும். உங்களுடைய ஜாதக பலன் எதுவாயிருந்தாலும் சரி, அதற்கும் அப்பாற்பட்ட தெய்வீக சக்தி வாய்ந்த ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை கடாக்ஷத்தை அளிக்க வல்லது. உங்கள் வாழ்க்கையில் எல்லா நன்மைகளையும் பெற, அதிசயிக்கத்தக்க வகையில் ஆயுட்காலம் பூராவிற்கும் கலன் தரும் அபூர்வ சக்திவாய்ந்த தெய்வீக ரக்ஷை.

குறிப்பு: 1. ரக்ஷை வேண்டியவர்கள் பூரா செலவையும் முன்னதாக அனுப்பவும். V.P. இல்லை. 2. ரக்ஷை ஆர்டர் கிடைத்த 12-வது நாள் ரக்ஷை இன்ஷூர் தபால் மூலம் அனுப்பப்படும். 3. எமது ஸ்தாபனம் இந்தியாவில் 1-12-1937 முதல் இயங்கிவருகிறது. எமது ஸ்தாபனத்தில் ஸ்ரீமஹாலக்ஷ்மி ரக்ஷை தவிர வேறு வகை ரக்ஷைகள் தயார் செய்வதில்லை. 4. சாஸ்திர நம்பிக்கையுள்ளவர்கள் மட்டும் இதில் கலந்துகொள்ளவும். ரக்ஷைக்காக அனுப்பும் செலவைத் திரும்பப் பெறச் சட்டபூர்வமாகவோ, இதரரூபமாகவோ இடமில்லை. இதற்குச் சம்மதமுள்ளவர்கள் தாம் வாங்கிக்கொள்ளலாம். இப்புனிதத் தெய்வீக சம்பந்தமான ரக்ஷை தெய்வீக சந்நிதியில் தயார் செய்வது. ஆயிரமாயிரம் நேயர்கள் ரக்ஷை அணிந்து, பலனடைந்து இருக்கிறார்கள். வெளிநாட்டு நேயர்கள் 14 பவுன் மதிப்புக்கு B.P.O. வாங்கி அனுப்பவும்.

ஜோஸ்யர்: பாரத்வாஜ ஸ்ரீ ஜெயராம அய்யர்
கோட்டமருதூர்

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஜ்யோதிஷ ஆபீஸ்
அரகண்டநல்லூர்.

ஜலதோஷமும் ஃப்ளுவும்—சில முக்கிய தகவல்களும் முறியடிக்கும் முறைகளும்

"ஜலதோஷம் மற்றும் ஃப்ளுவின் துன்பங்களிலிருந்து விரைவில் நிவாரணம் பெற அனுவின் பெரிதும் உதவுகிறது" என்கிறார் நர்ஸ் நட்டாலியா டிசௌஸா.



ஜலதோஷமும் ஃப்ளுவும் வரக் காரணம் என்ன?

பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து காற்றில் வரும் வித அணுக்கள் ஜலதோஷத்தையும் ஃப்ளுவையும் பரப்புகின்றன. இந்த வித அணுக்களே சாதாரணமாக உடல் எதிர்க்கிறது. ஆனால் அவ்வுக்கு மீறிய உழைப்போ, சத்துக்குறைவோ உடலைப் பலவீனப் படுத்தி, நோய் எதிர்ப்பற்றதாக்கி குறைக்கிறது.

அறிகுறிகள் யாவை?

உடல் வலி, தலைகனம், தும்மல், மூக்கிலே ஒழுக்கு இவற்றுடன் ஜலதோஷம் தொடங்கும். குளிர், அமைதியின்மை, வியர்வை தோன்றும். இருமல், தொண்டைப் புண், பசியின்மை, உடல் சோர்வு தொடரலாம்.

சிக்கல்கள் தோன்றுமா?

புறக்கணித்தால் நிமோனியாவிலும் சுவாசகோசம் மற்றும் மேல் மூச்சுக் குழாயின் நோய்த் தொற்றிலும் முடியலாம்.

அனுவின் எப்படி உதவுகிறது?

இது ஜலதோஷம் ஃப்ளுவில் ஏற்படும் வேதனையைப் போக்குகிறது. உலகெங்கும் டாக்டர்கள் சிபாரிசு செய்யும் வலி-நிவாரணியை அதில் அனல் கொண்ட அனுவின் சக்தி வாய்ந்தது. டாக்டரின் நம்பகமான மருந்துக் கலவை போன்றது. ஜலதோஷம் ஃப்ளுவின் முதல் அறிகுறிகள். ஒரு நாளைக்கு 4 தடவை

நீங்கள் வேறென்ன செய்ய வேண்டும்?

- நிறைய திரவ பதார்த்தங்கள், கொதிக்கவைத்த நீர், ஆரஞ்சு அல்லது எலுமிச்சை சாறு பருகுங்கள்.
- சத்துணவு புசியுங்கள். • போதிய ஓய்வெடுங்கள். • ஆன்டிசெப்டிக் மருந்து அல்லது உப்புக்கரைத்த நீரால் கொப்புளியுங்கள்.
- அறைகள் காற்றோட்டமாக இருக்கட்டும்.



இந்தியாவின் முன்னோடி வலி-நிவாரணி அபிமானங்கள்: தொப்ரி மோனின் அனுவின் பிரியினர்.

* Regd. TM

A24-6/79

மக்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்த

தமிழ்நாடு கோழி அபிவிருத்தி நிறுவனம் (லிட்)

சென்னை - 600 018

நடத்தும் திட்டங்களில் சில:

1. மத்திய, மாநில அரசுகளின் நிதியுதவியுடன், செங்கை, வடஆற்காடு, சேலம், மதுரை ஆகிய மாவட்டங்களில் பிறப்பு, கோழி அபிவிருத்தித் திட்டம்.
2. தரமான, கோழித் தீவனம் வழங்குதல்.
3. கோவை மற்றும் மதுரை மாவட்டங்களிலுள்ள நவீன குஞ்சு பொறிப்பகங்கள் மூலம் தேவையான வீரிய இனக் கோழிக் குஞ்சுகள் வழங்குதல்.
4. மக்களுக்குத் தேவையான முட்டைகள், கோழிபிறைச்சி முதலியன நியாய விலையில் விற்பனை செய்தல்.
5. கோழிப்பண்ணைகளுக்கு, காப்புறுதி மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை வழங்குதல்.

நகரமும் கிராமமும் நலமோடு முன்னேற கோழி வளர்த்திடுவீர்!

உங்கள் தேவைகளுக்கு உடனே தொடர்புகொள்வீர்!

டாப்கோ நிறுவனங்கள் உள்ள மாவட்டங்களில்:

உதவி மேலாளர்கள்

தமிழ்நாடு கோழி அபிவிருத்தி நிறுவனம் (டாப்கோ)

சென்னையில்:

நிர்வாக இயக்குநர்

தமிழ்நாடு கோழி அபிவிருத்தி நிறுவனம்

561, அண்ணா சாலை, சென்னை-600 018.
தொலைபேசி: 443164

DIPR /359/81/64



ஒளி திகழ் வைரம்

டாக்டர் நீரா. ஸ்ரீநிவாசன்

மிகச் சிறந்த விலை பெறும் மணிகளில் ஒன்றுகிய வைரத்தின் சுவையான கதை இது.

*

பண்டைக்காலம் தொட்டு இன்று வரை மனிதனுக்கு வைரத்தின் மேல் மோகம் இருந்து வந்திருக்கிறது. ஒளிப்பிழம்பாகிய வைரம் என்னும் கல், கூடவோயும் அலங்கரிக்கிறது. மன்னரது மகுடத்தில் திகழ்கின்றது. மைனரின் மோதிரத்திலும், மாதரின் காதிலும் 'டால்' வீசுகிறது. மேலும் தொழிலிலும் உபயோகப்படுகிறது. உலகப் புகழ்பெற்ற கோஹினூர் போன்ற வைரங்கள் நம் நாட்டிலேதான் தோன்றின. இன்று இந்தியா வைர ஏற்றுமதித் தொழிலிலே பாரில் முதலிடம் பெற்று விளங்குகிறது.


நவமணிகள் என்று போற்றப்படும் வைரம், வைடூரியம், மரகதம் போன்ற ஆபரணப் பொருள்களிலே வைரம் முதலிடம் பெறுகிறது. வைரம் பட்டொளி வீசிப் பிரகாசிக்கும் தன்மையுடையது; எளிதில் கிட்டாதது. நிலைமை மிஞ்சியதால் அழியாதது. விலையுயர்ந்த வைரம் வெறும் கட்டைக் கரிதான் என்றால் நம்புவீர்களா? உண்மை என்னவோ அதுதான்!

அண்டத்தின் அடியிலே சிக்கிய மரக்கரியானது, கற்பாறைக் குழம்பின் சூட்டிலும் இறுக்கத்திலும் மாபெரும் அழுக்கத்துக்குள்ளாகி, அணு மாற்றத்தால் வைரமாக உருப் பெறுகிறது. உலகிலுள்ள எல்லாப் பொருள்களிலும் வைரமே மிகவும் கடினமானது. வைரம் எஃகையும் தீரும்; வைரம், இயற்கையிலே கரியேயாதலால், அனலில் இட்டால் எரிந்து கரியமிலவாயுவாகிவிடும். பல்லாயிரம் விலையுள்ள வைரக் கல்லும் காற்றுவிடும்!

சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன் ஆதி மனிதன் இயற்கையில் கிடந்த கூழாங்கல்லைப் போன்ற கல்லைக் கண்டான். அது பளபளப்பாயும் அழகாகவும் இருப்பதைக் கண்ணுற்றான். இது வெறும் கல்லல்ல என்று தீர்மானித்தான். நாளடைவிலே அது வைரம் என்று பெயர் சூட்டப் பெற்றுப் புகழுடன் திகழ்ந்தது.

முதல் முதலில் வைரக் கல் மத்திய சக்தி பெற்றது என்று கருதினர்; பின்னர் விலையுயர்ந்ததாக விளங்கி மன்னர்களிடமும் பெரும்புள்ளிகளிடமும் உலவிவந்தது. இந்தியாவிலே, கிறிஸ்து பிறப்பதற்கு 800 ஆண்டுகளுக்கு முன்னரே, ஆற்று மணலிலே வைரம் கண்டெடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. அத்த நாளிலேயே இந்திய வைரத்தை ஏற்றுமதி செய்யத் தேசத்தில் உள்ள அலெக்ஸாண்டிரியாவுக்கு அனுப்பியிருக்கின்றனர். சமீப காலத்தில் பதினேழாம் நூற்றாண்டிலே, 1660-இல் உலகிலேயே முதல் முதலாக நம் நாட்டில்தான், கோல்கொண்டாவில் வைரம் வெட்டியெடுக்கப்பட்டது. அங்கிருந்து சரித்திரப் புகழ்பெற்ற பல வைரங்கள் கண்டெடுக்கப்பட்டு உலக யாத்திரை செய்திருக்கின்றன. பெயர்பெற்ற பிரஞ்சு யாத்திரிகரான ஜீன்பாப்டிஸ்டு டாவர்னியே என்பார், 1630-முதல் 1668-வரை ஆறு தடவை இந்தியாவுக்கு விஜயம் செய்து, விலை மதிக்க முடியாத வைரக் கற்களை, கோல்கொண்டாப் பிரதேசத்திய கொல்லூர் என்ற இடத்திலிருந்து வாங்கிக் கொண்டு போய் ஐரோப்பாவில் வியாபாரம் செய்திருக்கிறார்.

அந்த நாளில் ஆந்திர வைரச் சுரங்கங்கள் 1850 வரை வைரத்தை ஈன்றிருக்கின்றன. பிறகு ஆந்திர வைர மடி வற்றிவிட்டது. சமீப காலத்தில் 1950-இல் மத்தியப் பிரதேசத்திலுள்ள பன்னா என்னுமிடத்தில் வைரம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, மத்திய அரசாங்கத்தினரால் தோண்டி எடுக்கப்பட்டு வருகிறது. சுமார் நூற்றாண்டின் நடுவில் இந்திய வைர உற்பத்தி மங்கியபோது, யதேச்சையாகப் பிரேசிலில் வைரம் கண்டுபிடித்து, ஏராளமான வைரக் கற்கள் தோண்டி எடுக்கப்பட்டு, வெளியுலகுக்கு வந்தன. அதன் பின் வைரப் புதையல் ஆப்பிரிக்காவிலே கண்டுபிடிக்கப்பட்டு, உலகப் புகழ்பெற்ற வைரங்கள் வெளியாயின. பின்னர் ரஷ்யாவில் வைர வினைச்சல் தோன்றியது. இன்று



வைரக்கற்கள் குவியல்

உலக அரங்கிலே ஆப்பிரிக்கா, ரஷ்யா ஆகிய இரு நாடுகளும் வைர உற்பத்தியில் ஒங்கி நிற்கின்றன. கயானா, போர்னியா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, சீனம் போன்ற நாடுகளிலும் ஓரளவுக்கு வைரம் தோண்டும் தொழில் நடக்கிறது.

இயற்கையில் கிடைக்கும் வைரம் ஒளியுள்ளதாய்த் திகழாது. மங்கலாக மாசு படிந்ததுபோலத் தோன்றும். எனினும் அதனே உரியபடி வெட்டி, பட்டை தீட்டினால், அதனுடைய இயற்கை ஒளி வெளிப்படும். ஜோதி மயமாகத் துலங்கும். உலகிலே ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 400 லட்சம் 'காரட்' வைர உற்பத்தி செய்யப்படுகிறது. இதிலே சுமார் 100 லட்சம் 'காரட்' அணிகலன்களுக்கு உபயோகமாகி ஆடவரையும் மாதரையும் மகிழ்விக்கின்றன. எஞ்சியது மட்டரகம்; ஆனால் கெட்டி யானது. இது தொழில் உபயோகத்துக்குத் தகுதியானது. உலகத்தோடு ஒப்பிடுங்கால் நமது நாட்டின் பன்முறை உற்பத்தி மிகக் குறைவு: லட்சியம் 'காரட்'களே. எனினும் வெளிநாடுகளிலிருந்து வைரத்தைக் கொணர்ந்து, வெட்டி, பட்டை தீட்டி ஏற்றுமதி செய்யும் தொழிலே இந்தியா மேற்கொண்டு, இன்று பாரிலே வைர வியாபாரத் தொழிலில் தலை நிமிர்ந்து நிற்கிறது. உலகிலே வருட மொன்றுக்குச் சுமார் 6500 கோடி ரூபாய் பெறுமான வைர அணிகலன் வியாபாரம் நடக்கிறது; கடந்த வருடத்தில் நமது நாடு 550 கோடி ரூபாய் பெறுமான வைர ஏற்றுமதி செய்து, அந்நியச் செலாவணியைச் சம்பாதித்திருக்கிறது.

ஒளிமலையே

சரித்திரப் புகழ் வாய்ந்த பல வைரங்கள் பாரதத்திலேதான் கிடைத்திருக்கின்றன. இவையெல்லாம் கிருஷ்ணநதிப் பள்ளத்தாக்கில் கோல்கொண்டாவில் கொல்லூர்ப் பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்டன. உலகப் புகழ்பெற்ற வைரங்களில் ஒன்று கோஹி நூர். அதன் கதையே ஒரு சரித்திர விந்தை! மகா பாரதப் போரில் வீரன் ஒருவன் இந்த வைரத்தை அணிந்திருந்ததாகத் தெரிகிறது. எனினும் வெகு காலத்துக்குப் பின், அதுவே ராஜஸ்தாவிய மால்வா தேச மன்னனிடம் 1304-இல் இருந்ததாகவும், பின்னர் 1530-இல் தான் பட்டை தீட்டப்பட்டதாகவும் தெரிகிறது.

மொகலாய மன்னன் பாபர் இந்தியாவின்மேல் படையெடுத்த போது இது ஹீ அபகரித்ததாம். பின்னர் மொகலாய அரியணையில் அமர்ந்த ஷா ஜஹான் இதைத் தன் மயில் வாகனத்தில் ஒரு கண்ணுக்கு பதித்தானாம்; மற்றொரு கண் அக்பர்வசம் என்ற வைரம். இரு வைரக் கண் பதித்த மயிலாசனத்தைப் பாரசீக நாதர்ஷா, 1939-இல் இந்தியாவைச் சூறையாடித் துக்கிக்கொண்டு ஓடினான்; நாதர்ஷா முதல் முதலாக இவ்வைரத்தைப் பார்த்ததும், இதன் ஒளி அழகில் மயங்கி, ''ஆ! ஒளிமலையே! கோஹி நூர்'' என்று கூறினானும். அதனல் தான் இவ்வைரத்துக்கு அன்று தொட்டுக் கோஹிநூர் என்ற பெயர் நிலைத்துவிட்டது.

பாரசீகத்திலிருந்து கோஹிநூர் எப்படியோ கை மாறிப் 'பஞ்சாப் சிங்கம்' எனத் திகழ்ந்த வீரன் ரஞ்சித் சிங்கிடம் சிக்கியது. மெக்கிந்தியக் கும்பினியார் பஞ்சாப் போரில் நஷ்டஈட்டுக்காகக் கோஹி நூரைப் பஞ்சாப் சிங்கத்திடமிருந்து பிடுங்கிக்கொண்டனர். ராணி விக்டோரியாவை மகிழ்விப்பதற்காகக் கும்பினியார், கோஹிநூரை 1850 இல் அவருக்குப் பரிசாக அளித்தனர்.

ஒளிமலையின் எடை 108 'காரட்' ஆகும். அது ஆங்கிலேய மன்னரின் மகுடத்தில் பதிக்கப் பெற்று, இன்றும் ஒளிவிசிப் பிரகாசிக்கிறது. பாரதத்தில் தோன்றி, பாரசீகத்தில் லே காலம் வாழ்ந்து, லண்டனில் நிலையாக வாசம் செய்கிறது கோஹிநூர்!

இந்தியாவிலிருந்து 1739-இல் பாரசீகத்துக்குப் பறித்துச் செல்லப்பட்ட மற்றோர் அழகிய வைரம் தரியாநூர். மிகவும் நேர்த்தியானதும், சற்றே சிவப்புத் தோய்ந்ததுமான இதன் எடை 195 'காரட்' இது பாரசீக மன்னருடைய விலையுயர்ந்த ரத்தினப் பொக்கிஷங்களில் ஒன்றாகும். ராணி எலிஜபெத், 1961-இல் பாரசீக விஜயம் செய்த பொழுது, மன்னர் ஷா மிகப் பெருமையுடன் தரியாநூரை ராணிக்குக் காட்டினாராம். அவ்வைரத்தில் ஒரு விசேஷம் என்னவென்றால், அதிலே மிகப் பொடியாக எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தனவாம். ஷா மகுடம் துறந்து, நாடு கடந்து, எகிப்தில் மண்ணோடு மண்ணுகிவிட்டார். தரியாநூர் என்னவாயிற்று என்று தெரியவில்லே.

கொல்லூரில் கிடைத்த மற்றொரு வைரம், 'கிரேட் மொகல்'; இது ஷாஜஹானின் பெயரால் பெரிய மொகல் என்றழைக்கப்பட்டது. இது முதலில் 793 'காரட்' எடையுள்ள தாயிருந்ததாம். ஆனல் டாவர்னியே இதனைக் கண்ணுற்றபொழுது, துண்டிக்கப்பட்டு, 280 காரட் எடையுள்ளதாக மட்டுமே இருந்ததாம். முட்டை வடிவில் கண்கவர் வைரமாகத் திகழ்ந்த பெரிய மொகல் பிற்காலத்தில் என்னவாயிற்று என்றே தெரியவில்லே.

வைரத்தின் விலையாலும் அழகாலுந்தான் அதற்கு எத்தனே ஆபத்து! கொள்ளேக்கு முதல் இலக்கு வைரத்தான்; அதற்கு இறைவனும் விலக்கல்ல! 'ஆர்வாப்,'' என்ற 300 'காரட்' கொல்லூர் வைரத்தின் கதை பரிதாபம்! அரங்கமாதகரில் பள்ளிகொண்டிருக்கும் அழகிய மணவாளனும் ரங்கராஜனின் கண்ணுக்கு நிகர்த்தது இது; கர்நாடகப் போரின்போது தப்பியோடிவந்த பெப்பாய் ஒருவன் இந்துவைப் போல் மாறுவேடம் பூண்டு, கோயிலினுள் சென்று எப்படியோ நாதனின் கண்ணில் பதித்துக்கொண்டு ஓடிவிட்

டான். சென்னையைச் சேர்ந்த பிப்பாய் அதனே ஓர் ஆங்கிலேய மாலுமிக்கு விற்றான். மாலுமி அதனே வண்டலூக்கு எடுத்துச் சென்று, அதிக விலேக்கு ஒரு பாரசீக வியாபாரிக்கு விற்றான். அவன் அதனே ஆம்ஸ்டர்டாம் எடுத்துச் சென்றான். ரஷ்ய இளவரசர் க்ரெகொரி என்பார் அதனே வாங்கினர். ரஷ்யப் பெயரால் அது 'ஆர்லாப்' என அழைக்கப்பட்டது. ரஷ்யப் பேரரசியும் பேரழகியுமான காதரைனுக்கு காதலில் வெல்ல ஆர்லாப்பை வெகுமதியாக அவளுக்கு வழங்கினன் க்ரெகொரி. ஆனல் க்ரெகொரியின் ஆர்வத்துக்கு ஆதரவு காட்டாமல், அவனக் கல்லால் அடித்துத் துறத்துவது போல் அறவே நிராகரித்துவிட்டாள். ஆட்சிக்கோலில் அதனேப் பதித்துக் கொண்டு அரசு செலுத்தினுள். ஆர்லாப் இன்று மாஸ்கோவில் அரசினருடைய வைரப் பொக்கிஷத்தில் இருக்கிறது.

இந்தியாவில் 1701-இல் கண்டுபிடிக்கப்பட்டு 410 'காரட்' எடையுள்ளதாக விளங்கிய பெரு வைரம் 'ரீஜண்ட்', தனது தாயகத்தை விட்டு இங்கிலாந்துக்குப் பயணம் செய்தது. அதனே அங்கே வெட்டிப் பட்டை தீட்டினர். பிரான்ஸ் தேச இளவரசருக்கு விற்கப்பட்டுப் பிறகு, அமகி மோரி அன்டொனெட்டின் உடமைத் தமுமியது. பிரஞ்சு உள்நாட்டுக் கலகத்தின்போழுது, ரீஜண்டு மற்றப் பொக்கிஷங்களுடன் களவு போய்விட்டது. பிறகு தலேதப்கிய இந்த வைரத்தை, பிரஞ்சு அதிகாரிகள் பெர்லின் பணத் தரகரிடம் அடகு வைத்துப் பணம் பெற்றுச் சண்டை நடத்தினர்; பின்னர் அந்த அடகு மீட்கப்பட்டது. மாபெரும் வீரன் நெப்போலியன் ரீஜண்டைத் தன் வெற்றி வாளில் பதித்துக்கொண்டான். நெப்போலியனின் வீழ்ச்சிக்குப் பின் ரீஜண்டு பறிக்கப்பட்டு, இப்போழுது பாரிஸ் மாநகரில் லூவர் கண்காட்சிச் சாலேயில் இருக்கிறது.

வைரம் சிலருக்கு நன்மை பயக்கும்; ஆனல் சிலருக்குக் காலநகவும் முடியும். டாவர்னியே 1642-இல் கொல்லூரில் வாங்கிய ஒரு பெரிய வைரம், 'ஹோப்', அல்லது நம்பிக்கை. பெயர் நல்லதாக இருப்பினும் அதன்மேல் நம்பிக்கை வைத்த பலரை அது வஞ்சித்துவிட்டது. டாவர்னியே அதனக் கொண்டு போய்ப் பாரீஸில் விற்றான். ஆனல் பிரஞ்சு கலவரத்தின்போழுது அதுவும் தொலேந்துபோய்ப் பின்னர் வெளிவந்தது. அப்பொழுது ஹோப் என்பவர் அவ்வைரத்தை வாங்கி அதற்குத் தம் பெயரையே சூட்டினர். ஆனல் அந்தோ! பரிதாபம்! ஹோப்பின் பிள்ளை அவ்வைரத்தை வைத்திருந்த பொழுது, அவன் சொத்தெல்லாம் சூலேந்து, நடுத்தெருவுக்கு வந்துவிட்டான். பிறகு மாக்லீன் என்ற அமெரிக்க மாது அதனே வாங்கினர். உடனே அவள் மகன் மாண்டான்; செல்வம் அழிந்தது. அவல நிலேயெய்திய மெக்லீன் தற்கொலே செய்து கொண்டு உயிர் நீத்தாள். ஹோப் இப்பொழுது வாஷிங்டனில் உள்ள, உலகப் புகழ்பெற்ற ஸ்மித்சோனியன் ஸ்தாபனத்தின் கண்காட்சிச் சாலேயில் உள்ளது. நல்ல வேளேயாக இது யாரையும் பிறகு கொல்லவில்லே.

ஏகவிலே டியாரா:

ஆர்க்காட்டு வைரம் என்று பெரும் புகழ்பெற்றவை இரு வைரக் கற்கள்; மிக நேர்த்தியானவை. ஆர்க்காட்டு நவாபு இவற்றை இங்கிலாந்தின் அரசர் மூன்றாம் ஜார்ஜின் மனேவி ராணி சார்லாட் என்பவருக்கு அன்பளிப்பாகக் கொடுத்தாள். ஆனல் ராணியின் காலத்துக்குப் பிறகு இவை விலேக்கு வந்தன. வெஸ்ட்மின்ஸ்டர் பிரபு பதினேராயிரம் பவுன் கொடுத்து 1837-இல் ஆர்க்காட்டு வைரக் கற்களே வாங்கினுன். இவை வெஸ்ட்மின்ஸ்டர் 'டியாரா', என்னும் புகழ்பெற்ற நகையில் பதிக்கப் பெற்றன. இந்நகை 1959-இல் உலகிலேயே மிக அதிக விலேக்கு விற்கப்பட்ட நகை என்ற பெயருடன், ஒரு லட்சத்துப் பத்தாயிரம் பவுனுக்கு விற்கப்பட்டது; சுமார் 20 லட்சம் ரூபாய். இதை அணியும் பாக்கியவதி யாரோ?

உலகிலேயே மிகப் பெரிய வைரம் என்று போற்றப் பெறும், 'கல்லினன்' என்ற வைரக் கல் 1905-இல் தென்னுப்பிரிக்காவில் டிரான்ஸ்வாலில் கிடைத்தது. அதன் எடை என்ன தெரியுமா? சுமார், ஒன்னேமுக்கால் பவுண்டு! 3106 'காரட்!'

இதில் அதிசயம் என்ன வென்றால், அதன் மதிப்பை யாரும் எடை போடமுடியவில்லே; வாங்குவாரும் இல்லே. கடைசியில் டிரான்ஸ்வால் அரசாங்கம் அதனே ஒரு வெறும் நூற்றைம்பதாயிரம் பவுன் அல்லது சுமார் 30 லட்சம் ரூபாய் கொடுத்து வாங்கி, இங்கிலாந்தின் மன்னர் மூன்றாம் எட்வர்டுக்கு அவரது 66-ஆவது பிறந்த தினப் பரிசாக வழங்கியது. அதனேப் பிறகு ஆம்ஸ்டர்டாமில் வெட்டி, ஒன்பது பெரும் வைரக் கற்களாக உருவாக்கினர். இவை எம் மன்னரின் மேலேயை இன்று அலங்கரிக்கின்றனவோ தெரியவில்லே.

உலகில் பெரிய வைரங்களில் இரண்டாவது இடம் பிரகான்னா என்னும் வைரத்தைச் சேரும். இது பிரேஸிலில், மைஸஸ்கிரேய்ஸ் என்ற இடத்தில் அபாபே என்ற ஆற்றின் மணலில் கண்டெடுக்கப்பட்டது. எடை 1680 'காரட்'. இந்தப் பிரதேசம் அப்போது போர்ச்சுகல் நாட்டு மன்னரின் அதிகாரத்துக்கு உட்பட்டிருந்த தால், அவ்வைரத்துக்கு மன்னரின் பெயரான 'பிரகான்னா' அல்லது போர்ச்சுகல் மன்னர் என்று பெயர் சூட்டினர். போர்ச்சுகல் மன்னர் ஆறாம் ஜான் இவ்வைரத்தில் தனேவிட்டுத் தங்கச் சங்கிலியில் கோத்து விசேஷ காலங்களில் அணிவாராம். அது இன்று இருக்குமிடத்தை வெளிச்சம் போட்டுத்தான் தேட வேண்டும். கடையாக, ஆப்பிரிக்க நட்சத்திரம் என்று புகழ்பெற்ற 530 'காரட்' கொண்டதொரு வைரம். உலகிலேயே பட்டை தீட்டப்பட்ட தனி வைரங்களிலே இதுவே மிகப் பெரியதாகும்!

இயற்கையன்னேயின் மடியிலே வைரம் கற்பாறைகளுக்கு நடுவே தோன்றுகிறது. கற்பாறை, இயற்கைச் சக்திகளான வெப்பம், குளிர், காற்று, மழை ஆகியவற்றில் பாதிக்கப்பட்டு நாளடைவில் பிளக்கிறது. உடைந்த கற்பாறைகளே வெள்ளம் அடித்துக் கொண்டு போகிறது. அப்பொழுது பாறைகளின் நடுவில் சிக்கிய வைரம் வெளிப்படுகிறது. வைரம் மிகவும் கெட்டியாதலால் கற்களின் மோதலினுல் பாதிக்கப்படுவதில்லே; மாருக, மற்றக் கற்களே தேய்கின்றன. இப்படி அடித்துக்கொண்டு உருண்டோடிவந்த வைரக்கல் ஆற்று மணலிலே கிடந்து கண்டெடுக்கப்படுகிறது. ஆகவே வைரம் கிடைக்க மலேப்பாறையும் வெள்ள நீரும் தேவைப்படுகின்றன என்பது தெரிகிறது. 'அட்டு நீரருவிக் குன்றத்தல்லது வைரம் தோன்று'



பட்டை தீட்டி, தரம் பிரிக்கிறார்கள்

அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

ஆரிய வைத்திய பார்மஸி

(கோயமுத்தூர்), லிமிடெட்.

தலைமை அலுவலகம்:

566, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-641018

தந்தி: "அம்ருதம்" ★ போன்: 26006, 22623, 30674

மறைந்த மாமேதை ஆரியவைத்தியன்

P. V. ராமவாரியர் அவர்களால் நிறுவப்பட்டது

36 ஆண்டுகளாக மிகச் சிறந்த பயனளிக்கக்கூடிய ஆயுர்வேத மருந்துகள் தயார் செய்தும் சிகிச்சை அளித்தும் வருகின்ற மிகப் புகழ்பெற்ற ஸ்தாபனம்

சென்னைக் கிளை:

140-A, கௌடியா மடத் தெரு, ராயப்பேட்டை, மதராஸ்-600014

போன்: 848752

இந்தியாவின் முக்கிய நகரங்களில் 21 கிளைகளும் மற்றும் 250க்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற விற்பனையாளர்களும் கொண்ட மிகப் பெரிய ஆயுர்வேத நிறுவனம்.

THE ARYA VAIDYA PHARMACY (COIMBATORE) LTD. AVP

ஆரிய வைத்தியன்

K. S. வாரியர்

பிரதம வைத்தியர்

P. V. சந்திரசேகர வாரியர்,

மானேஜிங் டைரக்டர்

மேலும் விவரங்களுக்குத் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

OSR

With best compliments from

The Coronation Litho Works

POST BOX No. 2, SIVAKASI-626 123

Phone : 54, 254 & 519 Grams: "CORONATION" Telex: 0448-203

The Coronation Arts Crafts

POST BAG No. 11, SIVAKASI-626 123

Phone : 463 *Grams : "ARTSCRAFTS"*

Quality Printers and manufacturers of Calenders, Labels, Posters, Folders, Cartons, Diaries, Booklets, Marriage Invitations, Cheque Papers, Tint Boards etc.

BRANCHES

66, Sami Reddi Street *Phone : 844471*
Egmore, Madras 600 008 *Grams : "CORONLITH"*

Yusuff Mansion *Phone : 357737*
204-A, Khetwadi Back Road, Bombay 400 004 *Grams : "CEEPEEWAGH"*

என்று ஒன்பதாம் நூற்றாண்டிலே வந்தித்த திருத்தக்கதேவர் சீவக சிந்தாமணியில் சொல்லுகிறார்.

இதனைப் பார்க்கும்போது அந்தநாளை தமிழருக்கு வைரம் இயற்கையில் தோன்றும் தன்மை நன்கு தெரிந்திருந்தது என்றே கூறவேண்டும். மேலும், பிறப்பதற்கு முன்பே நூற்றாண்டுக்கு முன் பிறப்பிடத்துடன் நிகழ்ந்த சங்க இலக்கியங்களிலே,

''வயிரக் குறட்டின் வயங்கு மணி..'' (புறநானூறு), ''வயிரத்தைக் கொண்ட கொம்பு'' (திருமுருகாற்றுப்படை) என்று காண்பதாலும் வைரத்தின் தன்மையும் உபயோகமும் தமிழகத்தில் தெளிவாகத் தெரிந்திருந்தன என்று தெரிகிறது. இன்னும், இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்திலே வைரத்தின் நான்கு வர்ணம், 5 குணங்கள், 12 குறைகள் முதலிய வற்றை மிகவாக விளக்கியிருக்கிறார். எனவே, தமிழருக்கு வைரம் புதிதல்ல!

இயற்கையில் இடைக்கும் வைர மல்லாது மனிதன் மலைப்பாறை களைக் குடைந்து, வயிரம் தோய்ந்த கற்களைப் பெயர்த்து, உடைத்து வைரத்தை வெளிப்படுத்துகிறான்: பழைய நாளில் கோல்கொண்டாவில் வைரப் பள்ளத்தாக்கு இருந்ததாம்.

அங்கே வைரக்கற்கள் நிந்திக்கிடக்குமாம். இந்த வயிரத்தை மேலே கொணர ஓர் உத்தியைக் கையண்டனர். மாமிசத் துண்டங்களைப் பள்ளத்தாக்கில் தூக்கி எறிந்தனர். இறைச்சி மேழே விழுந்து வைரக் கற்கள் மாமிசத்தில் ஒட்டிக்கொள்ளும். பெரும் கழுகுகள் இறைச்சியைக் கண்டு மேலே பறந்து சென்று மாமிசத் துண்டங்களை மேலே தூக்கிக்கொண்டு வருமாம். அவை இரை தின்ற இடங்களைப் பார்த்தால் அங்கே வைரக்கற்கள் சிந்திக் கிடக்குமாம். பிறகு அவற்றைப் பொறுக்கு வார்களாம்: நாளடைவில், மனிதன் கழுகு வைரம் தரும்வரை காத்திராமல், பள்ளத்தாக்குக்குள் இறங்கி, பாறைகளைக் குடைந்து, உடைத்து, மேல்கொணர்ந்து, கூடைகளில் போட்டுத் தண்ணீரில் அலசி, வைரக் கற்களைப் பொறுக்கி எடுத்தான். இம்மாதிரி எடுக்கப்பட்ட வையே புகழ் பெற்ற வைரங்கள்.

நூதன முறை

நாளடைவில் வைரக்கனி வெட்டி யெடுக்கும் தொழில் விருத்தியடைந்தது: வைரம் பாறையின் நடுவே தோய்ந்து நீண்ட குழாய் போல் இருக்கும். முதலில் கூலியாட்கள் கடப்பாரைகளைக் கொண்டு பாறை களைப் பிளந்து பின்பு கத்தியால் கனிப் பிளந்தனர். தென்குப்பிரிக்கா வில் கடந்த நூற்றாண்டின் இறுதியில் 'டெபியர்ஸ்', என்ற பெரும் ஸ்தாபனம் வைரக்கனி தோண்டும் தொழிலில் ஈடுபட்டது: அந்தக் கம்பெனியார் அரசாங்கத்திடமிருந்து ஆயிரம் கைகளை அமர்த்திக் கல்லுடைப்பில் ஈடுபடுத்தினர்.

பிறகு பாறைகளைத் தூளாக்கவும், கல் உடைக்கவும் இயந்திரங்கள் தோன்றின. வைரத்தின், கல்லை விடக் கனமான தன்மையை அடிப் படையாகக் கொண்டு, செயற்கைத் நிரவங்களில் வைரம் மேழே அமும்பும்படியும், வெறும் கற்கள் மேலே மிதக்கும்படியும் செய்து வைரத் தைப் பிரித்தெடுத்தனர்.

சமீபத்தில் ரஷ்யாவில் ஒரு நூதன எக்ஸ்ரே முறை கையாளப்படு கிறது. வைரத்தின் மேல் எக்ஸ்ரேக் கதிர்களைப் பாய்ச்சினால் அது தக தகவென்று பிரகாசிக்கும். இத் தன்மையைப் பயன்படுத்துவதால் வைரத்தினின்றும் தோன்றும் ஒளி ஒரு வெளிச்சம் ஊர்க்கும் கருவியில் படுகிறது. இக்கருவி ஒளி பெற்ற வைரத்தை இழுத்து ஒரு நிசை யில் திருப்புகிறது: வெறும் கல் வேறு நிசையில் செல்வதால், வைரத்தைத் தனியாகப் பிரித்துப் பெறமுடிகிறது. இம் முறைப்படி புதிய வைரம் பிரிக்கும் இயந்திரங் கள் லண்டனில் செய்யப்படுகின் றன: பல நாடுகளிலும் செயல் பட்டு வருகின்றன: மலையக் குடைந்து பாறையைப் பிளக்கு வைரத்தைப் பிரிப்பது சுலபமல்ல. ஒரு வைரம் வேண்டுமானால் 350 லக்ஷம் மணிக்கற்களை அகற்றவேண் டும். இது அபார சாதனை. எனினும் வைரத்தின் உயர் விலை காரணமாக இப்பணி செய்வது சாத்தியமாகிறது.

இயற்கையில் விளையும் வைரங்கள் பதரற்றப்பட்டன. வெட்டியெடுக்கப் படும்போது பெரிய வைரக்கற்கள் கொஞ்சமாகவும் பொடிக் கற்கள் அதிகமாகவும் கிடைக்கிறது.

பெரிது சிறிதாகப் பிரிப்பது முதல் வேலை. ஒரு காரட்டுக்கு மேற்பட்ட தனிவைரம், காரட் சுமார் 30,000 ரூபாய்க்கு விற்கிறது. ஆனால் பல பொடிக்கற்களாக இருந்தால் 'காரட்'டில் விலை சுமார் 10,000 ரூபாயே. அடுத்தது வைரத்தை அதனுடைய தன்மைகளான நிறம், ஒப்புக்கும் போன்றதன்மை, வடிவம், தூய்மை ஆகியவற்றைக் கொண்டு விலை நிர்ணயிக்கின்றனர். பலிங்கு, வெள்ளை, நீலவெள்ளை, சற்றே மஞ்சள் தோய்ந்த வெள்ளை ஆகியவை உயர் ரகமாகக் கருதப்பட்டு நல்ல விலை போகின்றன. பழுப்பு நிறம் தோய்ந்து, வெடிப்பு உள்ளது, மாசு படிந்தது ஆகியவை மட்ட விலை பெறுகின்றன, இவையெல்லாம் அணிகலன்களில் உபயோகப்படும் வைரவகை. இவை அல்லாமல் தொழில் உபயோகத்துக்குரிய வைரம் மட்ட வகை. உலகின் வியாபாரத்துக்கு வரும் அணிகலன் வகை வைரத்தில் சுமார் 80 சதவீதம் லண்டனிலும்தான் பேரம் பேசப்படுகின்றன. ஏஞ்சியவை, ரஷ்யா போன்ற நாடுகளில் அரசாங்கத்தால் விற்கப் படுகின்றன. லண்டனிலுள்ள வைரவர்த்தக ஸ்தாபனம் வருடத்தில் பத்துக் தடவை வைர ஏலம் நடத்துகிறது. மொத்த வைரம் வாங்க விரும்பு பவர் இதன் மூலமே போகவேண்டும், மொத்த வைர வியாபாரிகள் டெல்ஜியம், இந்தியா, இஸ்ரேல் ஆகிய நாடு களில் உள்ளனர். நம் நாட்டிலும் அரசாங்கம் வைர ஏலம் போடு கிறது. பன்னுலில், சமீபத்தில் ஆகஸ்டு மாதத்தில் சென்னையிலும் ஏலம் விடப்பட்டது.

ஏற்றுமதித் தொழில்:

வைரத்தை மொத்தமாக வாங்கி பிரிஸ்னர் வெட்டி, பட்டை நீட்டித் தயாரிப்பது ஒரு பெரிய தொழில். இதில் நமது நாடு உலகிலே தலை சிறந்த நாடாகத் திகழ்ந்து வருகிறது. இத்தொழிலில் தனி நபர்கள் சடுபடுகிறார்கள். மேலும் அரசாங்கம் ஊக்குவிப்பதால் வைரக் கம்பெனிகளென்னும் ஸ்தாபனத்தை நிறுவி, அதன் மூலம் மொத்தமாக வைரத்தை ஏலத்தில் எடுத்து அதனை வைர ஏற்றுமதியாளர்களுக்குக் குறைந்த ஒரு சதவீதக் கமிஷனில் விற்கிறது. வாங்குவோர் வைரத்தை வெட்டிப் பட்டை நீட்டி ஏற்றுமதி செய்வோம் என்ற உத்தரவாதம் அளிக்க வேண்டும். வைரத்தை வெட்டவும் நீட்டவும் வைரமே தேவை.

நம் நாட்டில் முதல் முதலில் குஜராத் மாகாணத்திலுள்ள பவன் பூர், சூரத் ஆகியவிடங்களில் இத் தொழில் தொடங்கப் பட்டது. பிறகு நவசாரி, பம்பாய், பால்நசர் ஆகிய இடங்களுக்குப் பரவியது, சமபகாலத்தில் ஜெய்ப்பூரிலும். தெற்கே திருக்குர். ரத்தினகிரி போன்ற இடங்களிலும் இத் தொழில் வளர்ந்துள்ளது, வரவேற்ப மிகவும் நுட்பம் வாய்ந்த தொழிலாகும். இதில் இன்று சுமார் 5½ லட்சம் தொழிலாளர்கள் சடுபடுகிறார்கள் என்ற்ல் இத்தொழிலின் மகிமை தெரியவரும்.

கடந்த ஆண்டு இந்தியா 365 கோடி ரூபாய் பெறுமான வைரத்தை இறக்குமதி செய்தது. வெட்டிப் பட்டை நீட்டிச் சுமார் 550 கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்தது. இதனுல் இந்தத் தொழிலுக்கும் நாட்டுக்கும் ஏற்பட்ட ஆதாயம் 185 கோடி ரூபாய். மேலும் முக்கியமாக நாட்டுக்கு அந்நியச் செலாவணி கிடைக்கிறது. நமக்கு வைரத் தொழி லுலில் முக்கிய வளிகள் பெல்ஜியமும் இஸ்ரேலுமே. இந்தியாவில் குடிசைத் தொழில் அளவிலும் இது நடக்கிறது.

கிளவும் காஞ்சீபுரமும்

இந்தியாவிலே ஆங்கில சாம்ராஜியத்தைத் தோற்றுவித்த ராபர்ட் க்ளவ் ஒரு சமயம் காஞ்சிபுரம் சென்றுள். அப்போது வரதராஜப் பெருமாளுக்கு உற்சவம் நடந்து கொண்டிருந்தது. வரதலில் மகிமை மிகுந்த யானை க்ளவ், 'மகராஜ்' என்ற வரைப் பதக்கத்தை, பகவானுக்குச் சமர்ப்பித்தானும்.

பின்னர் மாவட்டக் கலெக்டராக இருந்த கர்னல் ப்ளேஸ் என் பாரும் வரதனுக்கு வைர ஆபரணங்களை அணிவித்தாளும். கொடுக்கும் வரதன் பெற்றுக் கொண்டான்! கடவுளின் விக்கிரகங்களுக்கு வைர ஆபரணங்கள் பல கோவில்களில் உள்ளன. திருப்பதியில் திருவேங்கடமுடையான் தலை முடி

முதல் கால் அடி வரை வைர அங்கி அணிந்து தரும் சேவை கண்கொள்ளாக் காட்சியாகும்.

தென்குமரி முனையிலே தனித்தவம் புரியும் கன்னியாகுமரியின் மூக்கில் திகழும் வைரம் ஒளி மிகுந்தது.

அமெரிக்கா கடந்த வருடம் சுமார் 70 கோடி ரூபாய் மதிப்பிடத்தக்க நகைகளை இறக்குமதி செய்தது. ஜப்பான் 200 கோடி. புதுப் பணக்காரர்களாகிய குவைத் மட்டும் 30 கோடி. பெருமான அனிகலன்களைப் பெற்றது. அரபு நாடுகளில் லட்சுமி கடாக்ஷம் பூரணமாக இருப்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

உயிரைப் பணயம் வைத்துப் பலர் வைரக்கடத்தலில் ஈடுபடுகின்றனர். விலை அதிகம்; கனம் குறைவு; கைக்கடங்கிய சரக்கு. ஆகவே கடத்தல் கலபம். ரங்கூன் வைரம் கடத்தலுக்கு லாயக்கற்றது; பெல்ஜியம் வைரமே கடத்தல் மன்னர்கள் காதலிக்கும் கல்!

மக்களுக்கு வைரத்தின் மேல் உள்ள மோகத்தை சொல்லவும் வேண்டுமா? என்னதான் விலையானலும் வைரத்தோடு இல்லாமல் கலியாணம் ஏது? மாப்பிள்ளைக்கு வைர மோதிரம் ஆடிக்குப் போடுகிறேம் என்று சொல்லி அவ்வாக்கை ஆடிக் காற்றோடு விட்டதால் வினாத்த மனத்தங்கல் எத்தனை? நம் நாட்டில் தான் வைர மோகம் என்ற எண்ண வேண்டாம். சமீபத்தில் லண்டனில் வைரமூக்குத்தி 'பாஷனு'கப் போய்ப் பல ஆங்கில மாதர்கள் இதனை அணிவதற்கென்றே மூக்கு குத்திக் கொண்டார்களாம்! பணம் படைத்த நாடுகளாகிய அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி போன்ற இடங்களில் வைர மோகம் வெகுவாகப் பெண்களிடம் காணப்படுகிறது. நம் நாட்டில் வைரத்தைத் தங்கத்திலே கட்டுகிறார்கள். மேலை நாடுகளில் அதேகமாக வைர நகைகட்ட பிளாடினத்தை உபயோகின்றனர். பிளாடினம் தங்கத்தை விட விலை உயர்ந்தது. அதனை நாடுகின்றனர். அதைவிட இன்னும் விலையுயர்ந்த ஓர் உலோகம் கிடைத்தால் பிறகு நாட்டம் அதில் இருக்கலாம்.

இப்போது செயற்கை வைரங்கள் தோன்றியுள்ளன. இவையெல்லாம் கண்ணுடியே! நல்ல வைரம் கிடைக்காததனால் ரங்கூன் வைரத்தை யாவது அணிந்து கொஞ்சம் ஆனந்தம் அடைகின்றனர் மக்கள்.

பூமியின் அடியில் தோன்றும் சுரும்பிலையாகிய சொல்லொணச் சூடு, அழுத்தம் ஆகியவற்றைச் செயற்கையாகத் தோற்றுவித்து, அமெரிக்கா, நியூயார்க்கிலிலுள்ள ஜெனரல் எலெக்டிரிக் கம்பெனி, கரியைச் சிறுவைரமாகச் செய்கிறுக்கின்றது. இது சோதனை அளவில் மாபெரும் வெற்றிதான். ஆனல் செலவு?


வைரத்தின் பிரகாசத்தன்மையை அறிய நம் நாட்டின் தவப் புதல்வனுக்குத் தோன்றி, 'நோபெல்' மாமேதை, ஸர் சி. வி. ராமன் அரிய ஆராய்ச்சிகள் செய்துள்ளார். சோதனைக்குத் தேவையான வைரம் வேண்டுமே? இதற்கென ராமன் அந்த நாளைய சுதேச மன்னர்களிடம் சென்று, வைரப்பிச்சை கேட்டுப் பல நேர்த்தியான வைரங்களைப் பெற்றார். ராமன் சேகரித்த அரிய வைரங்கள் 500க்கும் மேலே!

வைரங்களின் தன்மை, ஒளி பாயும் சக்தி, பளபளப்புத் தன்மை ஆகியவற்றை அல்லும் பகலும் ஊன் உறக்கமின்றி ஆராய்ந்தார், வைரத்தில் இயற்கை அழகைச் சோதித்தார். பன்னு வைரத்தில் இருவகையுண்டு என்று முதல் முதலிலே கண்டுபிடித்தார்; வைரத்தில் மேல் தக்க ஒளி பாய்ச்சினர். ஒருவகை வைரம் பளபளவென்று பிரகாசிக்கும்; மற்றவை அப்படிப் பிரகாசிக்காது. இது மிகவும் அடிப்படையான ஆராய்ச்சி; வைரத்தின் ஜவுடே இயங்கும் கரியின் அணு நிலைமையைப் பொருத்து இவ்விரண்டு தோன்றுகிறது என்று கண்டார்.

மேலும் வைரத்திலுள்ள கரியின் அணுக்கள் எவ்வாறு அமைந்து உள்ள நடனம் புரிகின்றன என்பதை எக்ஸ்-ரேயின் உதவியால் கண்டறிந்தார். வைரத்திலே தகடு போன்ற தன்மை இருப்பதைக் கண்டுபிடித்தது மாபெரும் சாதனை என்று உலக அறிஞர்கள் புகழ்ந்தனர். அண்ணாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, இந்நாள்வரை பலவிடங்களிலும், புதிய சாதனமாகிய 'லாஸர்', எனும் ஒளிக்கதிரைக் கொண்டு வைரத்தின் மேல் சோதனைகள் நடத்துகொண்டிருக்கின்றன! வைரம் இயற்கையின்னியில் மடியிலே தோன்றும் உன்னதமான பொருள். வருங்காலத்தில் உலகில் வைரத்தின் மதிப்பு மேலும் உயர்ந்து விளங்கும் என்பது உறுதி. ✳

வாடிக்கையாளர்களுக்கும் பொதுமக்களுக்கும்

எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்



நகர் மத்தியில்
வசதியுடன் தங்குவதற்கு

- ஏர்கண்டிஷன் அறைகள்
- ஒவ்வொரு அறையிலும் வெந்நீர் வசதி
- போன் & மியூசிக் சேனல்
- கார் பார்க் & மீட்டிங் ஹால்

கோமத் லாட்ஜ்

(R S பில்டிங்ஸ்)

56, பென்சனர் ரோடு, திண்டுக்கல்-1

தந்தி: குட்லக் போன்: 1520 & 1560

தீபம் ஏற்றும் நன்னாள்

வாழ்வில் ஓர் பொன்னாள்

மனமுவந்து பிறருக்கு கொடுப் பதற்கு ஏற்ற நேரம்
தீபாவளி நேரம். அப்படி கொடுக்கும்
பொழுது பெறுபவரின் முகத்தில் தோன்றும் ஒளி,
தீபாவளி தீபத்தைவிட அதிக பிரகாசம் உடையது.
அதிலும் எச்எம்டி கைக்கடியாரம் ஒன்றை பரிசாக
கொடுத்துவிட்டால் அவர்கள் முகத்தில் தோன்றும்
ஒளி வெள்ளத்தைப் பற்றி கூற வார்த்தை ஏது!

வாட்ச் டிவிஷன்

hmt

நாட்டிற்கு நல்ல நேரம் காட்டுவோர்
தொழிற்கூடங்கள்: பெங்களூர் (I&II), ஸ்ரீநகர், துமக்கூர்



எச்எம்டி கைக்கடியாரங்கள்
காலத்திற்கேற்ற பரிசுப் பொருள்

HMT-W-1086/81-TAM

கமல மலர்க் கன்னி

ஸ்ரீவைகுண்டத்தில் மகாலட்சுமி, செந்தாமரைப் பூவில் அமர்ந்திருந்தாள். நாரதர் வீணை வாசித்துக்கொண்டிருந்தார். அந்த மோகன கானத்தில் மயங்கித் திருமகள் கேட்டுக்கொண்டிருந்தாள். அப்போது ஞரியனின் புதல்வன் தேவந்தன், உச்சைச் சிரவஸ்என்ற குதிரைமீது ஏறி அங்கே வந்தான். அதன் எழில் அவனைக் கவர்ந்தது. நாரத கானத்திலும் அசுவத்தின் அழகிலும் மயங்கியிருந்த லட்சுமி, திருமால் அழைத்தபோது கவனிக்காமல் இருந்துவிட்டாள். திருமால் கோபம் கொண்டு, 'குதிரையின் மேல் கொண்ட கவர்ச்சியால் என் அழைப்பைக் கவனிக்காமல் இருந்துவிட்டாய். நீ குதிரையாகப் பிறக்கக் கடவாய்' என்று சாபம் கொடுத்துவிட்டார்.

இமயமலைச் சாரலில் மகாலட்சுமி, பெண் குதிரையாகத் தோன்றினாள். சிவபிரானின் விருப்பப்படி திருமாலும் ஆண் குதிரையாக மாறி வந்தார். திருமாலும் மகாலட்சுமியும் குதிரை ரூபத்தில் அங்கிருந்த சிவலிங்கத்தை வழிபடத் தொடங்கினர். கங்கை நதிக் கரையில், சிவபெருமானின் அருளால் திருமாலின் அவதாரமாக ஓர் ஆண் குழந்தை உருவாயிற்று. தன் வீரத்தில் சபிக்கொண்டு படுத்திருந்தது.

துர்வர்சு என்ற மன்னன் பிறந்த விஷ்ணுபக்தன். தனக்குப் புத்திரப் பேறு இல்லாமையால், திருமாலே வேண்டிப் பல விரதங்கள் இருந்து வந்தான். அவன் கனவில் திருமால் தோன்றி, ''உன் பக்திக்கு மெச்சினேன். கங்கைக் கரையில் ஓர் ஆண் குழந்தை படுத்திருக்கிறது. அதை எடுத்து வந்து வளர்த்து வா. உன் மனக்குறை தீரும்'' என்றார். பெருமகிழ்வுடன் மன்னன் துர்வர்சு அங்கே போய்ப் பார்த்தான். இறையருளே எண்ணியபடியாயிற்று. அந்தக் குழந்தையை எடுத்துச் சென்று தன் மனைவியிடம் கொடுத்தான். தன்னிகரற்ற அழகும் வீரமும் குழந்தையிடம் காணப்பட்டதால், ஏகவீரன் என்று பெயரிட்டான் மன்னன்.

ஏகவீரன் தன் பெயருக்கேற்றபடி சிறந்த வீரனுகவிளங்கினான். அவனிடம் அரசாட்சியை ஒப்படைத்து விட்டு, மன்னன், தன் பட்டமகிஷியுடன் காட்டில் தவம் செய்யச் சென்று விட்டான்.

ஏகவீரர், சில தோழர்களுடன் காட்டுக்கு வேட்டையாடச் சென்றான். ஒரு முயலைத் துரத்திப் போன ஏகவீரன், வழியில் தாமரைத் தடாகம் ஒன்றின் கரையில் ஓர் அழகிய பெண் வருத்தத்துடன் உட்கார்ந்திருப்பதைக் கண்டான். ''பெண்ணே, ஏன் வருந்துகிறாய்? உன் குறையைச் சொன்னால் தீர்த்து வைக்கிறேன்'' என்று அவளிடம் கூறினான்.

அரசனே வணங்கிய அந்தப் பெண் கூறினாள்:

''ரைப்பியர் என்ற மன்னரின் மகளின் பெயர் ருக்மரேகை. அவர்களுக்குக் குழந்தைப் பேறே இல்லை. அதனால் அவர்கள், பல பெரியோர்களைக் கலந்து யோசித்துப் புத்திரகாமேஷ்டி யாகம் செய்தனர். அந்த யாக அக்கினியிலிருந்து, ஜோதி உருவமாக ஒரு பெண் தோன்றினாள். லட்சுமியின் அம்சமான அந்தப் பெண்ணை, மன்னர், ஏகாவளி என்று பெயரிட்டு அன்புடன் வளர்த்து வந்தார். ஒரு நாள் அரண்மனைக்கு வந்த ஒரு முனிவர், 'திருமாலின் அம்சமான ஏகவீரன் வந்து இவனை மணப்பான்' என்றார். நான் அவள் தோழி. அவளுக்குத் தாமரைக் குளத்தில் நீராடுவது என்றால் மிகவும் பிரியம். நானும் அவளும் இந்தக் குளத்துக்கு வந்து நீந்தி விளையாடினோம். அப்போது இங்கே வந்த காலகேது என்ற அரக்கன், அவனைத் தூக்கிப் போய்விட்டான். அவனைக் காணுமல் நான் வருந்துகிறேன்.''

''நான் அன்னை புவனேசுவரியைத் துதித்தேன். என் கனவில் அன்னை தோன்றி, 'இந்தக் குளக்கரையில் காத்திரு. ஒரு வீரன் வருவான். அந்த வீரன் உன் தலியையைக் காப்பாற்றுவான்' என்று கூறினாள். அதற்காக இங்கே காத்திருந்தேன். நீங்கள் வந்திருக்கிறீர்கள், அம்பிகையின் மந்திரத்தை விடாமல் ஜபித்ததால் கைமேல் பலன் கிடைத்துவிட்டது.''

தன்னையே மணக்க, ஏகாவளி காத்திருக்கிறாள் என்பதை அறிந்த ஏகவீரன், பவானியின் பீஜாட்சரத்தை ஜபித்தபடி, தோழியுடன், அந்த அரக்கனது நாட்டுக்குச் சென்றான்.


அரண்மனை நந்தவனத்தில் கண்ணுடியாலான ஒரு மாளிகை. அந்த மாளிகையில் ஏகாவளி வருத்தத்துடன் அமர்ந்திருக்க, காலகேது, தன்னை மணக்கும்படி அவளை வற்புறுத்திக்கொண்டிருந்தான்.


நாரதரில் வரும்போதே ஏகவீரன் அந்தக் காட்சியைப் பார்த்துவிட்டான். இரத்தம் சூடேற, கோபத்துடன் வினரந்தான் ஏகவீரன். வெளியில் காவல் இருந்த வீரர்களுடன் சண்டையிட்டு, அவர் களைக் கொன்றுவிட்டு, ஏகவீரன், கண்ணுடி மாளிகையை உடைத்துக்கொண்டு உள்ளே போனான்.


காலகேதுவுக்கும் ஏகவீரனுக்கும் மல்யுத்தம் நடந்தது. யுத்தம் எப்படி முடியுமோ என்று தவித் தாள் ஏகாவளி. கடைசியில் காலகேது இறந்தான். ஏகாவளி, அந்த வீரனின் காலில் விழுந்து வணங்கினாள். ''அன்னை பவானியின் வாக்குப்படி நீங்கள்தான் ஏகவீரர் என்று அறிகிறேன். என் தந்தையிடம் போவோம். அவருடைய அறியுடன் நாம் மணந்துகொள்வோம்'' என்றாள் அவள்.

அந்த வீரன் ஏகாவலியையும் அவள் தோழியையும், அவர்கள் நாட்டுக்கு அழைத்துச் சென்றான். பெண்ணைக் காணுமல் தவித்துக்கொண் டிருந்த ரைப்பியனும், அவன் மனைவி ருக்மரேகையும் பெண்ணைக் கண்டதும் ஓடிப் போய்க் கட்டிக்கொண்டனர்.

அவர்கள் விருப்பம்போல் ஏகவீரனுக்குத் தன் மகனே மணம் செய்துகொடுத்தான் மன்னன். தோழியைத் தன் சேனபதிக்கு மணம் செய்வித்தான். இரண்டு கல்யாணங்களும் ஒரே சமயத்தில் நடந்தன. இந்தக் கதையைப் படித்தால் கன்னிப் பெண்களுக்கு விரும்பிய மனுளன் வாய்ப்பான் என்று தேவிபாகவதம் கூறுகிறது. திரு ஜி. கே. மூர்த்தியின் சித்திரங்கள் அடுத்துத் தொடர்கின்றன.









அன்றைக்கு காலை வந்த தினசரியின் ஏழாவது பக்கத்தில், இரண்டாவது பத்தியில், ஒரு ஐம்பது மில்லி மீட்டர் பரப்பில் அந்தச் செய்தி வெளியாகியிருந்தது.

> ''மனநோய் நல டாக்டரான ஜெகநிகவரனுக்கு மூன்றாம் பிரசு. மனநோய் ஆஸ் பத்திரியில் அறுமதி.''

செய்தியைப் படித்த நான் என்னுள்ளே சிரித்துக்கொண்டேன்.

காரணம்?

நான்தான்!

நான் எப்போதும் போலத்தான் இருக்கிறேன் என்று சொன்னால் தாய் ஒரு எலுமிச்சை கொண்டை போட்டிருந்தாள். மெல்லிய பச்சை வண்ணச் சேலையிலும், கறுப்பு வண்ணப் பிளவுஸிலும் பணக்கார வாடை அடிக்க நின்றாள். கழுத்தில் தாலி தொங்கிற்று.

''என்ன?'' என்றேன்.

அவள் தலிப்போடு எனக்கு முன்னால் இருந்த நாற்காலியில் உட்கார்ந்தாள். அவசரக் குரலில் சொன்னாள்:

''டாக்டர், என்னோட பேர் சசிகலா. என் கணவர் பேர் ஜோதிராம். அவர் ஒரு பெரிய தொழிலதிபர். எங்க பங்களா ரேஸ் கோர்ஸில் அப்துல் ரஹீம் சாலையில் இருக்கு. எனக்கும் அவருக்கும் கல்யாணமாகி முணு வருஷம் கணவன்மார்களைப் போலவே என்கிட்ட அன்பா இருந்தார். என்னோட மனசுதான் அவருக்கு முக்கியம். என்னோட உடம்பு அவருக்கு இரண்டாம் பட்சம். ஆறுமாசம் முந்திவரை சாதாரணமா இருந்த அவர் கிட்ட இப்போ ஒரு மாறுதல் தெரிகிறது.''

''என்ன மாறுதல்?'' — நான் இடை மறித்துக் கேட்டேன்.

''அவர் முன்னேயெல்லாம் ராத்திரி ஒன்பது மணிக்கேபடுத்துத் தூங்க ஆரம்பிச்சுடுவார். இப்போ அப்படியில்லே. பால்கனியில, இருட்டில நாற்காலியைப் போட்டுக்கிட்டு, ராத்திரி பன்னிரெண்டு மணி வரைக்கும் உட்கார்ந்திருக்கார். ஏன் இப்படி இருக்கீங்கன்னு கேட்டா முறைச்சுப் பார்க்கிறார். வற்புறுத்திக் கேட்டா, 'ஒண்ணுமில்லே. நீ போய்ப் படுக்கப்போறியா? இல்லேயா'ன்னு மிரட்டறார். தொழில் பிரச்னேயா இருக்கலாம்னுதான் எண்ணத்தில் இத்தனே நாளும் சும்மாயிருந்தேன். ஆனு நேத்தைக்கு ராத்திரி அவர் நடந்துகிட்ட முறையைப் பார்க்கிறப்போ...?''

அவளுடைய மனத் துடிப்பை என்னால் உணர முடிந்தது.

''என்ன செஞ்சார்?''

''டாக்டர், அதை இப்ப நினைச்சாலும் என்னோட உடம்பெல்லாம் நடுங்குது. நேத்தைக்கு ராத்திரி மிரானு எனக்குவிழிப்பு வந்தது. கண் முழிச்சுப் பார்த்தேன். எல்லா விளக்கும் எரிஞ்சிட்டிருந்தது. என்னோட தலமாட்டுக்குப் பக்கத்திலே 'புஸ்' புஸ்'னு யாரோ மூச்சு விடறமாதிரி சத்தம். நீலியை யார்த்திப் பார்த்தேன். டாக்டர், என்னோட உடம்



வியாழக்கிழமை இரவில் வந்தவள்

ராஜேஷ்குமார்

யாராவது நம்பவேண்டுமே? என்னுடன் நெருங்கிப் பழகும் சைக்யாட்ரிஸ்ட்சத்தியத்தின்கூட 'அந்த நம்பாத பார்வையைத்' தானே என்மது வீசுகிறார்?

ஒரு வாரத்துக்கு முன்பு. அந்த வியாழக்கிழமை இரவு மணி பத்து. மழை பெய்து கொண்டிருந்தது. அப்போதுதான் அந்த அழகான பெண் என்னுடைய கன்சல்டிங் அறைக்குள் நுழைந்தாள். ஏறக்குறைய எல்லா நோயாளிகளையும் கவனித்தாயிற்று; இனி, புறப்பட வேண்டியதுதான் என்று எண்ணிக் கொண்டிருந்தபோது அவள் உள்ளே நுழைந்தாள். அவள் அழகு என்னைக் கவர்ந்தது. இருபது வயதிருக்கும். புருவங்கள் அழகாய் ஒன்று படுத்தி வானவில்லாக்கியிருந்தாள். ஷாம்பூலில் மின்னிய கூந்தலே அலட்சியமாய்த் தூக்கிக் கட்டிச் பின்னல் முடியப் போகிறது. எங்களுக்கு இன்னமும் குழந்தைங்க இல்லே.''

சொல்லிக்கொண்டே வந்தவள் கொஞ்சம் தயங்கினாள்.

''உம்! சொல்லுங்க'' என்றேன்.

''டாக்டர் அந்தப் பங்களாவிலே நானும் அவரும் மட்டுமே இருக்கோம். ஒரு வேலைக்காரனே வாட்ச்மேனுகூட இல்லே. அவர் ஆபீசுக்குப் புறப்பட்டுப் போயிட்டா நான் மட்டுமே பங்களாவில் இருப்பேன். என்னோட சொந்தக்காரங்க யார் வந்தாலும் அவருக்குப் பிடிக்காது. அவருக்குச் சொந்தக்காரங்களே இல்லே. அதனுல அந்தப் பிரச்னேயே அவருக்கு இல்லே. நான் சமையலே முடிச்சுட்டு நான் முழுக்க ரேடியோ கேட்டுக்கிட்டும் படிச்சுக்கிட்டும் இருப்பேன்.'' சற்றுப் பொறுத்துத் தொடர்ந்தாள்:

''டாக்டர், என் கணவர் ஆரம்பத்தில் ரெண்டு வருஷம் எல்லாம் நல்லாத்தான் இருந்தார். அப்புறம்தான் இந்த மாறுதல் தெரிய ஆரம்பிச்சது. ஆரம்பத்தில் ரெண்டு மூணு நாளைக்கு ஒரு தடவை இப்படி நடந்துக்குவார். அப்புறம் வாரத்துக்கு ஒரு தடவை. இப்போ ஒவ்வொரு வியாழக்கிழமை ராத்திரியும் இப்படி நடந்துக்கறார். இதுக்கு என்ன காரணம்னு தெரியலே. அவரை எப்படி இதிலிருந்து மீட்கிறதுன்னும் தெரியலே. நீங்கதான் ஏதாவது செய்யணும்.''

''நிச்சயமா செய்யறேன்'' என்றேன்.

''ஆனா, அவர் இதுக்கு ஒத்துக்கணுமே?''

''ஒத்துக்க வைக்கிறேன்.''

''அவர் முன்னேயெல்லாம் ராத்திரி ஒன்பது மணிக்கேபடுத்துத் தூங்க ஆரம்பிச்சுடுவார். இப்போ அப்படியில்லே. பால்கனியில, இருட்டில நாற்காலியைப் போட்டுக்கிட்டு, ராத்திரி பன்னிரெண்டு மணி வரைக்கும் உட்கார்ந்திருக்கார். ஏன் இப்படி இருக்கீங்கன்னு கேட்டா முறைச்சுப் பார்க்கிறார். வற்புறுத்திக்

பெல்லாம் அப்படியே நில்லிட்டுப் போயிடுச்சு. என் தலைமாட்டுக்குப் பக்கத்திலேன் கணவர் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து என்னமோ 'ஒரு மிருகம்' பார்க்கிறமாதிரி வெறித்துப் பார்த்திண்டிருந்தார். சரேலென்னு எழுந்திருச்சு உட்கார்ந்து சுவரிலிருந்த கடிகாரத்தைப் பார்த்தேன். ரெண்டு மூப்பது. நான் என்னுடை பயத்தை மறைச்சுக்கிட்டு, 'இத்த நேரத்தில் ஏன் இப்படி உட்கார்ந்திருக்கிங்க?'ன்னு கேட்டேன்.''

சகிலா பேசுவதை நிறுத்திவிட்டு, தன் கையிலிருந்த கைக்குட்டையால் நெற்றியில் அரும்பியிருந்த வேர்வையைத் துடைத்துக்கொண்டாள். ''நான் கேட்ட கேள்விக்கு அவர் பதில் சொல்லாமல் எழுந்தார். ஒவ்வொரு விளக்காய் அணைத்துவிட்டு வந்து படுக்கையில் படுத்துக்கொண்டார். சில நிமிஷங்கள்லே குறட்டை விட்டுத் தூங்க ஆரம்பிச்சுட்டார். என்னுல தூங்க முடியலே, டாக்டர். விடிய விடிய உயிரைக் கையில் பிடிச்சுட்டே முழிச்சுட்டிருந்தேன்.''

தான் இடைமறித்தேன். ''விடிஞ்சதும் எப்பவும்போல் உங்க கணவர் சாதாரணமா இருந்தாரா?''

''ஆமாம். விடிஞ்சதும் சாதாரணமா இருந்தார். வழக்கம்போல் டென்னீசுக்குப் போனார். போயிட்டு வந்ததும் குளிச்சு டிபன் சாப்பிட்டார். அப்பில் விஷயமா வந்த மானேஜர்கிட்ட ஒரு மணி நேரம் பேசினார். என்கிட்டே ஆபீசுக்குப் புறப்படும் சமயம் பார்த்து, 'மத்தியானம் என்ன சமையல் பண்ணப்போறேன்'னு கேட்டார். தானே காரை ஒட்டிக்கிட்டுப் போனார்.''

''வீணு கலவரப்படாதிங்க. அவர் உங்க உயிருக்கு ஏதாவது பண்ணிடுவாரோன்னு பயப்படறீங்க. அந்தப் பயம் உங்களுக்குக் கொஞ்சங்கூட வேண்டாம். உங்கமேலே அவருக்குத் தனிப்பட்ட முறையிலே ஏதாச்சும் வெறுப்பு இருக்கலாம். அதை என்னன்னு கண்டுபிடிச்சு சரிப்படுத்திடலாம். நானேருக்கு காலேயில அவரை இங்கே கூட்டிட்டு வாங்க. நான் பேசிப் பார்க்கறேன்.''

''டாக்டர், அவரை இங்கே கூப்பிட்டா அவர் வரமாட்டார். அவரை என்னல கூப்பிடவும் முடியாது. கூப்பிட்டா எனக்கென்ன பைத்தியமான்னு கேட்பார். அவருக்கே தெரியாம நீங்க அவரைப் சோதனே பண்ணணும் டாக்டர். இன்னிக்கு ராத்திரி பதினெரு மணி சுமாருக்கு நீங்களென்னுடைய்களாவுக்கு வாங்க. உங்க காரைத் தாமல் பார்க்குக்கு முன்னுடி நிறுத்திட்டு நடந்தே வாங்க. நான் காத்திருக்கேன்.''

''இன்னிக்கு ராத்திரியேவா?'' நான் தயங்கினேன்.

சகிலா படபடப்பாய்ச் சொன்னுள். ''ஆமாம் டாக்டர். மறுத்துடாதிங்க. நீங்க எவ்வளவு பணம் கேட்டாலும் தாரேன். இதோ செக்புக் கொண்டுவந்திருக்கேன். நீங்க என்ன கேட்டாலும் இப்பவே எழுதிக் கொடுத்துடறேன்.'' தான் கொண்டு வந்திருந்த டம்பப் பையின் ஜிப்பைப் பிரித்துச் செக் புத்தகத்தை உருவி மேஜையின் மீது வைத்தாள்.

''மிஸஸ் சகிலா, உங்க கணவரைக் குணப்படுத்திய பிறகே வாங்கிக்கறேன். நான் ராத்திரியே உங்க உங்களாவுக்கு வர்றதைப் பத்தி எனக்கு ஆட்சேபம் இல்லே. ஆனு நான் வர்றதை உங்க கணவர் பார்த்து, அதனுல உங்களுக்குப் பாதகமான லெ பிரச்னைகள் உருவாருமோன்னு தயங்கறேன்.''

சகிலா புன்னகை பூத்தாள். ''என் கணவர் நீங்க வர்றதைப் பார்க்க வாய்ப்பே இல்லே டாக்டர். பங்களா மாடியில், கடைசி அறையிலதான் அவர் இருப்பார். நீங்க வர்ற நேரம் பதினெரு மணி. அந்த நேரத்திலே அவர் வெளியே வரமாட்டார். பனி ரெண்டு மணிக்கு மேல்தான் அவரோட விசித்திரமான நடவடிக்கைகள் ஆரம்பமாகும். அதை நீங்க பக்கத்து அறையிலிருந்து வெண்டிலேட்டர் வழியாப் பார்க்கலாம். நானும் படுக்கையில படுத்துத் தூங்கற மாதிரி பாசாங்கு செய்றேன்.''

''சரி, சகிலா. நான் கண்டிப்பாய் வர்றேன். உங்க விசாசத்தை எழுதிக் கொடுங்க.''

முத்து முத்தாக எழுதிக் கொடுத்தாள்.

'மான்சூர் மேன்ஷன்'

நெம்பர் 29ஏ. அப்துல் ரஹீம் ரோடு ரேஸ்கோர்ஸ், ரெட்பீல்ட்.

அவள் வாசலே நோக்கி எழுதின ஒவியமாய் நடந்தாள். அவள் பின்னழகு?

எல்லோப்பற்றி இங்கே நான் சொல்லியாக வேண்டும்.

நான் மருவியாதி நிபுணர் என்பது உங்களுக்குத் தெரியும். நிருமணமாகாதவன்; பெண்கள் என்றல்—அதுவும் அழகான பணக்காரப் பெண்கள் என்றல் அதிகமாய்ச் சபலப்படுவேன். என்னிடம் சிகிச்சைக்காக வரும் எந்தப் பெண்ணுமே ஏதாவது ஓர் நிரவில், என்னல் வசியப் படுத்தப்பட்டு அவள் உடம்பை எனக்குக் கொடுத்துவிட்டுப் போவாள் என்பது உங்களுக்குத் தெரியாது.

இந்தத் தொழில் எனக்குப் பணத்தையும் வாரிக்கொடுத்தது. பெண்களையும் தேடிக் கொடுத்தது.

கடைசியாய் வந்திருப்பவள் இந்தச் சகிலா. நோய் இவளுக்கு இல்லே. இவள் கணவனுக்கு. யாருக்கு இருந்தால் என்ன? சகிலாவை வசியப் படுத்துகிற முறை எனக்குத் தெரியும். ஏதாவது ஒரு குளிர் பானத்தில் கரைக்கப்பட்ட அரை வில்லே மாத்திரையும், தண்ணீரில் மாத்திரையும், என்னுடைய கண் பார்வையும் போதும்.

இன்றைக்கு ராத்திரி இவளுடைய கணவன், மறுநாள் இவள்! உடம்பில் புது ரத்தம் பாய்ந்தாற் போன்ற உணர்வோடு கிளினிக்கைப் பூட்டிக் கொண்டு வெளியே வந்தேன்.

பதினெரு மணி. தாமல் பார்க்கருகே காரை நிறுத்தினேன். நெட் பீல்ட் ஏரியா முழுதுமே ஓர் அசாதாரணமான அமைதி. காரின் நான்கு கதவுகளையும் பூட்டி விட்டு, மழை பெய்து சாரம் பிழுக்கும் அந்த அப்துல் ரஹீம் சாலையில் நடந்தேன். மான்சூன் மேன்ஷன், 29ஏ வைத் தேடினேன்.

தெரு விளக்குகள் நிந்திய வெளிச் சத்தில் ஒவ்வொரு பங்களாவின் காம்பௌண்ட் முகப்பையும் பார்த்

துக் கொண்டே போனேன். கடைசி யாக 29 ஐக் கண்டேன்.

மணி 11-25. வேகமாய் நடந்தேன்.

பங்களாவை நெருங்கினேன். காம்பௌண்ட் கதவின் மேல் கையை வைத்துத் தள்ளினேன். எண்ணெய் இல்லாத கதவு கதறியது. உள்ளே நுழைந்தேன். நாய் ஏதாவது இருக்குமா? பயந்துகொண்டே நடந்தேன்.

மனசு முதல் முறையாய்த் 'திக்' கென்றது. பொருட்படுத்தாமல் நடந்தேன். இருட்டான போர்டிகோ வந்தது. படியேறினேன்.

''வாங்க டாக்டர்!''—இருட்டான இடக்கைப் பக்க மூலையிலிருந்து ஒரு பெண் குரல் கிசுகிசுப்பாய் வந்தது.

நான் சட்டென்று நின்றேன்.

சகிலா மூலையிலிருந்து வெளிப்பட்டாள். கோல்டு மோகர் செண்ட் மணம் வீசியது. சகிலா என்னை நெருங்கினாள், கிசுகிசுத்தாள்.

''உள்ளே வாங்க டாக்டர்!''

அவள் உள்ளே நடந்தாள். நான் பின்தொடர்ந்தேன். செமத்தியான பங்களா. மிகப் பெரியது.

நடந்துகொண்டே மெல்லிய குரலில் கேட்டேன்.

''உங்க கணவர் என்ன பண்ணுறார்?''

''இப்பத்தான் தூங்கினார்.''

மாடிப்படிகளின் மேடு இருந்த மிகச் சிறிய அறைக்குள் நுழைந்தாள்.

இரண்டு நாற்காலிகள். ஒரு சோபா கம் பெட். ஒரு ஷெல்ப் தெரிந்தது. கவரின் மூலையில் ரோ வாட்ஸ் பல்பு ஒன்று இலந்தைப் பழமாய் மின்னியது.

''உட்காருங்க டாக்டர்.''—சகிலா சோபா கம் பெட்டைக் காட்டி உட்கார்ந்தேன். அவள் எதிரே இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள்.

''டாக்டர், இந்தப் பங்களாவோட சுற்றிலியையெப் பார்த்தீங்களா? புதுசா வந்த உங்களுக்குச் சொல்லும் பயமா இருக்கும். ஆனு எனக்கு இந்தத் தனிமை, இந்த ஏகாந்தம் எல்லாமே பழகிப்போயிடுச்சு.'' சகிலாவின் குரலில் ஒருவிதச் சோகம் இழையோடியது.

''இந்தப் பங்களாலிலே தனியா இருக்கிறதுக்கு அசாத்தியமான தைரியம் வேணும், மிஸஸ் சகிலா. நிச்சயம் என்னால இருக்க முடியாது. பயந்து பயந்தே செத்திடுவேன்.'' புன்னகையுடன் சொன்னேன்.

''ஏதாவது சூடாச் சாப்பிடறங்களா டாக்டர்?''


''ஒண்ணும் வேண்டாம். முதல்ல உங்க கணவரைப் பார்க்கணும். அவருடைய விசித்திரமான நடவடிக்கைகள் எத்தனை மணிக்கு ஆரம்பமாகும்னு சொன்னீங்க?''

''பன்னிரண்டு மணிக்கு மேலே.''

''அதுக்கு முன்னடி அவர் முழிச்சுக்மாட்டாரா?''

''டாக்டர்!'' பற்கள் முழுதும் தெரியச் சிரித்தாள் சகிலா. ''என் கணவர் முழிச்சுக்காதபடி ஒரு காரியம் பண்ணியிருக்கேன். வாங்க காட்டறேன்.'' அவள் எழுந்தாள். மாடிப்படிகளை நோக்கிச் சென்றாள். நான் மௌனமாய்ப் பின் தொடர்ந்தேன்.

''அதோ, அந்தக் கடைசி அறை தான் என் கணவரோட அறை!''



என்று சொல்லிக்கொண்டே மாடி வராந்தாவில் வேகமாய் நடந்தாள் சசிகலா. இருட்டில் நானும் பின் தொடர்ந்தேன் வேகமாய்.

அறையை நெருங்க, நெருங்க ஏதோ ஒரு வேண்டாத வாசனை என் நாசியை நெடுப அரம்பித்தது.

''என்னங்க ஏதோ ஒரு ஸ்மெல் வர்ற மாதிரி இல்லே?''

சசிகலா என் கேள்விக்குப் பதில் சொல்லாமல் அறையை நெருங்கி நின்றாள். என்னைத் திரும்பிப் பார்த்தாள். மறுபடியும் பற்கள் தெரியச் சிரித்தாள். ''டாக்டர், கதவைத் திறந்துவிட்டு மெதுவா உள்ளே போங்க. இந்த பெட்ரூம் கேட் வெளிச்சம் போதும். போங்க உள்ளே; போய்ப் பார்த்துட்டு வாங்க.''

நான் தயங்கினேன். ''நீங்க?''

''நானும் உங்க கூடவே வர்றேன்.'' அவள் கதவைத் திறந்து விட்டாள். நான் உள்ளே நுழைந்தேன். கொஞ்சம் பெரிய அறை. அறையின் மூலையில் கொசு வலைகட்டிய ஒரு கட்டில். ரத்தச் சிவப்பில் ஒளிரும் ஒரு பெட் ரூம் கேட். அறையில் ஸாமான்கள் ஏதும் இல்லை.

படுக்கையை நெருங்கி நின்றேன். கைகள் கோர்ப் நடுங்கக் கொசு வலையை விலக்கினேன். அடுத்த நிமிடம்—

என் உடம்பின் இயக்கங்கள் பூராவும் ஸ்தம்பிக்க நின்றேன். என் ரத்த நாளங்களில் சில விநாடிகளுக்கு ரத்தம் திசைமாறி ஓடியது.

கட்டிலில் ஜோதிராம் மல்லார்ந்திருந்தார். மார்பில் நட்டுக்குத்தாய் ஒரு பிச்சுவா செருகியிருக்க, ரத்தம் உடம்பு பூராவும் உறைந்திருந்தது. விழிகள் இறந்து, வாய் பிளந்து, கைகளை விரித்து....

''ஹக்!'' என்ற அதிர்ச்சியோடு முகத்தைத் திருப்பினேன்.

சசிகலா கைகளைத் தன் மார்பின் குறுக்காகக் கட்டிக்கொண்டு, நித்தம் படி என்னையே பார்த்திருந்தாள்.

''எப்படி டாக்டர் என் ஏற்பாடு? இப்படித்தான் ரெண்டு நாளாக் கிடக்கிறார். இவரா முழிச்சிக்கப் போறார்?'' சசிகலா திடீரென்று வாய்விட்டுச் சிரித்தாள்.

என் உடம்பின் ஒவ்வொரு நரம்பு செல்லிலும் பயம் கணிசமாய் உட்கார்ந்து கொண்டது. கொஞ்ச நேரத்துக்கு முன்பிருந்த சசிகலா இவள் இல்லே. இவள் வித்தியாசமாய் மாறியிருந்தாள்.

என் மூளை அலாரம் வைத்து எனை உசுப்பியது. மனநோயாளி அவர் இல்லே. இவள்தான்! இந்தத் தனியான பங்களா சசிகலாவின் மனசைப் பாதித்திருக்கிறது. எனவேதான் இந்தக் கொலை. கணவன் தன்னைக் கொன்றுவிடுவானே என்று எண்ணிப் பயந்து, அந்தப் பயத்தில் உண்டான வெறியில் அவருக்குத் தெரியாமல் இந்தக் கொலையைச் செய்திருக்கிறாள். அவளுடைய உள் மனம் இன்னமும் இந்தக் கொலையை உணராமல், கணவனுக்கு தனக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று கலவரப்பட்டிருக்கிறது. எனவேதான் என்னை நாடியிருக்கிறாள்.

என் தொண்டையும் நாக்கும் உப்புக் காகிதமாய் உலர்ந்தன. ''சசிகலா, குடிக்கக் கொஞ்சம் தண்ணி வேணும்.''

''தண்ணியா? அடுத்த அறையில் ப்ரிஜ் இருக்கு.''

அறையின் வாசலை நோக்கி நடந்தாள் சசிகலா. நான் அவளைத் தொடர்ந்தேன்.

சசிகலா மாடி வராந்தாவில் வேகமாய் நடந்து அடுத்த அறைகள் நுழைந்தார்.

அடுத்த விநாடி—

நான் தடதடவென்று மாடிப்படிகளில் ஒடி ஹாலில் பாய்ந்து இருட்டில் தூண்களின்மேல் மூட்டி மோதிக் கொண்டு போர்டிகோவை ஓர் எட்டில் தாவிக் குதித்து வெளியே பரவியிருந்த இருட்டில் கலந்தேன்.

''டாக்டர், டாக்டர்!'' வீறிட்டுக் கத்திக்கொண்டு சசிகலா ஓடிவரும் சப்தம் கேட்டது.

உண்மையிலேயே கழுத்தில் பின்னங்கால் பட ஓடினேன். காம்பௌண்ட் கேட்டைத் தாவிக் குதித்துச் செம்மண் சாலையில் மூச்தெரு முனையை எட்டினேன்.

சசிகலா பின்னாலேயே ஒடி வருவது போல ஒரு பிரமை.

தாமஸ் பார்க் வந்து காரின் கதவைப் படாரெனப் பிளந்து கொண்டு உள்ளே உட்கார்ந்தேன். 'இனிப் பயமில்லே. இனிப் தப்பிவிடலாம்.' காரை விசுக்கென்று கிளப்பினேன்.

மழைத் தண்ணீரை வாரியிறைத்துக்கொண்டு சீறியது என் கார்.

Qரட்டில்ட்ஸ் போலீஸ் ஸ்டேஷன் கண்ணுடி டம்ளரில் இருந்த மயை உறிஞ்சிக்கொண் டிருந்த அந்த இன்ஸ் பெக்டருக்கு முன்னுல் போய் மூச் சிறைக்க நின்றேன். வாய் குழறியது.

''இன்ஸ்பெக்டர் ஒரு கொலே நடந்திருக்கு. உடனே வாங்க.''

இன்ஸ்பெக்டர் டம்ளரை 'டொக்' கென்று மேஜையின் மீது வைத்தார். ''பதறுமே சொல்லுங்க. யாரைக் கொலே பண்ணியிருக்காங்க? நீங்க யாரு?''

நான் மர நாற்காலியில் தொப் பென்று உட்கார்ந்தேன். கலேந்தவள் தலேயை இரு கைகளாலும் பற்றிக் கொண்டேன். வியர்த்தது. மூச்சைச் சீராக்கிக் கொண்டேன். ''இன்ஸ்பெக்டர், நான் ஒரு டாக்டர். சைக்யாட்டிரிஸ்ட். என்பேர் தெகிரு வரன். என்டேட் க்ளினிக் மெக்கிகர் ரோட்டில் இருக்கு. இன்னிக்கு ராத்திரி பத்து மணிக்குச் சசிகலான்னு ஒரு பெண் என்கிட்ட யோசனே கேக்க வந்தா.'' ஆ நிமு தல் இந்தக் கடைசி நிமிஷம் வரை சொல்லி முடித்தேன்.

இன்ஸ்பெக்டர் மோவாயைத் தேய்த்துக் கொண்டார். கண்ணுடி டம்ளரில் மீதமிருந்த மயை ஒரே மூச்சில் உறிஞ்சிவிட்டு எழுந்தார்.

''நீங்க சொல்றதைப் பார்த்தா, அர்த்தச் சசிலாதான் மன நோயாளின்னு தெரியது.''

''ஆமாம் இன்ஸ்பெக்டர்.''

''வாங்க போவோம்.''

நான் எழுந்தேன். கைக் கடிகாரத்தைப் பார்த்தேன். மணி 12-10.

காரை ஸ்டேஷனிலேயே விட்டுவிட்டு நானும், இன்ஸ்பெக்டரும், மூன்று கான்ஸ்டேபிள்களும் ஜீப்பில் ஜகிலியாரினும். நான் வழிகாட்ட ஜீப் படுவேகத்தில் பறந்தது.

பத்து நிமிஷங்களுக்குப் பிறகு அந்தப் பங்களா வாசலின் முன் ஜீப் நின்றது.

''இதே பங்களாதானு டாக்டர்?''

இன்ஸ்பெக்டர் என்னைக் கேட்டார்.

''இதேதான்.'' நான் ஜீப்பை விட்டுக் கீழே குதித்தேன். இன்ஸ் பெக்டர், கான்ஸ்டேபிள்கள் பின் தொடரக் காம்பௌண்ட் கேட்டை நெருங்கினேன்.

அதிர்ந்தேன். உள்ளே கூர்க்கா நின்றிருந்தான்.

''தோள் ஹை?'' டார்ச்சை அடித்துக்கொண்டே எங்களே நெருங்கினுன்.

இன்ஸ்பெக்டர் என்னைத் தள்ளிக் கொண்டு முன்னல் வந்தார். ''பார்த்தால் தெரியல்லே? நாங்க போலீஸ். கதவைத் திறந்து விடு. பங்களாவுக்குள்ளே போகணும்.'' ● இன் ஸ் பெக்டரின் குரலில் இருந்த கடுமையை உணர்ந்த கூர்க்கா கதவைத் திறந்தான்.

நான் முன் வந்தபோது இந்தக் கூர்க்கா எங்கே போயிருந்தான்? ஆச் சரியத்துடன் உள்ளே போனேன்.

முன் வாசலில் புதிதாய் ஒரு கார் நின்றிருந்தது. நான் வரும்போது இந்தக் காரும் இங்கில்லையே! வேறே ஏதாவது ஒரு பங்களாவுக்கு வந்து விட்டோமா? கற்றும் முற்றும் பார்த்தேன். சந்தேகமேயில்லே. அதே பங்களாதான்.

வாசல் படிகளில் ஏறினேன். கதவுக்குப் பக்கத்தில் யாரோ உடம்பைக் கருட்டிக்கொண்டு படுத்திருந்தார்கள். என்னுள் வியப்பு கூடிக்கொண்டே போயிற்று.

இன்ஸ்பெக்டர் தம் கையிலிருந்த தடியால் அவரைத் தட்டினார்.

''ஏய், எழுந்திரு.''

அவன் அரக்கப் பரக்க எழுந்தான். தலேயில் பெரிதாய் முண்டாசு. முகத்தில் லாடமாய்க் கவிழ்ந்த மீசை. கண்களில் நிஜமான தூக்கக் கலக்கம்.

''யார் நீ?'' இன்ஸ்பெக்டர் கேட்டார்.

அவன் போலீசைப் பார்த்ததும் மிரண்டான். ''நான் தோட்டக் காரணுங்க.''

''ஐயாவும் அம்மாவும் உள்ளே இருக்காங்களா?''

''இருக்காங்க ஸார்! அதோ காலிங் பெல் இருக்கு. அழுத்துங்க.''

கதவுக்கு மேற்புறத்தில் இருந்த காலிங்பெல்லைக் காட்டினுன் அவன்.

இன்ஸ்பெக்டர் காலிங்பெல்லின் தலேயின்மேல் கையை வைத்தார்.

''ரிர்ர்ர்ர்ர்ர்ன்..'' சத்தம் பங்களா முழுதும் எதிரொலித்தது. கதவு திறக்கப்பட காத்திருந்தோம்.

இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு, பங்களாவின் உள்ளே யாரோ நடந்து வரும் சத்தம் கேட்டது. இன்ஸ்பெக்டர் சலனமில்லாமல் இருந்தார். என் மனம் படபடக்க ஆரம்பித்தது.

RANE (MADRAS) LIMITED

manufacture

Tie Rod Ends/Steering Linkages

Clutch Discs and Steering

Gears for Automobiles



RANE (MADRAS) LIMITED

61, VELACHERI ROAD

MADRAS 600032

Telephone : **414344** Telegram : **TIEROD** Telex : **041-432 RANEIN**

ஓம் ஸ்ரீமாத்ரே நம:

அன்பர்களுக்கு ஓர் நற்செய்தி

ஜகத்குருக்கள் ஸ்ரீகாஞ்சி காமகோடி ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள், ஸ்ரீ சிருங்கேரி சாரதா பீட மகாசந்நிதானம், திருமுருக திருபானந்தவாரியார் ஸ்வாமிகளின் ஸ்ரீமுகங்களும் ஆசிகளும், அருளப் பெற்று நவசக்தி நிலையத்தில் உருவாக்கப்படும்.

பூஜைக்குரிய தெய்விக சாதனங்கள்

(1)	ஸ்ரீ மகாமேரு (பஞ்சலோகம்)	2½×2½ சைஸ்	விலை ரூ. 450-00
(2)	ஸ்ரீ மகாமேரு (பஞ்சலோகம்)	1¼×1¼ சைஸ்	விலை ரூ. 250-00
(3)	ஸ்ரீ சக்கரம் (தாமிரம்)	8 cm × 8 cm	விலை ரூ. 115-00
(4)	ஸ்ரீ மகாகணபதி சக்கரம்	8 × 8 cm	விலை ரூ. 115-00
(5)	ஸ்ரீ மஹாலக்ஷ்மி சக்கரம்	8 × 8 cm	விலை ரூ. 115-00
(6)	ஸ்ரீ யெமனார் சக்கரம்	8 × 8 cm	விலை ரூ. 115-00
(7)	ஸ்ரீ நவக்ரக மகா சக்கரம்	8 × 8 cm	விலை ரூ. 115-00
(8)	ஸ்ரீ தனகர்ஷண மகா சக்கரம்	8 × 8 cm	விலை ரூ. 115-00
(9)	ஸ்ரீ பாலா நிரிபுரசுந்தரி சக்கரம்	8 × 8 cm	விலை ரூ. 115-00

(10) கண் திருஷ்டி நிவர்த்தி யந்திரம்:- இதை வீட்டிலோ, அல்லது வியாபார ஸ்தலத் திலோ மாட்டி வைத்தால் கண் திருஷ்டியால் வரக்கூடிய எல்லாத் துன்பங்களையும் நீக்கிவிடும்; காரியத் தடையைப் போக்கும். கார், லாரி, ஸ்கூட்டர், முதலிய வாகனங்களில் வைத்தால் விபத்து நேராமல் தடுக்கும். இது தத்தாத்ரேய மகாமுனி உருவாக்கப்பட்டது. விலை ரூ. 45-00.

உடம்பில் அணியக்கூடிய டாலர்கள்

1. கண் திருஷ்டி நிவர்த்தி டாலர் விலை ரூ. 37
2. ஸ்ரீகாமாட்சி ஸ்ரீசக்கரத்துடன் கூடிய டாலர் விலை ரூ. 45
3. ஸ்ரீகாமட்சி தனப் பிராப்தியுடன் டாலர் விலை ரூ. 45
4. தனப்பிராப்தி டாலர் விலை ரூ. 45
5. மாங்கல்ய பாக்யம் டாலர் விலை ரூ. 45

பாலாரிஷ்டம் டாலர் (1 வயது முதல் 7 வரை உள்ள குழந்தைகள் அணியக்கூடியது. கரப்பான், கக்குவான், இருமல், இழுப்பு வராமல் பாதுகாக்கும். ஆதிசங்கரரால் உருவாக்கப் பட்டது. இதன் விலை ரூ. 35-00.

6. ஸ்ரீ ஐயப்பன் டாலர் விலை ரூ. 35-00, 25-00.
7. விவாகப் பிராப்தி டாலர்:— விவாகம் தடையின்றி நடைபெற நட்சத்திரத்துடன் விண்ணப்பித்தால் டாலரைப் பூஜையில் வைத்துப் பிரசாதத்துடன் அனுப்பி வைக்கப்படும். 108 நாட்களுக்குள் விவாகம் நடைபெற அனுக்ரஹம் கிட்டும். விலை ரூ 45-00.
8. ஸ்ரீ தேவி கருமாரியம்மன் டாலர் வெள்ளியில் விலை ரூ. 45-00.
   தாமிரத்தில் விலை ரூ. 16-00.

ஜப மாலைகள் வெள்ளியில் கட்டியவை

1. ஒரிஜனல் தாமரை மணி மாலை 54 மணி வெள்ளிக்கவசத்துடன் கூடியது. விலை ரூ. 100-00
2. ஒரிஜனல் உருத்திராக்ஷ மாலை 54 மணி வெள்ளிக் கவசத்துடன் கூடியது: விலை ரூ. 250-00.
3. துளசிமணி மாலை 54க்கு விலை ரூ. 60
   வெள்ளிக் கவசத்துடன் கூடியது 108க்கு விலை ரூ. 120
4. ஸ்படிகமணி மாலை Ordinary 54க்கு விலை ரூ. 60
   Original 54க்கு விலை ரூ. 250

சாதனங்கள் வேண்டுவோர் பாதிப் பணம் முன் பணமாக M. O. அல்லது D. D. மூலம் அனுப்பவும். சாதனம் பூஜையில் வைத்துப் பிரசாதத்துடன் V. P. மூலம் அனுப்பி வைக்கப்படும். நட்சத்திரத்துடன் ஆர் டர் செய்யவும். விபரங்கள் வேண்டுவோர் இலவச விலைப்பட்டியலுக்கு 0.35 பைசா ஸ்டாம்புடன் விண்ணப்பிக்கவும்.



விஸ்வகர்மக்ஞ்ய ஸ்வாமி

ஸ்ரீ S. T. முருகபூஷணம்,

ஸ்ரீவித்யா உபாசகர் / தலைவர்

நவசக்தி நிலையம்

153, லாயிட்ஸ் ரோடு, (ஸ்டேட் பாங்க் எதிரில்)
கோபாலபுரம், சென்னை-600086 (போன்: 812013)

"லோகாஸ் ஸமஸ்தாஸ் ஸுகினோ பவந்து"

கதவின் குமிழ் அசைய கதவு மெதுவாய் விலகியது. நிறந்த கதவுக்குப் பின்னே ஜோதிராம் நின்றிருந்தார்.

என் கண்கள் இமைக்க மறுத்தது. இதயம் துடிக்க மறுத்தது. மார்பில் பிச்சுவா செருகி நிற்க, ரத்தத்தை யெல்லாம் கொட்டிக்கொண்டு பிணமாய்க் கிடந்த ஜோதிராம் நடந்து வந்து கதவைத் திறந்திருந்தார்.

''என்ன வேணும் இன்ஸ்பெக்டர்?'' ஜோதிராம் கனமான குரலில் கேட்டார். இன்ஸ்பெக்டர் என்னைப் பார்த்தார்.

நான் படபடப்போடு சொன்னேன். ''இன்ஸ்பெக்டர், இவர்தான் ஜோதிராம். சகிலாவோட கணவர். இவர்தான் கத்தியால் குத்தப்பட்டுப் படுக்கையில் பிணமாய்க் கிடந்தார். நான் என் கண்ணுலே பார்த்தேன்.''

''இவரா?'' இன்ஸ்பெக்டர் திகைத்தார். ஜோதிராம் சிரித்தார். இன்ஸ்பெக்டரைப் பார்த்து, ''என்ன உளறுகிறார் இவர்?'' என்றார்.

''நான் ஒண்ணும் உளறலே மிஸ்டர் ஜோதிராம். கொஞ்ச நேரத்துக்குப் முன் நான் இந்தப் பங்களாவுக்கு வந்தேன். உங்க படுக்கையறையில் நீங்க கத்தியாலே குத்தப்பட்டுப் பிணமாக் கிடந்திங்க; உங்க மனைவி சகிலாவைக் கொஞ்சம் வரச்சொல்லுங்க. நான் கேட்கிறேன்.''

ஜோதிராம் இன்ஸ்பெக்டரைப் பார்த்தார்.

''இன்ஸ்பெக்டர், அந்த ஆள் பேசறதைக் கவனிச்சிங்களா? கொஞ்ச நேரத்துக்கு முன்புடி அவர் இங்கே வந்தாராம்; நான் கொலே செய்யப்பட்டுப் பிணமாக் கிடந்தேனும்; இப்போ எனக்கு உயிர் வந்துட்டு சுன்னு சொல்ருர்!''

இன்ஸ்பெக்டர் என்னே முறைத்தார்.

நான் அதிகமாய்ப் பதற்றப்பட ஆரம்பித்தேன். ''இன்ஸ்பெக்டர், இங்கே என்னமோ நடந்திருக்கு. நான் போயிட்டுத் திரும்பறதுக்கு முன்னுடி என்னென்னவோ செஞ் சுட்டாங்க. இவர் பிணமாக் கிடந்தது உண்மை. வாங்க, பங்களாவுக்குள் ளாற பாங்களாம். அந்தச் சகிலாவை நீங்களே விசாரிங்க.''

ஜோதிராம் புன்னகையோடு வழி விட்டு நின்ருர். ''நீங்க தாராளமா உள்ளே போய்ப் பார்க்கலாம். என் மனேவியை விசாரிக்கலாம்.''

நான் வேர்வை வழிகிற முகத் தோடு சாசரவென்று உள்ளே நுழைந்தேன். இன்ஸ்பெக்டரும், மற்றவர்களும் என்னைத் தொடர வேகமாய் நடந்தேன். மாடிப்படி களில் ஏறி, மாடி வராந்தாவின் ஓரமாயில் இருந்த அறைக்குள் நுழைந்தேன்.

மூன்று நான் பார்த்த அறைக்கும் இப்போது நான் பார்க்கிற அறைக் கும் வித்தியாசம் தெரிந்தது. முன்பு அறையில் பீரோ இல்லே. இப்போது இருந்தது. முன்பு சுவரில் படங்கள் இல்லே. இப்போது இருந்தன. முன்பு கட்டிலுக்கு மேலே கொசு வலே இருந்தது. இப்போது இல்லே. முன்பு இல்லாத ஒரு மேஜையும் சில நாற் காலிகளும் இருந்தன.

என் இதயம் அதிர்ச்சிகளைத் தாங்க முடியாமல் தத்தளித்தது.

காலியாக இருந்த கட்டிலேயே பார்த்துக்கொண்டு நின்றேன்.

எரிச்சலோடு இன்ஸ்பெக்டர் என் தோளைத் தட்டினார். ''டாக்டர்! என்ன, எங்கே கொலே?''

நான் வெறி பிடித்தவனேப்போல் கத்தினேன். ''இன்ஸ்பெக்டர், நான் சத்தியமாய்ப் பார்த்தேன். இவர் இறந்து கிடந்ததை இதே அறையில் இதே கட்டிலில் பார்த்தேன்.''

நான் ஹிஸ்டீரியா நோயாளியைப் போல் கத்தினேன்.

பக்கத்து அறையிலிருந்து இரவு நேர உடையோடு சகிலா வெளிப் பட்டார்.

''டியர்! யார் வந்திருக்காங்க?'' ஜோதிராமை நெருங்கினுள்.

''வா, சகி, வா! இந்த ஆள் சொல்றதைக் கேளு! கொஞ்ச நேரத்துக்கு முன்புடி நான் இந்த கட்டில்லே பிணமாக் கிடந்தேனும். என்னோட நெஞ்சில பிச்சுவா இருந்ததாம். போலீஸைக் கூட்டிக்கிட்டு வந்திருக்கார். உண்மையும் அவருக் குத் தெரியுமாம்.'' ஜோதிராம் சொல்லச் சொல்ல நான் சகிலாவை நோக்கிக் கோபமாய்ப் பாய்ந்தேன்.

''ஏய், உண்மையைச் சொல்லிடு. வினயாடாதே! உன்னோட கணவ ருக்கு 'மன நோய்'ன்னு சொல்லிக் கன்சல்டேஷனுக்காக நீ என்கிட்டே வரல்லே? வந்து இந்தப் பங்களாவுக் குப் 'பதினேருமணிக்கு வான்'னு நீ சொல்லலே?''

''நானு?'' அசலாய்த் திகைத்தாள் சகிலா.

''நீயேதான். இதோ பார், நடிக் காதே! இன்ஸ்பெக்டர்கிட்டே எல் லாமே சொல்லிடு. இவரை நீ எனக்குக் காட்டினப்போ, இவர் இந் தக் கட்டில்லே குத்தோடு பிணமாத்தானே கிடந்தார்?''

மருண்ட விழிகளோடு சகிலா தன் கணவர் ஜோதிராமின் முது குக்குப் பின்னடி ஒளிடினுள்.

''என்னங்க, இந்த ஆள் என் னென்னவோ பேசருர்! எனக்குப் பயம்மா இருக்குங்க. இந்த ஆளை நான் இதுக்கு முந்தி பார்த்ததே இல்லிங்க. இவருக்கு ஏதாச்சும் மூளைக் கோளாறு?''

நான் எரிமலேயானேன்.

''வேசமாய் அவனே நோக்கிப் பாய்ந்தேன். இன்ஸ்பெக்டர் என் புஜத்தை அழுந்தப் பற்றினர்.

திமிறினேன். ''விடுங்க, இன்ஸ் பெக்டர்!''

இன்ஸ்பெக்டர் கண்ணிக் காட்ட, பின்னல் நின்றிருந்த கான்ஸ்டபிள் கள் சட்டெனப் பாய்ந்தனர், என் மேல். ஆளுக்கொரு பக்கம் என்னைப் பற்றிக்கொண்டார்கள்.

ஜோதிராம் இன்ஸ்பெக்டரைப் பார்த்துச் சொன்னர்: ''பாவம்! ஏதோ மூளே பிசகியிருக்கு, இன்ஸ் பெக்டர்! பைத்தியக்கார ஆஸ்பத்தி ரிலே சேர்த்துடுங்க.''

நான் கத்தினேன். ''எனக்கா மூளே பிசகிடுச்சு? நான் யார் தெரி யுமா? சைக்யாட்ரிஸ்ட் ஜெகதீசு வரன். தெரியுமா?''

ஜோதிராம் கிண்டலாய்ச் சிரித்தார். ''நீங்க பெரிய சைக்யாட்ரிஸ்ட்டா இருக்கலாம். யானேக்கும் அடி சறுக்கு கிற மாதிரி உங்களுக்கும் மூளே பிசகி யிருக்கக்கூடாதா என்ன?''

நான் ஆத்திரமாய் ஏதோ சொல்ல வாயெடுத்தேன். இன்ஸ்பெக்டர் தம் கையிலிருந்த தடியை என் முகத் துக்கு நேரே நீட்டினர். ''டாக்டர், இனிமே நீங்க பேசவேண்டாம். பேசினு நான் றொம்பவும் பொல்லா தவளியிருப்பேன். உங்களுக்குரிய இடம் ஆஸ்பத்திரிதான்.''

நான் அயர்ந்துபோனேன்.

இன்ஸ்பெக்டர் திரும்பி நின்று என்னே உக்கிரமாய் முறைத்தார். நான் கப்பென்று வாயை மூடிக் கொண்டேன்.

ஃ ஃ ஃ

நான் இப்போது மனநோய் மருத் துவ நிலேயத்தில் இருக்கிறேன்.

எத்தனேயோ பேஷண்ட்களைக் கவனிக்க இந்த மருத்துவமனேக்கு ஒரு டாக்டராக வந்த நான்—இன்றைக்குப் பைத்தியம் என்ற அபியாயப் பட்டம் சூட்டப்பட்டு உட்காந்திருக்கிறேன்.

டாக்டர் சக்தியேந்திரன் இன்ன லுக்கு வெளியே தெரிந்தார். உள்ளே வந்து என்னேடு பேச அவருக்குப் பயம். நான் அவரைப் பார்த்துப் புன்னகை செய்தேன்.

அவர் பிரக்காமல் ஜன்னல் கம்பி யைப் பற்றிக்கொண்டு சொன்னர்: ''ஜெகதீஸ், உங்களேமே அனு தாபப்பட்டு உங்களேப் பார்த்துட்டுப் போக மிலட்டர் ஜோதிராமும் மிஸஸ் சகிலாவும் வாறுங்க. அவங்க கிட்ட முறை தவறி நீங்க நடந்துக் காதிங்க. அமைதியா இருந்தீங்கன்னு சிக்கிரமே வீட்டுக்குப் போகலாம்.''

என்னுள் ஆத்திரம் அலேமோதியது. சகிலாவும் ஜோதிராமும் திரும்பும் என்னேப் பார்க்க வருகிறார்களா? மண்டைக்குள் வெப்ப மாய் ரத்தம் பாய்ந்தது.

டாக்டர் சக்தியேந்திரன் நகர்ந் தார்.

அடுத்த ஐந்தாவது நிமிடம், அதே ஜன்னல் கம்பிகளுக்குப் பின்னுல் ஜோதிராமும் சகிலாவும் புன்கையுடன் தெரிந்தார்கள். ''வணக்கம் டாக்டர்!''

நான் விழிகள் செவ்வேற அவர் களே முறைத்தேன்.

சகிலா கேட்டாள்: ''எப்படி இருக்கீங்க மிஸ்டர் ஜெகதீசுவரன்? மூணு நாள்மலுக்கு வந்துடுச்சா? இல்லே..''

நான் பற்களேக் கடித்தேன். ''நீ பேசாதே. எனக்குக் கோபம் வரும்.''

அவள் பிரித்தாள் வாய்விட்டு.

''எதுக்காக என்கிட்ட இப்படி யொருவினயாட்டு! எனக்குப் பைத்தி யக்காரன் பட்டம் கட்டினதுலுல உனக்கு என்ன லாபம்?''

முகம் மாறிச் சிரிப்பை நிறுத்தினுள் சகிலா. ''லாபமா? நிறைய இருக்கு டாக்டர். முதல் லாபம் சங்கீதா வோட ஆத்மா சாந்தியடையும்.''

நான் நெற்றியைச் சுருக்கினேன். ''சங்கீதாவா?''

''உம் சங்கீதாவேதான். என்னோட படிச்சவ. என்னுடைய உயிருக்கு

மூல நோயை
முற்றவிடாமல்
நம்பிக்கையான
ஹெடன்ஸா
களிம்பு
உபயோகித்து
நிவாரணம்
அடையுங்கள்;
—ரண சிகிச்சையையும்
தடுங்கள்

பொறுக்கமுடியாத வலியா? தாங்கமுடியாத அரிப்பா? எரிச்சலெடுக்கும் உணர்ச்சியா? ரத்தக்கசிவா? பயனுள்ள சிகிச்சை செய்து கொள்ள இனிமேலும் தாமதிக்காதீர்கள். அலட்சியம் செய்தால் நோய் முற்றி ரண சிகிச்சை செய்ய வேண்டிவரும். உலகில் 108 நாடுகளில் உபயோகிக்கப்பட்டுவரும் ஹெடன்ஸா களிம்பை உபயோகித்து காலாகாலத்தில் நிவாரணம் பெறுங்கள். ஹெடன்ஸாவிலுள்ள சக்தி வாய்ந்த மருந்துப் பொருள்கள் வலியையும், அரிப்பையும் சீக்கிரம் நிறுத்தி, மலப்பிரவிருத்தியையும் சுலபமாக்குகிறது.

காலாகாலத்தில் ஹெடன்ஸா உபயோகித்தால் நீங்கள் ரண சிகிச்சையிலிருந்து தப்பலாம் என்பதை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்.

3627 TM

உயிரான தோழி. ரொம்பவும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த அந்தச் சங்கீதா உங்க நண்பர் திவாகரைக் காதலிச்சா. பெரிய பணக்கார வர்க்கத்தைச் சேர்ந்த உங்க நண்பர் திவாகர் சங்கீதாவை அவளுடைய உடம்பு புக்காகக்கா தலிச்சார். அவனோட கட்டிக்க மோறதாச் சத்தியம் பண்ணி அவள் உடம்பைக் கறைபடுத்தினார். வீணா? அந்த மாசம் சங்கீதாவுக்கு 'கேர் ஃபீ' உபயோகிக்க வேண்டிய அவசியம் இல்லாமப் போயிடுச்சு. சங்கீதா கல்யாணத்துக்கு நச்சரிக்க ஆரம்பிச்சா. திவாகர் சொன்ன 'கருக் கலைப்பு' யோசனைக்கு அவள் சம்மதிக்கலியே. பணத்தை வீசி அவளுடைய வாயை அடைக்கப் பார்த்த திவாகர் ஏமாந்து போனார்.''

சகிலா சொல்லச் சொல்ல நான் அப்படியே அசையாமல் நின்றேன்.

சகிலா தொடர்ந்தாள்: ''திவாகரோட அப்பா நியாய அநியாயத்துக்குக் கட்டுப்பட்ட மனுஷர். அவர் கிட்டேயே விஷயத்தைச் சொல்லப் போறதா சங்கீதா சொன்னதும் உங்க நண்பர் திவாகர் ஷாராவுனர். உங்கிட்டே யோசனே கேட்டார். நீங்களும் ஒரு யோசனையைச் சொன்னீங்க. 'இந்தச் சங்கீதாவோட பிரச்னையை சுலபமா முடிக்கலாம். ரெண்டு நாளுக்கு அவளே என் க்ளினிக்குக் கூட்டிட்டு வா. இந்த மின் கதிர் வீசலை உபயோகப்படுத்தி அவளுடைய மூளியோட செரிபெல்லத்தை முடமாக்கிடலாம். அதாவது சங்கீதாவைப் பைத்தியமா மாத்திடலாம்.' இந்த யோசனையைச் சொன்ன உங்களுக்குப் பத்தாயிரம் கிடைத்தது. அந்த யோசனையைச் செயலாக்கினதும் இருபதாயிரம் கிடைச்சுது. ஆக மூப்தாயிரம் ரூபாய்க்கு ஆசைப்பட்டு ஒரு பெண்ணைப் பைத்தியமா மாத்தினீங்க. அவளோத் தற் கொ லை பண்ணிக்க வெச்சீங்க.''

நான் முகம் இருண்டு போக அவளையே பார்த்தேன்.

சகிலா குரல் கம்மத் தொடர்ந்தாள்: ''என்ன டாக்டர் அப்படிப் பார்க்கறீங்க? உங்களுக்கும் திவாகருக்கும் மட்டுமே தெரிஞ்ச விஷயம் எனக்கு எப்படித் தெரியும்னு பாக்கறீங்களா? நான் நீட்டின ஆயிரம் ரூபாய்க்கு ஆசைப்பட்டு உங்க க்ளினிக்கில வேலை செய்யற ஒருத்தர் எல்லா விஷயத்தையும் என்கிட்டே சொல்லிட்டார். உங்க கிட்ட வார்ற அழகான பெண்களை நீங்க உங்க வக்கிரமான ஆசைகளைத் தீர்த்துக்க உபயோகப்படுத்தறது முதல், இந்தச் சங்கீதா திவகாரம் வரை எல்லாமே சொன்னார். இந்த அக்கிரமங்களையெல்லாம் செய்ய உங்களுக்கு உதவற இந்த 'டாக்டர்' பட்டத்தைச் சேதப்படுத்த நினைச்சே போன வாரம் வியாழக்கிழமை ராத்திரி உங்கிட்ட வந்தேன். என் கணவர் மனநோயாளினனு சொல்லி நடிச்சேன். உங்களை வரச்சொன்னேன். வேலியாட்களையெல்லாம் அப்புறப்படுத்தினேன். ஸ்பிரிங் பிச்சுவாவை உபயோகப்படுத்தி, ரெண்டு பாட்டில் செவப்புச் சாத்தைக் கொட்டி என்னோட கணவரைப் பிணமா மாத்தினேன். கவுச்ச வாடை அடிக்கிற ஒரு மருந்துக் களிம்பை என் சேலையில தடவியிருந்தேன். நான் எதிர்பார்த்தபடியே நீங்க பயந்து அலறிப் புடிச்சுட்டு ஓடினீங்க. நீங்க எப்படியும் போலீசோடு வருவீங்கன்னு எனக்குத் தெரியும். சீனை மளமளன்னு மாத்தினேன். இன்ஸ்பெக்டருக்கு முன்குடி உங்களுடைய டாக்டர் பட்டத்தை உருவிவிட்டுப் பைத்தியக்காரப் பட்டத்தை மாட்டினேன். ஒரு பேப்பர் பாக்கியில்லே, மிஸ்டர் ஜெகதீஸ்வரன். ஊர் முழுதும் தெரிஞ் சுடுச்சு, உங்களுக்கு மூனாக் கோளாறுன்னு. இனிமே உங்க கிளினிக் பக்கம் ஜென்ம ஜென்மத்துக்கும் யாரும் எட்டிப் பார்க்கமாட்டாங்க.''

சகிலா சொல்லிக்கொண்டே போனாள். நிஜமாகவே என் மூளைப் பகுதியில் நீர்வீழ்ச்சி கொட்டுவது போல் பேரோசை கேட்க ஆரம்பித்தது. ✻

கரக்கை, நாணயக்கை நாடுவோரின் நம்பிக்கை நிலையம் - புகழ்மிக்க பாபாலால்

அசல் தங்க நகைகள், அழகழகான வெள்ளி சாமான்கள், பரிசுப் பொருள்கள்

நவரத்தினங்களுக்கு நிகரில்லாப் பெயர் ஈட்டியது பாபாலால் என்பது எல்லாரும் ஏற்கும் உண்மை. அதேபோல அசல் தங்க ஆபரணங்கள், நிகரில்லா வெள்ளி வகைகள், நாடு போற்றும் கலைச் சிறப்பு மிக்க பரிசுப் பொருள்களுக்கும் நம்பிக்கை நிலையமானது — பாபாலால்.

கலைவினைச் சிறப்பே உயிர் மூச்சாய், நாணயமே வணிகத்தின் சித்தாந்தமாக நம்பி பணி புரிவது பாபாலால் என்பதே இதன மூலக்காரணம்.

கடந்த 70 ஆண்டுகளாக நிலைத்து, வளரும் வாடிக்கையாளர் பட்டியலே பாபாலால முழு நம்பிக்கைக்கும் பாத்திரமாக வல்லது என்பது சான்று.



பாபாலால் & கோ.
ஜுவல்லர்ஸ்
ராட்டன் பஜார்,
சென்னை - 600 003
போன்: 32396 & 39573
தந்தி: "NECKLACE"

UIPC B-209

"ROYAL PAIR"

Crackers

REGISTERED TRADE MARK




MANUFACTURED BY :

THE NATIONAL FIRE WORKS FACTORY

SIVAKASI

ஆசியாவில் பெரிய அங்கம்
அது தரத்தில் சிறந்த தங்கம்
மாசில்லா வீரச் "சிங்கம்"
மற்றவை இதன்முன் மங்கும்
வீசி ஒளியது பொங்கும்
வெடிப்பதில் இல்லை பங்கம்
காசினியோர் மனதில் தங்கும்
கண்டதில்லை இதற்கீடு எங்கும்?

S.P.M.K



சந்திரக் தீவு

சி. சுப்பிரமணிய பாரதி

தென்கடலில் மலேயத் தீவுகளிலி டையே, 'பூலோ பூலாங்' என்ற ஒரு சிறிய தீவிருக்கிறது. 'பூலோ பூலாங்' என்ற மலேய பதத்துக்குச் சந்திரோதயத் தீவு என்று அருத்தம். சுமார் எழுபதினாயிரம் வருடங்களுக்கு முன்னே இத் தீவு 'சந்த்ர தீவிபம்' என்ற பெயருடன் விளங்கிற்று. அக்காலத்தில் அங்குக் கங்காபுத்ரன் என்ற ஹிந்து ராஜா ராஜ்யம் செலுத்திக்கொண்டு வந்தான்.

அவனுக்கு ஆண் மகவு கிடையாது. பலவிதமான தவங்களும், வேள்விகளும் புரிந்ததின் ஒரே ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்குச் சந்திரிகை என்ற பெயரிட்டு வளர்த்தான்.

அந்தப் பெண்ணினுடைய அழகும் கல்வியும் வர்ணிப்பதற்கு அரியன. கப்பல் வியாபாரிகளின் மூலமாக அப் பெண்ணினுடைய கீர்த்தி பூமண்டலம் முழுவதிலும் பரவிவிட்டது.

அப்போது காசி நகரத்தில் அரசு செலுத்தின விக்யாபுதரன் என்ற பிராம்மண ராஜன், அந்தப் பெண்ணை மணம் செய்துகொள்ள விரும்பி, சண்டிகை என்ற தன் பெரிய தாயையும் ஸுதாமன் என்ற தன் மந்திரியையும் சந்திரத் தீவுக்கு அனுப்பினான்.

அவ்விருவரும் பல ஸம்மானப் பொருள்களுடனும் பரிவாரங்களுடனும் சந்திரத் தீவிலே போயிறங்கி, கங்காபுத்ரனைக் கண்டு விரைகளையெல்லாம் கொடுத்துக் காசிராஜன் கருத்தை அறிவித்தார்கள்.

சந்திரிகைக்கு வயது பதினேழு. நடுப்பகலில் அவள் ஒரிடத்துக்கு வந்தால் அங்குப் பகலொளி மங்கி நிலவொளி வீசும்.

அவள் முகம் முழுமதி போன்றிருந்தது. அவள் நெற்றி பிறை போன்றது. அவள் விழிகள் நிலவு கொப்புளித்தன. அவள் புன்னகை நிலவு வீசிற்று. அவள் மேனியும் நிலவையே தெறித்தது.

இத்தகைய அழகுடைய பெண் பூமண்டலத்தில் எங்கும் கிடையாத படியால், அவனைத் தகுதியற்ற வரனுக்குக் கொடுக்கக் கூடாதென்று கங்காபுத்ரன், வந்த வரன்களை யெல்லாம் விலக்கி, மிகப் பொறுமையுடன் காத்திருந்தான்.

காசிராஜன் படத்தைப் பார்த்த வுடனே, அவனைத் தன் மகள் மனம் புரியலா மென்ற எண்ணம் கங்காபுத்ரனுக்குண்டாயிற்று. அவள் ராணியும் இணங்கினாள். ஆனால், அந்தப் பெண்ணுக்கு மம்மதமில்லை. பெண், சந்திரிகை, காசியிலிருந்து வந்த மந்திரி ஸுதாமனுடைய அழகையும் அவன சொல் நயத்தையும், நடை மேன்மையையும் கண்டு மயங்கி வளாய் அவனையே மனம் புரிந்து கொள்வேனென்று ஒரே ஸாதனையாக ஸாதித்தாள்; அதாவது முரண்டு பண்ணினாள்.

மறுநாள் கங்காபுத்ரன் தனது மந்திரியாகிய ராஜ கோவிந்தனையும்



காசி தேசத்து மந்திரியான ஸுதாமனையும் பல வேடர் பரிவாரங்களையும் சேர்த்துக் கொண்டு யானை வேட்டைக்குச் சென்றான். வேட்டையில் இரண்டு ஆண் யானைகள் பட்டன. அப்பால் வனத்திலேயே ஸ்நான போஜனங்கள் முடித்துக் கொண்டு ரெம பரிகாரத்தின் பொருட்டாக ஆங்கோர் ஆலமர நிழலிலே, கங்காபுத்ரன், ராஜகோவிந்தன், ஸுதாமன் மூவரும் இருந்து பல விதமான சாஸ்திர ஸம்பாஷணைகள் செய்யலாயினர் :—

அந்த ஸம்பாஷணையிலிடையே சந்திரத் தீவின் ராஜா கேட்கிறான்: ''இன்று காலையில் இரண்டு யானைகளைக் கொன்றோமே? அது பெரிய பாவமன்றே? ஆஹா! என்ன நேர்த்தியான மிருகங்கள்! ஆஹா! எத்தனை அழகு, எத்தனை ஆண்மை, எத்தனை வீரம், எத்தனை பெருந்தன்மை! அவற்றைக் கொன்றோமே, இது கொடிய பாவமன்றே?'' என்றான்.

அதற்குக் காசிமந்திரி ஸுதாமன் சொல்லுகிறான்: ''ஆர்யபுத்ரா, யானையைக் கொல்வது மாத்திரந் தானா பாவம்? ஆடு, மாடு, கோழிகளைக் கின்றோமே, அது பாவமில்லையா?'' என்றான்.

சந்திரத் தீவின் அரசன், ''அதுவும் பாவந்தான்'' என்றான்.

அப்போது ஸுதாமன் சொல்லுகிறான்: 'மாம்ஸ போஜனம் ஜந்துக்களுடைய இயற்கை; ஆதலால், பாவமாகாது. மனிதன் மாத்திரம் தானு மாம்ஸம் தின்னுகிறான்? மனிதனைப் புலி தின்னவில்லையா? சிங்கம், புலி, கரடி, நாய், நரி, முதலிய மிருகங்களெல்லாம் அஹிம்ஸா விரதத்

தைக் கைக்கொண் டிருக்கின்றனவா? கொக்கு மீனைத் தின்னவில்லையா? பெரிய மீன் சிறிய மீனை விழுங்க வில்லையா? பருந்து கொழியைத் தின்ன வில்லையா? காக்கை பூச்சிகளைத் தின்ன வில்லையா? குருவி புழுக்களை உண்ண வில்லையா? புழுக்கள் ஒன்றை யொன்று பக்ஷிக்கவில்லையா?' 'என்ன. அதற்குச் சந்திரத் தீவின் மந்திரியாகிய ராஜ கோவிந்தன் சொல்லுகிறான்:—

ஜீவ ஹிம்ஸை பொது நியாயமென்று சொல்லுதல் தவறு. யான் மாம்ஸம் தின்னது. மாடு தின்னது. மான் தின்னது. குரங்கு தின்னது. ஒட்டகை தின்னது. குதிரை தின்னது. கழுதை தின்னது'' என்றான்.

அப்போது கங்காபுத்தன் நகைத்துக்கொண்டு, ''சிங்கம், புலி நம்மைத் தின்னுமென்றால், நாம் வேட்டையாடி அவற்றைத் தின்பது நியாயமென்று வீரியாட்டுக்கு வைத்துக் கொள்ளலாம். சிங்கம் புலி கனே வேட்டையாடித் தின்போர் யாரையும் காணோம். யாதொரு சூது மறியாத, எவ்வுயிருக்கும் எவ்வகைத் தீமையும் செய்யாத ஆட்டையும், மானையும், பசுவையும் மனிதன் தின்பது நியாயமா?'' என்றான்.

அப்போது மந்திரி ராஜகோவிந்தன் சொல்லுகிறான்:— ''நில ஜந்துக்கள்—பெரும்பான்மையான ஜந்துக்கள்—இதர உயிர்களைக் கொன்று தின்றுதான் ஜீவிக்கின்றன: ஆஹா, மனிதனைத் திருத்தினால்பிறகு கரடி, குருவி முதலிய அனேக ஜந்துக்களைக் கொஞ்சம் கொஞ்சமாக மாம்ஸம் தின்னுதபடி நிருத்திவிடுதல் ஸாத்தியமென்று தோன்றுகிறது. போதுமான தானியங்களும் பழங்களும் கிடைத்தால் காக்கை, குருவி, கிளி—இவை பூச்சி புழுக்களைத் தின்னுதபடி பயிற்சி செய்விக்கலாம். மனிதன் உயிர்களுக்குத் தின் ராஜா. 'அரசனெப்படி அப்படி மன்னுயிர்.' மனிதன் கருணை தர்மத்தையும் ஸமத்வ தர்மத்தையும் கைக் கொண்டால் பிற உயிர்களும் நாளடைவிலே கைக்கொள்ளும்.''

அப்போது காசி மந்திரி ஸுதாமன் சொல்லுகிறான்:—

''இதர ஜீவ ஜந்துக்களின் மீது கருணை செலுத்து முன்னே, மனிதர் ஒருவருக்கொருவர் கருணை செலுத்துவதற்குரிய ஏற்பாடுகள் செய்தால் நல்லது. போர்களில் மனிதர் ஒருவரை யொருவர் கொல்லவில்லையா? ஆட்டை மாட்டைக் கொன்றும் தின்ன உபயோகப்படுகிறது. மனிதரை மனிதர் தின்னும் வழக்கம் சிற் சில தீவினருக்குள்ளே காணப் படுகிறதெனினும், நம்மைப் போன்ற நாகரிக ஜாதியார்களுக்குள்ளே அவ்வித வழக்கமில்லை. மனிதரை மனிதர் தின்பப் பயன்படாவிடினும் அநாவ யெமாகக் கொன்று தள்ளுகிறார்கள். மேலும் பிற உயிர்களை அடிமைப் படுத்தும் வழக்கம் மிருகங்களுக் கில்லை. சிங்கத்துக்குக் மீதே மற் றொரு சிங்கம் அடிமை யிடையாது. ஒரு நாய், ஒரு கழுதை, ஒரு நரி, ஒரு பன்றி கூடச் சிங்கத்தின் மீதே அடிமையில்லை. முயல்கூடக் யாது. மிருகங்களும், பக்ஷிகளும் பிற ஜாதி மிருக பக்ஷிகளை அடிமைப்படுத்துவதில்லை; ஸ்வஜாதிகளையும் அடிமை யாக்குவதில்லை. மனிதரோ, ஆடு மாடு, குதிரை, கழுதை, ஒட்டகை, யானை முதலிய அன்னிய ஜாதி ஜந்துக்களை அடிமைப்படுத்தி வைத்திருப்பது மட்டுமே யல்லாது, பிற மனிதர்களை யும் அடிமைப்படுத்தி வைத்திருக் கிறார்கள். இதைப் போல் பாவம் வேறெதேனும் உண்டோ? பிற உயிரொன்றை ஆள முழுவதும் தன்மீதே வைத்துச் சிறிது சிறிதாக மனமுடையச் செய்து அடிமை நிலையில் வருந்தி வாழுன் தொழிலைக் காட்டிலும் ஒரேயடியாக அவற்றைக் கொன்று விடுதல் எத்தனையோ மடங்கு நன்றாகவே? மனிதர் மேலே மனிதர் இருப்பதைக் காட்டிலும் காதல் நிறைந்த.''

''ஆணுக்கான் அடிமைப்பட்டிருக்கும் அநியாயத்தைக் காட்டிலும் ஆணுக்குப் பெண் அடிமைப்பட்டிருக்கும் அநியாயம் மிகமிகப் பெரிது'' என்று சந்திரத் தீவின் மந்திரியாகிய ராஜகோவிந்தன் சொன்னான்.

''ஆணுக்காணும் ஆணுக்குப் பெண்ணும் அடிமைப்படாதிருத்தல் ஸாத்ய மென்று தோன்றவில்லை'' என்று ராஜா கங்காபுத்தன் சொன்னான்.


''ஸாத்யமாம்'' என்று காசி மந்திரி ஸுதாமன் கூவினான்.

''ஆண்களில் பெரும்பாலோர் கெட்டவர்களில்லாதவர் என்ன? பிறர் செல்வ முடையவர்கள். ஆதலால் செல்வ முடையோரெல்லாரும் ஒன்றுகூடி பலர் அடிமைப்படுதல் அவசியம்'' என்று ராஜா சொன்னான்.

''பெண்களை ஏன் அடிமைப்படுத்த வேண்டும்?'' என்று சந்திரத் தீவின் மந்திரியாகிய ராஜகோவிந்தன் கேட்டான்.

அதற்கு ராஜா கங்காபுத்தன் சொல்லுகிறான்:—

''பெண் சரீர பலத்தில் ஆணைக் காட்டிலும் குறைந்தவள். அவளாலே விரைவாக வாழ முடியாது: தனி வழி தப்பிச் செல்லவும் வல்லமை யில்லாதவள். அதனால் அவளை ஆண் தன் அடிமையாக்கிக் கொண்டு, அவளுக்கு உணவும் முதலிய அவசியங்களையும் கொடுத்து, அதற்குப் பதிலாக அவளிடமிருந்து தொழில் புரிந்து ஜீவனம் செய்வதில்



இயற்கையிலேயே பெண்ணுக்குப் பல தடைகள் ஏற்படுகின்றன. அப்போது அவள் ஆகார நிமித்தமாக ஆணைச் சார்ந்து நிற்றல் அவசிய மாகிறது. பிறன் கைசோற்றை எதிர்பார்த்தால், அவலுக்கடிமைப் படாமல் இருமா?'' என்றார்.

அப்போது காளி மந்திரியாகிய ஸுதாமன் சொல்லுகிறான்:—

''பெண்கள் உயர்வு முதலிய தொழில் அனைத்திலும் ஆண் மக்களுக்கு ஸமானமான நிலைமை காட்டு கிறார்கள். மேலும், அவர்களுக்கு ஆண்மக்கள் ஸம்பாத்தியம் பண்ணிப் போடாமலே, அவர்கள் ஸம்பாதித்து ஆண் மக்களுக்குச் சோறுபோடும் நாடுகளிலேகூட, ஆண் மக்கள் பெண் களின் அடிமை/ நிலையிலேதான் வைத் திருக்கிறார்கள். சரீர பலத்தில் ஸ்திரீகள் ஆண்களை விட இயற்கையிலே குறைந்தவர்கள் என்பது மாத்திரம் மெய். இது மனிதருக் குள் மட்டுமன்று. எல்லா ஜந்துக் களுள்ளும் அப்படியே. ஆண் சிங்கத் தைக் காட்டிலும் பெண் சிங்கம் பலம் குறைந்தது; வடிவில் சிறியது. காளை மாட்டைக் காட்டிலும் பசு மாடு பலம் குறைந்தது. வடிவத்திலே சிறியது. ஆண் நாயைக் காட்டிலும் பெண் நாய் பலம் குறைந்தது. சேவலைக் காட்டிலும் கோழி சிறிது; ஆண் குருவியைக் காட்டிலும் பெண் குருவி சிறிது. அநேகமாக எல்லா ஜந்துக்களின் விஷயத்திலும் இதுவே விதி. இக்காரணம் பற்றியே மிருகங் கள், பக்ஷிகள், மனிதர், பூச்சிகள் முதலிய ஸகல ஜந்துக்களிலும் பெண்களை ஆண் தாழ்வாக நடத்தும் வழக்கமிருக்கிறது. மனிதன் நாகரிக ஜந்து வாதலால் மற்ற ஜந்துக்களைப் போல் அத் தாழ்வு நிலையைப் புறக்கணித்து விடாமல் அதைச் சாகவதமாக்கி, சாஸ்திரம் ஏற்படுத்தி வைத்திருக்கிறான். மனித ஜாதியில் ஆணுக்குப் பெண் அடிமைப் பட்டிருப்பது போல் இதர ஜந்துக் களுக்குள்ளே இடையாது. மனி தரிலே கொடுமை அதிகம். இதற் கெல்லாம் ஆதிகாரணம் ஒன்றே. பலங்குறைத்த உயிரைப் பலம் மிகுந்த உயிர் துன்பப்படுத்தலாம் என்ற விதி ஸகல பிராணிகளிடையேயும் காணப்படுகிறது. மனிதர் அதை எல்லை இல்லாமல் செய்திருக்கிறார்'' என்றான்.

அப்போது ராஜா கங்காபுத்ரன் ஸுதாமனை நோக்கி:— ''ஒரு ஸ்திரீயைப் புருஷன் அடிமை யாக நடந்துவதும், மாஸப் புலி தின்பதும், ஆட்டை மனிதன் தின்



பதும், தேனீ, அரசன் சொற்படி கோபத்தால் நேர் சேதம் செய்வதும் இல்லை அத்தனைக்கும் ஒரே பேர் என்ற சொல்லுமேயா?'' என்றான்.

அதற்கு ஸுதாமன்: ''ஆம். ஐந்துக்கள் பரஸ்பரம் துன்பப்படுத்தாமல் தடுப்பது நமக்கு வராத மில்லே. நாட்டினுள்ளே காக்கை குருவிகளே ஒரு வேளை பிறந்திலுமும் பிறக்கலாம். வனத்திலுள்ள துஷ்டமிருகங்களும் கோடானு கோடி. ஜந்துக்களும் மண்ணுக்குள் பூச்சி புழுக்களையும் கடலில் மீன்களையும் பிறந்த மனிதரல் ஆகாது மேலும், நிங்கம், புலிக்கு வாழைப்பழங்களும், மீன் புழுக்களுக்கெல்லாம் கிரையும், பூச்சி புழுக்கள் அத்தனைக்கும் அரிசியும் தயார் பண்ணிக் கொடுக்க மனிதரல் முடியுமா? அதாவது, ஒரு வேளை அவை எல்லாம் மாம்ஸ பட்சணத்தை நிறுத்தி விடுவதாக ஒப்புக் கொண்டபோதிலும், நாம் அவற்றைச் சாகடிக்கினன் ஆக வழியில்லே. ஆனல் மனிதருக்குள்ளே பரஸ்பரம் அடிமைப்படுத்திலுமும், முக்கியமாக ஆண் பெண்ணை அடிமைப்படுத்தாமலும் மனிதர் ஸமத்வமாகவும் நியாயமாகவும் வாழ வழியுண்டு'' என்றான்.

''மனிதர் பிறவுயிர்களைத் தின்னுத படி செய்யும் வழியுண்டு'' என்று ராஜகோவிந்தன் சொன்னன்.

''எப்படி?'' என்று சந்திரத் நீவின் ராஜாவான் கங்காபுத்ரன் கேட்டான்.

அப்போது ஸுதாமன் சொல்லுகிறான்:— ''அரசனேப்படி அப்படி மன்னுயிர். ராஜா ஸ்திரீகளும், மற்ற மனிதரையும் அடிமையாகக் கருதாமலிருந்தால் நாட்டில் ஸமத்வமுண்டாகும். ஒரு நாட்டில் நியூயர்ருல், எல்லா நாகளிலும் சிக்கிரத்தில் பரவிவிடும். கெட்ட வழக்கங்களைப் போலவே நல்ல வழக்கங்களையும் பூமண்டலத்து ஜனங்கள் ஒருவரிடமிருந்து மற்றொருவர் கைக்கொள்ளுதல் மரபே'' என்றான்.

அப்போது மந்திரி ராஜகோவிந்தன் சொல்லுகிறான்:—

''நாட்டில் அரசன் எவ்விதமான ஆஹார முண்கிறனே, அது போன்ற ஆஹாரமே சகல ஜனங்களுக்கும் என்று ஏற்பாடு செய்ய வேண்டும். அங்ஙனம் செய்தால் எல்லாக் கஷ்டங்களும் நீங்கிப்போம்'' என்றான்.

அப்போது ராஜா கங்காபுத்ரன் சொல்லுகிறான்:— ''நமது சத்ரத் நீவை எடுத்துக் கொள்வோம். இங்குள்ள மனிதர் அத்தனே பேரும் மாம்ஸ நிஷ்பலியே யென்று வைப்போம்; இத்தனே பேருக்கும் இன்ன, சாக பதார்த்தங்கள் நம் நீவில் இல்லையே?'' என்றான்.

''வருஷத்தோறும் இரண்டு லக்ஷம் சாக்குத் தேங்காய்களும் மூன்று லக்ஷம் சாக்கு மற்றப் பழ வகைகளும் பாரத தேசத்துக்கு நம் நாட்டினின்றும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன'' என்று மந்திரி சொன்னன்.


அப்போது ராஜா கங்காபுத்ரன் சொல்லுகிறான்:—

''சரி, நான் நிர்மானம் செய்து விட்டேன். ஆறிலும் சாவு, நூறிலும் சாவு. இன்றைக்கிருப்பவர் நாளைக்கிருப்பார்களென்று நிச்சயமாகச் சொல்ல இடமில்லே. எனக்கு முன் கோடானு கோடி அரசர் உலகத்திலே பிறந்து மாண்டு போயினர். மனு, மாந்தாதா, தசரத ராமாதிகளெல்லாம் மண்ணிலே கலந்து விட்டனர்; என் காலத்தில் ஒரு புதிய தர்மம் நிலேப்படும்படி செய்கிறேன்: மந்திரி ராஜகோவிந்தர், கேள் நாம் மொத்தம் 2 லக்ஷம் பேர். சரி. இங்கு விளேயும் நெல், புல், இறுங்கு, காய், கனி, ஒன்றும் வெளியே போகக் கூடாது. பதினேட்டு வயதுக்குமேல் அறுபது வயது வரையுள்ளவர்களெல்லாம் உழுதல், பயிரிடுதல், தோட்டஞ் செய்தல், துணி நெய்தல், மண் கட்டுதல், ஊர் நடைத்தல் முதலிய அவியமான தொழில்களிலே ஸமமான பாகம் எடுத்துக் கொள்ள வேண்டும். வீடு விளக்களும் குழந்தை வளர்த்தலும் சோறுக்கலும் பெண்களுடைய தெழிலாதலால், அவர்கள் பயிர்த்தொழில் முதலியவற்றிலே தூண் புரிதல் வேண்டாம். சரி, மொத்த வினவை இந்த இரண்டு லக்ஷம் ப்ரஜைகளும் ஸமமாகப் பகுத்துக்கொள்வோம். எனக்கும் என் பத்னிக்கும் என் குழந்தைகளுக்கும்—எத்தனே தானியம், எத்தனே கவி, எத்தனே இறுங்கு டோ அப்படியே ஒவ்வொரு ஆண், பெண் குழந்தைக்கும் ஸமபாகமாகப் பங்கிட்டுக் கொடுத்துவிட ஏற்பாடு செய்வோம். பெண்களே அடிமைப்படுத்தலும் வேண்டாம்.

''காரிராஜன் பெரிய தயாராகிய சண்டிகையை அவள் கொண்டு வந்த வரிசைகளுடன் ஒற்றைக் கிரட்டை யாக வரிசை கொடுத்துப் பரிவாரங்களுடன் அடுத்த கப்பலில் பாரத தேசத்துக்கு அனுப்பிவிடுவோம். நமது மகள் சந்திரிகையின் இஷ்டப்படி அவளே ஸுதாமனுக்கே மணம் புரித்து கொடுத்து விடுவோம். நீ என்ன சொல்லுகிறாய் ஸுதாமா, இங்கேயே இருப்பாயா? காரிக்குப் போனும் நான் உன்னுடன் என் மகளே அனுப்ப முடியாது'' என்றான்.

அதற்கு ஸுதாமன்: ''நான் இங்கேயே இருக்கிறேன். பயம் இல்லே விஷயத்தை யெல்லாம் தெளிவாகச் சொல்லி வனப்பிலுள் காரி ராஜா கோபம் கொள்ளாமாட்டார். என்னுடைய தம்பியை அவருக்கு மந்திரியாக நியமித்துக்கொள்ள ஏற்பாடு செய்து விடுகிறேன். நான் இங்கே இருப்பேன்; இந்தக் நீவும் அழகியது. இதன் அரசருக்கு நீயும் நல்லவன். நின் மகளோ என் நெஞ்சில் நல்லவள். ஆதலால் இங்கிருப்பேன்'' என்றான்.


விவாகம் நடந்தது. அங்கு மன்னனும் குடிகளும் அண்ணன் தம்பிகள் போல—யாருக்கும் பயில்லாமல், யாருக்கும் நோவில்லாமல், யாருக்கும் வறுமை இல்லாமல், யாருக்கும் குறை வில்லாமல், யாருக்கும் பகையில்லாமல்—எவ்விதமான துன்பமுமில்லாமல், ஸுதாமன், ராஜகோவிந்தன் என்ற இரண்டு மந்திரிகளுடன் கங்காபுத்ர ராஜன் நெடுங்காலம் ஸுகத்துடன் வாழ்ந்தான். ❋



"OUR HEARTY DEEPAVALI" GREETINGS

RF ST Royal INDIA

SUPERIOR QUALITY
STEEL FURNITURE



PHONE: 32847

ROYAL AGENCIES

III, JAIL ROAD, COIMBATORE-641 018

162, AVANASHI ROAD COIMBATORE-641 018

Branch: 10/783, HEAD POST OFFICE ROAD, PALAGHAT-1


PHONE: 3517

Where technology takes the reins...

The Power of technology is the power to respond to challenges for growth. Not just economic growth, but the upgrading of social prospects and a fostering of the right environment that holds a realistic promise for the future.

At Amalgamations, we have always endeavoured to harness technology in this spirit, and have come a long way since our highly finished and embellished brougham. Today our products and services touch many walks of national life. They include among others: Diesel engines, Tractors and farm equipment, a comprehensive range of auto ancillary products, Engineer's cutting tools, Paints, Transport services, Coffee and Tea, Books and Publishing.

Over the years in this continuous process of growth we have successfully sustained our technological lead by ceaselessly striving to keep abreast with the latest developments and adapting them to suit national goals and aspirations.



Amalgamations Limited

861, Anna Salai,
Madras-600 002.

Simpson & Co. Ltd.
Addison & Co. Ltd.
Addisons Paints & Chemicals Ltd.
Amco Batteries Ltd.
Amalgamations Repco Ltd.
India Pistons Ltd.
Bimetal Bearings Ltd.
Indiapistons-Repco Ltd.
Shardlow India Ltd.
Tractors and Farm Equipment Limited
L.M. Van Moppes Diamond Tools India Ltd.
Reichhold Chemicals India Ltd.
The Wheel & Rim Co. of India Ltd.
Associated Printers (Madras) Ltd.
Associated Publishers (Madras) Ltd.
George Oakes Ltd., Madras.
George Oakes Ltd., (Bombay Operations)

Higginbothams Ltd.
The Madras Advertising Co. Ltd.
Simpson & General Finance Co. Ltd.
Speed-A-Way Ltd.
Sri Rama Vilas Service Ltd. Madras.
Sri Rama Vilas Service Ltd., Kumbakonam.
T. Stanes & Co. Ltd.
Stanes Amalgamated Estates Ltd.
Stanes Motors (South India) Ltd.
Stanes Tyre & Rubber Products Ltd.
Indian Cashewnuts and Plantations Ltd.
The United Coffee Supply Co. Ltd.
The United Nilgiri Tea Estates Co. Ltd.
Wallace Cartwright & Co. Ltd., London.
Malaysia Pistons Sdn. Bhd., Malaysia.

MAC/AMAL/080

காதலில் மரணம் சாதாரணமானதா?



கரையில் துயில் நீங்கி எழுந்ததும் சூரிய தரிசனத்துக்காக வீட்டுப் பால்கனிக்கு வந்தேன். இது, கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக என்னிடம் ஏற்பட்டிருந்த புதிய பழக்கங்களுள் ஒன்று. பெசன்ட் நகரில், கடற்கரைக்குக் கூப்பீடு அரற்றில் குடிவந்ததிலிருந்து இந்தப் பழக்கம் என்னிடம் ஏற்பட்டுவிட்டது.

பால்கனியில் நின்று பார்வையைக் கிழக்கு நோக்கி ஓட்டினேன். பழுக்கக் காய்ச்சிய உலோக வட்டம் ஒன்று பளபளவென்று கண்ணைப் பறிக்கும் வண்ணம் கடலடியிலிருந்து மேலேறி வருவதுபோன்ற வழக்கமான சூரியோதயக் காட்சி என் கவனத்தை ஈர்த்தது. அலைகள் கரையை முத்தமிட்டுச் செல்லும் இடத்தில் ஒரு பெரிய கூட்டம்; ஆணும் பெண்ணுமாகச் சுமார் ஐம்பது பேர் இருக்கும். அந்தக் கும்பல் அதிகாலையில் கடலிடையே செல்லும் மீனவர் கும்பலாக இருக்கிறதோ என்று நினைத்துக் கொண்டேன்.

அன்று மாலையில் கடற்கரைக்குப் போயிருந்த போது, பழக்கமான நண்பர், பிரபாகர ராவைச் சந்தித்தேன். அவருடைய உறவினர் ஒருவர் சாஸ்திரி நகர் காவல் நிலையத்தில் ஸப்-இன்ஸ்பெக்டராகப் பணியாற்றி வருகிறாராம். அவர் கிட்டுப் போனேன். சுமார் இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவனும், பதினெட்டிலிருந்து இருபது வயசுக்குள்ளான இளம் பெண் ஒருத்தியும் ஒருவரை ஒருவர் இறுக அணைத்தபடி பிணமாகக் கிடந்தனர்.

அவர்கள் யாராக இருக்கக் கூடும்? அவர்களுடைய மரணத்துக்குக் காரணம் என்ன? அது தற்கொலையா, கொலையா என்பதைப்பற்றிக் கூட்டத் தினரிடையேயிருந்து பல ஹேஷ்யங்கள் மிதந்து வந்தன. ஆனால், நான் அவற்றையெல்லாம் செவிமடுத்துக் கொண்டு அங்கேயே நிற்கவில்லை. அந்தக் காட்சியைக் காணச் சகிக்காமல், வீடு திரும்பிவிட்டேன்.

அன்று மாலையில் கடற்கரைக்குப் போயிருந்த போது, பழக்கமான நண்பர், பிரபாகர ராவைச் சந்தித்தேன். அவருடைய உறவினர் ஒருவர் சாஸ்திரி நகர் காவல் நிலையத்தில் ஸப்-இன்ஸ்பெக்டராகப் பணியாற்றி வருகிறாராம். அவர் திருக்காது. ஆனால் இந்தக் கும்பல் கடற்கரையை ஒட்டிக் கட்டப்பட்டிருந்த என் போன்ற நடுத்தர வகுப்பார்களுக்கான கட்டிடங்களில் வாழ்வோரைக் கொண்டதாக இருந்தது. எனக்கு அறிமுகமான ரெயின் தலைகள் கூட இந்தக் கும்பலில் காணப்பட்டன.

வீட்டுக்குள்ளே வந்து பல்லை விளக்கி, முகம் கழுவி, மருமகள் கொடுத்த காபியைப் பருகினேன். ஜிப்பாவை மாட்டிக்கொண்டு கடற்கரைக்கு விரைந்தேன். கூட்டத்தினூடையே புகுந்து பார்த்த நான் நிடுக்கிட்டுப் போனேன். சுமார் இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க இளைஞன் ஒருவனும், பதினெட்டிலிருந்து இருபது வயசுக்குள்ளான இளம் பெண் ஒருத்தியும் ஒருவரை ஒருவர் இறுக அணைத்தபடி பிணமாகக் கிடந்தனர்.

அவர்கள் யாராக இருக்கக் கூடும்? அவர்களுடைய மரணத்துக்குக் காரணம் என்ன? அது தற்கொலையா, கொலையா என்பதைப்பற்றிக் கூட்டத்தினரிடையேயிருந்து பல ஹேஷ்யங்கள் மிதந்து வந்தன. ஆனால், நான் அவற்றையெல்லாம் செவிமடுத்துக் கொண்டு அங்கேயே நிற்கவில்லை. அந்தக் காட்சியைக் காணச் சகிக்காமல், வீடு திரும்பிவிட்டேன்.

அன்று மாலையில் கடற்கரைக்குப் போயிருந்த போது, பழக்கமான நண்பர், பிரபாகர ராவைச் சந்தித்தேன். அவருடைய உறவினர் ஒருவர் சாஸ்திரி நகர் காவல் நிலையத்தில் ஸப்-இன்ஸ்பெக்டராகப் பணியாற்றி வருகிறாராம். அவர் சற்றுமுன் தங்கள் வீட்டுக்கு வந்திருந்தபோது, காலையில் பிணமாகக் கிடந்த இளம் ஜோடிகளைப் பற்றிய தகவலைத் தெரிவித்தாரென்று பிரபாகர் ராவ் சொன்னார்.

''அப்படியா? யார் அவர்கள்? சாவு எப்படி ஏற்பட்டது?'' என்று நான் ஆர்வத்துடன் கேட்டேன்.

''எல்லாம் காதல் விவகாரந்தான். பையன் பணக்காரக் குடும்பத்துப் பிள்ளை. அவன் காதலித்த பெண் ஏழை. அவர்கள் திருமணத்துக்குப் பையனின் பெற்றோர் தடை போட்டார்கள். தங்கள் காதல் தோல்வியுறுவதை விரும்பாத அவ்விருவரும் தங்கள் பெற்றோருக்குக் கடிதம் எழுதி வைத்து விட்டுக் கடலில் விழுந்து தங்களை மாய்த்துக் கொண்டனர். என்ன பரிதாபம்?'' என்றார் ராவ்.

''வடிகட்டின கோழைத்தனம் இது. இந்தக் காலத்து இளைஞர்கள் முதுகெலும்பு இல்லாதவர்கள். இவர்கள் காதலிக்கவே லாயக்கற்றவர்கள்.''

''நீங்கள் சொல்வதன் உள்ளர்த்தம் புரிகிறது. ஸார், பெற்றோர் தடை போட்டால், 'உங்கள் சொத்தும் ஆச்சு; நீங்களும் ஆச்சு' என்று அவர்களை உதறி விட்டு வெளியேறி, தான் காதலித்த பெண்ணை இவன் மணந்து கொண்டிருக்க வேண்டும் என்று நீங்கள் சொல்கிறீர்கள். இல்லையா? ஆனால் இந்தப் பையன் விஷயத்தில்.....''

அவர் முடிப்பதற்குள் நான் குறுக்கிட்டேன்: ''பெற்றோரை உதறி விட்டுக் காதலித்த பெண்ணை அவன் திருமணம் செய்து கொண்டிருக்க

வேண்டும் என்றுகூட நான் சொல்ல மாட்டேன்.''

''பின்?''

''அவன் தங்கள் திருமணத்துக்குத் தன் பெற்றோர் மனப்பூர்வமாகச் சம்மதம் அளிப்பதற்கான வழி கனேக் கையாண்டிருக்க வேண்டும்.''

''அதற்குச் சாத்திய பூர்வமான வழிகள் இருகின்றனவா, என்ன?''

''எத்தனேயோ முறைகள் இருக் கின்றன'' என்று கூறி, நான் சொல்லத் தொடங்கினேன்.

''மில்டர் பிரபாகர் ராவ் நாற்பது ஆண்டுகளுக்கு முன் இதே செண்னேயில் நான், ஆங்லேயர் கும்பெனி ஒன்றில் சாதாரணக் குமாஸ்தவாக வேலே பார்த்து வந்தேன். நான் வேலேயில் சேர்ந்து நான்கு-ஐந்து ஆண்டுகள் ஆனபின் கும்பெனியில் வசந்தன் என்ற ஓர் இளேஞன், குமாஸ்தாவாக வேலேயில் சேர்ந்தான். இருவரும் வெகு விரைவில் நண்பர்களாகி விட்டோம்.

வசந்தனுக்குச் சொந்த ஊர் திருச் சிய அடுத்த நங்கவரம் என்ற கிற்றூர். அவன் தந்தையின் பெயர் சுந்தரேசன். ஆனுல் அவருடைய இயற் பெயரை விட நங்கவரம் பண் ணேயார் என்றுல்தான் எல்லாருக்கும் தெரியும். பணக்காரர். அத்தனே சொத்துக்களின் ஏகபோக வாரிசு வசந்தன். அப்படியிருந்துங்கூடத் தனக்கும் தன் தந்தைக்கும் இடையே ஏற்பட்ட சிறிய பிணக்கு ஒன்றின் காரணமாக அவரிடம் கோபித்துக்கொண்டு, யாருக்கும் தெரியாமல் வீட்டைவிட்டு ஓடிவந்து இந்தக் குமாஸ்தா வாழ்வைத் தேடிக் கொண்டதாக வசந்தன் என்னிடம் சொன்னுன்.

அவன் சிறிய பிணக்கு என்று சொன்னபோதிலும், அது பெரிய மனஸ்தாபமாகத்தான் இருக்க வேண் டும் என்று எனக்குத் தோன்றியது. ஏனென்ருல் எங்களுக்குள் பழக்கம் ஏற்பட்டு ஏழு-எட்டு மாசங்கள் ஆகி யும், இது வரையில் ஒரு தடவைகூட அவன் ஊருக்குக் கடிதம் எழுத வில்லே. மகனின் இருப்பிடம் தெரி யாமையால் அவன் அப்பாவிடமிருந் தும் அவனுக்குக் கடிதம் வந்ததில்லே. வீட்டுக்குக் கடிதம் எழுதுமாறு எத் தனேயோ தடவை நான் அவனே வற் புறுத்தினேன். ஆனுல் வசந்தன் பிடி வாதமாக மறுத்து விட்டான்.

வசந்தன் சிறந்த உழைப்பாளி. சிறந்த குண நலன்கள் உடையவன். அலுவலகத்திலும் சரி, வெளியேயும் சரி, கால நிர்ணயமின்றிச் சலிப்பின்றி எதையும் செய்வான். அந்த உழைப்பு மிக விரைவில் நல்ல மதிப்பை ஏற் படுத்தியது. எவரிடமும் இணங்கிப் பழகும் தன்மையும், பரோபகாரச்



சிந்தையும் உடையவனுதலால் நாங்கள் அப்பொழுது வாழ்ந்து வந்த மயிலாப்பூர் வட்டாரத்தில் அவன் சொம்பவும் பிரபலமாகி விட்டான்.

வசந்தன் கச்சேரி சாலியில், ஒரு வீட்டு மாடியில் தனி அறையில் தங்கியிருந்தான். எங்களுடைய இதர நண்பர்கள் வசந்தனின் அறைக்கு அடிக்கடி வந்து போனதில்லை. ஆனால் நினைத்தபோது அவன் அறைக்குப் போவேன் நான்.

அன்று ஞாயிற்றுக் கிழமை. நிதானமாக எண்ணெய் தேய்த்துக் குளித்து விட்டு, உணவு உண்டு, வசந்தன் அறைக்குப் போய் அவனுடன் அரட்டை அடித்துக் கொண்டிருக்கலாமென்று புறப்பட்டேன். வழக்கமாக வசந்தன் இருக்கும்போது திறந்தே கிடக்கும் அவனுடைய அறைக் கதவு அன்று மூடி உட்புறம் தாழிட்டிருந்தது.

ஆனால் நான் கதவைத் தட்டிய தமே வசந்தன் வந்து கதவைத் திறந்து, ''ராஜ: சும்மா உள்ளே வா'' என்றான்.

நான் உள்ளே போகவில்லை. காரணம் என் உயிர் நண்பன் வசந்தன். அந்தத் தீவிர பிரம்மசாரியின் அறையில் அவன் கட்டிலருகே இளம் பெண் ஒருத்தி நின்றிருந்தாள்.


அதிர்ச்சி என்றால் சொல்ல முடியாத அதிர்ச்சி என்னை உலுக்கி விட்டது. எனக்கு அங்கே நிற்கவோ, வசந்தனின் முகம் பார்த்து பேசவோ திடம் ஏற்படவில்லை. வேதனையுடன் திரும்பி பாராமல் வீட்டுக்கு நடந்தேன்.

வீடு வந்து சேருவதற்குள் சித்தனை மூட்டம் என் மனசை முழுமையாக வியாபித்து விட்டது.

உத்தமன் என்று நம்பியிருந்த என் நண்பன் இவ்வளவு பெரிய பகல் வேஷதாரியா? அன்று பெண்களை எங்கள் இளப்பில் உறுப்பினராகச் சேர்க்கவேண்டும் என்ற பிரேரணையை வசந்தன் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் கொண்டு வந்தான். 'ஏன் இவனுக்குத் திடீரென்று இப்படி ஒரு பைத்தியக்கார எண்ணம்?' என்று எண்ணியபோதிலும், அந்தப் பிரேரணையை நான் ஆதரித்தேன். சில உறுப்பினர்கள் அதைப் பலமாக எதிர்த்தனர். இளைஞர்கள் உள்ள இளப்பில் பெண்களை உறுப்பினராக்குவது, இளப்பின் நற்பெயரைக் களங்கப்படுத்தி விடுமென்றும், நடுத்தர வகுப்பைச் சேர்ந்த எத்தப் பெண்ணும் உறுப்பினராக முன் வரமாட்டாளென்றும் அவர்கள் வாதிட்டனர்.

ஆனால் வசந்தன், ஆண்-பெண் சமத்துவத்தைப் பற்றி நீண்ட சொற்பொழிவு நிகழ்த்தி, அத்தத் சமத்துவத்தை நிலைநாட்டவே இந்தப் பிரேரணையைத் தான் கொண்டு வருவதாக விளக்கினான். கமிட்டி ஏற்றுக் கொண்டது. ஒரிரு மாசங்களில் சுமார் முப்பது பெண்கள் சேர்ந்தனர்; அவர்கள் நினைதோறும் இளப்புக்கு வரவும், எல்லாரும் அவர்களுடன் கண்ணியமான முறையில் பழகவும் வழி வகுத்தான். இதன் மூலம் எங்கள் இளப்பை முன்னேவிட உயர்த்துப்பு உடைய தாகவும், முன்னேவிடப் பிரபலமான தாகவும் ஆக்கி விட்டான் என்று எல்லாரும் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கையில் அந்தப் பாவி இன்று இப்படிச் செய்து விட்டானே!

இன்று அவன் அறையில் நான் கண்ட காட்சியை என்னையன்றி வேறு யாராவது பார்த்திருந்தால் என்ன வாகியிருக்கும்? அவன் அயோக்கியன் என்பது வெளியாவது ஒருபுறம்



ரத்னபாலா



பாலர் வண்ண மாத மலர்

☐ பல்வகைக்கதைகள் ☐ பொது அறிவு
☐ விஞ்ஞானம் ☐ மதம் ஆகியவையுடன்
☐ விளையாட்டு ☐ சித்திரக்கதையும்

கொண்ட ஒரே

சிறுவர் பத்திரிகை விலை 1-75

ஏஜெண்டு இல்லாத ஊர்களுக்கு விண்ணப்பிக்கவும்

ரத்னபாலா தபால்பெட்டிஎண்:17, சிவகாசி. 626123.

SPMK

ஒரு வேண்டுகோள்

குடி தண்ணீர் நிலைமையைச் சமாளிக்க உதவுங்கள்

1. சமையலுக்கும் குடிநீருக்கும் மட்டுமே குழாய் நீரைப் பயன்படுத்துங்கள்.
2. குழாயை ஒரு நிமிடம் கூட வீணாகத் திறந்து வைக்காதீர்கள்.
3. வீட்டுத் தோட்டத்திற்குக் குழாய் நீரை உபயோகிக்காதீர்கள்.
4. கிணற்று நீரை எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்குப் பயன்படுத்துங்கள்.
5. வீட்டுக் குழாய்களில் ஒழுகல் இருந்தால் உடனடியாக அதை அடையுங்கள்.

நவம்பர் மாதப் பருவமழை வரையில் தயவு செய்து ஒத்துழையுங்கள்.

— குடிநீர் வாரியம், சென்னை.

DIPR

இருக்கட்டும்; பெண்ணே உறுப்பினர் ஆக்க வேண்டும் என்ற அவனுடைய பிரேரணையைக் கண்ணே மூடிக் கொண்டு ஆதரித்த எண்ணம்பற்றியும் அல்லவா பிற உறுப்பினர்கள் சரி தேவிக்கத் தொடங்கி விடுவார்கள்?

என்ன அதிசயம் இது? நேற்று வரைக் களங்கத்தைக் கண்ணும் காணுதலன் போல் நடந்து வந்த பயல், இன்று எப்படி இவ்வளவு துணிச்சலுடன் இப்படி ஓர் ஈனமான காரியத்தில் ஈடுபட்டான்? அந்தப் பெண் யார்? அவனே எங்கே பிடித்தான்? எத்தனை நாட்களாக என் கண்களைக் கட்டி இந்த நாடகம் ஆடி வருகிறான்?

நான் இவ்வாறு எண்ணியிருக்கையில் வசந்தன் முகத்தில் முறுவல் தவழ என் வீட்டுக்கு வந்தான். ''என்னடா, கூப்பிடக் கூப்பிட நிற்காமல் ஓடி வந்து விட்டாய்? நாங்கள் என்ன பேயா, பிசாசா, நீ அப்படிப் பயந்து ஓட?'' என்று எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்த்தது போல் பேசினான் அவன்.

என் கோபம் உச்ச கட்டத்தை அடைந்தது. ''வாயைமூடடா அயோக்கியா!'' என்று நான் கத்தினேன். பிறகு எண்ணச் சிறது ஆசுவாசப் படுத்திக் கொண்டு, ''நல்லவன்போல் நடித்து, கடைசியில் இப்படி ஆஞாட பூதியாக மாறுவாய் என்று நான் கனவிலும் கருதவில்லையடா, வசந்தா! அந்தப் பெண் யாராக இருந்தாலும், அவளுடனான உறவை இன்றோடு துண்டித்துக் கொள். ஏண்டா புத்தி கெட்ட, இப்படி ஒரு காரியத்தைச் செய்யத் துணிந்தாய்?'' என்றேன்.

''பேச வேண்டியதையெல்லாம் பேசி முடித்து விட்டாயா, ராமு? ஏழு மாசங்களுக்கும் மேலாக என்னுடன் இணை பிரியாமல் பழகி வந்துள்ள நீ கூடச் சிறிதும் ஆராயாமல் என் மீது அவதூறுகளை வாரி இறைக்கிறாயே! உனக்கு இது அடுக்குமா?'' என்றுள் நிதானமாக அவன் என் அருகே வந்து அமர்ந்து, என் கைகளைப் பற்றிக் கொண்டு தொடர்ந்து சொன்னான்.

''ராமு! பெற்றோருடன் பிணக்குற்று நான் இங்கே வந்திருக்கிறேன் என்பது உனக்குத் தெரியும். அது என்ன பிணக்கு என்பதை என் வாய் வழியே வரவழைக்க நீ பல தடவை முயன்று தோல்வியுற்றிருக்கிறாய். இப்போழுது நானே வலுவில் அதை உனக்குச் சொல்கிறேன். இன்று நீ என்னுடன் என் அறையில் கண்ட பெண் என் காதலி! எங்கள் இருவர் மனமும் சென்ற ஆண்டில் ஒன்று பட்டது. ஆனால், அவள் ஏழை என்பதற்காக என் பெற்றோர் எங் களைப் பிரித்துவிட முயன்றனர். என்ன தேரிட்டாலும் அவளைக் கை விடுவதில்லை என்று நான் அவளுக்கு அளித்திருந்த வாக்குறுதியைக் காப் பாற்றவே, பெற்றோரைப் புறக் கணித்து இங்கே வந்தேன். சென்ன நகரம் எனக்குப் பிழைப்பளித்தது.

''பெற்றோர் தயவின்றி நாங்கள் வாழத் தக்க நிலையை வழங்கிய என் வேலை இந்த மாசத் துவக்கத்திலிருந்து நிரந்தரமாக்கப்பட்டதுதான் உனக் குத் தெரியுமே! நியாயான வாழ்க் கைக்கு வகை செய்து கொண்டதும் என் காதலியை இங்கே புறப்பட்டு வருமாறு கடிதம் எழுதினேன். இன்று காலையில் அவள் வந்து சேர்ந் தாள். அவளுக்கு நான் அளித்த வாக்குறுதியைக் காப்பாற்றி விட் டேன். இவி உங்களிடம் அதையெல் லாம் சொல்லிப் பெருமையடைய லாம் என்று எண்ணியிருந்தேன்.''

வசந்தனின் இந்த விளக்கம் என் னைத் தலே குனிய வைத்து விட்டது.

வசந்தனிடம் என் மடமைக்கு வருத்தம் தெரிவித்துவிட்டுச் சொன் னேன்: ''அது சரி, வசந்தா, எவ்வ ளவுதான் உன் லட்சியம் உயர்ந்ததாக இருந்தாலும், அவனைக் காதலியா கவே உன்னுடன் தங்க வைத்துக் கொண்டிருப்பது சரியல்ல. உங்கள் தாம்பத்தியப் பிணைப்பை ஸ்ரரியச் செய்து விட வேண்டும். ஒரு நல்ல நாள் பார்த்து, எளிய முறையில்,



''தலே தீபாவளிக்கு மாப்பின்னே, சம்பந்தி, சம்பந்தியம்மா எல்லாரையும் வரும்படி எழுதுங்கோ!''

''அவ்வளவுகெல்லாம் நமக்கு வரும்படி இருக்கா, சொல்லு!''

ஏதாவது ஒரு கோவிலில் உங்கள் திருமணத்தை முடித்து விடலாம்.''

''திருமணமா?'' வசந்தன் நடுக் கிட்டவன் போல் கேட்டான். பிறகு, ''திருமணந்தானே? அதற்கு இப் பொழுதே என்ன அவசரம்? காலம் வரும், அப்போது பார்த்துக் கொள்ள லாம்'' என்று கூறினான்.

இப்பொழுது நான் நடுக்கிட்டேன். ''என்னடா இப் படிப் பேசுகிறாய்? திருமணத்துக்கு அவசரம் இல்லே என்கிறாயே! வசந்தா, நீ இன்னும் உலகின் போக்கைப் புரிந்து கொள்ளவில்லேயென்று நினைக் றேன். டேய் ஜெம்பில் பல தரப் பட்ட வெளரமான குடும்பப் பெண் களுடன் பழக வேண்டியிருக்கும் நீ, காதலி என்று சொல்லிக்கொண்டு ஒரு பெண்ணை உன் அறையில் வைத் திருப்பது எத்தகைய அவதூறுகள் இளம்பு வழி வகுத்து விடும் தெரி யுமா?''

''டேய்! என் பெற்றோருக்கு நான் ஒரே வாரிசு என்பது உனக்குத் தெரியாதா? என்னதான் அவர்க ளோடு நான் பிணக்குக் கொண்டிருந் தாலும், அவர்களின்றி என் திருமண வைபவத்தை நடத்த எனக்குத் துணிவு வரவில்லே. அதனுல்தான் அவர்கள் மனம் கவியும் வரையில் நிருமணத்தை ஒத்திப் போட வேண் டும் என்கிறேன். இப்பொழுது புரித்த தாடா உனக்கு?''

வசந்தனிடம் எனக்கு ஏற்பட்டி ருந்த பற்று அளவிட முடியாதது. அவனே யாரும், எந்த விதத்திலும், ஈந்தேகிக்கக் கூடாது என்று விரும்பி னேன்.

நெடு நேர ஆலோசனேக்குப் பின் எனக்கு ஒரு வழி புலனுபிற்று. அதன் படி அன்றிரவே அவன் தந்தை நங்க வரம் பண்ணியார்சந்தரசேனுக்கு ஒரு கடிதம் அனுப்பினேன், என்னை வந்து பார்க்கச் சொல்லி.

என் கடிதம் கிடைத்த உடனேயே சுந்தரசேன் சென்னைக்குப் புறப்பட்டு வந்து விட்டார். நான்தான் அவருக் குக் கடிதம் எழுதியவன் என்பதை அறிந்ததும், ''எங்கே இருக்கிறுன் என் மகன்? என்னை உடனே அவனி டம் அழைத்துப் போ, அப்பா!'' என்று துடித்தார்.

''உங்கள்மகனிடம் உங்களே அழைத் துச் செல்ல வேண்டுமானுல் என் வேண்டுகோள் ஒன்றை நிறைவேற்று வதாக நீங்கள் வாக்குறுதி தர வேண்டும்; அவன் காதலித்த பெண்ணே அவனுக்கு மண முடித்து வைக்க வேண்டும்'' என்றேன்.

''என்ன? காதலா? எனக்குக் குப்பாமாக இருக்கிறதே! வசந்தனுக் குத்தான் முன்பே நிருமணம் ஆகி விட்டதே!'' என்றார்.

இப்பொழுது நான் நடுக்கிட் டேன். நடுக்கிட்டது மட்டுமா? மின்னலைப் போல் வேறு லெ நினேவு களும் என் உள்ளத்தில் பளிச் கிட்டன. வசந்தன் என்னிடம் கூறியது அனேத்தும் பொய். இப் போது அழைத்து வந்திருக்கும் பெண்ணுடன் அவன் முறைகேடான தொடர்பே கொண்டிருக்கிறுன்! அதலுல்தான் நிருமணப் பேச்சைத் தட்டிக் கழித்து விட்டான்.

''என்ன அப்பா ஆலோசிக் கிறுய்?'' என்று சுந்தரசேன் என் சிந்தனையைக் கலேத்தார். தொடர்ந்து கூறினர்: ''என் வசந்தன் எங்கே இருந்தாலும், எப்படி வாழ்ந்து வந் தாலும் அவனே நான் சந்தித்தே ஆக வேண்டும். உன் தயக்கத்தைப் பார்க் கையில் அவன் ஏதோ கெட்ட நட வடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறுன் என்று தோன்றுகிறது. அப்படியிருந் தால், அதற்குக் காரணம் நான் தான். தொட்டித் தாலி கட்டிய மனேவியுடன் அவனே வாழவிடாமல் செய்தேன். இன்று அவன் வேறு யாரேனும் ஒரு பெண்ணுடன் தொடர்பு வைத்துக் கொண்டிருந் தால் அதற்குக்காரணமும்நான்தான்.

''அப்பா ராமு! வசந்தனுக்குச் சென்ற ஆண்டுத் துவக்கத்தில் நிருமணம் நடந்தது. ஏழைக் குடும்பம் என்பது தெரியாமல் சம்பந்தம் செய்து கொண்டதால் எதிர் பார்த்த சீர் வரிசைகள் அவர் கனீட்டமிருந்து கிடைக்கவில்லை. ஏன்? பேசிய வரதட்சிணை கூடக் கிடைக்கவில்லை. என்னை ஏமாற்றி விட்ட அவர்களோர் பழி வாங்குவதற் காக மருமகனை வீட்டுக்கு அழைத்துக் கொள்ளாமல் இருந்தேன்.

''வசந்தன் என் செயலைக் கண்டித் தான். தந்தை ஏமாற்றி விட்டதற் காக ஒரு பாவமும் அறியாத அவரு டைய மகனைத் தண்டிக்கக் கூடாது என்று வாதாடினான். அவனே உடனே வீட்டுக்கு அழைக்கா விட்டால், எங்கேயாவது ஓடிப்போய்விடுவதாகப் பயமுறுத்தினான். எங்கே ஓடி விடப் போகிறான் என்ற மிதப்பில், 'நான் உயிரோடிருக்கும் வரை வரதட்சிணைப் பாக்கியையும், பிற சீர் வரிசைகளை யும் கொடுத்தாலன்றி அவனை மணவியின் முகத்தைப் பார்க்கக்கூட அநுமதிக்க மாட்டேன்'' என்று நிட்ட வட்டமாகக் கூறி விட்டேன்.

''ஒரு மாசங்களுக்குப் பின் வசந் தன் எங்கோ ஓடிப் போய் விட்டான். எங்காவது ஒரு மாசங்கள் சுற்றி விட்டுத் தானாக விடு வந்து சேருவான் என்று கவலையற்றிருந்தேன். ஆனால் மூன்று மாசங்கள் ஆன பின்னும் அவனைப் பற்றிய தகவலே இல்லை என்றவுடன் எனக்குப் பயம் ஏற்பட் டது. ஒருகால் மாமனார் வீட்டில் இருக்கலாம் என்று அங்கே ஆள் அனுப்பிப் பார்த்துவரச் செய் தேன். அங்கேயும் அவன் இல்லை என்று அறிந்த போது நான் துடித்துப் போய் விட்டேன். அதன் பின் நான் அவனைத் தேடாத இடம் பாக்கி யில்லை. ஆனல் உன் கடிதம் கிடைக் கும் வரையில் அவனைப்பற்றிய தகவலே கிடைக்கவில்லை.

''ராமு! ஆண்டவன் எனக்கு ஏராளமான ஆஸ்தி-பாஸ்திகளை அளித்திருந்தும் பேராசை கொண்டு, சம்பந்தியிடமிருந்து பணம் பிடுங்கும் கெட்ட நினைவு காரணமாக மகனே இழந்துவிட்ட தவறு இப்பொழுது எனக்கு மிக நன்முக விளங்கி விட் டது. இனி ஒரு போதும் அத்தகைய தவறு செய்ய மாட்டேன்'' என்று கூறிப் புலம்பினர் பெரியவர்.

இந்தக் கதையைக் கேட்டபோது எனக்கு வசந்தன் மீது அளவற்ற கோபம் உண்டாயிற்று. அந்தப் பாவிக்குக் கொள்கை என்று எது வுமே கிடையாதா? கட்டின மனவியை ஏற்கக் கூடாது என்று தடை செய்கிறார் தந்தை என்பதற்காகப் பிரிந்து வந்தவன், இங்கே வேறொரு பெண்ணைப் பிடித்துக் கொண்டிருக் கிறானே! அதையும் இதையும் இணைத்து என்னிடம் எவ்வளவு அழகாக கதையளந்து விட்டான்!

எந்த மூதேவியையோ பிடித்து வந்து காதலி என்று வீட்டில் வைத் துக்கொண்டிருக்கிறானே பாவி! அவ ளுடன் அவன் கொண்டுள்ள தொடர்பை விடச் செய்து, அதிவிரி சாட்சியாகக் கைப்பிடித்த மனைவி யுடன் அவனைச் சேர்த்துவைக்க வேண் டும். எப்படிப் பட்டாலும் இதைச் செய்வலியோனல், அவனுடைய நண்பன் என்று சொல்லிக்கொள்ளவே எனக்கு யோக்யதை கிடையாது.

இந்த முடிவுக்கு வந்தபின் வசந்த னின் தந்தையிடம், சில நாட்களுக்கு முன் வரையில் இங்கே அவன் நடத்தி வந்த தூய வாழ்க்கையை விளித் தேன். இப்போது அவன் யாரோ ஒரு பெண்ணிடம் மயங்கி அவனைத் தன் அறைக்கு அழைத்து வந்திருப்பதையும் தெரிவித்தேன். எப் படியும் அவள் பிடியிலிருந்து அவனை விடுவித்து அவரிடம் ஒப்படைத்து விடுவதாக வாக்களித்தேன். பிறகு



''தீபாவளி அவசர அடிங்க! தண்ணீலே ஒருவாட்டிப் போட்டு எடுத்தீங்கன்னு கரெக்டா ஆயிரும். சந்தோஷமாப் போங்க.''

நாங்கள் அவன் அறைக்குப் புறப்பட் டுச் சென்றோம்.

தந்தையைக் கண்டதும் வசந்தன் திடுக்கிடலில்லே. ''அப்பா! வாருங் கள்'' என்று மகிழ்ச்சியுடன் அவரை வணங்கினான்.

''வசந்தா! என் மகனே! என் செல்வமே!'' என்று அவனே வாரி அணைத்தார் சுத்தரேசன். மறுகணம் அவர் பார்வை அங்கே ஒதுங்கி நின்றிருந்த வசந்தனின் காதலி யிடம் தாவியது. அவர் கண் கள் வியப்பால் விரிந்தன. ''வனஜா, நீ இங்கே எப்போதம்மா வந் தாய்?'' என்று அவர் வினவினர்.

''இவனே உங்களுக்கு எப்படித் தெரியும்?'' வியப்புடன் கேட்டேன்.

அவர் புரிந்துகொண்டார். ''அட இவனோ வசந்தன் அழைத்து வந்து வைத்திருக்கும் பெண் என்ற குறிப் பிட்டாய்? நீ வாழ்க, ராமு! வனஜா தான் வசந்தன் தொடுத்த தாலி கட்டிய மனவி.''

வசந்தன் குறும்புப் புன்னகை புடன் என்னே நோக்கினன்.

''சொந்த மனவியைக் காதலி என்று கூறி ஏண்டா என்னே இப்படி யெல்லாம் அல்லற்படுத்தினாய்?'' என்று கேட்டேன்.


வசந்தன் சொன்னன்: ''என்னே மன்னித்துக்கொள், ராமு. ஆரம்பத் திலிருந்தே என் செயல்கள் யாவும், எப்படியாவது வனஜாவை என் தந்தையின் மனப்பூர்வமான இசைவு டன் மனவியாக ஏற்று வாழ வேண் டும் என்ற குறிக்கோளுடன் செய் யப்பட்டவைதான். வேறே தேடிச் சென்றேக்கு வருமன் நான் வனஜா வின் ஊருக்குச் சென்று, அவனி ஒருபோதும் கைவிடமாட்டேன் என்று உறுதியளித்து, வேறே டைத்ததும் அவனைச் சென்னைக்கு அழைத்துக் கொள்வதாகக் கூறிவிட்டு வந்தேன்.

''வேறே டைத்து; அது காயமும் ஆயிற்று. அவளுக்குக் கடிதம் எழுதி னேன். வந்து சேர்ந்தாள். ஆனல் அவளோடு வாழ்க்கை நடத்த என் தந்தையின் இசைவைப் பெற வேண்டுமே? அதற்காகத்தான் அவள் என் மனவி என்ற உண்மையை மறைத்து, காதலி என்று பொய் சொல்லி இவ்வளவு நாடகமும் நடத் தினேன். நான் அவனைக் காதலி என்று சொல்லியிராவிட்டால், நீ என் தந்தையை வரவழைத்திருப்பாயா? நிச்சயமாக மாட்டாய் அல்லவா? காதலியுடன் என்னே இணைக்க அவரு டைய உறுதிமொழியைப் பெற்றி ருப்பாயா? நிச்சயமாக மாட்டாய், அல்லவா? ஆனல் வனஜாவை நான் என் காதலி என்று உள்ளபடி கூறி யது ஒருவிதத்தில் பொய்யே அல்ல. அவள் அன்றும், இன்றும், என்றும் என் காதலுக்குரியவள்தான்.''

''சரி, சரி! அந்தக் காதலியுடன் உன்னை ஊருக்கு அழைத்துச் செல்ல உன் அப்பா காத்திருக்கிரார்; புறப் படு!'' என்று கூறி, நடந்த வேடிக் கையையெல்லாம் நினைத்து உள்ளூரச் சிரித்துக்கொண்டேன்.

இவ்வாறு கதையை முடித்துவிட்டு, ''இப்போது சொல்லுங்கள், பிரபா கர் ராவ்! நம் சமூக நிலே மிக மிக மோசமாயிருந்த அந்தக் காலத்தி லேயே இப்படி என் நண்பன் பெற் றோரின் பிடிவாதத்தைத் தகர்க்க ஒரு வழி கண்டான் என்றல் இந்தக் காலத்தில் அதற்கு வழி பிடட்டாது என்று நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டேன்.

நண்பர் திருதிருவென்று விழித் தார். பிறகு, ''உண்மைதான். இந் தக் காலத்து இளைஞர்கள் காதலித் தால் மட்டும் போதாது. சிக்கல் எழும்போது தங்கள் காதலே வெற்றி பெறச் செய்வதற்குத் தேவையான நெஞ்சுரத்தையும், புத்தி சாதுரியத் தையும் பெற்றிருக்க வேண்டும்'' என்று ஒப்புக்கொண்டார். ✱



மக்களுக்கு சக்தி

சக்திதனையே கருவியாக்கி– அ:.தினை எண்திசையும் பரவிட வாழி.

மகிழ்ச்சியும், வளப்பமும் எங்கும் பரவிட சக்தி. நாட்டின் முன்னேற்றத்திற்கு சக்தி. மக்களுக்கு சக்தி. தொழில் துறையில் வளர்ந்திட சக்தி.

மின் உற்பத்திக்கு மூலசக்தியாகிய கனரகக் கொதிகலன் தயாரிப்பில் புகழ்பெற்ற பி.எச்.இ.எல் எங்கும் சக்தியருள்மாரி பெய்ய வாழ்த்துகிறது.

பாரத் ஹெவி எலெக்டிரிகல்ஸ் லிமிடெட்

திருச்சிராப்பள்ளி 620 014.

பதிவு அலுவலகம்: 18-20, கஸ்தூரிபா காந்தி மார்க், புதுடில்லி 110 001

CAS/BHEL/4/81 TM

களிப்பூட்டும் தீபாவளித் திருநாள்-வாழ்வில் ஒளியூட்ட உளமாற வாழ்த்துகின்றோம்

பல்வேறு சாதனங்கள் தயாரிப்பில்
தலைசிறந்த தொழில் நுட்பத் தேர்ச்சி



மயூர் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் ஆஃப் இந்தியா லிமிடெட்
சென்னை-600 001

சைக்கிள்கள், சைக்கிள் சீட்டுகள், செயின்கள்,
டைனமோ லாம்ப் செட்டுகள், எ.கு குழாய்கள்,
எ.கு ஸ்டிரிப்புகள், மெட்டல் செக்ஷன்கள்
மற்றும் 'Z' பாலின்கள் தயாரிப்பாளர்கள்.

Imageads M-TI- 1446 Tam

நல்லதோர் வீணை

ஏகாந்திரமன்



மேறையின் மீது வீணை உறங்கிக் கொண்டிருந்தது. உறக்கத்தில் நழுவியிருக்கும் போர்வையைப் போல் அதன் மேலுறை சரிவர மூடப்படாமல் இருந்தது. பச்சை வண்ணப் பட்டுத் துணியில் மெல்லிய மஞ்சள் பூ வேலைப்பாடு செய்திருந்த அத்த உறையின் மீது தூசு படிந்திருந்தது.

கேசவராம் வீணையை இமை கொட்டாமல் பார்த்தார். அவர் வீணையைத் தொட்டு ஒரு மாதத்துக்கு மேலாகிறது. அந்த வீடும் அந்த முன் கூடமும் காலை வேளையில் இது போல் கலபலப்பற்று இருந்தது கிடையாது. அந்த ஊஞ்சலின் மீது அவர் அமர்ந்திருப்பார். கீழே கம்பளத்தின் மீது விசையாக மாணவிகள் அமர்ந்து வீணையின்மீது பிஞ்சு விரல்களைத் தவழ விட்டவாறு கானம் எழுப்புவார்கள். பயிலத் தொடங்கியவர்கள், சரளி வரிசை முடித்தவர்கள், கீதம் தொடங்குபவர்கள் என்று பல ரகப்பட்ட மாணவிகளின் சுறுசுறுப்பைக் கவனித்து அவர் அவ்விடம்போது திருத்தங்கள் கூறுவார். எட்டரை மணிவரையில் பாடம் நடக்கும். பிறகு எழுந்து குளிக்கச் செல்வார். குளித்து முடித்தவுடன் பூஜை அறையில் வீணை ஆத்மார்த்தமாக மீட்டி அதில் லயித்து விடுவார். நைவேத்தியம் வரும். சர்ப்பூர தீப ஆராதனையின்போது ஒளியில் நாதப் ப்ரம்மத்தையே காண்பார் கேசவராம்.

சமையற்காரர் நைவேத்தியத்தைக் கொண்டு வைக்கும்படியான நிலை. மணிலி இருந்தவரை பூஜை சமயம் பார்த்தே துணி களைத் துவைத்து விட்டுக் குளிய லறைக்குச் செல்வாள்; பூஜை முடிந்த பிறகுதான் குளித்து விட்டு வருவாள். மனைவியின் பணிவிடை விஷயத்தில் கேசவராம் கொடுத்து வைக்கவில்லை.

கேசவராம் சங்கீதக் கல்லூரியின் முதல்வர். பிரபலமான கல்லூரி. கண்டிப்பு, நேர்மை, நிறமை முன் நின் முழு உருவம் கேசவராம் என்று ஒரு முகமாகக் கூறுவார்கள், பெண்கள் அதிகம் பயிலும் கல்லூரி என்பதால் 'கசமுசா' பேச்சே எழுவதற்கு வழியில்லாமல் ஒழுங்கு முறைப்படி கல்லூரி நடக்க வழி வகுத்தார். அவருக்கு ஒரே ஒரு மகன்தான். அவனோ கோடைக்கானலில் ஹாஸ்டலில் சேர்த்துப் படிக்க விட்டிருந்தார். சங்கீத சௌபாக்கியம் நிறைந்த கேசவராமின் சொந்த சௌகரியத்தில் சிறு விரிசல். அந்த விரிசல் அடையவுமில்லை, விரிவாகவும் இல்லை. சௌம்யா, அவர் மனைவி, அவரிடமிருந்து விலகித் தன் சகோதரியுடன் வசிக்க அமெரிக்காவுக்குச் சென்று விட்டாள். வீணையின் இனிய நாதம் வீட்டில் ஒலிக்க வில்லை. ஆறு ஆண்டுகள் ஓடி விட்டன. அவளுக்கு அவருடன் வாழ்ந்த வாழ்க்கை கசந்தது. என்றாவது அவள் நாத இன்பத்தை உணர்ந்து திரும்பி வருவாள் என்ற நம்பிக்கை கேசவராமிடம் இருந்தது.

அவர் வாழும் அந்த இசை இல்லத்துக்கு ஒரு சமையற்காரர், வீட்டு வேலைக்கு ஒரு கிழவி, கார் ஓட்ட டிரைவர் மட்டுமே போதுமானதாக இருந்தன. தம் வேலைகளைத் தாமே கவனித்துக் கொண்டார். காலை ஏழு மணிக்கே ஒலிக்க ஆரம்பிக்கும் வீணையின் நாதம், அவர் கல்லூரிக்குப் புறப்படும் பத்து மணி வரை ஒலிக்கும். பிறகு, மாலை, இரவு என்று அதற்கு ஓய்வு இடையாது. இன்னஞ் சிறு பெட்டகள், தாவணி போட்டு மலரும் நேரத்தை எதிர்பார்ப்பவர்கள், புதிதாகப் புடைவை உடுத்தத் தொடங்கியவர்கள், லட்சுமிகரமாக நெற்றியின் ரூவிலும் மூன் உச்சியிலும் குங்குமம் அணித்தவர்கள் என்று வீணையைக் குழந்தையைப் போல் சுமந்து கொண்டு அந்த வீட்டுக்குள் வரும் கோலத்தைப் பார்த்தால் கலை வாணிக் கோயிலுக்கு எழுந்தருளும் பக்தர்களின் அணிவகுப்பைப் போல் தோன்றும்.

பார்வையாலே எடை போட்டு, அவர்களுக்கு இசை ஞானம் அடிப் படையில் உள்ளதா என்று அறிந்து, நீடித்துப் பயில்வார்கள் என்ற திருப்தி ஏற்பட்ட பிறகே மாணவியாக ஏற்றுக்கொள்வார்.

அப்படித்தான் ஒரு நாள் வாணி அவர் எதிரே வீணையுடன் வந்து நின் ரு ள். நல்ல உயரம்: நிலக்கும் கண்கள். நெற்றியில் சிறிய சாந்துப் பொட்டு. மேல் தலப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டு, தழையத் தழைய பாதத்தை மூடும்படியாகப் புடைவை உடுத்திய அவளே ஒரு முறை நிமிர்ந்து பார்த்தவுடனேயே அவர் உடல் ஏனோ சிலிர்த்தது.

வாணி நன்னீப் பற்றிச் சுருக்கமாகச் சொன்னுள். அவள் சங்கீதப் பரம்பரையைச் சேர்ந்தவள். மிகவும் கஷ்டப்பட்டு முன்னேறிய குடும்பம். சிறிய நிறுவனம் ஒன்றில் பணியாற்றுகிறுள். வீணையைத் தன் தந்தையிடம் பயின்ற அவள், தந்தையின் மறைவுக்குப் பிறகு நல்ல குருவுக்காகக் காத்

திருந்தாள். சிறந்த குருநாதரிடம் வீணை பயில வேண்டுமென்ற உந்துதலே அவளால் நாள முடியவில்லே. கேசவராம் எதிரே அனிவுடன் வாணி வந்து நமஸ்கரித்து எழுந்து அவர் முகத்தை நோக்கினுள்.


கேசவராமிடம் மிக அடக்கமாகத் தன்னேப் பற்றி மெல்லிய குரலில் கூறி வரும்போது அவள் பல முறை மெல்லச் சிரித்தாள். சிரிக்கும் போது மேற் வரிசைப் பற்கள் மட்டும் கிலபோது தெரிந்தன. கில சமயம் மொக்குப் போல் அவள் உதடுகள் குவிந்தன. பல முறை அவள் இமைகள் படபடத்தன.

கேவராமின் அறுமதியுடன் வாணி அந்த வீட்டுக்கு வர ஆரம்பித்து விட்டாள். அவள் புதிதாக வீணை பயில வரவில்லே. அவள் அரிச் சுவடி தொடங்கவில்லே; பட்ட மேல் படிப்பு ஆராய்ச்சி மாணவியாகத் திகழ்ந்தாள். அவருக்கு இணேயாக அவள் வாசித்தாள். அவள் சென்ற பிறகு அவர் ஆத்மார்த்தமாக வீணேயை மீட்டும் போது, ராக வடிவாக அவர் எதிரே வாணி தோன்று வாள். பூபாளமாகத் துயில் எழுப்பு வாள். மோகனமாக முறுவலிப் பாள். கல்யாணியாகக் குதூகல மூட்டுவாள். நீலாம்பரியாகத் தலாட்டுவாள். நிடரேன கேசவராம் சிலிர்த்து விழிப்பார். வீணே ஒலி நிற்கும். ஏன் - ஏன் - என்று தம்மையே ஒரு முறை கேட்டுக்கொள் வார். சிலிர்த்துத் துடிக்கும் உடலே அமைதிப்படுத்த முயல்வார். துளிர்த் திருக்கும் வேர்வை முத்துக்களேத் துடைத்துக் கொள்வார்.

மற்றெரு தடவை இப்படி நேர்ந்தது. அவருக்கே தாங்கவில்லே. 'இன்று இத்துடன் பாடம் போதும்' என்று மாணவிகளே அனுப்பி விட் டார். மாணவிகள் போய்ச் சிறிது நேரம் கழித்து வாணி வந்தாள்.

'போ, போ என்னப் பார்க்காதே! போய் விடு' என்று சுத்த வேண்டும் போல் தோன்றியது. அவளே நோக்கா மல் முகத்தைத் திருப்பிக் கொள்ளத் தோன்றியது. வெற்றிலேப் பெட்டி யைத் திறந்து வெற்றிலேயை மடித்து வாயில் போட்டுக் கொண்டார்.

''ஸார், ஸார்!'' என்று வாணி அவர் அருகே வந்து, ''என்ன ஸார், கண்ணுமூப்பைத் தடவாமல், பாக்கு போட்டுக் கொள்ளாமல் வெறும் வெற்றிலேயைப் போட்டுக் கொள்கிறீர் களே!'' என்று கூறியபோது, அவர் தம் நிலே அறிந்து ஊஞ்சலிலிருந்து எழ முற்பட்டார். மடியிலிருந்த வெற் றிலேப் பெட்டி கீழே விழுந்தது. பசுமை வெற்றிலேகள் பறந்தன. பாக்குத் தூள் சிந்தின. வாணி பரபரப்புடன் குனிந்து வெற்றிலேகளே




ஒன்று சேர்த்தாள். பாக்கைத் திரட்டினாள். அவள் குலிந்து வெற்றிலை கனிச் சேகரித்தபோது, கேசவராம் நிற்பி சேதுக்காத அந்தச் சிலையின் அங்க எழில் கோலத்தை ஒரு கணந்தான் பார்த்தார். அவர் இதயத்தில் தாளங்கள் ஒலித்தன.

வாணி அமைதியாக ஒவ்வொரு வெற்றியையாகத் துடைத்துப் பக்குவ மாகச் சுண்ணும்புத் தடவி, பாக்கைக் கையில் எடுத்து, ''ஸார், கொஞ்சம் கூடுதலாகவே பாக்குத் தருகிறேன். முன்பே வெறும் வெற்றியைப் போட்டுக்கொண் டிருக்கிறீர்கள். அதற்கும் சேர்த்து..'' என்று கூறி நீட்டியபோது, அவர் கண்கள் அவள் அழகில் லயித்திருந்தன.

அவள் உடுத்தியிருந்து செம்பருத் நிச் சிவப்பு நிறப் புடவை அவள் மேனியழகுக்கு அழகு செய்தது. வெற்றிலச் சருளுடன் நீண்ட அவள் கரத்தை அப்படியே தாவி இழுத்து..

'ஓ! சேசவராம் உமக்கு என்ன நேர்ந்தது? உமது புத்தியில் ஏன் இப்படி யொரு சலனம்? உம்மைப் பற்றி ஊர் உலகம் என்ன நினைக் கிறது? உமதுரெறுதி என்ன வாகியது?



சரியும் மனத்தைச் சரி செய்து கொள்ள முயன்றார்.

''ஸார், ஸார்! என்ன நேர்ந்தது உங்களுக்கு? உங்கள் முகம் மாறியிருக்கிறதே. காய்ச்சலா? தலைவலியா?'' என்று வாணி அவர் அருகே நெருங்கினாள்.

'வாணி, வாணி என் அருகே நெருங்காதே' என்று அலற வேண்டும் போல் அவருக்குத் தோன்றியது. வாணி நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள். ''தலையப்பக் கொதிக்கிறதே!'' அவள் அறிஞாள். அவள் கரங்களுக்கு அவர் நெற்றி தலையப்பக்கட்டது. அவருக்கு அவள் விரல்கள் அலிலித் தண்டாய்க் குளிர்ந்தது.

''ஸார், கல்யாரிக்கு லீவு போட்டு விடுங்கள். அடுத்த வாரம் இசை விழா இருப்பதை மறந்து விட்டீர்களா? உங்களுக்குப் பட்டமளிக்கக் கௌரவிக்கப் போகிறார்கள். அன்று கச்சேரியும் இருக்கு. உடம்பைக் கவனித்துக் கொள்ள வேண்டாமா? வீட்டுக்கும் மாணவிகளை வரவேண்டாம் என்று சொல்லி ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள் ஸார்!'' என்றாள் வாணி.

அம்: அடுத்த வாரம் இசை விழா: விழாவில் வாணியும் அவரும் சேர்ந்தே வீணை வாசிக்கப் போகிறார்கள். நகரமே அத்த நிகழ்ச்சியை எதிர்பார்த்திருக்கிறது. வாணியின் நிறைய அன்று பலிச்சிடப் போகிறது.

'வாணி! நீ வீணையில் அந்தக் கலே வாணியையும் மிஞ்சிவிட்டாய். எனக்குக் குருதட்சிணையாக என்ன தரப் போகிறாய்' கேசவராம் அவனைக் கேட்டு விடத் துடித்தார். குருதட்சிணையாக யாரிடமும் ஒரு சாக்லெட் ஏற்காத இவர், மனம் இன்று ஏன் இப்படி அடித்துக் கொள்கிறது?

''அவருக்குப் பணமும் பொருளும் எதற்கு? அவர் யாருக்காகச் சேர்த்து வைக்க வேண்டும்? அதனால்தான் காசு பணம் வாங்க மறுக்கிறார்! ''அவர் மகினி அமோரோடு இல்லையாமே? மற்றெருவராக இருந்தால் இன்னெரு கல்யாணம் செய்து கொண்டிருப்பார்கள்?''

''இன்னெரு கல்யாணம் செய்து கொள்ளா விட்டாலும் இன்னொருத்தியையாவது பிடித்திருப்பார்கள்!''

''பெண்கள் விஷயத்தில் அவர் மீது அப்படியுக்குச் சொல்ல முடியாது!'' இசை உலகப் பிரமுகர்கள் இரண்டு பேர் சேர்ந்தால் இப்படிப் பேசாமல் இருப்பதில்லை.

ஆலல், கேசவராமுக்குச் சோதனை ஏற்பட்டது. 'என் வாழ்க்கையில் கனவம் உண்டாக்க ஏன் இவள் வந்து சேர்த்தாள்?' என்று கேசவராம் தம்மைக் கேட்டுக்கொள்வார். வாணி வீணையுடன் வீட்டுக்குள் நுழையும் போது, 'ஐயோ, இவள் வராமல் இருக்க மாட்டாளா?' என்று அவருக்குத் தோன்றும். சற்றுத் தாமதமாக வந்தாலோ, இன்னும் வாணியைக் காணவில்லையே என்ற மனம் அலை பாயும். வாணியைப் போன்ற பெண் என் வாழ்வில் குணியிருந்தால் இன்னும் நான் இசை உலகில் முன்னேறி விடுவேன் என்று அடிக்கடி அவர் உள்ளம் எண்ணும்.

அதனால்தானோ வாணியின் முன் னேற்றத்துக்கு என்றும் சில திட்டங் களை அவளிடம் தெரிவிக்காமலே அவர் வருத்தார்?

தாம் வசிக்கும்போது தம் மாணவிகள் லெரையும் உடன் சேர்த்து வாசிக்கச் சொல்வார், அதில் அதிகப்பட்ச சந்தர்ப்பத்தை வாணிக்கு அளிப்பார்.

''ஸார், உங்களுக்கு எப்படி நன்றி சொல்வது என்றே தெரியவில்லை, ஸார். என்னையும் பெரிதாய் மதித்து நேற்று நடந்த இசை விழாவில் என்னையும் உடன் வாசிக்கச் செய்தீர்கள். இதோ பாருங்கள் ஸார், பத்திரிகைகள் என் போட்டோவைப் பிரசுரித்து ஒகோ என்று பாராட்டியுள்ளன'' என்று வாணி உணர்ச்சி வசப்பட்டுக் கூறி, அவரிடம் அன்று வந்திருந்த நான்கைந்து வார, தின இதழ்களைக் கொடுத்தாள். பத்திரிகையைக் கை நீட்டிப் பெறுவது போல் அவளுடைய விரல்களின் மென்மையைச் சிறிது நேரம் ஸ்பரிசித்தார். வாணி அதை உணர்ந்ததாகவோ உணராத தாகவோ புலப்படுத்திக் கொள்ள வில்லை.

''வாணி, என் கடமையைச் செய்தேன்'' என்று சிரித்தபடி கூறினார் கேசவராம். அந்தச் சிரிப்பில் உண்மை இல்லை.

''அப்படிச் சாதாரணமாகச் சொல்லி விட முடியாது ஸார், கடமைக்கும் மேலே ஏதோ ஒன்று இருப்பதாகத் தோன்றுகிறது ஸார்'' என்றாள் வாணி.

கேசவராம் இடுக்கிட்டார். தம் கள்ள மனம் அவளுக்குப் புரிந்து விட்டதோ? வாணியின் முகத்தை அவர் நிமிர்ந்து பார்த்தார்.

'வாணிக்குக் கல்யாணமாகியிருந் தால் அந்த மேனியில் புதுவிதப் பொலிவு ஏற்பட்டிருக்கும். இவ் வளவு வயதாகியும் கல்யாணம் செய்து கொள்ளாதது பொருளாதாரச் சங்கடமாகத்தான் இருக்கும். சமூகத்தில் பெண்கள் எவ்வளவு அறிவு பெற்றும் என்ன; கலே மேதையாக இருந்து என்ன? வரதட்சிணை, சீர் வரிசைக்குப் பணமில்லை விடில் கன்னியாகவே காலங் கழித்துச் சருகாக உதிர வேண்டியதுதான்! 'நாம் அவளை ஏற்றால் என்ன?' என்று அவர் எண்ணுவார்.

''தாங்கள் என்னைக் கலே உலகில் உயர்த்துவதற்கு நான் என்ன காணிக்கை கொடுத்து என் கடமையை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் ஸார்?'' என்று இதய பூர்வமாக வாணி ஒரு முறை கேட்டபோது, 'காணிக்கைதானே! உன்னையே எனக்கு அர்ப்பணித்து விடேன்' என்று கேட்டுவிடத் துடித்தார் கேசவராம். சொற்கள் தொண்டை வரை வந்து விடும். வார்த்தைகளே வெளி வரச் செய்யாமல் வெற்றிலே பாக்குடன் சேர்த்து விழுங்கி விடுவார்.

''வாணி, பாரதி இசை அரங்கில் ஒரு சங்கீதப் படம். ஆங்கிலப் படம். போகலாமா?'' என்று கேசவராம் கேட்டார். கூச்சத்துடன் வாணி மறுத்து விடுவாள் என்று நினைத்தார்.

சிறு குழந்தையைப் போல் அவள் கை கொட்டிக் குதித்து, ''நானே நினைத்தேன் ஸார், தவியே எப்படிப் போவது என்று? எவ்வளவு டிக்கெட் வாங்க வேண்டும் ஸார்?'' என்று உற்சாகமாகக் கேட்டாள்.

''மூன்று'' என்றார்,

அவரது கள்ள மனம் இயங்க ஆரம்பித்து விட்டது. இரண்டு ஏன்றல் வாணி உடனே ஏதாவது நினைத்து விடப் போகிறள் என்று 'மூன்று' என்றார்.

இப்பொழுது 'ஒ' என்று மெல்லத் தம் அதிர்ச்சியைக் கேசவராம் தெரிவித்துக் கொண்டார்.

வாணி விழிகளை மெல்லத் துடைத்துக் கொண்டாள். ''நான் சொல்லி விடத்தான் நினைத்தேன். ஆனால், உங்களுடைய கண்டிப்புக் குணத்தைக் கேள்விப்பட்டிருக்கிறேன். எப் பொழுதும் மங்கலமாக வீணையின் நாதத்தை மங்கையர் ஒலித்துக் கொண்டிருக்கும் உங்கள் இல்லத்தில் எனக்கு வீணை கற்றுக் கொடுப்பீர்களோ மாட்டீர்களோ என்ற பயத்தில் கூறாமலே. தங்களிடம் வீணை கற்றுக் கொள்வதில் நான் பெருமிழ்ச்சி யடைந்து வருகிறேன் ஸார். உங்களைப் பற்றிய மற்றொரு செய்தியை அறித்தபோது நான் மிகவும் வேதனையடைந்தேன்.

''தங்களைப் பிரிந்திருக்க உங்களால் கரம் பிடித்த அந்தப் புண்ணியவதிக்கு எப்படித்தான் ஸார் மனம் வந்தது? நானும் ஒரு பெண் தானே! என்னுல் அவளுடைய மனசைப் புரிந்து கொள்ள முடியவில்லை ஸார். கலே உள்ளமே உங்கள் மனைவிக்குக் கிடையாதா ஸார்? உங்களால் அதை எப்படித் தாங்கிக் கொள்ள முடிகிறது? அங்கேதான் உங்கள் நாதோபாசனை பலப்படுகிறது. மனைவி பிரிந்து விட்டால் நாலு பேர் நாலு விதமாகப் பேசுவார்களே; அலல் உங்களிடம்தான் யாரும் தவருகப் பேசாததே உங்கள் பண்பை உயர்த்திக் காட்டுகிறது, ஸார்!'' வாணி மெல்லத்தான் பேசினுள். குரலில் வீரல் தெரிந்தது.

கேசவராமின் உடல் சிலிர்த்தது. ''ஸார், ஸார்! நான் இங்கேயே இறங்கிக் கொள்கிறேன். இப்படி இந்தச் சந்தில் திரும்பினுல் என் வீடு. சந்துக்குள் கார் போகாது. எங்கள் வீட்டுக்கு ஒரு நாள் நீங்கள் வர வேண்டும். என் அம்மாவிடம் உங்களைப்பற்றி நிறையச் சொல்லி யிருக்கிறேன் ஸார். உங்கள் பாதம் பட்டால் எங்கள் குடிசை புனித மடையும்.'' - வாணி உரைச்சி வசப் பட்டுப் பேசினுள். அப்பொழுதே அவளுடன் இறங்கிவிட வேண்டும். உடனே அவளுக்கு கை கோத்துக் கொண்டு அவள் வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்ற பரபரப்பு ஏற்பட்டது. வாணி கை கூப்பி வணங்கி விடைபெற்று, சந்தில் நுழைந்து மறைந்தாள்.

இரவெல்லாம் கேசவராமுக்குத் தூக்கம் வரவில்லே. மணி ஒன்று, இரண்டு, மூன்று அடித்தது. மின் விசிறி சுழன்று அவருக்கு வியர்த்துக் கொட்டியது. வாணியை அவள் வீட்டில் இறக்கி விட்டிராமல் இங்கேயே அழைத்து வந்திருக்கலாம். இரவெல்லாம்வீணை நினைக்கச் சொல்லிக் கேட்டு மகிழ்ந்திருக்கலாம். பிறகு அதிக நேரம் அங்கிருக்கும்; அவள் பறவைக் குஞ்சைப் போல் என் அணைப்பில் உறங்கிக் கொண்டிருப் பாள். அதெப்படி..? அவ்வளவு எளிதில் என் இச்சைக்கு இசைந்திருப் பாளா? அவள் பலவீனமுடையவளா? கணவனே இறந்தவள் என்பதற்காக அவளே எளிதில் வசப்படுத்திவிட முடியுமா? நியாயமா?

ஜன்னலே வெறித்து மனமே வென்று அந்த வீட்டினுள்ளே பரவிட்டது. சமையற்காரர் வந்து எழுப்பிய பிறகே நேரம் நாலே முக்கால் வீட்டதை அவர் உணர்ந்தார்.

''ஸார்! பாட்டுக்கு எல்லாரும் வந்து விட்டார்கள்.'' சமையற் காரர் கதவுக்குகிலிருந்தே மெல்லக் குரல் கொடுத்தார். கேசவராம் இவ் வாறு நீண்ட நேரம் உறங்கியதை அவர் இதுவரையில் கண்டதில்லை. கேசவராம் எழுந்து வெளியே வந்தார். கூடத்தில் சில மாணவிகள் கலகல வென்று பேசிக்கொண்டிருந்தார்கள். சுருதி கூட்டினர் சிலர். ஊஞ்சல் அருகே வாணி பளிச்சென்று நின்றிருந்தாள். அவள் முகத்தில் வழக்கத்தை விடத் தெளிவு இருந்தது. ஒரு விதப் பரபரப்பும் இருந்தது. கையில் செய்தித்தாள் இருந்தது.

''ஸார்! செய்தியைப் பார்த்தீர் களா? உலக இசை விழாவுக்குப் பாரத நாட்டிலிருந்து செல்லும் குழுவுக்கு உங்களைத் தலேவராகத் தேர்ந்தெடுத் திருக்கிறார்கள். வாணியின் குரலில் ஒலித்த மகிழ்ச்சியும் குதூகலமும் மிக நெருங்கிய பாவத்தைப் புலப் படுத்தின. கேசவராம் புன்னகை யுடன் அவளே நோக்கினர்.

''ஸார், பாரிஸ் நகரத்தில் நடக் கும் விழாவில் முதல் நாள் உங்களு டைய வீணைக் கச்சேரிதான்.''-வாணி பூஜை அறை வாயிலுக்கே சென்று குரல் கொடுத்தாள்.

''ஹோப்பா பயணத்தில் தாங் களுடன் வாசிக்க யாரை அழைத்துச் செல்லப் போகிறீர்கள்?'', வாணி விழிகளைச் சுழற்றி, உயர்த்தி நிமிர்த்திக் கேட்டாள்.

கேசவராம் ஏதும் பேசவில்லே. அவர் உள்ளம் இரட்டிப்பு மகிழ்ச்சி யில் ஊஞ்சலிட்டது.

''ஆமாம்; உடன் சேர்ந்து வாசிக் கத் திறமை மிகுந்த ஒருவரை அழைத்



''குண்டு மாப்பிள்ளே வந்தாச்சு, வந்தாச்சு என்கிறீர்களே, மாமா! கிண்டலா? வத்தல குண்டு மாப்பிளேன்னு சொன்னுளென்ன?''

கோபால் பல்பொடி



பாக்கெட் விலை 40 காசுகள்

ஜெட் பல்பொடி



பாக்கெட் விலை 15 காசுகள்

வாங்கி உபயோகியுங்கள்!

தயாரிப்பாளர்கள்: **S. P. S. ஜெயம் & Co.**

மதுரை - 625001.

— மினர்வா

NOVINO
Packs more power. And packs it better.



NOVINO
The better battery.

Lakhanpal NATIONAL Limited, Makarpura Industrial Area (GIDC), Baroda 390 010 (Gujarat).

துச் செல்லலாம். மணியை அழைத்துச் செல்லலாம். மணி! அவள் கொடுத்து வைக்காதவள்.'' கேசவராம் தமக்குத் தாமே பேசிக் கொண்டார்.

'அவளாற கொடுத்து வைக்காதவள்? நான்தான் கொடுத்து வைக்காதவன். புகழ் சேர்ந்து வரும் போது, மணியிடமன் அருபவிக்கக் கொடுத்து வைக்காதவன்.

'ஏன் கொடுத்துவைக்கவில்லை? சௌம்யா இல்லாவிடில் வாணி இருக்கிறாளே..' அவர் உள்ளத்தின் ஒரு மூலையில் குரல் ஒலித்தது.

'ஓகோ! இந்த மகத்தான சந்தர்ப்பத்தை வாணிக்கு ஏன் அளிக்க வேண்டும்? அதனல் எனக்கு என்ன லாபம்? சொல்லப் போனல் நாலு பேர் நாலு வார்த்தை சொல்லத் தொடங்கி விடுவார்கள். கட்டிய மணியைத் தள்ளி வைத்து விட்டு யாருடனோ உலகம் சுற்றக் கிளம்பி விட்டார் என்பார்கள். அதற்கு இடம் கொடுக்கலாமா? என்றுமே என் உடலிருந்து வாழ்க்கை நாதத்தை மீட்ட வாணி சம்மதித்தால் அவளே ஏற்றுக் கொள்ளலாம். வாணி சம்மதிப்பாளா?'' கேசவராம் அவளிடமே கேட்டு விட விரும்பினர்.

''ஓ! உலகப் பயணமா? அதைப் பற்றிப் பிறகு பேசுவோம். இசை நிகழ்ச்சிகளில் சுச்சேரி செய்ய இன்னும் கடுமையான சாதகம் செய்ய வேண்டும் வாணி!'' என்றார் கேசவராம். ஒரு துண்டிலிப் போட்டுப் பார்த்தார்.

வாணி பரபரப்படைந்தாள். கடுமையான பயிற்சிக்குத் தான் தயாராக இருப்பதாவும் அலுவலக வேலை முடிந்ததும் மாலையில் வந்து அவரிடம் பாடம் கேட்பதாவும் சாதகம் செய்வதாகவும், எவ்விதமான கடின உழைப்பையும் ஏற்கத் தயாராக இருப்பதாகவும் வாணி தெரிவித்தாள். அந்தக் குரல் வேண்டுகோளாகவும் இருந்தது, மன்றுவதாகவும் இருந்தது. அதில் மிக நெருக்கம் தொனிப்பதாகக் கேசவராமுக்குத் தோன்றியது.

வழக்கம்போல் வாணி அன்று மாலையும் வீணை சாதகம் செய்ய வந்தாள். அன்று அது நேர்ந்துவிட்டது. அவர் மனக்கடல் கொந்தளித்துக் கொண்டிருந்தது. துவா மாத வானம் போல் நிர்மலமாயிருந்த மனவெளியில் கரிய மேகங்கள் அடராயின.

வெளியே வானமும் மூட்டமாக இருந்தது. காற்று மழையை வரவேற்க மங்கலக் கீதம் இசைத்துக் கொண்டிருந்தது. பனிச் சென்று மின்னல் கொடி வானத்திலிருந்து பூமிக்குச் சேதி சொல்லத் தாவியது. பயங்கரமான இடி முழக்கம்.

கேசவராம் புதிய பாடலுக்கு ஸ்வரப்படுத்திக் கொண்டிருந்தார். வாணி அந்தப் பாடலை எடுத்துக் கொடுத்திருந்தாள். மேல் நாட்டு ரசிகர்கள் அந்தப் பாடலை இசையுடன் கேட்டால் நன்கு ரசிப்பார்கள் என்று வாணி சொன்னுள்.

'நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறிவது துன்டோ..?

கேசவராமின் மெய் சிலிர்த்தது. அவர் அதை அற்புதமாக வீணையில் மீட்டினார். வாணி அதை கவனித்துக் கொண்டிருந்தார். அவர் விரல்கள் விரையும் அழகும், தவழும் நேர்த்தியும், நுள்ளும் அசையமும் வாணிக்கு ஒரு தெய்வ சந்நிதியில் இருப்பதைப் போல் தோன்றியது.

பாட்டு முடிந்தது. வாணி அவருடைய கரத்தை எடுத்துத் தன் விழிகளில் ஒத்திக் கொண்டாள்.

''ஸார், நான் தேவலோகத்தில் சஞ்சரித்தேன் ஸார். அன்னத்தின் தூவியால் ஆன சமரத்தை அங்கு விரிஞர்கள். பன்னீரும், சந்தனமும், செம்பருக்குக் கும்பமுமாகப் பெய்யப் பட்ட அந்த மாரியில் நான் நனைந்தேன் ஸார். நான் பெரும் பாக்கியசாலி ஸார். உங்களுடன் உலக அரங்கிலே உட்கார்ந்து வீணை மீட்டப் போரும் வாய்ப்பை எனக்கு நீங்களே அளிப்பீர்களா ஸார்?'' வாணி உணர்ச்சிப் பெருக்கால் கண்ணீர் விட்டாள்.

கேசவராம் பதில் பேசவில்லே. ''உம்.. நீ கவனமாக இந்தப் பாட்டுலேக் கேட்டு வந்தாய் அல்லவா? எங்கே நீ இப்போது தவறு பிறகும் இல்லாமல் வீணையில் மீட்டு'' என்று மட்டும் கூறினர். செல்லில் கம்பீரம் இல்லே. கபடம் இருந்தது.

வாணி விழிகளைத் துடைத்துக் கொண்டாள். தலேப்பைச் சரி செய்தாள். குழந்தையை அலேப்பது போல் வீணையை அணேத்தாள். அவள் விரல்கள் இயங்கின. அவள் தன்னே மறந்து வாசித்தாள்.

வெளியே மழை பெய்து கொண்டே இருந்தது. பெரிய முள் மெல்ல வலம் வந்து கொண்டிருந்தது. பத்து, பதினென்று என காலம் ஓடியது.

கேசவராம் சுரவொலி எழுப்பினர். ''சபாஷ் வாணி, அற்புதம். உன் விரல்களில் இவ்வளவு பெரிய சக்தி மறைந்திருப்பதை இப் போதுதான் புரிந்து கொண்டேன். அந்த ஜீவ ரகசியத்தை நான் பார்க்க வேண்டாமா?'' வாணியின் விரல்களேத் தம் விழிகளுக் கருகே கொண்டு செல்லத் துடித்தன, அவர் கரங்கள்.

''ஸார், நீங்கள் இட்ட பிச்சை. எனக்குப் புகழ் தேடித் தர நீங்கள் முனேந்திருக்கும் செயலுக்கு நான் என்ன உபகாரம் செய்யப் போகிறேன் ஸார்?''

கேசவராம் பதில் சொல்லவில்லே. அவரே உற்றுப் பார்த்துக்கொண் டிருந்தார். அவர் கண்களுக்கு அவள் ஒரு தேவதையைப் போல் அப் போது தோன்றினுள். தேவதை அவரை அழைக்கிறுள். நன்றிக் கடனேத் தீர்த்துக் கொள் என்று விழியால் அழைக்கிறுள்.

'கொல்லடி சிவசக்தி எனக் சுடர் மிகு அறிவுடன் படைத்து விட்டாய்' பாடல் வரிகள் ஒலித்தன.

வெளியே மழை கடுமையாகப் பெய்தது. பனிரென்று மின்னல். மின் விளக்குகள் படீரென்று அணைந்தன.

மெழுகுவர்த்தியின் ஒளியில் அந்தக் கூடத்தில் அவருடைய நிழல் பயங்கரமாகக் தெரிந்தது. வாணி வெளியே எட்டிப் பார்த்து விட்டு வந்தவள் திகைத்தாள். ''மழை நிற்கவில்லே ஸார்!''

''நீ வீட்டுக்கு எப்படிப் போவாய் வாணி?'' அவர் குரலில் ஒலித்தது பரிவா, போலித்தனமா?

''போக முடியாது போலிருக்கு. அம்மா கவலேயுடன் இருப்பாள். என்ன செய்வது ஸார்?'' வாணி கையைப் பிசைந்து கொண்டாள்.

''வாணி, நீ அந்த அறையில் படுத்துக் கொண்டு விடு.''

கேசவராம் தம் விகார மனத்தின் நிட்டத்தை நிறைவேற்றும் முதல் படியைத் தயார் செய்து விட்டார்.

'வல்லாமை தாராயோ..' பாடல் ரிங்காரமிட்டது.

மணி பன்னிரண்டு, ஒன்று. கேசவராம் ஊஞ்சலில் படுத்திருந்தவர் மெல்ல எழுந்தார். ஊஞ்சல் கிரீச்சிட்டது. வாணியின் அறையை நோக்கி மெல்ல அடிமேல் அடி வைத்துச் சென்றார்.

அறைக் கதவு தாளிடப்படவில்லே. தம் மீது அவ்வளவு நம்பிக்கையா அவளுக்கு? அல்லது அவளுக்கும் என்னைப் போல் ....

கேசவராம் மெல்ல அடி எடுத்து வைத்தார். மின்னல் வெளிச்சத்தில் கட்டிலில் வாணி ஒரு புறமாகப் படுத்திருப்பது தெரிந்தது. அந்தத் தோற்றம் ஒரு வீணையைப் போலிருந்தது. அவள் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள். கேசவராம் கட்டிலருகே சென்று ஒரு நொடிகள் அவளேயே உற்றுப் பார்த்தார். மனசு அவரைப் படாதபாடு படுத்தியது.

அவர் குனிந்தார். அவள் கூந்தலே வருடினர். புருவங்களேத் தடவினர். நாசி, இதழ்கள், சங்குக் கழுத்து என்று அவருடைய கரம் நடுக்கத்துடன் இறங்கியது. வெறியின் உச்சநிலேயில் அவர் வீணையைத் துக்குவதுபோல் அவளேத் தூக்கினர்.

பயங்கர இடி ஒன்று உலகமே தவிடு பொடியாவதுபோல் இடித்தது. ஜன்னல் கண்ணுடிகள் 'கிளிங் கிளிங்' என்று அதிர்ந்தன.

எங்கிருந்தோ வீணையின் நாம் கணீரென்று ஒலித்தது.

'நலங்கெடப் புழுதியில் எறிவ துண்டோ சொல்லடி சிவசக்தி - எனச் சுடர் மிகு அறிவுடன் படைத்துவிட்டாய் வல்லமை தாராயோ? இந்த மாதிலம் பயனுற வாழ்வதற்கே..' கேசவராம் வாணியை அப்படியே கட்டிலில் கிடத்தி விட்டார். அவர் மேனி நடுங்கியது. மழையில் நனேந்தது போல் அவர் உடல் தெப்பமாக நனேந்துவிட்டது.



ஒரே எட்டில் ஊஞ்சல் அருகே வந்தார். குங்குமப் பழத்துக் தண்ணை இருமுறைப் பலகையில் மோதிக் கொண்டார். ரத்தம் சிந்தது. அவர் தலை சுற்றியது. அப்போதும் அவர் செவிகளில், 'நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறிவ துண்டோ?' என்ற பாடலின் அடிகள் ஒலித்துக் கொண்டிருந்தன. இமைகள் கனத்தன. அவர் தம்மை மறந்தார்.

எங்கோ பூபாளம் ஒலித்தது. கேசவராம் விழித்துக் கொண்டார். மழை விட்டிருந்தது. கேசவ ராம் தள்ளாடியவாறு எழுந்து குளியலறைக்குச் சென்று குடம் குடமாக நீரைத் தலையில் ஊற்றிக் கொண்டார். ஈரத்துணியுடன் பூஜை அறைக்குள் நுழைந்தார். கர்ப்பூரக் கட்டியைப் பெரிதாகக் கொளுத்தினார். அக்கினி ஜ்வாலையாக அது எரிந்தது.

''சிவசக்தி! என்னைக் கர்ப்பாற்றிவிட்டாய் தேவி அதளபாதாளத்தில் விழ இருந்த என்னைச் சட்டென்று தாங்கிக்கொண்டாய் அம்மா. இருந்தாலும் இந்தக் கரங்களுக்கு என்ன அவசரம்? வைத்த விலைவங்களே மீட்டும் இந்த விரல்கள் ஒரு கணத்தில் பாவம் செய்ய முனைந்துவிட்டனவே. அவனே ஸ்பரிசிக்க இந்த விரல் களுக்கு யார் உத்தரவுகொடுத்தது? இதற்குத் தண்டனை தரவேண்டும்'' என்று எரியும் கர்ப்பூர ஜ்வாலையில் விரல்களை நிட்டினார்.

''போதுமா? போதுமா? ஜீவநாதம் ஏற்படுத்தும் விரல்களே! சிறிது காலத்திற்கு வீணையைத் தொடா தீர்கள். அதுதான் தண்டனை'' என்று கூறி நெடுஞ் சாண்டையாகச் சிவ சக்தி படத்தின் முன்னால் விழுந்தார்.

வாணி வந்து அவரை எழுப்பிய பிறகே அவர் சுய நினைவடைந்தார்.

''ஸார், நான் அதிகாலையிலேயே எழுந்து, உங்களைத் தொந்தரவு செய்யக் கூடாதென்று வீட்டுக் குப் போய்க் குளித்து விட்டு வந்தேன். நீங்கள் ஊஞ்சலில் உறங்கிக்கொண் டிருந்தீர்கள். நான் உறங்கிவிட்டேன். பெரிய இடியா இடித்தது. பேய் மழை கொட்டிக்கொண்டே இருந்தது. எல்லாம் சொப்பனம்போல் இருந்தது ஸார். நான் இடிக்கு மிகவும் பயந்து விடுவேன் என்று என்னை வந்து பார்த்தீர்களா ஸார்! என் அப்பா அப்படித்தான் ஒரு தடவை இடி இடித்தபோது குருவிக் குஞ்சைப் போல் என்னை அணைத்துக்கொண்டார். மறுபடியும் அப்பா நேற்று வந்ததைப் போல் தோன்றியது ஸார்.''

கேசவராம் பதில் பேசவில்லை. வாணி அவரைப் பார்த்தாள். அவர் கை விரல்களைப் பார்த்தாள். ''ஐயோ விரல்கள்..'' என்று பதறிப் போனாள்.

விரல்களுக்கு மருந்திட்டவாறு வாணி கண்ணீர் சிந்தினாள். ''விரல்கள் இல்லாமல் எப்படி ஸார் வீணை மீட்டுவீர்கள்?'' என்று புலம்பினாள்.

''போஸ்ட்'' என்ற குரல் வாசலில் கேட்டது. விமானத் தபால் அவர் பெயருக்கு வந்திருந்தது. அவருக்குப் புரிந்த தெரிந்த பழக்கமான கையெழுத் தாக இருந்தது.


''வாணி, பிரித்துப் படி.''

வாணி படித்தாள். வாணியின் முகம் மலர்ந்தது. கேசவராமின் அகமும், புறமும் மலரும் ஒரு செய்தி. அவள்—சௌம்யா புறப்பட்டு வருகிறாள், அமெரிக் காவிலிருந்து. அவருடன் உலகப் பயணத்தில் சேர்ந்து கொள்ள.

தனவனுக்குப் புகழும் பணமும் ஏராளமாக வருகின்றன என்று கேள்விப்பட்டால், எந்த மனைவி தயங்கி நிற்பாள்?

''வாணி, மாணவிகளுக்கு இரண்டு மாத விடுமுறை என்று சொல்லிவிடு'' என்று கூறிய கேசவராம் விழிகளில் நிம்மதி பூத்தது. ✻

பம்பாயில் கணேச உற்சவம்



விநாயக சதுர்த்தியை இந்தியா முழுதும் கொண்டாடினாலும் மாநிலத்துக்கு மாநிலம் கொண்டாட்டத்தில் வேறுபாடு காண்கிறது. அதேபோல் விநாயகர் பற்றிய புராணக் கதையிலும் சில மாற்றங்கள் காண்கின்றன.

தென்னிந்தியாவில் விநாயக சதுர்த்தியைப் பூஜை என்ற அளவில்தான் கொண்டாடுகிறோம். வட இந்திய மாநிலங்களில், வங்காளம் தவிர, அதுவும் மகாராஷ்டிரத்தில் உற்சவமாகப் பெரிய அளவில் கொண்டாடுகிறார்கள். நிறைய பேர் வண்ண வண்ண ஆடை தரித்து, சிறியவர்களும் பெரியவர்களும் மகிழ்ச்சி ஆரவாரத்தில் மிதக்கின்றனர்.

வீட்டுக் கொண்டாட்டமாக இல்லாமல் தேசீய விழாவாகக் கருதி, லட்சக் கணக்கில் பணம் வசூல் செய்து, பிரம்மாண்டமான விழாவாகச் சதுர்த்தியைக் கொண்டாடுகிறார்கள். மகாராஷ்டிரத்தில் விநாயகர் வண்ணப் பொலிவிலும் அலங்காரச் சிறப்பிலும் சிறப்பாகக் காட்சியளிக்கிறார்.



பபூன் போன்ற வேஷத்தில்கூடக் கணபதியை வண்ணத்தில் தயாரித்து வணங்குகிறார்கள். வண்ணத்திலும் மண்ணிலும் விதவிதமான விநாயகரை உருவாக்கிப் பூஜை செய்வதும் அலங்கரித்த தேர்களில் வீதியுலா எடுத்துச் செல்வதும் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது. பம்பாய் வீதிகளில் செல்லும் விநாயகப் பெருமானின் வீதி உலாவை லட்சக்கணக்கான மக்கள் கண்டு களிக்கிறார்கள்.

பார்வதி, தான் நீராடும்போது யாரும் வராமல் காக்க, ஓர் உருவை உண்டாக்கி, தன் மகனைப் போலவே அன்பு பாராட்டினாள். இமாலயத்தில் தவம் செய்த பரமசிவன் பார்வதியைக் காண வந்தபோது, விக்கினேசுவரர் பரமசிவனைத் தடுத்து நிறுத்திவிடுகிறார். 'தம்மைத் தடுக்க இவள் யார்?' என்ற கோபத்தில், விநாயகர் தலையைச் சீவிவிடுகிறார். தன் மகனைக் கொன்றுவிட்டதை அறிந்ததும் பார்வதி துடிதுடிக்கிறாள். சிவபெருமான் யானையின் தலையை விநாயகருக்குப் பொருத்திவிடுகிறார். இப்படி ஒரு கதை.

விநாயகரின் அறிவாற்றலை உணர்ந்த சிவபிரான் அவரைக் கணங்களுக்குத் தலைவராக்குகிறார். அது முதல் விநாயகரின் பெருமை உயர்கிறது. ''எந்த நல்ல காரியங்களைத் தொடங்கினாலும், உன்னைத் தொழுதே தொடங்கவேண்டும். அப்போதுதான்



விக்கினம் இன்றிக் காரியம் நிறைவேறும்'' என்று பார்வதி மகனுக்கு ஆசி வழங்குகிறாள்.

'ஓங்கார நாதந்தான் பிரபஞ்ச தோற்றத்துக்கே மூலகாரணம். அதேபோல் ஓங்கார சொரூபியான கணபதியே எல்லாக் கடவுளர்க்கும் முதல்வர்' என்றும் மகிமைகள் அருள் புரிகிறாள். பரமசிவனுக்கே இதைக் கேட்டு ஆச்சரியமாகிவிட்டது.

இதிலிருந்துதான் இந்துக்கள், 'விநாயகரைத் தொழாமல் எந்தக் காரியத்தையும் தொடங்குவ தில்லை.' 'சுணேசாய நம:' என்று கூறி வணங்கியே தொடங்கும் வழக்கம் ஏற்பட்டது.

ஒடிந்த தும்பிக்கை ஏன் கணபதிக்கு இருக்கிறது?

கணபதிக்குத் தித்திப்பு என்றால் மிகவும் பிடிக்கும். லட்டுக்களை அளவில்லாமல் ஒரு சமயம் தின்றுவிட்டார். அதனால் அவர் வயிறு வெடித்து லட்டுகள் தரையில் விழுந்து உருண்டன. அதைப் பார்த்த சந்திரன் விண்ணிலிருந்து சிரித்தான். கோபம் கொண்ட கணபதி தன் துதிக்கையை ஒடித்து அவனை அடித்தார்.

சாதனை, அறிவு என்ற குணத்தைக் குறிக்கும் வகையில் சித்தி புத்தி என்ற இரு மனைவியர் கணபதிக்கு உண்டு என்றும் சொல்வார்கள். முருகனும் கணபதியும் உலகம் சுற்றிய கதையும் இங்கே வழங்குகிறது.

பெருமாள் கோயில்களிலும், சேனைத்தலைவராக, விச்வக்சேனர் என்ற நாமத்துடன் கணபதியைப் பார்க்கலாம். அவர் திருக்கரம் ஒன்றில் காணப்படும் மாதுளை, பூர்ணம், செழிப்பு, அபரிமிதம், வளம் என்பவற்றின் சின்னமாக விளங்குகிறது. தடைகளை அகற்றுபவர் என்பதை வேழமுகம் காட்டுகிறது, எடுத்த காரியத்தில் வெற்றி உண்டாக ஏகதந்தனின் அருள் வேண்டும். மோதகம் கணபதிக்கு உகந்த நைவேத்தியம்; அது பூர்ணத்தைக் காட்டும் அடையாளம். வலம்புரி விநாயகர் வரப்பிரசாதியாக விளங்குவார். அவரை வைத்துப் பூஜிக்க அதிக நியம நிஷ்டைகள் வேண்டும். பூஜை முறையில் ஏதாவது ஒரு குறை ஏற்பட்டாலும் வலம்புரி விநாயகர் பெரிதும் அதிருப்தியடைவார் என்றும் கூறுகிறார்கள்.







விநாயகப் பெருமானின் துதிக்கை வளையாமல் நேராக அமைந்திருப்பது ஞானத்தைக் குறிக்கிறது. ஞான கணபதி என்பார்கள். இந்த வகைக் கணபதியை அரிதாகத்தான் காண முடியும்.

இந்திய மக்களின் வாழ்க்கையிலும் மதத்திலும் விநாயக தத்துவம் ஒன்றிக் கலந்திருக்கிறது. ஷோடச கணபதி என்ற முக்கியமான பதினாறு கணபதி நாமங்களைச் சொன்னாலே கணபதியின் அருளைப் பெறலாம்.

குழந்தைக் கணபதியை, கருடன் அநாயாசமாகத் தோளில் தூக்கிச் செல்வதுபோல் இருக்கிற சிலையைப் பாருங்கள். சவாரி செல்லும் கணபதியின் முகத்தில் ஏன் சந்தோஷம் கரைபுரளாது! வண்ணத்தாலும் பூவாலும் அலங்கரித்த விநாயகரைத் தலையில் சுமந்து செல்வதில்தான் எத்தனை போட்டி! தெருவோரத்தில் கோயில் கொண்டிருக்கும் விநாயகரைத் தன்னிச்சையாகக் கைகுவித்து வணங்கிப் போவது நம் இரத்தத்தில் ஊறிய வழக்கம்.

காலத்துக்கு ஏற்றாற்போல் எட்டு அடி உயரக் கணபதியைக் கூட கணேச உற்சவத்தின்போது தயாரிக்கிறார்கள். வண்ண வண்ண மின் விளக்குகளைப் போட்டு எவ்வளவு கவர்ச்சியாகக் கொண்டாடுகிறார்கள்! சினிமாக்காரர்கள் தாம் எத்தனை விதவிதமாக விநாயகரை





உருவாக்குகிறார்கள். கலைஞர்கள் போட்டி போட்டுக் கொண்டு, ஆயிரக்கணக்கில் செலவழித்துப் புதுப் புதுவித விநாயகப் பெருமானைத் தயாரித்துக் கொண்டாடுகிறார்கள். சென்ற ஆண்டு மட்டும் மகாராஷ்டிரத்தில் ஆறுயிரம் கணபதி உருவங்களைப் பூஜை முடிந்து கடலில் முழுக்கினார்களாம்.

நிபுவளியைவிடக் கணேஷ் சதுர்த்திக்கு முன்பு தான் வீட்டைச் சுத்தம் செய்து வண்ணம் அடிக்கிறார்கள். கணேஷ் உற்சவத்தைச் சாரஸ்வத பிராமணர்கள் மிகவிமரிசையாகக் கொண்டாடுகிறார்கள். இரண்டாம் நாள் கீர் என்ற அரிசிப் பணியாரத்தை விநாயகரின் வாகனமான மூஞ்சூறுக்கு நைவேதனம் செய்கிறார்கள்.

பம்பாயில் இரண்டு நாள்முதல் பத்து நாள் வரை சதுர்த்தியைக் கொண்டாடுகிறார்கள். கடலில் மூழ்கச் செய்ய மேளதாளத்துடன் எடுத்துச் செல்கையில் இளைஞர்கள் நடனமாடிக்கொண்டே செல்வார்கள். பஜனைகள், வேத பாராயணங்கள் எல்லாம் தொடர்ந்து போகும். சௌபாத்திக் கடற்கரையில்தான் பெரும்பாலும் கணபதிச் சிலைகளை விஸர்ஜனம் செய்கிறார்கள். விஸர்ஜனம் செய்வதற்குமுன் கொஞ்சம் களிமண்ணை எடுத்துக்கொள்வார்கள். வெல்லப் பிள்ளையாரைக் கிள்ளி அவருக்கே நைவேத்தியம் செய்வதுபோல் என்று சொல்வார்கள். அதைப் போல அந்தக் களிமண்ணைப் பிரசாதமாகப் பத்திரப்படுத்தி வைத்திருந்து அடுத்த ஆண்டு விநாயகர் சிலை தயாரிக்கும் போது உபயோகப்படுத்திக் கொள்வார்கள். 'ஓம் கணேசாய நம:' என்ற கோஷம் லட்சக்கணக்கான மக்களின் மனமாசுகளைப் போக்கி, புத்துணர்ச்சியை அளிக்கும்.

வண்ணப் படங்கள்: பங்கஜ் ஷா

போட்டோக்கள்: கரன் காபூர்

Courtesy: The India Magazine, New Delhi.



நளினி காந்தி

லட்சுமி ராஜாத்தினம்



பல்கலைக்கழகத்திலிருந்து வீடு திரும்பியதுமே காபியுடன் கடிதத்தையும் கொண்டுவந்து வைத்தாள் அத்தை. ஓரத்தில் நீலமும், வெப்பும் வரியிட்ட மேல்நாட்டுக் கடிதம். அதைப் பார்த்ததும் இரவில் இரகசியப் பேட்டகத்தைத் திறந்து இதழ் விரிக்கும் மலர்களைப் பவானியின் இதயம் விரித்தது.

''தீபாவளிக்கே ராம் வந்துடருமும்'' என்று கூறிக் கொண்டே போனுள் அத்தை.

ஐந்தாண்டுகளின் பிரிவு சாதாரண மானதா என்ன? அதுவும் ஒரே மகன். ராம் இத்தாலிக்குப் போனதுந்தான் பவானி அத்தையிடம் வந்தாள். ஒவென்று அடிக்க வரும் பெரிய வீட்டின் தனிமையைப் பவானியின் நடமாட்டம் குறைத்தது. பவானியால் சும்மா இருக்க முடியவில்லே. ஆராய்ச்சிப் படிப்பைத் தொடர்ந்தாள். வீணை கற்றுக் கொண்டாள்.

''அத்தை, அத்தானுக்கு நளினை காந்தி ராமம் ரொம்பப் பிடிக்கும் இல்லியா?''

''வீணையிலே சரளி வரிசை வாசிக்காலே புண்ணியம் பவா. அதிலேயும் ராமுக்கு வீணைன்னு உயிர். ஆசைப்பட்டுக் கத்துண்டான். ஒண்ணு ரெண்டு கச்சேரியும் பண்ணினன். இப்ப எல்லாத்தையும் மறந்து போயிருப்பான். ஐந்து வருஷம் ஆச்சே!'' என்று அத்தை நெட்டுயிர்ப்பாள்.

தீபாவளிக்கு ராம் வருவதென்றால் இன்னும் பதினைந்தே தினங்கள் தான் இருக்கின்றன. அவள் கடை கடையாக ஏறி இறங்கினுள். வண்ணப்பாக்களை வாங்கி வந்தாள். சுவரோரங்களிலும் நடுக் கூடங்களிலும் வண்ணக் கோலங்களைத் தீட்டினுள். திரைச் சீலைகளை மாற்றி, சோபாக்களைச் சரியான இடம் பார்த்துப் போட்டாள்.

அவளுடைய இள மனத்தின் தவிப்புக்களை ரசித்தவாறு போனுள் அத்தை மங்களா.

''மேல்நாட்டில் இருந்தவர். இதெல்லாம் ரசிக்குமா?'' என்று அத்தையிடம் கேட்டாள் நிடரென்று.

''அன்பு மனசிலேதானே இருக்கு, பவா. அதுக்கு மேலும், கிழ்நாடுன்னு பேதம் உண்டா?'' என்று அத்தை கேட்டதும் பவானி முகம் சிவந்து போனுள்.

இதையேதான் ராம் மோனியா விடம் கூறினுள்.

''மோனி, சம்பிரதாயங்கள் வேறு படலாம். இதய ஒற்றுமைக்கு இடம், பொருள் ஏது?''

''இதனுல் தானே தங்களுடன் இந்தியாவுக்கு வரத்தயார் ஆனேன்!'' மோனியா அவனுடன் ஒன்றுக வேலே செய்தவள். இருந்த ஒரே அண்ணனும் இறந்து விட்டதே தனியாக நிற்கும் மோனியா கலங்கிப் போனுள். புகை படிந்த தெளிவில்லாத உருவமாக அவளுக்கு உலகம் தோன்றியது.

''மோனியா, துணிவை இழக்கக் கூடாது. நீ வேலேக்கு வா.''

மோனியா தனிமைத் துயரில் தவித்த கணங்களில் ஆதரவாக நின்றவன் ராம். அவளுடைய மாளாத் துயரைத் தீர்க்க முனேந்தவன். மாளாக் காதல் நோயாளன் ஆனன். அவன் எந்த நேரத்திலும் இந்தியாவுக்குத் திரும்பி விடலாம் என்பது அவளுக்குத் தெரியும். ஒரு முடிவுக்கு வராமல் தவித்தாள். தன் மண்ணே விட்டுப் போவதா?

அவனுடைய நண்பன், அனித்த விருந்துக்குப் போய் விட்டு அவர்கள் திரும்பிய போது தான் அவன் கேட்டான்.

''மோனி, வெகு விரைவில் தான் இந்தியா திரும்ப நேரிடும். நீ என்ன செய்யப் போகிருய்?''

அவனுடைய மனசு சஞ்சல சுபாவம் உடையது. ஒரு முடிவுக்கு வராமல் குழம்பினுள். சற்று யோசித்துவிட்டு, ''நீங்கள் இல்லாமல் என்னல் இருக்க முடியும் என்று தோன்றவில்லே. நானும் வந்து விடுகிறேன்'' என்ருள்.

''முடிவான பதில்தானே?''

அவள் சிரித்தாள். இதற்குப் பின் அவன் பட்ட சிரமங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. சின்னப் பெட்டிகளில் தங்கள் உடமைகளே அடக்கிக் கொண்டு கிளம்பிய போது, கணவனின் புதிய உலகத்தைக் காண அவள் துடித்தாள்.

நினேத்து நினேத்து ஏங்கிய நாட்களுக்கு மட்டம் போட்டுவிட்டுக் கடை கடையாக ஏறி இறங்கினுள் பவானி. பழைய பாட்டில்கள் குளிர் பெட்டியில் உறங்கின. வெண்ணெயும், உலர்ந்த பழங்களேயும் வாங்கி வந்து கேக்குகள் செய்தாள். மாடி அறைகளேத் துப்புரவாக்கி இரண்டு இயற்கை ஓவியங்களே வரைந்து மாட்டினுள்.

அழகு நிலேயத்துக்குப் போய்த் தன்னே ஒப்பனே செய்து கொள்ள வேண்டிய முறைகளேத் தீர்மானித்து, ராம் அவளுடைய ஒவ்வொரு செயலேயும் பாராட்டுவதுபோல உணர்ந்தாள். வீணேயில் நளின காந்தி ராகத்தை வாசித்து டேப்பில் பதிவு செய்து வைத்தாள்.

அவன் வீட்டுக்குள் நுழையும் போது நளின காந்தி அவனே வர வேற்க வேண்டும்.

'பவா குட்டியா வாசித்தாள்?' என்று கண்களே அகல விரித்து அவன் கேட்கவேண்டும்!

அவள் இதயம் நிரம்பி வழிந்தது.

ஆனல் குறித்த வேளேயில் அவர்கள் விமான நிலேயம் போவதற்கு முன்பு ராம் மோனியாவுடன் டாக்ளி

யில் வந்து இறங்கினான். மங்களா ஓடி வந்து பார்த்தாள். ஆறாவது பாகுவான மகனுக்குப் பின்னால், 'இவ யாரு?' மோனியான புன்னகை பூத்தான். மங்களா எதையோ புரிந்து கொண்டவளாகப் பதை பதைத்தாள்.

''இவ யார்டா?''

''ஆத்தி கொண்டு வாம்மா. இவ உன் மருமகள்.''

பின்னும் நின்ற பவானி அப்படியே மெய்மறந்து போனாள். அம்மாவும், அத்தையும் தங்கள் இருவரையும் முடிச்சுப் போட்டுப் பேசிய பேச்சுக்கள் நட்ட விதையாக அவளுள் வளர்ந்து தழைத்து விட்டது. ஆலும் அவளுள் அது வளரவில்லை. பாலிலியில், மெண்ட்ட தரையில் நட்ட விதையாகி விட்டதா?

அத்தையின் எரிச்சலைப் புரிந்து கொண்டு அவள்தான் ஆரத்தி சுற்றி வரவேற்றாள்.

''உள்ளே வாங்கோ. எதிர்பாராத அதிர்ச்சி அத்தைக்கு, கொஞ்சம் போனு சரியாய் விடும்'' என்று ஆங்கிலத்தில் கூறினாள்.

மங்களா உள்ளே போய் விட்டாள். அவளுடைய மகளு இப்படிச் செய்து விட்டான்? பவானிக்கு எப் படிப்பட்ட அதிர்ச்சியைக இருக்கும்? பவானிதான் அவர்கள் மாடி அறைக்குக் கொண்டு விட்டாள்.

''பவானி, எப்படி இருக்கே?''

''நல்லாத்தான் இருக்கேன்.''

அவள் இதயத்தில் நளின காந்தி பாடவில்லே. முகமாி மௌன தேம் பிசைத்தது.

மங்களா புது மருமகனே உள்ளே அமுமத்கவில்லே. சமையற்காரியிடம் உணவை மாடிக்கே கொடுத்து அனுப்பினாள்.

ராம் மட்டும் மேழே வ ரு வ ா ன். அம்மாவின் புலம்பல்கள் புரிந்தன. அவன் அவர்களைப் பிரிந்து ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. வளர்ச்சி யுற்ற நகரத்தின் புதுப் பாதை களாக மனமும் பாதைகள் போட்டுக் கொள்ளும் விந்தையை இவர்கள் ஏன் அறியவில்லே?

மங்களா மகனுடன் ஏனோதானோ வென்று பழகினாள். மாடியில் மேனுட்டு இசைத் தட்டுக்கள் முழங் கும். தீபாவளி வந்த கவடே தெரி யாமல் போய் விட்டது. மெல்ல மணக் கும் மருதோன்றிப் பூவாகப் பவானி அவனுக்குத் தோன்றினாள். மாடி அறையில் கணே இல்லே. அதிகாலையில் பவானி அரைவேரியையும், சுப பந்து வராளியையும் மீட்டினுள்.

தோட்டத்தில் பூ ப் ப றி த் துக் கொண்டே திருப்பாவை பாடிய வளிடம் போய் நின்றான் ராம்.

''காலேயில் பாடும் ராகம் பூபா ளம். இது கூடவா மறந்து விட்டது?'' என்று கேலியாகக் கேட்டான்.

''எத்தனேயோ பே ர் க ளு க் கு ஏதோ மறந்து போறப்போ எனக்குப் பூபாளம் மறப்பதா ஆச்சரியம்?'' என்று கண்கனே நிமிர்த்தாமல் கேட் டாள் அவள்.

''பவானி, எனக்குப் புரிகிறது. ஒண்ணே நீ நினேச்சுப் பார். நான் இத்தனே போறப்ப ஏதாவது சொல்லி வீட்டுப் போனேனு? உன்னேக் கல்யா ணம் பண்ணிக்கிறேன்னு சத்தியம் பண்ணினேனு?''

அவள் நினைத்துப் பார்த்தாள். வேடிக்கையும், வினேயாட்டுமாக இருந்த ராம்தான் வந்து நின்றான். எதையுமே பெரிசாக எடுத்துக் கொள்ள தெரியாத ராம்! வீனே யாடி விட்டு அரை நிக்கரோடு மாடிக் குப் போகும் வேகத்தில் மட்டையால் தலேயில் தட்டும் ராம்! பால் சாக் லெட்டை வாங்கி வந்து ஆசை காட்டி விட்டுத் தன் வாயில் போட்டுக் கொள்ளும் ராம்!

''உன் அம்மா இப்படி ஓர் ஆனேயை உன் மனசில் ஏற்படுத்தி யிருந்தா நான் என்ன பண்றது?''

உண்மைதான்! அவள் ஆசைப்பட் டது தப்புதான். இதை ஒப்புக் கொள்ள நெஞ்சுக்கு வலுவில்லே. அதனல் வேகமாகப் பூக் கூடை யுடன் ஓடினுள்.

ஆறு மாதங்கள் ஓடின. உலகக் கலேக் கழகத்தில் சேர்ந்து கொண் டாள் மோனியா. ராம் அலுவலகம் சென்றதும் பொழுது போகவில்லே. மாடி பூராவும் அவர்கள் உலகமாக இருந்தது. ராம் போனதும் அவள் குட்டி போட்ட பூனேயாகச் சுற்றி னுள். ஆறம்பத்தில் மங்களா இருந் தபோல் இப்போது அத்தனே கடுமை யாக இல்லே. என்னுலும் மோனி யாவால் அத்தனே சுலபமாக அவர் களுடன் ஒன்றிப் போக முடியவில்லே.

உணவுப் பிரச்னே வேறு. தன் உணவு தேவைப்படும்போது தனி யாக ஹோட்டல்களுக்குப் போய் வர வேண்டியிருந்தது. ராம் அலு வலக வேலேகளில் ஒன்றி விடுவதனல் அவளுடன் வர முடிவதில்லே. இந்த வாழ்க்கை மோனியாவுக்கும் சலிப் பைக் கொடுத்தது. ராம் வீட்டுக்கு வரும் பொழுது பெரும்பாலான நாட் களில் மோனியா இருப்பதில்லே.

மெல்ல இருள் கட்டும் மாலே நேரத் தில் தோட்டத்தில் நாற்காலியைப் போட்டுக் கொண்டு அமர்ந்திருப் பான். பக்கவாட்டுப் பூஜை அறை யிலிருந்து ஊதுவத்தி மணமும், மலர்களின் மணமும் வரும். பவானி சன்னக் குரலில் குத்து விளக்கு சுலோகம் சொல்லும் தொனியும் நெஞ்சைத் தொடும்.

ஒரு நாள் விளக்கேற்றி விட்டு வந்த பவானி அவன் அமர்ந்திருப்ப தைக் கண்டாள்.

''எங்கே போறே பவா?''

''கோயிலுக்கு.''

''நானும் வரலாமா?''

''கோவில் என் ஒருத்திக்குத்தான் சொந்தமா?'' கவிரென்று கண்ணடித் தெறல்களாகச் சிரித்தாள் பவாலி.

''இரு, உடை மாற்றிக் கொண்டு வரேன்''

''இந்த மாதிரி உடைகள் வேண் டாம் அத்தான். உள்ளே வாங்க. நான் மயில் கண் வேஷ்டியை எடுத்துத் தரேன்.''

அவன் தன் உடை மாற்றலே முடித் துக் கொண்டு கோவிலுக்குப் போய் வந்தான். வழியில் அவள் படிப்பைப் பற்றிக் கேட்டான். எதை எதையோ வாலிய ரூடாமல் பேசினுன். இரவு வீடு திரும்பியதும் அவர்களுடன் சாப்பிட்டான். பிறகு நடு ஹாலில் ஜமக்காளத்தை விரித்துக் கொண்டு வீணையை எடுத்து வாசித்தான். அவனே வாசிக்கச் சொன்னுன்.

பவானியின் நட்பில் இப்படி ஒரு தோழமை கிடைக்கிறதா?

'நினமும் வீணை வாசிப்பேன் பவா'' என்றுன்.

மெல்லச் சிரித்தாள் பவா. ''இது உங்க வீணை. நீங்க வாசிக்கணும்னு தவம் கிடக்கிறது'' என்றபடி அவனேப் பார்த்தாள்.

ராம் தலேயைக் குலிந்து கொண் டான்.

ஆடி தொடங்கியதிலிருந்து பண்டி கைகள் தொடர்ந்தன. ஆலனி நடுவிலிருந்து மழையும் பிடித்துக் கொண்டது. நவராத்திரிப் பொம் மைக் கொலு ஆரம்பம். மோனியா வுக்கு என்று ஒரு நண்பர் குமாம் இருந்தது.

''உன் நண்பர்களேயும் கொலு வுக்குக் கூப்பிடு மோனி'' என்று கூறினுள் பவானி.

ஒரு நண்பர் பட்டாளமே அணி வகுத்து வந்தது. அவர்கள் வந்த சமயம் ராமுவும், பவானியும் இரு வீணேகளே வைத்துக் கொண்டு வாசித் தார்கள். ஒரே சுருதியில் அடக்கமான வாசிப்பு. மோனியாவே வியந்து போனுள்.

''நீங்க இவ்வளவு நன்முக வாசிப் பீர்களனு தெரியாது'' என்முள் ராமிடம்.

''நீ இதை எல்லாம் கவனிக்க இங்கே தங்குவதில்லே. மேலும் மோனி, நீ இந்தச் சென்னேயில் உன் பழக்கவழக்கங்களேயே தேடுகிருய். அதனல் புதுக் கலாசாரங்கள் உன் கண்களில் படுவதில்லே'' என்முன் ராம்.

சொல்லும்போது அவன் உள் ளத்தில் குமுகுமுப்பு. அவன் எதைத் தேடி மோனியாவை மணந்தான்? அவள் எதைக் கண்டு அவனே மணந் தாள்?

மறு நாள் காலே. நல்ல புடவை கனே நிழலாக மாடி. வராத்தாவில் உலர்த்தப் போனுள் பவா னி. அதிகாலேயில் கோல்டன் பீச்சுக்குப் போக வேண்டும் என்று புறப்பட்டுப் போயிருந்தாள் மோனியா. மெல்லிய முனகல் சப்தம் கேட்டது. அறைக்குள் எட்டிப் பார்த்தாள் பவானி.

''அத்தான்!'' கிலத்த விழிகளேப் புரட்டித் திறந்தான்.

''கண்ணேத் திறக்க முடியல்லே பவா. தலேவலி.''

''மோனி கூட இல்லேயே? காலே யில் எங்கேயோ போனு போலிருக்கு.''

''சொன்னேன். அவசியம் போக ணும்னு போயிட்டா. என்னே டாக் டர்கிட்ட போகச் சொல்லிட்டுப் போயிருக்கா.''

கீழே போன பவா தலேவலி மருந்து டன் காபியைக் கொண்டு வந்தாள். மாத்திரையுடன் காபி யைக் குடித்தான்.

''இதை நெற்றியில் தடவட்டுமா?''

இதமாகத் தன் கொழுந்து விரல்களால் தடவினாள். வாழ்க்கையில் தான் எதை இழந்து விட்டோம் என்பது அவனுக்குப் புரிந்தது. பகலில் இலேசான ஜுரம் இருந்தது. அம்மா மாடிக்கு வந்து பார்த்தாள்.

''நானிக்குச் சரியாப் போயிடுமா அம்மா?'' என்றாள் அவள்.

இரவு பத்து மணிக்கு மோனியா திரும்பிய சமயம் ராம் தூங்கி விட்டான். பவானி, ராம் ஜுரத்தில் அவதிப்பட்டதைச் சொன்னாள்.

''ஐயையோ, ஜுரமா? அது எனக்கும் ஒட்டியிருக்கும். நான் அதுத்த அறையில் படுத்துக்கறேன்'' என்று நாலே எட்டில் மாடிக்குப் போனவள், அடுத்த அறைக்குப் போய்க் கதவைச் சாத்திக் கொண்டாள்.

இதுதான் இல்லறமா? ராமைப் பற்றிப் பரிதாபமாக நினைக்கத் தோன்றியது பவானிக்கு. இந்த வாழ்க்கையில் ராம் என்ன சுகத்தை அநுபவிக்கிறான்? புரியத்தான் இல்லை.

மறு நாள் காலையில் ராமைக் காபியுடன் பார்க்கப் போனாள் பவானி.

''என்னன்னு கேள் பவா.''

பவா எடுத்துப் பேசினாள். மோனியாதான் பேசினாள். ''பவா, உடனே வாயேன்.''

''எதுக்கு மோனி?''

''எனக்கும் ராம்க்கு வந்த மாதிரி வந்திருக்கு.''

பவானி உடனே கிளம்பிப் போய்க் கவனித்துக்கொண்டான்.

அன்று தீபாவளி. வரி வரியாக இழையோடிய மாக்கோலம். காலியில் நாகசுரம் ஒலித்தது. மங்களாதட்டுக்களில் இலிப்பையும் காரத்தையும் வைத்து விநியோகித்தாள்.

''நீயும் வாயேன் பவா?'' என்று கேட்டாள் மோனியா.

''என்ன பவா தொலேவும், உயரமும் ஒரு மனிதனை உயர்த்துவதில்லே. நீ குணத்திலும் வெற்றி பெற்று விட்டாய். வா. போகலாம்.''

அவர்கள் காரில் வரும்போது கலசம் ஒன்று எழும்பி விட்டுத் தணிந்தது. ராம் மெல்ல அவளுடைய இடையை வளைத்தான். ''பலலில் இதன் ஒளிதெரியாததுபோல, அருகில் இருந்த உன் அருமை தெரியவில்லே. இந்த மண்ணில் மேலே நாட்டுச் செடி வளராது பவா!''

பவானியின் கன்னங்கள் பூத்தன. ''இந்த நாட்டுச் செடி வளர்ந்தால் அது போதுமே!''

நளினி காந்தி ராகம் இதயத்தில் ஒலித்தது. ✳



நாம் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள். முத்து முத்தாக ....

''அத்தை, அத்தானே வந்து பாருங்களேன்'' என்றாள்.

''ஐயையோ! உடனே மருத்துவ மனையில் அட்மிட் பண்ணுங்கள்'' என்று பதறினாள் மோனியா.

''இது மருத்துவமனே கேஸ் இல்லே. ராம் பத்தியமா இருக்கணும்'' என்றாள் பவானி.

''அப்படின்னு நான் வெளியில் என் நண்பர் வீட்டிலே தங்கிக்கிறேன்'' என்ற மோனியா ஒரு மணி நேரத்தில் கிளம்பி விட்டாள்.

ராமை எட்டிக் கூடப் பார்க்காதது பவானியை வருத்தியது.

பத்துத் தினங்களில் ராம் தேறி விட்டான். மூன்று முறை தலேக்குத் தண்ணீர் விட்டுக் கொண்டாகி விட்டது.

''பவா, நளின காந்தி ராகத்தை வாசியேன்.''

'மணலி நாவலிம்ச' கொஞ்சியது. கண் கொட்டாமல் அவள் கைகளின் அசைவையே பார்த்தான், போன் ஒலித்தது.

பட்டுப் புடைவை சரசரக்க வந்தாள் பவானி. கார் விமான நிலையத்தை நோக்கி ஓடியது. டெல்லி போய் ஒன்றிரண்டு மாதங்கள் தங்கி விட்டுப் பிறகு தன்நாட்டுக்குத் திரும்பு புவதாக மோனியாவின் ஏற்பாடு.

கார் கண்ணடியில் முகம் தெரிந்தது. கருப்பு கருப்பாக அம்மைத் தழும்புகள்! வீட்டுக்குள் இருந்தவர்களுக்கு வரவில்லே. பயந்தோடிய தனக்கு எப்படி வந்தது? பவானி தன்னே எப்படிப் பாதுகாத்தாள்? கண்ணீர் சுரந்தது.


''என் வாழ்த்துக்கள். பவானி மனத்தினுல் மட்டும் உறவு வந்து



LOOK!
The familiar mosaic of Indian automotive industry is undergoing a structural change

The sedate composition of Indian automotive industry is transforming into a vibrant picture. A nearly fundamental qualitative change in the very composition of the industry is in the offing. In a few years from now, the mix of automobiles on Indian roads will almost undergo a metamorphosis.

Impressive investments are being made to upgrade the technological base of the industry. The process essentially centres around critical parts in the engine



assembly, as any increase in engine efficiency or output calls for improvements in the piston and its family of components.


Considerable amount of research is required to establish the parameters of such radical changes.

Today, our own research and developmental efforts are adequately self-sufficient and capable of absorbing more intricate levels of technology. Our product developmental efforts are in the vanguard of a new direction of growth for the Indian automotive industry. As the first automotive ancillary facility to emerge on the industrial horizon of India, we continue to spearhead the change that will add a significant impetus to the future progress of Indian automotive industry.

INDIA PISTONS
-the moving force in automotive industry

INDIA PISTONS LIMITED
MADRAS 600 011

IMAC/IP/0181



நானிருக்கப் பயமேன்?

'பிரம்மம் என் தந்தை. மாயை என் தாய். அவர்கள் இருவரும் ஒன்று கூடவே நான் இந்த உடலைப் பெற்றேன். நான் கடவுள். நான் ஷீரடியிலும் எல்லா இடங்களிலும் பக்தர்கள் உள்ளங்களிலும் வசிக்கிறேன்.

'இது ஒரு பிராமணன், வெள்ளைப் பிராமணன், தூய பிராமணன். இந்தப் பிராமணன், லட்சக் கணக்கான மக்களைத் தூய பாதையில் செலுத்தி, இறுதிவரை நடத்திச் சென்று குறிக்கோளை அடைவான். இது ஒரு பிராமணனின் மகுடி.

'எனது பக்தர்களின் வீடுகளில் ஒருபோதும் உணவுக்கும் உடைக்கும் குறைவிருக்காது. என் குழந்தைகள் பட்டினி கிடக்கும்படி எப்படி என்னுல் விட முடியும்?'

பாபாவின் அருள் மொழிகள் இவை.

நிறைந்த மாத்திரத்திலேயே பக்தர்களின் துயர் அகற்றிய மகான் ஷீரடி சாயிபாபா. சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். 'எம்மதமும் சம்மதம், எல்லாரும் என் குழந்தைகள்' என்ற அன்புள்ளம் கொண்ட ஞானி. 'எங்கே பிறந்தார்? அவர் வயது என்ன?' என்ற பிறவித் தனைகளைக் கனிந்த உத்தமர். உலகம் முழுவதும் சாயி பக்தர்கள் இருக்கிறார்கள். 'நான் இருக்கப் பயமேன்?' என்ற பாபாவின் தாரக மந்திரம் அந்தப் பக்தர்களை எல்லாம் அல்லும் பகலும் காத்து வருகிறது.

1854-ஆம் ஆண்டு. பதினைறு வயதுப் பாலகன் ஒருவன் மகாராஷ்டிர மாநிலத்து ஷீரடி என்ற கிராமத்தில் திடீரென்று தோன்றினான். யார், எங்கிருந்து வந்தான் என்றே புரியவில்லை. அந்தக் கிராமத்தின் எல்லையிலிருந்த வேப்ப மரத்தடியில் பத்மாசனம் போட்டுத் தியான நிலையில் இருந்தான் சிறுவன். 'வெண்ணிறமும் கறுகுறுப்பும் முதப்பொலிவும் பொருந்திய இந்த இளைஞனைக் கண்டு மக்கள்





வியந்தார்கள். யாருடனும் வாய் திறந்து பேசாத கடுந்தவம். பார்வைக்கு இளைஞனைத் தோன்றினாலும் தம் செயலினால் மகானை விளங்கினார். வைராக்கியத்தின் உருவாக இருந்த அந்த இளைஞர், எல்லாருக்கும் புதிராக இருந்தார்.

இளைஞரின் கடுந்தவம் மக்களைக் கவர்ந்தது. நூற்றுக்கணக்கில் மக்கள் அன்றாடம் வந்து தரிசித்தார்கள். ஒரு நாள் கண்டோபா (சிவனின் ஒரு தோற்றம். வீரபத்ரரின் பிரதான தெய்வம். இந்தக் கோயில் இன்றும் அந்தக் கிராமத்தில் இருக்கிறது.) என்ற தெய்வம், ஒரு பக்தரின்மேல் ஆவேசித்தது. அவரிடம் மக்கள் இந்த இளைஞரைப்பற்றிக் கேட்டார்கள்.

தெய்வ ஆவேசங்கொண்ட பக்தர், ஓர் இடத்தைக் காட்டி, அங்கே தோண்டும்படி கூறினார். கடப்பாரை கொண்டுவந்து தோண்டிப் பார்த்தார்கள். அங்கே ஒரு நிலவறை தெரிந்தது. உள்ளே அகல்விளக்குகள் எரிந்தன. படிக்கட்டுகள் தெரிந்தன. புலித்தோல் போர்த்த பீடங்கள் தெரிந்தன. புனித மகான் ஒருவர் வாழ்ந்த அடையாளங்கள் அவை. 'இந்தச் சிறுவன் இங்கே பன்னிரண்டு ஆண்டுகள் தவம் செய்தான்' என்றார் அந்தப் பக்தர்.

பின்னாளில் இதைப்பற்றிப் பாபாவிடம் கேட்டபோது, 'அந்த நிலவறை என் குருவின் இருப்பிடம். பாதுகாக்க வேண்டிய புனிதமான இடம்' என்று மட்டுமே கூறினார்.

வேப்ப மரத்தடி இளைஞரை நாடி மக்கள் கூட்டம் பெருகியது. அப்பா பாடேல் கோடே என்ற பக்தர், தம் மனைவியுடன் பாபாவைத் தரிசிக்க மரத்தடிக்கு வந்தார். பக்தரின் மனைவி பாயாஜி பாயைக் கண்டதும், பாபா, எழுந்திருந்து அவர்களை வரவேற்றார். பாயாஜிபாய் முன் பிறவியில் தம் சகோதரி என்று பாபா கூறினார்.

பாபாவின் தரிசனத்தால் மனமாற்றம் அடைந்த அந்தப் பெண்மணி, பாபாவுக்கு உணவளிக்காமல் இலிமேல் தான் உண்பதில்லை என்ற விரதத்தை மேற்கொண்டாள். கண்ணை மூடித் தியானத்தில் இருந்த போதும், காட்டில் அலைந்து திரிந்தபோதும் இந்தப் பெண் தேடிச் சென்று, பாபாவுக்கு உணவளித்துவிட்டே சாப்பிடுவாள். உள் முகத்


தியானத்தில் பாபா இருந்தாலும் குழந்தைக்கு ஊட்டி விடுவதுபோல் அவருக்கு உணவை ஊட்டி விடுவாள். அவளுடைய அன்புக்குக் கட்டுப்பட்டு, பாபா உணவை உட்கொண்டு வந்தார்.


இந்தச் சமயத்தில் திடீரென்று வீரடியில் தோன்றியது போலவே பாபா திடீரென்று மறைந்தும் போனார். சுமார் இரண்டு ஆண்டுகள் பாபா எங்கே போனார், எங்கே வாழ்ந்தார் என்றே தெரியவில்லை. இந்த அஞ்ஞாத வாசம் முடிந்து, வீரடி வேப்ப மரத்தடிக்கே திரும்பிய பாபா, 1918-இல் சமாதி அடையும் வரையில், சுமார் அறுபதாண்டுக் காலம் வீரடியை விட்டு நகரவே இல்லை.

அவுரங்காபாத் மாவட்டத்தில் துப் என்ற கிராமத்தில் சாந்த் பாடில் என்ற செல்வர் இருந்தார். ஒரு சமயம் அவுரங்காபாதுக்குத் தம் குதிரையின்மேல் ஏறிப் போனார். வழியில் சற்றுக் கண்ணயர்ந்திய சாந்த் பாடில், கண் விழித்ததும், தம் குதிரையைக் காணாமல் திகைத்தார். எவ்வளவு நேரம் தேடியும் அது கிடைக்கவில்லை. அந்தக் குதிரையின்மேல் அவருக்கு அளவு கடந்த அன்பு உண்டு. மேலே கிடந்த குதிரையின் சேணத்தை எடுத்துத் தோளில் மாட்டிக்கொண்டு, கால்நடையாகக் குதிரையைத் தேடி வந்தார். சாலை வேப்ப மரத்தடியில் அமர்ந்திருந்த பக்கிரைக் கண்டார். அவரைக் கண்டதும் வணங்கினார். சாந்த் பாடில், 'ஏன் சேணத்தைச் சுமக்கிறாய்?' என்று பக்கீர் கேட்டார். தொலைந்து போன தம் குதிரையைப்பற்றிச் சாந்த்பாடில் வருத்தத்துடன் கூறினார். பக்கீர் முறுவலுடன் அருகிலுள்ள ஓடைக்கருகில் போய்த் தேடும்படி சொன்னார். அங்கே தம் குதிரையைக் கண்ட பாடிலுக்கு வியப்பும் திகைப்பும் தாங்கவில்லை. பக்கிரின் அதிசயச் சக்தியைக் கண்டு, அவரைக் குருவாகப் போற்றி வணங்கத் தொடங்கினார் சாந்த் பாடில்.

சிறிது காலத்தில் சாந்த் பாடிலின் மருமகனின் திருமணம் வீரடியில் நடந்தது. அந்தத் திருமணத்துக்கு வந்து மணமக்களுக்கு ஆசி வழங்கும்படி கேட்டுக்கொண்டார், சாந்த்பாடில். பாபாவும் இணங்கினார். கல்யாண கோஷ்டியுடன் மாட்டு வண்டியில் போனார். இடைவழியில் இவர்கள், மாடுகளை அவிழ்த்துவிட்டுச் சிறிது இளைப்பாறினர். அப்போது வண்டியிலிருந்து பக்கீரும்

(மேலும் இரண்டு பக்கங்கள்)





அந்த இடத்தில் இருந்த கோயிலின் பூசாரியான மஹல் சபதி என்பவர், வேப்ப மரத்தடியில் தவம் செய்த அதே மகான் இவர் என்பதைப் புரிந்துகொண்டு, வியப்புத் தாளாமல், 'யா சாயி!' (சாதுவே, உமக்கு நல்வரவு) என்று கத்திலுர். அன்று முதல்தான் ஊர் பேர் இல்லாத பக்ருக்குச் 'சாயி பாபா' என்ற திருநாமம் ஏற்பட்டுப் பிரபலம் அடைந்தது.

ஒரு நாள் இரவு கனத்த மழை பெய்தது. வேப்ப மரத்தடியில் தியானத்தில் அமர்ந்திருந்த சாயி பாபாவைச் சுற்றி ஒரே வெள்ளம். இலைகளும் செத்தைகளும் மழைநீரில் அடித்துக்கொண்டு வந்தன. பாபா தெப்பமாக நனைந்தும், அதை உணராமல் அமர்ந்திருந்தார்.

பேய்மழை பெய்வதைக் கண்ட பக்தர்கள் மழையைப் பொருட் படுத்தாமல் மரத்தடிக்கு வந்து, பாபாவின் காலில் விழுந்து வேண்டினர்கள். முப்பது கஜ தூரத்தில் பாழடைந்த மசூதி ஒன்று இருந்தது. அவரை அதில் வந்து தங்கு மாறு வற்புறுத்தி வேண்டினர்கள். பக்தர்களுடைய அன்புக் கட்டளைக்கு இணங்கி நனைந்த உடையுடன் அந்த மசூதியில் போய்த் தங்கினர். அந்தப் பாழடைந்த மசூதியைத் தான் துவாரகாமாயி என்ற புனிதத் தலமாக்கி, எந்த மதத்தினரும் வந்து ஆன்மிக ஒளி பெற்றுச் செல்லும் கோயிலாக்கினர் சாயிபாபா. 1918-இல் சமாதி அடையும்வரை பெரும்பாலும் அங்கேயே தங்கிப் பக்தர்களை ரட்சித்தார்.

அவருடைய பிறப்பைப்பற்றி யார் கேட்டாலும் சிரிப்புத்தான் ஒரே பதில். ஒரு சமயம், நிருடன் ஒருவனைப் போலீசார் கைது செய்து, தூலியா நீதி மன்றத்தில் நிறுத்தினர். நீதிபதியின் கேள்விக்குத் திருடன், 'இந்தப் பொருள்களை எல்லாம் சாயிபாபாதாம் கொடுத்தார்; நான் திருடவே இல்லை' என்று கூறினன். உண்மையைக் கண்டறிய நீதிபதி கமிஷனர் ஒருவரைப் பாபாவிடம் அனுப்பினர். கமிஷனரின் கேள்விக்குப் பாபா அளித்த பதில்கள், ஹாதி மதத் தலைகளுக்கு அப்பாற்பட்ட இறையம்சம் பெற்றவர் அவர் என்பதைக் காட்டுகின்றன. 'உமக்கு வயது என்ன?' என்ற கமிஷனரின் கேள்விக்கு, 'எண்ணிக் கொள்' என்று கூறி ஒன்றைத் தொடர்ந்து 'பூஜ்யம் பூஜயம்' என்று சொல்லிக் கொண்டே போனார் பாபா.


(1854-58 ஆண்டு இடைவெளியில் பாபா அந்தர்தானம் ஆன

சமயம் - சாயி பாபாவும் ஸ்ரீ சகாராம் மகாராஜ் என்ற மகானும் ஒரே குருவிடம் உபதேசம் பெற்றதாகவும் அப்போது இரண்டு மாஞ்செடிகளை ஆசிரமத்தில் நட்டதாகவும் வரலாறு உள்ளது.)

பாபு சாகேப் ஜோக் என்ற பக்தர், இந்த மரத்தில் காய்த்திருந்த மாங்காயைப் பழம் என்று எண்ணிப் பறித்துப் பாபாவிடம் காணிக்கையாகக் கொடுக்க எடுத்து வந்தார். ஆனால் அது நன்றுகப் பழுத்திருக்கவில்லை. அதனால் வரும் வழியில் நன்றுகக் கனிந்த மாங்கனியை வாங்கிக் கொண்டுவந்து பாபாவைத் தரிசித்தார். புதிதாக வாங்கிய மாங்கனியைப் பக்தியுடன் கொடுத்தார் ஜோக். ஆனால் பாபா, 'ஆசிரமத்தில் பறித்த பழத்தை எனக்குக் கொடு; மறைக்காதே' என்று கேட்டார். 'காயாக இருக்கிறதே' என்று கூறியபடி, அதைக் கொடுத்தார். பாபா அதை வாங்கித் திருப்பித் திருப்பிச் சற்று நேரம் பார்த்தார். உடனே கையால் பிட்டு எல்லாருக்கும் கொடுத்தார். தேன் போல இனித்தது, அந்த மாங்கனி.



பாபா ஷீரடிக்கு இரண்டாம் முறை வந்த புதிதில், பேளாபுரிலிருந்து வந்த மந்திரவாதி ஒருவனுக்கும் பாபாவுக்கும் சச்சரவு ஏற்பட்டது. அந்த மந்திரவாதி மற்போரில் தேர்ந்தவன். பாபாவை மற்போருக்கு அழைத்தான், அவன். பாபா தயங்காமல் அவனுடன் மற்போரிட்டார். ஆனால் அவனிடம் தோல்வியுற்று, ஒரு மைல் தூரத்திலுள்ள காட்டுக்குள் போய் வசித்தார். முன்பு கூறிய பாயாஜிபாய் என்ற பெண் காட்டிலும் பாபாவைத் தேடிச் சென்று அவரை உணவருந்தும்படி செய்தாள். கல்லிலும் முள்ளிலும் இந்தச் சகோதரி இப்படி நிதம் வந்து கஷ்டப்படுகிறாளே என்று எண்ணிய பாபா, மீண்டும் மசூதிக்குத் திரும்பி வந்தார்.



இந்த மற்போரில் தோற்ற பிறகு பாபா நீண்ட அங்கியை அணியத் தொடங்கினர். தலையில் வேடு கட்டினர். படுக்கச் சாக்கை உபயோகித்தார். தம் குரு அளித்த பரிசு என்று எப்போதும் ஒரு செங்கல்லைக் கையில் வைத்திருந்தார். இரவில் அதைத் தலையணையாகவும் உபயோகிப்பார்.

ஆன்மிக நாட்டத்தைப் போலவே அவருக்கு நுண்கலைகளிலும் அதிக ஈடுபாடு இருந்தது. ஷீரடிக்கு வந்த ஆரம்ப நாட்களில் முஸ்லிம் சகோதரர்கள் தங்கும் விடுதியான




தாகியாவுக்கு இரவு வேளைகளில் செல்வார். அங்கே தங்கியுள்ள பக்தர்களோடு கால்களில் சதங்கை அணிந்து இனிமையாகப் பாடியபடி நடனமாடுவார். கபீர்தாஸரின் பாடல்களை உரக்கப் பாடி ஆடுவார். 1918 வரையில் இயன்ற போதெல்லாம் அங்கே போய் இப்படி ஆடிப் பாடி வந்தார். 'பாட்டும் கூத்தும் இறைவனை அடையும் மார்க்கங்களுள் சிறந்தவை' என்று கூறுவார், கேட்பவரிடத்தில்.

வரிசை வரிசையாக மண் அகல்களை ஏற்றி வைப்பதில் பாபாவுக்கு விருப்பம் அதிகம். ஷீரடி கண்டோபாவின் கோயிலிலும் மசூதியிலும் அடிக்கடி இப்படிச் செய்வார். தொடக்கத்தில் இனாமாக எண்ணெய் அளித்து வந்த கடைக்காரர்கள், 'இந்தப் பக்கிருக்கு எண்ணெய் கொடுப்பது வீண்' என்று தீர்மானித்து, ஒரு நாள் எண்ணெய் கொடுக்க மறுத்துவிட்டனர்.

வருத்தத்துடன் திரும்பிய பாபா, கிணற்று நீரைச் சேந்தி, எண்ணெய் டப்பாவில் ஜாற்றிக் கலக்கி அப்படியே குடித்து விட்டார். மீண்டும் டப்பாவில் நீரை நிரப்பி, அகல் விளக்குகளில் விட்டு ஏற்றினார். இரவு முழுதும் விளக்குகள் ஜகஜ்ஜோதியாக எரிந்தன. எண்ணெய் வியாபாரிகள் பாபாவின் பெருமையை உணர்ந்து மன்னிப்புக் கோரினர்.

உலகம் சாயிபாபாவை அறியத் தொடங்கியது.

மசூதியில், ஓர் அறையின் மூலையில் தியானத்தில் உட்கார்ந்திருப்பார்; கைகளைக் கட்டிப் பத்மாசனத்தில் இருப்பார். எதிரில் துனி என்ற புனித நெருப்புக் குண்டம் எரிந்து கொண்டே இருக்கும். இந்துக்கள் புனித வேள்வி செய்வது போல் அந்த இடம் காட்சியளிக்கும். ஒரு பக்கத்தில் நீர் நிறைந்த மண்பானைகளும் புகை பிடிக்கும் குழாயும் இருக்கும். முஸ்லிம்கள் வந்து வணங்கினாலும் அந்த முறைப்படி வாழ்த்துவார். இந்துக்கள் வந்தாலும் அவர்கள் விருப்பப்படி ஆசி கூறுவார். கிறிஸ்துவர்கள் வந்தாலும் அவர்கள் உகக்கும் வண்ணம் வாழ்த்துவார். நெற்றியில் நாமமோ சந்தனமோ தயக்கமின்றி இட்டுக் கொள்வார்: 'அறம் பொருள் இன்பம் வீடு' என்ற புருஷார்த்தங்களை அளிக்கும் இடம்' என்ற பொருளில் அந்த மசூதிக்கே 'துவாரகமாயி' என்று பெயரிட்டார் பாபா.



ஃபட்நேகர் என்பவரின் குழந்தை இறந்துவிட்டது. அவருடைய மனைவி பெற்ற சாயிபக்தை. பாபாவை நம்பியும் குழந்தை போய்விட்டதே என்ற வருத்தம் ஃபட்நேகருக்கு. அதனால் அதிக ஈடுபாடு இல்லாத மனத்துடன் ஃபட்நேகர், பாபாவை ஒரு தடவை தரிசிக்கச் சென்றார்.

பல பேர் முன்னிலையில் பாபா இரண்டு தடவை, 'வெளியே போ!' என்று அவரைக் கடிந்து கூறிவிட்டார்.

ஃபட்நேகர் மிகவும் வருத்தத்துடன், பாபா தனிமையில் இருக்கும்போது போய் அவர் காலைத் தொட்டு வணங்கினார். பாபாவின் அன்புக்குப் பாத்திரமான ஓர் இடைப் பெண், அப்போது பாபாவின் முதுகைப் பிடித்துவிட்டுக் கொண்டிருந்தாள்.


''இவன் குழந்தையை நான் (ஆண்டவன்) கொன்றுவிட்டேனும்! என் குழந்தையை நான் கொல்வேனா? அதே குழந்தையை மீண்டும் இவன் மனைவி வயிற்றில் ஜனிக்கச் செய்கிறேன்'' என்று கூறி, ஒரு தேங்காயை அவரிடம் கொடுத்து, அதை அவர் மனைவியிடம் கொடுக்கும்படி கூறி அருளினார் பாபா.

1916-இல் சென்னையிலிருந்து ஒரு குடும்பத்தினர் காசி போகும் வழியில், பாபாவைப் போய்த் தரிசித்தனர். கணவன், மனைவி, குழந்தைகள், மைத்துனி என்று ஐந்து பேர் கொண்ட குழு அது. பண்பும் படிப்பும் மிகுந்த மனைவி, நன்றாகப் பாடுவாள். சாரீரச் சம்பத்து நிறைந்தவள். திருப்புகழ், ராம நாடக கீர்த்தனைகள் என்றால் அவளுக்குப் பாடம். பாபா அந்தப் பெண்ணைக் கண்டதும், 'நீ பாடிக் கேட்டு ரொம்ப நாட்களாயிற்று. எங்கே பாடு, கேட்கலாம்' என்று கூறிக் கண்ணை மூடிக்கொண்டு விட்டார்.

சுமார் ஒரு மணி நேரம் கான மழை பொழிந்தாள் அந்தப் பக்தை. எழுந்து வணங்கி, பாபாவைப் பார்த்தபோது ராமனைக் காட்சியளித்தார்: 'இதோ ராமபிரான்' என்று மனைவி கூறி மகிழ, 'எங்கே? எங்கே ராமபிரான்?' என்று கேட்டுத் தவித்தனர் பிறர்.

இந்தூரைச் சேர்ந்த திருமதி கமலாபாய் தந்தாவாடே என்ற





பெண்ணுக்குப் பாபா காட்சியளித்தது முக்கிய நிகழ்ச்சியாகும். அவள் கணவனுக்குப் பாபாவிடம் அவ்வளவு நம்பிக்கை இல்லை. ஹிரண்யகசிபு மாதிரி, ''எங்கே உன் பாபா, காட்டு பார்ப்போம்!'' என்று கூற, மனைவி, 'இதோ இங்கேயே இருக்கிறார்' என்று நம்பிக்கையுடன் கூறினாள். 'இதோ இருக்கிறேன்' என்று பாபா அங்கே பிரசன்னமானார். அந்தப் பக்தைக்கும் அவள் கணவருக்கும் தாங்க முடியாத வியப்பு. பாபாவின் கால்களில் விழுந்து வணங்கினர்.

பாபா வண்டியிலிருந்து பக்தர்கள் குழந்தை திரும்பியபோது ஆட்டு மந்தை ஒன்று செல்வதைக் கண்டார். அந்த மந்தையிலிருந்து இரண்டு ஆடுகளை மட்டும் 32 ரூபாய் விலை கொடுத்து வாங்கி, நான்கு படி துவரை வாங்கி அந்த ஆடுகளுக்குக் கொடுத்தார்.

நாலைந்து ரூபாய் பெறுத அந்த ஆடுகளை அதிக விலை கொடுத்து வாங்கியதைக் கண்டு பக்தர்கள் வியந்தனர். 'முன்பிறவியில் அவை சகோதரர்களாக இருந்தனர். என் அருகே அமர்ந்து கைங்கர்யம் செய்யும் பேறு பெற்றிருந்தனர். பொறுமையால் சகோதரர்கள் சண்டையிட்டு மடிந்தனர். அந்த ஆடுகளைப் பார்த்ததும் பழங்கதை நினைவுக்கு வந்தது. இரக்கம் சுரந்தது. துறவி பணத்தைச் சேமிக்கக்கூடாது என்பதனால் அவற்றுக்குச் செலவு செய்தேன்'' என்றார் பாபா.

1918-ஆம் ஆண்டு விஜயதசமி அன்று சாயிபாபா மகாசமாதி அடைந்தார். பலிங்குச் சமாதியின் முன் அவருடைய கம்பீரத் திருவுருவம் காட்சியளிக்கிறது. 'ஆத்மாநுபூதியடைந்த மகானை ஒரு சத்குருவிடம் கொள்ளும் தொடர்பு, அவருடைய பூத உடல் மறைந்த பிறகும் தொடரும்' என்ற ரமண பகவானுடைய அருள்மொழிக்குச் சான்றுகச் சாயி பக்தர்கள் இன்று உலகெங்கிலும் விளங்கி வருகிறார்கள்.

'பாலில் வெண்ணெய் போலவும், எள்ளில் எண்ணெய் போலவும் அது நம்முள் வியாபித்துள்ளது' என்று உபநிஷதங்கள் கூறுகின்றன. பக்தர்களின் மனத்தில், செயலில், ஏன் மூச்சுக் காற்றில் சாயிபாபா உறைந்து இன்றும் வாழ்கிறார். 'நான் இருக்கப் பயமேன்?' என்ற அவருடைய அருள் வாக்கு, பக்தர்களுக்கு ரட்சையாக விளங்கிக் காக்கிறது.



"தீபாவளி நல்வாழ்த்துக்கள்"


சுடர்மணி பனியன்கள்

மிடுக்கான தோற்றம் தரும் எடுப்பான உள்ளாடைகளே

No: 4964

தர நிர்ணயம் பெற்ற
நீடித்து உழைக்கும் பாதுகாப்பான
பனியன். ஜட்டிகள். காலர்சட் &
பேன்ஸி கலர் பனியன்கள்





எங்களது விசேஷ தயாரிப்புகள்:
ராஜா ஸ்பெஷல், சுடர்டெக்ஸ் &
சிமி கலர் பனியன்கள், STEX ஜட்டி

சுடர்மணி நிட்டிங்ஸ்
திருப்பூர்.638 604.



— BUMA

Dr. A. மதுரம் குரு மருந்துகள்

100 வருடங்களுக்கு மேல் புகழ் பெற்றது

விரைவில் குணமடையச் சக்தி வாய்ந்த


குரு தைலம் குரு பல்பொடி

தற்சமயம் பிளாஸ்டிக் டப்பாக்களில் விற்பனைக்குக் கிடைக்கிறது.

Dr. B. மதுரம் & சன்ஸ்

குரு மருந்துசாலை, திருச்சிராப்பள்ளி - 17.

— நாகசுந்தரம்



மாட்சி பொருந்திய காட்சியகம்

'சாருகேசி'

சரம்ராஜ்யங்களின் சரிவும், ஆட்சியில் மாற்றங்களும், இரு நாடுகளுக்கிடையே வாணிபமும், பகைமையும் போர்களும் சரித்திரமாகி விடுகின்றன. பிற்கால சந்ததியினருக்கு அந்தச் சரித்திரத்தின் சில ஆதாரங்களையும் அடையாளங்களையும் சாட்சிகளாக விட்டுச் செல்கின்றன.

சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் நுழைந்தவுடன் வலப்புறமாக, வெளியேறும் வாயிலை யொட்டி, அமைந்திருக்கும் சாம்பல் நிறக் கட்டிடம் ஒன்று, இப்படி ஆங்கிலேயர் இந்தியாவில் அரசாட்சி செய்த சரித்திரத்தின் சான்றுகளாகப் பல அரும் பொருள்களும் பத்து அரங்குகளில் பார்வையாளருக்கு வழங்குகிறது.

இந்தியத் தொல் பொருள் இலாக்காவினர், பிப்ரவரி 1948-இல் இந்தக் காட்சியகத்தை அமைத்தார்களாம். அவர்கள் மேடை இயங்கும் இருபத்து இரண்டு அரும் பொருள் காட்சியகங்களில் இதுவும் ஒன்று. ஆனால், முழுக்க முழுக்க, இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆட்சியை விவரிக்கும் ஒரே அரும் பொருள் காட்சியகம் என்றே இதைச் சொல்ல வேண்டும். 18, 19, 20-ஆம் நூற்றாண்டுகளில் ஆங்கில ஆட்சியின் சரித்திர ஆதாரமான பல தகவல்களையும், பிரெஞ்சுக்காரர் இங்கே காலூன்றிய வரலாற்றையும் வெளிச்சமாக்கித் தருகிற ஒரே அரும் பொருள் காட்சியகம் இதுதான். 17-ஆம் நூற்றாண்டுக் காலப் பொருள்கள் சிலவும் இங்கே காண்கின்றன. 18-ஆம் நூற்றாண்டுக் கட்டடக் கலையின் சாட்சியாக நிற்கும் இந்தக் கோட்டை அரும் பொருள் காட்சியகமே கூட. இரண்டு நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட சரித்திரத்தின் சின்னமாய் விளங்குகிறது.

முன்னுரை முடிந்தது: வாருங்கள், இனி ஒவ்வோர் அரங்காகக் காண்போம்.

நுழைந்தவுடன் கம்பீரமாகக் கண்ணில் படுவது கார்வாலிஸ் பிரபுவின் பிரம்மாண்டமான வெண்ணிச் சலவைக் கல் சிலை. அவருடைய சேவையைப் பாராட்டி அவரைக் கௌரவிக்கும் வாசகங்கள், பீடத்தின் மேற் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

போர்க் கருவிகள், பிரங்கிகள், யுத்தக் கோடரிகள் எல்லாம் -17 ஆம் நூற்றாண்டில் உபயோகித்தவை முதற் கொண்டு சீராக, அணியணியாக வகைப்படுத்தி வைத்திருக்கின்றனர், கிழக்குத் தளத்து இடப்புற முதல் அரங்கில்.

அதைக் கடந்து சென்றால் அரங்கு எண் இரண்டு. இதில் சீருடைகள்: அத்தனையும் அதன் வண்ணங் கூடமங்காமல், கண்ணாடிக் கூண்டுகளில் காணப்படுகின்றன. சென்னை மாநில ஆளுநர், மெய்க் காவல் படைத் தலைவன், பத்தொன்பதாம் நூற்றாண்டு அரசப் பிரதிநிதி குழுவினர் உடை, படைப் பிரிவினர் அணியும் சட்டை, இடைகழி (பெல்ட்), தலைப் பாகை, குல்லாய் ஒவ்வொன்றும் மாதிரிக்கு இருக்கின்றன. இங்கே பத்தொன்பதாம் நூற்றாண்டின் சென்னை ஆளுநருடைய மெய்க் காவலரின் சீருடைக்கு இட்ட சேணத் துணி, அதன் மெருகும் பளபளப்பும் மங்காமல் காணப்படுகிறது.

'மெட்ராஸ் ஆர்மியில் பணிபுரிந்த வெள்ளைக்கார மேஜருக்கு மாதம் 250 பவுண்டு சம்பளம். சுபேதார் பதவி வகித்த இந்தியருக்கு எவ்வளவு அதிகப்பட்ச சம்பளம் தெரியுமோ? அறுபது ரூபாய்! படைப் பிரிவின் ஒவ்வொரு பதவியையும் எழுதி, வெள்ளைக்காரருக்கு இத்தனை பவுண்ட் இந்தியருக்கு இத்தனை ரூபாய் என்று தெளிவிக்கும் அறிவிப்பு மாட்டப்பட்டிருக்கிறது.

கம்பீரமாய் நிற்கும் கார்ன்வாலிஸ் பிரபு

கோட்டைக் கதவுகளையும் அகழிக் கதவுகளையும் தகர்க்க உபயோகித்த 'பெடார்டு' என்ற பிரம்மாண்ட மான இத்தனை இண்ணம் போன்ற கருவி, 18-ஆம் நூற்றாண்டில் பாய் மரத்தை முறியடிக்க உபயோகித்த சங்கிலிக் குண்டு ஆகியவையும் - இங்கே காக்கப்பட்டு வருகின்றன. மிகக்கிரியக் கம்பெனி அதிகாரிகள் உபயோகித்த பிங்கான் கிண்ணங்களும், பிங்கான் பாண்டங்களும், பிங்கான் தட்டுக்களும் குமிள விளக்கு வெளிச்சத்தில் வெள்ளை வெளேர் என்று மின்னுகின்றன. மூன்றாவது அரங்கில் ஆர்க்காடு நவாபு உபயோகித்த சில பிங்கான் பாண்டங்களும் கூடக் காணப்படுகின்றன. ஒரு பிங்கான் தட்டில் ஐந்தாம் ஜார்ஜ் மன்னரும் மகாராணியாரும் படமாகப் புன்னகை செய்கின்றனர்.

நான்காவது அரங்கில் நுழைந்ததுமே, வலப்புறம் பளிச்சென்று கண்ணில் படுவது அழகான பல்லக்கு. ஏறி உட்காரலாம் போல ஒய்யாரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. முந்நூறு ஆண்டுகளுக்கு முந்தைய பல்லக்குகளின் வரை

படங்களில் ஒன்றைப் பார்த்ததும் வியப்பாய் இருந்தது: ஒரு படத்தில் இன்றைச் சைக்கிள் ரிக்ஷா மாதிரியே அச்சாக ஒரு பல்லக்கு!

1784 முதல் 1877 வரை மதராஸ் ப்ரிட்டிஷ்காரருக்குப் போரில் கிடைத்த பதக்கங்கள், இந்தியாவில் ஆங்கிலேயர், இந்தியச் ப்ரிட்டிஷ்காரருக்கு வழங்கிய பல பதக்கங்கள் (ஒன்று - இலங்கையில் பணிபுரிந்ததற்காக '1795' என்று ஆங்கிலத்தில் பொறித்தது), தரங்கம்பாடி மாதா கோவிலிலிருந்து கொண்டுவந்த ஹுண்டியல், புனித ஜார்ஜ் கோட்டையின் மாதிரி வடிவம், இத்தனையும் தவிர - புனித ஜார்ஜ் கோட்டையைப் பூட்ட உபயோகித்த ராட்சசப் பூட்டுக்கள் மூன்று! பிரம்மாண்டமான சாவிகள் மூன்று!

இவை அத்தனையும் நான்காவது அரங்கில்:

உள்ளே நுழைந்தவுடன் சற்று நேரத்துக்கு உங்களை அயர வைக்கும் அரங்கு-ஐந்தாவது. 108 அடி நீளமும், 26 அடி அகலமும் கொண்ட இந்த அரங்கு, முன்பு நடன மண்டபமாக ஆங்கிலேய அதிகாரிகளால் உபயோகிக்கப் பட்டதாம். மரத்தினால் ஆன கரை. இடப்புறமாக மாட்டியிருக்கும்-புனித ஜார்ஜ் கோட்டையின் ஆளுநராக 1896 முதல் 1900 வரையிருந்த சர் ஆர்தர் ஹேல்லாக் கின் ஆளுயர ஓவியம். நீங்கள் எங்கேயிருந்து பார்த்தாலும் உங்களையே பார்ப்பதுபோல் முப்பரிமாணப் படமாக அமைந்திருக்கிறது!

1903-இல் இந்த ஓவியத்தை வரைந்தவர்கள், ராஜா ரவிவர்மாவும், ராஜா ராஜவர்மாவும். படம் தத்ரூபமாயிருக்கக் கேட்பானேன்? வெலிங்டன் பிரபுவும், சீமாட்டியும், இளவல், ஹோபார்ட் பிரபு, புனித ஜார்ஜ் கோட்டையின் 1738-ஆம் ஆண்டுத் தோற்றம், ஆலன் ராம்சே வரைந்த மூன்றும் ஜார்ஜ் மன்னரின் ஓவியம், தாமஸ் டேலியல் வரைந்த நவாப் அனிம் உத்தவுலா, கர்நாடக நவாப் உம்தத் உல்உமாரா, இவை தவிர, ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் வெள்ளீச் சலவைக் கல் சிலையும், மாண்டேகு பிரபுவின் வெள்ளீச் சலவைக் கல் சிலையும் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றன.

ஆலுல் பார்வையாளரை நிறுத்திலைத்துப் பார்க்கத் துண்டும் வண்ணம், நுழைந்தவுடன், எதிர்ப்படும் பிரம்மாண்டமான ஓவியம், சர் ஜார்ஜ் ஹேட்டர் வரைந்த விக்டோரியா மகாராணியினுடையது. மேற் கூரையிலிருந்தும் எதிரிலிருந்தும் வீசும் இயற்கை



மூன்றாவது கிருஷ்ணராஜ உடையார், தம் ராணிமாருடன்



ஸர் ஜார்ஜ் ஹேட்டர் வரைந்த விக்டோரியா மகாராணியின் ஓவியம்

ஒளியில் இந்த ஓவியம் உயர் பெற்று நிற்கிறது!

ஆறுவது அரங்கை மிக முக்கியமான ஒன்றுகக் கருதவேண்டும். இருபுறமும் துவார பாலகர் போல் சட்டிப் பீரங்கியை வைத்திருக்கிறார்கள், நுழை வாயிலில்.

1854-ஆம் வருடம் நவம்பர் மாதம் இருபத்தேழாந் தேதி, விக்டோரியா மகாராணியாரின் கடிதத்தைத் திருவாங்கூர் மகாராஜா ஏற்றுக் கொள்ளும் படம் பிரதானமாகத் தெரிகிறது:

தஸ்தாவேஜுகள் என்ற குறிப்புடன், சில முக்கியக் கடிதங்களின் அசல் பிரதிகளைக் கண்ணுடிக் கூண்டில் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறார்கள். பெரும் பாலும் ராபர்ட் க்ளைவ் கல்கத்தாவிலுள்ள பொறுக்குக் குழு (Select Committee) வுக்கு எழுதியவையே:

படையினரின் நடமாட்டம் பற்றி-ஜூலை 14, 1756-இல்;

படையிலிருந்து பாதியில் ஓடிவிட்ட துரப்புக்கள் பற்றி- கடலூர் அருகேயுள்ள புனித டேவிட் கோட்டையிலிருந்து, ஜூலை 19, 1756-இல்;

புனித ஜார்ஜ் கோட்டை நிர்வாகம் பற்றி-ஜனவரி 20, 1757-இல்;

மார்ச் 11, 1757-இல் எழுதிய கடிதம் ஒன்றில், 'டியர் சார்' என்று ஆரம்பித்துக் கடிதத்தை முடிக்கும்போதும் 'டியர் சார்' என்று முடித்திருக்கிறார் க்ளைவ்!

கர்நாடக நிலைமை பற்றி, காரன்வாலிஸ் பிரபு, நவாபுக்கு மார்ச் 14, 1794-இல் எழுதிய கடிதம் ஒன்றும் காணப்படுகிறது:

ஏழாவது அரங்கில், தாமஸ் டேலியல் என்ற ஓவியர், 1798-இல் வரைந்த சிறந்த ஓவியங்களில், மதுரை மீனுட்சியம்மன் ஆலயமும், தஞ்சை பிரகதீசுவரர் கோவிலும் அன்றைச் சூழலில் அமைதியாகத் தெரிகின்றன. ஒளி - நிழல் அமைப்பு, இந்த ஓவியங்களைப் புகைப்படங்களாகவே காட்டுகிறது.

18-19-ஆம் நூற்றாண்டுகளில் புழக்கத்திலிருந்த இந்தோ-டேனிஷ் நாணயங்கள், 17-18-ஆம் நூற்றாண்டு களிலிருந்த இந்தோ-டச்சு நாணயங்கள் சில, 19-ஆம்

நூற்றுண்டு இத்தேர-போர்க்கத்திய நாணயங்கள், 17-18-ஆம் நூற்றுண்டு கலன் சென்னை தங்கசாலையிலும், கல்கத்தாவிலும், பம்பாயிலும் ஆங்கில லேய மிழக்கிந்தியக் கம்பெனியார் அடித்த நாணயங்கள் சிலவும் காட்சியில் காண்கின்றன.

தாமஸ் டேலியல் வரைந்த புகைப்படத்துக்கு நிகரான சில ஓவியங்களில் மதுரை அரண்மனையின் உட்புறத் தோற்றம், காவிரிக் கரையிலிருந்து திருச்சி மலைக்கோட்டையின் தோற்றம், காஞ்சிபுரத்தில் ஆங்கிலேய சேனையின் ஒரு காட்சி, ஆர்க்காட்டில் ஆங்கிலேயப் படையின் முகாம், திருக்குழுக் குன்றத்துக் கோயில், பாபநாசம் நீர் வீழ்ச்சி ஆகியவை மிக முக்கிய மானவை. இந்த ஆங்கிலேய ஓவியர் எத்தனை படங்களை இப்படி வரைந் திருப்பாரோ!

எட்டாவது அரங்கு முழுவதையும் இந்திய-பிரெஞ்சு சரித்திர சம்பந்த மான சலவைக்கல் சிற்பங்கள், மேசை நாற்காலிகள், மேசைக் கடிகாரங் கள், தபால்-தலைகள் ஆகியவை கொண்டு அலங்கரித்திருக்கிறார்கள்.

19-ஆம் நூற்றுண்டுப் பீங்கான் பாத்திரங்களும், தீபங்களும், நிற ஏந்திகளும் வெகு நேர்த்தி யாக உள்ளன. சில தீபங்கள் இன்றைய நவீன வீடுகளில் காணப் படும் விளக்குகள் போலவே இருக் கின்றன! பழைய மோஸ்தரே. காலப் போக்கில் நவீனபாணி ஆகும் விந்தை இது!

பிரதானமாக விளங்கும் வெள்ளைச் சலவைக்கல் சிலையில், பிரெஞ்சுக் குடியரசுத் தேவதை 'மரியா' எல்லாரை யும் கவர்கிறுள்.

போர்ச்சுக்கியரைப் போலவே, ஆங்கிலேயரும் பிரெஞ்சு நாட்ட வரும் கி.பி. 1529 முதற் கொண்டே இந்தியாவுடன் வர்த்தகத் தொடர்பு கொள்ள முயன்றனர். கி.பி. 1664-இல் பதினான்காம் லூயி மன்னன், அவனு டைய அமைச்சர் கால்பாட்- இவர்க ளின் ஆசியோடு தோற்றுவித்து 'பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி' அதன் முதல் வர்த்தகத் தலத்தை சூரத்தில் நிறுவியது. பிறகே பல இடங்களில் விரிவடைந்தது. அதில் ஒன்றைப் புதுச்சேரியில், பிராங்கோய் மார்ட்டின் என்பவர் கி.பி. 1674-இல் துவக்கினர். இந்த ஊரே பிறகு இந்தியாவிலுள்ள பிரெஞ்சுக்காரர் களுக்குத் தலையகமாக வழங்க லாயிற்று. இவர்கள் வசமிருந்த புதுச் சேரி, மாஹி, காரைக்கால், ஏனும், சந்திரநாகூர் எல்லாம் 1954-இல்தான் இந்தியாவுடன் இணைந்தன என்பது சமீபத்திய சரித்திரம்.

இதே புனித ஜார்ஜ் கோட்டையை 1764-இல் பிரெஞ்சுக்காரர்கள் கைப் பற்றினர்கள். பிறகு இது ஆங்கி லேயர் வசம் மாறிப் போயிற்று.

தஸ்தாவேஜுகளில் ஒன்று கர்னல் பஸ்லியின் டைதம், ஜூலை 7, 1758 தேதியிட்டது. காஞ்மல் போன சில நபர்களைப் பற்றியது. பிரெஞ்சு மொழியில் புனித ஜார்ஜ் கோட்டை பற்றிய விளக்கம் ஒன்றைப் பத்திர மாகப் பாதுகாத்து வருகிறது. பிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவில் அச்சிட்ட பித்தனே, வெள்ளி நாண யங்கள் சிலவும் இருக்கின்றன.

அரங்கு ஒன்பதில் மைசூர் உடை யார்களைப்பற்றிய விவரங்கள் காணப் படுகின்றன. குறிப்பிடத் தக்க நற் பணிகளைச் செய்தவரும், புது மாதிரியான தங்க நாணயங்களை அறி முகப்படுத்திய வருமான காண்டீரவ நரசராஜ உடையார் (1615-1659) அவர்களின் மாதிரி சிலை, நுழைந்த வுடன் இடப்புறத்தில் கம்பீரமாகத் தெரிகிறது.

மூன்றுவது கிருஷ்ணராஜ உடை யார் (1794-1868) தம் ராணியா ருடன் காட்சி தருகிறார், அழகான சிலை வடிவில். இப்பு சுல்தானே எதிர்த்து,



மரியா

ஆங்கிலேயர் நிகழ்த்திய ஸ்ரீரங்கப்பட் டணப் போரில் வெற்றி கண்டவுடன், மைசூர் அரண்மனைச் சிம்மாசனத் தில், 1799-ஆம் ஆண்டு ஜூன் மாதம் முப்பதாம் தேதி இவரை அமர்த்தினர் களாம். அப்போது அவருக்கு வயது ஐந்து! திவான் பூர்ணையா 1811 வரை திவானுக இருந்து வந்தார். நிர் வாகத்தில் முக்கியச் சீர்திருத்தங் களைச் செய்து, நாட்டின் ஸ்திரமான ஆட்சியை நடத்தக் காரணமாயிருந் தவர் மூன்றுவது கிருஷ்ணராஜ உடை யார்.

இந்த அரங்கில் காணப்படும் அரிய தான இரண்டு தத்ருபமான ஓவியங் களில் ஒன்று: எஸ்.வி. லூயி வீனியர் வரைந்த மைசூர் மகாராஜாவின் தர்பார். இன்னென்று, இப்பு சுல் தானுடைய குமாஸ்தைகளான, காரன் வாலிஸ் பிரபுவிடம் பணயமாக ஒப்படைக்கும் காட்சியைச் சித்திரிக் கும் அற்புதமான ஓவியம்; டேனி யல் ஓர்ம் என்ற ஓவியர் வரைந்தது. இந்தச் சித்திரம் அங்கங்கே உதிர்ந்து சிதிலமடைந்திருந்தாலும், இதன் பாத்திரங்கள் அத்தனை பேரும் அந்தச் சூழ்நிலையின் சோகத்தை முகங்களில் தேக்கி, உயிரோடு நிற்கின்றனர்!

கடையாக வருகிறது பத்தாவது அரங்கு.

1749-இல் கிங்ஸ்டனில் பிறந்து, 1840 வரை வாழ்ந்த தாமஸ் டேலி யல் என்னும் ஓவியரின் பல அற்புத மான ஓவியங்கள், காட்சிகளை நேரில் பார்க்கிறுற் போல் காண் கின்றன. ஆர்க்காடு நவாபு மாளிகை, கோட்டையின் உள்ளே சில பகுதி கள், அரசாங்க மாளிகை விருந்து மண்டபம், பரங்கிமலைக்குச் சமீப மாயுள்ள ஆர்மீனிய வாராவதி, பல் லக்குத் துக்கிகளும், ஒட்டகம் யானே சவாரிக்காரர்களுமாகப் பழைய சென் னையின் காட்சி, மூன்று ஆளுநரின் மாளிகையாயிருந்த (தற்போதைய ராஜாஜி ஹால்) மண்டபம். 1807-இல் டேவர்ட் ஓர்ம் வரைந்த இந்தச் சித்தி ரத்தைப் பார்த்தால், இருநூறு ஆண்டுகளுக்கு முன்னே நாம் சென்னை யைப் பிரத்தியட்சமாகக் காணு கின்ற உணர்ச்சி எழுகிறது. ஆங்கி லேய வர்த்தகர்களின் வருகையும், புறப்பாடும் என்கிற இரு படங்களும் ஜே. பி. ஈஸ்ட் வரைந்தவை - இந்த அரங்கின் முக்கிய ஓவியங்கள்.

அரும் பொருள் காட்சியகத்தை முழுக்கப் பார்த்து விட்டீர்கள், நீங்கள் இப்போது. இவி மெல்ல, மயிற்றுப் பாய் விரித்த, மரப் படிக்கட்டுகளில் அதிராமல் இறங்கி வாருங்கள்.

கட்டுரையை முடிக்கு முன் ஒரு விஷயத்தை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும்:

இந்தப் பிரம்மாண்டமான அரும் பெருஞ் காட்சியகத்தை இத்தனை சுத்தமாகவும், நேர்த்தியாகவும், கினசரி வருகிற நூற்றுக்கணக்கான உள் நாட்டு-வெளி நாட்டுப் பார்வை யாளர்களுக்குத் தேவையான விவ ரங்களோடு பாதுகாத்து வரும் இதன் துணை மேலாளர், காட்சியகக் காப் பாளர் இருவரையும் மட்டும் பாராட் டினுல் போதாது. பணிவும், நேசமான புன்கையும் கொண்டு, பார்வை யாளரிடம் பண்போடு நடந்து கொள் ளும் இதன் பதின்மூன்று காவலர்களை யுங்கூட மனமாரப் பாராட்டே வேண் டும்.

இன்னெரு முக்கிய சந்தோஷ சமா சாரம். இத்தனை மாடசி பொருந்திய காட்சியகத்தை வேறு இடத்துக்கு மாற்றப் போவதாகவும் கட்டிடத்தை இடிக்கப் போவதாகவும் ஒரு செய்தி முன்பு வெளிவந்தது. அது ஒரு வதந்தி தான் என்பது இப்போது நிச்சய மாகிவிட்டது.

—போட்டோ:
எம். கே. ராமமூர்த்தி


PALAYAKAT COY.PVT.LTD.
MADRAS
MADRAS
REGD. TRADE MARK
பளயகாட்ஸ்
சங்கு மார்க்
லுங்கிகள்
கைக்குட்டைகள்
மதராஸ் பளயகாட் கம்பெனி(பி)லிட்.
88, அரண்மனைக்காரத தெரு, சென்னை-600 001
CHARI



அரக்கர்கள் பலர்
இருக்கின்றரே...
அழிக்கும் கடமை
நமக்கும் உண்டு.

அன்றொரு நரகனைக் கொன்றான் கண்ணன்;
வென்ற நினைப்பை விளக்குது எங்கள்
விளக்கு விழா! விளக்கு விழா!

இன்றைய நரகரோ: இருட்டு, ஏழ்மை
இன்னல், கொடுமை! இவற்றை வலுவாய்
எதிர்ப்பது யார்? வதைப்பது யார்?

பஞ்சை மக்கள் உயர்வே குறியாய்
பாங்க் ஆஃப் இந்தியா பணிபுரிகின்றார்
பல்லாண்டாய்! பல்லாண்டாய்!

எளியோர் முகத்தில் களிநகை மின்ன
இலக்குமி அருளோ அழைக்குது எங்கள்
விளக்கு விழா! விளக்கு விழா!

பாங்க் ஆஃப் இந்தியா

ஒரு இந்திய அரசு நிறுவனம்

dsCuma/BOI/179/81 TAM

சங்கர் மகாகோபத்தில், இப்படி அப்படி என்று சொல்ல முடியாத கோபத்தில் இருந்தான்.

பின்னே?

ஐந்தரை வரை தேர்முகத் தேர்வு. ஆபீஸில் காத்திருந்து விட்டு ரெயில் போய் விடுமே என்ற பதைப்பில் ஒட்டமாய்ச் சித்தி வீட்டுக்கு வந்து, அவள் நீட்டிய காபியை நின்று நிதானித்துக் குடிக்க அவகாசம் இல்லாமல், ஒரு வார்த்தை சாவகாசமாகப் போய் வருகிறேன் என்று சொல்லப் போது இல்லாமல், கைப்பையில் அவள் கொடுத்த இட்லிப் பொட்டலத்தைத் திணித்துக் கொண்டு, ஆட்டோ பிடித்து, அவசரத்துடன் டிக்கெட் வாங்கி, ஒரு பத்திரிகை வாங்க நேரம் இல்லாமல், புறப்படத் தயாராக இருந்த புதுச்சேரி எக்ஸ்பிரஸில் தாவி ஏறி, அப்பாடா என்று பெரு மூச்சு விட்டு, ஒடிவந்த களைப்புத் தீர ஒரு சிகரெட் பிடித்து, எழுந்து நின்று சோம்பல் முறிப்பதற்குள், தாம்பரத்தைத் தாண்டின கையோடு வண்டலூருக்கும், கூடுவாஞ்சேரிக்கும் நடுவில் ஓர் அத்துவானக் காட்டில் திடுமென்று நின்ற வண்டி. ஒரு மணி நேரமாகியும் இளம்பிள்ளை என்ஜின் கிரிப்பா வரும்?

வண்டி நின்றபோது வெளிச்சம் இருந்து காற்று ஜிலு ஜிலுத்ததால் மின்சாரம் தடைப்பட்டு மின்விசிறி நின்றது. "அத்தனே உறுத்தலில்லே. ஆனால் இந்த ஒரு மணி நேரத்தில் இருட்டு அரவணைக்கத் தொடங்கி, கொசுக்கள் சுருதி சேர்க்க ஆரம்பித்து, காற்றச் சுத்தமாய் நின்று போனதுந்தான் நிலைமை தாங்க முடியாமல் போயிற்று.

வண்டி ஏன் நின்று விட்டது என்று பார்த்தவர்களே விசாரித்தாகி விட்டது.

''லிங்கல் கிடைக்கலேயாம்.''

''தண்டவாளத்துலே ஏதோ கோளாறும்.''

''முன்னுல் ஒரு குட்ஸ் வண்டி தடம் புரண்டுடுத்தாம்.''

''ப்ரேக் சரியா இல்லேயாம்.''

என்ன என்னவோ ஊகங்கள். தங்களுக்குத்தான் தெரிந்த மாதிரி தலைக்குத் தலை காரணங்கள்.

என்ஜின் வரையோ, இல்லே கார்டு பெட்டி வரையோ நடந்து போனுல் டிரைவரிடம், காரிடமும் என்ன சமாசாரம் என்று கேட்டு வரலாம்.

ஆனுல், இந்தச் சகதியில் யார் அவ்வளவு தூரம் நடப்பது?

முதல் நாள் பெய்த மழையில் சொத சொதத்திருந்த தரையில் கால் வைக்கவே பிடிக்காமல் போக, பெட்டியிலிருந்து இறங்கி நின்று கொண்டவன் நிட்டாக இருந்த புவெளியில் பத்தடி திரும்பித் திரும்பி நடந்தான். நாலு சிகரெட்டுகளைப் புகைத்துத் தீர்த்தான்.

திரும்ப ரெரிச்சலாக இருந்தது. 'என்ன நாடு, என்ன மக்கள்' என்று நித்தமும் ஆயிரமாயிரம் முறைகள் சலித்துக் கொள்வதைப் போல இப் போதும் சலித்துக்கொண்டான்.



கூடவே, 'என்ன ரயில்வே, என்ன நிர்வாகம்' என்று மோனை மோனை வென்று முனகி, ஆசை நீர நெஞ்சுக்குள் அத்தனை சமாசாரங்களையும் இட்டிருஞன்.

சங்கர் ஓர் எம்.ஏ., பட்டதாரி. படிப்பை முடித்து ஆறு மாசமாய்த் தீவிரமாய் வேலை வேட்டையில் சுடுபட்டும் பலன் எதுவும் கிட்டாத பட்டதாரி. சரியான இந்தக் கால இளவட்டம். எதிலும் அவசரம், நிதானம் இன்மை, ஆத்திரம், சலிப்பு.

அப்பாவுக்கு விழுப்புரத்தில் வேலை. அம்மா, இரண்டு தங்கைகள். வேலை கிடைக்கலில்லே என்று அவன் கோபப்படும் போதெல்லாம் அப்பா, 'அடவிவரம் கெட்ட பிள்ளையே' என்கிற தினுசில் சிரிப்பார். பின், ''மெதுவாக் கிடைக்கட்டும் சங்கர். ஆறு மாசம் தானே ஆறது? அதுக்குள்ளே அவசரப்பட்டா எப்படி? நல்ல வேலே வேணும்னு ஆசை இருக்கு, சுமாராணதை ஒத்துக்க ரெடி இல்லே. அப்ப பொறுத்துத்தானே ஆகணும்பா? நீ உடனே வேலேக்குப் போகணுங்கற முடை, இப்ப நமக்கு இல்லே. மனசுக்குப் பிடிச்சது அமையறவரைக்கும் எங்களோட ஒய்வா இரேன். வேலே கிடைச்சா எந்த ஊருக்குப் போய் எங்கே தங்கப் போறியோ! அதுவரைக்கும் ஒய்வா வாழ்க்கையை ஏத்துக்கக் கத்துக்கோ சங்கர்.''

'அது சரி. அப்பாவுக்கு என்ன, கின்னச் சிரிப்போடு ஒய்வு' என்கிறார். என்னேவிட தருநி குறைவான பசங்களெல்லாம் மஹா மஹா பெரிய வேலேயில் சிபாரிசோடு உட்கார்ந்து விட்டு, காரும், வீடுமாய் இருக்கும் போது எங்கேயிருந்து நான் ஒய்வாக இருப்பது?'

இப்போது கூட ஒரு நேர்முகத் தேர்வுக்குத்தான் போய்விட்டு அவன் திரும்பிக் கொண்டிருக்கிறான்.

மதியம் மூன்று மணிக்கு வரச் சொல்லி இருந்ததால், காலே வண்டியில் புறப்பட்டு வந்தான்.

அவனேயும் சேர்த்து வந்திருந்த வர்கள் மொத்தம் பதினெரு பேர்கள்.

அவர்களில் விளக்கெண்ணெய் மூஞ்சியும், அழித்தால் சாதாரண அளவில் இரண்டு பேர் பண்ணலாம் போல இருந்து ஒருவன் 'நான் ஜி.எம். மோட அக்கா மகன்' என்று பெருமை பீற்றிக் கொண்டதுமே சங்கருக்கு இந்தத் தேர்வு ஒரு கண்துடைப்புத்தான் என்பது தெளிவாயிற்று.

பல்லீக் கடித்துக் கொண்டு வந்து விட்டோமே என்ற நினப்போடு உட்கார்ந்திருந்தவனுக்கு மனி ஐந்தரை ஆனதும், 'இனியும் இருந்தால் வேலேயோடு ரெயிலேயும் கோட்டை விடுவது நிச்சயம்' என்று தோன்ற, 'நீயும் வேண்டாம், உன் வேலேயும் வேண்டாம்' என்று புறக்கணித்து விட்டு வந்து விட்டான்.

அந்த நேர்முகத் தேர்வு அதிகாரியும், அந்த விளக்கெண்ணெய் மூஞ்சியும் நிழலாகக் கண்முன் தோன்ற, பிடித்துக் கொண்டிருந்த சிகரெட்டைக் காலடியில் போட்டு அழுத்த மாகச் சங்கர் நசுக்கினன்.

'சே! என்ன நாடு, என்ன மனிதர்கள்? எதிலும் பொறாமை; இறமைக்கு மதிப்பே இல்லாத நாடு.'

சுதந்தரம் கிடைத்து என்ன பிரயோசனம்?

எல்லாவற்றிலும் ஓர் அசமந்தத் தனம். பொறுப்பின்மை, நான் நன்றாக இருந்தால் போதும், அடுத்தவன் எக்கேடு கெட்டால் எனக் கென்ன என்ற சுயநல மனப்பான்மை.

சே!'

மதியத்திலிருந்தே முகமுகவென்று குமுறிக் கொண்டிருந்த எரிச்சலுடன் இந்த ரெயில் சமாசாரமும் சேர்ந்து கொள்ள, ஆத்திரம் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்துக் கொண்டே போனதில் என்ன செய்வது என்று புரியாத அவஸ்தையுடன் தவித்தவன் திரும்பத் துவங்கி, கொக்கரக்கு காதுக்கருகில் ராகம் பாட ஆரம்பித்ததும், திரும்பப் பெட்டிக்குள் ஏறினன்.

உள்ளே அவ்வளவாய்க் கூட்டம் இல்லே. மொத்தப் பெட்டியிலும் பத்துப் பேர் இருந்தால் அதிகம்.

மங்கிய அந்த வெளிச்சத்தில் கண்களே அலேய விட்டபோது சங்கரின் பார்வை அவள் மேல் விழுந்தது.

வண்டி நின்று இழே இறங்கும் போதே அவளே அவன் பார்த்து விட்டான். வெள்ளைக்காரி.

புடவை, ரவிக்கை, சின்ன கீ கொண்டையில் பாந்தமாக இருந்தாள்.

அத்தனே பேர்களும் புழுக்கம் தாங்காமல் இறங்கி நின்ற பிறகும் இருந்த இடத்தை விட்டு அசையாமல் அவள் இருந்ததையும் சங்கர் கவனித் திருந்தான்.

இப்போது கதவில் சாய்ந்து சிகரெட் பிடித்தபடி அவனே நன்றாகப் பார்க்கையில், அவள் கண்களே மூடிக் கொண்டு அமர்ந்திருப்பது புரிந்தது.

'தூங்குகிறாளா? இந்தப் புழுக்கத் திலா?

•இது இவளுக்கு எப்படிச் சாத்திய மாகிறது?'

அப்படியே நின்று அவளேக் கவனித் தவன், தன் இருக்கைக்குப் போக லாமா என்று யோசித்த நிமிஷத்தில் 'பாங்' என்று பெரிசாய்க் குரல் கொடுத்து, தான் புறப்படத் தயார் என்பதை என்ஜின் சொல்லியது.

இறங்கி நின்றவர்கள் அவசரத் துடன் ஏறிக் கொள்ள, சலித்து அமர்ந்திருந்தவர், 'அம்மாடி!' என்ற ரிம்மிடப் பெருமூச்சு விட வண்டி கிளம்பியது.

வேகம் எடுத்ததும் மின் விளக்கு களும், விசிறிகளும் வேலே செய்யத் தொடங்கின.

வெளிச்சத்தில் அந்தப் பெண் மிகவும் நன்முகவே இருந்தாள்.

அந்தக் கறுப்புத் தலேமுடியும், லிப்புப் பொட்டும், காவிநிறப் புடவையும் அவளுடைய நிறத்தில் அழகாக எடுபட்டன. 'இவளிடம் பேச்சுக் கொடுத்தால் என்ன?' பேசுவாளோ?'

கண்ணனேத் திறந்து ஜன்னலுக்கு வெளியில் தெரிந்த இருட்டைப் பராக்குப் பார்த்தவளின் எதிரில் சென்று நின்று கொண்டான்.

''மன்னிக்கவேணும். இங்கே நான் உட்காரத் தடையில்லேயே!'' என்முன்.

அவள் திரும்பினுள்.

இவனே ஏறிட்டு மெல்ல 'இல்லே' என்று தலே அசைத்தாள்; அருகே உட்கார்ந்தான்.

''ரொம்பப் புழுக்கமாய் இருந்தது. எப்படி நீங்கள் வண்டிக்குள்ளேயே உட்கார்ந்திருந்தீர்களோ? இப்போது தேவலே, இல்லே?''

அவள் பதில் சொல்லாமல் சிரித் தாள்.

''எங்கே, புதுச்சேரிக்கா?''

''ம்ம்..''

''அரவிந்தர் ஆசிரமத்துக்கா?''

''ம்ம்..''

மேலே என்ன பேசுவது என்று புரியாமல் விழித்துவிட்டு, ''என் பெயர்



சங்கர்'' என்று தன்னை அறிமுகப் படுத்திக்கொண்டான்.

அவள் அவனைப் பார்த்தாள். பிறகு, ''சம்—நல்லதை, கரன் செய்பவன்; இல்லையா?'' என்றாள் புன்னகையுடன்.

அந்தக் குரல் நிரம்ப மென்மை யாக இருந்தது; பட்டுப் போல வழ வழவென்று இருந்தது.

'அட! இவளுக்குச் சம்ஸ்கிருதம் தெரியுமா என்ன? என் பேருக்கு இத்தனை கச்சிதமாக அர்த்தத்தைச் சொல்கிறாளே!'

தன் வியப்பைத் தெரிவிக்கும் வகை யில் சங்கர் சன்னமாக விளில் அடித்துக் கண்களை விரித்தான்.

''என் பேர் ஸ்மிதி. நீங்களும் புதுச்சேரிக்குத்தான் போகிறீர் களா?''

''இல்லை. நான் என் பெற்றோ குடன் விழுப்புரத்தில் இருக்கிறேன். விழுப்புரத்தைத் தாண்டித்தான் நீங்கள் புதுச்சேரிக்குப் போக வேண்டும்.''

''அப்பா, அம்மாவோடு சேர்ந்து தான் வசிக்கிறீர்களா?''

சங்கர் இகாஞ்சம் சங்கடப்பட் டான். 'என்ன நீண்டதுக் கொண்டு இவள். இந்தக் கேள்வியைக் கேட் கிறாள்?

'ஏண்டா தடியா, இரண்டு மாடு வயசு இருக்கும் போல்ருக்கிறது. இன் னுமா பெற்றோரோடு இருக்கிறாய்? என்னைப் பார், உன்னைவிட இன்ன வள், தனிக்காட்டு ராணியாக வாழ்கி றேன்' என்று கேலி பண்ணுகிறாளோ?

''ம்ம்..வந்து எம்.ஏ. இப்போது தான் முடித்தேன். வேலை தேடிக் கொண்டிருக்கிறேன்.''

சங்கரின் அவஸ்தை புரியாத மாதிரி லிண்டி தொடர்ந்து அவன் குடும்பத் தைப் பற்றியே நிறையக் கேள்விகள் கேட்டாள்.

அப்பா, அம்மா, தங்கைகளைப் பற்றிக் கூறினபோதும், வேலை கிடைத்து விட்டாலும் உடனே மணம் செய்து கொள்ளும் உத்தேசம் இல்லை, தங்கைகளுக்குக் கல்யாணம் செய்வித்த பிறகே தன் சொந்த வாழ்க்கையைப் பற்றி யோசிக்க இயலும் என்பதைச் சொன்ன போதும் அத்தனையையும் உன்னிப் பாகக் கேட்டுக் கொண்டாள். நடு 'நடுவில் நல்லது.' 'ரொம்ப விசே ஷம்' என்ற கண்ணகல கூறினாள்.

அவள் இந்தியாவுக்கு வருவது இதுதான் முதல் தடவையாம். வட இந்தியாவில் சில மாசங்கள் இருந் தாளாம். இப்போது தெற்கே வந்து நாலு நாட்கள் ஆகின்றனவாம். சென்னை, காஞ்சிபுரம் பார்த்துவிட்டு, புதுச்சேரிக்குச் சென்று கொண் டிருக்கிறாளாம்; அவள் சொன்னாள்.

மணி ஆகிவிட்டதால் சங்கர் எழுந்து சென்று கைப்பையை எடுத்து வந்து, சித்தி கொடுத்த இட்டிலிப் பொட்டலத்தைப் பிரித்து அவளிடம் நீட்டினான்.

''நன்றி; ஆனால், வேண்டாம். உங்கள் சாப்பாடு, எனக்கு இன்னும் பழகவில்லை. சென்னைக்கு வந்த அன்று ஒரு ஹோட்டலில் இட்டிலி சாப்பிட்டேன். மறுநாளிலிருந்து வயிற்றுப் போக்குத் தொடங்கி விட்டது. நீங்கள் சாப்பிடுங்கள், எனக்குப் பிஸ்கட் இருக்கிறது.''

புன் சிரிப்பு மாறாமல் அவள் பேசி னலுங்கூடச் சங்கருக்கு எப்படியோ இருந்தது.

''இது எங்கள் நாட்டுக்கு ஒரு பெரிய சாபக்கேடு லிண்டி. எதிலும் சுகாதாரம் கிடையாது. சாப்பாட் டில், சுற்றுநிலையைத் தப்புரவாக வைத்துக்கொள்வதில் எ தி லு ம் கத்தம் கிடையாது. மகா மோசம். வெளி நாட்டிலிருந்து யார் வந்தா லும் மறுநாளே அவஸ்தைப்பட ஆரம் பித்து விடுகிறார்கள். ஏழை நாடா யிருந்தால் என்ன? சுத்தமாக இருக்கக் கற்றுக் கொள்வது பெரிய விஷயமா? பேசச் சொல்லுங்கள், பிரமாதமாய்ப் பேசுவோம். காரியத்தில் ஒன்றும் இல்லே. எல்லா விஷயங்களிலும் நாங்கள் பூஜ்யந்தான். பேச்சைக் குறைத்துக் கொண்டு நிறமைகளை என்று வளர்த்துக் கொள்ளப் போகி ருமோ? ஹூம்! எங்கள் நாடு உருப் டும் என்று எனக்குத் தோன்ற வில்லே!''

முகத்தைச் சுளித்துக்கொண்டு பேசி யவளை லிண்டி ஏறிட்டுப் பார்த்தாள்.

''சுத்தம், சுகாதாரம் இந்நாட்டு மக்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் நிஜமான அன்பைக் கொடுக் கத் தெரிகிறதே; இது எத்தனை பெரிய விஷயம்? பந்த பாசங்களை மறந்து விடாமல் மனுஷர்களாக வாழத் தெரிகிறதே; இது எத்தனை பெரிய விஷயம்? எல்லாவற்றிலும் முன்னேறி யிருக்கும் எங்கள் தாய் நாட்டை விட்டு விட்டு, போலித் தன்மை இல் லாத உங்கள் விவேகத்தாலும் அன் பாலும் என் போன்ற ஆயிரக்கணக் கானவர்களை இங்கு வரும்படி சுவர் கிறீர்களே; இது எத்தனை பெரிய விஷயம்! ம்..?''

நிறுத்தி நிதானமாக லிண்டி பே ச, சங்கர் பிரமித்துப் போனான்.

''ஹோ சே என்ன நாடு, என்ன மக்கள் என்று நாம் சதா கரித்துக் கொட்டும் இந்த நாடு, இந்த மக்கள்மேல் இவளுக்கு இத்தனை பெருமையா?

''அன்பே சிவம் என்று சொல்வது இந்த நாடுதானே? புத்தர், ராமர்,



ராமகிருஷ்ணர், விவேகானந்தர், காந்தி எல்லாரும் அவதரித்தது இந்த நாட்டில்தானே? ஆன்மாவைப் பற்றியும் ஸ்திதப்ரஜ்ஞர் பற்றியும் விளக்கமாகப் புரியும் விதத்தில் விளக்குவது உங்கள் கீதைதானே? வாழ்வின் அர்த்தம் என்ன, மனிதனுடைய பிறந்தவரின் கடமைகள் என்ன என்ன என்று சொல்லி வாழ வழிகாட்டுவது உங்கள் வேதங்கள் அல்லவா? சொல்லுங்கள் சங்கர். இந்த இந்தியாவையா உருப்படாத நாடு என்று சொல்கிறீர்கள்? கடவுளே! நீங்கள் வினயாட்டாகச் சொல்கிறீர்கள்; அப்படித்தானே?''

அசட்டுச் சிரிப்புடன் சங்கர் சமாளிக்க முயல, அடுத்து வந்த இரண்டு மணி நேரங்களும் லிண்டி திறையப் பேரிளுர். தன்னைப் பற்றி, தன் நாட்டைப் பற்றிச் சொன்னுள். பந்த பாசத்துக்கு அர்த்தம் இல்லாமல் வாழும் பல குடும்பங்களில் தன்னுடையதும் ஒன்று என்று சொன்னுள். அழுத்தமான பிடிப்பு இல்லாமல் வாழ்க்கை நடத்தும் பெற்ருேர்களைப் புரிந்து கொள்ள முடியாமல் அவஸ்தைப்பட்ட போது 'ஹரே ராமா, ஹரே கிருஷ்ணு'வின் தொடர்பு கிடைத்தது என்றும், அதன் மூலம் இந்திய இதிகாசங்களைப் படிக்க நேர்ந்ததையும் கூறி, ஸ்ரீராமனின் கல்யாண குணங்களால் ஈர்க்கப்பட்டு, இந்தியாவுக்கு வந்து ரிஷிகேசத்தில் ஓர் ஆசிரமத்தில் யோகம், தியானம் பயின்றதையும் தற்சமயம் மனசு லேசாகச் சந்தோஷமாக இருப்பதையும் பற்றி நீளமாகச் சொன்னுள்.

கேட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்த சங்கருக்குத் திடுமென்று நிரம்ப அவமானமாக இருந்தது.

''நம்ப பூமி புண்ணிய பூமிடா'' என்று அம்மா கண்கள் பிரகாசிக்கச் சொல்லுவது, ''இது ஸநாதன தர்மம் தழைக்கிற மண்ணுடா. இதுவே பிறக்கதற்கும், வாழ்வதற்கும் கொடுத்து வைச்சிருக்கணும்'' என்று அப்பா இவன் தளர்ந்திருக்கும் போதெல்லாம் தட்டிக் கொடுத்துப் பேசுவது.

இன்றும், இங்கேயும், அங்கேயும் ஓயாமல் நம் நாட்டுப் பெரியவர்கள் கிழந்து காதலாகிக் கண்ணீர் மல்கக் கூறுவது. எல்லாவற்றுக்கும் அப்போது விளங்காத அர்த்தம் இப்போது இந்த லிண்டி பேசப் பேச மண்டையைப் பிளந்துகொண்டு உள்ளே பதிந்து புரிகிறமாதிரி இருந்தது.

விழுப்புரம் வந்து விட்டது.

வண்டியில் ஏறும் போது இருந்த ஆத்திரம் இல்லை. எரிச்சல் இல்லை. லிண்டி சொல்லும் நினுவில் உள்ளுக்குள் என்னவோ பூப் பூவாய்ப் பூத்து விட்ட மாதிரி ரம்யமாய் இருந்தது.

'விழுப்புரம் வந்தால் அவசியம் வீட்டுக்கு வாருங்கள்' என்று சொல்லி விலாசம் தந்து விட்டு வீட்டுக்கு வந்தான்.

அப்பாவும், அம்மாவும் வாசற்படியிலேயே காத்து நின்று, ''ஏம்பா இத்தன நாழி?'' என்று கவலையுடன் விசாரித்தபோது, லிண்டி, 'உங்கள் நாட்டில் நிலமான பந்தபாசம் இன்னும் உயிரோடு இருக்கிறதே; இது பெரில்லையா?' என்று கேட்டது நினைவுக்கு வந்தது.

சப்பிட்டுக் கொண்டே, தேர்வுக்குக் காத்திராமல் வந்துவிட்டதைச் சொன்னுன். ரெயில் நின்று ஆத்திரப்பட்டதைச் சொன்னுன். லிண்டியைச் சந்தித்தது, அவள் பேச்சுக்களைச் சொன்னுன். அப்புறம், ''வயசாச்சு, அப்பப்ப கீதையைப் படிக்கப் பழகிக்கோ; வாழ்க்கைக்கு ரொம்ப உதவும்னு சொல்லிவேன், நான் கேட்டதில்லே, அது, நாலேகேருத்து படிக்கப் போறேன்ப்பா'' என்ருன்.

அப்பாடா தில் சொல்லவில்லே. புரிந்தால் சந்தோஷம் என்கிற திருப்தி போடு மெல்லிதாகச் சிரித்தார்.

ராத்திரி சங்கர் நிம்மதியாகத் தூங்கினுன்.

காலே ஆறு மணிக்கு அப்பா அவனை எழுப்பினுர்:

முன்னுல் நின்றவரின் முகத்தில் வேதனே.

என்ன விஷயம்?


பேப்பரை அவனிடம் நீட்டினுர்: மூன்ருவது பக்கத்தில் படத்தோடு ஒரு செய்தி வெள்யாகி இருந்தது.

''நேற்று இரவு பாண்டிச்சேரி எக்ஸ்பிரஸில் ஒரு வெளிநாட்டுப் பெண் கொலை செய்யப்பட்டுக் கிடந்தாள். பிரேத பரிசோதனையிலிருந்து இவர் கற்பழித்து, கொலை செய்யப்பட்டிருப்பது புரிந்தது. போஸ்ட் மார்ட்டம் இவர் அமெரிக்காவைச் சேர்ந்த லிண்டி தாம்ஸன் என்பதைத் தெரிவிக்கிறது. போலீஸார் தீவிரமாகப் புலன் விசாரிக்கிறைனர் ....''

ஒருதரம், இரண்டு தரம் மூன்று தரம் சங்கர் செய்தியைப் படித்தான். 'இல்லே.' இது பொய்ச் செய்தி; நிஜமில்லே.

மனசு முரணியது.

அயோக்கியன் ஒருவனுல் கற்பும், பின் உயிரும் பறிக்கப்பட்ட நிமிஷத்தில் லிண்டி என்ன நினைத்திருப்பாள் என்ற எண்ணம் நிடுமென்று பளபளக்க, சங்கருள் இப்படி அப்படி ரண்டு விவரிக்க முடியாத கோபமும், கூடவே கொஞ்சம் அழுகையும் முட்டிக்கொண்டு கொப்புளித்தன. ✻





உங்கள் அழகுக்கு
அழகூட்டும் குங்கும்

புதிய சுமங்கலி டீலக்ஸ் குங்கும்

இன்று தன் இயற்கை எழிலே எந்த மங்கையும் மேலும் பொலிவுறச் செய்யலாம். உங்கள் ஒப்பனைக்கு மேலும் மெருகூட்டுவது சுமங்கலி குங்கும். கொஞ்சம்கூட வெளியே சிந்தாத சிறந்த பாக்கிங்கில் வரும் குங்கும் அது ஒன்றே. ஆகவே அது உங்கள் கைப் பையிலோ அல்லது டிரஸ்ஸிங் டேபிள் மேலோ வைத்துக் கொள்ள உகந்தது. சுமங்கலி உங்களுக்குப் பிடித்தமான பலவித வண்ணங்களில் கவர்ச்சி யான ஜாடிகளிலும், பௌடர் உருவிலும் மற்றும் டீலக்ஸ் பர்ஸ் பாக்கிங்குகளிலும் கிடைக்கிறது.



டீலக்ஸ் குங்கும்
சுமங்கலி
ஒரு கேசவர்த்தினி தயாரிப்பு

OBM 4952TM

HEARTIEST
DEEPAVALI
GREETINGS

AMCO
AMCO BATTERIES LIMITED

MAC / AM / 1281

அனைவருக்கும் எங்கள் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

எத்தனை மலர்கள்
எத்தனை நிறங்கள்
அத்தனையும் மிஞ்சும்
அற்புத வடிவங்கள்
கீதா உங்களுக்கு
வழங்குகிறது,
இந்த தீபாவளியை
இன்பமுடன் கொண்டாட
கீதா உருவாக்கிய வர்ணக்
கோலங்கள் ஒளிவீசும்
கதிர்கள் உங்களை
மகிழ்வூட்டும் விந்தை

வண்ணங்களின் வரிசையைக்
காண, கண்டு மனம் மகிழ
மகிழ்ந்து தேர்ந்தெடுக்க
வாருங்கள்.

கீதா சில்க் & சாரி பஜார்

31, N.S.B. ரோடு,
திருச்சி 620002

பட்டுப் பகுதி
ஏர்கண்டிஷண்ட் வசதியுடன்



''ஸ்ரீ முத்துலிங்க ஸ்வாமி சித்தர் துணை''

அகிலமெல்லாம் காத்து நிற்கும் ''அன்னை பராசக்தி அகிலாண்டேஸ்வரி தாயே! அங்காளபரமேஸ்வரி தாயே! நோயாளிகளின் பிணிகளை நீக்கி, ''ஆரோக்கிய வாழ்வும் நல்வாழ்வும்'' தாரும்மம்மா!!!

தமிழகத்தில் 5 தலைமுறையாகவும், 150 ஆண்டுகளாகவும் பரம்பரையாகச் சித்த வைத்தியம் செய்து வரும் வைத்திய குடும்பம்

30 ஆண்டுகளாகத் தமிழக மக்களுக்கு நம்பிக்கையாகவும், முறையாகவும், உண்மையாகவும், சித்த வைத்திய முறையில் சிகிச்சை அளித்து, ஆரோக்கிய வாழ்வு பெறச் செய்து வருபவரும்

உங்கள் வைத்திய நண்பர் சேலம் பிரபல டாக்டர்

S. R. சிவராஜ், R. I. M. P. & R. A. M. P. அவர்கள்



டாக்டர் S. R. சிவராஜ் அவர்கள் விளம்பரத்தைப் போல் காப்பி அடித்தும், அவர்கள் விளம்பரத்தில் போடும் வார்த்தைகளைப் பயன்படுத்தியும், நிறைய விளம்பரங்கள் வருகின்றன.

யோசியுங்கள்! சிந்தியுங்கள்!! பிறகு செயல்படுங்கள்!!!

உங்கள் வாழ்க்கை ரகசியங்கள் பாதுகாக்கப்படுகிறது. பூர்ணமாக நம்பலாம்.

வைத்திய ஆலோசனையும் சிகிச்சையும் பெறலாம்.

★ *பல வைத்தியம் செய்தும் குணப்படாமல், மணச்சோர்வு ஏற்பட்டவர்களுக்குக் கவலை நீங்கி ஆரோக்கியம் பெற வழியுண்டு.*

★ *நாள்பட்ட வியாதியால் அவதியுறும் நண்பர்களுக்கு நல்வாழ்வு பெற, நலம்பெற நம்பிக்கையான வழியுண்டு.*

டாக்டர் S. R. சிவராஜ் அவர்களிடம் சிகிச்சை பெற்று நல்வாழ்வு பெற்றவர்கள்:

- குழந்தைப் பாக்கியமே (கர்ப்பணுக்களே இல்லாமலிருந்தவர்கள்)
- வாலிபத்தை வீணுக்கி உடலில் சக்தியே இல்லாமலிருந்தவர்கள்
- இல்லற வாழ்க்கையில் சுகம் பெற முடியாமல் ஏமாற்றம் கண்டு வந்தவர்கள்
- நாடி நரம்புகள் தளர்ச்சியடைந்து வளர்ச்சியும் பாதிக்கப்பட்டு வந்தவர்கள்
- சர்க்கரை வியாதி-பிளட் பிரஸர்-நாள்பட்ட சர்ம நோய்-ஆஸ்துமா
- இருமல் காச நோய்-நீடித்த தலைவலி-முகவாதம்-வாத நோயாளிகள்
- குடல் புண்-வாய்வு ரோகஸ்தர்கள்-இளம்பிள்ளை வாதம்-பினிசம்
- பெண்களுக்கு ஏற்படும் சகல பினிகளால் பாதிக்கப்பட்டவர்கள்.

தமிழகத்திலும், ஆந்திரா, கர்னாடகம், கேரளம், பம்பாய், கல்கத்தா, ராஜஸ்தான், டெல்லி, அந்தமான் போன்ற இந்தியாவைச் சேர்ந்த பகுதியில் உள்ளவர்களும் வெளிநாடுகளான அரேபியா, பிரான்ஸ், நியூயார்க், லண்டன், சிலோன் முதலானவைகளிலிருந்தும் சிகிச்சை பெற்று ஆரோக்கிய வாழ்வு பெற்று இருக்கிறார்கள்.

வியாதியஸ்தர்கள் எங்கள் டாக்டர்கள் தங்கும் கேம்புகளிலும், சேலம் ஹெட்டாபிஸுக்கு நேரில் வந்தும் வைத்திய ஆலோசனை பெற்று சிகிச்சை பெறலாம். நேரில் வர முடியாதவர்கள் சிகிச்சைக் கட்டணத்தை முனகூட்டியே அனுப்பி ரிஜிஸ்டர் பார்சல் மூலம் சிகிச்சைக்கான மருந்துகளைப் பெறலாம்.

எமது சிகிச்சைப் பிரிவுகள் விபரம் — **1 மாத சிசிச்சைக் கட்டணம்**

மிகவும் உயர்ந்த சிகிச்சை		உயர்ந்த சிகிச்சை			நடுத்தரச் சிகிச்சை		
A-வகுப்பு	B வகுப்பு	A-வகுப்பு	B-வகுப்பு	C-வகுப்பு	A-வகுப்பு	B-வகுப்பு	C-வகுப்பு
ரூ. 1500-00	ரூ. 1001-00	ரூ 350-00	250-00	175-00	ரூ. 150-00	115-00	90-00

குறிப்பு: **உங்கள் சகல விபரங்களுக்கும் தலைமை வைத்தியசாலைக்கு எழுதி விபரமும், மருந்தும் பெறலாம்.**

சிவராஜ் சித்த வைத்தியசாலை

சேலம் - 636 007. [சேலம் சென்ட்ரல் சினிமா தியேட்டர் வடபுறமுள்ள ஏரியில்)

வஸந்த பவன்

"ஏர்கண்டிஷன்
டீலக்ஸ் ரெஸ்டாரெண்ட்"
24, N. S. B. ரோடு,
திருச்சி–620 002.

"வேகா ரெஸ்டாரெண்ட்"
ஒரு நட்சத்திர அந்தஸ்து பெற்றது
20, காந்தி இர்வின் ரோடு,
சென்னை–600 008.

உயர்தரச் சைவ உணவிற்கும், சிற்றுண்டிகளுக்கும், சிறந்த ஸ்வீட், காரங்களுக்கும் புகழ்பெற்ற 'திருநெல்வேலி அல்வா'விற்கும் சிறந்த இடம்


For your travel problems please contact

JANTHA TRAVELS

TIRUCHY - 620 002

National Permit Holders for Deluxe A/C Bus & Car Services
Phones: 27955 & 26112 Madras Phone: 844083

—நாகசுந்தரம்



பண்டிகை நாளின் குதூகலம்! இந்த இன்பமயமான
வேளையில் எங்கள் இதயங்கனிந்த வாழ்த்துக்கள்!
நீங்கள் உள்நாட்டிலோ, அயல் நாட்டிலோ
எங்கிருந்தாலும் அங்கே—உங்களுக்கு வெற்றி கிடைக்கட்டும்!
வளமான வாழ்வு உங்களிடம் வந்தடையட்டும்!

UCO/CAST/80 TAM

யுகோடெட் கமர்ஷியல் பாங்க்

மேகம் மூடிய வானம்



தாமரை செந்தூர் பாண்டி

'விளங்காட்டு' வேலையை முடித்துக் கொண்டு வெட்டும் பெருமாள் வீட்டிற்குத் திரும்பும் பொழுதே சூரியன் மஞ்சள் பூசத் துவங்கியிருந்தது.

வீட்டின் இடை கழியில் கால்மேல் கால்போட்டு அமர்ந்திருந்த பங்கஜம் தன் கணவனைக் கண்டதும் எழுந்து உள்ளே சென்றாள்.

''ஏ.. இவனே.. பங்குசம்!''

வெட்டும் பெருமாளின் குரலில் கோபமும் அவசரமும் இருந்தன.

''அட.. என்ன? அதிகாரம் கொடி கட்டிப் பறக்குது?'' உள்ளே சென்ற பங்கஜம் திரும்பி வந்தாள்.

''நம்ம ரெங்கன் பள்ளிக்கோடத்திலேருந்து திரும்பி வந்துட்டானு?''

''அவன் எங்க வருவான்? எங்கன யாவது போயி சோவாருவான்.''

''வாய் மூடுனா! விடிஞ்சா அடஞ்சா, சொத்தகு சொள்ளுனு பங்கஜத்திற்குத் தன் கணவன் மீது கோபமும் வெறுப்பும் ஏற்பட்டன.

''ஒங்க புள்ளய அப்பிடி எண்ணய்க்கி நான் அடிச்சி வெரட்டிப் பிட்டனும்?''

''இன்னு காலம்புறக் கூட அடிச்சி யேனா?'' சரிந்து விழுந்தார்.

''பள்ளிக்கோடம் போற பய, பல்லு வெளக்காம, குளிக்காம.. அ தென்ன படிப்பு? அவன் அப்பிடி இருக்கட்டும்: தோல உரிச் சுப்புடுறன்.'' கோபத்துடன் வீட்டிற்குள் போனாள் பங்கஜம்.

வெட்டும் பெருமாளுக்கு ஆத்திரமாய் வந்தது.

தான் பெற்ற பிள்ளைய இப்படிக் காரணம் கண்டு கறுவுவாளா?

பிள்ளே பெருத மலட்டு ஜன்மம் என்பதால் தானே இப்படி நெருப் பாய்ச் சுடுருள்? நீராய்க் கொதிக்கிறுள்?

''இவள ரெண்டாந் தாரமாகக் கட்டுன பாவம், எம்புள்ளய இப் படிப்பாடாப்படுத்துது.மனத்திற்குள் டெ்கி கொண்டே மகனைத் தேடித் தெருவிற்குப் போனார்.

காணவில்லே.

திரும்பி வந்தார்.

''யளா..பங்குசம்!'' குரல் கொடுத்தழைத்தார்.

''அட, என்ன! ஒங்க அருமப்புள்ள வந்துற்றனு?'' வெளியே வந்து மோவாயைத் தோள்பட்டையில் இடித்துக் கொண்டு நின்றுள்.

''அவன் வந்தா ஏம்ளா நாங் கெடந்து ஒனியுறன்? நீ கண்டும்.. அவங்கிட்ட என்னம்புச் கோவங் கிவமாய்ப் பேசிப்புட்டியா?'' இத மாகக் கேட்டார்.

''நான் எதுக்கு அவங்கிட்டப் பேசப் போறன்? அதான் தலப்பன் பாடு மவம்பாடுன்னு உட்டாச்சே!'' திரும்பவும் வீட்டினுள் போய்த் தன் கணவருக்கு வெத்நீர் போடும் வேலையில் மூழ்கினள் பங்கஜம்.

மனம் பதைத்தைத்தது. வெட்டும் பெருமானுக்கு. தெருவை நோக்கி விரைந்தார். வேதனை நெஞ்சை வருத்தியது. தெருக்கோடி. வரை கண்ணுக்கு ஒளி பிடித்துப் பார்த்தார். அவரின் ஒரே மகன் ரங்கசாமியைக் காணவேயில்லே.

ஊரைக் கடந்த தேரிமணற் பொட் டலில் ஏறு முன் அறுபது வயதைச் சந்தித்துத் தொய்ந்துபோன இதயம் பலனேமாய்த் துடித்தது. மூச்சிரைக் கத் தேரிமணற் பொட்டலுக்கு வரும் பொழுது நான்கைந்து சிறுவர்கள் தூரத்தில் தார்ச் சாலேயில் வருவது தெரிந்தது. கண்களே இடுக்கிக் கொண்டு பார்த்தார். ஒ! ரங்க சாமியும் வந்து கொண்டிருந்தான்! இப்போது கோபம் வந்தது. அவ

பயலப் போட்டுப் புடுங்கி எடுக்கது. கண்டபடியெல்லாம் அடிக்கது! ஒன்னயக் கண்டா பயந்துதான் புள்ள தோப்பு போன டெம். வந்தா வந்த டெம்னு இருக்குருன்.'' வீளங் காட்டிலிருந்து சுமந்து வந்த பருத்திக் குச்சுக் கட்டை முற்றத்திலேயே போட்டவர் தம் மகன் ரங்சாமி வரவேண்டிய தெருப் பாதையை ஆவலோடு பார்த்தார்.

''ஆமா, அப்பச்சி குடுக்குற செல்லம் புள்ளதெம்பேறிக் கிட்டீயுது. ஒழுங்கா ரெண்டு போடு போட்டு ஒரு எடத்துக்குப் போனம் வந்தம்னு இருப்பியொளண்ணு தவப்பள் கேட்டாத்தான? இண்ணய்க்கி லூட்டுக்கு வரட்டும். காலுல குடு போடு றேன்.'' சுறுவிஞள் டங்கஜம்.

''பெத்தால்ல புள்ள அருமை தெரியும்? தாயத்துப் புள்ளயக் கொன்னு புடாத தாயீ!'' வெறுப்புடன் சொன்னர்.

''இவள ரெண்டாந் தாரமாகக் கட்டுன பாவம், எம்புள்ளய இப் படிப்பாடாப்படுத்துது.மனத்திற்குள் டெ்கி கொண்டே மகனைத் தேடித் தெருவிற்குப் போனர்.

காணவில்லே.

திரும்பி வந்தார்.

''யளா..பங்குசம்!'' குரல் கொடுத்தழைத்தார்.

''அட, என்ன! ஒங்க அருமப்புள்ள வந்துற்றனு?'' வெளியே வந்து மோவாயைத் தோள்பட்டையில் இடித்துக் கொண்டு நின்றுள்.

''அவன் வந்தா ஏம்ளா நாங் கெடந்து ஒனியுறன்? நீ கண்டும்.. அவங்கிட்ட என்னம்புச் கோவங் கிவமாய்ப் பேசிப்புட்டியா?'' இத மாகக் கேட்டார்.

''நான் எதுக்கு அவங்கிட்டப் பேசப் போறன்? அதான் தலப்பன் பாடு மவம்பாடுன்னு உட்டாச்சே!'' திரும்பவும் வீட்டினுள் போய்த் னுக்காகக் காத்து நின்றர்.

வந்து சேர்ந்தான் அவன்:

''யல! என்னப் பயமவன! எங்கல போனு இவ்வளவு நேரமா? ஒன்னயக் காணும நான் பட்ட பாடு தெரியு மால? ஒங்க சித்திகிட்ட ஒனக்கா வச் சண்ட பிடிச்சிற்று வாரனுக்கும்! எங்கல போனு இவ்வளவு நேரமா?''

''பள்ளிக்கோடத்தல தோப்ட வாத்தாரு பிடிச்சிற்றாரு: தோப்ட வேலேயில முளுக்கத் தடவிப்புட்டாரு: அதான் லேட்டு.'' சிரித்துக் கொண் டே தந்தையைக் கடந்து, முன்னே நடக்தான் ரங்சாமி:

''நல்ல பள்ளிக் கோடமும் தோட்டமும், வாத்தியாருந்தான்.'' முணுமுணுத்துக் கொண்டே மகனைத் தொடர்ந்தார் வெட்டும் பெருமாள்.

''வந்துட்டியளா தொர? இவ்வளவு நேரமா எங்கன சோவாரப் போனியளாம்?'' ஆத்திரத்தை மனத்தில் தேக்கிக் கொண்டு கேட்டாள் பங்கஜம்.

''செரி செரி, உடனா! யஞ்! சோயெப்பாரு போ!'' தன் மகனே வீட்டிற்குள் அனுப்பிவிட்டு, மகனி போட்டு வைத்திருக்கும் வெந்நீர்ப் பானையைத் துக்கச் சென்ருர் வெட்டும் பெருமாள்.

புத்தகப் பையை ஒரு மூலையில் 'தொப்'பெனப் போட்டான் ரங்க சாமி. நேராகச் சமையற்கட்டுக்குள் டோனுள்.

''என்வல வேணும்?'' பங்கஜம் கோபமின்றிக் கேட்டாள்.

''பசிக்குது.''

''அதுக்கு..?''

''சோறு குடு.'' தானே சாப் பாட்டுத் தட்டைத் தூக்கி வந்து வைத்தான்.

கோழிட்டாள் பங்கஜம்.

''கொழம்புச் சட்டிய இங்கன கொண்டாந்து வையி.'' அதிகாரத் தோரணே இருந்தது. அவன் கபா வம் அதுதான் என்பது பழகிப் போன ஒன்று.

கும்புப் பாத்திரத்தைக் கொண்டு வைத்தாள்.

கும்பை வழிய வழிய ஊற்றிக் கொண்டான். பங்கஜத்தை நிமிர்ந்து பார்த்தான். கைவேலையாக இருந் தாள் அவள். அவள்மீது ஆத்திரம் வந்தது. தலேயைத் தாழ்த்திக் கொண்டாள்.

கும்பிட்ட சாதத்தை அனைது அளைந்து பிசைந்தான். கும்பும் சோறுமாய்க் 'கொத கொத' வென ஆனது.

திருப்பிப் பட்டுக் கொண்டான். இப்படிச் சாப்பிடுவதில் அவனுக்குத் தனியான ஒரு பிரியம்.

சோற்றுக் கவளத்தை அள்ளி யெடுத்துச் சாப்பிட்டான். நாலில் சுகந்தது போலிருந்தது. மீண்டும் ஒரு கவளத்தை எடுத்து வாயில் வைத்துச் சப்புக் கொட்டிப் பார்த் தான். வேப்பங்காயாய்க் கசந்தது. தட்டினுள்ளேயே வாயிலுள்ள சாதத் தைத் துப்பினுள்.

'ஏன், சோறு இப்படிக் கசக் குது?'

நெற்றித்தான்.

சித்தி காலேயில் அவனேத் திட்டியது நினேவில் வந்தது.

''ஒழுங்கா பல்லுலில்லு வெளக் காம சோறு கஞ்ஞெனி எனும வந்து இரு. பாத்துக்கிடறன். சோத்துக் குள்ள நஞ்சுக் கலந்து தர்றேனு இல்லி யாண்ணு பாரு!'' மீண்டும் மீண்டும் சித்தியின் குரல் மனத்தில் ஏதிரொ லித்தது.

இப்பொழுது கூட கை கழுவாமல், கால் முகம் அலம்பாமல்தான் வந் திருக்கிருன். சித்தி சொல்வதை நிறைவேற்றியே விட்டாள்!

நெஞ்சில் பயமும் நீர்க்கும் வழுப் பெற்றது.

''அய்யய்யே.. சோறு கசக்குதே.. சோத்துல சித்தி வெசத்தக் கலந்து தந்துருருனே! யம்மா.. யம்மா.. என்னயக் கொல்லுறதுக்கு சோத்துல வெசத்தக் கலந்துருருனே.. சித்தி!'' ஓலமிட்டுக் கொண்டே சாப்பாட்டுத் தட்டைத் தூக்கிக் கொண்டு வெளி யேறி வந்து முறையிட்டான் ரங்க சாமி.

''ஏல, யய்யா! எ ன் ன ல, என்ன?'' வெலியே கோவணங் கட்டிக் கொண்டு வெந்நீரில் குளிக்கத் தயாராய் நின்றிருந்த வெட்டும் பெருமான் ஓடோடி வந்தார்.

''யய்யா! இந்தாப் பாருங்கய்யா! சுகக்குருே! வேப்பங்காயாக் கசக் குதே..! துப்..! காலேயில சொன்ன மாதிரி நஞ்சுக் கலந்து தந்துருருனே சித்தி!'' சோற்றுத் தட்டை அவரிடம் தந்து விட்டுத் தொண்டை யைப் பிடித்துக் கொண்டு கமறினுன். சோற்றுத் தட்டை மோந்து பார்த்தார் வெட்டும் பெருமான்.

நிறைனவு சோர்ந்தை எடுத்து வாயில் வைத்துப் பார்த்தார். கசப் பது போலவே இருந்தது. தட்டினேயே வாயிலுன்ன சோற்றைத் துப்பினர்.

''அய்யய்ய! எம்மவனக் கொல் றதுக்குண்னே எனக்குண்ணு அவ தாரமா வந்துற்றனே இந்தக் கொல நீலி!'' குரலெடுத்து அழுதார் வெட்டும் பெருமாள்.

''அய்யய்யே! இதென்ன கரும காண்டம்? வெசத்தக் கண்டாரு கொல்ல நெனச்சதாரு..?'' ஓடோடி வந்தாள் பங்கஜம்.

''ஏ.. கொலபாதகி! கிட்ட வந்து ருந! வெட்டிக் கொன்னுப்புடுவன்!'' மிரட்டும் புலியாய்ச் சிறினர் வெட்டும் பெருமான்.

அதற்குள் ஆங்காங்கே வீட்டு வேலே களிலிருந்த பெண்க ளெல்லோரும் ஓடி வந்து சூழ்ந்தனர்.

தொண்டையைப் பிடித்துக் கொண்டு துடிக்கும் ரங்காசாமியைப் பரிதவிப்புடன் பற்றிக்கொண்ட பெற் றப்பாவின் மனவி செண்பகம் துடித்துப் போனுள்.

''யல! யய்யா! ரெங்கசாமி...கனம்பா சாப்புட்டுப் புட்டியா லய்யா?''அவள்நலேயை இரக்கத் தோடு வருடி னுள்.

''ஒரு பிடி சோறு தான் முழுங்குனன் சித்தி!'' சித்தியின் பரிவு கிடைத்த வேகத்தில் அழுகை அதிகரித்தது.

''தொண்டக்குள்ள காறுதோ?''

''ஆமா! சுள்ளுச் சுள்ளுல்லு வருது சித்தி!''

''அடச் சண்டாளப் பாதகத்தி! தாயில்லாப் புள்ளயக் கொல்லப் பாத்துட்டாளே! சோற இங்க கொண்டாங்க அத்தால!'' வெட்டும் பெருமாளின் கையிலிருந்த சோற்றுத் தட்டை வாங்கி ரங்க சாமி அளைந்து பிசைந்து கூழாக்கி வைத்திருந்த சோற்றுக் கவளையில் திரெதெடுத்து, பயந்துகொண்டே வாயில் வைத்தவள், ''துப்!து!து!'' எனத் துப்பினுள் தட்டினுள்ளேயே.

''அடி சண்டாளி! கெடுத் தாரே! என்னு கசப்பு! யளா! கொலகாரமட்டே! என்னளா சோத் துல போட்டா? அருமாந்த புள்ளயக் கொல் லுறதுக்குண்ணு ளா. இந்தக் கெழட்டு மனுசனுக்குப் பொண்டாட்டியா வந்தா!'' நிகைத் துப் போய் நின்றிருந்த பங்கஜத் திடம் சீறினுள் செண்பகம் சித்தி.

பதில் சொல்லாமல் நடந்து வாயில் நடை கழிக்கேறி ஒருகளித்து நின்று கொண்டாள் பங்கஜம்.

''அவ முழிக்கறதயும் பாக்குறத யும் பாருங்களேன் ம்மா! கொறக்



கோலம் போட்டுக்கிட்டு. பதிலு பேசாம நிக்குருளே பாதகத்தி! இந்தப் புள்ளய்க கொன்னுப்புட்டு எந்தப் புள்ளய வெச்சி ஆளப் போறி யாம்?'' எரிச்ச வீட்டுக்காரி எரிந்து விழுந்தாள்.

பதில் சொல்லாமல் கண்களீத் தட்டி விழிக்காமல் எங்கோ முறைத் துக் கொண்டிருந்தாள் பங்கஜம்.

''சோத்தக் கொண்டாங்க. பாக் கட்டும்.'' எதிர் வீட்டுக்காரி தானும் சிறிது சோற்றை வாயில் வைத்துப் பார்த்தாள்.

''ஞ..உவ்..வ்வ்..வா! என்னு கசப்புத் தாயே? ஒக்காளம் எடுக் குதே! யளா! புள்ளய்க்கி எப் படிளா நஞ்சக் கூந்து குடுக்க மனசு வந்திச்சி?'' பங்கஜத்தைச் சுட்டெ ரித்து விடும் ஆவேசமிருந்தது.

பங்கஜம் வாய்மூடி நின்ருள்.

''அவ வெசத்தக் கலக்குறதுக் குக் கேக்கவா வேணும்? இந்த மலுச லுக்கு வலிய வந்து வாக்குப்படும் போதே தெரிஞ்சதுதானே? மொதல்ல மவனக் கொல்லுவா. ரெண்டாவது தலப்பனக் கொல்லு வா! சொத்துபத்தெல்லாத்தையும் சுருட்டிக்கிட்டு எவனவது வயசுப் பயல இழுத்துக்கிட்டு ஓடுவா!'' வெட் டும் பெருமாளின் உடன் பிறந்த தம்பி யின் மனைவி சுகியாய்க் குதித்தாள்.

கண்ணிமைக்காமல் பார்வை எங்கோ குத்திக் கொள்ள மௌன மாக நின்ருள் பங்கஜம்.

''அவ நிக்கதயும் முழிக்கதயும் பாரு! பழிகாரமட்ட! சோற எங் களெர, நான் பாக்கட்டும்!'' அப் பொழுதுதான் விவரம் புரிந்து ஓடோடி வந்த வெட்டும் பெருமாளின் சின்னத் தங்கை சீதாலட்சுமி சோற்றுத் தட் டைக் கையில் வாங்கினுள். நாரிக்கு அருகில் வைத்து மோப்பம் பிடித் தாள். பலர் கையும் எச்சிலும் பட்டுப் புழங்கி நாறியது. முகத்தைச் சளித் துக் கொண்டு தட்டைக் கீழே வைத் தாள். தன் அண்ணன் மகன் தாயில் லாத ரங்காசியைத் தேடினுள். சின்ன ஒரு நிண்டில் உட்கார்ந்திருந்த அவளிடம் ஓடினுள்.

''யய்யா, ஏல அண்ண மவன!''

''எத்தே என்ன?''

''கொடல கிடல பொறட்டுதால?''

''இல்ல.தொண்டைக்குள்ளதான்.''

''கனம்மாச் சாப்புட்டுப் புட் டியோ?''

''இல்ல.''

''அதான் பொழச்சிருக்கா. அந்த சொய்ம்பு லிங்க சாமிதான் ஒன்னய காப்பாத்தியிருக்காரு போ! எலும �இந்தப் பாலிமட்ட கையால பச்சத் தண்ணி வாங்கி குடிப்பியா?''

''செத்தாலும் அவகையால தண்ணிகூடக் குடிக்கண்டன் அத்தை.''

''செரி. வாய நல்லாக் கொப்புளி.'' அவனீ விட்டு நகர்ந்து பங்கஜம் நின்றி ருக்கும் நடைகழிக்குக் மேடை படிக் கட்டுகளின் இறக்கத்தில் வந்து நின்ருள்.

''எளா! ஒனக்கு எவ்வளவு தரியி யம் நெஞ்சிலே இருந்தா இந்த வூட்டுல இருந்துக்கிட்டு, இந்தப் புள்ளய்க்கி நஞ்சக் கலந்து குடுத் துற்று. அடிச்சி வச புள்ளியாறு செலமாதிரி நிப்ப? வாளா வெளி யில!'' வாயில் படிக்கட்டில் ஏறி நடைகழியில் நின்றிருந்த பங்கஜத் தின் கூந்தலீத் திடுமெனப் பற்றி இழுத்தாள். எதிர்பாராத இழுப்பில் கால்கள் தடுமாறிக் குப்புற விழுந் தாள் பங்கஜம்.

''கொல்லுங்க! இப்படிப்பட்டவள வெச்சிக் காவங் கழிக்கப்புடாது. மண் ணெண்ண வூத்தித் தீய வெய்யுங்க! ஆரோம் ரெண்டாயிரம் செலவழிஞ் சாலும் குத்தமில்ல! கொல்லுங்க!'' வெட்டும் பெருமாள் கோவணத் துடன் குத்துக்காலிட்டுக் கொண்ட மார்த்திருந்து கொதித்தார். குப்புற விழுந்த பங்கஜத்தை நான்கைந்து பெண்களாகச் சேர்ந்து தூக்கி நிறுத் தினர்.

கண்கள் மேலே, ஆகாயத்தையே வெறிக்க, பித்துப் பிடித்தவளாய் நின்றிருந்தாள் பங்கஜம்.

''இவள கம்மா உடுனுமா? இந்தப் பயலுக்கு இவ வச்ச வெசத்த இவள தின்னுட்டச் சாவுட்டும். சோத்த அவகிட்டயே குடுங்க.'' செண்பகம் சித்தி சொன்னதை அனைவரும் ஒத்துக் கொண்டனர்.

சோற்றுத் தட்டைக் கொண்டுவந்து பங்கஜத்திடம் வைத்தாள் ஒருத்தி.

''இன்னுளா! நீ வச்ச வெசத்த நீதான் திங்கணும். இப்பம் இதத் திங்கல, ஒன் தலமுடியச் செரச்சி, கரும்புள்ளி செம்புள்ளி குத்தி, கழுதயில வச்சி ஊரச் சுத்தி அடிப் பம். கெயிலுல அடப்பம்.' தங்கமணி நெருப்பாய்ச் சுட்டாள்.



பங்கஜம் தலை கவிழ்ந்திருந்தாள்.

''சாப்டுளா?'' தங்கமணி.

தலை கவிழ்ந்திருந்தவள் நிமிர்ந்து தங்கமணியைப் பார்த்தாள்.

''இன்னு செத்தருவம்னு பாக்கிறியா? சாவுளா!''

தலை கவிழ்ந்த பங்கஜம் முன்னே இருக்கும் தட்டைப் பார்த்தாள்.

ஏகதேசம் ஏழெட்டுப் பேர் எச்சி மீத் தும்பி வைத்திருப்பது நெஞ்சில் குமட்டியது. பலின் வைட்டுக் கூறாகி நாற்றமடிக்கும் இதைச் சாப் பிட்டுத்தானுசு வேண்டுமா?

நித்தலைக் குமட்டலுடன் தன் வயதான கணவரியும் பதினேழு வருடங்கள் கழித்துக் கருவேந்திப் பெற்று எட்டே நாளில் எமனேகம் போய்விட்ட தன் முத்தாளின் பின்னே ரங்கசாமியையும் மாறி மாறிப் பார்த் தாள். மனம் கசந்தது.

சோற்றத்தட்டை இழுத்துவைத் துக் கொண்டு எச்சில் சோற்றை அள்ளி அள்ளி வாயில் நிணித்து விழுங்கினாள்.

வழித்து விழுங்கிவிட்டு எழுந்தவள் தட்டுடன் போய்த் தன் கணவனுக் குக் குளிக்கவைத்திருந்த குளிர்ந்து போன வெந்நீரில் தட்டைக் கழுவித் தன் கையையும் வாயையும் சுத்தப் படுத்திக் கொண்டு வந்தாள்.

அவளேயே பார்த்துக் கொண்டு அசடு வழியும் பக்கத்து வீட்டு உறவுக் காரப் பெண்களேப் பார்த்து, ''போது மா? இன்னும் உங்களுக்கு இங்கென்ன வேலே?'' என்று கண்கள் பேசின.

மௌனமாகவே படிக்கட்டில் ஏறி, பழைபபடியும் அதே நடை கழியில் போய் அமர்ந்து கொண்டாள்.

ஒருவருக் கொருவர் கிசுகிசுக்கும் பெண்களே நோக்கி வந்து சேர்ந்தார் தலையாரி தங்கசாமி:

''என்னமோ வெயமாமே என்ன?'' கேட்டார்.

தகவல் கிடைத்தது:

''வெசம் கலந்தசோத்தத் தின்னுப் புட்டா இன்னும் குத்துக் கல்லுமாதிரி இருக்குரு. நம்ம வெட்டும் பெருமா ளண்ணன் பெஞ்சாதி'' ஏளனமாகச் சிரித்தார் தலேயாரி.

பதில் சொல்ல யாருக்கும் தெம் பில்லே.

''வெசம் கலந்துதான் சோறு குடுத் தாண்ணு அருக்குத் தெரியும்? ஆரா வது பாத்தியளா? அனியாயமா ஒரு பொண்ணயே தெருவுக்குக் கொணந் துட்டியள. நீங்கெல்லாம் பொம்பு ளவதானு?'' ஆக்ரோசமாகக் கேட் டார். யாருமே பேசவே இல்லே.

பங்கஜம் கண்கள் வெறிக்க உட் கார்ந்தே யிருந்தாள்.

''இன்னப்பய கையாலயிய்வே என்னமும் பேய்க் கொம்புக்காயப் பறிச்சி வெனயாடுனுக் கூடத்தான் தொட்டதெல்லாம் கசக்கும். ஒடனே வெசம்னு சொல்லிப்புடுறதா?எல வெங்கா.. இங்கவால.'' ரங்க சாமிக்கு அருகே சென்ருர் தலேயாரி.

எழுந்து நின்ருள் ரங்கசாமி.

''ஒங்கையில என்னம்பும் எடுத்து வச்சி வெனயாடுனியா?''

''இல்லே..''

''பள்ளிக்கோடம் படிச்சிற்று வர பாதையில பேய்க் கொம்புக்காயப் பறிச்சிபத்து போட்டு வெனாடினியா? ''சத்தியமா இல்ல.''

''ஒங்கையா கசக்குதாண்ணு பாரு!''

வாயில் உள்ளங்கையை வைத்து நக்கிப் பார்த்தவன் முகம் கனித்தான்.

''என்னல மொவ மூணு மொளகு துக்கு நீஞ்சு சுக்குதா?''

''ஆமா.''

''பின்ன என்னல..? பள்ளிக் கோடத்துல வச்சாவது என்னம்பும் கூடப்சீ சாமானத் தொட்டியா?''

''இல்ல.''

''கொண்டால ஒங்கெய..'' தாமே பிடித்திருந்து மோந்தார்.

''ஏல, சோத்துக் கத் தாளப் பாலத் தொட்டியா?''

''ஆமா ஆமா..! பள்ளிக்கோடம் தோட்டத்துக்கு சோத்துக் கத் தாளய வெட்டி நட்டுனம். ரெங்கன் கையெல்லாம் கத்தாளம் பாலா வழிஞ்சிக்க.'' ரங்கசாமியின் சக மாணவன் ஒருவன் உற்சாகமாய்ச் சொன்னன்:

''அப்பிடித்தானுல ரெங்கா?''

''ஆமா.''

''அட சண்டாளப் பயல அக் குருமா இப்டிடி ஒரு அபாண்டத்தச் செமத்தி புட்டியல!'' அவனே வெறுப் புடன் ஒதுக்கிவிட்டு வெட்டும் பெரு மாளிடம் வந்தார் தலேயாரி.

''வேய், அறுவதுக்குமேல கிரு கிருப்புங்கற நெசம்னு ஆக்கிப்புட்டி யர? அவந்தான் வெவரங்கெட்டும் பேசினு ஒமக்குமா வேய் அறிவு கெட்டுப் போவணும்? அதான் வேய், ன்னைப் பயலுக்கும் பொண் டாட்டி ஆவாது கெழவலுக்கும் பொண்டாட்டி ஆவாதுண்ணு!'' ஒரு புழுவைப் போல அவரைப் பார்த்து விட்டுத் திரும்பிய தலேயாரி கண்களில் இன்னும் அங்கே நின்றி ருக்கும் பெண்கள் பட்டனர்:

''ஒங்களுக்கெல்லாம் சந்தோசந் தானு? ரீ வெக்கங்கெட்ட பொம் பிகேயவளா! ஒங்களுவ மவ மாருவ ஒருத்திய இப்டிடி தெருவுல உட்டு அவமானப் படுத்துனு எப்டிடி இருக்கும்? தூ!'' காறி உமிழ்ந்து விட்டுத் திரும்பிப் பராமல் நடந் தார் தலேயாரி தங்காசாமி.

பெண்களின் கூட்டம் ஓசையின்றிக் கலேந்து மறைந்தது. பங்கஜம் சூன் யத்தில் வயித்துப் போய் வெறுமனே கண்கள் குத்திட்டு நிற்க, நிமிசே குளிந்து நிற்கும் மேகமூட்டத்தைக் கிழித்துக் கொண்டு வெளியேறத் துடிக்கும் வட்ட நிலாவையே வெறித் துக் கொண்டிருந்தாள். அநிலும் கூடக் களங்கம் தெரிந்தது!

கோவணத்துடன் எழுந்து தயங்கித் தயங்கிப் பங்கஜத்திற்குருகே படிக் கட்டில் நின்று கொண்டு தலே வணிர்த் தார் வெட்டும் பெருமாள்.

பங்கஜம் அவரைக் கண்டு கொள் ளவோ தன் ஆத்திரத்தைக் காட்டிக் கொண்டாகவோ தெரியவில்லே.

மெல்லப் பயந்து கொண்டே அவள் முகத்தைப் பார்த்தார்? நிலவொளி யில் துல்லியமாக அவள் முகம் தெரிந் தது! அதில் ஏல் இவ்வளவு அமைதி? அவருக்குள் குடேல முடிச்சிட்டு யாரோ இழுப்பது போல் இருந்தது. உடல் நடுங்கியது. ''ப..ப..பங்கு சம்..'' ஜீவனற்றுப் போய் அழைத் தார். அந்த அழைப்பு அவளுள் உரைக்காதென மனத்தில் பட்டது.

தலேயைத் திருப்பினுள்.

இன்னும் அதே நிண்டிலமற்று கொண்டு'குர்'ரென சுவரை முறைத் துக் கொண்டிருக்கும் ரங்சாமி நில வொளியில் குத்துக்கல்லாய்ப் பட் டான் அவர் கண்களில்.

நெஞ்சினுள்ள பயம், குற்ற உணர்வு, கோபம் எல்லாம் ஒன்ருய்த் திரண்டு அவருள் பெரிய அசரத் தனத்தை உண்டாக்கின: ஆத்திரத் தொடு அவள்மீது பாய்ந்தார்:

''குடியக் கெடுக்குக்குண்ணே வந்த கொரங்குப்ப மவனே..! நீ வெளங்குவியா? பொறந்த எட்டா னத்துத் தாயக் கொண்னவன் இப்பம் சித்திக்காரியக் கொல்லப் பாக்குறியா? அநியாமா சந்தியில கொணந்து உட்டுட்டியே குடும்பத்த நீ வெளங்குவியா?' அவன் தலே மயிரைப் பற்றி இழுத்துப் பலங் கொண்ட மட்டும் அறைந்தார்.

''ம்மா! ம்மா! அய்யய் யோ: அடிக்கா நீங்க .. அடிக்கா நீங்க!'' வலி தாளாமல் கூப்பாடு போட்டான் ரங்சாமி.

''கொலப்பழி சொமத்தன பய எனக்குவாண்டாம்! போ..போயிருப் எங்காயாவது கண்ணு காணுத கேசத்துக்குப் போயிரு! நீ இங்கன இருந்தா ஒன்னய நானே வெட்டிப்புடு வன்!'' இரும்பாவும் அடிப்பதற்குக் கையை ஓங்கியவர் தடுமாறி போனுர்.

தம் கையைப் இழுத்த தயார் எனக் கோபத்துடன் திரும்பிய வர் அதிர்ந்து போனுர்:

''நீயா? ஒன்னய சந்தி சிரிக்கப் பண்ணுன இவன வச்சிக்கிட்டிருந்தா பெயிய பாவம்: உடு கையை!''

''விடுங்க அவன: எல..ரெங்கா வால இங்கன!'' ரங்சாமியை இழுத் தத் தனக்குப் பின்னே விட்டு, குறுக்கே நின்று அடிவிழ வாய்ப்பில் லாமல் தடுத்தாள் பங்கஜம்:

''உடுளா! அவனக்கொல்லணும்.''

''ஏனும அடிச்சா நல்லாருக்காது.'' அடிபட்ட புலி போலத் தன் கண வனிடம் சாடினுள் பங்கஜம்.

அவருக்கு அவளாப் புரிந்து கொள்ள முடியவில்லே: நிதைத்துப் போய் ஒதுங்கினுர்:

பங்கஜத்தின் பின்னே நின்ற ரங்க சாமியால் பங்கஜத்தின் இந்தப் பரி வைத் தாங்கிக் கொள்ள இயலவில்லே.

''ம்மா! ம்மா! என்னய ஒங் கையால ரெண்டு அடி அடிச்சிரும்மா! ஒங் கையால நெசத்துக்கும் எனக்கு வெசத்தக் கலந்து தந்துரும்மா! நான் இன்னுற்றச் செத்துப் போயி டுறன்!'' அவளுக்கு முன்னே வந்து நின்று வாய்விட்டுக் குமுறினுன்.

''ரங்கா!'' அவளே ப் பிடித் திழுத்தணைத்துக் கொண்ட பங்கஜம் இதுவரை தன்னுள் நிலேத்திருந்த இறுக்கம், ஏமாற்றம், அவமா எல் லாமே நீங்கி, தன்னுள் இடுமெனப் பாய்ந்த பாச வெள்ளத்தில் மிதந்து 'ஓ' வெனக் கதறிக் குரலெடுத்து ஓலமிடும் பொழுது, மனம் லேசாகியது: நேற்றுவரை 'சித்தி' என்றழைத்த மகன் 'அம்மா' என் றழைத்தது மட்டும் மீண்டும் மீண்டும் மனத்தில் நிகழ்ந்தது. *

தீபாவளி வாழ்த்துக்கள்



CYCLON PRODUCTS PRIVATE LTD.
Ganapathy Post Coimbatore 641 006
VSK CP1098

உன்னத ஒளிகூட்டி நீடித்து உழைப்பவை



பூரண விற்பனை ஏஜென்டுகள்: பி.பார்கோ சேல்ஸ் ஏஜென்சிஸ்
255/256, எ டி ஜட் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், பர்குனர் ரோடு, சோயர் பரேல்,
பம்பாய்-13.

RASIK

முதல் நூலை முறைப் படித்தியவர்

யமுனை நதிக்கரை. ஐடாமுடியுடன் முனிவர் பராசரர் ஆர்வத்துடன் படகிலிருந்து இறங்கி வருகிறார்.

தாயின் அணைப்பை விட்டு, அவரிடம் தாவிக் குதித்து ஓடுகிறான் சிறுவன் கிருஷ்ணன் - பத்து வயதுச் சிறுவன் தாய் பரிமளகந்தி மகனைக் கவினுடன் பார்க்கிறாள். கிருஷ்ணனோ துக்கி முத்தமிட்டபடி பராசரர் கரை சேர்கிறார். ஆச்சலர், பைலர் என்ற அவருடைய சிஷ்யர்களும் தொடர்கிறார்கள்.

தாயிடம் விடை பெற்றுக்கொண்டு, கிருஷ்ணன், தன் தந்தை பராசரருடன் புறப்படுகிறான். பரிமளகந்தி, தன் மகனின் எதிர்கால நலனே எண்ணி அவனைத் தந்தையுடன் அனுப்பி வைக்கிறாள்.

நீலில் பிரந்தமையால் த்வைபாயனன் என்ற பெயருடைய தம் மகனைப் படகில் அழைத்துச் சென்ற பராசரர், கோதுளி என்ற கிராமத்தில் இறங்கிக் கரை சேர்கிறார். அவரைக் கௌதம மகரிஷி, தம் மனைவி சர்மியுடன், வந்து இவர்களை வரவேற்கிறார். பரிமளகந்திக்குப் பிறந்த தம் பிள்ளையைக் கௌதமருக்கு அறிமுகம் செய்து வைக்கிறார் பராசரர்.

மண்டும் படகில் சென்றபோது த்வைபாயனன், பல கேள்விகள் கேட்டு, தன் அறிவு நுட்பத்தைக் காட்டுகிறான். வேத மந்திரங்களைக் கற்றுக் கொடுக்கும்படி வேண்டுகிறான். தம் பாட்டனார் வசிஷ்டரைப்பற்றிக் கூறுகிறார் முனிவர். ''அவர் எற்படத்தியிருந்த அரிமாத்தை (தர்மக்ஷேத்திரம்) ஓர் அரசன் அழித்துவிட்டான்; நான் அதை மீண்டும் உருவாக்க முயல்கிறேன். வயதான என்னால் முடியுமோ முடியாதோ?'' என்று தந்தை கூறி வருந்தியதைக் கண்டதும் த்வைபாயனன், தான் அதை மீண்டும் நிறுவ தாகச் சபதம் செய்கிறான். அனந்த மிகுதியுடன் மகனைக் கட்டி யணைத்துக்கொள்கிறார் பராசரர்.

தந்தை இறந்ததும் கோதுளி அரிசமம் வந்து, கௌதமரின் ஆசியுடன், பைலன் என்ற நண்பனுடன், தர்மக்ஷேத்திரத்தைப் புதுப்பிக்க த்வைபாயனன் உறுதி தளராத நெஞ்சுடன் புறப்படுகிறான்.

சரஸ்வதி நதி ஒமாய்ப் போய், தர்மக்ஷேத்திரம் என்ற பூமியில், ஒர் இடத்தைச் சுத்தம் செய்து, குண்டம் அமைத்து யாகம் செய்கிறான். நாலைந்து அரக்கர்கள் வந்து யாக அக்கினியை அழித்து, இருவரையும் அடித்து மயங்கி விழச் செய்துவிடுகிறார்கள்.

த்வைபாயனன் கண்ணைத் திறந்தபோது மகா அதர்வ ஜாபாலியும் சிஷ்யர்களும், அவர் பெண் வாடிகாவும், தன் தோழன் பைலனுக்குப் பச்சிலை மூலிகைகள் கொடுத்து நினைவு திரும்பச் செய்வதைக் கண்டான். அதர்வ வேதத்தில் தேர்ந்தவர் என்பதால் மகா அதர்வ ஜாபாலி என்று அழைப்பார்கள்.

வசிஷ்டர், விசுவாமித்திரர் ஆகிய ரிஷிகள் வேதம் ஒன்றே என்று கூறி வந்தனர் என்பதால், வசிஷ்டரின் பேரன் இந்த த்வைபாயனன் என்பதை அறிந்ததும் ஜாபாலி மிகுந்த கோபம் கொள்கிறார். ஆனால் ஜாபாலியின் மகளே, த்வைபாயனரின் இளமையும் அறிவுக் கூர்மையும் கவர்கின்றன.

தம் ஆசிரமத்தில் தஞ்சம் அளித்து, இரவே த்வைபாயனரைக் கொல்ல மந்திர உச்சாரணம் செய்தார் ஜாபாலி. ஆனால், வாடிகாவின் உதவியால் த்வைபாயனர் மட்டும் தப்பித்துக்கொள்கிறார். நடக்கவே முடியாத பைலன் மட்டும் அங்கே இருக்கிறான்.

ஆபத்திலிருந்து தப்பிய த்வைபாயனர், தர்மக்ஷேத்திரத்தைப் புதுப்பிக்க மன்னன் சந்தநுவின் உதவியை நாடுகிறார். அந்தச் சந்தநுவின் ராணிதான், தன் தாய் பரிமளகந்தி என்பதையும் அறிகிறார்; தாயும் மகனும் அன்புமிக் கூர்ந்து நிற்கின்றனர். சந்தநுவின் நோயைத் தீர்த்து, மன்னனின் அன்பையும் பெறுகிறார் த்வைபாயனர்.

மன்னனின் ஆஸ்தான வித்துவானுகிய ஆசார்ய விபூதி, மகாஅதர்வ ஜாபாலியைச் சேர்ந்தவர். அதனால், த்வைபாயனர், மன்னன் சந்தநுவிடம் சலுகை பெறுவது ஆசார்யருக்குப் பிடிக்கலில்லை. தர்மக்ஷேத்திரத்தைப் புதுப்பிக்க மன்னன் உடன்பட்டதும், வேறு முறைகளில் தடை செய்யப் பார்த்தார். வாறபேய யாகம் அந்தப் பூமியில் செய்யவேண்டுமென்று த்வைபாயனர் கூறியதும், அதற்குத் தாமும் ஜாபாலியும் வரமுடியாது என்று மறுத்துவிட்டார் அசார்ய விபூதி.

அதர்வ வேதப் பிரயோகம் நிறைந்த அந்த யாகத்தில், எப்படியும் ஜாபாலியையும் கலந்து கொள்ள வைக்கவேண்டும் என்று த்வைபாயனர் பாடுபட்டார். இதற்கிடையில் வாடிகா, த்வைபாயனரைத்தான் மணந்துகொள்வேன் என்று தன் தந்தையிடம் மன்முடி, சம்மதிக்கச் செய்துவிட்டார். பயந்துகொண்டே ஜாபாலியைப் பார்க்க வந்த த்வைபாயனர், வாடிகாவை மணக்கிறார்.


யாக பூமியில் சந்தநுவுடன், சத்தியவதி பரிமளகந்தியும் வந்திருக்கிறான். தன் கணவனிடம் ராணி விசேஷ அன்பு பாராட்டுவதைத் தவுறாக எண்ணிவிடுகிறள் வாடிகா. தாய்-மகன் என்ற உறவு தெரியாமல், ராணியை ஒழித்துவிட முடிவு செய்கிறள். தன் அத்தை ஊர்வியிடம் கூறி, சில விஷ மூலிகைகளை, ராணியின் படுக்கையறையில், ஒருவருக்கும் தெரியாமல் தலையணைக்கு அடியில் வைத்துவிடுகிறள் வாடிகா.


படுக்கப் போன ராணி, சில பச்சிலைகள் தெறியிருப்பதைக் கண்டு, பயந்து, படுக்கையை உதறிப் பார்க்கிறான். நிறையப் பச்சிலைகள் தெறி விழுகின்றன. யாரோ தனக்கு விஷமிட்டிருக்கிறார்கள் என்பதையுறிந்து, அந்த இலைகளை, த்வைபாயனரிடம் அனுப்புகிறள். அந்தப் பச்சிலைகளைப் பார்த்ததும், தம் மனைவியைக் கூப்பிட்டுக் காட்டி, ''அவை என்ன?'' என்று கேட்கிறார், தீவை பாயனர்; அவள் முகம் மாறிக் கறுத்துப் போகிறது. த்வைபாயனர் மிரட்டியதும் உண்மையைக் கூறுகிறள் வாடிகா. அதைக் கேட்டதும் பதறிய த்வைபாயனர், 'ராணி, தம் தாய்' என்பதை அறிகிறார்.

பெரிய ஆபத்து லிலகிய மகிழ்ச்சியுடன் நாடு திரும்புகிறள் ராணி. சத்தியது இறந்ததும், முன்பே பிரம்மசரிய சபதம் எடுத்துக்கொண்ட காங்கேயர், அரச பதவியை ஏற்க மறுத்துவிட்டார். அரசனும் பின்பு மகன் விசித்திரவீரியனும் இறந்தது ராணியின் மனத்தைப் பெரிதும் வாட்டுகிறது. சந்தநுவின் குலம் தழைக்க, தாயின் வற்புறுத்தலின் பேரில் த்வைபாயனர், அந்த நாளை, நியோக முறையை மேற்கொண்டு, குலம் தழைக்க உதவுகிறர். வாடிகாவுக்குப் பிறந்தவர் சுகர். மணம் செய்துகொள்ள விரும்பாத சுகரை, எல்லாரும் வற்புறுத்தி ஆதிவாசிப் பெண் ஒருத்தியை மணக்கச் செய்கின்றனர்.


தர்மக்ஷேத்திரம், அரக்கர்களால் அழிவுண்ட கோதுளி அரிசமம் இரண்டும் புதுப்பிக்கப்படுகின்றன. த்வைபாயனர், உலகின் முதல் நூல் என்ற சிறப்புப் பெற்ற வேதங்களை நான்காகப்பகுத்து முறைப்படுத்துகிறார்; பதினெண் புராணங்களை எழுதி உலகத்தில் ஆன்மிக நெறி பரவ உதவுகிறர். அநாதியான வேதத்தை வியாசரும் வாழ்ந்து வருகிறர். அடுத்து, திரு உமாபதியின் சித்திரங்கள் இக்கதையைச் சித்திரிக்கின்றன.






























பீஜபூர் அரண்மனையில் அன்று பெரும் பரபரப்பு. ஷாஜியைப் பாஜி கோர்படே சிறைப் பிடித்து வருகிறார் என்ற செய்தி மக்களிடையே வெகு விரைவாகப் பரவியிருந்தது. அரண்மனை முன்றிலில் உள்ள நீண்ட நடைபாதையின் இரு மருங்கிலும் மக்கள் முண்டியடித்துக் கொண்டு நின்றிருந்தார்கள். சுல்தானுக்கு எதிராக ராஜ்யபத்தில் கிளர்ச்சிகளைத் தோற்றுவித்தபடி சுல்தானுக்கு நண்பராகவும் இது வரை இருந்த அந்த ஆப்கானான போர்வீரனைப் பற்றி ஆங்காங்கும், வசவுகளும் அங்கே கிசுகிசுத்தன.

பாஜி கோர்படே, அந்த மகத்தான செயலை ஒரு சிறந்த நாடகம் போல் நடத்தத் தீர்மானித்திருந்தான் போலும்! விசேட நாட்களில் படையினர் அணி வகுத்து நிற்கும் அந்தப் பெருந்திடல் வெளியின் முனையிலேயே ரதத்தை நிறுத்தச் செய்து, சங்கிலிகளால் பிணைக்கப்பட்ட ஷாஜியை நடத்தி வந்தான். ஒரு பெரும் குற்ற வாளியைப் பிடித்து இழுத்து வருகிற தோரணையில், ஆயுதம் தாங்கிய ஏழெட்டு வீரர்கள் வேறு புடை சூழ்ந்து வந்தனர்.

சூழ மக்களின் இழிமொழிகள் ஷாஜியின் நெஞ்சைத் தாக்கி உதிர்ந்து கொண்டிருந்தன. நேர்மையான அந்த நெஞ்சில் உதிரம் கசிந்ததால் அந்தப் பெருமகனின் தலை கவிழ்ந்திருந்தது. ஷாஜியை நோக்கி வீசப்பட்ட வசவுகளும், ஊடே அவரைச் சிறைப் பிடித்த கடமை வீரனுக்குப் புகழப்பட்ட பாராட்டு மொழிகளும் பாஜி கோர்படேவின் நெஞ்சில் பலி மலர்களாக உதிர்ந்து, அவன் நெஞ்சையும் தலையையும் செருக்குடன் நிமிர வைத்திருந்தன.

எத்தனை பெரிய வீரன் அவன்! தட்சிணப் பிரதேசத்தில் பீஜபூருக்காகப் போராடி, பெரும் வெற்றி பெற்றுத் திரும்பியிருப்பதற்காக ஷாஜிக்குப் டாராட்டு விழா விருந்துக்கு ஏற்பாடு செய்து, அந்தக் கோலாகலமான கொண்டாட்டங்களுக்கு நடுவேயல்லவா அவரைச் சங்கிலிகளால் பிணைத்து இழுத்து வருகின்றான்?

சுல்தான் அலி அதில் ஷா அரியணையில் வீற்றிருந்தார். சபை கூடியிருந்தது. ஷாஜி குற்றவாளியாக நிறுத்தப்பட்டிருந்தார்.

"பிரபு! நான் செய்த குற்றம் என்ன? எனக்கு ஏனிந்த அவமானியானை? பீஜபூரின் ராஜசேவைக்காக வாழ்நாளெல்லாம் பாடு பட்டு உழைத்து வரும் இந்த ராஜ விசுவாசிக்கு இதுதான் சுல்தான் அவர்கள் அளிக்கும் வெகுமதியா? சுல்தான் அவர்களின் சீர்த்தியைத் திக்கெட்டும் நிலை நாட்டுவதற்காக வாளேந்திப் போராடும் இந்த வீரன், இப்போது தான் தட்சிணப் பிரதேசத்தில் விஜயம் செய்து தங்களுக்காக வெற்றி கனிக் குவித்து வந்திருப்பதற்காக இந்தச் சங்கிலிப் பரிசளித்துள்ளீர்களா பிரபு?"—குமுறினார் ஷாஜி.

"போதும் நிறுத்தும், உமது ராஜ விசுவாசப் பிரதாபத்தை, அந்த மூர்க்கனுக்கு லிகிதம் அனுப்பி வரவழைக்கச் சொன்னேனே. வந்து விட்டானு அவன்?" , சுல்தான் வெகுத்த வினவினர்.

'யாரைச் சொல்கிறீர்கள் பிரபு?"

"ஓ, மறந்தே விட்டீரா? அது தான் ஒரு குட்டிச் சைத்தானைப் பெற்று வைத்திருக்கிறீரே, அந்த முரட்டுப் பயல் பசுந் கொள்ளைக் காரன் சிவாஜி! அவனை உடனே சரணடையச் சொல்லுங்கள் என்று கூறியிருந்தேனே! செய்தீர்களா? அவனுக வந்து நின்று குற்றங்களை ஒப்புக் கொண்டிருந்தால் மன்னித் திருப்பேன். மாவல் பிரதேசத்துச் சஹ்யாத்ரி மலைத்தொடரில் அவன் பிடித்த கோட்டைகளையெல்லாம் அவனுக்கே உரிமையாக்கியிருப்பேன். ஆனால், அவன் ஏன் இது வரை வரவில்லை? உம் மனனுடைய அடாத செயல்களுக்கு நீர் தக்க பதில் சொல்லியே ஆக வேண்டும்!" இடிக் குரலில் வார்த்தைகளை எறிந்தார் பீஜபூர் சுல்தான்.

"மன்னிக்க வேண்டும் பிரபு! நான் அயிரம் முறை கூறிவிட்டேன், அவன் என் பிள்ளையே அல்ல. எனக்கும் அவனுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. ஒதுக்கி வைத்த குடும்பத்தோடு என்னைத் தாங்கள் தாம் ஒட்டுப் போட்டுச் சந்தேகிக்கிறீர்கள்."

"உமது குடும்பச் சண்டையைத் தீர்ப்பதற்காக நான் இங்கே இந்த அவையைக் கூட்டவில்லை. உம்மீது உள்ள பச்சாத்தாபத்தால், உமது மகனைத் திருத்துகிற பொறுப்பை உம்மிடமே ஒப்படைத்தேன். ராஜ நீதியை உம்மகனுக்குத் தாங்கள் தாம் புரிய முடியுமா? அந்தக் கொடியவனை இந்த அவையில் கொண்டு வந்து நிறுத்தித் தண்டிக்க எங்களுக்கு எவ்வளவு நேரமாகும்?"

"அந்த மூர்க்கச் சிறுவன் முன்பு ஒரு முறை இந்த அவையில் தங்களைப் பணிய மறுத்த போதே நான் அவனை ஒட்டுமில்லை, உறவுமில்லை எட்டு கூறித் துரத்தி விட்டேன் பிரபு. இப்போதும் நான் தங்கள் கட்டளைப் படி முயலாமல் இல்லை. அலல் என்னால் திருத்தக்கூடிய நிலையை மீறி அவன் தவறிழைத்து விட்டான். சுல்தான் அவர்களைப் பணிய மறுக்கிற பகைத்துக் கொள்கிற அந்த மூடனைப் பிடித்து வர ஒரு சேனை வேண்டுமானாலும் அனுப்புங்கள். அதற்காக என்னைச் சிறைப் படுத்தி இந்த அவையில் அவமதிக்க வேண்டுமா பிரபு?" ஷாஜியின் உண்மையான ராஜவிசுவாச உள்ளம் பேசியது.

"தவறுகளைத் தான் செய்து விட்டான், உமது குமாரன். அவன் அபாயகரமான குற்றவாளி; கல்யாண்பூர் கஜானவில் சேர வேண்டிய பீஜபூரின் பெரும் செல்வத்தை அவன் வரிப்புறிக் கொள்ளையடித்திருக்கிறான். நகரத் தலைவனின் மாளிகையில் புகுந்தும் சூறையாடி, முல்லாஜு அகமதுவை விரட்டியடித்திருக்கிறான். இனிப் பொறுப்பதற்கில்லை. அந்தக் கொடியவனைக் கடுமையாகத் தண்டித்தேயாக வேண்டும்." அவையிலிருந்த ஒரு பீஜபூர் பிரபு எழுந்து முழங்கினான்.

சுல்யாண்பூரைக் காக்கும் திறன்றிக் கோட்டை விட்டு விட்டு முல்லாஜு அகமதுவும் அங்கே வந்து கறுப்பு உடையில் நின்றிருந்தான். கண்ணீர் மல்கச் சுல்தானிடம் புலம்பவும் செய்தான். பீஜபூர் அரசவையில் பெரும் செல்வாக்குடன் ஓர் இந்துப் பிரபு இருப்பதாஜ் என்று ஷாஜியின்பால் வெறுப்புற்றிருந்த அரசியல் எதிரிகள் ஒன்று போல் கூக்குரலிட்டனர்.

ஷாஜிக்கு நிலைமை புரிந்து விட்டது. பாஜிகோர் படே போன்றவர்களே பகையாளியாகி நிற்கும் போது மற்ற வர்களை எண்ணி மனம் நோக அவர் விரும்பவில்லை. அவர் தலை கம்பீரமாக நிமிர்ந்தது.

"பிரபு! தனியில் பிணித்து எங்களை இப்படித் தலைகுனியச் செய்வதை விட, எனக்கு ஆணையிடுங்கள். நானே அந்தச் சிறுமதி பிடித்தவனை

மீது படையெடுத்துச் செல்கிறேன். ஒன்று அவனே இழுத்துவந்து பணிய வைப்பேன். அல்லது தங்களைப் பணிய மறுக்கும் அவன் தலையுடன் வருவேன்'' என்று முழக்கமிட்டார், சுல்தான் அந்தப் பேச்சைச் செவியேற்கச் சித்தமாயில்லை: ''அவசியமில்லை ஷாஜி! ஒரு கொள்ளைக்காரனைப் பிடித்து வரப் பீஜபூர் படைகளை அனுப்புகிற அளவு நான் முட்டாளல்ல. அவனே இங்கே வரவழைக்க எனக்குத் தெரியும். உமக்கு எதற்கு வீண் சிரமம்? நீர் அவன் வருகிற வரை சிறையில் ஓய்வு எடுத்துக் கொள்ளும்.''

ஷாஜியின் நெஞ்சில் நிம்மதி குலைந்தது.

சிறைக் கூடத்தில் நாட்கள் நகர்ந்தன.

'எத்தனை கல்நெஞ்சன் அந்த ஜீஜாபாயின் முரட்டுப் பிள்ளை. ஆம்; அவன் தாயின் பிள்ளைதான்! எப்போதேனும் நம்மைத் தந்தையென்று மதித்தானா? நம் சொல்லுக்குக் கட்டுப்பட்டானா?' ஷாஜியின் உள்ளம் புழுங்கிற்று.

'முட்டாள் சிறுவனே! நீ வசமாக்கிக் கொண்டிருக்கும் கோட்டை களைப் பீஜபூர் வசம் ஒப்படைத்து விடு. சாம்ராஜ்யத்தில் புரட்சி செய்வதாக நிகேதத்து நீ செய்த அநேக குற்றங்களுக்கும் சுல்தானிடம் வந்து மன்னிப்புக் கேள். நான் உன்னைச் சுல்தானின் கோபத்திலிருந்து மீட்டு என்னைப்போல் ஓர் அந்தஸ்துள்ள ஜாகிர்தாராக நியமிக்க வைக்கிறேன்'' என்று எத்தனையோ இன் மொழிகளை அவர் எழுதத்தான் செய்தார்.

ஆனால் அவன், 'இன்னும் நான் சிறு பிள்ளை அல்ல. நீதும் நன்றும் பிரித்துணராப் பேதையை எனக்கில்லை. எரிமலையில் பெருந் தீப் பிழம்பைக் காணாமல் உமது பீஜபூர் சுல்தான் கண்களை மூடிக் கொண்டு, 'அந்தத் தீப்பந்தத்தை அணைத்துவை. அது என் கண்களை கூசவைக்கிறது' என்றால் அதற்கு நான் என்ன செய்வது? தந்தையாக வாருங்கள், தான் பணியக் காத்திருக்கிறேன், அதுவல்லாமல் இந்த மலைநாட்டுக் கோட்டைகளை, மனக் கோட்டை கட்டிக்கொண்டிருக்கும் பீஜபூர் சுல்தான் வசம் ஒப்படைத்தல் இயலாது' என்று பதில் எழுதி விட்டானே!'

மாதங்கள் பல ஆகிவிட்டன..

'உன் தந்தை சிறைக் கொட்டடியில் சாவதைத் தடுக்க விரும்பினால் நேரில் வா' என்ற சுல்தானின் கட்



டனையை அந்த மரட்டிய இளைஞன் ஒரு பொருட்டாகவே நினைக்கவில்லை. ஆனால் அன்று வந்த தகவல் அந்தத் தீரனின் கடின சித்தத்தையும் அசைக்கச் செய்து விட்டது..

ஷாஜியை ஒரு மண்மேடையில் திறுத்தி, கற்றிலும் மார்பு வரை கவரெழப்பி விட்டார்கள். நான் தோறும் உணவு குறைக்கப்பட்டு வந்தது. வொஜியின் வருகையை எதிர் நோக்கிக் கல்லறையின் இறுதிப் பருதி ஒவ்வொரு செங்கல்லாய் மூடப்படுகிறது. வொஜி வந்தாலொ முடியாதது' என்ற அந்தத் தகவல் அவனைப் பெரிதும் உலுக்கிவிட்டது.

உடனே பீஜப்பூருக்குப் புறப்பட ஆயத்தமானார் வொஜி. ஆனால் அவருடைய இளம் மனைவி சாயாபாய் ஓடி வந்து அவர் முன்னே நின்றாள். அவள் கண்கள் கலங்கியிருந்தன.

''என்ன ஆகி விட்டது என்று இப்படிக் கண்ணைக் கசக்குகிறாய்?''

''ஏதும் ஆகிவிடக் கூடாது என்று தான் கவலுகிறேன் பிரபு! இந்த முயற்சியில் தாங்கள் நேரடியாக ஈடுபடுவது அவ்வளவு சரியல்ல என்று எனக்குத் தோன்றுகிறது. பீஜப்பூர் பிசாசு உங்களை விழுங்கி விட நினைக்கிறது இப்போது நீங்கள் அதன் வாயில் விழப் புறப்படுகிறீர்கள்''? சாயாபாய் உருகிப் புலம்பினாள்.

''நாய்களுக்கும் பேய்களுக்கும் நான் ஒரு போதும் அஞ்சுவதில்லை, சாயாதேவி! அங்கே என் தந்தை உயிரோடு கல்லறையில் புதைத்து கொண்டிருக்கிறார். அவருடைய இறுதி நாட்கள் ஒவ்வொரு செங்கல்லாலும் எண்ணப்படுகின்றன. மூச்சு விடக் காற்றின்றி, முழுதாக ஒரு வேளைச் சோறின்றி அங்கே அவர் ஜீவ சமாதி ஆகிக்கொண்டிருக்கிறார். இந்த நிலையில் நான் அவரைக் காக்கப் போகவில்லை யென்றால் அப்புறம் அவருக்கு மகனுப் பிறந்து என்ன பயன்?'' — வொஜியின் உள்ளம் சித்திரவதைப் பட்டுக் கொண்டிருந்தது.


அன்னை ஜீஜாபாயும் இப்போது மருமகள் சாயாதேவியின் கட்சியில் வாதாட முனைந்தார். ''உன் தந்தைமீதான பக்தியை நான் போற்றுகிறேன்' அவர் கால காலமாக நம்மை ஒதுக்கிவிட்டு, சிறிதும் பற்றதலோ பாசமோ இல்லாமலிருந்த போதும் இப்போது நீ அவர் உயிரைக் காக்கத் துடிப்பது எனக்கு ஆனந்தமாக இருக்கிறது. ஆனாலும் கணவரைக் காக்கும் முயற்சியில் என் பிள்ளையைப் பலி கொடுக்க என் உள்ளம் இடம் தரவில்லை மகனே! அவர் என்னையும் உன்னையும் கைவிட்ட திருக்கட்டும். இன்று வரை இந்த மண்ணின் எதிர்யின் சேவைக்கே தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருப்பவர்; கடைசிக் கட்டத்திலும் கூட அவர் உன் மீது படையெடுத்து வரவே விரும்பியிருக்கிறார். 'என் மகனைப் பீஜபூருக்குப் பணியவைப்பேன்; அல்லது, பணிய மறுக்கும் அவன் தலையைக் கொண்டு வந்து, சுல்தானின் பாதங்களில் வைப்பேன்' என்று சூளுரைக்கவும் செய்திருக்கிறார். அவர் அப்படி இந்தத் தேசத்தின் எதிர்கால நிலையைப் பற்றிக் கிஞ்சித்தும் எண்ணாமலும், உன்னுடைய மகத்தான முயற்சிக்குப் பின்னணியில் ஒரு புனித வேள்வி நடைபெறுவதை உணராமலும் அப்படிப் பேசியது ஒரு புறமிருக்கட்டும். இப்போது பீஜ



அன்பளிப்பு

சில்பி யின் தெய்வச் சித்திரங்கள் 6

புனிதத் திருத்தலங்களில் அருள்பாலிக்கும் தெய்வத் திரு உருவங்கள்.* காஞ்சிப் பெரியவர் ஆசிபெற்ற 'சில்பி' வரைந்துள்ள ஓவியங்கள். பல வண்ணங்களில் ஆர்ட் காகிதத்தில் அச்சிடப்பட்டவை. பூஜை அறையில் நாள்தோறும் போற்றி வணங்குவதற்கு உகந்தவை.



புதிய டெபாலிட் செய்பவர்களுக்கும் அறிமுகம் செய்பவர்களுக்கும் ஸ்ரீராம் வழங்கும் அன்பளிப்பு.

நீங்கள் டெபாஸிட் செய்யும் ஒவ்வொரு ரூ. 5000க்கும், இந்த அன்பளிப்பு உண்டு. (அறிமுகம் செய்வோர், ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் ஃபைனான்ஸ் கம்பெனி லிட்., ஸ்ரீராம் சிட்ஸ், ஸ்ரீராம் ஃபைனான்ஸ், ஸ்ரீராம் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் ஏதேனும் ஒன்றில் அங்கத்தினராக இருக்கவேண்டும்.) நீங்கள் விரும்பினால், உங்களுக்கு உரிய அன்பளிப்பை இந்தியாவில் எந்த விலாசத்திற்கும், எங்கள் செலவில் பதிவு தபாலில் அனுப்பி வைக்கிறோம். (வெளிநாடுகளுக்கு விமான தபால் கட்டணம் தனி)

1. கவர்ச்சி மிகு வட்டி:

டெபாலிட் காலம் / வட்டி விதம்	மாதாமாதம் வட்டி பெற	6 மாதங்களுக்கு ஒரு முறை வட்டி பெற	மறு முதலீட்டுத் திட்டத்தில் மொத்தமாக வட்டி பெற
1 ஆண்டு	14.0%	15.0%	15.5%
2 ஆண்டுகள்	14.5%	16.0%	17.5%
3 ஆண்டுகள்	15.0%	17.0%	20.0%

2. மறு முதலீட்டுத் திட்டம்

இத்திட்டத்தில் (Re-investment plan) உங்களது ரூ. 3,125, மூன்றே ஆண்டுகளில் ரூ. 5,000 ஆக வளர்கிறது. இதில் டெபாஸிட் செய்வோர்க்கும் இவ்வன்பளிப்பு உண்டு. உங்களே அறிமுகம் செய்பவரும் இந்த அன்பளிப்புப் பெறலாம்.

3. நம்பிக்கை—நாணயம்—அனுபவம்—உங்கள் டெபாஸிட்டிற்கு உத்திரவாதம்

ஸ்ரீராம் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் நிறுவனம் பதிவு செய்யப் பெற்ற பார்ட்னர்ஷிப் (Registered Partnership) நிறுவனம். இந்த நிறுவனம் மோட்டார் வாகனங்களைத் தவணை முறையில் வாங்குபவர்களுக்குத் கடன் உதவி செய்கிறது. இத்துறையில் பதினாறு வருட அனுபவமும் நிறைமையும் மிக்கவர்களால் நிர்வகிக்கப்படுகிறது.

*1. ஸ்ரீ குருவாயூரப்பன். 2. ஸ்ரீ முருகன், திருப்பரங்குன்றம். 3. ஸ்ரீ பங்காரு காமாட்சி, தஞ்சாவூர். 4. ஸ்ரீராமர், பத்ராசலம். 5. ஸ்ரீ சோமதி அம்மன், சங்கரன்கோவில். 6. ஸ்ரீ அபிராமி அம்மன், திருக்கடையூர். (அளவு: 23 செ.மீ. x 19 செ.மீ.)

ADWAVE/SII/1724

SHRIRAM INVESTMENTS — YOUR FINANCIAL FRIEND-IN-NEED

ஸ்ரீராம் இன்வெஸ்ட்மெண்ட்ஸ்

தலைமை அலுவலகம்: 123, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை 600 001. போன்: 26545/37890/21425.

கிளை அலுவலகம்: 54, வடக்கு உஸ்மான் சாலை, தி. நகர், சென்னை 600 017. போன்: 441074 (தெலைபேசி விடுமுறை)

பெங்களூர் கிளை: செல்வா ஃபிளோர்ஸ், ரேவுனம்மா டவர், 70/1, மிஷன் ரோடு, பெங்களூர் 560 027. போன்: 27006.

பூரின் எதிர் நீதானே தவிர, உன் தந்தையல்ல. அவரைச் சிறைப்படுத்தியிருப்பதே உன்னை வரவழைப்பதற்குத்தான். நீ ஒரு சாதாரண மனிதனுக உன் சொந்தப்பிரசங்களுக்குக் கட்டுப்பட்டு அங்கு ஓடினுல், ஒரு மாபெரும் சாம்ராஜ்ய முயற்சியே அழிந்து போகும். பீஜப்பூர் சுல்தான் உனக்குக் குறைந்த பட்சத் தண்டனையாகக்கூட மரண தண்டனையே அளிப்பான்!''

''எல்லாம் நான் உனராததல்ல மாதாஜி! என் தாயின் தாலி பாக்கியத்தைக் காக்க என் உயிர்தான் வேண்டுமென்றுல், அத்த விலையைத் தர நான் தயங்கவது சனமல்லவா? நான் பீஜபூருக்குச் செல்வதை யாரும் தடுக்கவேண்டாம்!'' சிவாஜியின் குரலில் உறுதி தொனித்தது.

''உன் முடிவு அதுவானல் போ. ஆயின் நீ போன மறுகணமே நான் நிதை மூட்டி அனலில் புகுந்துவிடுவேன். தாவிபாக்கியம் மட்டுமல்ல. தனயனையும் நான் சேர்ந்தே மூழ்கப் போகிறேன். அதன் பிறகு நான் எதற்கு உயிர் தரித்திருக்க வேண்டும்?'' ஜீஜாபாயின் பேர்சில் மாவீரன் சிவாஜி மனம் கலங்கி நின்றவராய், ''மாதாஜி!'' என்ருர்.

''நீ செல்வதைத் தவிர்த்துத் தான் ஆக வேண்டும் மகனே! உன் தந்தையைக் காக்கக் கூடாது என்பதா என் எண்ணமாக இருக்கும்? நீயே யோசித்துப் பார். தந்தையைக் காக்கத் தன் உயிரை இழப்பதற்காகவா மாவல் நாட்டு மலே வீரர்கள் உன் அணியில் நிரண்டார்கள்? கட்டாந்தரையாகப் போயிருந்த பல ராமங்கள் புத்துயிர் பெற்று எழுந்ததும், மலேக் காடுகளில் அலேந்து திரிந்து மாபெரும் யுத்தங்கள் செய்து, எண்ணற்ற சாகசங்கள் புரிந்து எத்தனையோ வீரர்கள் உயிரையும் இழந்து, நீ இன்று இத்தனே மலேக் கோட்டைகளைப் பெற்றிருப்பதற்கு உரமாஞர்களே, அதெல்லாம் பொய்யா? மக்கள் உன்மேல் புரட்சிவீரன் என்கிறர்கள். பீஜப்பூர் அரசு உன்னை வழிப்பறி கொள்ளக்காரன் என்கிறது. எது உண்மை மகனே? யோசித்து முடிவு செய். தந்தையைக் காப்பதா, தாய் நாட்டை மீட்பதா? உன் இலட்சியம் எது என்று நீர்மானித்த பின் செயலாற்று!'' அக்கினி அஸ்திரங்களேப் பிரயோகித்து விட்டு அந்த இடத்தை விட்டு அகன்று சென்று விட்டார், தம் கணவனே விடத் தாய் நாடே பெரிதென்று எண்ணிய அந்தப் பெருமாட்டி.

சிவாஜி ராய்கட் கோட்டையின் உப்பரிகையின் மேல் மாடத்தில் நின்றவாறு மலேயடிவாரத்தை நோக்கினுர். மக்களும், மாடுகளும், பாதையில் செல்லும் வண்டிகளும் எறும்புச் சாரியாய்ப் புலப்பட்டன.

'ஓ இந்த மலேக் காடுகளில் நாளும் இப்படி ஓர் ஏறும்பாய் அலேந்து திரிந்தவன்தானே? எது என்னே இந்த கோட்டைக் கொத்தளத்தில் ஏற்றியிருக்கிறது? இந்த ராய்கட், அதோ அந்த மலேயின் காடு முடியில் தோன்றுகிற சிம்மக் கோட்டை, பிரதாப்கர், தான் முதல் முதலாக என் முயற்சிக்கு மங்கலத் தோரணம் கட்டுவதுபோல் கத்தியாலும் புத்தியாலும் கைப்பற்றிய தோரணக்கோட்டை. மொகலாய ராஜ்யங்களுக்கும் பீஜபூருக்கும் நடுவே ஒரு பெரிய நிலப்பரப்பில் அமைந்து கிடக்கும் ராஜபாட்டை போன்ற இந்த மலேத் தொடரின் அத்தனே கொடு முடிக் கோட்டை களேயும் நான் வளேத்துக் கைப்பற்றியிருப்பது அவ்வளவு சாதாரண விஷயமா? ஒரு கொள்ளேக்காரன் செய்கிற வேலேயா இது? வீர மராட்டியர்களின் எழுச்சியைக் கண்டு பீஜபூரை விட மொகலாயர்களே கவலே கொண்டிருப்தாகஆம்; மொகலாயர்கள் .'' சிவாஜியின் சிந்தையில் எதோ பொறி தட்டியது.

''மாதாஜி!'' என்று கூவிக் கொண்டே மாடிப்படிகளில் மலேப் பாறை சரிவது போல் தடதடவென்று இறங்கி உட் கூடத்தை நோக்கி ஓடினுர்.

''சிவாஜிக்குத் தாய்நாடும் பெரிது; தாயின் மாங்கல்ய பாக்கியமும் பெரிதே. தந்தையைக் காக்காத வஞல் இந்த மாபெரும் நாட்டிற்கு மட்டும் பெரிதாக என்ன செய்து விட இயலும்? பீஜபூர் சுல்தானின் சூழ்ச்சியே முறியடித்து என் தந்தையை மட்டாமல் ஜயப்போ வதில்லே நான்'' என்று கூறித் தம் நிட்டத்தை விவரித்தார். மாதாஜி அந்த முயற்சியை ஆசீர்வதித்தார்.

பீஜபூர் அரசவை அன்றும் பரபரப்புடன் தான் கூடியிருந்தது. ஷாஜியின் ஜீவசமாதியில் இன்னும் ஒரே யொரு செங்கல்லேத்தான் சேருக வேண்டும். அத்துடன் காற்றுத்



டாக்டர்: நீபாவளி வந்தாலே எனக்கு ஒரே பிஸி.

நோயாளி: ஏன் டாக்டர் அப்படி?

டாக்டர்: நம்ப மிக்சருக்கு ஏகக் கிராக்கி, அண்டாவாச் செலவாகும்!

துவாரமும் அடைபட்டுப் போகும். மரண தண்டணேக்குச் சமமான அந்தத் தண்டனேயை நிறைவேற்ற முன் மறுபடியும் சபையில் ஆலோசித்த தீர்ப்புக் கூற எண்ணியே சுல்தான் அவையைக் கூட்டியிருந்தார். அவையில் அலேபாய்ந்தது. 'வொஜி முற்ருகப் பீஜபூரை அவமதித்து விட்டான். அவன் ஒடி வந்து மன்னிப்புக் கேட்டிருந்தால்கூட ஷாஜியை விடுவிப்பதோடு, அவனேயும் மன்விப் பது பற்றிப் பரிசீலித்திருக்கலாம். ஆஞல் வரவில்லே. அந்த இறுமாப்பிற்குச் சரியான புத்தி கற்பிக்க ஷாஜியின் கல்லறையில் இறுதிச் செங்கல்லேச் செருக வேண்டியது தான்'' என்று எல்லாரும் ஏகமனதாகக் கூறினர்.

அப்போதுதான் வாயில் காவலன் வந்து அந்த அவசரத்தவலேச் சொன்னன்: ''ஆக்ராவிலிருந்து முகலாயத் பேரரசர் ஷாஜஹான் ஒரு தூதுவனே அனுப்பியிருக்கிருர். மன் னரை உடனே காண வேண்டுமாம்!''

''வரச் சொல்..''

'உள் நாட்டுத் தலேவலியை ஒழித்துக் கட்ட முடியையில் இப்படி யொரு இக்கட்டா? பேரரசின் தூதுக்கு இப்போது என்ன அவசியம்? மீண்டும் பீஜபூர் மீது படையெடுக்க ஏற்கனும் நிட்டமோ? சுல்தானுக்கு ஒன்றும் புரியவில்லே. ஆஞல் சுல்தானின் அச்சம் அடுத்தலே கணங்களிலேயே அகன்றது.

அந்தக் கம்பீரமான தூதர் அவையினுள் பிரவேசித்தார். கழுத்துகள் திரும்பின. அவையிலர் கண் விழிகள் அனேத்துமே அந்தக் கொற்றவன் கூட முகப்பில் குவிந்தன. அங்கே, தும்மையே உருவான வெண்ணிற அங்கி, அடர்ந்து பரவிய நீண்ட வெண் தாடி, எளிய வெள்ளேக் குல்லாய் சகிதமாக அந்த முதியவர் கம்பீரமாக நடந்து வந்து சபை நடுவே நின்ருர்.

முறை கருதிக்கூட முதியவராஞ அம், அந்தத் தூதுவர், சுல்தானுக்கு வணக்கம் சொல்லாமல் நின்றது. அவையினருக்குப் பெரும் திகைப்பை உண்டு பண்ணியது. அத்தனே பெருடைய விழிகளும், அடுத்தது என்ன என்பது போல் சுல்தானே நோக்கின.

சுல்தான் அலி அதில் ஒர் ஓச வத்தை அந்தத் தூதுவருக்குச் சுட்டிக் காட்டி அமருமாறு கூறினர். சுல் தானிடம் நல்ல பெயர் எடுப்பதில் எப்போதுமே முழுவேக முனப்புடன் செயல்படுகிற பாஜிகோர்படே எழுந்து நின்று, ''இது மரபல்ல! வயதில் முதியவராக இருப்பினும் தூதாக வந்தவர் முறைப்படி சுல்தான் அவர்களுக்கு வணக்கம் தெரிவித் திருக்க வேண்டும்'' என்று கோரினுன்.

''வாழ்வை எதிர் பார்ப்பவன் வணங்குகிறன். வாழ வாழ்த்துபவன் வணங்குதல் அவசியம் என்று சுல் தான் அவர்கள் எதிர்பார்த்தால் இந்த முதியவனின் கரமும் சிரமும் வணங்கக் காத்திருக்கின்றன'' என்ருர் தூது வந்த அந்த முதியவர்.

அரசியல் கருத்து மாறுபாடுகளும், அபிப்பிராய பேதங்களும் ஆயிரம் இருப்பினும் சுல்தான் அலி அதில் ஷா, இறைத் தூதரைப் போல் விளங்கும்

அந்தத் தூய்மையான கம்பீரமான முதியவரைக் கௌரவிக்கவே விரும்பினார், பாஜி கோர்ப்டேயைக் கையமர்த்தி அமரச் செய்து விட்டு, ''தாங்கள் வணங்க வேண்டாம்; வாழ்த்துங்கள், போதும். ஆனால், தாதனுப்பக்கூட முடியவரான தங்களுக்தானு பேரரசர் நிரம்பப்படுத்தி யிருக்க வேண்டும்?'' என்று பரிவு சிறக்க வினவினார்.

''வந்தவனின் வயது முக்கியமல்ல சுல்தான்! வந்த விஷயந்தான் முக்கியம். யுத்தத்தை மனத்தில் முடிவு செய்துகொண்ட தூதருளுக்குத்தான் துடியாகப் பகதை னெத்தை மூட்டி விட்டுச் சிரழிவுக்கு வித்தூன்றுகிற ஆளாகத் தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டும். நட்பும், நல்லெண்ணங் களும் பே ரன்னேப்போல் சாதாரண முதியவர்கள் போதும் என்பது சுக்கர வர்த்தியவர்களின் எண்ண ம்!'' என்று கூறி, சுல்தானே வாழ்த்தி விட்டு அவரிடம் ஒரு முடங்கலைக் கொடுத்தார், அந்தத் தூதர்.

அதை வாங்கிப்படித்த சுல்தானின் முகத்தில் ஒரு கணம் இருள் பரவி, கடுமை படர்ந்ததையும் அவர் கவனிக்கத் தவறவில்லை.

''..உமது றையிலிருக்கும் ஷாஜி மொகலாயப் பேரரசின் அன்பிற்கும் ஆதரவிற்கும் உட்பட்டவர். அவர் மகன் வொஜியும், அவனது ஆதிக் கத்திலிருக்கும் அத்தனே சொத்துக் களும் இந்தக் கணம் முதல் பேரரசின் பாதுகாப்பையும் நல்லுதவிகளையும் பெற்றுள்ள விவரத்தை நீர் இந்த லிகிதம் மூலம் அறியக் கடவது. ஷாஜிக்குப் பேரரசர் தம் அன்பைத் தெரிவித்துத் தனியே ஒரு லிகிதமும், பட்டாடை ஒன்றும் அனுப்பியுள் ளார். உடனே அதை அவரிடம் சேர்ப்பிக்க..''

முடங்கலில் பேரரசின் முத்தி ரையுடன் தக்கணத்தின் ஆளுநரான இளவரசர் முரத்பக்ஷ் கையெழுத் திட்டிருந்தார்.

''சந்தேகப்பட ஏதுமில்லே. தாதனே அவமித்துப் பேரரசின் கோபத்துக்கு வீனே ஆளாக விரும்பவில்லே கல் தான். அந்த மலே எலி மகா ராஜதந் திரி என்று மக்களால் பேசப்படும் வொஜி, பீஜபூரை நேரடியாக எதிர்க் கவோ, சரணடையவோ துணிவின்றிப் பேரரசின் உதவியை நாடியிருக்கி றான். இந்த நிலையில் பகைத்துக் கொள்வதன் மூலம் பீஜபூருக்குச் சொந்தமான மலேக் கோட்டைகள் அனேத்தும் உண்மையாகவே மொக லாயர்களுக்குச் சொந்தமாகப் போய் விட நேரிடும். அது அத்தனே உசித மல்ல. இப்போதைக்கு விட்டுக் கொடுத்துத்தான் அந்த மராட்டிய முரடனே நம்பக்கம் இழுத்து, இழந்த வற்றைப் பெற முயல வேண்டும்'' என்று ஏதேதோ அரசியல் கணக்கு களே மனத்திலேயே போட்டுக் கொண்ட சுல்தான். ''முதியவரே! தாங்கள் விருந்தினர் மாளிகையில் தங்குங்கள். நாளேயே தாங்கள் ஷாஜி யைக் காணலாம். நேரிலேயே பட் டாடை, பாராட்டு லிகிதம் அனேத் தையும் அவரிடம் அளிக்கலாம்!'' என்று கூறினன்.

திறைக் கோட்டத்துக்கு மறு



உத்தரவு அலுப்பப்படாத.

மறு நாள்.

பல மாதங்களாக இருட்டிலும், இறுக்கத்திலுமாய்ப் புழுங்கிக் கன்றிப் போயிருந்த ஷாஜி அலங்கார பூஷித ராய் அரசவைக்கு வந்தார். அருகி லேயே அமர்ந்திருந்த, பேரரசின் தூவரான அந்த முதியவர் ஷாஜியை உற்று நோக்கினார். ஷாஜியும், தம்மைச் சவக் குழியிலிருந்து மரணத் தின் மடி நெருப்பிலிருந்து கடைசி விநாடியில் வந்து மீட்டுவிட்ட அந்தத் தேவதுதனே ஆர்வம் பொங்க, நன்றி ததும்ப நோக்கினார். அந்த நோக்கத்தில் இரு ஜோடிப் பார்வை கள் ஏதேதோ பாடம் படித்தன.

கடைக் கல்லே மூடப் போகிற அந்த மரண விநாடி வரை உயிரோடு செத்துப் போய்க்கிடந்த அந்த மலி தரின் ஓராயிரம் உள்ளக் குமுறல்களே ஒரு நொடியில் படித்து விட்டதா லோ என்னவோ தூதரின் கனிந்த விழிகள் இரண்டு சந்திர கூந்தக் கற்களேப் போல் கெந்த நீருடன் பள பளத்தன. அதைக் கவனித்து விட்ட சுல்தான். ''பெரியவரே! என்ன இது?'' என்று பதற்றத்துடன் வினவினார்.

நொடிப்பொழுதில் அந்த முதியவர் கொடி மின்னலாய்த் தட்டப்பட்டுப் பழைய கம்பீரத்தில் பதிந்தவராய், ''என்னுல் ஒரு பெரிய தேசத்தின் இரண்டு பகுதிகள்— அது பெரிதோ சின்னதோ — ஒரு மதத்தின் இரண்டு பெரிய கிளேகள் — அது உயர்ந்ததோ தாழ்ந்ததோ பேதங்களே ஒழித்துப் புதுவேதத்தை ஓதுவதற்குப் பாடுபட முடிந்ததைப் போலவே, ஒரு மனி தவின் இறுதிக் கணங்களில் வந்து, 'உன் சாவை மனிதன் தீர்மானித் தாலும், பரமதயாளனு எல்லாம் வல்ல அல்லாவின் இறையருள் மாற்றி அமைக்க இயலும்' என்று உணர்த்த முடிந்திருக்கிறதே. அதை நீண்டகேன் கண்கள் பலிக்கின்றன'' என்று கூறி, பேரரசர் அ னு ப் பி ய பட்டாடையையும், லிகிதத்தையும் ஷாஜியிடம் கொடுத்தார்.

அப்படிக் கொடுக்கும் போது தன் முன்னே விரிந்த அந்தக் கரங்களின் அன்ற உள்ளங்கைகளில் ஏதோ எழு தப்பட்டிருப்பதை ஷாஜியின் கண்கள் கவனிக்கத் தவறவில்லே. அவற்றில் 'தந்தை மகனேப் புறக்கணிக்கலாம். ஆனுல், தரணி காக்கும் உன்னத இலட்சியத்துக்குப் பாடுபடும் இந்த உடலின் ரத்தத்தையும், மாமிசத் தையும் தனக்களித்த பிதாவை ஒரு போதும் மறப்பவனல்ல ஷாஜி' என்று எழுதப்பட்டிருந்தது.

ஆரம்ப சந்தேகம் ஊர்ஜிதமாகி விட்ட அந்த வேளேயிலும் ஷாஜி அந்தக் கரங்களே எடுத்துத் தம் கண்களில் ஒற்றிக் கொண்டாரே தவிர, எந்தச் வொஜியை பீஜபூர் அரசவையில் கொன்று வந்து நிறுத் திக் கொடுத் தண்டனே வழங்க வேண்டுமென்ற குறிப்பில் தம்மை மரணப் படுகுழியில் சுல்தான் தள்ளி னுரோ அந்த வொஜி தாம் தமக்கு அந்த மரணப் படுகுழியிலிருந்து மீட் டியை அளிக்க அங்கே வந்து நிற்கிறார் என்பதை அவர் காட்டிக் கொடுக்க வில்லே. ※

இந்து என்றல் கேளிக்கை



இன்பகரமான கேளிக்கைகளை இந்து பிலிம்களில் பிடித்துவிடுங்கள்—125 ஏஎஸ்ஏ, 200ஏஎஸ்ஏ அல்லது 400 ஏஎஸ்ஏ. ஒவ்வொரு இந்து 120 கறுப்பு வெள்ளை பிலிம் ரோலும் உங்களுக்கு அளிப்பது—பன்னிரெண்டு தெளிவான, துல்லியமாக வேறுபாடுகளைக் காட்டும் படங்கள். சிறந்த தன்னிகரற்ற படங்களைப் பெறுவதற்கு இந்து ப்ரோமைட் பேப்பரை உபயோகியுங்கள். இது உங்கள் தேவைக்கேற்ப புகைப்படப் பிரதிகளை எடுக்க பலவித கிரேடுகளில் கிடைக்கிறது.

இன்னும் என்ன! இன்றே இன்பகரமான கேளிக்கைகளை இந்துவின் மூலம் பெறுங்கள்.


இயற்கையான காட்சிகளைப் பெற இரு கண்கள்— இந்து ரோல் பிலிம் மற்றும் ப்ரோமைட் பேப்பர்.

SAA/HPF/1653

HPF IS INDU AND INDU IS FILM

INDU PHOTO CINE X-RAY

இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் மான்யூபாக்சரிங் கோ. லிமிடெட் (ஒரு இந்திய அரசு நிறுவனம்)
இந்துநகர், உதகமண்டலம்-643 005.



தீபாவளியை "இனிமை"யாகக் கொண்டாட 106 வழிகள்...

106 வகை இனிப்புகள்!
நினைத்தாலே இனிக்கும்...
நீர் ஊறும் நாவிலே! அத்தனையும்
சுத்தமான நெய்யினால்
செய்தவை. அத்துடன்
இவற்றிலுள்ள பாலும் மற்ற
பொருள்களும் பரிசுத்தமானவை.
மிக மிக உயர்ந்த தரமானவை.
இனிப்புகளைத் தயாரிப்பதில்
இணையற்ற இரு வல்லவர்கள்
இணைந்து செய்தவை— நளா ஸ்வீட்ஸ்.

நளா ஸ்வீட்ஸ்

1 கதீட்ரல் ரோடு (மியூசிக் அகாடமி எதிரில்)
சென்னை 600 086 போன்: 86416

நகரத்திலே மிக இனிமையான இடம்.

NS-2651



மாணிக்க மேடையும் எங்கள் வீடுமே

ஐம்பது ஆண்டுகள். சாண் வயிற்றை நிரப்புவதற்காக அலைந்து திரிந்த ஊர்கள், நகரங்களுக்குக் குறைவே இல்லை. பிறந்த மண்ணில் காலை ஊன்றிக் கொள்ள ஊசிமுனை நிலம் இல்லாவிட்டாலும், பிறந்த மண்ணைப் பற்றி நினைத்தாலே மனதில் புத்துணர்ச்சி பரவுகிறது. அதுவும் நான் அவதரித்த ஊர் சாதாரண ஊரா? சமய குரவர்கள் பாடித் துதித்த சிறந்த சிவத் தலம். மாணிக்க வண்ணரும் வண்டமர் பூங் குழலியும் அருள் பாலிக்கும் திருத் தலம். மகாவிஷ்ணு பூஜித்த மாணிக்க லிங்கம் இன்றும் இங்கே அருள் ஒளி வீசி நிற்கிறது.

திருவாள் ஒளி புத்தூர் ஐம்பதாண்டுகளுக்கு முன், நான் பதினைந்து வயதுச் சிறுவனாக இருந்தபோது, எப்படி இருந்தது! கோயிலே ஒட்டி யிருந்தது என் வீடு. கோயில் சிவாசாரியர்கள் குடியிருப்புப் பத்து வீடுகள். வளம் கொழித்த பின்னோர் இல்லங்கள் வரிசையாக இருந்தன. கோயிலுக்கு மேல் புறத்தில் இருபது முப்பது வீடுகள். கலிக்காக வாழ்ந்து, மாணிக்க வண்ணருக்கும் மாலே இட்ட தேவரடியார் இல்லங்கள். அந்த நாளைய மக்கள் வாழ்க்கை. கோயிலைச் சுற்றியே இருந்தது என் பதற்கு அடையாளமாகக் கோயிலைச் சுற்றித் தெருக்கள். வளத்தையும் அமைதியையும் பிரதிபலிக்கும் மனி தர்கள்.

காலையில் எழுந்தால் தேவாரம் ஒலிக்கும். சிவகுருமணி ஓதுவாரின் குரல் கணீரென்று கேட்கும். கொட்டும் மழையானாலும் தூவானம் பனியானாலும் ஒதுவார் குளித்து முடித்துப் பட்டை பட்டையாக விபூதி தரித்து, இடையில் வெப்புப் பட்டை வரிந்து, கட்டுக் கொண்டு, கையில் தாளத்துடன் தேவாரப் பதிகங்களைப் பாடிக் கொண்டு தெருவில் போவதைப் பார்த்தால், கல் மனமும் கரையும். கோயிலுக்குப் போய்த் திதரிசனம் செய்யாமல், எச்சில் விழுங்க மாட்டார், சிவகுருமணி ஓதுவார்.

பக்தரைச் சோதிப்பதில் பரமனுக்குதான் எத்தனை துடிப்பு! எத்தனை எத்தனை ஓதுவார் சிவனடியாராக வினங்வந்தாரோ, அத்தனைக்கு அத்தனை அவர் பின்னே, பெண் மோகம் கொண்டு அலைந்தான். ஓது வாருக்குச் சாப்பாட்டுக் கவலை கிடையாது. பரம்பரையாகச் சொத்து இருந்தது. இறையுணர்வு மிகுந்த குடும்பம் அவருடையது. குடும்பச் சொத்தையும் இறையுணர்வையும் வளர்த்து வந்தார் ஓதுவார், ஆனால் அவர் பின்னே?

ஓதுவாரின் மகன் மாசிலாமணி கஷ்டம் தெரியாமல் வளர்ந்தவன். தாயில்லாப் பிள்ளை என்று அவர் செல்லம் கொடுத்து, கண்டிக்க வேண்டிய நேரத்தில் கண்டிக்காமல் விட்ட தன் பலன், இருபது வயதில், அவன் வேண்டாத ஆட்டம் எல்லாம் ஆடினான். உலக வாழ்க்கைக்குப் பெண் இருந்தால் போதும் என்ற பேராசை பிடித்து அலைந்தான். பணத்துக்காகப் பாய் விரிக்கும் புண்ணியவதிகள் அந்த நாளிலும் லர் இருந்தார்கள்.

''உன் பிள்ளையை அடக்கி வைக்க உனக்குச் சாமர்த்தியம் இல்லே யென்ரூல் என்னிடம் வந்து சண்டை போடுவதில் என்ன லாபம்? உன் பிள்ளையை நான் வந்து கூப்பிட வில்லே. தேடி வருபவர்களைத் தள்ளி விடும் பண்பும் எங்களுக்கு இல்லே.''

குமுதவல்லி என்ற தேவதாசிக்கு ராசாத்தி என்று ஒரு மகள் இருந்தாள். அழகிலும் பண்பிலும் கலைத் தேர்ச்சியிலும் அவளுக்கு நிகர் வேறு

யாரும் இல்லை என்று அந்த நாவில் சொல்லுவார்கள். 'குழதவல்லி மாலெராமணியை மயக்கி விட்டாள். அவள் பெண் ராசாத்தியின் அழகில் மயங்கித் தவம் கிடக்கிறான். பாவம்! ஒதுவார் மனம் கலங்கி, பிள்ளையைத் தடுக்க முடியாமல் தவிக்கிறார். 'ராசாத்தியால்தான் மாலெராமணி நெறி தவறிக் குடும்பச் சொத்தையே கரைக்கத் தொடங்கி விட்டான்' என்று ஊரில் பேசிக் கொள்வார்கள்.

ஆனால் அதே ராசாத்தி, தன் தாய் பதும் பாட, கோயிலில் சுவாமியின் முன், திருவிழாக் காலங்களில் நடனமாடினால், எல்லாப் பெரியவர்களுமே நிறந்த வாய் மூடாமல் அவளைப் பாராப்பதையும் கண்டிருக் கிறேன். பெரியவர்கள் நடனத்தை ரசிக்கிறார்களா, இல்லை, அவள் இளமையை, அழகை, கண் வீச்சை, கட்டமைந்த உடல் வாகை ரசிக்கிறார் களா என்று பகுத்தறியும் சக்தி எனக்கு அப்போது கிடையாது. ராசாத்தி இல்லாளு ஆடினும் மாணிக்க வண்ணரே மயங்கி விடுவார் என்று சொல்வார்கள்.

ஒதுவார், தம் பின்னே தாசி வீட்டே கதியாகக் கிடப்பதைக் கண்டுகூட வருந்தவில்லை. ''அந்தப் பெண் ராசாத்தியையே மணந்து கொண்டு குடும்பமாக இருடா'' என்று கூடச் சொல்லிப் பார்த்தார். அந்த யோசனைக்கு ராசாத்தியும் மாலெமணியும் இணங்கிவரும் நேரத்தில் குழுதவல்லி, ''நல்லாயிருக்கே உங்க யோசனை! மாணிக்க வண்ணருக்கு மாலையிடப் போகும் என் மகன் மாலைமணிக்கு மாலையிடச் செய்து, அவள் வாழ்வைக் கெடுக்கப் பார்க்கிறீர்களே! கல்யாணம், காத்தி என்று பேசிக் கொண்டு இந்த வீட்டு வாயிற்படி ஏறுதீர்கள்'' என்று கண்டித்துச் சொல்லிவிட்டாள்.


அதற்குப் பிறகு ஒதுவாருக்கு வேறு வழியே தெரியவில்லை. மாணிக்க வண்ணர் விட்ட வழி என்று அதிக நேரத்தைக் கோயிலிலேயே கழிக்க ஆரம்பித்தார். கோயிலில் கிடைக்கும் உணவை உண்டு, வாசேர் செய்த உழவாரப் பணிபோல், கோயிலைத் தப்புரவு செய்யும் பணியில், தம் மனத்தைத் திருப்பி விட்டார்.

பெற்ரோரை ஒரே சமயத்தில் இழந்த நான், ஊரில் தங்கி வாழ வகை இல்லாமல், ஒரு நாள் கால் போன போக்கில் கிளம்பினேன். இரும்பது ஆண்டுகளுக்கு முன் கிளம்பியவன், இன்று பிறந்த மண்ணை மிதிக்கிறேன். ஒன்றுமறியாத இளஞ்சுகப் புறப்பட்ட நான், இன்று வாழ்க்கையின் அநுபவத் தழும்புகள் ஏறிய மனிதனுகத் திரும்புகிறேன்.

வாழ்வின் இடையில் புகுந்த உறவுகளும் பாசங்களும் செல்வமும் ஒவ்வொன்றாக என்னை விட்டு அகன்றதும், விரக்தி நிலையில், 'எதற்காக இன்னும் வாழ வேண்டும்?' என்ற உணர்வில், மின்னலாக மனத்தில் தோன்றியது, நான் பிறந்த மண்தான். அந்த மண்ணைப் பார்த்தாலே, ஸ்பரிசித்தாலே, பல கோடி உறவுகளைப் பெற்றதுபோல் புத்துணர்ச்சி உண்டாகும் என்று தோன்றியது.

பெண்டும் பிள்ளைகளும் போனலும் கையிலிருந்த பணத்தை எடுத்துக் கொண்டு, சொந்த ஊர் திரும்பினேன். எனக்குத் தெரிந்தவர்கள் யார் இருக்கப் போகிறார்கள்? ஆனல் ராசாத்தியும் மாலைமணியும் என் கண் முன் தோன்றினர்கள். அவர்கள் பழக்கமும், ஊரார் அவர்களைப் பற்றிப் பேசியதும் என் மனத்தில் பசுமையாக இருந்தன. அவர்கள் இப்போது இருந்தால் கூட, மாலை மணிக்கு எழுபது வயதுக்கு மேல் இருக்கும். ராசாத்திக்கும் கிட்டத் தட்ட அதே வயது இருக்கும். ஒரு சமயம் கல்யாணம் செய்து கொண்டிருந்தால் கிழவனும் கிழவியுமாக, பேரன் பேத்திகளுடன் இருப்பார்கள் என்று தோன்றியது:

உதய சூரியன் கடலை விட்டு மேலே எழும்பும் சமயம்: நான் பிறந்து வளர்ந்த மண்ணில் கால் வைத்தேன். நான் பார்த்த ஊராக அது காணவே இல்லை! சுதந்தரம் வந்த பிறகு பார தத்திலே சுபிட்சம் பெருகெடுத்து ஓடுகிறது என்ற கோஷத்தையே நான் வாழ்ந்த நகரங்களில் கேட்டிருக்கிறேன்; ஆனல் அந்தச் சுபிட்சம்



அந்தக் கிராமத்தை மட்டும் எட்டிப் பார்க்கவில்லை போல் தோன்றியது.

அந்தக் காலை வேளையில் ஒவ்வொரு வீட்டின் வாயிலிலும் சாணம் தெளித்துப் பெருக்கி, மாக் கோலம் போட்டிருப்பார்கள். தெருவில் காலைப் போதில் நடந்தாலே மனத்துக்கு உற்சாகமாக இருக்கும். தெருவுக்கு நாலைந்து பன்னீர் மரங்கள் மணம் பரப்பிக் கொண்டு நிற்கும்.

இப்போது அந்தப் பன்னீர் மரங்களையும் காணவில்லை. பகல் கொள்ளைக்காரர்கள் வந்து ஊரையே சூறையாடி விட்டுப் போனது போல் தோன்றியது. அந்த நாளில் எத்தனையோ வீடுகளில் தேவாரம் திருவாசகம் பாடும் பெரியவர்களின் குரல்களைக் கேட்டிருக்கிறேன். ஐந்து மணிக் கெல்லாம் உஷக் கால பூஜையில் கண்டாமணி ஒலிப்பதைக் கேட்டுப் பழகியவன் நான்.

கோயிலுக்கு மேற்புறத்துத் தெருப் பக்கமாகக் காலை வேளையில் போனால் ஜல் ஜல் என்ற சதங்கை ஒலியைக் கேட்கலாம். நாகசுரம் சாதகம் செய்யும் மங்கல இசையைக் கேட்க லாம். அகல குங்குமப் பொட்டிட்டு, தலையில் கட்டுக் கதம்பத்துடன், அந்தக் காலை வேளையிலும் மங்கள கரமாக நிற்கும் தேவதாசிப் பெண்களைக் காணலாம்.

இன்று இந்தக் காட்சியில் ஒன்றைக் கூடக் காணவில்லை. ஊரில் சில மாடி வீடுகள் புதிதாகமுளைத்திருந்தாலும், லட்சுமிகரம் என்ற சுவையைக் காண முடியவில்லை. ஒரு வீட்டு வாயிலிலாவது மாக் கோலத்தைக் காண முடியவில்லை.



அந்த மணிக்கு நடக்கும் உஷக் கால பூஜை போல இருக்கிறது. எட்டு மணி இருக்கும். அப்போது தான் மணிச் சத்தம் கோயிலிலிருந்து கேட்டது. அது கூடக் கண்டா மணியின் ஒலியல்ல. சொராசரியார் கையால் ஒலிக்கும் பூஜை மணிச் சத்தம்.

கணீரென்று ஒலிக்க வேண்டிய கண்டாமணிச் சத்தமே பூஜை மணிச் சத்தம் போல் கேட்பதை எண்ணி வியந்தேன். ராசாத்தி, மாரி லாமணியைப் பற்றி முதலில் விசாரிக்க இருந்த நான், கோயில் மணி ஓசையால் ஈர்க்கப்பட்டுக் கோயிலை நோக்கி நடந்தேன்.

கோபுர வாயிலைத் தாண்டியதுமே பகீர் என்றது. பத்தாண்டுகள் மூடி வைத்து விட்டுத் திறந்தால்-திறந்தால், எப்படி இருக்குமோ அப்படித் தோன்றியது. அப்போது இப்படி வெள்ளையடித்திருக்க மாட்டார்கள். மின் விளக்குகள் அப்போது கிடையாது. ஆனாலும் கோயிலில் மனத்துக்குச் சாந்தி அளிக்கும் தெய்வ சாந்நித்தியம், மனத்தால் மட்டுமே உணரக்கூடிய ஓர் அருள் மணம் வீசியதை உணர்ந்திருக்கிறேன். இப்போது பளிச்சென்றிருந்தாலும் மின் விளக்குகள் ஜகத்ஜோதியாக எரித்தாலும் அந்த அருள் மணம் வீசவில்லையே!

அம்பதாண்டுகளுக்குப் பிறகு வந்த எனக்கு இந்த வித்தியாசம் நன்றாகத் தெரிந்தது. காலை வேளையிலும் கோயிலுக்கு எத்தனை பேர் வந்து சுவாமி தரிசனம் செய்வார்கள்! எத்தனையோ குடும்பங்கள் உஷக் கால பூஜையைத் தவறாமல் தரிசிக்கும் சங்கல்பம் செய்து கொண்டிருந்தது எனக்குத் தெரியும்.

ஆனால் இன்று? கோயிலுக்குள் நான் அடி எடுத்து வைத்தபோது, பூக் குடலையைச் சுமந்து செல்லும் கிழவியும், கொத்துச் சாவியைத் தோளில் போட்டுக் கொண்டு, ஒவ்வோர் அறையாகத் திறந்து பார்த்த ஒரு கோயில் சிப்பந்தியையுமே பார்க்க முடிந்தது. கருவறைப் பக்கத்தில் மினுக் மினுக்கென்று ஒன் றிரண்டு அகல்கள் எரிந்தன. இருட்டோடு இருட்டாக நின்று கருவறைக்குள் சொராசாரியார் முணுமுணுக்கும் மந்திர ஒலிகள்.

காலம் எப்படித் தான் மாற்றி விட்டது! 'தென்குடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!' என்று போற்றும் எம் பெருமான் இருக்கும் இடம் தெரியாமல் கருவறைக்குள் முடங்கிக் கிடந்தார். கோயிலில் போட்டிருக்கும் மின் விளக்குகளால் சிவபெருமானைக் கண்டு தரிசிக்க முடியாது. அன்பு என்ற அகல் விளக்கில் பக்தி என்ற நெய்யை விட்டு, சிரத்தை என்ற நிரியிட்டு ஏற்றிச் சிவபெருமானைத் தரிசிக்க வேண்டும். அப்போதுதான் மாதொருபாகனின் அருள் வடிவத்தை முழுதாக உணர முடியும். தண்ணளி மிகுந்த தட்சிணை

மூர்த்தியின் ஞான உபதேசத்தைப் பெற முடியும். கைலையங்கிரி நாதனின் கருணைக்குப் பாத்திரமாக முடியும்.

இம்பது ஆண்டுகளுக்கு முந்திய தெய்விக உணர்வுகளாயும் இன்றைக் காட்சிகளாயும் என் மனம் எடை போட்டுப் பார்த்தது. மனம் சுடு படாமல் பிரகாரத்தைச் சுற்றி வந்தேன். மேலண்டைப் பிராகாரத்தில் வண்டத்தில் ஏழு மிரு ந் த நாயன்மார் காட்சிகளில் கண்கள் மேய்ந்தன. பளிச் பளிச்சென்று ஒளியங்கள் கண்ணில் பட்டனவே தவிர, அவற்றில் ஒரு சாந்தியை, தெய்விகக் கனியைக் காண முடிய வில்லை. அந்த ஒவியங்களைத் தீட்டிய ஓவியனின் மனத்தை, இன்றைச் சினிமாக் காட்சிகள் பெரிதும் பாதித் திருக்கின்றன என்பது தெரிந்தது.

ஹ ஹ ஹா ஹ!

நிஜமென்று இப்படிப் பெரிதாக டிடி டிடியென்று சிரிக்கும் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். இது கோவில்தானு, இல்லே மன நோய் மருத்துவமனையா என்று சந்தேகம் வந்துவிட்டது. தவறிப் போய் எங்கேயாவது வந்து விட் டோமா என்று பயமாக இருந்தது.

எதிரில் அன்னே தூர்க்கையின் சந்நிதி காணப்பட்டது. அறடி உயரத்தில் அபயக் கரம் காட்டி, மஹிஷாசுரனே மிதித்த கோலத்தில் அம்மை காட்சியளித்தாள். என் உடம்பு புல்லரித்தது. சிரித்தவர் யார்? தூர்க்கையா அப்படிச் சிரித்தாள்? தெய்வம் அப்படிச் சிரிக்குமா?

'தெய்வம் சிரிக்காது' என்றுதான் என் பருத்தறிவு கூறியது. எத்தனே பருத்தறிவுப் பாசறைகளில் எல்லாம் புகுந்து புறப்பட்டிருக்கிறேன்! அந்தப் பாசறைகள் எல்லாம் அறவேக் டாக இருப்பதை அநுபவ பூர்வ மாக உணர்ந்தே, நித்திய சுகத்தை அளிக்கும் பேரானந்தப் பெருவெள் ளமான மாணிக்க வண்ணரைத் தரி சிக்க வந்தேன். எஞ்சிய காலத்தை வண்டமர் பூங்முலியின் சேவையில் கரைத்து விடலாம் என்று தான் புறப் பாசங்கள் ஒவ்வொன்றுய்க் கரைத்ததும் இங்கே ஓடோடியும் வந்தேன்.

இங்கே தூர்க்கை, எம்பெருமாட்டி என்னேப் பார்த்து இடி இடியென்று சிரிக்கிருள். என் பைத்தியக்கார யோசனையை எண்ணி அப்படிச் சிரித் தாளா? 'இல்லே, இப்போதாவது என் னேத் தேடி வந்தாயே' என்று கெட் டலேந்த பிள்ளே திருந்தி வந்த என் நிலேயைக் கண்டு, ஆனந்த மிகுதியில் அப்படிச் சிரித்தாளா?

"யார் அப்பா நீ? கண்ணப்பன் பிள்ளே மாணிக்கந்தானே?"

இந்தப் பேச்சுக் குரலேக் கேட்டதும் உள்ளங்காலிலிருந்து உச்சந் தலே வரையில் மின்சாரம் பரவியது போல் என் உடல் துடித்தது.

கண்ணப்பன் பிள்ளே மாணிக் கத்தை ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகும் அடையாளம் தெரிந்து கேட்கும் இந்த மனிதன் யார்? அவனுக்கு எத்தனே வயதிருக்கும்? சிவகுருமணி ஒதுவார் இன்னும் உயி ருடன் இருக்கிறாரா என்ன? அவர் உயிரோடிருந்தால் தொண்ணூறு வயதுக்குமேல் இருக்குமே!

"என்னப்பா, அப்படியே திகைச் நின்னுட்டே? நான்தான் சிவகுருமணி ஒதுவார். என்னே தெரியலேயா? ஹ்ம். ஒட்டி உலர்ந்து கம்பை ஊனிக்கிட்டுன்னு நிக்க வேண்டி யிருக்கு!"

"சிவகுருமணி ஒதுவாரா? மாரிவா மணியின் தந்தையா?"

"ஆமாம் அப்பா! அதே பாவி தான். அந்தப் படுபாவி மவன் பேரை இன்னுெருவாட்டி என் காது படச் சொல்லாதே, மாணிக்கம்."

"இன்னுமா நீங்க உயிரோட இருக் கீங்க?"

சிலப்பை மீறி இந்தக் கேள்வி வெடித்து விட்டது.

"ஆமாம்பா. பேயோ பிசாசோன்னு பயப்படாதே, மாணிக்கம். இப்பத் தான் உள்ளே யிருந்து வாரேன். அப்போ எங்கப்பன் மாணிக்கவண்ண னுக்கு உடலாலே செஞ்சேன். இப் போ உருவாலே செய்யறேன். எங் கப்பனே விட்டா எனக்கு வேறகதி?"

சிவகுரு மணி ஒதுவார், தொண் ணூறு வயதுக் கிழவர். கையில் கம்பை ஊன்றியபடி எல் எதிரில் நின்றிருந்தார். பேய் பிசாசு என்றல் கால் நீழே படாது என்று சொல்லிக் கேட்டிருக்கிறேன். நன்முகக் குனிந்து பார்த்தேன். குச்சி குச்சியான கால் கள் தரையில் பாவியிருந்ததைக் கண் டதுமே என் பயம் கொஞ்சம் குறைந்தது.

"ஏங்க, உங்க மகன் அப்புறம் என்ன செஞ்சான்?" என்று தைரிய மாகக் கேட்டேன்.

"என்னத்தைச் செஞ்சான் பாவிப் பய. எல்லாச் சொத்தையும் குமுத வல்லி புடுங்கிக்கிட்டா. பொண்ணே யும் இவன்கிட்டே அண்டவிடலேலே. தலியாய்த் தலச்சான், கெட்டார் தானே புத்தி வரும்? அவ னுக்குப் புத்தி வந்தபோது நான் அதைப் பார்க்கலேலே. எங்கப்பன் கிட்டவே அணுக்கத் தொண்டனு இருந்துட்டேன். 'ஏம் பொண்ணு இரைஞ்சுக்கிட்டு மாலே இட்டவ; மனித னுக்கு வாழ்க்கைப்பட மாட்டா'ன்னு சொல்லியே இவனப் பைத்தியமா அடிச்சிட்டா குமுதவல்லி. ஆனு, அந் தப் பொண் ராசாத்தி, பாவம், நல்ல பொண்ணுதான். தன் அம்மா செய்ப தது தவறுன்னு அதுக்குப் பட்டிருக் குது. அம்மாகிட்டயே கோவிச்சுக் கிட்டு, என் மகன் மாலேமணியோட என் வீட்டுக்கே வந்துட்டாநாம். அவுங்க ரெண்டு பேரும் இங்கே வந்து ரெண்டு நாள் தங்கியிருந்தாங்களாம். மம். பாவம்! எம் மவன் மாலேமணி தாயம் தீர்த்திருக்குமோ என்னவோ? ஆனு, குமுதவல்லியே வந்து கெஞ்சிக் கூத்தாடி, தான் செஞ்சது தப்புன்னு மன்னிப்புக் கேட்டுக்கிட்டுத் தன் பெண்ணே வீட்டுக்கே கூட்டிக்கிட்டுப் போய்ட் டாளாம். ஆனு, அங்கே போன ரெண்டே நாள்லே, பாவம், கண்ணி கழிஞ்சதோ என்னவோ, ராசாத்தி செத்துப் போயிட்டுது. ஆனு, எம் மவனும் அவளும் தனியா ரெண்டு நாள் வாழ்ந்தாங்களே, அதுவே எம்மவனுக்குத் திருப்தி ஏற்பட்டுட்ட தாம். மனசார காதலிச்சவங்க ரெண்டு நாள் என்ன, ரெண்டு நிமிஷம் கூட வாழ்ந்தாலும் போதாதா, தம்பி? மாணிக்கம், அந்த நிறை விலே, அவனும் என் பணியத் தொடர்ந்து தொடங்கிட்டான். என்னவிட இன்னும் அதகாடுப்ப அவன் தேவாரம் பாடறதைக் கேட்டுப் பிரமிச்சுப் போயிட்டேன். இங்கே தானே இருந்துகிட்டிருக் கேன், அவன் பாடறதைக் கேட்டுக் கிட்டு? இப்ப அவன் பாடிக்கிட்டே வர்ற நேரந்தான். நீ கூடக் கேட்க லாம். இங்கேயே இரு, போயிடாதே. கொஞ்சம் உள்ளே வேலேயிருக்கு. போய்ட்டு வந்துடறேன்."

டொக்டொக்கென்று கம்பு ஊன்றும் சத்தம் கேட்கிறது. அந்த நாணய மனிதர் அவர். நம்மூர்ப் பிள்ளேயாண் டான், இத்தனே ஆண்டு கழித்து வந்திருக்கிருனே என்ற தாபம். வந்து பார்த்துப் பேசி விட்டுப் போகிருர். அத்தனே பெரியவர் என்னத் தேடி வந்து அடையாளம் புரிந்து கொண்டு பேசியது எனக்கும் தெம்பாக இருக் கிறது.

நேற்றுப் பார்த்தவர்களேயே, இன் றைக்குப் பாராததுபோல், தெரி யாதவர் போல் போவார்களே இந்த நாளில், தெரித்தாகக் காட்டிக் கொண்டு போய்ப் பேசினுல், காபிச் செலவு வந்துவிடுமோ என்று பயப் படும் காலமாயிற்றே இது?

மேலண்டைப் பிராகாரத்தில் எத் தனே நாழிகை நிற்பது? மேலே போக வாம் என்று ஓரடி எடுத்து வைத் தேன்.

"தம்பி!" என்ற குரல் கேட்டது; "யாரது?"




ஒரு பைத்தியம்: ஏய், இதைக் கைக்குட்டேலேருந்து ஒரு யானேயை வரவழைக்கிறேன், பார்க்கிறியா?

மற்றது: முதல்லே அதை உதறிக் காட்டு. அப்பத்தான் நம்புவேன்!

HEARTY DEEPAVALI GREETINGS

G.E.M

FULFILS ALL YOUR ELECTRICAL NEEDS



GANAPATHY ENGINEERING MANUFACTURERS PRIVATE LIMITED

POST BOX NO. 2006 ● GANAPATHY POST ● COIMBATORE-641006

PHONE: 23024 & 30808 ● TELEX No. 855 - 338 GEM.

—B. P.

உல்லாசமாகப் பயணம் செய்யுங்கள் ஒளி மிகும் தென்னாட்டைக் கண்டு மகிழுங்கள்.



தமிழ்நாடு (மீனாட்சி அம்மன் கோவில்-மதுரை), ஆந்திரம் (திருப்பதி), புதுவை (அரோவில்), கர்நாடகம் (தோட்டகரம்-பிருந்தாவனம்), கேரளம் (குருவாயூர் கோவில்) ஆகிய இடங்களுக்கு, விரைவுப்பயணம் செய்ய, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் உங்களை அழைக்கிறது.

பசுமை நிறைந்த இயற்கை எழில், கலாச்சார பாரம்பரியம் மிகுந்த தென்னகத்தின் அழகை நீங்கள் கண்டுகளிக்க உதவுகிறது திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம்.

சிறப்பியல்புகள்

செவிக்கினிய இசை விருந்து.கால் வைக்கவும், சாய்ந்து கொள்ளவும் வசதிகள், கொசு மெத்தையோடு கூடிய தனி இருக்கைகள். அத்தனையும் கொண்ட விரைவுப் பேருந்துகள்.

மற்றும் சூரு சூரு. சிறப்புப் பேருந்துகளில் பதிவு செய்யப்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், இசை விருந்து, வசதியான இருக்கைகள் உள்ளன.

உடமைகளைப் பாதுகாக்கும் அறை,ஒய்வு அறை, மற்றும் பல்வேறு வசதிகளுடன் 24 மணி நேர சேவை.

முன் பதிவு செய்ய தொடர்பு கொள்ளுங்கள் அல்லது கோரில் அனுகுங்கள்.



மக்கள் தொடர்பு அதிகாரி

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் லிமிடெட்


(ஒரு தமிழ்நாடு அரசு முயற்சி)

திருவள்ளுவர் இல்லம், சென்னை-600 002

போன்: 846351, எக்ஸ்டென்ஷன் 28

DIPR/Sobhagya

Wishing a Festive air





5 years guarantee



khaitan

the matchless fan

Kanara

''நான்தான், தம்பி!''

''நான்தான்னுதான்?''

''என்னைத் தெரியலேயா? என்னப் பையனு இருந்தப்போ என்னைப் பார்த்தது. உனக்கு என்னை மறந்து போச்சே. ஆனா நான் உன்னை மறக்க லியே!''

''நீ யார்?''

''குரல் தெரியலேயா?''

''அழகான பெண் குரலாக் கேக் குது.''

''அப்பாடா! அதுவரையாவது புரிஞ் சுக்கிட்டியே!''

மீண்டும் மனம் கொஞ்சம் அதை ரியப்பட்டத் தொடங்கியது. குரல் கேட்கிறதே, தவிர, ஆனைக் காணோமே! ஒரு சமயம் மாணிக்க வண்ணர் கோயிலில் பேய் பிசாசுகள் குடிபுக ஆரம்பித்து விட்டனவோ?

''தம்பி, பயப்படாதே. ஜீவக் கோட்டை கட்டாதே. இதோ என்னப் பாரு.''

எதிரில் இருபது முப்பது வயது மங்கை நின்றிருந்தாள். ஆனால் அவள் உடல் கட்டுக் குலையாமல் மெருகுடன் காட்சியளிக்கிறது. நெற்றியில் பழய கால ஸ்ரீ அளவுக்குக் குங்குமப் பொட்டு. தலை நிறையப் பூ. மருவும் தவனமும் தாழையும் மருதாணியும் சேர்த்துக் கட்டிய கதம்பம். வாசனை மூக்கைத் துளைக்கிறது. செக்கச் செவேல் என்ற பட்டுப் புடவை அவள் உடம்பைத் தழுவியிருக்கிறது. பச்சை நிறப் பட்டு ரவிக்கை. மருதாணி இட்ட உள்ளங் கை. கனீர் கனீர் என்று பொன் வளையல்கள், ஒன்றோடொன்று மோதிக் கிணுகிணுக்கின்றன. தளிர் வெற்றிலையும் வாசனைப் பாக்கும் வலங்கும் ஏலமும் மென்று சிவந்த வாயிலிருந்து மணம் வீசுகிறது. மை யிட்ட கண்களில் கனிவு.

யார் இந்த மங்கை?

வண்டமர் பூங்குழலியே இப்படி உருவெடுத்து வந்திருக்கிறாரா? அத் தகைய பாக்கியசாலியா நான்?

''என்ன, அப்படியே மலைச்சு நின் னுட்டே தம்பி? ஏன்னுத் தெரியலேயா இன்னும்? நான் அப்படி என்ன கிழவியாயிட்டேனு, என்ன?''

வண்டமர் பூங்குழலியே என்ற கிகைப்பில் இருந்த நான், ''சாக்ஷாத் அம்பிகையே தரிசனம் தாருப்பல நினைக்கிறேன்'' என்றேன்.

''இந்தக் கிண்டல் எல்லாம் வேண் டாம். பல ஊர் சுத்தினதில உனக்கு நிறையக் கிண்டல் செய்யத் தான் தெரிஞ்சிருக்கு. நான் ராசாத்திதான். இப்பப் புரியுதா?''

''ராசாத்தியா? நீயா?''

''ஆமாம், என்ன சந்தேகம்?''

''பாவம், செவருமனி ஒதவார் குடும்பத்தை நாசம் செய்த ராசாத் தியா?''

''தம்பி, நீயாவது ஊர் வதந்தி யைக் கேக்காம உண்மையத் தெரிஞ் சுப்பேன்னு நம்பி வந்தேன். இப் பத்தானே காலியிலே, நீ இந்த ஊருக்குள்ளேயே காலே எடுத்து வச்சிருக்கே? அதுக்குள்ளே உன் னிடம் யாரு இப்படி அபாண்ட மாச் சொன்னது?''

''அபாண்டமா? உண்மையைத் தானே சொல்றேன்?''

''தம்பி, இந்த ஊர்மனிசங்கமாதிரி பேசாதே. ராசாத்தியை ஒவ்வொருத் தரும் இந்த ஊரிலே வேணும்னு கேட்டாங்க. பேரம் பேசினுங்க. சில ஏஜண்காரங்க, தங்க ஆனியே கூட் டத்திலே நிக்க வைக்க, தொகையை உயர்த்துவாங்களாம். அப்படி எங்க அம்மாவும் செஞ்சாங்க. அப்படி ராசாத்தி தலியசைச்சா, ஆயிரம், சிச்சா ரெண்டாயிரம், கண்டிப்ச் சா முவாயிரம், காலாலே தொட்டா நாலாயிரம், கையாலே தொட்டா ஐயாயிரம் - இப்படி. என் மடிப்பு ஏறிக் கிட்டே போச்சு. ஒவ்வொரு நிமிஷமும் என் மதிப்பு பலூன் மாதிரி ஊதிக்கிட்டே போச்சு. ரொம்ப ஜாஸ்தியாப் போனுப் பலூன் வெடிக்க வேண்டியதுதானே? மாலெ மணியும் அப்படித்தான் முதலிலே என் அழகிய உடலைக் கண்டு மயங்கி நெருங்கி வந்தான். என் அம்மாகிட்ட வசமா மாட்டிக் கிட்டான் பாவம்! நேரிடையா என் கிட்ட வந்திருந்தா உண்மை புரிஞ்சிருக்கும். வழக்கம் போல என் அம்மா, 'ராசாத்தி உனக்காகவே இருக்கா'. மொட்டு நன்னு மலரட்டும், உனக்கே உனக்கு' என்று தூபம் போட்டிருக்கா. இப்படி மாலெமாணி மாதிரி, என் அம்மா வலியில் விழுந்து தாயப் பட்டவங்க எத்தனேயோ பேர். யாருக்கும் நான் எட்டாக் கனி யாகவே இருந்தேன். எனக்கு என்னவோ இந்த உடலப் பற்றிய ஆசையே உண்டாகலே. மலர்ந் தும் மலராத மொட்டைப் போலவே இருந்தேன். சொத்தை எல்லாம் இழந்த மாலெமாணி ஒரு நாள் மனம் திறந்து என்னிடம் எல்லா வற்றையும் கூறினுன். அம்மா செய் யும் அக்கிரமத்தையும் கூறினுன். பெற்ற தாயிடம் எனக்குக் கோபம் வரலில்லே. 'நீ்ணத்தால் கோயில் கூவாமி சந்நிதியில் மனமும் மெய்யும் உருக ஆடிப் பாடி ஈசனையும் அம்மை யையும் நான் மகிழ்விக்கலில்லையா? அவர்கள் ஏன் இப்படி ஓர் தாயாரை எனக்குத் தந்தார்கள்? இத்தகைய தாயாரின் வயிற்றில் ஏன் பிறத் தேன்?' என்றே எண்ணி வருந்தி னேன்.

''உற்ருர் உறவினர், அந்தஸ்து, நேரம் எதையும் பார்க்கவில்லே. மாலெமாணியின் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு வண்டமர் பூங்குழலின் சந்நிதிக்குப் போனேன். அலெண்டே சுவரியைக் காட்டி, 'இவள் யார்?' என்று மாலெமாணி யைக் கேட்டேன். 'இவள் பரம மாதா. உலகத்துக்கெல்லாம் அன்னே' என்ருன் அவன். 'நானும் இவள் மகள்தான்' என்றேன் நான். மாலெமாணி ஒன்றும் புரியாமல் விழித்தான். 'உலகத்துக்கே தாயாளுல் உனக்கும் தாய்தானே?' என்று கேட் டேன். 'ஆமாம்' என்ற மாலெமா மணியின் கண்களில் நீர் துளித்தது. 'எனக்குந்தானே இவள் தாய்? அப்படி யானுல்..'' நான் வார்த்தையை முடிக்கவில்லே. 'நீ என் சகோதரி' என்ருன் மாலெமாணி. 'தெய்வ சந்நிதியில் கூறிய இந்த வார்த்தையை மீறமாட்டையே!' என்றேன். 'ராசாத்தி என் தங்கை' என்ருன் மாலெமாணி. 'வா போகலாம்' என்று அவன் கையைப் பிடித்துக்கொண்டு தெருவில் நடந்தேன். ஊர் வாய் கண்ட படி பேசியது. நேராக ஒதவார் வீட்டில் போய்க் குடியேறினேன். என்னப் பெத்தவனப் பார்க்கவே பிடிக்கல்லே. ஆனல், பெத்த மனம் பித்து என்று சொல்லிக் கொண்டு என் தாய் வந்தாள். 'என் விருப்பத் துக்கு மாறுதலா எதுவும் செய்ய மாட்டேன்' என்று சத்தியம் செஞ் சாள். கண்ணீர் விட்டுக் கதறினுள். மாலெமாணியுடன் வீட்டுக்குத் திரும் பவும் போனேன்.

''ரெண்டு நாள் நானும் மாலெ மணியும் தனித்து வாழ்ந்ததை ஊர் எப்படி எப்படி எல்லாமோ பேசியது. என் அம்மாவும் எங்கள் உற வில் சந்தேகம் கொள்ளாமல் இல்லே. ஒட்டாண்டியாகி விட்ட மாலெமாணி யைவிட, பணக்காரப் பெருநிலக் கிழார் ஒருவருக்கு என்னே மாலெயிடச் செய்ய ரகசிய பேரம் செய்தாள். எதிர்ப்பின் தீவிரத்தை அவள் உணர வில்லே. 'மாலெமாணி என்ன? சாதா ரண ஒதவார் பிள்ளே, சொத்து சுகம் இல்லாதவன். அப்படியே அவன் கிட்ட மனசைப் பறி கொடுத்து, ரெண்டு நாள் அவனோட வாழ்ந் திருந்தாலும் நமக்கெல்லாம் தப்பு இல்லே. நான் கண்ணே மூடறதுக் குள்ளே பணக்காரன் ஒருத்தர் கிட்ட உன்னப் பிடிச்சுக் குடுத்திடணும். பெரிய பணக்காரனுப் பாத்திருக் கேன். அவனும் நீ கிடைச்சால் போதும்னு துடிச்சிண்டிருக்கான். பேசாம அவனக் கட்டிக்க' என்று வற்புறுத்தியது மட்டும் அல்ல. அந்தப் பணக்காரனும் ஏற நாள் படுக்கையறைக்கு அழைத்து வந்து விட்டான். மறு நாள் காலியில், பாவம், அத்தப் பணக்காரர் ஏன் தாயாரைத்தான் அழைத்துப் போக முடிந்தது?

''மறுநாள் காலியில் மாலெமாணி ஒரு சகோதரிக்குச் செய்ய வேண்டி யதைச் செய்தான், பாவம்! அவனுல் தாங்கிக் கொள்ளவே முடியவில்லே. ரொம்பவும் கஷ்டப்பட்டு எங்கள் உண்மை உறவை நிலே நிறுத்தப் பாடு பட்டான். அவனுக்கும் வெற்றி கிடைக்கவில்லே, கடைசியில்..''

''அப்படியானுல் நீ.. நீ..''

என் நெஞ்சு உலர்ந்தது. இத்தனே நேரம் மோனிலிப் பிசாசிடமா பேசிக் கொண்டிருந்தேன்? கண்ணைக் கசக்கி விட்டுக் கொண்டு பார்த் தேன். ராசாத்தியையும் காணவில்லே. வண்டமர் பூங்குழலியையும் காண வில்லே.

'போதும், பிராகாரத்தைப் பிர தட்சிணம் செய்தது' என்று வந்த வழியே திரும்பினேன். பயத்தில் இதயம் வேகமாக அடித்துக் கொண் டது.

''ஏய் மாணிக்கம், என்னடா, அப்பிரதட்சிணமாப் போறே? இந்த

மண்டபத்தைப் பார்க்காமப் போறியே!''

குதிகால் பிடரியில் பட ஓட முயன்றேன். பேய் பிசாசுகளிடம் மாட்டிக் கொண்டால்..? 'இரத்தக் காட்டேரி, மனித இரத்தத்தை எல்லாம் உறிஞ்சிச் சாகடிச்சுடும்' என்று பின்ன வயதில் கேள்விப்பட்டிருக்கிறேன். இது எந்தக் காட்டேரியோ? ''ஜோ!'' என்ற அலறல் என்னையுமறியாமலே வெளி வந்தது.

''ஏய், பயப்படாதேடா. மாணிக்க வண்ணர் கோயில்லே பேய் பிசாசு வருமாடா? சுத்தப் பயங்கொள்ளியா இருக்கியே! நான்தாண்டா மாலை மணி'' என்று என் கையைப் பிடித்து இழுத்து நிறத்தியதை உணர்ந்ததும், மாலைமணியைத் தடவிப் பார்த்தேன். எலும்பு போர்த்த தசையைப் பார்த்தேன். என்னேப் போலவே இருந்தான். இடையில் பச்சைப் பட்டைச் சுற்றியிருந்தான். பட்டை பட்டையாக விபூதி, குழந்தில் குத்திராட்ச மாலை லிங்கம் கட்டி. கனேப் போல் குழந்தில் வெள்ளியில் செய்த ஒரு சிமிழ் தொங்கியது. பழுத்த வெப்பத்தனுக்குக் காட்டியளித்தான் மாலைமணி.

அப்படி நான் பயந்ததைக் கண்டு எனக்கு வெட்கமாக இருந்தது.

''நீ மாலைமணிதானே? சிவகுரு மணி ஒதவார் பிள்ளைதானே?'' என்று கேட்டேன்.

''அட மண்டு! மாலைமணியே தான். எங்க அப்பாவுக்கு வயசு ஆயிட்டுது. பாட முடியல்லே. நான்தான் இப்போ ஒதுவா மூர்த்தியா இருக்கேன். அப்பனே ரெண்டு வேளேயும் பாடிண்டு இடைச்சதைப் சாப்பிட்டுண்டு காலந் தள்ரேன்.''

''ஆமாம், நீயும் ராசாத்தியும் அண்ணன் தங்கை மாதிரி பழகினிங்களாமே, உண்மையா?''

''ஏய், அவனே ராசாத்தின்னு சொல்லாதேடா, அவள்தான் வண்டமர் பூங்குழலி. சேற்றிலே பிறந்த செந்தாமரை. இறைவியையே எண்ணி வாழ்ந்தாள். தன் இளமையையும் அழகையும் கலேத் தேர்ச்சியையும் இறைவனுக்கே அர்ப்பித்தாள். அவளுக்கு அண்ணனும் வாய்ப்பு ஏற்பட்டதற்கே நான் கொடுத்து வைத்தவன். ஆனல் அவள் தாயார் ..''

மாலைமணியின் கண்கள் கலங்கின. குலுங்கக் குலுங்க அழுதான்.

''பணத்தை ஆயிரம் ஆயிரமாக் கொடுத்தவன் கம்மா இருப்பானு? 'நீயாவது வா' என்று குமுதவல்லியையே இழுத்துக்கிட்டுப் போயிட்டான். அவளுக்கும் மனக பொறுக்கல்லே. அக்கிரம வழியிலே சேர்த்த எல்லாச் சொத்தையும் என் தலேயிலே கட்டிட்டு,பணக்காரனேடபோன மறு நாளே போய்ச் சேர்ந்துட்டா குமுதவல்லி. அத்தனே பணத்தையும் வச்சுக்கிட்டு நான் என்ன பண்றது? இறைவனே வாயாரப் பாடினேன். வயித்துக்கும் கிடைச்சது. தர்மம் செஞ்சாலும் நகுமான பாத்திரம் அறிந்து செய்யணும். இறை பணியை விட்டுட்டு எவனேத் தேடிக்கிட்டுப் போறது? அம்மனும் சுவாமியும் திருவிமாக் காவத்துலே வீதி உலாப் போயிட்டுத் திரும்பி வந்தா, இறக்கி உபசாரம் பண்ண, ஒரு மண்டபம் கட்டலாம்னு தோணித்து. அந்தப் பணத்தை எல்லாம் செலவழிச்சுக் கட்டினேன். அதோ, பார், அந்த மண்டபத்தை.''

''எங்கே?'' என்று கேட்டேன்.

''உனக்குக் கண்ணு தெரியலேயா? அதோ பார், மேலண்டைப் பிராகாரக் கோடியில்'' என்று கையைக் காட்டினுன் மாலைமணி.

அந்தத் திக்கில் பார்த்தேன். பாதி அழிந்தும் அழியாமலும் இருந்தமுத்துக்கள் தெரிந்தன. ரெ பையணேப் போல் எழுத்தைக் கூட்டிப் படித்தேன். ''ரா.. சா ..த் .. தி.. ம ..ண்ட.. ப.. ம்..''

சிறந்த காரியத்தைச் செய்த வெனடியானை மாலைமணியை மனதிறைவுடன் திரும்பிப் பார்த்தேன். அந்தச் வெனடியாரைக் காணவில்லே. *

உங்கள் வெல்லம், சர்க்கரைக்கு, அதிக இனிப்பையும்,
நல்ல நிறத்தையும் கொடுப்பதற்கு
டி.ஸி.பி உயர் ரக சோடியம் ஹைட்ரோஸ்
உபயோகியுங்கள்



இந்தியாவில் முதல் முறையாக சோடியம் ஃபார்மேட் முறையைப் பயன்படுத்தி டி.சி.பி. ஹைட்ரோஸ் தயாரிக்கப்படுகிறது. இது தூத்தாகவும் மற்றும் பாதாசக் கலப்பு இல்லாதது.

டி.சி.பி. ஹைட்ரோஸ் பொன் மஞ்சள் நிறத்தை வெல்லத்திற்கு அளிக்கிறது. கண்டசாரிக்கு கிட்டத்தட்ட வெண்மை நிறமும், சர்க்கரைக்கு நயம் வெண்மை நிறமும் அளிக்கிறது. அதிக இனிப்புத் தன்மையை ஊட்டுகிறது.

தூய்மையாக்குவதற்கு டி.சி.பி. ஹைட்ரோஸ் பயன்படுத்தினுல் வெல்லமோ, சர்க்கரையோ அதிக நாட்களுக்காகச் சேமித்து வைக்கலாம், கறுப்பு நிறமாக மாறுது. ரீர்த்தும் போகாது. டி.சி.பி. ஹைட்ரோஸ் தூளாக இருப்பதால் விரைவாக கரைந்து, வேமாக செயல்படுகிறது. எனவே வெல்லம், கண்டசாரி, சர்க்கரை ஆகியவற்றிற்கு அதிக விலே கிடைக்கிறது. வெல்லம், கண்டசாரி, சர்க்கரை ஆகியவற்றிலிருந்து அசுத்தங்கள் அனேத்தையும் அறவே அகற்றுகிறது இது.


டீங்கான், நெசவு, காகிதம் மற்றும் மருந்து தயாரிப்பு தொழில்களிலும் இதுவே உபயோகிக்கப்படுகிறது.

எங்கள் கம்பெனி சல்பர் டைஆக்ஸைட்
திரவத்தையும் தயாரிக்கிறது.

தமிழ்நாடு கெமிக்கல் ப்ராடக்ட்ஸ் லிட்.,
("டிட்கோ"வுடன் இணைந்த கூட்டு முயற்சி- ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)
145 146, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலே, சென்னை-600 034
போன்: 83968, 86989 டெலக்ஸ்: MS: 521 தந்தி : "TECEHYDROS"

EP/TCP-1001

பண்ணை வளத்திற்கு பாங்கான திறவுகோல்



டா:பே நிறுவனத்தின் முழு ஈடுபாடும் பண்ணை வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்துள்ளதால், நமது உழவர்பெருமக்களின் நீடித்த நம்பிக்கையைப் பெற்றுள்ளது

விவசாயிகளது நல்லுறவைப் பெற்றிருப்பதால் வேளாண்மை வளர்ச்சிப் பணிகளுக்கு முக்கிய பணியாற்றும் திடநம்பிக்கையை டா:பே கொண்டுள்ளது

TRUSTED ASSOCIATION FOR EVER

MF
Massey Ferguson

TAFE

ட்ராக்டர்ஸ் அண்ட் :பார்ம் எக்விப்மென்ட் லிமிடெட்
சென்னை

MAC TAFE 43 TAM


விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் வியாபாரிகளுக்கும், வாடிக்கையாளர்களுக்கும்
எங்களது உளங்கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்

"போஸ் கலப்பைகள்"

உறுதி வாய்ந்தவை! உத்திரவாதமுள்ளவை!

போஸ் சூப்பர், போஸ் ராக்கெட்டு கலப்பைகள்
எல்லாவித மண்வளங்களுக்கும் ஏற்றவை

எங்களது ரிஜிஸ்டர் டிரேட் மார்க் 'சாவி'
அடையாளமிட்டதும் 3, 33, 303 தரம் உள்ளதுமான,
போஸ் கொழுக்கமே வாங்கிப் பயனடையுங்கள்



V. M. தேவர் & சன்ஸ்

போஸ் கலப்பைத் தொழிற்சாலை, மேலூர்-625 106 மதுரை மாவட்டம்
போன்: 33 : : தபால் பெட்டி எண்: 3

கிளைகள்: விழுப்புரம், தமிழ்நாடு; புவனேஸ்வரம், ஒரிசா

—M. M. முத்து

OK. See for yourself what the country's leading automotive manufacturers think of Clevite bearings.

Make	% of vehicles fitted with Clevite
Ambassador	60
Ashok Leyland	100
Ford 3600	100
International	100
Jeep	100
Massey Ferguson	100
Premier	50
Tata	100




The most telling testimonial to the quality of an automotive part is when it is selected by the hard-nosed vehicle manufacturer himself. As original equipment.

And Clevite bearings, as you can see, have been selected by not just one, but virtually every leading vehicle manufacturer today. As well as by the makers of Cummins engines.

There is good reason for this: Clevite bearings are made in collaboration with the makers of Clevite bearings in the USA*—the internationally acknowledged leaders in bearing technology. And they are made with sophisticated knowhow and technology no other manufacturer can match. The result: bearings that outclass every other in the market. In terms of sheer performance. And long life.

No wonder Clevite has been India's No. 1 selling bearing. Every year Ever since 1964



CLEVITE **India's No 1 bearing.**
No 1 performer. No 1 seller.

BIMETAL BEARINGS LTD Coimbatore-641 018

* In technical collaboration with Engine Parts Division of Gould Inc USA

கலைக்கோள் பேனா!

கிருஷ்ணமணி



பல மாதங்களுக்குப் பிறகு திருவல்லிக்கேணிக் கடற்கரை மணலில் உட்கார்ந்து வியூடிக்கும் அலைகளைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தேன். இப்பொழுதெல்லாம் கடற்கரைக்கு நான் வருவதே அரிதாகி விட்டது; வாலிபனுக இருந்த காலத்தில் இதே கடற்கரையில் நாள் தவறாமல் காலை நேரங்களில் ஓடுவதும், தேகப்பயிற்சி செய்வதும் வழக்கம். காலந்தான் மனிதர்களை எப்படியெல்லாம் மாற்றி விடுகிறது! நிந்தனை ஒட்டம் தடைப்பட்டது. யாரோ என்னைப் பெயர் சொல்லிக் கூப்பிடுவது போல் திருந்தது.

திரும்பிப் பார்த்தேன்.

மாதவ ராவ் நின்று கொண்டிருந்தார்.

"என்ன ராமசாமி, சௌக்கியமா?" என்று கேட்டவாறே என் அருகில் வந்து அமர்ந்தார்.

"ஓய்!" (மாதவராவுக்குத் திருநெல்வேலிப்பக்கம். பேச்சின் ஆரம்பத்தில் ஓய் போட்டுத்தான் பேசுவார்.)

"நான் இலக்கிய மாணவன். பௌதகம் தெரியாது ராவ்ஜி."

"அடிப்படை ஓய்!"

"மறந்து போச்சு."

"எல்லாச் செயல்களுக்கும் ஒரு மறு செயல் அல்லது வினவு உண்டுங்கற கொள்கை!"

"அது தத்துவமாச்சே!"

"இல்லே பிளிக்ஸ். தத்துவம் மெடாபிளிக்ஸ். அதாவது பௌதிகத்துக்குப் பின்னுல வருவது."

"சரி, ஒப்புக்கறேன். இப்ப என்ன அதுக்கு?"

"அப்படிக் கேளுங். ஓய்! நாம பத்துப் பதினேந்து வருஷத்துக்கு மு ன் ல ல நண்பர்களாகியிருப்போமா?"

"இருக்கலாம்!"

"அப்போ எனக்கு வயசு இருபத்து ஒன்று. இப்போ நாற்பத்து.... கணக்கு தப்பாப் போயிட்டது. இருபது வருஷத்துக்கு முன்னுல நடந்த ஒரு சம்பவம்!"

மாதவராவ் பீடிகை போட்டு விட்டார். சுவாரஸ்யமான சம்பவம் ஒன்று தெரிய வரும். நான் ஆவலோடு செவிகளைத் தீட்சண்யமாக்கிக் கொண்டேன்.

சுண்டல், முறுக்கு விற்கும் ஒரு சிறுவன் வந்தான்.

"ஸார்! சுண்டல்!"

"ரெண்டு பொட்டலம் தா."

"எனக்கு வேணும் ராமு! மாருதியோட தகப்பனுர் இப்ப எனக்கு ரொம்பத் தோள்தாயிட்டார். என்னை விட்டு இண்பிரியறதில்லே. இதெல்லாம் எனக்குத் தள்ளுபடி."

சிரித்துக் கொண்டே பையனிடம் சில்லறை கொடுத்து அனுப்பினேன்.

மாதவராவ்சொல்லஆரம்பித்தார்.

அலைகளின் சத்தமும், அனங்களின் அரவமும், காற்றின் சிலு சிலுப்பும் எல்லாமே மறந்தவனுக நான். ஆனேக் கவர்ந்திழுக்கும் ராவ்ஜியின் பேச்சில் ஈடுபட்டுப் போனேன்.

"என்ன ஓய்! கவனமாக் கேளும்!"

ராவ்ஜி மீண்டும் தொடர்ந்தார்.

"அப்ப நான் திருச்சியிலே இருந்தேன். வயசு இருபத்தொண்ணு. அப்பா, அம்மா செலையாது. அண்ணண்மார் ரெண்டு பேருக்கும் கல்யாணமாகிப் பெரியவர் குண்டூரிலும், சின்னவர் சென்ருராபாத்திலும் உத்தியோகம்பார்க்கிறு. மெட்ருஸ்லே என் தமக்கை, அதான் உமக்குத் தெரியுமே, ஜோதியார், அவ குடும்பத்தோட இருக்கா. எனக்கு ரெவின்யூ இலாக்காவிலே டிராஃப்ட்ஸ்மென் வேலே. பட்டா மாற்றுதல், நில மற்ற ஏழைகளுக்கு நிலம் தருவது, அரசாங்கத் தரப்பிலே தலியார் நிலங்களே நஷ்ட ஈடு கொடுத்து, ஆர் ஜீதம் பண்ணி, சாலே போட எடுத்துக்கறது. நில ஆர்ஜீதம் செய்யறது. இதெல்லாம் அந்தப் பிரிவிலே வேலே. இந்தநெலத்துக்கு இத்தனே லிஸ்தீர்ணம்னு கணக்குப் போட்டுச் சொல்றது என் வேலே.

"மாசம் பதினஞ்சு நாள் தாலுக்காக் கச்சேரிகளுக்கு முகாம் போகணும். கிராம தெல அளவுப் படங்களிலே மேற்சொன்ன காரணங்களிலுலே ஏற்பட்டிருக்கிற நெலப் பிரிவுகளே, அடையாளமா வரையணும், சம்பளம், முகாம் போற தினப்படிக்கச் செலவு எல்லாமாச் சேர்த்து நூத்தம்பது ரூபா வரைக்கும் கெடைக்கும். மாசச் சம்பாரி, அறை வாடகை, இதர செலவுகள் எல்லாம் சேர்த்து எண்பது ரூபாய்க்கு மேல் ஆகாது. தனிக்கட்டை. நல்லா ஆனந்தமா இருந்தேன். மாசம் எழுபது ரூபாய்க்குக் குறையாமல் வங்கியில் என் கணக்கில் போட்டு வந்தேன். மகிழ்ச்சி நிரம்பிய அந்த நாட்கள்?"

"ஓய் ராமு! மனுஷாளுளே எத்தனே ஜாதி இருக்கு, தெரியுமோ? ஒளவை பாடினதைச் சொல்லல்லே, ஒளலகித்திலே ஆயிரம் ஜாதி இருக்கு. இதிலே பிறத்தியான் சந்தோஷமா இருந்தாப் பொறுத்துக்க முடியாத ஜாதி ஒண்ணு இருக்கு. அப்படிப்பட்ட ஒருத்தன் என் அறைக்குப் பக்கத்து அறையிலே குடி வந்தான்.

அவன் பேரு பரமேசுவரன். கேரளத்துக்காரன். நல்ல செவப்பா அழகா, சுருட்டைத் தலைக் கிராப் போட்ட இருப்பான். ஆள்தான் அழகு. குணம் மகா மோசம். எனக்கு அரம் பத்திலே இது தெரியாது போச்சு.

'அவனுக்கும் எங்க இலாகாவிலே வேலை. நெலங்களுக்கு மதிப்பீடு செய்வது, பொது ஜனங்களுக்கு நஷ்ட ஈடு எவ்வளவு தர வேணும் என்று நிர்ணயிப்பது. இதெல்லாம் அவனுடைய வேலை.'

'எங்களுக்குள் நட்பு வளர்ந்தது. பரமேசுவரன் உல்லாசப் பேர்வழி. நன்றாக உடுத்துவான். அங்கிலம் சரளமாப் பேசுவான். தினமும் ரெண்டு முறை குளிப்பான். நான் அவனிடம் மயங்கிப் போனேன்.'

"அந்த ஆண்டு தீபாவளிக்குச் சென்னை வரும்படி ஜோடியாய் கடிதம் போட்டிருந்தாள். இன்னும் ஒரு வாரம் இருக்கிறது. அவசர வேலை களை முடித்து விட்டு நான்கு நாட்கள் விடுப்பு எடுத்துக் கொண்டு சென்னை வரலா மென்று நெனைச்சிருந்தேன். அறையில் அமர்ந்து யோசிச்சுக் கொண்டிருந்தேன். தனியறை ஆதலால் ஒரு கதவைச் சாத்தி வைப்பது என் வழக்கம். கதவை யாரோ டொக் டொக் என்று தட்டுவது போல் இருந்தது.

'யாரது?' என்றேன்.

'வணக்கம் ஐயா! நான்தான் அமீர் உசேன்!' என்று ஆங்கிலத்தில் சொல்லிக் கொண்டு நடுத்தர வயதுக்காரர் ஒருவர் உள்ளே நுழைந்தார்.

'காலே மணி எட்டு என்பதை தூரத்தில் ஒலித்த முனிபொலிடிச் சங்கு அறிவித்தது. இவர் யார், என்ன முகாந்தரத்தோடு இங்கே வந்திருக்கிறரென்று என்னால் யூகிக்க முடியவில்லே.

'ஐயா நீங்கள யார்?'

'நான் முசிரி தாலுக்காவிலே இத்தப் பிரிவிலே.....பதவியிலே இருக்கேன். ஐயா தான் ஜில்லாக் கலெக்டராபீலில் இந்த வேலைகளச் செய்யறதாச் சொன்னாங்க. தீபாவளி வருது இல்லீங்களா?''

'அமாம் நிஜ்டா உண்மே!'

'அதான் ஐயாவைப் பார்க்க வந்தேன்.'

''எனக்குத் தலையும் புரியவில்லே. வாலும் தெரியவில்லே. அவருடைய பேச்சுப் புதிராக இருந்தது.''

''அமர்உசேன் மேலும் தொடர்ந்து சொன்னார். 'ஐயாவுக்குத் தெரியாதது ஒண்ணுமில்லே. இங்கே இது வழக்கந்தான். தீபாவளிக்குச் செலவுக்குப் பணம் வேணுமில்லியா? அதுவும் நீங்க வாலிபமா இருக்கீங்க. இந்தாங்க' என்று கூறி மேசை மீது ஒரு கவரை வைத்தார்.

''நான் அச்சரியத்துடன் நின்றேன். முன் பின் தெரியாத மனிதர். இவர் எனக்கு கவரைத் தொடாமலேயே கேட்டேன். 'இதென்ன.....'

'இருநூறு ரூவா இருக்குங்க. முசிரி, லால்குடி ரெண்டு தாலுக்காலிலே வேலை செய்யற நானும், கலியபெருமாளும் சேர்ந்து இதை இயாவுக்கு ....'

'ஐயாவுக்கு?'

'மன்னிக்கணும்! நீங்க அந்த வேலம்பட்டிக் நிராமம் பட்டா வழங்கற நாலு கேல்களுக்காக ஏற்கனவே நூத்தம்பது ரூவா கேட்டு, அதை நான் பரமேசுவரன் கிட்டே கொடுத்துட்டும் போனேனுங்க. இன்னும் அந்தக் கேல் தீர்மானமாகாமலேயே இருக்கு. ஜல்தி முடிச்சித் தந்நீங்க என்று பரவாயில்லே.'

'அமீர் உனேன்!' என் குரலில் கோபம் தொனிக்கதது.

'ஐயா ஏன் கோபப்படறீங்க?'

'மொதல்லே இந்தக் கவரை மேசைமேலிருந்து எடுங்க. இந்த இடத்தை விட்டு உடனே வெளியே போயிடுங்க!'

'நான் தப்பா எதுவும் சொல்லிடல் லீங்களே! நூத்தம்பது ஏற்கனவே பரமேசுவரன் கிட்டே கொடுத்த தைத்தானே சொன்னேன்?'

'ராஸ்கல்! இவன் கையூட்டு வாங்கறது போருதுன்னு என் பேரைச் சொல்லியும் வாங்குறுரு?'

'ஐயா! அப்ப நீங்க.'

'சர்க்காரி தர்ர சம்பளமே எனக்கு மீதமிருக்கும்போது என் கடமையைச் செய்யக் கையூட்டு வேறவாங்கணுமா. பாய்? தயவு செஞ்சு போயிடுங்க இல்லே, நான் பொல்லாதவனு ஆயிடுவேன்.' நான் கர்ஜித்தேன்.

'விநோதமான ஜந்துவைப் பார்ப்பது போல என்னைப் பார்த்துவிட்டு அவர் 'அரே அல்லாஹ்!' என்றவாறே கவரையெடுத்துக் கொண்டு வெளியே போனார். நான் மனம் குமைந்து போனேன். அது நாள் வரையிலும் யாரிடமும், எதற்கும் கைநீட்டிப் பழக்கமில்லாத எனக்கு, என் பெயரை உபயோகபடுத்திக்கையூட்டு வாங்கி, எனக்கு அவப் பெயர் சம்பாதிச்சுக் கொடுத்து விட்ட டரமேசுவரன் எண்ணியதும் மனம் மிகவும் குமுறியது.

'சுமார் கால் மணி நேரம் கழிச்சுப் பரமேசுவரன் வந்தான். என் அறைக்குள் எட்டிப் பார்த்தான்.

'ஹலோ! ராவ்ஜி! எந்தா நிங்ய ஞக்கு இத்ர தேஷ்யம்! ஏன் உங்களுக்கு இவ்வளவு கோபம்)'' என்றான்.

'முட்டாள்! நீ எங்கிட்டே பேசாதே!' என்றேன்.

'யார்டா முட்டாள்? நீயா? நானு? பொழைக்கத்தெரியாத பட்டரே' என்றான்.

'எனக்குப் பொறுக்க வில்லே!' என்னடா சொன்னே? கேவலமான காரியம் செஞ்சிருக்கே நீ. என் பேரைச் சொல்லி நீ ஏன் பணம் வாங்கினே?'


'உனக்குக் கொடுத்திடறேன்பா! கோவிக்காதே.'

'எனக்கு இதெல்லாம்பிடிக்காது.'

'பெரிய ஹரிச்சந்திரன் பரம் பரையோ பட்டரே?'

'எனக்குக் கோபம் தலைக் கேறியது. அடுத்த கணம் அவனுடைய கன்னங்களில் மாறி மாறிக் குத்து விட்டேன். அவன் இதைச் சற்றும் எதிர்பார்க்க வில்லையாதலால் நிலை குலைந்து கீழே விழுந்தான். 'டேய்! இன்னொரு தரம் இந்த மாதிரி எதாவது செஞ்சே, கொன்னுப்புடுவேன். ஜாக்கிரதை! எழுந்து வெளியே போடா!' என்று கத்தினேன்.

'அக்கம் பக்கத்து அறைகளிலிருந்தும் தங்கியிருந்த நண்பர்கள் ஓடி வந்தனர். நிலமையைப் புரிந்து கொண்டவர்கள் போல் அவரை அழைத்துச் சென்று விட்டார்கள்.



''ஆனல் விஷயம் அதோடு நிற்க வில்லே!''

இப்போது அவர் தூரத்தில் பார் வையை ஓட விட்டார். சில நிமிஷ நேரங்கழித்து ஆரம்பித்தார்:

''அன்று நான் காரியாலயம் சென்று நான்கு நாட்களுக்கு விடுப்பு வேண்டு மென்று விண்ணப்பித்து, சேவகன் மூலம், எங்கள் அதிகாரியான (டெபுடி கலெக்டர்) பாலசுந்தரத் துக்கு அனுப்பினேன். சிறிது நேரத் தில் அவன் திரும்பி வந்து அதிகாரி என்னைக் கூப்பிடுவதாகச் சொன் னன். நான் போனேன்.

'வணக்கம் ஐயா!'

'ம்....!' அவர் தலே நிமிராம லேயே சொன்னர்.

'கூப்பிட்டீர்களாமே?'

'ஆமாம். உமக்கு ரெண்டு நாட் கள் விடுப்புப் போதாதா?'

'போதாது!'

'ரெண்டு நாள்தான் அனுமதிக்க முடியும். வேலே பாக்கி ரொம்ப இருப்பதாக கேள்விப்பட்டேன்.'

'யார் சொன்னது?'

'யார்னேன்று சொன்னல் அவரை யும், ரமிஞ்ஞிலுல் என்னேயும் குத்தி விடுவீரோ? கல்லூரியில் நீர்தான் குத்துச் சண்டை பயின்றது சக வகுப்பியர் களிடம் சண்டை போடலாமா?'

''எனக்குப் புரிந்து விட்டது. 'விஷயம் முழுமையும் தெரிஞ்சு கொண்டு பேசுங்கள்?

'அதிகப் பிரசங்கித்தனமாகப் பேசாதீர். உம்மீது ஒழுங்கு நட வடிக்கை எடுக்க என்னுல் முடியும்.'

'தாராளமா எடுங்களேன். நான் தவறு செஞ்சிருந்தால் அல்லவோ பயப்பட வேணும்!''

''இப்போது அவர் என்னேயே பார்த்தார். 'உமக்கு என்ன ஆகிவிட் டது. இப்படி நடந்துகொள்கிறீர்?'

'என் பெயரைச் சொல்லிக் கை பூட்டு வாங்கியவரை நான் அடிச்சது குத்தமா ஐயா?'

'ஸ்ஸ்....பெரிய வார்த்தை யெல்லாம் வேண்டாம். இனிமேல் இப் படி நடக்கக்கூடாது. எச்சரிக்கிறேன்.'

'நீங்கள் எச்சரிக்க வேண்டியது பரமேஸ்வரனை! என்னை அல்ல.'

'மாதவராவ்! எனக்கு என்ன சொல்லுதென்றே புரியவில்லே. வாலிப வயசுதான் உம்மை இப்படிப் பேசவைக்கிறது. ஓர் அதிகாரியிடம் நீங்கள் இப்படிப் பேசக்கூடாது. புரி கிறதா?'

'என்னே வைக்கோல் போர் நாய் எல்லீர்கள். ஆமாம். நான் நாய் தான். எந்தச் சர்க்காரிடம் கை நீட்டிச் சம்பளம் வாங்கறேனோ அந்தச் சர்க்காருக்குத் துரோகம் நேக்காத நாய்தான்?'

'ஸ்... என்னப்பா இது! உனக்கு ஒண்ணும் புரியல்லியே! இதெல்லாம் சகஜம். சாதாரண விஷயம். இதைப் போய்ப் பெரிசு பண்ணிண்டு. பொழைக்கத் தெரியாத ஆளுய்ய நீர்!'

'இந்தியர்களே இந்தியர்களே சுறையாடவா நாம் சுதந்தரம் பெற் ரோம்? ஸார்! உங்க தலேக்கு மேல காந்திஜியோட படம் மாட்டியிருக்கு. மொதல்ல அதைக் கழட்டச் சொல் லுங்க!'

'ராவ்ஜி, நீங்க போகலாம்.' டெபுடி கலெக்டர் சினந்தார்.

''நான் வெளியேறினேன்.

''ஒரு தீர்மானத்துக்கு வந்தவனுக அறைக்குத் திரும்பினேன். நேரே நாண் கணக்கு வச்சிருந்த வங்கிக் குச் சென்றேன். இருப்பிலிருந்த பணம் எண்ணூறு ரூபாவை எடுத் தேன். மதியம் காரியாலயம் போய் என் வேலே இருக்கும் நெலவரத்தைப் பத்தி ஒரு பட்டியல் தயார் செஞ்சு ண்டு, அத்துடன் என் ராஜிநாமாக் கடிதத்தையும் இணத்துவிட்டு, டெபுடி கலெக்டரிடம் அனுப்பினேன்.

''எதிர் பார்த்தபடியே அழைப்பு வந்தது.


'ராவ்ஜி! என்ன இது? பைத்தியக்காரத்தனமா இருக்கே! நீர் இலாகாத் தேர்வில் வெற்றி பெற்று, ரெவினியூ இலாகாவில் பதவி மாற்றம் பெற விண்ணப்பித் திக்கிர். பட்டதாரியான நீர் வருங்காலத்தில் பெரிய அதிகாரியாக வர ஏது இருக்கு. என்ன இப்படி?'

'மன்னிக்க வேணும் ஐயா. நான் இங்கே வேலே செய்ய இஷ்டப் படவில்லே.''

''அவரால் மேற்கொண்டு பேச முடியவில்லே. நான் அன்றிரவே அலையைக் காலி செஞ்சுண்டு சென்னே வந்து விட்டேன்.''

ராவ்ஜி இப்பொழுதும் மௌனமாகிவிட்டார். கடந்துபோன அந்த நேரங் கள் அவர் மனத் திரையில் ஓடிக்கொண் டிருக்க வேண் டும். அதுவரையில் சாப் பிடாமலிருந்த சுண்டலே அவசர அவசரமாகச் சாப் பிட்டதில் பச்சை மிளகாய்த் துண்டமொன்றைக் கடிக்க, உறைப்புக் கண்களில் நீரை வரவழைத்துவிட்டது. நடு வில் எழுந்துகொண்டால் நாகரிகமாக இராது என் றெண்ணிச் சமாளித்துக் கொண்டேன்.

நிகவு திரும்பினவராய் அவர் என்னேப் பார்த்துச் சிரித்தார்.



ராமு. ஆண்டவன்னு ஒருத்தன் இருக்கான்.பகுத்தறிவுன்னு சொல்லிச் சில பேர் இதை மறுக்கலாம். நித்த ஒடம்பிலே உள்ளுக்கும் வெளிக்குமாப் போயிண்டிருகிற காத்து நின்னு போனு ஆட்டம் முடிஞ்சிடறது. சைக்கிள் டயர்லே காத்து எறங்கிஞுக் காத்து அடிச்சு ஒட்ட முடியும். ஆனு மனுஷா ஒடம்பிலே? இது ஏன் இந்தப் பகுத்தற்வுக்காரனுங்குருப் புரியலே. இங்கேதான் பகவான்னு ஒருத்தர் இருக்கார், அவனவன் காரியத்துக்கு ஏத்தாப்லே அவனவனுக்குப் பலன்னேத் தர்ரான்னு தெரியறது. அடுத்த ஜென்மம்கிறதே வேணும். இப்பல்லாம் இதே ஜென்மத்திலே கைமேல் பலன் கெடச்சுப் போறது. சமுதாயத்தைத் தங்களுடைய சுயநலத்துக்காச் சுரண்டற வங்க யாராயிருந்தாலும் சரி, அதுக் குண்டான தண்டனையை அடைஞ்சிட றுங்க!''

'அது சரி ராவ்ஜி! உம்ம கதையை முடிக்கல்லியே!'

'அவசரப்படாதேயும்: அதுக்குத் தான் வர்றேன். இன்னிக்கு இங்கே வரதுக்கு முன்னல நிருச்சியிலே என்னோட வேலே பார்த்த இன்னொரு நண்பனே ரொம்ப வருஷம் கழிச்சுப் பார்த்தேன். நான் வேலேயை விட்டுட்டு வந்து, சில காலம் வேலே யில்லாம இருந்து, அப்புறமா இத்தப் பாங்க்லே வேலே கெடச்சு, இப்போ நல்ல நெலமையிலே இருக்கேன். நான் நம்பற பரிபூர்ணனுன பகவான் என்னைக் காப்பாத்திட்டான். ஆனு...''

'ஆனு என்ன?'

'என் பேரைப் பயன்படுத்திக் கையூட்டு வாங்கினவனும், என்னே வைக் கோல் போர் நாய்னு சொன்னவனும் என்ன ஆனுங்க தெரியுமா? திருச்சிக்குப் பக்கத்திலே மத்ய சர்க்கார் ஒரு பெரிய தொழிற்சாலேயை ஆரம்பிக்கணும்னு நெல ஆர்ஜிதம் செஞ்சாங்க. அந்த வகையிலே நெலப் பட்டாதாரர்களிடமிருந்து கையூட்டு வாங்கிண்டு, அதிகப்படியான மதிப்புப் போட்ட வகையிலேயும், வேற முறைகளிலேயும் ஒரு கூட்டம் மக்களுடைய வரிப் பணத்தைப் பல லட்சம் ஸ்வாஹா பண்ணித்து. அதுக்காக ஒரு விசாரணைக் கமிஷன், வச்சுக் குத்தவாளிங்க யாருன்னு ரண்டுபிடிச்சுத் தண்டனே குடுத்தாங்க. அதுலே இந்த ரெண்டு பேரும் சிக்கிக் கிட்டானுங்களாம். மல்டிபிள் சார்ஜ்லே பரமேசுவரனுக்குப் பத்து வருஷம், பால சுந்தரத்துக்குப் பன்னிரண்டு வருஷம் கடுங்காவல் தண்டனே!னு ரெர்ப்பாச்சாம்!

'கடுங்காவல்னு, கல்லுடைக்கணும்; தெரியுமில்லே. யார்? டெபுடி கலெக்டரா இருந்தவனும், உல்லாசப் பேர்வழியா இருந்தவனும் கல்லுடைச் சாங்களாம். பார்த்தியா ராமு? கடவுளுக்குக் கண்ணில்லேங்கறேம். கடவுளே இல்லேங்கறேம். பாவ புண்ணியம்வாம் பெளராணிகர்கள் விடற கப்ஸாங்கிறோம். இதுக் கென்ன சொல்றது?'

'எப்போப்பட்ட ராஜாதிராஜனுவு சொன்னலும் அவனவன் செயலுக்கு ஒரு விளேவு இருக்கத்தான் செய்யும். அதை அவனவன் அநுபவிச்சுத்தான் தீரணும். அன்னிக்கு நித்த ராவ்ஜியை நாய்னு அவன் சொன்னது கூடக் கடவுளோட செயல்தான். நில் லேன்னு நானும் வெளியே வந்திருக்க மாட்டேன். என்னேயும் மாட்டிவச்சிருப்பானுங்க. என்ன ஓய் என்ன சொல்றீர்?'' என்ருர் மாதவராவ்

''எனக்கு மேனி சிலிர்த்தது. முக்காலும் உண்மையான ஒன்றை அவர் சொல்லும்போது அதை மௌனமாக ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழி இருப்பதாக எனக்குத் தோன்றவில்லே.''

கடலின் அலேகள் ராவ்ஜி சொன்ன அந்தப் பரிபூரணனின் பெருமையை இடைவிடாமல் பறை சாற்றுவது போல் எனக்குத் தோன்றியது. ✻

அனேவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்

எங்கும் கிடைக்கும் அம்பிகா அப்பளம்

S. AMBIKA APPALAM DEPOT
8, NORTH MADA ST. MYLAPORE MADRAS-4

அனேவரும் விரும்பும் அழகாய்ப் பொரியும்


அம்பிகா அப்பளம் டிப்போ
8, வடக்கு மாடவீதி, மைலாப்பூர், சென்னை-4

அம்பிகா அப்பளம்

மாம்பலத்திலும் கிளேகள் உள்ளன

L.R. SWAMI. P/P

What's ORIENT VIJAY doing in UNION CO. MOTORS' Showroom?



Orient Vijay—it's as good as an imported television. And it's now easily available at a convenient location—The Union Co. Motors' Showroom on Mount Road.

* India's only IC solid state set.
* For perfect trouble free reception:
  * Built-in antenna
  * High voltage stabilizer
  * Uniquely designed printed circuit board
* Compact and light.
* Available in a charming range of colours.
* For a welcome price of Rs. 2,160 (including all taxes).

That's why in addition to the excellent range of Standard Motors' vehicles and an array of auto spare parts, you'll now find ORIENT VIJAY T.V. sets at our showroom.

For a T.V. SO good, we just HAD to diversify...

The Union Company (Motors) Pvt. Ltd.
118 Mount Road
Madras 600 002.
Phone: 812231

U 3558 A

We've got it, because you want it.

Also available at:
Unicorn (Bangalore) P. Ltd.,
182/184, Brigade Road, Bangalore 560 001, Telephone: 50442.

பொங்கும் மங்களம் எங்கும் பெருகுக!
வாடிக்கையாளர்களுக்கும் பொதுஜனங்களுக்கும் உளம்கனிந்த
ஒளியூட்டும் தீபாவளி வாழ்த்துக்கள்!

- சமையலுக்குச் சுவையும் மணமும் கூட்டுவது.
- நாடெங்கும் புகழ் பெற்றது.
- சமையல், பலகாரம் செய்ய மிகவும் சிறந்தது.
- ஒவ்வொரு குடும்பத்தினரும் விரும்பி வாங்கி உபயோகிப்பது.



—Paramount Madurai

With best compliments from

Kovilpatti Lakshmi Roller Flour Mills Private Limited



Gangaikondan-627 352, Tirunelveli District

Manufacturers of **"Kuthuvilakku Brand"**

Maida, Sooji, Atta & Bran


Telephone : Office : 62 Sankarnagar
Factory: 22 Sankarnagar
Gram : "FLOUR SANKARNAGAR"

Kirf Sheet Metal Industries

Periyanaickenpalayam, Coimbatore 641 037

"FABRICATORS OF SHEET METAL COMPONENTS"

—T. S. Chockalingam.



பகவான் சத்திய சாயி

ஸ்ரீ ஜகந்நாதாசாரியார்

சென்னையிலுள்ள 'சுந்தரம்'

ஸ்ரீலஸ்ரீமாகிய முழுமுதற் கடவுள் நன்மை தழைக்கவும் நீமை நலியவும் அவ்வப்போது ஆதியஞ்சோதி யுருவை அங்கே வைத்து இங்கு அவதாரம் செய்கிறார். அத்தகைய அவதாரங்கள் பல காலங்களில், பல மாவிட உருவங்களில் தோற்றம் அளித்துள்ளன. ராமகிருஷ்ணரி அவதாரங்களும், பலராம பரசுராம அவதாரங்களும், புத்த அவதாரம் போன்ற வையும் தீனவு கூர்வதற்குரியன. இதற்கு கலியிலும் இறையம்சத்தோடு அண்மையில் தோன்றியவர்கள் ராமலிங்க சுவாமிகள், பகவான் ராம கிருஷ்ண பரமஹம்சர், ரமணர் போன்ற ஞானிகள். அந்த வகையில் மாவிட உருவத்தில் இறைவனுடைய அம்சமே ஆந்திரப் பிரதேச சத்தைச் சேர்ந்த புட்டபர்த்தி என்ற சிறு கிராமத்திலே பகவான் சத்திய சாயிபாபா என்ற திருநாமத்தோடு அருள் பாலித்து வருவது கண்கூடு. சத்தியநாராயணு என்ற இயற்பெயர் பெற்ற பகவான் சத்திய சாயி பாபா அவர்கள் ஷீரடி சாயி பாபாவின் மறு அவதாரமே என்பது பல வகைச் சான்றுகளோடு நிறுவப்பட்டுள்ளது. ஷீரடி பாபாவைப்பற்றியும் அவருடைய அற்புதச் செயல்களைப்பற்றியும் இந்நாடு நன்கறியும். அவரைப் போலவே பகவான் சத்திய சாயி பாபா அவர்களும் பல விதமான அருட் செயல்களையும் அற்புதங்களையும் நிகழ்த்தியுள்ளார்.

இவி ஷீரடி பாபாதாம் சத்திய சாயி பாபா என்ற இந்தக் கருத்தை எப்படி நம்புவது என்று பலர் சந்தேகிக்கலாம். ஒரு சான்று: கிண்டி ரெயில்வே ஸ்டேஷனுக்கு அருகில் நம் சாயி பகவானுல் ஸ்தாபிக்கப்பட்ட ஷீரடி பாபா கோயிலுக்குப் போய் அங்கே அவர் திருவடிச் சுவடுகளைப் பார்த்தால் உண்மை புரியும். விளக்கமாகச் சொல்கிறேன். அங்கேயுள்ள திருவடிச் சுவடுகள் நம் சாயி பகவான் திருவடிச் சுவடுகளேதாம்! ஆனால் அந்தச் சுவடுகள் இவருடைய தற்போதைய காலின் அளவைக் காட்டிலும் பெரியனவாகக் காணப்படும். ஏனெனில், அவை இவர் ஷீரடி பாபாவாக இருந்தபோது இருந்த காலின் அளவிலேயே பகவானும், ''பஹூனிமே வ்யதீதானி ஜன்மானி தவ சார்ஜுன தான்யஹம் வேத ஸர்வாணி நத்வம் வேத்த பரந்தப!'' என்று கூறியது ஞாபகத்துக்கு வருகிறது. ஆக, ஷீரடி மகானே, ''எட்டாண்டுகள் கழித்து நான் பிறப்பேன்'' என்று கூறிய வார்த்தைக்கேற்ப 1926 நவம்பர் 23-ஆம் தேதி புட்டபர்த்தியில் அவதரித்தார்.

பகவானின் ஸ்தாபனங்கள்:

சத்திய சாயி பகவானுடைய நிருவினையாட்டின் பிரதிபலிப்பாகப் பல சத்திய சாயி ஸ்தாபனங்கள் உருவாகியுள்ளன. சத்திய சாயி நிருப்பெயரில் இயங்கி வரும் 'அறக்கட்டளை' என்ற தலைமை ஸ்தாபனம் பலவிதத் துறைகளிலும் பகவானின் அருள் வெள்ளத்தைப் பரக்க விடும் பான்மையினைப் பரப்பி வருகின்றது.


பகவானின் ஸ்தாபனங்களில் முக்கியமாக மூன்று அடுக்குகள் காணப்படுகின்றன. முதலடுக்கு பாலவிகாஸ் என்பது. அதற்குமேல் உள்ளது சேவாதளம், மூன்றாவது சேவா சமிதி.

இவை ஒன்றக்கொன்று படிப்படியாக ஏற்றம் பெற்று, ஆறு வயது இளஞ் சிறுவர்முதல் முப்பத்தைந்து நாற்பது வயது வரையிலுள்ள பெரியோர்வரை நல்ல ஒழுக்கங்களையும், செப்பமான முறையில் வாழ்கின்ற வழி வகைகளையும், ஆன்மிக முதிர்ச்சிக்கான ஒழுங்குபட்ட இயக்கங்களையும் காட்டுவனவாகும். பாலவிகாஸில் சேரும்போது 'கடவுளின் குழந்தைகள் நாம்' என்ற உணர்ச்சி ஏற்படும். பிறகு சேவாதளத்தில் சேரும்போது 'நாம் கடவுளின் பக்தர்' என்ற உணர்ச்சி வளர்கும். சேவா சமிதியின்மூலம் தொண்டாற்றும்போது, 'நாம் கடவுளின் சாதித் தொண்டர்' என்ற உணர்ச்சி மிகும்.

பாலவிகாஸ்:

இந்த முதல் குழுவில் ஆறு முதல் பத்து வயதான சிறுவர்கள் உள்ளனர். இவர்களுக்கு பிஞ்சு மனத்திலே இறைபக்தியையும், ஓங்காரத்தின்மூலம் நாதப் பிரம்மத்தையும், மகரிஷிகள், பக்தர்கள், சான்றோர்கள் இவர்களுடைய வரலாறுகளையும், சம்ஸ்கிருத ஸ்தோத்திரங்கள் சிலவற்றையும், தமிழில் சில துதிப் பாடல்களையும், பஜனையின் பெருமையினையும் புகட்டுகின்றனர். இப்படிப் பண்பட்ட நிஞ்சு மனங்கள் வளர்ந்து பெரியவர்களானால் எப்படியிருப்பார்கள் என்பதை நீங்களே அநந்து கொள்ளலாம்.

இந்தப் பாலவிகாஸில் குழந்தைகளுக்குப் பெரும்பாலும் போதகர்களாக அமைந்திருப்பவர்கள் தருபிற்ற குணக்குன்றுகளாகிய பெண்களே. இந்த ஆசிரியைகளே இந்தக் குழந்தைகளுக்குச் சர்வமும். தாய், தந்தை, தோழன், ஆசான், சேவகன் எல்லாம் இவர்களே. இந்த ஆசிரியைகளுக்கு அவ்வப்போது பயிற்சிகள், முகாம்களின் மூலம் ஆண்டுதோறும் கொடுக்கப்படுகின்



சின்னம்

றன. பகவான் அவர்களே பலமுறை இந்தப் பால விகாஸ் ஆசிரியைகளுக்குச் சிறந்த கருத்துக்களைப் பின்பற்றும்படி வற்புறுத்தியுள்ளார். பகவானுக்கு இந்தப் பால விகாஸ்தான் உயிர் மூச்சு. குழந்தைகள் நல்லொழுக்கத்தோடு முன்னேறினால் இந்த நாடு உருப்படும் என்ற விழுமிய குறிக்கோள் உடையவர்.

இந்த இளஞ்சிறார்கள் பத்து வயதுக்கு மேற்பட்டவுடன் 'சேவாதளத்தின் முன்னெடி' என்கிற ஸ்தாபனத்தில் சேரத் தகுதியுடையவராகி, அடுத்த நல்லொழுக்க உயர்வுக்கேற்ற பயிற்சிகள் பெறுகிறார்கள்.

இந்த முன்னேட்டப் பயிற்சி முடிந்தவுடன் 'சேவாதளம்' என்ற உச்சத்தை எட்டுகிறார்கள். அப்போது அவர்களுக்குப் பதினைந்து அல்லது பதினெட்டு வயதாகும். சேவாதளம் செய்கிற சேவை மிகவும் முக்கிய மானது. இவர்களுக்குச் சற்றுக் கடினமான கட்டுப்பாடோடு கூடிய, பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சியால் அவர்கள் உள்ளத்தில் மறைந்து கிடக்கும் அறிவுத் திறனும் ஆக்க வேலைகளில் முனைந்து ஈடுபடும் சக்தியும் வெளிப்படுகின்றன. மற்றும் எல்லாவற்றுக்கும் மேலாகச் சேவாதளத்தின் தாரக மந்திரமாகிய, 'மானுட சேவையே கடவுளின் வழிபாடு', 'மக்கள், சேவையே மாதவன் சேவை'' என்கிற தத்துவம் வலியுறுத்தப்படுகிறது. யாதொரு பயனையும் எதிர்பாராமல் தம்மையே இயாகம் செய்யும்படியான சேவை மனப்பான்மை இவர்களுக்கு ஊட்டப்படுகிறது. 'உன் கருமத்தைச் செய்! செய்வதையும் நிஷ்காமியமாகச் செய். பலனை எதிர்பார்க்காதே' என்ற கீதா வாக்கே இவர்களுக்குச் சிறந்த போதனையாகும். இது சம்பந்தமாக இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை அகில இந்திய ரீதியில் மகாநாடு நடத்துகிறார்கள்.

இந்தச் சேவாதளங்கள் ஆற்றும் சேவைகள்:

1. பொதுக்கூட்டங்களின்போதும் விழாக்களின்போதும் ஒலி பெருக்கி, தொலைக்காட்சி, ஒளி அமைப்பு முதலிய கருவிகளை மேற்பார்வையிட்டுச் சரி செய்யப் பயிற்சி அளித்தல்.

2. முதியோர் கல்வி: சேவாதளத் தொண்டர்கள் கல்வியில்லாத பாமர மக்களுக்கு இரவு வகுப்புகளின் மூலம் கல்வி புகட்டல்.

3. அன்னம் பாலிப்பு: முக்கிய மான விழாக்களிலும் (பகவானின் பிறந்த நாள், மகாசிவராத்திரி போன்றவை) மாநாடுகளிலும் கூடுகின்ற லட்சக்கணக்கான மக்களுக்கும் உணவிட்டுப் பாதுகாப்பு அளித்துக் கவனித்துக்கொள்வதில் தீவிரப் பயிற்சி அளித்தல்.

4. கூட்டங்களிலும் விழாக்களிலும் அலங்காரம் செய்யவும் அழகுபடுத்தவும் இந்தச் சேவாதளத் தொண்டர்களுக்கு திறம் படைத்தவர்களைத் தேர்ந்தெடுத்து, அந்தக் களங்களை அழகுபடுத்தச் செய்தல்.

5. தீயணைப்பு.

6. பஞ்ச நிவாரணம்; பஞ்ச காலத்தில் செய்ய வேண்டிய உதவி.

7. வெள்ள நிவாரணத்துக்கான பயிற்சி அளித்தல்.

8. அடிபட்டுக் காயமுற்றோர்க்கு முதலுதவியளித்தல்.

9. இரத்ததானம் செய்தல்.

10. மருத்துவச் சாலைகளுக்குச் சென்று அங்குள்ள நோயாளிகளுக்கும், பள்ளிக்கூடங்களுக்கும் சென்று ஊனமுற்ற சிறுவர்களுக்கும் ஆன்மிக முறையில் ஆறுதல் அளித்தல், அவர்களுக்குப் பகவானுடைய போதனைகளை எடுத்துச் சொல்லிப் பெருநம்பிக்கையையும், நல்ல சுறுசுறுப்பு வரும் என்பதையும் கூறி ஊக்கு வித்தல்.

11. சிறைச் சாலைகளுக்கும், சீர் திருத்தப் பள்ளிகளுக்கு விஜயம் செய்து அங்குள்ளவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் பணிகளை மேற்கொள்ளல்.



ஊனமுற்றோரிடையே பாபா, பம்பாய்

பகவான் பாபாவின் உபதேச மொழிகளைப் பரவச் செய்யப் பல காட்சிப் பொருள்களை அமைத்தல்; பாபா ஸ்தாபனத்தைப் பற்றிய செய்திகளை வழங்கும் அமைப்புகளை நிறுவுதல்.

12. கிராமப்புறங்களிலும், துப்புரவு வேலை மேற்கொண்டு செய்யப் பயிற்சியளித்தல், சேவாதளத் தொண்டர்களில் சிறப்பான பாடகர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களின் மூலம் பல மொழிகளிலுள்ள சிறந்த பிரதிகளைப் பாடச் சொல்லி, அத்தகைய சிறந்த பதிவுகளின் மூலம் ஆன்மிக முன்னேற்றத்துக்குப் பயிற்சியளித்தல்.

இறுதியாக, சுகாதாரக் கல்வியை மேற்கொண்டு மக்களுக்குச் சுகத்தோடு வாழும் வழிகளைப் போதித்தல்.

இச் சேவைச் செயல்களைப் பற்றித் தெளிவாக அறிந்துகொள்ளப் பாடத் திட்டங்களும் வரையறுக்கப்பட்டுப் போதிக்கப்படுகின்றன.


இங்ஙனம் சேவாதள ஸ்தாபனம் முக்கிய ஓர் அங்கமாகச் சாயி ஸ்தாபனங்களில் திகழ்ந்து வருகிறது. அப்படிப்பட்ட தொண்டர்களுக்கு அவ்வப்போது ஆன்மிகத் அறையிலும் இந்தியப் பண்பாட்டின் மேன்மையிலும் அறிவு விளக்கம் பெறச் சத்திய சாயி டிரஸ்ட் ஏற்பாடுகள் செய்கிறது. அப்படிப்பட்ட ஏற்பாடு திருப்பூர், கோயம்புத்தூர், கன்னியாகுமரி, மதுரை, திருச்சி, நில்லை, சென்னை முதலான இடங்களில் நடந்தன. அவற்றுள் சிலவற்றில் நானும் பங்கெடுத்துக்கொண்டிருக்கிறேன். அந்த முகாம்களிலும் பெருத்த நன்மைகள் ஏற்பட்டுள்ளன. திருப்பூரில் நடந்த முகாமில் சேவாதளத் தொண்டர்கள் அரிய சேவை செய்தனர். கருங்கற்களைச் சமமாகப் பரப்பி அவற்றின்மேல் மண்ணைக் கொட்டித் தண்ணீர் தெளித்து ரோட்டு ரோலரைக் கொண்டு சாலை அமைத்த சிறப்பை அந்த ஊர் நகரசபை நிர்வாகத்தினர் பாராட்டினர்.

கண்பார்வை இழந்தோர்க்கும் பல சமூக நோய்களால் வருந்தியவர்க்கும் மருத்துவ முகாம் நடத்தி, அவர்களுக்கு சேவாதளம் செய்து பலவகை வியாதிகளுக்கும் மருந்து கொடுத்தலும்பினர். கண் பார்வை குன்றியவரில் 'காடராக்ட்' சிகிச்சைக்கு தகுதியுடையோரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு அறுவைச் சிகிச்சை முகாம் நடத்தினர். அப்போது சேவாதளத் தொண்டர்கள் சிறந்த தொண்டாற்றினர். ஒரு வார காலம் கண்ணும் கருத்துமாக அவர்களுக்கு உணவு, மருந்து, முதலியவற்றைக் கொடுத்துக் காத்தனர். இறுதியில் முக்குக் கண்

ஜடிகளைக் கொடுத்து அனுப்பியதை நோக்குங்கால், பகவானின் அருள் வெள்ளம் புட்பரத்நியிலிருந்து கோயம்புத்தூரிலும் திருப்பூரிலும் மக்களின் மனத்தில் பாய்ந்து ஓடியிருப்பதைக் கண்டு வியக்கிறோம்.

கோயம்புத்தூரில் பி. எஸ். ஜி. கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த கன்னியர குருகுலத்தில் சொற்பொழிவு நிகழ்த்தும்படியான பாக்கியம் எனக்குக் கிட்டியது. அந்தச் சொற்பொழிவு வகுப்புக்களில் கல்லூரி மாணவர்களும், ஆசிரியர்களும், மற்றும் கல்வித்துறை வல்லுநர்களும் பங்கெடுத்துக் கொண்டனர். பல சமயத் துறைகளைச் சேர்ந்தவர்களும் சொற் பொழிவு ஆற்றினர். மற்றொரு ஹாலில் பாலவிகாஸ் குருமார்களுக்குப் போதகுரப் பயிற்சியும், மற்றொரு ஹாலில் சேவாதளத் தொண்டர்களுக்குக் வேண்டாம் என்று சொல்கிறார்களே; நீங்கள் இன்று தீனையைப்பற்றிச் சொன்னீர்களே; என் மனம் குழம்பு கிறதே'' என்றுள். அவனே எதிலில் இருந்த ஓர் அறைக்கு அழைத்துச் சென்றேன். அங்கிருந்த பகவத்தை அங்கிலப் பதிப்பு ஒன்றை எடுத்துப் பக்கங்கள் சிலவற்றைப் பார்க்கச் சொன்னேன். அதைப் பார்த்த அவன் வியந்து போனான். பகவத் தீனையை உலகத்திலேயுள்ள எத்தனை நாடுகள் தம் தம் மொழிகளில் மொழி பெயர்த்து, இதைப் பொக்கிஷமாக வைத்துப் போற்றுகின்றன என்பதைக் கண்கூடாகக் கண்டான்: ''என் கண் திறந்துவிட்டது. இந்தச் சான்று ஒன்றே எனக்குப் போதும். இந்த ஒரு வார காமம் நான் இந்த முகாமில் தெரிந்து கொண்ட நல்ல பண்புடைய விஷயங்களுக்கு என்னை மெய்ம்மறந்து பாபாவின் அருளையும் குமரி அம்மனின் திருவருளையும் பெற்று நின்றேம். வேறொரு நாள் படகு ஏறி எல்லாரும் விவேகானந்தர் நினைவுச் சின்னப் பாறைக்குச் சென்றும். 'சப்தம் செய்யாதீர்கள்' என்ற பலகை விவேகானந்தர் சிலையின் முன் வைத்திருந்தது; ஆனால் பகவான் திருவருளால் எங்களுக்குமட்டும் முக்கால் மணி காலம் பக்தி பாடல்கள் பாடும் படியான சலுகை காட்டப்பட்டது.

பாபா ஸ்தாபனத்தார் எந்த ஊரில் இந்தப் பயிற்சி முகாம்களை அமைக்கிறார்களோ அந்த நகரத்தைப்பற்றியும் அதனைச் சுற்றியுள்ள ஊர்களைப்பற்றியும் மாணவர்கள் தெரிந்துகொள்ளும்படி செய்வது மரபு: சென்னையில் ஆபட்ஸ்பரியில் நடந்த கன்னெனி வழங்கும் திட்டம் அபாரமாக இருந்தது. பலர் பயன் பெற்றனர்:



பார்வை இழந்த பாவையரிடையே பாபா, பம்பாய்

பஜனை மண்டலி :—

இந்த ஸ்தாபனத்தில்மூலம் பஜனைப் பத்தாவை ஏற்படுத்திப் பல மொழிகளில் இறைவனைப்பற்றி உள்ள பாடல்களை எடுப்பான குரலில் பாடும் போது கேட்போரின் உள்ளம் அன்பும் உருகிப் போகும்: ''ஓம் குருர் பிரம்மா, குருர் விஷ்ணு, குருர்தேவோ மஹேச்வர குருஸ் ஸாக்ஷாத் பரப் பிரம்ம தஸ்மை ஸ்ரீகுரவே நம:'' என்று தொடங்கி, 'நாராயண நாராயண ஓம்! சத்ய நாராயண நாராயண ஓம்! சத்ய நாராயண நாராயண ஓம்; ஓம் ஜய் சத்குரு தேவா ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!' என்று மங்களகரமாக பாடி ஆரத்தி எடுக்கும்போது கல்மனமும் கரைந்து விடும். பின்னர் அனைவருக்கும் விபூதி பிரசாதம் வழங்கப்படுகிறது, ஒரே குரலில், 'பிரம்மம் பவித்ரம் பாபா விபூதி பரமம் விசித்ரம் லீலா விபூதி, பரமாநந்த இஷ்டார்த்த மோட்சப் பிரதானம் பாபா விபூதி இரதம் அச்யாமி' என்று ஜபித்துப் பஜனையைத் தலைக்கட்டுவது வழக்கம்.

மகிள விபாகம் மகளிர்க்கெனவே ஏற்படுத்தப்பட்ட பகுதி. அன்மிக முன்னேற்றத்துக்கும், பண்பட்ட ஒழுக்கத்துக்கும் சமுக சேவையில் ஈடுபடவும் சிறந்த பயிற்சி கொடுக்கப்படுகிறது: பெரிய கோடீஸ்வரர்கள், தொழிலதிபர்கள், பெரும்பதவி வகிக்கும் அதிகாரிகள், பண்டிதர்கள் ஆகிய குடும்பத்தைச் சேர்ந்த பெண்டிர் எல்லாரும் சமமாகப் பழகிச் சேவை செய்வதைப் பார்த்தால் மனம் உயர்வு அடையும். இது என் அநுபவம்:

கல்வி நிறுவனங்கள்:—

பெங்களூருக்கு அருகில் குளிர்ச்சியான ஒயிட்ஃபீல்டு என்ற இடத்தில் நிறுவியுள்ள கல்லூரியும் சத்திய சாயி ஆடிட்டோரியமும் குறிப்பிட வேண்டியவை யாகும்:

மே மாதம் மூன்றும் வாரம் தொடங்கி ஒரு மாதகாலம் இக்கே முகாம் நடைபெறும்: முதல்வாரம் ராமாயணத்தினும் பாரதத்திலும் தேர்ந்த வல்லுநர்களைக் கொண்டு அவரவர் 'கீதாவாகினி' ஆத்மபோதம்' முதலான நூல்களின் வகுப்பும் நடந்தன. அப்போது அதில் பங்கு கொண்டு நற்பயன் அடைந்தோர் பலர்:

சிற்றஞ் சிறுகாலே'' நான்கு மணிக்கே எழுந்து இந்த முகாமில் பங்கு கொண்ட மாணவ மாணவியர் அனைவரும் ஒங்கார ஒலியோடு நகர சங்கீர்த்தனம் செய்துகொண்டு தெய்வீக ஒலியை எழுப்பினர்: பகவான் பாபா அவர்கள் நகர சங்கீர்த்தனத்தைப் பெரிதும் வற்புறுத்துவார்: பஜனை, ஜபம், தியானம் ஆகியவற்றின் மூலம் இறையுணர்வைப் பெற முடியும் என்பது அவர் சித்தாந்தம்: இங்கு ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட விரும்புகிறேன்:

பி.ஏ. படித்துக்கொண் டிருக்கும் ஒரு மாணவன் என்னிடம் வந்து, ''ஐயா, ஸெர் தீனையைப் படிக்க கைம்மாறு செய்வதென்று புரியவில்லை. எல்லாம் பாபாவின் அருள்'' என்று சொல்லி வணங்கிப் போனான்:

பகவான் அருளால் விவேகானந்த கேந்திராவில் முகாம் மிகவும் சிறப்பாக ஒரு வார காலம் நிகழ்ந்தது: இந்த முகாமில், ஆன்மிக இந்தியப் பண்பாட்டில் மேன்மைக்குத் தேவையான வழிமுறைகளைப் பற்றிய பயிற்சிகள் அளித்தார்கள்:

அதனிலேயில் நகரசங்கீர்த்தனம் செய்துகொண்டே கேந்திரத்திலிருந்து விளம்பிக் குமரி அம்மன் கோயிலுக்குச் சென்று அந்தக் குமரித் தெய்வத்தின் முன்னர் எல்லாரும் அமர்ந்து, தேர்ந்தெடுத்த தெய்விகப் பாடல்களையும் ஸ்லோகங்களையும் பாடினர்: அங்கிருந்த 'போற்றிகள்' உள்பட அனைவரும் இந்தத் தெய்விகப் பணி கண்டு வியந்தனர்: நானி

கள் மொழியில் ஆன்மிகச் சொற் பொழிவுகள் நிகழ்த்தச் செய்து அவர்களைக் கௌரவிப்பார்கள். இந்த வகுப்புகளுக்குக் கிட்டத்தட்ட 450 பெண்களும் 450 ஆண்களும் ஆன்மிகக் கல்வி பெறத் தேர்ந்தெடுக்கப்படுவர். இவர்கள் அனைவரும் இமயம் முதல் குமரி வரை உள்ள பல்கலைக் கழகங்களைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள்.

இந்த மாணவர்கள் ஏழெட்டுக் குழுவாக அமைவர். தாங்கள் கேட்ட சொற்பொழிவுகளை ஆராய்தலும், அவற்றைப்பற்றிய குறிப்புகளை எழுதி வைத்துக்கொண்டு சிந்தித்தலும், அவற்றைப்பற்றித் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிடுதலும் நிறைந்த அம்சங்களாகும். அவர்களை நன்முறையில் வழி காட்டச் சிறந்த பேராசிரியர்கள் கூடவே வருவர். இந்த ஒரு மாத காலத்தில் அந்த மாணவர்கள் பல கலைத் துறைகளிலேயும் வல்லமை பெற்று விளங்குவர். தேர்ச்சியடைந்து திரும்பும்போது பகவான் 'பாட்டூ'க்களை அளித்து அவர்களைத் தம் நல்லாசியோடு அனுப்புவார்: பகவானின் வள்ளல் தன்மையைச் சொல்லி முடியாது.

பகவானின் ஆணியின்படி ஒரு சமயம் பேசியபோது, அதிகாலை நாலரை மணிக்கு 'ஓம்' என்ற பிரணவத்தை 11 முறை உரக்கச் சொல்லி, அதை அடிப்படையாகக் கொண்டு பேசினேன்.

''பன்னிரண்டு எழுத்துக்களைக் கொண்ட மந்திரம், 'ஓம் பகவதே வாசுதேவாய நமः' என்பது. இதை உச்சரிக்க நேரமில்லை என்றால் எட்டே எழுத்துகள்தான் உள்ளன, 'ஓம் நமோ நாராயணய' என்பதைக் கூறலாம். இதையும் விட ஆறே எழுத்து மந்திரம் 'குமாராய நமः' என்பது. ஐந்தே எழுத்து மந்திரம் 'நம சிவாய!' என்பது. மூன்றெழுத்துத் திருநாமம், கோவிந்தா என்பது; இரண்டெழுத்துத் திருநாமம் மிகப் புனிதமானது, 'ராம' என்பது. இதையும் உச்சரிக்க நேரம் இல்லை என்றால் ஒரே அட்சரம் பிரணவம், ஓம் என்பது. இந்த ஒரெழுத்து ஒலியைச் சதா உச்சரித்துப் பயன் பெறுங்கள்.''

அந்தக் கல்லூரி மாணவர்கள் விரிவான இந்தப் பேச்சைக் கேட்டு மகிழ்ந்தனர்;

ஆடாமல் ஆசையாமல் அவர்கள் மேற்கொள்ளும் கட்டுப்பாடு மெய்சிலிர்க்க வைக்கும். இது பாபா ஒருவரால் முடியுமே யன்றி வேறெவரால் முடியும் நரத்தமோ? இத்தகைய கல்லூரியில் பயிலும் மாணவர்களும், பணி செய்யும் ஆசிரியர்களும் எவ்வளவோ பாக்கியம் செய்தவர்கள். பகவான் நடத்தும் கல்வி ஸ்தாபனங்களின் பெருமையை யாராலும் அளவிட்டுச் சொல்ல முடியாது.

புட்டபர்த்தியில் சத்திய சாயியின் அருளால், அவரே வரை படம் தயாரித்துக் கூறியபடி ப்ரஸாந்தி நிலையம் என்ற பிரம்மாண்டமான கட்டடம் பக்தர்களுக்கெல்லாம் புகலிடமாக விளங்குகிறது.

வெளியிடும் புத்தகங்கள்:

பல பிரகரங்களை இந்த 'டிரஸ்ட்' வெளியிட்டுள்ளது. அவற்றுள் ராமகதாரஸவாஹினி, தோவாஹினி, உபநிஷத்வாஹினி ஆகியவை பிறந்தவை. மற்றும், 'நீலகிரியில் நிமலக் கருத்துரைகள்' போன்றவை தமிழில் குறிப்பிடத் தக்கவை. அனுதினுக்கும் மனோகரமான சாரதி' என்ற தெய்விக மாதப் பத்திரிகையின் மூலம் ஆன்மிகத் தத்துவங்களும் இறையொளியும், இன்னும் நல்வாழ்வுக்கு உரித்தான பல அம்சங்களும், ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம், தமிழ் முதலிய மொழிகளில் வெளிவருகின்றது. இதன் மூலம் ஸநாதன தர்மத்தைப் பகவான் பரப்பி வருகிறார்.


கடையாக இத்தனை நற்பணிகளுக்கெல்லாம் ஒரு தனிக் கேந்திரம் தேவை என்று, கருதி, 'அடையாறு கேட்' ரோடில் 'சந்தரம்' என்ற அதி சுந்தரமான மாளிகை பாபாவின் ஆயிரம் எழும்பியுள்ளது: அதன் முகப்புத் தோற்றமே தெய்வப் பொலிவுடையது. உள்ளே சென்று பிரார்த்தனைக் கூடத்தில் அமர்ந்தால் நாத்திகனையும் இறையுணர்வு கொள்ளச் செய்யும். அங்குள்ள பாபாவின் திருவுருவப் படம் தன்னொளி விரிந்து நம் பாபத்தைப் போக்கு வதைக் காணலாம். அங்கு ஆன்மிகச் சொற்பொழிவுகள், பக்திப் பாடல்கள், நாம சங்கீர்த்தனங்கள், சேவா தளத் தொண்டர்களுக்கு அப்போதைக்கப்போது நேர்முகமாக அளிக்கும் பயிற்சிகள் போன்ற பல விஷயங்கள் நடைபெறுகின்றன.



உபநயனம் நடந்த பிரம்மசாரிகளுக்கு ஆசி வழங்குகிறார்.



பாதச் சுவடுகள்



உறுதி



■ காரணம், இந்தியா விலேமுதன் முதல் விட்ரஸ் எனமல் செய்யப்பட்ட வாட்டர் ஹீட்டர். இத்தொழில் நுட்பம் அமெரிக்காவிலே 90% வாட்டர் ஹீட்டர்களில் உபயோகமாகிறது. இது உலோக அரித்தலைக் குறைக்கிறது.

■ காரணம், நீடித்து உழைக்கும் மின்சார ஹீட்டர் கொண்டது, மிதமான மின்சார உபயோகம் கொண்டது, தரமான தயாரிப்பு —பத்திரமானது.

மார்க்கெட்டிலுள்ள எந்த வாட்டர் ஹீட்டரோடும் ஒப்பிடுங்கள். இது ஈடிணையற்றதே!

புதிய வீலன்*
வாட்டர் ஹீட்டர்
வழங்குவோர் வோல்டாஸ்

* விட்ரலினின் புதிய பெயர்



Marketed by
VOLTAS LIMITED
Appliances Division.

Bombay • Calcutta • New Delhi • Madras • Bangalore • Lucknow • Jamshedpur
Ahmedabad • Secunderabad • Patna • Cochin • Kanpur • Jaipur • Chandigarh • Gauhati.

CASV-412R-182 TAM



பிறந்தநாள்

-ஹேமா ஆனந்ததீர்த்தன்-

இன்று என் பிறந்த நாள்:

ஐம்பத்தெட்டு முடிந்து ஐம்பத் தொன்பது பிறக்கிறது.

மற்றப் பிறந்த நாட்களைப் போல அல்லாமல் இந்தப் பிறந்த நாளுக்கு ஒரு தனிச் சிறப்பு. நேற்றிரேடு நான் வேலையிலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டு விட்டேன். இன்றிலிருந்து நான் ஒரு சுதந்தரப் பறவை.

என்றைக்குமே என் பிறந்த நாளை விசேஷமாகக் கொண்டாடியதில்லை. என் மகிவி வினயா தான் ஞாபக மாக இதைக் கொண்டாடுவாள்.

வடை பாயசத்தோடு கூடிய விருந்துச் சாப்பாடு தயாரிப்பாள். விஷ்ணு சகஸ்ரநாமமும், லட்சுமி தோத்திரங்களும் என்னைப் படிக்கச் செய்வாள். கோவிலுக்கு இருவரும் போய் அர்ச்சனை செய்து வருவோம். மாலையில் ஏதாவது சினிமா, நாடகம் என்று போவோம். இரவு மகிழ்ச்சி யாகக் கழிய வேண்டும்.

இது தான் அவள் என் பிறந்த நாளைக் கொண்டாடும் முறை:

காலையில் எழுந்து காலைக் கடன் களை முடித்துக் கொண்டு, காபி சாப்பிட்டு விட்டு வழக்கம் போல வீதிப் பக்க வராந்தாவுக்கு வந்து சாய்வு நாற்காலியில் அமர்ந்து ஹிந்துவைப் படிக்கத் தொடங்கு கிறேன்.

அப்படிப் புரட்டியபோது ஒரு தலைப்பு என் கவனத்தைக் கவர்கிறது:

பொள்ளாச்சியில் நடந்த சம்பவம் அது:

சாமியப்பன் (வயது 28) என்னும் கைத்தறி நெசவாளர், பழனியப்பன் (வயது 24) என்ற தம் தம்பியை யும் சின்னம்மா (வயது 22) என்ற தம் மனைவியையும் கடப்பாரை யால் தாக்கிக் கொன்று விட்டார். அவ்விருவருக்கும் தகாத உடனுறவு இருந்ததாகச் சந்தேகப்பட்டுச் சாமி யப்பன் இந்தக் கொலையைச் செய்த தாகக் கூறி, அவரே போலீஸில் சரண டைந்து விட்டார். சாமியப்பனுக்கும் சின்னம்மாவுக்கும் கல்யாணமாகி இந்து வருடங்கள் ஆகியிருந்தன. குழந்தைகள் இல்லை. பழனியப்பன் பிரம்மசாரியாக இருந்தார்.

சே, பிறந்த நாளுக்கு அதுவுமாக் காலையில் எழுந்திருந்ததும் இந்த மாதிரி செய்தியாக் கண்ணில் பட வேண்டும்?

ஒரு பெண் தவருன வழியில் நடந்து விட்டாள் என்பதை விட, ஓர் ஆண் தனக்கு உரிமையில்லாத ஒரு பெண்ணைக் கெடுத்து அவள் வாழ்வையும் குலைத்து விட்டான் என்பதை விட ஒரு தம்பி அண்ணனுக் குத் துரோகம் செய்து விட்ட தையே என்னுல் பொறுக்க முடிய வில்லே.

இந்த உடன் பிறப்புகளின் இந் நிலே கண்டு அவர்களேப் பெற்றவர் களின் உள்ளங்கள் எப்படித் துடிக் கும் என்பதை எண்ணியபோது, நான் அந்தத் தகப்னுரின் நிலே யில் இருப்பது போல உணர்வது உடலும் உள்ளமும் நடுங்கின.

பேப்பரில் தலேயங்கத்தைப் படிக்க லாம் என்று தொடங்கி இரண்டு வரிகள் படிக்கிறேன்:

"நமஸ்காரம்: என்ன விசேஷம் பேப்பர்?" என்ற குரல்.

தலேயைத் தூக்கிப் பார்க்க வேண் டிய தேவையே இல்லே.

குரலிலிருந்தே பேசியவர் நடே சன் என்பது தெரிகிறது:

"வாங்கோ. ஒரு விசேஷமும் காணேம். பேப்பர் வாங்கறதையே நிறுத்திடலாமான்னு தோணறது" என்று அவரை வரவேற்கிறேன்.

நடேசன், கம்பிக் கதவின் கொக் கியைக் கம்பிகளிடையே கையை விட்டுத் திறந்து கொண்டு உள்ளே நுழைகிறார். எனக்கு அருகில் இருந்த மற்றொரு நாற்காலியில் உட்கார்ந்து கொள்கிறார்.

"பேப்பரில் விசேஷம் இருக்கட்டும்: உனில் என்ன விசேஷம்? அதைச் சொல்லுங்கோ" என்று நடேசனைக் கேட்கிறேன்.

"உனர் விசேஷத்தைவிட எங்க வீட்டு விசேஷந் தான் பெரிசா இருக்கு இப்போ" என்று அலுத்துக் கொள்கிறார்.

வீட்டு என்கிற வார்த்தையில் அவர் கொடுக்கிற அசாதாரணமான அழுத்தத்திலிருந்தே அவர் சொல்லப் போவது விசேஷமில்லேயென்றும், வினைந் தான் என்றும் தெரிகிறது:

"என் என்ன ஆச்சு?"

"ஆறது என்ன? நம்ம பேரப் பசங்களோட சண்டை தான். நாளுக்கு நாள் அதிகமாயிண்டே இருக்கே ஒழிய குறையறதாக் காணேம். எங்கேயாவது ஒடிப் போயிடலாமான்னு தோணறது."

நடேசன் எங்கள் காரியாலயத் தில் வேலே பார்த்து எனக்கு இரண்டு வருஷங்களுக்கு முன்பாகவே ரிடையர் ஆனர்.

அவருடைய பையனுக்குப் போபா லில் ஸ்டேட் பாங்கில் பெரிய வேலே. அவனும், அவன் மனேவியும் இரண்டு வயதான் கைக்குழந்தையும் மட்டுமே போபாலில் இருந்தனர். பதினஞ்சு வயதும் பதினஞ்சு வயதுமான பெரிய பையன்கள் இரண்டு பேரை யும் படிப்பு கெட்டுப் போகக் கூடாது என்பதற்காகத் தாத்தா பாதுகாப்பில் விட்டிருந்தார்கள்.

பையன்கள் இரண்டு பேரும் மகா முரட்டர்கள். முன் கோபிகள். எப் போதும் சண்டைதான். கை கலப் பும் அடிதடியுந்தான். நடேசன் வீட்டில் இருந்தால் கொஞ்சம் அமைதியாயிருப்பார்கள்: நடேசனின் மனேவி, இழவி பாவம் எப்படிச் சமாளிப்பாள்? "ஏண்டா இப் படிக் கௌரவ பாண்டவா மாதிரி அடிச்சுக்கறீங்க? என் கண்ணெநிரே இந்தக் கண்ருவியை யெல்லாம் பார்க்க வேண்டியிருக்கே. ரெண்டு பேரும் அடுத்த ரெயில்லேயே போபாலுக்குப் போய்த் தொலே யுங்க" என்று கதறுவாள்: ஆனல் அண்ணன் தம்பிகளின் சண்டை, ஒருவன் தலேமுடி. இன் னெருவன் கையில் கனிசமாக வரும் வரையிலோ ஒருவனின் முகத்தில் ரத்தக்கீறல்களும் இன்னெருவனின் முழங்காலில் சொப்பம் ஏற்படும் வரையிலோ நிற்காது.

இதையெல்லாம் நடேசன் அவ்வப் பொழுது வந்து என்னிடம் சொல்லி வருத்தப்படுவார்: நான் சமாதானம் சொல்லி அனுப்புவேன்:

"விஷயத்தைச் சொல்லுமே" என் றேன்:

நடேசன் சொன்னதைக் கேட்டு நான் அதிர்ந்தே போகிறேன்:

ஏதோ உப்புப் பெறுத விஷயத் துக்கு நேற்றுக் காலேயில் இரண்டு பையன்களுக்கும் சண்டை ஏற்பட்டு வசவுகள், திட்டுகள், கை கலப்பு எல்லாம் வழக்கம் போல நடந்திருக் கின்றன. ஆனல் வழக்கம் போல முடியாமல் பெரியவன் வீட்டிலிருந்த பெரிய வெட்டுக் கத்தியை எடுத்துக்

கொண்டு தம்பியைக் கொலை செய்து விடுவேன் என்று ஆத்திரத்தோடு பாய்ந்திருக்கிறான். பையன்களுடைய பாட்டி இரண்டு பேருக்கும் இடையில் புகுந்து தடுக்க முயன்று அவள் தோளில் பெரிய வெட்டு விழுந்துவிட்டதாம். ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக் கொண்டு போய் வைத்தியம் செய்வித்துக் கட்டுப் போட்டு அழைத்து, வந்தார். நடேசன் எங்கோ பாங்குக்குப் போய் விட்டு வருவதற்குள் இவ்வளவு அமளியாம்.

''இந்தக் கொலைகாரப் பசங்களை வெச்சண்டு நான் எப்படிக் காலம் தள்றதுனு சொல்லுங்கோ. அண்ணன் தம்பிங்கற பாசம் கொஞ்சமாவது இருக்காதோ? எவ்விக்கு என்ன விபத்து நடக்குமோன்னு பயித்துல நெருப்பைக் கட்டிண்டிருக்க வேண்டியிருக்கே. ராட்சஸ ஜன்மங்களா வந்து பிறந்திருக்காங்களே'' என்று கண் கலங்குகிறார் நடேசன்.

''அண்ணன் தம்பின்னு பாச மில்லாமப் போயிடாது. என்னவோ வயசுக் கோளாறு. முன் கோபம் ஜாஸ்தியாயிருக்கு. பெரியவாளானப் புறம் பொறுப்பு வந்துடும். கவலப் படாதிங்கோ'' என்று அவருக்கு ஆறுதல் சொல்கிறேன்.

ஆனால் எனக்கே என் வார்த்தைகளில் நம்பிக்கையில்லை. விதியும் பயிர் முனையிலேன்னு சொல்வார்களே, அந்த மாதிரி இந்தப் பையன்கள் பெரியவர்களான பிறகும் சொத்து, பாகம் என்று ஒருவரை யொருவர் இப்போது கையால் அடித்துக் கொள்வது போல் இல்லாவிட்டாலும் வக்கீலை வைத்துக் கோர்ட்டுகள் மூலம் அடித்துக் கொள்வார்கள் என்றே தோன்றியது.

''என்னமோ நீங்க சொல்றேள். எனக்கு நம்பிக்கையில்லே. ஊர்ல உலகத்துல எல்லார் வீட்லயும் அண்ணன் தம்பிகள் இப்படியா அடிச்சுக் கறுங்க? எவ்வளவு ஒத்துமையாயிருக்காங்க? எங்களுக்குக் குடுத்து வெச்சது அவ்வளவு தான்'' என்று நொந்து கொள்கிறார் நடேசன்.

என் மனம் உடனே என் பையன் கதிர் சுற்றி வட்டமடுகிறது.

எனக்கும் இரண்டே பையன்கள். பெரியவன் பெங்களூரில் ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் தலைமைக் காரியாலத்தில் அதிகாரியாக இருக்கிறான். மூப்பத்திரண்டு வயதாகிறது. நான்கு குழந்தைகள். அதோடு கையும் தாராளம். எனவே கிட்டத்தட்ட இரண்டாயிரம் ரூபாய்க்கு மேல் சம்பளம் வந்தாலும் எப்போதும் பணக் கஷ்டந்தான்.

இரண்டாமவனும் இன்னொரு வங்கியில் சென்ற தராபாத்தில் சாதாரணச் சிப்பந்தியாக இருக்கிறான். இருபத்திரண்டு வயதாகிறது. இன்னும் கல்யாணமாகவில்லே. இவன் அண்ணனைப் போல இல்லாமல் பணம் காசு விஷயத்தில் கெட்டி. அநாவசியமாக ஒரு பைசா செலவழிக்க மாட்டான்.

இவர்கள் இருவரும் சிறுவர்களாக இருந்தபோது இருவருக்குமிடையே பத்து வயது வித்தியாசம் இருந்த போதிலும் எப்போதும் ஒட்டிக் கொண்டே இருப்பார்கள். எங்கே போனாலும் ஒன்றுகவே போவார்கள்.

ஒரு நாள் இரண்டு பேரும் நாகேசுவர ராவ் பூங்காவுக்குப் போயிருக்கிறார்கள். திரும்பி வரும்போது சின்னவன், 'கால் வலிக்கிறது, நடக்க முடியவில்லே என்று' சொல்லியிருக்கிறான். அப்போது அவனுக்கு ஆறு வயசு. பதினாறு வயசான பெரியவன் உடனே அவனை முதுகின் மேல் தூக்கி வைத்துக் கொண்டு அங்கிருந்து ஆடம் தெருவிலுள்ள எங்கள் வீடு வரை நடந்தே வந்திருக்கிறான்.

ஒருவரை விட்டு இன்னொருவர் டியானே, சாப்பாடோ சாப்பிடமாட்டார்கள்.

இவனுக்கு வேறு சிநேகிதர்கள், அவனுக்கு வேறு சிநேகிதர்கள் என்று இடையாது. இவன் நேகிதர்கள் எல்லாம் அவனுக்கும் சிநேகிதர்கள். அவன் நண்பர்களெல்லாம் இவனுக்கும் நண்பர்கள்.

சின்னவனுக்குச் சென்ற ராபாதில் வேலை கிடைத்தபோது பதினெட்டு வயது தான். அதுவரையில் தனியாக வெளியூர்களுக்கு எங்கும் போனதோ தங்கியதோ கிடையாது. எனவே அவனுக்குச் சில நாட்களுக்கு காவது ஒரு துணை வேண்டியிருந்தது. அப்போது பெரியவன் சென்னையிலே இருந்தான். அவன் பத்து நாள் லீவு போட்டு விட்டு தம்பியை அழைத்துக் கொண்டு போய், ஒரு நல்ல அறையை வாடகைக்கும் பிடித்து அவனே இருக்கச் செய்து, அவனுக்கு வேண்டிய சௌகரியமெல்லாம் செய்து கொடுத்து விட்டுத் திரும்பி வந்தான்.

பெரியவன் மனைவிக்கும் தம்பனனின் மேல் சகோதர விசுவாசம். அவனுக்கும் அண்ணியிடம் மரியாதை, அன்பு.

பெரியவனின் குழந்தைகளுக்கும் சின்னவன் மீது கொள்ளைப் பிரியம். சித்தப்பா, சித்தப்பா என்று அவனோடு ஒட்டிக் கொள்ளும். அவனும் அவர்களின் மேல் அபரிமிதமாக அன்பை வாரிச் சொரிந்தான்.

சின்னவனுக்குக் கல்யாணமாஞல் அவனுக்கு வந்து வாய்ப்பவள் களங்க மற்ற இந்தச் சகோதர பாசத்தில் விஷத்தைக் கலக்காதவளாக இருக்க வேண்டுமே என்கிற கவலை மட்டும் எனக்கு இருக்கிறது.

நடேசன் சிறிது நேரம் பேசி விட்டுப் போய்விட்டார்.

நான் சாவகாசமாகப் பேப்பரைப் படித்து முடித்து விட்டு, ஷேவிங், குளியல் முதலியவற்றை முடித்துக் கொள்கிறேன்.

பிறகு வினயாவும் நானும் வள்ளீசுவரர் கோவிலுக்கும், கபாலி கோவி



லுக்கும் போய் அர்ச்சனையை முடித்துக்கொண்டு வீடு திரும்புகிறோம்.

நடேசனின் பேரப் பிள்ளைகளைப் பற்றிய சம்பவங்களை நான் வினயாவுக்குச் சொல்லுகிறேன்.

''எதுக்கும் குடுத்து வைச்சிருக்கணும்'' என்று அவள் ஒரே வாக்கியத்தில் பதில் அளிக்கிறாள்.

வீட்டுக்கு வந்து இரண்டு பேரும் சாப்பிட உட்காருகிறோம்.

வினயா அருமையான விருந்துச் சாப்பாடு தயார் பண்ணியிருக்கிறாள். பால் பாயசம், குஜராத் அப்பளாம், வடை, மாம்பழச் பச்சடி என்று ஒவ்வோர் அயிட்டமும் தேவாமிர்தமாய் இருக்கிறது.

''வினி, எல்லாம் நல்லாத் தான் இருக்கு. ஆனாலும் எனக்கு ஒரு சின்ன ஆசை.''

''என்ன?''

''என்னோட பிறந்த நாள் அன்விக்கு நம்ம பசங்களைக்கு ஏதாவது பரிசு அனுப்பனும்னு ஆசை. அது அவங்களுக்கா தோணல்லே. நாமா எப்படிச் சொல்றது?''

''நல்லாருக்கு, பசங்க குடுத்தா தானு? சாயங்காலம் வாங்கோ. ரெண்டு பேருமாக் கடைக்குப் போவோம். நான் உங்களுக்குப் பரிசு கொடுக்கிறேன்'' என்ருள் வினயா.

''போஸ்ட்'' என்ற குரல் வாசலில் கேட்டது. போய்க் கடிதத்தை எடுத்து வருகிறேன்.

நான் கவரைக் கிழிக்கும் போதே, ''எங்கேருந்து? யார் எழுதியிருக்கா?'' என்று வினயா பறக்கிறாள்.

கடிதம் சின்னப் பையன் முகந்த விடமிருந்து வந்திருக்கிறது என் பதைக் கையெழுத்தினின்றே தெரிந்து கொள்கிறேன்.

கடிதத்தோடு ஒரு பாங்க் ட்ராப்டும் இருக்கிறது. அதைப் பிரித்துப் பார்க்கிறேன். மூவாயிரம் ரூபாய்க்கு டிராப்டு. ஆனல் என் பெயருக்கல்ல. தேவராஜன் பெயருக்கு. தேவராஜன் என் மூத்த பையன்.

ஒன்றும் புரியாமல் கடிதத்தைப் பிரித்துப் பார்க்கிறேன். அதுவும் தம்பி அண்ணனுக்கு எழுதிய கடிதந் தான்.

''என்ன கடுதாசி? 'செக்' இருக்காப்பலெ இருக்கு?'' வினயாவுக்கு அவசரம்.

நான் சிரிக்கிறேன்.

''உன் சின்னப் பையன் எழுதியிருக்கான். ஆனு நமக்கல்ல. அவனோட அண்ணனுக்கு எழுதி அதைத் தவறுதலா இங்கே போஸ்ட் பண்ணியிருக்கான். நமக்கு எழுதின லெட்டரை அண்ணனுக்குப் போஸ்ட் பண்ணியிருப்பான் போனிருக்கு.''

''சரி, என்ன சமாசாரம்னுவது தெரிஞ்சுக்கலாம், படிக்கோ. அப் புறம் பெங்களூருக்கு அனுப்பலாம்.''

நான் கடிதத்தைப் படிக்கிறேன்.

'அன்புள்ள அண்ணு,

'உன் கடிதம் கிடைத்தது. என்விடம் பணம் கேட்பதற்கு நீ இவ்வளவு தயங்குவதையும், திரும்பித் தந்து விடுவதாகத் திரும்பித் திரும்பி எழுதியிருப்பதையும் பார்க்கிற போது மனத்துக்குக் கஷ்டமாயிருக்கிறது. என்னைக் கேட்க உனக்கு உரிமை இருக்கிறது. கொடுக்க வேண்டியதும் என் கடமை. உரிமை - கடமை இவை ஒருபுறமிருக்க அன்பு, பாசம், பந்தம் இவற்றுல் பிணைக்கப்பட்டுள்ள நம்மிடையே இந்தத் தயக்கம், கூச்சம் இவையெல் லாம் இருக்கக் கூடாது என்று நினைக்கிறேன். நீ கேட்டபடி இத்துடன் ரூ 3000க்கு டிராப்ட் அனுப்பியிருக்கிறேன். இதைத் திருப்பித் தர வேண்டும் என்ற எண்ணத்தையே விட்டு விடு. நீ கேட்கிறபோது என்னல் கொடுக்க முடிந்ததே எனக்குப் பெரிய சந்தோஷம். சின்ன வயது முதல் அண்ணியும், குழந்தைகளும் என் மேல் காட்டுகிற பாசத்துக்கு விலே நிர்ணயிக்க முடியுமா? முகந்தன்.'

கடிதத்தைப் படித்து முடித்ததும் என் கண்களில் நீர் தளும்புவதை உணர்கிறேன்.

''வினி, பிறந்த நாள் பரிசு வர்லேன்னு குழந்தைத்தனமா ஏங்கினேனே? இதைக் காட்டினும் வேறு என்ன பரிசு நமக்கு வேணும்? அண்ண-தம்பி கடைசி வரையிலும் இப்படியே ஒட்டுதலா இருந்து நமக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கட்டும். அதுவே பெரிய பிறந்த நாள் பரிசு'' என்கிறேன்.

''நீங்க கவியே படாதீங்கோ. உங்க பசங்க வேற எப்படி இருப்பா?'' என்று உங்களில் ஓர் அழுத்தத்தைக் கொடுத்து, அப்போதும் என்னையே உயர்த்தி, அதிலேயே மகிழ்ந்தாள், தன்னையே என்னில் கரைத்துக் கொண்டுவிட்ட அந்த உத்தமி. ※

உலகப் புகழ்பெற்ற ஸ்ரீ கணேஷ் ராம்ஸ் 'திடீர்'-திடீரெக்ஸ்' உணவுப் பொருள்கள் பெண்மணிகளுக்கு - முக்கியமாக ஆபீஸ் செல்பவர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்!

777 (REGD.)



SRI GANESHRAM & CO., 193, Thambu Chetty St., Madras-1.

ஐஸ்கிரீம்

விற்பனையாளர்கள் கவனத்திற்கு

ஐஸ்கிரீம் பால், ரோஸ்-மில்க்

கொழுப்புச் சத்து, சர்க்கரை, கலர் யாவும்

உணவுகலப்பட தடைச் சட்ட விதிதங்களில் இருக்கிறதா என்று சோதனை செய்து பாருங்கள்,

தந்தி:
'DHIDEEREX'
'COCHUTNI'



SRI GANESHRAMS 3-7 (REGD.)

ஸ்ரீ கணேஷ்ராம்ஸ் அனலிடிகல் லாபரேடரீஸ், 197, தம்பு செட்டி தெரு, சென்னை-600001. போன்: 20402&26393



This Diwali give The Gift that always clicks!

Gifting the Agfa Camera is another way of saying "Smile please!" Agfa Cameras are available from Rs. 99/- upwards. There is a camera to suit every pocket. These cameras are made to international standards and are available from over 1300 AGIL dealers all over India.

Click III



Isoly - II



GIVE A SMILE. GET A SMILE.

1st for everything in photographics

Agfa AGIL

AGFA-GEVAERT INDIA LIMITED

Registered Office: Merchant Chamber, 41 New Marine Lines, Bombay 400020 • Branches: Bombay New Delhi • Calcutta • Madras • ® Registered Trademarks of Agfa-Gevaert, Antwerp/Leverkusen.

SIMOES/AGIL/BB/81.

டிஐஐசி

வைப்புத் தொகைகளை
கீழ்க்கண்டவாறு
ஏற்கிறது/புதுப்பிக்கிறது


அசல் மற்றும் வட்டி,
முழுதும் நிபந்தனையின்றி
தமிழ்நாடு அரசாங்கத்தால்
உத்திரவாதமளிக்கப்படுகிறது.

காலம்	வட்டி விகிதம் (ஒரு ஆண்டுக்கு)
5 ஆண்டுகளுக்கு மேல்	10%
3 ஆண்டுகளுக்கு மேல் மற்றும் 5 ஆண்டுகள் (உட்பட) வரை	8½%
ஒரு ஆண்டு மற்றும் அதற்குமேல் மற்றும் 3 ஆண்டுகள் (உட்பட) வரை	7%

மற்ற விவரங்களுக்கு
தயவு செய்து
தொடர்பு கொள்ளவும்

நிர்வாக இயக்குநர்
தமிழ்நாடு
தொழில் முதலீட்டுக் கழகம்
'அருள் மனை'
27. ஓயிட்ஸ் சாலை, சென்னை-600 014
தொலைபேசி எண்: 83078
டெலக்ஸ்: MIIC-7164
தந்தி: "MINDVEST"
DIPR

அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்!



* மானோபிளாக் பம்பு
* பெல்ட் பம்பு
* டொமெஸ்டிக் பம்பு
* ஆயில் இன்ஜின் பம்பு
* மோட்டார் பம்பு
* மின்சார மோட்டார்
* கரும்பு ஆலை
* மின்சங்கு (SIREN)
* ஜெட் பம்பு

86 வருடங்களுக்கு மேலாக
நம்பகமான சேவை

நீடித்த உழைப்புக்கும், சிறந்த சேவைக்கும்
"சுப்பையா" பம்புகளையும், மோட்டார்களையும்
வாங்கிப் பயனடையுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

சுப்பையா பவுண்டரி

பாப்பநாயக்கன்பாளையம்
கோயமுத்தூர்-641037.

தந்தி: 'பவுண்டரி' ★ போன்: 22935, 35390
Subbiah Foundry, Coimbatore-641037.

வியாபார விசாரணைகளை வரவேற்கிறோம்

SF/OSR



[மறு நேரம்: அச்சுதன் தம் முன்னிருந்த தேற்றுண்டித் தட்டைக் காலி செய்து விட்டுக் காபி டம்ளரைப் பார்த்துத் திருக்கிறார். அவர் மனைவி பார்வதி பின்சுட்டில் இருக்கிறார்.]

அச்சுதன்: பாரு! பாரு!

பார்வதி: (உள்ளிருந்தே) எவ்வளவு தரம் சொல்றது? காபி வைச்சிருக்கேன். குடிச்சுட்டுக் கொஞ்ச நேரம் சும்மா இருங்க.

அச்சு: குச்சுட்டுச் சும்மா இருப்பதாமே! ஒஹோ! இப்போ நான் குடிக்காமலே கூத்தாடப் போறேன். (இறைந்து) ஏய் பார்வதி! பார்வதி!

பா: (உள்ளிருந்தே) காபிக்குச் சக்கரை வேணுமா? வீட்டிலேயே அவ்வளவுதான் ஸ்டாக். டப்பா காலி!

அச்சு: ஏய் பாடாவதி! பிரமாதமாக் காபியை வச்சிருக்கிற மாதிரி, சக்கரைக்குக் கணக்குச் சொல்றியே! அஸ்திவாரமே இல்லே, அடுக்கு மாடி வீடு கட்டறே! ஒரு நிமிஷம் எட்டிப் பார்த்துட்டு அப்புறம் தலைமறைவாப் போய்த் தொலே.

பார்: (வந்து கொண்டே) பல விஷயங்களுக்கு அஸ்திவாரமே கிடையாதுன்னுதான் சொல்ல வேண்டியிருக்கு. ஒரு நல்ல நாடகம் கேட்கிறபோது நீங்க இங்கேயிருந்து கூப்பாடு போட்டுக் கலாட்டா பண்றீங்க. காபி தான் இதோ இருக்கே.

அச்சு: வெறும் டவரா டம்ளர்! உன் நாடகம் கேட்கிற பரபரப்பிலே, காலி டவரா டம்ளரை வச்சிருக்கே. நல்ல வேளே, டிபன் இருந்தது.

பார்: என்னது? நான் காபி எடுத்துவைக்கலியா?

அச்சு: அந்த நேரத்தில் பக்கத்துப் போர்ஷனிலே பேச்சுக் கிளம்பியிருக்கு. நீயே காபியைக் குடிச்சுட்டுக் கதவு திடுக்கிலே காதை ஒட்டிக் கொண்டு நின்னுருக்கே அப்படின்னு டவரா டம்ளரை ஞாபகமாக்கொண்டு வந்து வைத்திருக்கியே?

பா: ஒரு வேளை ஞாபகமறதியா நீங்களே டிபன் சாப்பிடறதுக்கு முன்னாலே காபியைக் குடிச்சுடு..

அச்சு: ஏய் பாடாவதி! ஏட்டிலே இருப்பாயே? அந்த டவரா டம்ளரிலே ஈரப் பசை இருக்கா, பாரு! இப்போ நீ கலந்த காபியை நீயும் குடிக்கலேன்னு, அது எங்கே யோ காணாமல் போயிருக்கு. போலீசுக்குப் புகார் பண்ணலாமா?

பார்: இல்லே! இல்லே! நினைவு வந்துடுத்து! பிளாஸ்கிலே கூற்றி மூடிவைச்சிருக்கேன். அந்த நேரத்திலே பக்கத்துப் போர்ஷன் நாடகம் ஆரம்பமாயிருக்கு. அவசரம் அவசரமாக் காலி டவரா டம்ளரை வச்சுட்டுப் போயிட்டேன்.

அச்சு: அப்பாடா! காபி இருக்கு! கொண்டுவா! அடுத்த வீட்டு வம்புன்னு அவ்வளவு சுவாரசியம்! தன் வீட்டுக் காரியங்களை மறந்து கூட அதை ரசிக்கணும்! இப்படித்தான் நம்ப வீட்டுவம்பை இன்னொருத்தன் கவனிப்பான்.

பார்: உங்க பேரு மிஸ்டர் வேதாந்தம் இல்லியே?

(பார்வதி உள்ளே போய்ப் பிளாஸ்குடன் திரும்புகிறாள்.)

அச்சு: (காபியை ஊற்றிக் குடித்துக் கொண்டே) என் பேரு வேதாந்தமுமில்லே! வம்புதானும் இல்லே! மற்றவர்களோட மெய்ச்சியைக் கண்டு நாம் பரவசப்படலாம், தப்பு இல்லே. மற்றவர்கள் வீழ்ச்சியைக் கண்டு பரவசப்படக் கூடாது, மகா தப்பு!

பார்: குற்றலம் நீர் வீழ்ச்சிதான் எனக்குத் தெரியும். போய்ப் பாத்திருக்கேன்.

அச்சு: ரொம்பச் சந்தோஷம். அந்த ரம்யமான நினைவை மனசில் நிறுத்திக் கொண்டு உன் வேலையைப் பாரு. பக்கத்துப் போர்ஷனிலே என்ன நடக்கிறது என்று கேட்டுக் கொண்டு திக்காதே. அப்போ உன் மனசில கூவம் ஓட ஆரம்பிச்சிடும்.

பார்: போனமாசம், டக்கத்துப் போர்ஷன் கலாவைத் திருச்சியிலே குந்து பெண் பார்த்துட்டுப் போக வந்திருந்தாங்களே..?

அச்சு: நீ விடமாட்டியே! 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற கொள்கைன்னு உனக்கு உன் காதிலே விழந்த வம்பை என் காதிலே திணிக்கும் வரை உனக்கு வேறு வேலே ஓடாதே. சொல்லு! சொல்லு! நான் நிஜமாவே காபியைக் குடித்து விட்டேன் இல்லியா? உனக்கு உபதேசம் பண்றதுலே அதை மறந்துட்டேன்.

பார்: இதோ! டவரா டம்ளரிலே காபிப் பசை இருக்கு. நன்றுகப் பார்த்துக்குங்க. நல்ல ஞாபக மறதி.

அச்சு: ஈயத்தைப் பார்த்து இளித்தாம் பித்தனே! ஏய் காலி டவரா டம்ளர்!

பார்: மட்டம் தட்டியாச்சா? திருப்தியா?

அச்சு: என்னே இதோட விட்டால் எனக்குத் திருப்தி. ஆனு நீ விட மாட்டியே! போன மாதம் கலாவைப் பெண் பார்க்க வந்தார்கள் திருச்சியிலிருந்து..அப்புறம்..

பார்: திருச்சிப் பையன் கூடச் சுமாரா நன்னுவே இருந்தான். டிபன் காபி சாப்பிட்டார்கள். ஏதோ பேரம் கூடப் பேசினார்கள், ஊருக்குப் போய்த் தகவல் கொடுப்பதாகக் கிளம்பினர்கள்.

அச்சு: இப்போ பதினேந்து நாட்களுக்கு முன்னுல் கூட யாரோ ரூரோட் டிலிருந்து வந்தார்கள் போலிருக்கு. என்னிடம் கலாவின் அப்பா தாமோதரன் சொல்லிண்டிருந்தாரே! திருச்சி ஏற்பாடு ஒத்துவரலே என்று நான் நினைத்தேன்.

பார்: அந்தத் தாமோதரன் சுத்த புரட்டுப் பேர்வழி போலிருக்கு.

அச்சு: ஊஹ்! மற்றவர்களைப் பத்தி இப்படி அப்பிராயங்களே உதிர்க்க நமக்கு என்ன உரிமை இருக்கு? என்னைப் பற்றி இப்படி யாராவது சொன்னு உனக்கு எப்படி இருக்கும்?

பார்: நீங்க இப்படியே குறுக்கே குறுக்கே பேசி, நான் சொல்ல வந்ததை மறக்க அடிச்சுட்டீங்க.

அச்சு: அதனுலே நஷ்டம் ஒண்ணும் மில்லே. கும்மா சொல்லு.

பார்: அந்தத் திருச்சிக்காரரிடம், கல்யாணத்துக்கு எல்லாம் தயாரா இருப்பதாகவும், சம்மதம் என்று சொன்னவுடன் முகூர்த்தம் வைத்து

விடலாம் என்றும் அந்த மனிதர் தாமோதரன் அளத்தார்.

அச்சு: நீ கதவிடுக்கு வழியா எல்லாத்தையும் கே ட்டுண்டு மனப்பாடம் பண்ணி யிருப்பே, நான் மறுக்கலே. பெண் பார்க்க வருபவர்களிடம் 'இப்போ கொஞ்சம் பணத் தட்டுப்பாடு. முகூர்த்தத்தை வைத்து விட்டு நாலேந்து இடங்களில் அலேந்து பணத்தைப் புரட்டணும். மலிவு கல்யாண மண்டபமாப் பாக்கணும். கல்யாணம் ஏனோதானோ என்று இருந்தால் கூட நீங்கள் கண்டு கொள்ளக் கூடாது. குறை சொல்லு றிறவர்களேயெல்லாம் முடிந்த வரை ஒதுக்கிவிட்டு மற்றவர்கள் கல்யாணத்துக்கு வந்து சிறப்பிக்கணும்' என்று எந்த மட அப்பனுவது பெண் பார்க்கும் கட்டத்தில் சொல்லுவானு? அவனுடைய சுய கௌரவம் இடம் கொடுக்குமா? அப்புறமாவது கையைப் பிசைந்து கொண்டு நகை, நட்டு, சீர் செனத்திகளுக்கு வாயிதா கேட்பானே தவிர, இந்தக் கட்டத்தி லேயே, எதையாவது சொன்னு கேலே டிஸ்மிஸ் ஆயிடும். அப்புறம் வாயிதா வுக்கு இடமேது?

பார்: நீங்க அந்தத் தாமோதர னுக்கு வக்காலத்து வாங்கியாச்சா?

அச்சு: நான் தாமோதரனுக்கு என்று தனிப்பட்ட முறையில் வக் காலத்து வாங்கல்லே. நடை முறைச் சாத்தியத்துக்கு வக்காலத்து வாங்க றேன். அவ்வளவுதான்! நமக்கும் ஒரு பெண் இருக்கா; இரண்டு வருஷம் கழிச்சாவது நாமும் பஜ்ஜி சொஜ்ஜி பண்ணி, நின்டியனத்திலேருந்து வரானு, நிருவிடமருதூரிலிருந்து வரானு மாப்பிள்ளே என்று காத்து நிக்கணும்.

பார்: என் பெண் ஹேமாவுக்கு என்ன குறை? எல்லாம் டாண் டாண்னு நடக்கும்.

அச்சு: உலகத்திலே எல்லா அப்பா அம்மாக்களும் இப்படித்தான் நீனைக் கறு. டாண் டாண்னு நடக்க லியே! சரி, சரி, மேலே சொல்லு.

பார்: இப்போ அந்தத் திருச்சிக் காரர் சம்மதம் என்று எழுதிட் டார். அந்த டெத்தை எப்படித் தட்டிக் கழிக்கறதுன்னு தாமோதர னுடன் அவன் சம்சாரமும் சலியாலோ சணே நடத்தது.

அச்சு: நீ என்ன சரித்திரத் தொடர் கதைகளே விடாமல் படிக்கிறயா? சலி யாலோசனை அது இது என்று! படிக்க லில்லே என்று சொல்வது பையன் தரப்புக்கு மாத்திரம் கொடுக்கப் படும் உரிமை இல்லே. பெண் வீட் டாருக்கும் உண்டு. பத்து டிடங்களி லிருந்து வந்து டிபன் காபி சாப் பிட்டுட்டுப் போறுங்க; கடைசியிலே தாலி கட்டறது ஒருத்தன் தானே?

பார்: அப்படி ஒன்றும் வேறு டிடம் நிச்சயமாயிட்டதாவும் தெரிய லியே! ஆகவே, சம்பந்தித்து வர டிடத்தை ஒதுக்கறதிலே ஏதோ ரகசியம் இருக்கு.

அச்சு: ஒன்று அவர்கள் சிக்கிரம் கல்யாணத்தை நடத்தச் சொல்லி யிருப்பார்கள்; அல்லது பையனைப் பற்றிப் டிடிக்காத விஷயங்கள் இவர் கள் காதில் விழுந்திருக்கலாம்.

பார்: அந்தப் பொண்ணு யார் பின்னாலாவது சுற்றிக் காதல் கிதல்னுகூடச் சொல்லலாமில்லியா?

அச்சு: வாயைக் கழுவிட்டு வந்து பேச! இந்த மாதிரி வம்புப் பேச் செல்லாம் ஏதாவது விபரீதத்தில் கொண்டு போய் விடும். அந்தப் பொண்ணு ரொம்ப அப்பாவி.

பார்: அப்பாவி வேஷம் போடற வா எல்லாரும் காரியத்தில் ரொம்பக் கெட்டியாக இருப்பார்கள்.

அச்சு: பார்வதி! கண்ணுடி வீட்டி விருந்து கொண்டு வெளியே கல்லே எறியக் கூடாது. அது சரி! ஹேமா எங்கே? ஸ்கூலிலிருந்து வந்துட் டாளா?

பார்: அவள் சிநேகிதகளோடச் சினிமா மாட்டினிக் காட்சிக்குப் போக னுன்னு ஆசைப்பட்டா. அனுப்பி வச்சேன்.

அச்சு: என்ன படமாம்?

பார்: அவளுக்கு ஆயுசு நூறு! அவளே வந்துட்டா! கேளுங்க.

(ஹேமா உள்ளே வருகிறாள்)

அச்சு: யாரு? நம்ப ஹேமாவா வருகிறள்? எதுக்காக உன் புடவை யைக் கட்டிண்டிருக்கா? இப்பத் தானே போன மாதம் நாலு செட் பாவாடை தாவணி வாங்கிக் கிட்டா?

ஹேமா: அப்பா! அது ஒரு 'ஏ' படம். புடவையைக் கட்டிக் கிட்டுப் போனத் தயங்காம உள்ளே போகலாமுன் என் சிநேகிதி யோசனை சொன்னு.

அச்சு: கெட்டுப் போகும் யோசனை கூற ஆயிரம் பேர் இருப்பாங்க.

ஹேமா: போங்கப்பா! என் சிநே கிதங்களாம் நல்லவங்க.

அச்சு: இன்னும் கொஞ்ச நாளிலே ஏ. ஒன்' என்று படங்கள் வருமாம். அதற்கு நாற்பது வயதுக்கு மேல் தான் அனுமதிப்பார்களாம். எங்க அம்மாவோட கொறநாட்டுப் புடவை எல்லாம் இருக்கு. அதைக் கொசுவம் வைத்துக் கட்டிண்டு தயங்காம போகலாம்.

பார்: குழந்தையைப் போய் ஏன் இப்படிக் கிண்டல் பண்ணிப் பேச றீங்க? ஏதோ ஆசைப்பட்டா; விட்டுத் தள்ளுங்க. உள்ளே வா ஹேமா! டிபன் எடுத்து வைச்சுக் கேன்.

[பார்வதியும் ஹேமாவும் உள்ளே போகிறார்கள்.]

காட்சி 2

(இரவு வேளை. தாமோதரம் வசிக் கும் போர்ஷன். தாமோதரம் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார். அவர் மனைவி கல்யாணி பரிமாறிக் கொண்டிருக்கிறள்.)

தாமோதரம்: ஏய்! என்ன இது? எடுத்த எடுப்பிலேயே சோத்தின் தலையிலே மோளைக் கொட்டறே?

ரசம், துவையல் ஒண்ணும் இல்லியா?

கல்யாணி: அடேடே! ரசம் இருக்கே! மறந்துட்டேன்.

தாமோ: மோர் சாதத்தைச் சாப் பிட்டு அப்புறம் ரசம் சாப்பிடு கிறேன்; புது வழக்கம் நம்ப வீட்டில் உருவாகட்டுமே!

கல்: என்னவோ ஞாபகம். கொஞ்சம் நீதானமாச் சாப்பிடுங்க.

தாமோ: நீ நிதானமா, அந்தக் கதவின் பக்கம் நின்று பக்கத்து வீட்டு வம்பைக் கேட்டுட்டு வரு கிறயா? எனக்கு ஆட்சேபம் இல்லே. ஒரு நல்லகாணியை எடுத்து இப்படிப் போடு! நீ வரும் வரை படுத்துக் டிடக்கிறேன்.

கல்: அதுக்குள்ளே அங்கே சூடு தணிந்து போகும்.

தாமோ: உனக்கு ஆறின வம்புப் பிடிக்கதோ?

கல்: (பக்கத்தில் வந்து தணிந்த குரலில்) அன்றைக்கு அந்தப் பொண் ஹேமா புடவை கட்டிண்டு 'ஏ' படம் பார்க்கப் போயிட்டு வந்த தான்னு சொல்லேனே...

தாமோ: இன்னும் இரண்டு வருஷம் போனு புடவை கட்டிக்க வேண்டிய வதானே? சினிமாவைச் சாக்கிட்டுப் புடவை இப்போ னெக்கு?

கல்: விஷயம் அது இல்லே! நெநெறி கூடப் போனதாச் சொன் னுளாம்! இப்போ நிநெறைன..

தாமோ: அசட்டுப் பிசட்டுன்னு எதையாவது உளறுதே. பாவம்! அது சின்னப் பொண்ணு. ஸ்கூல் கோ்ள்.

கல்: ஸ்கூல் கோ்ளாமே! இந்தக் காலத்திலே எலிமெண்டரி ஸ்கூலிலே படிக்கிற எலிக் குஞ்சுகளுக்குக் கூட எல்லாம் தெரிஞ்சிருக்கு. காதல் கிதல் எல்லாம் அப்படியே அத்துப்படி.

தாமோ: அறைஞ்சுப்புடுவேன் அறைஞ்சு! இப்படி ஒட்டுக் கேட்டு ஒண்ணை ஒன்பதாக்கிப் பேசாதே. அன்றைக்கும் அந்தப் பொண் ஹேமா மீதுட்செந்தரம்பாதை பெண்ணேட தான் எலினா வுக்குப் போனுள். பக்கத்துத் தெரு குமாரசாமியோட பொண்.

கல்: உங்களுக்கு ஏன் இப்படிக் கோபம் வர்றது? பெரிய துப்பறியும் நிபுணர் மாதிரி எல்லாத்தையும் விசாரிச்சிருக்கீங்களே!

தாமோ: எனக்கு இப்படி வம்பு பேசினுல் கோபம் வரத்தான் வரும். உனக்கு நாள் முழுதும் அந்தக் கதவுப் பக்கத்திலே போய் நிற்கத்தான் பொழுது சரியா இருக்கு.

கல்: என்னவோ, அந்த முடின கதவு, இருக்கப் போய்க் கொஞ்சம் பொழுது போறது. நீங்களே, வீட்டுக் காரர்கிட்டே சொல்லி அந்தக் கத வுக்குப் பதிலா சுவரே எழுப்பி விடுவீர்கள் போலிருக்கே.

தாமோ: ஓஹோஹோ! வீட்டுச் சொந்தக்காரர் என்றவுடன் தான் நினைவுக்கு வர்றது. அந்த மனிதர் என்னப் பார்க்க வேண்டும் என்று சொல்லி அனுப்பினுராம்.

கல்: எதுக்கு? இப்பத்தானே ஆறு மாசத்துக்கு முன்னுலே வாடகையை உயர்த்தி இருக்கார்? நீங்கதான் ஒருத்தர் இருக்கிங்களே, எதற்கும் சரி சரி என்று தலேயை ஆட்ட!

தாமோ: வீட்டுச் சொந்தக்காரங்க எல்லாம் இப்போ அஞ்சுபடங்கூட வாடகையை உயர்த்துவாங்க, கேட்க முடியுமா?

கல்: முற்றத்திலே சிமெண்ட் பெயர்ந்திருக்கு. பூசுவது பற்றிப் பேசக் கூப்பிட்டிருப்பாரோ?

தாமோ: கவலேயே படாதே! அவர் நிச்சயம் பூசமாட்டார். நமக்குத்

தேவை என்றால் நம் செலவில் பூசிக் கணும். நான் சொல்லியாயிற்று. மெண்ட் பூசிய ஏற்றம் உள்ள வீடாப் பார்த்து நாம் போவதில் அவருக்கு ஆட்சேபனை இல்லையாம். இலையைக் கவனி.

கல்: ஒரு நிமிஷம் இருங்கோ! அந்தப் போர்ஷனிலே ஏதோ சத்தம் மமாயிருக்கு. இதோ வந்துடறேன். (கதவுப் பக்கம் போய் விட்டுச் சட் டென்று திரும்புகிறான்.)

தாமோ: என்ன போன வேகத் திலே வந்துட்டே?

கல்: விஷயம் சுவாரயெமில்லே. ஒ.கே. ஆயில் விற்கிற விலையிலே ஏன் ஒண்ணரைக் லிலோ வாங்கினேன்னு அந்த மனுஷன் குதிக்கிறார். நீங்க நேத்து குதிச்சேள். இன்னிக்கு அவர் ஆடறார்.

(பரிமாறுகிறான்.)

காட்சி 3

[மாலே வேளை. அச்சுதன் காரி யாலயத்திலிருந்து வந்து உட்காரு கிறார். பார்வதி வேகமாக டிபன் தட்டுடன் வருகிறாள்.]

பார்: உங்களுக்கு ஒரு சமா சாரம் தெரியுமோ?

அச்சு: நான் பேப்பர் படிக்கிற தில்லே. கேட்கிறேன், சொல்லு.

பார்: அந்தக் தாமோதரன் வேற வீடு பார்க்கிறாரே. வீட்டு ஓன ரோட தகருரா?

அச்சு: கதவு வழியாக் காதில் விழுந்ததுன்னு சொல்லு. இப்போ கதவு உதவியில்லாமல் நான் சொல்ற தையும் கேட்டுக்கோ. நானும் வேறே வீடு பார்க்கணும்.

பார்: ஏன்? ஏன்? வாடகையை உயர்த்திஞ அட்ஜஸ்ட் பண்ணிண்டு பாக்கலாமே! இந்த வீடு மாதிரி இன்னொரு வீடு இவ்வளவு வசதியா..

அச்சு: இந்தக் கதவை வேண்டு மானு யாருக்கும் தெரியாமல் கழட்டிண்டு வந்துடு. போற இடத்தில் ஃபிக்ஸ் பண்ணிண்டு டிராமா கேட்கலாம். ஆனு ஒரு விஷயம்.

பார்: சொல்லுங்க!

அச்சு: பட்டிணத்து எல்லேக்குள்ளே வீடு கிடைக்காது நம்ம வாடகைக்கு.

பார்: அதுக்காக விருகம்பாக்கத் திலோ, வில்லிவாக்கத்திலோ போய்க் குடியிருக்க முடியுமா?

[ஹேமா வருகிறாள்.]

ஹேமா: என்ன அம்மா சொல்றே? என் சிநேகிதினியெல்லாம் இங்கே விட்டு விட்டு..

அச்சு: குடியிருக்க ஒரு பெரிய காலனியாகவே பார்க்கட்டுமா? எல் லாரையும் கூடவே கூட்டிண்டு போயிடலாம். பார்வதி என்னவோ சுலபமாச் சொல்லிட்டியே! வில்லி வாக்கத்திலேயும் விருகம்பாக்கத்திலே யும் சுலபமா வீடு கிடைக்கிறதா என்னமோ? கூடுவாஞ்சேரியிலோ, காட்டாங்குளத்தூரிலோ கிடைச் சாக் கூடத் தேவலே!

பார்: வீட்டுக்காரர்கிட்டே கொஞ் சம் வாதாடிப் பார்க்கக் கூடாதா?

அச்சு: நான் தாடி வளர்த்துப் பிரார்த்தனை பண்ணினால் கூட நடக் காது: அந்த ஆள், இந்த வீட்டையும், பக்கத்து வீட்டையும் தரை மட்ட மாக்கி விட்டு, நவீன பாணி ஃபிளாட் கட்டி விக்கப் போறாராம். இருபது முப்பது லட்ச ரூபாய் பார்ப்பதை விரும்புவாரா அல்லது இருபது முப் பது ரூபாய் மாத வாடகைக் கூடுதலை விரும்புவாரா? கௌரவமாய்க் காலி செய்யணும். அவ்வளவுதான்.

பார்: தாமோதரன் எங்கே பார்க் கிறேரா பாவம்!

அச்சு: அவருக்கு இரண்டு மாத டைம். நமக்கு மூணு மாத டைம்! அவரும் தேடியாகணும். பால்காரர், வேலைக்காரி, கிரைக்காரி, எல்லார்க் கிட்டேயும் சொல்லிவை.

(போகிறார்.)

காட்சி 4

(தாமோதரன் புதிதாகக் குடி வந்தி ருக்கும் இடம்; முன்னிரவு வேளை. தாமோதரன் ஏதோ எழுதிக்கொண் டிருக்கிறார்: கல்யாணி வருகிறாள்.)

தாமோ: நான் அப்பவே கூப்பிட் டேன்! நீ இப்போதான் வரே.

கல்: நீங்க கொடுத்த குரலுக்கு நான் வந்து சேர இவ்வளவு நேர மாச்சு. அழகா வீடு பார்த்திருக்கீங்க? வாசலுக்கும் கொல்லைக்கும் இரண்டு பல்லவன் பஸ்ஸ்டேஜ் தூரம்னு இருக்கு!

தாமோ: சுத்தமான காற்று, அமைதியான சூழ்நிலை, விஸ்தார மான இடம். கொஞ்சம் இறைஞ்சு பேசினா போறது.

கல்: இல்லாதது மனித வாடை தான். பத்து நிமிஷம் வாசலில் போய் நின்னு ஒத்தர் ரெண்டு பேரைப் பாக்க மு டி கி ற து. ஒரு நிருப்தி! நாம் நீவு எநிலும்



கப்பல் கவிழ்ந்து மெல்ல் கொள்ள வில்லை என்ற நிருப்தி. இந்த இடம் சைதாப்பேட்டைக்குப் பக்கத்தில்தான? தாம்பரத்துக்குப் பக்கத்திலா?

தாமோ: நடுவிலே, இந்தக் கட்டிடத்திலே எலிவேட்டரி லிஃப்ட் இருந்து முடிப்டாங்க. கட்டிடச் சொந்தக்காரர் பெரிய மனசு பண்ணி நம் அவசரத்திற்கு வாடகைக்குக் கொடுத்தார்.

கல்: இதோ பாருங்க! என்னாலே சத்தியமாக இந்த அமைதியைத் தாங்கிக்க முடியலே. நீங்களும் உங்க பெண்ணும், பல், ரெயில் ஏறி வேலைக்குப் போயிடறீங்க. நான் என் கூடவே பெரிசிலேட்டுப் பொழுதைப் போக்கறேன். நான் நானேக்கு எங்க அண்ணன் வீட்டுக்குப் போறதா முடிவு செஞ்சுட்டேன். புது வீடு பார்த்த பிறகு வர்றேன்.

தாமோ: நானேக்கு மறு நாள் போ!

கல்: அதென்ன கணக்கு?

தாமோ: நான் ஒரு யோசனை செய்தேன். இந்த வீட்டிலே நடுவிலே முற்றம். அந்தப் பக்கம் ஒரு தாழ்வாரம், இரண்டு அறைகள்! அதையாவி இந்தப் பக்கம். இதில் பாதியை நம்ப பொறுப்பிலே வாடகைக்கு விடலாமே என்ற யோசனை. எங்க ஆபீஸ் நண்பர்களிடம் சொன்னேன். நானேக்கு ஒரு ஆசாமி இந்த இடத்தைப் பார்க்க வர்ஞர், தம் நெருங்கிய கூட்டிலிட்டு. வீட்டில் ஒரு பெண்பிள்ளை இருக்கிறான்னும் வந்து பார்க்கும் குடும்பத்துக்குக் கொஞ்சம் தைரியம் வரும்!

கல்: அப்படி யாரும் வரவேண்டாம்னே ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பிச்சு வெல்!

தாமோ: இங்கே ஒரு மார்க்கெட்டே நடத்தலாம். இடம் இருக்கு. அது சமான் வாங்க வரவா மெயின் ரோட்டை விட்டுட்டு அரை மைல் உள்ளே வரமாட்டாங்களே!

கல்: ஆமாம். இன்னும் கனவைக் காணுமே? மணி எட்டு இருக்கும் போலிருக்கே.

தாமோ: வாசற்கதவைத் தாப்பான் போட்டுக்க. நான் மெயின் ரோட் பஸ் ஸ்டாப் வரை போய்ப் பார்த்துட்டு வர்றேன்.

கல்: பேசாத்துக்கு மனுஷா இல்லாம வாயும் மரத்துப் போச்சு. காதும் மரத்துப் போச்சு! ஹலோ! பழைய வீடும், அந்தக் கதவும் ....

(தாமோதரன் போகிறார்.)

காட்சி 5

[தாமோதரன் வீடு. மறுநாள் முற்பகல். தாமோதரன் நடு ஹாலில் உட்கார்ந்திருக்கிறார். அவர் காரியாலய நண்பர் கணேசன் வருகிறார்.]

தாமோ: வாருங்கள் கணேசன்! வீடு பார்க்க யாரும் வரலியா? ஏதோ சொல்லீங்களே!

கணேசன்: வந்துபோட்டே இருக்காங்க. நான் சொன்ன ஆசாமி அவர் சம்சாரத்தையும் கூட்டிக்கிட்டு வர்ஞர், கொஞ்சம் மேலவா நடக்கிறார்க.

தாமோ: அதுவும் சரிதான்.

கணேசன்: அதோ! அவங்களே வந்துட்டாங்க.

தாமோ: அடடே! அச்சதனும் மீனாவும் அச்சதனும்! வாங்க, வாங்க.

அச்சு: அடடே நம்ப தாமோதரன் சார்! நீங்களும் வீடு பார்க்கத் தான் வந்திருக்கிர்களா? நமக் குள்ளே போட்டியுன்னு நான் விலகி விடறேன்.

தாமோ: இது போட்டி இல்லே! பங்கு! ஏய் கல்யாணி! கல்யாணி! இங்கே யாரு வந்திருக்கா பாரேன். (கல்யாணி வருகிறாள்.)

கல்: வாங்கோ! வாங்கோ! உக்காருங்கோ! பழைய நெதிதம் அப்படிச் சட்டுனு விட்டுடுமா என்ன? உக்காருங்கோ. இதோ காபி தர்றேன். ரெண்டு மாலைக் கூட்டி.



ஒருவர்: அந்த நாள்லே பொண்ண, தீபமெயரை அமிழ்த்து விட்டா நன்னு முழுங்கள்லே வந்து பிடிக்கும்பாங்க.

மற்றவர்: இப்பவும் என்ன குறைஞ்ச போச்சு? அமிழ்த்து விட்டாங்கன்னு தலையே பிடிக்கும்!

அச்சு: எத்தப் வயசாச்சு இருந்தாலும் நன்னாக் கல்யாண மண்டபம் தேடிப் போகவேண்டாம். இங்கேயே நடத்தலாம் போலிருக்கு.

தாமோ: இந்த இடத்தைத் தேடி அதிகம் போர் வராட்டாங்க. காப் பாட்டுக்குக் கும்பல் வராது. என்ன மிஸ்டர் அச்சுதன், அந்தப் போர்டை பார்க்கிர்களா?

அச்சு: பார்வதி! அந்தப் பிரேத சந்தில் ஒரு டூர் போய்ட்டுவாயேன். [பார்வதியும் கல்யாணியும் போய்ப் பார்த்து விட்டு வருகிறார்கள்.]

பார்: ஒருவிதத்திலாலும் இடம் விஸ்தாரமா இருக்கு. நல்ல காத் ரோட்டம். ஆனா?....

அச்சு: என்ன நீட்டலே? என்ன, வசதிக் குறைவா ?

பார்: இந்த இரண்டு போர்ஷனுக்கும் நடுவிலே ஒரு தடுப்பு இருந்தா நன்னு இருக்கும். கொஞ்சம் மறைவு வேண்டாமா?

கல்: நீங்க சொல்லறது நியாயந்தான். நாம் அப்படிப்பட்ட இடத்திலே இருந்து நொம்ப நாளாப் பழகி விட்டோம் இல்லியா?

தாமோ: நடுவிலே கயர் எழுப்பிக் கதவு போட விட்டுக்காரன் தயாரில் லேயே!

அச்சு: நடுக்கதவுனு பெண் பிள்ளைகளுக்கு அவரி மோகம். அது சாத்தியிருக்கணும்! அது அது வழி யாச் சத்தம் கேக்கறும். அப்படித் தானே?

கல்: இங்கே மனுஷாளே பார்த்தாப் போறும்னு இருக்கிறபோது, தடுப்பும் அடைப்பும் எதற்கு? நீ சொல்லு பார்வதி!

பார்: அதுவும் சரிதான்! இடம் என்னவோ எனக்கும் பிடிச்சிருக்கு. ஒரு கண்டிஷன்!

தாமோ: சொல்லுங்கோ!

பார்: எப்போ மழைவா நிற்கச் சுவர் இல்லியோ, இரண்டு போர்ஷன் காரங்களும் என்ன பெரிசு கொண்டாடும் கொஞ்சம் இறைச்சுப் பேசணும். அந்தச் சத்தம் மற்றவர் களுக்குக் கொஞ்சம் தைரியத்தைக் கொடுக்கும்.

அச்சு: தைரியத்தையும் கொடுக்கும். கொஞ்சம் பொழுதும் போகும். அப்படித்தானே பார்வதி?

பார்: ஆமா! எனக்கு வீடு பிடிச் திருக்கு.

அச்சு: ரொம்பச் சந்தோஷம். இனிமே எனக்கு டயம் கொடுக்கிற போது, கதவுப் பக்கம் போய் நீந்த மாட்டேன்!

தாமோ: கல்யாணி! கேட்டுக்கோ! உனக்குந்தான் அவர் சொர்ந்து சொல்லுர். சத்தம் நம்மைத் தேடி வரும். நாம் அதைத் தேடிப் போக வேண்டாம்.

அச்சு: கெரிக்டாச் சொல்லிட்டீங்க! இன்றைக்கு நல்ல நாள். உங்க வீட்டிலே காபிக்குப் பால் இருந்தா ரெண்டு டம்ளர் கொண்டு வரச் சொல்லுங்க. அதையே குடிச்சுக் கே குடிக்கலாம்.

(நிகிக்கிறார்கள்.) ✻



யான் பெற்ற
நரசுஸ் இன்பம்
பெறுக இவ்வையகம்.

ஜீவனுள்ள ஒரே காபி!

நரசுஸ்

"தெர்மலோ" காபி!

எமது 54 வது
தீபாவளி
வாழ்த்துக்கள்!




நரசுஸ்
காபி கம்பெனி
சேலம் 636 007.
கிளைகள்: தமிழ்நாடெங்கும்.

ADWAVE/NCC/1795

1981-இன் புகுமொழிகள்!


தீயேட்டர் ஒருவிது சாலவும் நன்று



ஏ.யார் ஸ்டூடியோ மாமா தொள்வார்!




கிட்டாதாயின் வெட்டென மற



பெண்ணும் ஏருதும் கணைனைத் தகும்



உண்டி இலுங்கல் வேட்பாளரக் கழகு



தாரம் ரசால் மிக்க மந்திரி மில்லை



நைஸா அரையுங்க, போதும்!

தொலைபேசி ஏசுவின் மிரட்டுகவ் வினையும்




டொனேஷன் கேட்பின் தனகிலிக் தாட்டாதே!



பஸ் ஸ்டாப் பேபாலயத்தில் வம்பு மடம்







கல்யாணத் தவணைகள்

எல் ஏ கே

புலருத்திப் பொட்டலில் ஏரே அமளிதுமளி. மண்டை வெடிக்கும் வெயிலில் ஊர்ப் பிள்ளைகள் தாமிக் குதித்துக்கொண் டிருந்தார்கள்; தவளைப் பாய்ச்சல் போட்டியாம்!

மழை காணமல் அந்தப் புறம் போக்குத் திடல் காய்ந்து வெடித்துக் கிடந்தது. மருந்துக்குக்கூட ஒரு புல் பூண்டு கண்ணில் படவில்லே.

கோடை கொளுத்தியது. காற்றேட்டமே இல்லே. புழுக்கம் வறத்தெடுத்தது.

தாகத்துக்குத் தண்ணீர் குடிக்கச் சென்கோடன் வீடு திரும்பினான்.

''மழைக் கிளிர்ன்னு என்ன, பாட்டி?''

கருமுத்து-அவன் தங்கை கேட்டுக் கொண்டிருந்தாள்.

''போடி போ! மழையும் ஆச்சு; கிளியும் ஆச்சு!'' என்று எரிந்து விழுந்தாள் பாட்டி, சேலைத் தலைப்பால் விசிறிக்கொண்டே.

அடுத்தாற்போல் விசிறி மட்டையோடு உட்கார்ந்திருந்த தாத்தா சொன்னார்.

''முன்னுடி தரையிலே நாலு பொட்டு மழைத் துளி விழட்டும், கருமுத்து, பிறகு நானே உனக்கு நிறைய மழைக் கிளிகளைக் காண்பிக்கிறேன்.''

''மழை பெய்யறதுக்கு என்ன தாத்தா செய்யணும்?'' என்று கேட்டான் சென்கோடன்.

''இன்னும் என்னதான் செய்யறது? ஊர்க் கோயிலிலே ஐயருங்க மழைக்காக ஜபம் செய்தாங்க. பொம்பிளைகளெல்லாம் மாரியம்மனுக்குப் பொங்கலிட்டாங்க. கொடும்பாவி கூடக் கொளுத்தினுங்க. வானம் கறுக்கலே; மழையும் பெய்யலே!''

தாத்தா சலித்துக் கொண்டார்.

''தாத்தா, பண்ணையார் மகள் வள்ளிக்குக் கல்யாணத் தேதி வச்சிருந்தாங்க இல்லே? மழை பேஞ்சாத் தான் இந்த மாசம் கல்யாணம், இல்லேன்னு ரெண்டு மாசம் பொறுத்துத்தானுங்!'' என்ருள் கருமுத்து.

''அட பாவமே!'' பாட்டி அதாபப்பட்டாள்.

''அப்போ ஒண்ணு செய்தா என்ன?'' என்ருர் தாத்தா, கூரை முகட்டைப் பார்த்தபடி.

''என்ன தாத்தா, செய்யணும்?'' என்று கருமுத்துவும் சென்கோடனும் ஆவலோடு கேட்டார்கள்.

''அடி போங்கடி! வேறே வேலே இல்லே'' என்ருள் பாட்டி, அசட்டையாக.

அதோடு, ''தாத்தா என்னவானும் சொல்லுவாரு. அதைக் கேட்டுக் கிட்டுப் போய் நீங்க ஊரை ரெண்டு பண்ணுவீங்க!'' என்றும் குற்றம் சொன்னுள்.

''இல்லே பாட்டி....'' என்று தொடங்கினுன் சென்கோடன். ''என்னவானும்செய்து மழை பேஞ்சா ஊருக்கே நல்லதாச்சே! தாத்தா என்ன யோசனே சொல்ருரோ அது போல முடிஞ்சாச் செய்வோம்; முடியாத போனு விட்டிடுவோம்.''

''சரி. நீ கேட்டுக்கோ சென்கோடா!'' தாத்தா சொல்லலானுர்:

''அந்தக் காலத்திலே அதாவது அறுபது எழுபது வருசத்துக்கு முந்தி-நான் உன்னே மாதிரி சிறு பிள்ளேயா இருந்தப்போ இப்படித்தான் மாசக் கணக்கா மழை பெய்யாமப் போச்சு. ஊரே பாழாயிடும் போல நிலேமை. எங்க தாத்தா ஒரு யோசனே சொன்னுரு. அதன்படி செய்தோம்.''

''என்ன செய்திங்க, தாத்தா?'' என்று பரபரப்போடு கேட்டான் சென்கோடன்.

''ஆமா, செய்தாங்க சட்டியும் பானேயும்!'' என்று சிடுசிடுத்தாள் பாட்டி.

''சும்மா இரு, பாட்டி!'' என்ருன் சென்கோடன். பிறகு—

''மழை பெய்யறதுக்காக என்ன தான் செய்தீங்க? சொல்லுங்க!'' என்று தாத்தாவை மறுபடியும் கேட்டான்.

''அதாவது....''

''உம்....''

''தவளேங்க இல்லே—தவளேங்க?''

''ஆமா''

''தவளேங்க ரெண்டைப் பிடிச்சுக் கிட்டு வாறது. அந்த ரெண்டுக்கும் முறையாக் கல்யாணம் கட்டி வைக்கிறது. அப்பாலே நாலு தெருச் சுத்திவந்து தவளே ஜோடியை ஊர் வலம் விட்டா....''

''ஓகோன்னு மழை பெய்யுமாக்கும்!'' என்ருள் பாட்டி, கேலியாக.

''பின்னே பெய்யாதா, பாட்டி?'' என்று வெகுளியாய்க் கேட்டாள் கருமுத்து.

''ஆங், பெய்யும்.. பெரிசாத் தாழங்குடை வாங்கிப் பிடிச்சுக்கோ!'' என்ருள் பாட்டி.

கருமுத்துவும் சென்கோடனும் அவள் பேச்சைச் சட்டை பண்ணவில்லே. இந்தக் கோடைக் காய்ச்சலில் தவளே ஜோடிக்கு எங்கே போவது என்றுதான் யோசித்தார்கள்.

சிறுவர் பகுதி

''தவனிங்களுக்கு என்னடா செய்வீங்க?'' என்று தாத்தாவே ஆரம்பித்தார்.

''அதுதான் தாத்தா புரியல்லே.''

''புளிருத்திப் பொட்டலுக்கு அப்பாலே வாழத் தோப்பு இருக்கு இல்லே?''

''ஆமா, இருக்கு'' என்ருள் செங்கோடன்.

''எங்கே இருக்கு?'' என்று இடை வெட்டினுள் கருமுத்து.

''முந்தி இருந்தது இல்லேயா, அதைத்தான் சொன்னேன்!'' என்ருர் தாத்தா.

''உம், சொல்லுங்க!''

''வாழைத் தோப்பைத் தாண்டி வாய்க்கால் ஒடுது இல்லே?''

''வாய்க்கால்தான் வறண்டு மண் வாழைத் தோப்பைத் தாண்டி வாய்க்காலைப் பக்கம் பார்த்தார்கள்.

கொர - கொர ....

கொர - கொர - கொர ....

கொர - கொர ....

தலைக்குத் தலை குரல் கொடுத்தார்கள். நிசைக்குத் திசை குனித்து தவழ்ந்து தவனி துழாவினர்கள்.

செங்கோடனும் கருமுத்துவும் கற்றும் முற்றும் கூர்ந்து பார்த்தார்கள். வாய்க்காலில் ஈர மணல்பை வைத்துக் கருமுத்து கை ஒற்றிக் கை ஒற்றி எடுத்தான். அவனது கை வருடிய இடத்தில் ஏதோ தட்டுப்பட்டது. கண் ணன்றிப் பார்த்ததில் தவனி ஒன்று புதைந்துறங்கும் கவடு தெரிந்தது. பசலுறக்கத்தில் ஆழ்ந்து துவண்டு படந்தது அந்தத் தவனி. மூச்சு இருக்கிறதா, இல்லியா? விறைத்து நார்போன்ற பார்வை.

''செங்கோட்டண்ணே, செங்கோட்டண்ணே! இங்கே பாரேன்'' என்று கூவினுள் கருமுத்து.

''ஏன் அலர்றே? நண்டு ஏதாளும் விரலைக் கவ்விட்டுதா?'' என்று பதிலுக்குக் கூவினுள் செங்கோடன்.

சற்றுப் புற ஈர மண்ணைப் பக்குவ மாய் விரலால் பிளறினுள் கருமுத்து. மெதுவாய் மெதுவாய் அந்தத் தூர்மூடித் தவனியை வெளிப் படுத்தினுள். மேலெல்லாம் மண் பூசிக் கட்டித் தடவிச் சுத்தமாக்கினுள்.

''சரியான பிண்டன் தவனி!'' என்றபடி செங்கோடன் அருகில் வந்தான்.

உண்டியல் பெட்டி போல உடம்பு. வாய் இறுக மூடியிருந்தது. குட்டை யாயும் நீளமாயும் முன்னங் கால்-பின்னங் கால்கள். கண்ணில்தான் ஜொலிப்பு இல்லே. ஆளும் அம காய்ப் பருத்த தவனி.

சட்டென்று அதைக் கைப்பற்றத் தாவினுன் செங்கோடன்.

''ஊஹூம். அதுதான் நடக்காது. இது எங்க வீட்டுப் பிள்ளை - மாப்பிள்ளை. சீக்கிரம் போய்க் கல்யாணப் பொண்ணைக் கண்டு பிடிச்சுக் கொண்டாங்க!''

கருமுத்து கருராய்ச் சொன்னுள். செங்கோடன் விருட்டென்று நகர்ந்து கொண்டான்.

தயார் - ஒரு மாப்பிள்ளைத் தவனி.

தேவை - ஒரு கல்யாணப் பெண் தவனி.

''புளிருத்தி வீரா, நீயே துணை!'' என்று வேண்டிக்கொண்டு புறப் பட்டான்.

கொர - கொர ....

கொர - கொர - கொர ....

கொர - கொர ....

செங்கோடனேடு லெ தோழப் பிள்ளைகளும் சேர்ந்துகொண்டார்கள்.

கருமுத்துவுக்குத் தான் சளைத்தவளு என்ற நினைத்தோடு தேடினுன் செங் கோடன். வாய்க்கால் மதகு தாண்டிச் சற்றுப் புதர் மண்டிய சதுப்புத் தரையிலே தேடினானுன்.

இதற்கிடையே லெர் கல்யாணச் சேலவுக்காகப் பணம் தண்டப் புறப் பட்டார்கள். ஆண்களிடம் வசூலுக்கு இரண்டு பேர்; பெண்களிடம் வசூலுக்கு இரண்டு பேர் என்று மூன்வந் தார்கள். நான்கு டப்பாக்களில் கல் யாணத் தவனிகளைப் படம் வரைந்து ஒட்டினுர்கள். வீடு வீடாக ஏறி இறங்கினர்கள். இந்தக் கலாட்டா வில் ஊராருக்கே ஓர் உற்சாகம் தெரிந்தது. சிக்கிரமே வசூல் டப் பாக்கள் நிரம்பிவிட்டன.

தம்பிப் பயல்கள் தாண்டிக் குதித் தார்கள். தங்கச்சிப் பெண்கள் தட் டாமாலே கற்றினர்கள்.

செங்கோடன் குரல் கொடுத்தான்: ''அடே, இங்கே வாங்கடா! இதைப் பாருங்கடா! இன்னெரு ஜோக்கான தவனி!''



''இந்த வீட்டிலே அடிக்கடி வந்து ஒசி கேக்க உனக்கு வெக்கமாயில்லே?''

''இதிலே என்ன மாமி வெக்கம்? இதைவிட மோச மான வீடுகள் எவ்வளவோ இருக்கே!''

அடிச்சுக் டெக்கே!'' என்ருள் பாட்டி.

''இருந்தாலும் உள்ளூற ஈரக்கசிவு காணும். கலமாப் பார்த்தா கரை யோரம் இண்டிலே இடுக்கிலே தவனிங்க ஒண்ணு ரெண்டு புதைஞ்சு டெக்கும். வெயிலுக்குப் பயந்து வாய்க்கால் மணலடியிலே தவனிங்க சமாதி கொன்றது சகஜந்தான். இல்லே, புதர்ப் பூண்டு நிழலிலே பதுங்கிக்கிட்டிருக்கும்.''

''சரி தாத்தா! நாங்க போய்ப் பார்க்கிறோம்'' என்று செங்கோட னும் கருமுத்துவும் வெளியே ஒடி னர்கள்.

புளிருத்திப் பொட்டலுக்கு வத்து விஷயத்தைச் சொன்னர்கள். தவனி வேட்டை என்றவுடன் ஒரு சிறு படையே திரண்டது.



''அக்கா, காபி மாதிரி போளின்னுகூட ஒரு ராகம் உண்டு; இல்லே?''

''அட ராமா! அது போளி இல்லேடா; பொளி!''

செங்கோடனேச் சுற்றிச் சிறு கும் பல் முற்றுகை இட்டது.

''விளுங்கடா, விளுங்கடா! கொஞ்சம் காற்று வரவிடுங்க!''

செங்கோடன் அதட்டினுன். அவன் கையிலிருந்த தவனியும் துக்க மயக் கத்தில் டெந்தது. கருமுத்து பிடித்த தவனியைட்சி சற்றுச் சின்னது; ஜோடி பொருந்தும்.

அப்பாடா!

அடுத்தாற் போல அனங்காரம்.

ஆளுல் கருமுத்து ஒரு சத்தேகத் தைக் கிளப்பினுன்.

''இது மாப்பிள்ளைத் தவனிக்குத் தோழன் போலத் தோணுது. இதையா கல்யாணப் பொண்ணு ஜோடிக்கிறது?''

''ஏன், ஜோடிச்சா என்னவாம்? நிறைய மஞ்சள் பூசி, நெற்றியிலே

பொழுதுபோக்கு


12 மத்தாப்புக் குச்சிகள் கீழே கிடந்தன. அதைக் கொண்டு பூமா 6 சம அடைப்புகள் கொண்ட ஓர் அமைப்பைத் தயாரித்தாள்.

அப்போது தம்பி மேலும் ஒரு மத்தாப்புக் குச்சியைக் கொண்டு வந்து அவள் அருகே போட்டான்.

பூமா மொத்தம் 13 மத்தாப்புக் குச்சிகளைக் கொண்டு மறுபடியும் 6 சம அடைப்புகள் கொண்ட இன்னோர் அமைப்பைத் தயாரித்தாள்.

அதை அவள் எப்படிச் செய்தாள்?

(விடை-197-ஆம் பக்கம்)



குங்குமத்தை இட்டா, இது பொண் தவணீயா ஆயிடுது!'' என்ருள் செங்கோடன்.

''அப்போ ஆண் தவனீ நெற்றியிலே நாமம் நீட்டி அலங்காரம் செய்வோம்'' என்று கருமுத்து சொன்னுள்.

''ஆகா .. ஆகா!'' என்று ஆமோதித்தது ஆர்ப்பாட்டக் கும்பல்.

''பொம்மைக் கல்யாணம் செய்யத் தெரியும். தவனீக் கல்யாணம் எப்படிச் செய்யணும்னு தெரியாதே?'' என்ருள் கருமுத்துவின் தோழி கண்ணம்மா.

''இதுக்கு என்னடி பெரிசாத் தெரியணும்? புள்ளீ வீட்டுக்காரங்க— பொண்ணு வீட்டுக்காரங்கன்னு தனித்தனியா நின்னு ஏற்பாடெல்லாம் செய்யணும். பொண்ணையும் புள்ளீயையும் அழைச்சுக்கிட்டு வரணும். மேளம் கொட்டணும்; தாலி கட்டணும், அவ்வளவுதான்!'' என்ருள் கருமுத்து.

''அவ்வளவுதானு? நவங்கு, ஊஞ்சல், ஊர்வலம், விருந்துச் சோறு, தேங்காய்ப் பை இதெல்லாம் கிடையாதா?''

''ஏன் கிடையாது? எல்லாம் ஜாம் ஜாம்னு உண்டு.''

''கச்சேரி....?''

''இந்தக் கல்யாணமெல்லாம் நல்ல படியா முடியட்டும். ஊரிலே மழை பேஞ்சு மண்ணு குளிரட்டும். கச்சேரி வைக்க ஒரு தவனீப்படையே நிரண்டு வரும்.''

மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் அலங்காரமெல்லாம் முடிந்தது. மஞ்சள் குங்குமத்தோடு கல்யாணப் பெண்ணின் நெற்றியிலே ஜிஞ்சுத் தாளில் சுட்டிபோல் ஒட்டினுர்கள்.

மாப்பிள்ளை நெற்றியில் ஜிஞ்சுத் தாளில் நாமத்தைக் கத்திரித்து ஒட்டினுர்கள்.


கல்யாண ஜோடியின் உடம்பெல்லாம் தங்க-வெள்ளி ஜிஞ்சுப் பொட்டுகள் பளபளத்தன; நகநகத்தன.

ஊர்ப் பிள்ளைகளின் இத்தனை அமளிதுமளிக்கும் அந்தத் தவனீகள் அசைந்தே கொடுக்கவில்லை; அரண்டு மிரளவும் இல்லை.

அடுத்து அரசடி மேடையில் கல்யாணக் கொண்டாட்டம். அங்கே காகிதச் சங்கிலிகளும் தோரணங்களும் சரசரத்துக் கலகலத்தன.

இவிமேல் பெண்ணையும் மாப்பிள்ளையையும் கல்யாண மேடைக்கு அழைத்து வர வேண்டும். எல்லாருக்கும் சர்க்கரை, பன்னீர், சந்தனம் வழங்க வேண்டும்.

கல்யாண விருந்துக்கு என்ன என்ன பரிமாறுவது? நூற்றுக்கு நூறு



மாமழை போற்றுதும்!

* ஒரு சதுர செண்டிமீட்டர் பரப்பளவில் ஆண்டு ஒன்றுக்கு 150 ஆயிரம் கலோரி சக்தியை இந்தியப் பூமியில் கதிரவனின் ஒளியிலிருந்து பெறுகிறோம். இந்தச் சக்திகள் அனைத்தையும் சமுதாய நலனுக்காகப் பயன்படுத்த முடியுமானால் இந்திய மக்கள் வளம் பொருந்திய வாழ்க்கை வாழமுடியும்.

* பயிர்களின் வளர்ச்சிக்கும், உயிர்களின் வாழ்வுக்கும் மழை அமிழ்தம் போன்றது. எனவே மழையையும் மழை நீரையும் சிக்கனமாகப் பயன்படுத்தி வாழ்க்கையை வளப்படுத்திக்கொள்ள வேண்டும்.

* நெற்பயிர்க்கு மூன்று மாதங்களுக்குத் தேவைப்படும் தண்ணீரைக் கொண்டு கரும்புக்கு ஒரு ஆண்டு முழுதும் நீர் பாய்ச்சலாம். நெல் ஒரு நிறந்த உணவுப் பயிர். சுற்கண்டை உருவாக்கவல்ல நற்கரும்பு ஒரு நிறந்த பணப் பயிரை யொத்ததோர் உணவுப் பயிர். எனவே கரும்பு வேளாண்மையின் மூலம் மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு ஏற்றம் காண்போம்!

* கதிரவனின் ஒளியிலுள்ள சக்தியை மக்களுக்குப் பயன்படக்கூடிய பொருள் களாக மாற்றக்கூடிய மிகச் சிறந்த கருவி கரும்புப் பயிராகும். எனவே கரும்பு வேளாண்மையை அபிவிருத்தி செய்வதன் மூலம் மக்களின் வாழ்வை வளமாக்க முயல்வோம்.

* கரும்புச் சாகுபடியில் நவீன முறைகளைக் கையாண்டு ஏக்கருக்கு 28 டன்களாக இருந்த சராசரி ஆதாயம் 45 டன்களாக உயர்ந்துள்ளது. இதன்மூலம் ஒரு ஏக்கரிலிருந்து கிடைக்கக்கூடிய வருமானத்தைச் சுமார் ரூ. 5000-லிருந்து ரூ. 9000 - ஆகப் பெருக்கியுள்ளது சக்தி சர்க்கரை ஆலை.

* ஒரு ஏக்கரிலிருந்து பெறக்கூடிய ரூ. 9000-மதிப்புள்ள கரும்பைப் பிழிந்து சுமார் ரூ. 20,000-மதிப்புள்ள, மக்களுக்குத் தேவையான சர்க்கரை, மற்றும் எரிசாராயம் போன்ற இரசாயனப் பொருளகளாக மாற்றும் பணியைச் செய்து உழவர்களின் மேம்பாட்டிற்கும் இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கும் பாடுபட்டு வருகிறது சக்தி சர்க்கரை ஆலை.

* சுமார் பத்தாயிரம் விவசாயிகளுக்கு ஆண்டுதோறும் சுமார் பதினைந்து கோடி ரூபாயைக் கரும்பு விலையாக விலியோகிப்பதன் மூலம் இந்தப் பகுதியின் பொருளாதாரம் பரவலாக வளர்ச்சியடைகிறது. சுமார் இருபதாயிரம் பேர் கரும்பு வேளாண்மையிலும், மேலும் இருபதாயிரம் பேர் உபதொழில் களிலும் வேலை வாய்ப்புப் பெறுகின்றனர். பல்லாயிரம் குடும்பங்களில் பொருளாதார ஏற்றத்தோடு ஒளி நிரம்பி வளங்கான உழைக்கும் ஓயாத இயக்கமே சக்தி சர்க்கரை ஆலை.

சக்தி சுகர்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்:
73-ஏ, ரேஸ் கோர்ஸ் ரோடு,
கோயமுத்தூர் - 641018.

ஆலை:
சக்தி நகர் - 638 315,
பெரியார் மாவட்டம்



தவளைகளே நடத்தும் கல்யாணமானால் ஈ, கொசு, பூச்சி, புழு, வெட்டுக்கிளி என்று வைத்துக் கொள்ளும். இது ஊர்ப் பிள்ளைகள் கூடி நடத்துகிற கல்யாணம் ஆயிற்றே? அவல், வெல்லம், பொரி கடலை என்ற அளவில் நிறுத்திக் கொண்டார்கள்.

முன்னதாக, பொட்டலில் நின்ற புளிருத்தி வீரன் சிலைக்குத் தேங்காய் பழம் படைத்து, குடம் காட்டினார்கள்.

ஊர்வலம் எனும்புமுன் கல்யாணத் தவளைகளை, கோலமிட்ட மணைப் பலகையிலே ஒன்றுக அமர்த்தினார்கள். சின்னத் தாம்பாளத்திலே ஆரத்தி சுற்றிக் கொட்டினார்கள்.

தப்பட்டையையும் ஊதலியும் வைத்துக் கொண்டு சிலர் இஷ்டம் போல் கொட்டி முழக்கினார்கள். ஒரு கோஷ்டி ஓய்ந்த சுருக்கோடு இன்னொரு வாத்திய கோஷ்டி இளம்பி வெளுத்து வாங்கியது.

தாத்தாவும் பாட்டியும் வந்திருந்து அவ்வப்போது விட்டுப் போகும் சடங்குகளை நினைவூட்டினார்கள். பேரன் பேத்திகளும் உற்சாகமாக அவற்றை நிறைவேற்றினார்கள்.

ஊர்வலம் புறப்பட்டது. ''ஆகா-ஓகோ!'' என்று ஒரே கொம்மாளம்-கொண்டாட்டம்! கல்யாணத் தவளைகளை மணைப் பலகையோடு தலைக்கு மேல் ஏந்திக்கொண்டு நடந்தார்கள். சின்னச் சவுக்கத்தை நான்கு பேர் தூக்கிப் பிடித்துக்கொண்டு கூடவே போனார்கள்.

கல்யாண ஜோடி மேல் வெயில் வெப்பம் படலாமா! மேலும் அது மரியாதையா?


தவளைகள் என்னவோ இன்னமும் தூக்கம் தெளியாமலே இருந்தன.

''தத்திக் தத்திக் குதிக்கும்; சுத்திக் சுத்தி விறைக்கும்'' இந்தத் தவளைகள் இப்போதைக்கு இப்படியே இருக்கட்டும்: அதுதான் வசதி.

ஊர்ப் பிள்ளைகள் கல்யாணத் தவளைகளுக்கு 'லாலி' பாடினார்கள்.

''லாலி லாலி—சுப
லாலி லாலி— மண
மாலை குலாவிடும்
மாப்பிள்ளை பெண்ணுக்கும்
லாலி லாலி—சுப
லாலி லாலி....''

பொழுது போக்கு - விடை



இது 13 மத்தாப்புக் குச்சிகளால் அமைந்தது.

இன்னும் 15 மத்தாப்புக் குச்சிகளால் ஒரு நட்சத்திரமும், 18 மத்தாப்புக் குச்சிகளால் ஓர் ஆறு இதழ்த் தாமரையும் அமைக்கலாம்; எங்கே, அமையுங்கள், பார்க்கலாம்!

-எஸ்.எல்

பொழுது சாய்ந்துகொண் டிருந்தது. மேல் வானம் லேசாக மெள்ளக் கருநீலம் படிந்தது. திருட்டும் வஸ்காத்திராமல் இரண்டொரு நட்சத்திரங்கள் கண் மிட்டத் தொடங்கின. சட்டென்று வெப்பம் தணிந்தாற்போல் காற்றிலே ஒரு குளுமை.

'பொட் பொட்' என்று எல்லார் மேலும் ஏதோ தெறித்தது. யாரோ பன்னீரை வெறுமே தெளித்து விணடிக்கிறார்களே என்று அப்படி இப்படித் திரும்பினார்கள். பன்னீர்க் குப்பி இரவல் கிடைக்காதது நினைவு வந்தது. அப்படியானால் அவர்கள் மேலெல்லாம் தெறித்தது பன்னீரா அல்லது வேறெதாவது....

அவர்கள் அதிகமாக யோசிக்கும் படி நேரவில்லை. சலசல வென்று வானத்திலிருந்து மழைத் துளிகள் தெறி விழுந்தன. சற்று நேரத்தில் 'சோ' என்று பெருமழை பெய்யலாயிற்று.

"அந்தி மழை பொழிகிறது;
ஒவ்வொரு துளியிலும்
உன் முகம் தெரிகிறது...."

பாடியபடி எல்லாரும் தாறுமாறுகப் பிய்த்துக் கொண்டார்கள்.

மக்கிப் பலகை நழுவிக் கட்டாந் தரையில் விழுந்தது. மேல்கட்டிச் சவுக்கம் சாரல் காற்றேறு போய் விட்டது.

ஜோடித் தவளைகள் புது மழையில் குளித்ததும் உடம்பைச் சிலிர்த்துக் கொண்டன. தூக்கம் கலைந்து சுய நினைவு வரவே குரல் காட்டத் தொடங்கின.

கொர - கொர - கொர....

கொர - கொர - கோர....

இரண்டு தவளைகள் குரலெடுத்ததும் இதோ அதோ என்று இன்னும் சில தவளைகள் உடன் பாடலாயின.

கொர - கொர - கொர....

அகோரமான சேர்ந்திசை!

பெரிய 'கோரஸ்' காதைக் குடைந்தது.

கல்யாணப் பண்டங்களோ நடுத் தெருவில் கை உதறியபடி எல்லாரும் எதிர் எதிர் வீடுகளில் போய் ஒதுங்கினார்கள். மழையோ மழை!

''ஐயமாருங்க மழைக்காக ஜபம் செய்தாங்க; பொம்பிளைங்க அம்மனுக்குப் பொங்கல் போட்டாங்க; கொடும்பாவி கொளுத்தினுங்க; எல்லாத்துக்கும் மேலே ஊர்ப் பிள்ளைகள் தவளைகளுக்குக் கல்யாணம் கட்டி வச்சாங்க. அதுதான் மழை இந்தப் போடு போடுது!' என்றார் தாத்தா.

''பாட்டி, இப்போ சொல்லு! மழை நல்லாக் கொட்டுதே - மழைக் கிளிங்க இப்போ வந்திடுமா?'' என்று கருமுத்து பிடித்துக் கொண்டாள்.

''அடி போடி. மழை பேஞ்ச தரையிலே புல் மண்டினு வெட்டுக்கிளிங்க வரும். அதைத்தான் மழைக்கிளின்னு சொல்லறது'' என்றாள் பாட்டி.



பச்சரிசி நொய்
கொண்டு வந்ததாம்
பொன்னன் குருவி;
பாரிப் பருப்புக்
கொண்டு வந்ததாம்
பொன்னிக் குருவி....

பாயசம் ஆக்கணும்
புள்ளே என்றதாம்
பொன்னன் குருவி;
பலம்எடை வெல்லம்
கொண்டா என்றதாம்
பொன்னிக் குருவி....

பலம்எடை வெல்லம்
கொண்டு வந்ததாம்
பொன்னன் குருவி;
பாயசம் ஆக்கி
இறக்கி வைத்ததாம்
பொன்னிக் குருவி....

தேங்காய்த் துருவல்
போடணும் என்றதாம்
பொன்னன் குருவி;
தேங்காய்த் துருவலே
அள்ளி இட்டதாம்
பொன்னிக் குருவி....

ஏலம் கொஞ்சம்
போட்டால் என்றதாம்
பொன்னன் குருவி;
ஏகமாய் மணக்கும்
பாயசம் என்றதாம்
பொன்னிக் குருவி....

ஏலம் கொஞ்ச
எறிப்பு பறந்ததாம்
பொன்னன் குருவி;
ஏற்றக் கிணற்றில்
இடறி விழுந்ததாம்
பொன்னன் குருவி....

புலம்பிச் சென்றி
வட்ட மிட்டதாம்
பொன்னிக் குருவி;
பொக்கென மேலே
பறந்து வந்ததாம்
பொன்னன் குருவி....

சாமி கும்பிடு
மச்சான் என்றதாம்
பொன்னிக் குருவி;
சாப்பிட முதலில்
பாயசம் என்றதாம்
பொன்னன் குருவி....

பாயசத் தொன்னையைக்
கொண்டு வைத்ததாம்
பொன்னிக் குருவி;
பதமாய் மணக்குது
பாயசம் என்றதாம்
பொன்னன் குருவி....

ஏல மணம் அல்வ
மச்சான் என்றதாம்
பொன்னிக் குருவி;
எல்லாம் உன்னுட
கைமணம் என்றதாம்
பொன்னன் குருவி....

பார்த்துப் பார்த்துப்
பரிமா றிற்றாம்
பொன்னிக் குருவி;
பாயசத் தொன்னையில்
தப்பல டித்ததாம்
பொன்னன் குருவி!

Heartiest Deepavali Greetings

from

Rajan Paper Mart (Est. 1958)

17, Sunkurama Chetty Street

Madras-600 001

Phone

Office : 24949

Res : 446418

Dealers in

ALL VARIETIES OF PAPER & BOARDS

Mainly from ORIENT & SIRPUR PAPER MILLS

For that new sparkling look of the 80's



Addisons the pioneers in paints offer their Acrylac auto finishes in an array of pleasing shades - Fire mist, Teal mist, Sherwood green, Dark green, Jade green, Glacial blue, Comet blue, Tunisian tan, Copper mist and Bronzini gold.


Backed by Addisons intensive research and development - these scintillating finishes effectively resist acid, alkali, oil, petrol and corrosion

With Addisons Acrylac you can be sure that your car needs minimum of polishing, while retaining superb gloss and superior durability.

Addisons Acrylac-

for the fresh look of the 80's.

Addisons Paints & Chemicals Ltd.,
Sembiam, MADRAS-600 011.



Addisons

Acrylac-AUTO FINISHES

Introducing in Madras, Bangalore & Hyderabad Only.

MAC/APC/001



நீலகிரிப் பிரதேசத்தின் அழகை ரசித்தவாறே நான் மெதுவாக அந்தக் குன்றில் ஏறினேன். என் அத்தை மகள் என்னை வரவேற்க வந்தவள்போல் அவள் வீட்டுப் படியில் நின்றாள்.

"என்ன அம்மா, குளிர் நடுக்குகிறது. தீபாவளிக்கு என்னை இங்கே அழைக்கிறே, கரிசனமாக. நீங்கள் எல்லோருந்தான் ஒரு நடை பண்டிக்கைக்கு அங்கே வரக்கூடாதா?" என்றேன், மேல்மூச்சுக்கிடையே.

சொர்ணம் லேசாக முறுவலித்தாள். கலைவெள்ளை வெண்கல மணிமேனி உருட்டிவிட்ட மாதிரிதிரிப்பாளே! என்ன ஆயிவிட்டது இப்போது?

"ஒரு தீதுவைதான் புதிய ரூம் நிலையிலே பண்டிகை கொண்டாடுகிறது. என்ன மோசமாயிடுத்து இப்போது? ரெண்டு நாள் நம் வாசவி கூட மேடு பள்ளம் ஏறி இறங்கிஞல் மூச்சு வாங்காது."

நான் அவளைத் தொடர்ந்து சென்று வரவேற்பறையில் சோபாவில் அமர்ந்தேன். 'உஸ்ஸ்' என்று நீராவி எஞ்சின் மாதிரி மூச்சு விட்ட பிறகுதான் அமைதி கண்டேன். அப்போதுதான் சொர்ணம் பழைய வெண்கல மணிச் சிரிப்புச் சிரித்தாள்.

"இப்பத்தான் சொர்ணம் மாதிரி இருக்கு" என்றேன்.

"இத்தனை நேரம் மட்டும் யார் போல இருந்தேனும்?"

"சொர்ணம் போல இல்லே."

"ரவி, என் கடுதாசியைப் படிச்சியோ? உன்னைப் பார்த்து, கலந்து பேசணும்னுதான் வரவழைச்சேன். என்னைப் புரிஞ்சுகொண்டு யோசனை சொல்லக்கூடிய ஆள் உன்னைத் தவிர யாரும் கெடையாது. அதனால்தான் என் அண்ணவையா, அப்பாவையோ கேட்கலே."

"சொல்லு, பார்ப்போம்."

"இரு, அவ்வளவு சீக்கிரம் ஆகிற காரியம் இல்லே அது. குளிக்கப் போகிறயா? வெந்நீர் வைக்கச் சொல்கிறேன்" என்றாள் சொர்ணம்.

இவளுக்கு அப்படி என்ன பிரச்னை இருக்கப் போகிறது? என் மண்டையைக் குடைந்தேன். சொர்ணத்தின் தகப்பனார் உயர்நிலைன்ற வழக்கறிஞராக இருந்து ஓய்வு பெற்றவர். திருவான்மியூர் போகும் வழியில் ஒரு பெரிய வீட்டில் குடியிருந்தார். வீட்டைச் சுற்றிப் பண்ணை. நவீன வசதிகளில் ஒரு குறைவு கிடையாது. நான்கு பிள்ளைகள், இரண்டு பெண்கள். சொர்ணத்துக்கு மேற் ரத்தினம். அவள் கணவன் ஸ்விட்சர்லாந்தில் அரசாங்கப் பதவியில் இருக்கிறார். என்ன பிரச்னை ஏறப் போகிறது?

நான் குளித்து, காலை ஆகாரம் முடித்துக்கொண்டு வந்து வராந்தாவில் பிரம்பு நாற்காலியில் அமர்ந்தேன். "ரவி!" என்று சொர்ணத்தின் குரலைக் கேட்டு நிமிர்ந்தேன். கண்களில் நீர் மல்க அவள் என் எதிரே வந்து அமர்ந்தாள்.

"சொல்லு, காத்துக்கொண்டிருக்கேன்" என்றேன்.

"ரவி, எப்படி ஆரம்பிக்கிறதுன்னே தெரியலே."

"என்ன, தாம்பத்தியக் கலவரமா? பணப் பிரச்னையா? குழந்தைகள் ப்ராப்ளமா? சொல்லு, தீர்த்துவைக்கிறேன்."

"ரவி, வினையாடாதே! எனக்குத் துக்கம் நெஞ்சடைக்கிறது."

"சொன்னத்தானே தெரியும்? நம்ப மாப்பிள்ளை குணம் எனக்குத் தெரியும். தெய்வீ பறிக்கிற பெண்ணோ பாரத்துக கண்ணடிச்சார்னு நீ சொன்னு, நான் நம்பமாட்டேன். அது மாதிரி விஷயந்தானே ஒரு பொண்ணுக்குத் துக்கமாயிருக்கும்?"

"அதெல்லாம் இல்லே. நம்ப வாசவி தான்..."

"காதலா? யாரு? வெள்ளைக்காரனு? படகர் தலிவனு? தோதுவனு?"

"அது யாராஞலும் நான் பொறுத்துக்குவேன். ஆனால் அவள் குணம்..."

"அதோ கதாநாயகியே வர்ற மாதிரி இருக்கு?" என்றேன், கண்ணல் ஜாடை காட்டியபடி.

சொர்ணம் கண்களைத் துடைத்துக் கொண்டாள். சிரிப்பை முகத்தில் பூசிக் கொண்டாள். நான் மேலே வைத்த வாரப் பத்திரிகையை எடுத்துப் படிப்பவள்போல் பாசாங்கு செய்தேன்.

"ஹை! ரவி மாமா! நீங்க வரப் போறீங்கன்னே தெரியாதே!" என்று தூரத்திலிருந்தே உரக்கக் குரல் கொடுத்தாள் வாசவி. பழம்பு நிறத்தில் முரட்டுக் கைத்தறிச் சேலை, அதே நிறத்திலே ரவிக்கை. கழுத்திலே கன்றுகுட்டிக்குக் கட்டுகிற மணிமாலை ஒன்று. தலையை இழைவாரிப் பின்னல் போட்டு முடித்து நீல நிற ரிப்பனை இறுக்கிக் கட்டியிருந்தாள். இருபதாம் நூற்றுண்டு ரிஷி கன்னிகை மாதிரி இருந்தாள்.

அவள் மெதுவாக, அவசரமே இல்லாமல் நடந்து வந்தாள். அவள் கூடவே கன்னங்கறேலென்று, நாக்கு மரப் பொம்மை போல ஒரு சிறு பையன் வந்தான். அவன் தோளில் ஒரு கையை லேசாக வைத்துக் கொண்டு அவள் படி ஏறி வந்தாள்.

சொர்ணம் பார்த்த பார்வை! அவளுக்கு அந்தச் காட்சி பிடிக்க வில்லே என்று புரிந்துவிட்டது. ஏதோ ரண மூனையில் மொறி ஓட்டியது!

வாசவி ஐ. ஏ. எஸ் எழுதி நல்ல இடம் பெற்றுள் என்று சொர்ணம் எழுதியிருந்தாள். ஐ. எஃப். எஸ்ஸிலும் தேர்ச்சி பெற்றுளாம். இதனிடையில் எப்போதோ அமெரிக்கா போய் இரண்டு வருஷங்கள் இருந்து சமூக இயலில் டாக்டர் பட்டமும் பெற்றுக்கொண்டாள். இத்தனையும் இருந்து, பணம், பின்னணி வசதி எல்லாம் பெற்றிருந்தும் இந்தப் பெண் ஏன் வேலைக்குப் போகாமல் இருக்கிருள்? இதில்தான் ஏதோ மர்மம் இருப்பதாகத் தோன்றியது. காதல் விவகாரமாய் இருக்குமோ?

வாசவி கிட்டே நெருங்கியதும் நான் சொர்ணத்தைப் பார்த்து, ''சொர்ணம், ஒரு தம்ளர் மோர் குடேன்'' என்றேன்.

அவள் உடனே எழுந்தாள்.

''என்ன மாமா, இந்தக் குளிரிலே நீர்மோரா?'' என்று வாசவி கேலி செய்தாள்.

''உங்க அம்மா கையினுல் கரைச்ச மோரை நேனச்சுத்தானே இவ்வளவு தூரம் வந்திருக்கேன்? மோரை எப்படிச் சுத்தமாக் கழுவி எடுப்பாள் தெரியுமா? எங்க ஊரிலே ராமநவமி உற்சவத்தின்போது உன் அம்மாவுக்கு ஏக டிமாண்டு. கால் படித் தயிரிலே ஐந்நூறு பேருக்கு மோர் தயார் செஞ்சிவொர்!''

''போதும்! அந்த அளவு மோர் குடிச்சா எதேஷ்டம். இப்பவே நீ தொப்பையும் தொந்தியு மா இருக்கே'' என்று கூறியபடி சொர்ணம் உள்ளே போய்விட்டாள்.

தாய் அப்பால் நகர்ந்ததும் நான் பெண்ணைக் கவனித்தேன். தங்க விக்கிரகம் போன்ற மேனி. பிறை நெற்றியும், பெரிய சாந்தமான கண்களும், கூர்மையான மூக்கும், குவித்த வாயும் பார்ப்போரைப் பிரமிக்கச் செய்யும் விதம் அழகாக இருந்தாள்.

''என்ன? நீ இந்த நாட்டிலே இருப்பேன்னு நெனக்கலே. இருந்தாலும் இங்கே எதிர்பார்க்கலே. எந்த ஊரிலேயோ கலெக்டரா ஜமாபந்தி நடத்தறயோன்னு எதிர்பார்த்தேன்.''

''இல்லே, மாமா. அதெல்லாம் ஒண்ணும் ஏத்தக்கலே'' என்ருள் வாசவி, சாதாரணமாக.

அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், ''யாரு இந்த வாக்கிங் ஸ்டிக்?'' என்று அந்தப் பையனைச் சுட்டிக் கேட்டேன். அவன் அவள் பக்கத்தில் நாய்க்குட்டிபோல அமர்ந்திருந்தான்.

அவன் தலேயை ஆசையுடன் வருடியபடி, ''மாமா, சரியான பேர் வச்சேன் இவனுக்கு! ஆனுல் இவன் பேர் பில்லு'' என்ருள் வாசவி.

பில்லு என்னைப் பார்த்துச் சிரித்தான். வெள்ளே வெளேரென்ற அவன் பல் வரிசையும், அழகாக வெட்டப்பட்டு வாரிய தலேயும், சுத்தமான உடையும். எல்லாவற்றிலும் வாசவியின் வைவண்மை தெரிந்தது.

''ஏன் ஏத்துக்கலே நீ? அதுக்கு அந்தப் பரீட்சைகளுக்குப் போயே இருக்க வேண்டாமே!''

''மாமா, அதைப்பத்தி அவ்வளவு கலபமாச் சொல்லிவிட முடியாது. இருப்பிங்க இல்லேயா? அப்புறம் சொல்றேன். இன்னிக்கு எனக்கு ஜன்ம நட்சத்திரமாம். நான் போய், சாங்கோபாங்கமாக எண்ணெய் தேய்த்துக் குளித்து,பட்டுப்புடவை, நகையெல்லாம் தரித்துத் தயாராகணும். பால் பாயசம் மணக்கிறது, தெரியலே?'' என்று கூறிவிட்டு அவள் உள்ளே போய்விட்டாள். பில்லுவும் அவள் பின்னடியே நடந்து நிழல் போல் சென்ருன்.

நான் தோட்டத்தில் இறங்கி இப் படியும் அப்படியும் அலேந்தேன். ஒரு ரோஜாச் செடிக்கு முன்னடி நின்று அதன் அழகில் லயித்திருந்தேன்.

''ரவி, மோர் கேட்டியே?'' என்று குரல் கொடுத்தாள் சொர்ணம்.

''வாசவி ஏன் ஒரு வேலேக்கும் போகாமல் இருக்காள்னு நீ கேட்டியா?'' என்ருள் தொடர்ந்து.

''அதெல்லாம் மெதுவாகச் சொல்ருளாம்.''

''அவ புடைவையைப் பார்த்தியா? அறுபதாம் நம்பர் நூல் சேலேதான் கட்டாரு. கோயம்புத்தூரிலே இவளுக்குன்னு ஒரு தறிகாரர் கலர் கலரா இதே மாதிரி சேலே அனுப்பிவைக்கிருர். கூலிங்க குடியிருப்பிலே அதைப் பங்கேடு பண்ணிட்டுத் தானும் அதையே உடுத்தரு.'' பேச முடியாமல் துக்கம் அவள் தொண்டையை அடைத்தது.

அவளேப் பேசவிட்டு விவரமாகக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று பார்த்தேன். அதற்குள் அவள் கணவர் வந்துவிட்டார். என்னைக் கண்டதும் இரு கைகளாலும் என் கைகளேப் பிடித்துக் குலுக்கி வரவேற்ருர். ''வா, ரவி. ஒரு மாசம் இருக்க வாமா? சொர்ணத்துக்குக் கொஞ்சம் பொழுது போகும்'' என்ருர்.

''ஒரு வாரம் இருப்பேன்'' என்று பேச ஆரம்பிப்பதற்குள் சொர்ணம்



என்னவோ கண்ணைக் காட்டி, என்னை அடக்கினாள். நான் பேசாமல் இருந்து விட்டேன்.

''சரி, சொர்ணம், எனக்கு நல்ல பசி. குளிச்சவுடனே சாப்பாடு கெடைக்கும்தில்லியா?'' என்று கேட்டவர், செல்லமாய்த் தம் மனைவியின் கன்னத்தில் லேசாகத் தட்டிவிட்டு உள்ளே சென்றார்.

''நான் உள்ளே போகிறேன், ரவி. அவரைக் கவனிக்கணும். நீ வேணுமானால் அப்படியே என்னேட்டை சுத்திப் பார்த்துவிட்டு வா. சாப்பிட நாழியாக்காதே.''

''உன் பொண்ணுக்குப் பொறந்த நாளாமே? விருந்துக்கு நாழி யாக்குவேனு?''

சொர்ணத்தின் முகம் பிரகாசமடைந்தது. அவள் ஆவலுடன் என் கையைப் பிடித்து, ''அவன் சொன்னானா? சீக்கிரம் வா'' என்றாள்.

அவளுடைய தக்கமும், சந்தோஷமும் எனக்குப் பதிதாபமாக இருந்தன. நான் விரைவாக நடந்து அவர்கள் நெய்யேத் தோட்டத்தைக் கத்தி வந்தேன். தொழிற்சாலே இயங்கிக் கொண்டிருந்தது. நான் சற்றுத் தொலைவேவே நின்று பார்த்து விட்டுத் திரும்பினேன். தொழிற்



சாலேக்குப் பக்கத்தில் ஒரு பெரிய புதுக் கட்டிடம் இருப்பதைக் கண்டேன். நான் யாரையும் ஏதும்கேட்க நினேக்கும் முன்பே அருகிலிருந்த ஒரு தோட்டக்காரன், ''அது தான் ஆராய்ச்சிக் கூடமுங்க'' என்றான்.

நான் மெதுவாக வீடு வந்து சேர்ந்தேன். வரவேற்பறையில் குடும்பம் கூடியிருந்தது. வாசலி இளநீரைப் பெவ்வம் கலந்த உடலில், அரக்குக் கரையில் முன்று அங்குல நீளகை போட்ட புடவை அணிந்திருந்தாள். தலேயைப் புதுவிதமாகக் கொண்டை போட்டிருந்தாள். அதில் ஒரு நவ ரத்தின மயில் றொலித்தது. கழுத்தில் நவரத்தின மாலே, கையில் நவ ரத்தின பிரேஸ்லெட். பார்க்கக் கல்யாணப் பெண் மாதிரி நிகழ்ந்தாள். அவள் பெற்றோர் அவளப் பெருமையுடன் பார்த்தவண்ணம் நங்கள் பாசத்தை அவள்மீது அபிஷேகம் செய்தனர்.

''ஒரு மாப்பின்னேதான் தேலை'' என்றேன். அந்தப் பேச்சை என் வாயை விட்டு வெளிப்பட்டவுடன் என் முதுகெலும்பில் என்னவோ செல்லிட்ட மாதிரி இருந்தது.

வாசலி தன் அகலக் கண்களே நிறந்து என்னே ஒரு பார்வை பார்த்தாள். சாந்தமே நிறைந்த பார்வை யாளுலும், அவளே நான் எந்த விதத் திலோ காட்டிக் கொடுத்துவிட்ட மாதிரி எனக்கு ஓர் உணர்ச்சி.

சொர்ணத்தின் கணவர் எதையோ மறைக்க முயல்பவரேபோல அட்டுச் சிரிப்புச் சிரித்தார். ''சரி, வாங்க, சாப்பிடலாம்'' என்றார்.

வாசலி பதுமையேபோல எழுந்து, வந்து, எங்கள் முவரையும் நமஸ் கரித்தாள். பிறகு மேஜையண்டை என் அருகில் வந்து அமர்ந்தாள். அவள் தகப்பனர் எழுந்து வந்து, அவள் முகத்தைத் திருப்பி வாழ்த்தினர். உச்சி மோந்தார். ''நாராயி பார்த்தே.'' தாயார் வந்து, பின் புறமாக அவளே அணேத்துக் கன்னத் தில் முத்தமிட்டாள். அந்த இருபத்து நான்கு வயதுப் பெண், றெமிபோல் தன் இரு கைகளாலும் தன் தாயை அணேத்துக்கொண்டாள்.

இந்தப் பாசப் பரிமாறலேப் பார்க்க எனக்குச் சங்கடமாக இருந்தது. நான் இயல்புக் கவலிக்கவனேன். சொர்ணம் குளப்றூமுள் செப் திருந்தாள். ஒரு பினைக் விண்டத் தில் இரண்டு தூளுன்னே டெத்து வாசலியிடம் நீட்டினேன்.

''உங்களுக்கு'' என்றள் அவள்.

சொர்ணம் என்னர் இயிலும் நிரம்பப்படி பரிமாறிவிட்டு அமர்ந் தாள்.

வாசலி எழுந்தாள். தன் தட்டில் எவ்வாவற்றையும் நிறைய எடுத்து வைத்துக்கொண்டு, இன்னமும் இரண்டு குளப்றூமுன் எடுத்து அடுக்கிக்கொண்டு மெம்பிலிட்டாள்.

வாசலியின் பெற்றோர் ஒருவரை யொருவர் சந்தேகமாகப் பார்த்துக் கொண்டார்கள். எச்சில் கையைக் கழுவாமலேயே நான் வாசலி சென்ற திக்கில் சென்றேன். பக்கவாட்டி லுள்ள தாழ்வாரத்தில் அவள் இரண்டு பெரிய வாழை இலேகளேப் பரப்பி அவற்றில் பங்கு வைத்துக் கொண்டிருந்தாள்.''' ஒசைப்படாமல் நின்று கவனித்தேன். பின்னுலும் அவளும் எதிர் எதிரே அமர்ந்து ஆனந்தமாகச் சாப்பிட்டனர்.

நான் சாப்பாட்டு மேஜைக்குத் திரும்பினேன். விருந்தில் ரசனே சாப்பிட்டுவிட்டது. எப்படியோ உண்டு எழுந்து வந்தோம்.

சொர்ணம் தன் அழகையைக் கட்டுப்படுத்த முடியாமல் முகத்தைத் திருப்பிக்கொண்டாள். அவள் கண வர் அவள் தோளேப் பிடித்து, முடி லில் நட்டி ஆசுவாசப்படுத்தினர். பிறகு யாரோ வந்து அழைக்கவும் அவர் வெளியேறினிட்டார்.

''சொர்ணம்! என்னம்மா?'' என்று நான் பதிவடன் விசாரித்தேன்.

''அந்த ஊர், பேர் இல்லா அநாதைப் பையனுடன் நான் இருப் பான். நான் அசை ஆசையாக்கி செய்த நகைகளேயோ, வாங்கின துணிமணியையோ அளியவேண் டாம். செய்த பண்டத்தையாவது சாப்பிடக்டாதா? நான் ஏன் நான் இந்த அத்தவானக் காட்டில் வந்து மாட்டிக்கொண்டேனோ, தெரி யலியே!'' என்று அரற்றினள்.

''இதோ பார், சொர்ணம். நீ சொல்கிற மாதிரி ஒன்றுமில்லே. நீ குடுத்த புடவையைக் கட்டிக் கொண்டாள், நீ விரும்பின நகையை அளித்து கொண்டாள், நீ சமைத்த தையே ருசிச்சி சாப்பிட்டாள். நவறு அவள் மீது இல்லே. உன்மீது தான். உன் மனக்குக் கொஞ்சம் மாறுதல் தேலை. என்னேடு கொன் நேக்கு வா. சின்ன கச்சேரி கேட்டுச் பினமாப் பார்த்து, நாலு பேருடன் சேர்ந்து இருந்துவிட்டு வந்தால் சரியாயிடும். இன்னதெல்லாம் பெரி சாத் தெரியாது.''

அவள் என் பேச்சை ரசிக்கவில்லே. ''நீ நெனக்கிறபடி இல்லே இவர்கள். இன்னும் அரை மணி பொறுத்துப் பார். பழைய முரட்டுச் சேயும், உச்சியிலே கொண்டலடியும், கையிலே தடைப்பமாகக் கெண்டி வா. வசதியுள்ள ஒரு குடும்பத்திலே ஒரு சாதாரணத் தாய் ஆகப் படறபடி. ஒரு பெண் இருக்கக் கூடாதா?''

அவளுடன் பேசிப் பலனில்லே என்று நான் என் அறைக்குச் சென்று படுத்துவிட்டேன். எழுந்து வந்த போது, சொர்ணம் சாப்பாட்டு மேஜையருகில் அமர்ந்து காத்திருந் தாள்.

காபியைப் பருகியபடி, ''எங்கே வாசலி?'' என்று கேட்டேன்.

''நான்தான் சொன்னேனே!'' என்று கூறிவிட்டு எழுந்து அப்பால் போய்விட்டாள். அவள் கண்கள் குளமாக இருந்தன.

நான் வாசலியைத் தேடி விரைந் தேன். சொர்ணம் கூறியது போலவே கூகிள் குடியிருப்பில் அவள் என் னவோ குழந்தைகள் ஒட்டப் பந்த யம் நடத்திக்கொண் டிருந்தாள். சுற்றுப்புறம் நிறைய ஆண்களும் பெண்களும் வேடிக்கை பார்த்தனர்.

''வாசலி, உன்னேடு நான் பேச னுமே!'' என்றேன் நான், அவள் காதருகில்,

இப் பண்டிகை நேரத்தில்
இனியதோர் முடிவெடுப்பீர்!



அதிகப்படி வருமானத்தை

கெல்ட்ரான் டி.வி. யில்

முதலீடு செய்யுங்கள்.

உங்கள் முதலீட்டுக்கு ஏற்ற மதிப்புடைய டி.வி.


பண்டிகைக் காலம். ஆர்வமும் மகிழ்ச்சியும் நிலவும் நேரம். குடும்பத்தினருடன் களிப்பில் திளைக்கும் நேரம். கெல்ட்ரான் டி.வியை வாங்குங்கள். அதன் துணையுடன் மகிழுங்கள்.

இன்றைய டி.விக்களைக் காணுங்கள். கெல்ட்ரான் டி.வியுடன் ஒப்புநோக்குங்கள். அதன் தெளிவான படங்களையும் ஒலி வளத்தையும் அழகிய கட்டமைப்பையும் நீங்கள் விரும்பு வீர்கள். கெல்ட்ரானின் இணை யற்ற தொழில் நுட்பத்திறனின் துணையுடன் சிறந்த விற்பனைக்குப் பின் சேவை கிடைப்பதையும் கருத்தில் கொள்ளுங்கள்.


கெல்ட்ரான் டி.வியை வாங்க முடிவெடுங்கள். உங்கள் முதலீட்டை பெருமைப்படத் தக்கதாக்கும் கெல்ட்ரான் டி.வி.

கெல்ட்ரான் டி.வி. சிறப்பம்சங்கள்:

* ஐந்து அழகிய மாடல்கள்— டீலக்ஸ், எகானமி மற்றும் 24" திரையை உடையது உட்பட.
* சலனமற்ற தெளிவான படங்கள்.
* ஹை-டிடிலிட்டி ஒலி, துல்லிய மான டியூனிங்.
* மிகவும் குறைந்த அளவே மின்சக்தி செலவு.
* அரிதாகவே தேவைப்பட்டாலும் உடனடியான, மிகவும் நம்பகமான விற்பனைக்குப் பின் சேவை.
* பல சானல்களையும் ஈர்க்க வல்ல 12 சானல் சாலிட் ஸ்டேட் சர்க்யூட்ரி.



TM951



TM 851 D

KELTRON
know-how to serve the people.

கேரளா ஸ்டேட் எலக்ட்ரானிக்ஸ் டெவலெப்மெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட்
பம்பாய் ● டில்லி ● கல்கத்தா
சென்னை ● திருவனந்தபுரம் ● பங்களூர்
ஹைதராபாத் ● அஹமதாபாத்.

FDS KE-1010-TAM

''ஒவ்வொரு நிமிஷமும் உங்களை எதிர்பார்த்துக்கொண்டே இருக்கேன். அம்மா என்ன சொல்லிருள்?'' என்று சிரித்துக்கொண்டே பேசினாள் அவள்.

''எங்கே பேசலாம்?''

''மரத்தடியிலே உட்காருவோம். பந்தயம் அவர்களே நடத்திக்கொள்வார்கள்'' என்றாள் வாசவி.

''அம்மா ரொம்ப வருத்தப்படுரு'' என்று ஆரம்பித்தேன்.

வாசவி என்னைப் பார்த்த பார்வையில் பாசமும் பரிதாபமும் கலந்திருந்தன. ''அம்மாள்ளு இருந்தா அப்படித்தான் வருத்தப்படுவா, மாமா. என்ன செய்யறது?'' என்றாள் அவள்.

''தலைமுறை இடைவெளியைக் குறிப்பிடறியா?''

''அது இல்லே, மாமா. அன்புள்ளு ஒண்ணு வந்தா, கூடவே வேதனையும் வரும். அன்பு என்கிறது மழை நீரைப்போல. காத்தைப்போல பரந்து பரசுக்கும் பயன்பட வேண்டியது ளு நான் நெனக்கிறேன். அம்மா அதை எங்க குறிப்பிட்ட சமூகத்துக்குள்ளே, அதிலும் எங்க குடும்பத்துக்குள்ளே, அதிலும் எங்க ரெண்டு பேருக்குள்ளேயே அடைச்சு அநுபவிக்கப் பார்க்கிறு. இன்னும் சொல்லப் போனால் தன்னேடேயே அது தேங்கி நின்னுடணும்னு விரும்பரு. அந்தப் பாசத்தின் வலு எனக்குப் புரிகிறது. ஆனா, மாமா, எந்தத் தேக்கந்தான் எத்தனை நாட்கள் ஆரோக்கியமாக இருக்கும்?''

''நீ பேசறது எனக்குப் புரிலேயே, அம்மா!'' என்றேன். ஒருவிதமாகப் புரிந்தது. ஆனாலும் அவள் வாயாலேயே விளக்கம் வரட்டும் என்று காத்து நின்றேன்.

''புரியாமல் ளன, மாமா? நீங்களும் என்னைக் குழந்தையிலிருந்து பார்த்துவ்ரு இருக்கிங்க. நான் என்னிக்காவது நகை, பட்டுப் பாவாடைன்னு ஆசைப்பட்டது உண்டா? தவிர, என் அப்பா எனக்குக் கதை சொல்லிச் சொல்லி ஓர் இரக்கத்தை என் உள்ளத்திலே சுரக்க விட்டுட்டார்னு நெனக்கிறேன். பிறர் கஷ்டத்தை என்னலே பார்க்க முடியாத இல்லே. வயசு ஆக ஆக, படிக்கப் படிக்க, எனக்கு அந்தக் கரிசனம் ரவி, வெகுதூரம் வையை விரிக்கிறது, துடிக்கிறது, இதம் ளளிக்க இடம் தழாவுகிறது.''

என் மெய் சிலிர்த்தது. நான் ஒன்றும் பேசாமல் அவளே மேலும் பேச விட்டேன்.

''அமெரிக்கா போய்ச் சமூகவியல் படிச்சேன்; அங்கே பல குழல்களைக் கண்டு ஆராய்ந்தேன். குமுத்தைகள் நீய வழிகளுக்குச் செல்வதைக் கவனித்தேன். என் மனசிலே ஒரு தீர்மானம் உருவாச்சு. எங்களைப் போல வசதியுள்ளவங்கதானே வசதியற்றவங்களுக்கு உதவ முடியும்? எப் படியும் என் கல்யாணம், அது, இது என்று லட்ச ரூபாய் செலவழிப்பார்கள். அதை வச்சு உருப்படியாச் சமூகத் தொண்டு செய்யணும்னு எனக்கு ஆசை. இந்தக் குடியிருப்புக் குழந்தைகள் மாதிரி [எத்தனை குழந்தைகள்! அவங்க அறிவை நல்ல வழியில் திருப்பாவிட்டால் நாடே கெடுமே!''

அவள் தன் சித்தணக்குள் சிக்குண்டு மவுனமாகிவிட்டாள். பிறகு தூங்கி எழுந்தவள்போல, ''மாமா, நிரும்பி வந்தவுடனேயே ஸ்ரீசாரதா மடத்தில் சேர்ந்துவிடுவது என்று நீர் மானிச்சேன். ஆனு, அம்மாவால் அதைத் தாங்க முடியாதுள்ளு புரிஞ்சது. பிறகு அன்னை தெரசா கூட்டத்தில் சேரலாமுன்னு யோசித்தேன். அதுக்கும் அம்மா மனசு இன்னும் பக்குவப்படணும். அதுவரை இங்கே எனக்குக் கைக்கெட்டிய இடத்தில் என்னுல் முடிஞ்சதைச் செய்யறேன். அதில் ஓளவு நிறைவு காணறேன். அப்பா, அம்மா ஆகிக்காக் காத்திருக்கேன். அவங்கள் கண்ணீரை உதறித் தள்ள எனக்கு உறுதி போதலே, மாமா. கொஞ்சம் கோழை நான்.''

மறுபடியும் மவுனம். பிறகு நிங்கம் போலத் தலையை உளுக்கிக்கொண்டு,



தரகர்: இந்தப் பொண்ணு அங்க லட்சணமிலேன்னு சொல்லாதீங்க; அவ லட்சணமாத்தானே இருக்கா?

''இன்னிக்கு நான் உடுத்திண்டேனே, அந்தப் புடைவை வெலே தெரியுமா? எழுநூத்து அம்பது ரூபாய். என் குடியிருப்பில் நூத்தைம்பது பேர்கள் சேலே உடுத்தலாம். எனக்கு அந்தப் புடைவை உடலில் உறுத்தாதா?.ஆனுலும் அம்மாவுக்காக அதை உடுத்தறேன், நகையைப் பூட்டிக் கொள்றேன். ஆனு, மனம் அதில் ஒன்றவில்லேயே, மாமா? நான் விட்டுக் குடுக்கிற நாதிரி அம்மாவும் விட்டுக் குடுக்கும் நாளுக்காகக் காத்திருக்கேன், பொறுமையா'' என்றாள் வாசவி.

''அக்கா, அக்கா!'' என்று கூக்குரல் எழும்பவும் அவள் நிர்த்துக் கொண்டே, ''மாமா, மன்னிச்சுக் குங்க. என் பிசாசுகள் என்னைக் கூப்பிடுகிறதுகள்'' என்று கூறிக் கொண்டே ஓடிவிட்டாள்.

நான் வீட்டுக்கு மீண்டேன். சொர்ணமும் அவள் கணவரும் முன் வராந்தாவிலே இருந்தனர்.

''என்ன சொல்லிருள் உன் செல்லம்?'' என்று வினவும் வாசவியின் தந்தை.

சொர்ணம் அவனும் பீதியுமாக என்னைப் பார்த்தாள்.

''சொர்ணம், நீ எப்படி நடந்துக்கப் போகிருயோ எனக்குத் தெரியாது. கடவுள் உனக்கு வழி காட்டட்டும். ஒண்ணு மட்டும் சொல்லவேன். நீ ரொம்பப் பாக்கியசாலி. இந்தமாதிரி; ஒரு பொண்ணப் பெத்து எடுக்க யாரோ ஆயிரத்தில் ஒருவர்தான் பேறு பெற்றிருப்பாங்க. உன்னப் போல ஏதோ ஓர் அன்னை ஒரு சமயம் மனப்பூர்வமாக விட்டுக் குடுத்தலுலோ,ான் நமக்கு ஆதிசங்கரர், அன்னை தெரசா, விவேகானந்தர், சாரதாமணி தேவியார் எல்லாம் கெடைச்சாங்க.''

''என்ன சொல்றே, ரவி? என்னத் தெளிய வைப்போனு நெனச்சா, ரொம்பக் குழப்பறயே!'' என்ரள் சொர்ணம்.

''உன்னே நான் குழப்பலே. நீ தான் தெளிய மறுக்கறே. உன் ஆசைகளே நெறவேத்த உன் மகுக்களும் பேத்திகளும் இருக்காங்க. உலக நன்மைக்காக உன் குழந்தையை விட்டுக்குடேன்.''

அடி பட்டவள் போல் சொர்ணம் ஒடுங்கிவிட்டாள்.

நான் விடாமல் பேசினேன். ''ஜாதி மதபேதம் கூடாதுன்னு எல்லாரும் அரும்பாடு படருக. ஹரிஜனங்களேத் தூக்கிவிட முயற்சி செய்யருங்க. உன் கையில் கெடைச்ச பில்லுவை நீ நீக்கி வைக்கிறே, யோசிச்சுப் பார்.''

அவள் எண்ணி நிமிர்ந்து நோக்கினுள். ''நான் என்ன ஆசாரமா பார்க்கிறேன்? என் பெரண்ணே என்னுடன் ஒட்டிவச்சுக்கொள்ள யத்தனிக்கிறேன். அது தப்பா? ராஜபதவியிலே பொறந்த பொன்றாஜாதியா வாழணுங்ளு சொல்றேன். அது ஒரு குத்தமா?''

நான் அவளுக்குப் பதில் சொல்ல விலேலே. எழுந்து வாசவியைத் தேடிச் சென்றேன்.

அவள் பஜனே செய்துகொண்டிருந்தாள். எல்லாரும் அதில் பங்கு கொண்டார்கள். பிறகு அவள் அன்பைப்பற்றிப் பேசினுள் அவள் எழுந்து வந்தபோது ஒரு தேவதையைக் காண்பது போல. இருந்தது.

''என்ன, வாசவி, மோட்டி முடிஞ்சு, பஜனே, பிரவசனமா?'' என்று கேட்டேன்.

''எல்லாம் ஆச்சு, மாமா. ஏதோ அவங்களுக்கும் ஒரு மனமாதிம். எங்கெங்கோ போகிற கூட்டத்திலே ஒரு லிலராயவது மடக்கிப் போட்ட நெறவு எனக்கு'' என்ரள் அவள்.

முன்னுடி தாயிடம் பிரஸ்தாபித்த விஷயத்தை இப்போது மகளிடம் ஆரம்பித்தேன். ''பில் ஹூவுக்கு யாரும் கெடையாதா? அப்போ விருந்து சாப்பாட்டை விட்டு எழுந்து

போய் நீ அவனுடன் சாப்பிட்டது உன் அம்மாவுக்கு ரொம்பக் குறை'' என்றேன். அவள் சொல்லப் போகும் தெளிவும் தெரியும். ஆயினும் அவள் பதில் ஆவலோடு எதிர்பார்த்தேன்.

''தெரியும், மாமா. ஆனால் அவங்களுக்கு என்மேல் இருக்கிற அன்புப் பிணைப்பிலே அந்தக் குறை அப்படியே மறைந்திடும். பில்லுவைத் தனியா வச்சு வெளித் தாழ்வாரத்திலே சோறு போட்டாள், என் அன்பே இல்லேன்னு அவன் உடைஞ்சு போவான். என் அன்பு அவனுக்கு எப்பவும் உண்டு என்ற உறுதி அவனுக்கு வரணும், மாமா. அப்பா செடியை வச்சு ஆராய்ச்சி பண்ணுர். நான் பில்லுவை வச்சுப் பரீட்சை பார்க்கிறேன். அவ்வளவுதான். அவனே ஒரு முழுமையான மனிதனு ஆக்கிட்டேனுட் போதும். ஒவ்வொரு பில்லுவுக்கும் ஒரு வாசவி தேவை. ஆனல், உலகத்திலே நூறு பில்லு வுக்கு ஒரு வாசவி கெடைக்கவேயே! இதையிட்ட பரிதாபம் இருக்கா?'' என்ருள் அவள், கண்களில் நீர் மல்க.

''நீ சொல்றது உண்மைதான், அம்மா. ஆனு ஆம் தேவைப்படும் போது பகவான் உன் போன்றவர் கள் மூலம் தோணத்தான் செய்வார். கண்ணின் வாக்குறியே அது தானே?''

''என்னை நீங்கள் ரொம்ப ஒசத்தறேள். மா மா, அவ்வளவுக்கு எனக்குப் போதாது. என் கொள் கையே பெரிசுன்னு எல்லாத்தையும் உதறிட்டுப் போயிடலாம். ஆனல், அப்பா, அம்மாவை வருத்தப்படுத் தவும் எனக்குத் துணிவு இல்லே. சரி, அம்மாதான் நியாயம் செய்ய மாட்டார். நாம்தான் நம் ஆசை யைக் கிள்ளி எறிஞ்சுட்டு அம்மா இஷ்டப்படி வாழலாம் என்ருலே, நான் மணக்கப் போகிற வரை நான் நிருப்பி படுத்த முடி யுமா? சம்பந்தப்படாதவர்களே நான் துன்பத்துக்கு ஆளாக்கக் கூடாது. என் மனம் அதுக்கும் இடம் குடுக் கல்லே. இங்கே அம்மா, அப்பாவின் கண்விச்சில் இருந்தபடியே இந்தக் குடியிருப்பில் என் ஆசையை நெறைவேத்திக்கொள்ரேன்;''

''உங்க அம்மா, உங்கிக் கல் யாணம் பண்ணிக்கச் சொல்லித் தொந்தரவு செய்யலியே?''

''உள் மனசில் குறைதான்.''

''உன் அம்மா இஷ்டப்படி ஆடை அலங்காரம் செஞ்சுண்டு, உன் விருப்பப்படி தொண்டு செய்யேன்?''

''நான் உடுத்தாத உடுப்பைப் பிறரை உடுக்கச் சொல்லி, நான் உண் ணுத உணவை அவங்களைச் உண்ணச் சொல்லி உபதேசம்செய்வதை எனக்கு நேர்மையாத் தோணலில்லே. எளிய வாழ்க்கையில் இன்பம் காணலாம் என்பதை நான் வாழ்ந்து காட்ட வேண்டாமா? உண்மை இருக்கவேண்டாமா?''

நான் வாயடைத்துப் போனேன்.

நீங்கள் இருவரும் வீட்டுக்குள் நுழைந்தோம். சொர்ணம் அமர்ந்து பூக் தொடுத்துக்கொண் டிருந்தாள்.

''பில்லு எங்கே?'' என்று கேட் டாள் வாசவி.

''எஞ்ஜினியர் வீட்டிலே கொழந் தையைப் பார்த்துக்க ஆள் கேட் டாங்க. அவனே அனுப்பினேன்'' என்ருள் சொர்ணம், தலே நிமிராமல்.

''அவங்க கேட்டார்கள், நீயே அனுப்பினுயா? அப்பா எங்கே?'' வாசவியின் குரலில் துக்கமும் கோப மும் போட்டியிட்டன.

''உன்னிடம் பொலத்தான் அவரும் பில்லுவைக் கேட்டார். நான் சொன் னதும் வெளியே போனுர்'' என்று அசிரத்தையாகப் பதிலளித்தாள் சொர்ணம்.

''உனக்கு இப்ப சந்தோஷந் தானே?'' என்று விசாரித்தாள் மகள். அவள் குரலில் கடுமை எனியே நடுங்க வைத்தது.

அவள் தாய்க்கும் ஏதோ புரிந் திருக்க வேண்டும். சொர்ணம் தலே நிமிரவே இல்லே.

எந்த விதத்தில் இந்த மூட்டத் தைக் கலேப்பது என்று எனக்குப் புரியவில்லே. நான் மெதுவு சென்று ஏதோ புத்தக அமைாறியைக் குடை யப் போனேன்.

''சரி, அவனேத் தேடிண்டு வந்து சாப்பிடரேன்'' என்று வாசவி கண் டிப்புடன் கூறிவிட்டு இருட்டில் வெளியேறினுள்.

நானும் பீதியுடன் அவளுடன் இளம்பினேன். மரண தண்டனே விதிக்கப்பட்ட கைதி போலக் நிலேயாகச் சொர்ணம் அமர்ந்திருந் தாள்.

நாங்கள் பத்தடிகூட நடந்திருக்க மாட்டோம், ''அக்கா!'' என்று சந்தோஷக் குரலுடன் பில்லு ஓடி வந்தான், அமாவாசைஇருட்டிலிருந்து ஒரு தண்டு இருட்டுப் பிரிந்து வந்த மாதிரி.

வாசவி அவனே அணைத்துக்கொண் டாள். அவள் கண்களில் நீர் வழிந் தது.



முன் கார்க்காரர்: என்னம்மா, ஹார்ன் அடிச்சுக்கிட்டே இருக் கேன். ஸ்டார்ட் பண்ணும இருக் கிங்களே!

முன் கார்க்காரி: கார் ஸ்டார்ட் ஆகமாட்டேங்குதே! நீங்க வந்து உக்காந்து என் காரை ஸ்டார்ட் பண்ணுங்க. நான் உங்க கார்ல உக்காந்து ஹார்ன் அடிக்கிறேன்!

''அப்பா எத்தினி மத்தாப்பு வாங்கித் தந்தாங்க பாரு, அக்கா!'' என்று ஆர்ப்பரித்துக்கொண்டே, ஓர் அட்டைப் பெட்டியை அவள் கையில் திணித்தான் பில்லு.

வாசவி தன் தகப்பஞரை நிமிர்ந்து பார்த்தாள். அவரும் பின் வாங்கா மல் மகனேச் சாவதானமாகப் பார்த் தார். அவ்விருவருக்கும் இடையே தோழமைக் கொடி வலுவாகப் பின்னிக் கொண்டதை அத்தப் பார் வையில் கண்டேன்.

''சாப்பாடு ஆறிப் போறது'' என்று சொர்ணம் குரல் கொடுத் தாள். ஒவ்வொருவரச் சமாளித்துக் கொண்டு தன் கடமையை இறுதி யில் உணர்ந்தாள் போலும்!

எல்லோரும் மௌனமாக உள்ளே சென்றோம். சொர்ணம் மேஜையில் வாழையிலே போட்டுப் பரிமாறு ஆரம்பித்தாள்.

வாசவி ஓர் இலே முன்னும் அமரா மல் தயங்கி நின்ருள்.

''பில்லு, அக்கா பக்கத்துச் சேரிலே உன்னியே உட்காரு, மட மடன்னு. பட்டாசு கொஞ்சுநிட்டுப் படுக்கிறதுக்குள்ளே விடிஞ்சுடும்'' என்ருள் சொர்ணம், கண்சிரன்று.

வாசவி தாயை இறுக அணேத்துக் கொண்டுவிட்டாள். ''அம்மா, அம்மா!'' என்ருள். மேலே பேச்சு வரவில்லே.

''நான் மாறிட்டேன்னு நீ பாராட் டரே, தெரியறது. அது கண்டமா இல்லேன்னு சொல்லமாட்டேன். ஆனல், ரவியின் புண்ணியத்தினுலே உனக்காக விட்டுக்கொடுக்கிற ஆள வுக்கு என் மனசு இப்ப விரிஞ் சிருக்கு'' என்ருள் சொர்ணம்.

டேப் ரிக்கார்டரில் ஒரு வயலின் இசையை முடுக்கி விட்டுவிட்டுத் தகப்பனுர் உண்ண அமர்ந்தார். மௌனமாகவே சாப்பிட்டுவிட்டு எழுந்தோம்.

''வாசவி, எத்தனேயோ நாளா கப் பழகிவிட்ட மரபு மனம் அம்மாவுடையது. அதை நீ தப்பா நெனக்காதேடி.'' என்று ஆரம்பித்து ஏதோ சொல்ல வாயெடுத்தார் தந்தை.

''அதெல்லாம் எதுக்கு? இத்தத் தீபாவளிக்கு நான் எல்லோருக்கும் எத்தனேயோ பரிசு வாங்கி வச்சிருக் கேன். ஆனுல் எங்க ரவி குடுத்த பரிசை விட எதுவும் பெரிசு இல்லே'' என்ருள் சொர்ணம்.

எனக்கு வெட்கமாகிவிட்டது. ஒரு சிறு தருப்புகூடப் பரிசாக வாங்கி வரவில்லே நான். அவள் கடித்தைப் பார்த்து உடனே ஓடி வந்துவிட் டேன். ''பரிசா? நானு?'' எ ன்றேன்.


''ஆமாம், மாமா. எனக்கு அம் மாவையும் அம்மாவுக்கு என்னையும் குடுத்த புண்ணியம் உங்களுக்குத் தான்'' என்ருள் வாசவி.


எனக்குத் தர்மசங்கடமாக இருந் தது. நில உணர்ச்சிகளே உணரத் தான் தெரியும், வாய்விட்டுச் சொல்லக்கூடாது. நான் சங்கோ சத்துடன் பதில் சொல்ல முடி யாமல், பில்லுவைக் கூட்டிக்கொண்டு தோட்டத்தில் சட்டிவாணம் விட்ட போய்விட்டேன்; ❋


Heartiest Deepavali Greetings


TEXTOOL


IN SERVICE OF TEXTILE INDUSTRY FOR OVER THREE DECADES
OFFER
SPINNING & WINDING MACHINERY
FOR
COTTON - WOOLLEN - SPUN SILK - SYNTHETIC FIBRES


SPEED FRAME


RING SPINNING FRAME



RING DOUBLING FRAME



WOOLLEN RING SPINNING FRAME




USERS FIND THEM

REAL MONEY SPINNERS


CONE WINDER


DOUBLING WINDER


HANK TO CONE WINDER


COTS GRINDER

ASSURED DELIVERY • PROMPT SERVICE • ECONOMIC PRICES
Enquiries to:
SALES MANAGER (TEXTILE DIVISION)

TEXTOOL COMPANY LTD.
COIMBATORE-641 006
TELEX: 855/353 TXT IN. PHONE: 26231 (5 LINES) GRAMS: TEXTOLCO.

TXT/OSR

Use TSRM TORSTEEL and TISCON (Cold Twisted Deformed Bars) Tested to IS: 1786 for your Building constructions and save 40% in Steel Costs in TOR 40 and TISCON 42 and 50% in TOR 50 and TISCON 50

For your requirements please contact your nearest TSRM Dealers or write to

The Commercial Manager

Trichy Steel Rolling Mills Limited

Senthannipuram
TIRUCHIRAPALLI - 620 004
TAMIL NADU
INDIA

Phone :
25301 (4 Lines)

Grams :
ROLMILL

Manufacturers of :


Tiscon, Tor Steel, Mild Steel Reinforcing Round Bars, MS Flats, MS Angles, MS Squares, Gate Channels, Special Steel Rounds and Steel Castings.

Registered Office & Madurai Sales Office :

290, West Masi Street
MADURAI - 625 001
Phone : 24385

—Nagasundaram

எமது மனமார்ந்த தீபாவளி வாழ்த்துக்கள்



தூய வெண்மையான சலவைக்கு


சென்னை அருணா கெமிக்கல்ஸ் & பார்ம்ஸ் (பி) லிட்., (ஸ்ரீ விசாலம் குரூப்) அளிக்கும் புத்தம் புதிய டிட்டர்ஜெண்ட்

அபிமா சோப்

வாங்கி உபயோகியுங்கள்

எங்கும் கிடைக்கும்

விபரங்களுக்கு அருகிலுள்ள ஸ்ரீ விசாலம் சிட் பண்ட் லிமிடெட்டை அணுகவும்.



அன்பே-அழகே-அருங்கனியே!

பன்னிரண்டுவயது இளம் தெரசாவை, ''உன் வாழ்க்கையில் நீ என்னவாக வர விரும்புகிறாய்?'' என்று கேட்டபோதெல்லாம், ''ஏழைகளுக்குத் தொண்டாற்ற வேண்'' என்ற பதில்தான் கிடைத்தது. யூகோஸ்லேவியாவின் ஸ்கோப்ஜே நிராமத்தில் இரண்டு பெண்களும், ஒரு பையனும் அடங்கிய வளமிக்க அல்பேனியக் குடும்பம் அது. தெரசாவுக்கு அப்போது ஆக்னஸ் என்று பெயர்.

அப்போது யூகோஸ்லேவியாவின் கிறிஸ்தவ மத நிறுவனங்கள் பல மதத் தொண்டும், கல்விப்பணியும் ஆற்றுவதற்காக இந்தியா சென்றிருந்தன. அவற்றுள் லோரெட்டா நிறுவனம் இளம் தெரசாவின் கவனத்தை ஈர்த்தது, அதே சமயம் கல்கத்தா நகரில் இந்த நிறுவனம் ஊழியம் செய்துகொண்டிருந்தது. லோரெட்டா நிறுவனத்தின் சகோதர ஊழியர்கள், கல்கத்தாவில் அவரவர் பணிகளைப் பற்றி விவரிக்கும்போது தெரசாவின் இளம் மனம் இளகியது. தன்னுடைய வாழ்க்கையை இந்தியாவின் ஒரு மூலையில் முடங்கிக் கிடக்கும் எத்தனையோ மக்களின் ஏக்கப் பெருமூச்சுகளுக்குப் பதிலாக அமைத்துக் கொள்ள விரும்பினாள். தன்னைப் போன்றவர்களின் பணிகள் தேவைப்படும் நாடாக இந்தியாவை, இந்திய மக்களை அந்த இளம் நெஞ்சம் கருதியது.

1926-இல் இந்தியாவுக்கு வந்ததும் டார்ஜீலீங் நகரில் லோரெட்டா மடத்தில் ஆசிரியையாகத் தெரசா பணியில் அமர்ந்தார். 1931 ஆம் வருஷம் அவர்





தம் பெயரைத் 'தெரஸா' என்று மாற்றிக் கொண்டார்.

'தெரஸா' என்றால் 'சிறிய மலர்' என்று பொருளாகும். இந்தப் பெயர் அவருக்கு மிகவும் பிடித்திருந்தது.

ஏழாவது வருஷப் பயிற்சிக்குப் பிறகு டார்ஜீலிங்கிலிருந்து கல்கத்தாவுக்கு வந்தார். அங்கிருந்த லோரெட்டாப் பள்ளியில் முதலில் புவியியல் ஆசிரியையாகவும் பின்னர் அதன் முதல்வராகவும் பணி புரிந்தார்.

சேரிகள் நிறைந்தும், தொழிற்சாலைகள் மிகுந்தும், புகை வண்டி நிலையத்தை யடுத்தும், பரபரப்பை அதிகப்படுத்தும் சூழ்நிலை அது. அந்தச் சேரிப் பகுதியில் 'மோதிஜீல்' பகுதியும் ஒன்று. அன்னை தெரஸா தம்முடைய பணிநேரம் தவிர, மிடைகிற ஓய்வு நேரங்களில் 'மோதிஜீலி'லுள்ள மக்களைக் காணச் செல்வது வழக்கம். அவ்வாறு செல்லும்போதே தம்முடைய சிறு கூடையில் அந்தச் சேரிவாழ் மக்களுக்காக உணவும் மாத்திரைகளும் கொண்டு செல்வது உண்டு. ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று நலன் விசாரிப்பது, அபரப்படும் நோயாளிகளுக்கு அறுதல் கூறுவது, அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்வது போன்ற பணிகளில் ஈடுபட்டு வந்தார்.

நாட்டுத் தந்தை காந்தியடிகள் ஒரு முறை ரோம் நகருக்குச் சென்று திரும்பிய பின் பத்திரிகையாளர்களிடம் கூறும் போது, ''சிலுவையில் அறையப்பட்ட இறைமகன் தம் உடலில் சிறு காயங்களையே அணிந்திருந்தார். நமது சேரிப்பகுதி ஏழைகளைப்போல், சிலுவை சுமந்த இறைமகனைப் போலவே, இந்தியக் கிராம, நகர ஏழைகள் வறுமை எனும் சிலுவையைச் சுமந்து கொண்டிருக்கின்றனர்'' என்று கூறினார். அந்த






ஏழைகளுக்கு உதவுவதே, தொண்டு செய்வதே தம் வாழ்வின் லட்சியமாகக் கருதினார் அன்னை தெரஸா.

1948-இல் ரோமெட்டாக் கன்னி மாடத்திலிருந்து விலகி கல்கத்தாக் கிறிஸ்தவ மதப் பேராயரின் கட்டுப்பாட்டின் கீழ்ப் பணிகள் செய்ய அன்னை தெரஸாவுக்கு வாட்டிகன் அரண்மனையிலுள்ள போப் அறுமதி அளித்தார். அன்னை தெரஸா பாட்னாவுக்குச் சென்று கன்யாஸ்திரீகளுக்கான மருத்துவப் பயிற்சியைக் கற்றுத் தேர்ந்தார். மீண்டும் கல்கத்தாவுக்கு வந்தபொழுது தம்முடைய சீருடையில் மாற்றம் செய்து கொண்டார்.

நீலநிற ஓரத்தைக் கொண்ட வெள்ளை நிறப் பருத்தி ஆடையை அவர் அணிய ஆரம்பித்தார். கல்கத்தாவில் 'மோதிஜீல்' சேரிப் பகுதியிலேயே தம் வாழ்க்கையைத் தொடங்கினார். வீடு வீடாக ஏறி இறங்கி, குழந்தைகளுக்காக, ஏழைகளுக்காக, உணவுப் பொருள்களை டின்களில் சேகரித்து வருவார். பல செல்வர்களின் உதவி பெற்று ஏழைகளுக்கு உதவி வந்தார்.

அந்தச் சேரியில்தான் அன்னை தெரஸா தம் முதல் பள்ளியை 1948-ஆம் ஆண்டில் ஆரம்பித்தார்.

இந்துக் கோவிலான பிரசித்தி பெற்ற கல்கத்தாக் காளி கோவிலின் அருகிலேயே அன்னை தெரசாவின் 'அன்னை இல்லம்' இருப்பதை வன்மையாகக் கண்டித்து, கற்கள் வீசி, கண்ணாடி ஜன்னல்களை உடைத்து, உள்ளிருக்கும் நோயாளிகளையும் தாக்கினர் விரோதிகள். அந்த இல்லத்தையே அங்கிருந்து அகற்ற அரும்பாடு பட்டனர் காளிகோவில் பூசாரிகள். ஒரு நாள் காலை அதாதையாகக் காளி கோவில் வாயிலில் காலரா நோயினல் பீடிக்கப்பட்டு உயிருக்கு மன்றாடிய ஒரு நோயாளியைத் தாமே சுமந்து வந்து அன்னை இல்லத்தில் அன்போடு, சிரத்தையோடு சுவனித்தார் சிறிய மலர்






தெரஸா. ஆனால் அந்த அநாதையின் உயிர் உடற் கூட்டை விட்டுப் பிரியும் நேரம் வந்து விட்டது: அதை யாரால் தடுக்க முடியும்? கரம் குவித்து அன்னையை நோக்கி அவர் கூறிய வார்த்தைகள்: ''உங்களே விரட்டி முயன்றவர்களில் நானும் ஒரு பூசாரி. முப்பது ஆண்டுகள் கல்லுருவில் இருந்த காளிக்குப் பூசை செய்தேன். இன்று கண்முன் காளி தேவியை அன்பு முகத்தோடு காண்கிறேன். அது போதும் எனக்கு'' என்று வங்க மொழியில் தட்டுத் தடுமாறிக் கூறி முடித்ததும் அவர் உயிர் பிரிந்து விட்டது.


இந்தியாவின் வறுமை என்றைக்குமே தீர்க்க முடியாத ஒன்றாகும் என்று மிகத் தாழ்வாக நினைக்கும் அயல் நாட்டவருக்கு, வெளி நாட்டுப் பெண்மணியான அன்னை தெரஸா முற்றும் மாறுபட்டவர் என்பதை அவர் அன்புச் செயல்கள் நமக்கு நிரூபிக்கின்றன. அந்த அன்பை வெளிப்படுத்த அவர் பட்ட இன்னல்கள் எத்தனையோ. எங்கோ பிறந்த அவர் எத்தனையோ ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள இந்தியாவிற்கு வந்து இந்தியக் குடிமகளாக மாறி, இந்தப் பெரிய பணியைச் செய்யத் துணிந்த பின்னும் தம்மைச் 'சிறிய மலர்' என்றே பொருள்படும்படி தெரஸா என்று பெயர் மாற்றிக் கொண்டது வித்தையல்லவா? கைம்மாறு கருதாமல் சகிப்புத் தன்மையுடன், ஆழ்கடலின் ஆழத்தை விட அன்பின் ஆழம் அளவிட இயலாதது என்பதை அமைதியின் உருவாக இருந்து செயலாற்றித் தம்முடைய லட்சியத்தில் வெற்றி பெற்றார். அமைதிக்கான நோபல் பரிசை 1979 அக்டோபரில் பெற்ற தெரஸா, 'அன்புக்கு ஓர் அன்னை' என்று உலக நாடுகளால் அழைக்கப்படுவதில் வியப்பு என்ன?

'ஜூனியர்'






ஸ்ரீ
ஸ்ரீ
ஸ்ரீ



கொடுத்து நாலு வருஷம் முன்னுலே மாற்று விமானம் ஏறி வந்திருக்கிறேன். நடக்கிற காரியமா? நீயே த்துப் பாருங்கள்!'' என்றார். கொச்சியைச் சேர்ந்த முதியவர் சங்கமேசுவரன். அவர் காட்டிய விலாசிங் கார்டைக் கையில் வாங்கி, ஏதோ டாலர் நோட்டைப் பார்ப்பது போல் பார்த்து மகிழ்ந்தார். மாப்பிள்ளை சுதர்சனம், பிரமீளாவை ஏறிச்சலோடு திரும்பிப் பார்த்தார். இத்தப் பிரதாபங்கள் இன்னும் எத்தனையை எங்கெங்கெல்லாம் எத்தனை தரம் கேட்டுச் சலித்தாக வேண்டுமோ என்பதை அவர் முகபாவம் காட்டியது. மாப்பிள்ளை சுதர்சனமும் பம்பாயில் ஒரு பிரபல அயல் நாட்டு நிறுவனத்தில் மானேஜிங் டைரக்டர் பதவி வகிக்கிறார். ஐ.ஏ.எஸ். மாமனாரின் பிரதாபங்களைக் கேட்டுக் கேட்டு அலுத்துப் போனவர் அவர்.

''பிரமீள்! உங்க அப்பாவின் இந்த 'நாலியஸ் ஈகோ' ஒழிந்தால் தான் அவரோடு பொறுமையாக என்னுல் பேச முடியும்! எனக்கு மண்டைக் கனம் என்று நீ சொல்வது தவறு'' என்று பல முறை கண்டித்திருக்கிறார். பிரமீளாவின் தாய் பல வருஷங்களாகத் தமிழில் சொல்லி வருவதை அவர் ஆங்கிலம் கலந்த தமிழில் சொன்னரே தவிர, அதிக வித்தியாசம் இல்லை.

ரயில் இன்னும் வரவில்லை. கேட்டும் இறக்கவில்லை. திரிபுரம் எரித்த வெபிராஜப்போல் ருத்திரமூர்த்தியாகக் காரை விட்டுக் கீழே இறங்கி நிற்கும் மாமனாரைக் கவலித்தார் சுதர்சனம். மாமனார் நெற்றிக் கண்ணைத் திறப்பது போல், தாம் அணிந்திருந்த கூலிங் கிளாஸைக் கழற்றி ரெயில்வே கேட்டைப் பார்த்தார். அவ்வளவுதான், தண்ணக்கு வந்திருக்கும் கொச்சி சங்கமேசுவரன் குழந்தை முகுந்தனின் மோகனப் புன்னகையை ரசித்தபடி பிரமீளாவுடன் பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தார்.

''குழந்தைக்குக் குருவாயூரில் அன்ன ப்ராசனம் செய்ய நீங்கள் டெல்லியிலிருந்து வரப்போகிறீர்கள் என்று கேள்விப்பட்டதுமே, இதைச் சாக்கிட்டுக் குருவாயூரப்பனைத் தரிசிக்கப் போகிற சந்தோஷத்திலே, சாதம் ஊட்ட நான் வாங்கி வைத்திருந்த வெள்ளிக் கிண்ணத்தைக்கூட எடுத்துவர மறந்துட்டேன். வருத்தமாயிருக்கு!'' என்று ஆரம்பித்தார்.

''அதனுலென்ன, பரவாயில்லே. நாங்கள் எல்லாம் தயாராக எடுத்து

வந்திருக்கிறேம்'' என்னர் மாப் பிள்ளே சுதர்சனம்.

ஜ. ஏ. எல. பொறுமையிழந்து தாமும் அவர்களுடன் பேசில் கலந்து கொள்ள வந்தார்.

''நிஜாமுதின் ரெயில்வே ஸ்டேஷனில் முதல் வருப்பு டிக்கட்டுக்கு ரிஸர்வேஷன் கேட்ட போது வெயிட் டிங் லிஸ்டிலே 81 ஆவது ஆள் நான். விளிட்டிங் கார்டையும், என்னேடு கிளம்பி வரப்போகிற இவர்கள் பெயர்களேயும் எழுதி அனுப்பினேன். ஸ்டேஷன் மைப்பிரண்டெண்டு அரை மணியிலே ஆறு 'பெர்த்' ரிஸர்வ் செய்து டிக்கட்டிலே நம்பரும் போட்டுக் கொடுத்துட்டான். நடக்கிற காரியமா?'' இதைச் சொல்லி விட்டுச் சங்கமேசுவரனே நிமிர்ந்து பார்த்தார்.

இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று சங்கமேசுவரன் தவித்தபின், ''எல்லாம் பகவான் செயல். குருவாயூரப்பன் நெனேச்சால் நீங்கள் லண்டனிலிருந்தாலும் வந்து சேர்ந்துடலாம் சமயத்துக்கு'' என்னர். ஆனல் இவகாரனு திருப்தி அடைவார் இந்தப் பதிலுக்கு?

''சுத்தப் பத்தாம் பசலியா இருக்கிறீர்கள். இதில் பகவான் எதை இயா சாதிக்க முடியும்? கல்கத்தா விலே வைகுந்தநாத் கோவிலிலே என் போட்டால் என் விமானு, புரட்டாசி சனிக்கிழமையிலே. கல்கத்தா, ரவீந்திர சாரணியிலிருந்து ஒரு காரை எடுத்துக் கொண்டு இதோ, இவர்களோடு அங்கே போனேன். நம் திருச்சிராப்பள்ளி பட்டர் அங்கே என்னேக் கண்டதும் எப்படி ஓடிவந்தார் தெரியுமா?

''இத்தனேக்கும் நான் என் விளிட் டிங் கார்டைக் கொடுத்தனுப்பினேன். வைகுண்டத்திலிருந்து ஸ்ரீஜேந்திர னேக் காப்பாற்ற உங்க பகவான் கூட, அவ்வளவு வேகமாக ஓடிவந்திருக்க மாட்டார் ஐயா! பிரமாத தரிசனம்! கூடியிருந்த பெங்காலிக்காரர்கள், 'ஒரு தமிழனுக்கு இங்கே இத்தனே செல்வாக்கா?'' என்று பகவானேப் பார்க்காமல் என்னேப் பார்த்துக் கொண்டு நின்ருர்கள்!''

''பிரமீள்! இப்ப நீ குமந்தையைக் கவனி! மஸ்ஸரைத் தலேயைச் சுத்திச் சரியாகக் கட்டு! குளிர் காத்தடிக்கிறது. காருக்குள் ஸ்வேன் கூட வேண்டாம்!'' என்று சுதர்சனம் தம் எரிச்சலேப் பிரமீளா மீது காட்டினர். பிரமீளா சட்டென்று புரிந்து கொண்டு செயல் பட்டாள்.


இதையெல்லாம் புரிந்து கொண்டு சட்டை பண்ண பகவானுக்குப் பொறுமை ஏது?

''எங்கே வந்தாலும் இந்த விளிட் டிங் கார்டுப் பிரதாபத்தை விட்டால் அப்பாவுக்கு வேறு பேச்சே இல்லே யாம்மா!''

''இல்லே, இல்லே, ..இல்லே! அதுதான் தெரிந்த சமாசார



அறுசுவையின் அடிப்படை சுவை அம்பீஸ் சுவையே!
மனம் மகிழ நன்கு உண்ணுங்கள் அம்பீஸ் துணையுடன்...



அம்பீஸ் ஊறுகாய் வகைகள்:

ஆவக்காய், மாங்காய், வடு மாங்காய், மாங்காய் தொக்கு, எலுமிச்சை, கோங்கூரா, பச்சை மிளகு, வெஜிடபிள் ஊறுகாய், நெல்லிக்காய், பச்சை மிளகாய், பூண்டு ஊறுகாய் மற்றும் பல வகைகள்.

அம்பீஸ் சுவை,
ஆவலைத் தூண்டும்
சுவை

Ambis

3869 FPO

அம்பீஸ் பிக்கிள்ஸ்
அண்ட் காண்டிமெண்ட்ஸ்
ஆப் இந்தியா

ஏற்றுமதி செய்வோர்:
வெஸ்டர்ன் எக்ஸ்போர்ட்ஸ்,
(இந்தியா) பிரைவேட் லிட்

19. நீலகண்ட மேத்தா தெரு, தி. நகர். தொலைபேசி: 447355

APRC

மாகிவிட்டதே! உங்கப்பாஇந்தவிலிவிட்டிங் கார்டைக் காட்டி நவக்கிரகங்களிலே ஆட்டிப் படைத்திருக்கிறார்! எனக்கே அன்றைக்கு அத்தனை ஆத்திரம் வத்தது. நேரம் கழித்துப் போய் அப்படி அந்த நேரப் பரீனைடோரியம் நிர்வாகிகளோடு சண்டை போட்டபாவது, பம்பாய் ஒர்லியிலே அந்த நேரு பிளைனடோரியத்தையும் அந்தக் கிரகங்களை நகருவதையும் பார்த்தாக வேண்டுமா? பம்பாய் அடாஙிக் எனர்ஜி அதிகாரி ஒருவரோடு வாரையும் எடுத்துக் கொண்டு என்னேயும் வற்புறுத்தி வரச் சொல்லி, அந்தப் பிளைனடோரியம் மூடுகிற நேரத்தில் போய், தம் பிரதாபத்தைச் சொல்லி அவர்களேப் பாடாய்ப் படுத்தி விட்டார். முகத்தைச் சுளித்துக் கொண்டு அவர்கள் வேண்டாவெறுப்பாக எதையோ ஷட்டை அண்த்து அணத்துப் போட்டு நட்சத்திரங்களேயும் நவக்கிரகங்களேயும் ஆகாசத்திலே பார்ப்பது போலக் காட்டினப்புறந்தான் விட்டார். அவர்களேயே ஏழரை நாட்டுச் சனி பிடித்தாற் போல் ஆட்டி வைத்தார்! யாரிடம் போய்ச் சொல்லுவது?'' என்று கணவரின் காதில் சற்று விழும்படியாகவே சொன்னள் பிரமீளாவின் தாய். அப்படியாவது இனிமேல் பிரதாபம் பேசுவது குறையட்டும் என்று அவள் நினைத்தாள். ஆனல் அதையே தம் வெற்றிச் சின்னமாக எண்ணிக் கொண்டு,''கேட்டீர்ளாமா பிரமீளா? ராவணனுக்கு அத்தப்படி நவக்கிரகங்களேயே ஆட்டி வைத்தவர் உன் அப்பா!'' என்று சொல்லிச் சிரித் தாரே திவாகரன் ஒரு பேய்ச் சிரிப்பு!

IDரப்பின்னே சுதர்சனம் காரைக் ஙெப்புவதற்காப் படாரென்று கார்க் கதவைச் சாத்தித் தம் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டார். சங்கமேசவரன் ஓரளவு நிலைமையை யும், மனிதர்களேயும் புரிந்து கொண் டார். ஆனல் ஜி.ஏ.எஸ்.ஸுக்கு 'வாக்கிங் ஸ்டிக்' காக அலைய விட்ட பத்து வயது மூத்தவரை அனுப்பி வைத்திருக்கிறரே அந்தக் கொச்சித் துறைமுக அதிகாரி. ஆகவே அவர் மௌனமாக திவாகரன் அருகில் காருக்குள் டிக்கக் நேர்ந்தது.

''பேரன் முருந்தனுக்கு அன்ன ப்ராசனம் குருவாயூரிலே செய்யற துன்னு தீர்மானிச்சதுமே போர்டு ஆஃபீஸ்ரஸுகளுக் கெல்லாம் மூணு மாசம் முன்பே வெட்டர் எழுதிட் டேன். ஆனல் ஒருத்தராவது உடனே பதில் எழுத வேண்டாமோ? என் டியாரிட் மெண்ட் வேலேயிலே இப்படி யாராவது நடந்து கொண்டிருந்தால் தொலச்சிருப்பேன்'' என்று சீறிக் கொண்டே காரில் ஏறினர் திவாகரன்.

காரினுள் பாட்டுத் தொடங்கியதும் பிரமித்தனர் யாவரும்:

''குருவா பூருக்கு வாருங்கள்—ஒரு குழந்தை சிரிப்பதைப் பாரும் ஒருவாய்க் சோறு ஊட்டும் தாய்முன் உட்கார்ந் திருப்பதைக் காணுங் கள்.''

காரின் ரேடியோவிலிருந்து அசரீரி போல் ளெம்பி வந்த இன்னிசை, சுதர்சனத்துக்கு ஒரே சோகக் கார் ஓட்டிச் செல்ல உதவியது. கேரளத் தின் அழகிய நெடுஞ்சாலே. இயற்கை யன்னே வாரி வழங்கிய பசுமரச்சோலே போன்ற இடங்களும், காலடி ஷேத்திரத்தைக் கடந்து, ஆதி சங்கரரை முதல் பற்றிய பூர்ண நதியைக் கடந்து மேம்பாலத்தில் கார் போவதும், அமுத தீதோகை ஒருஞ்ஞ காணம் ஒலிப்பதும் மனத்திற்குப் பெரு மகிழ்ச்சியை அளித்தன.

''திவாகரன் ஸார்! இந்தப் பாட்டை எத்தனே தடவை கேட்டாலும் ஒவ் வொரு தடவையும் எனக்கு மனசு நெறைஞ்சுடும். கவனிச்சீர்களா?''

''கண்ணனின் மேனி கடல் நிலம்—அவன் கண்க ளிரண்டும் வான்நீலம் கடலும் வானும் அவனே என்பது காட்டும் குருவா யூர்க்கோலம்.''

''ஹூம்! அது தான் காதிலே விழறதே! கோவில் கோவில் என் றிருந்தே தவிர, எல்லாக் கோவி லேயும் வியாபார நோக்குடைய நிர்வாகிகளிடம் விட்டு விட்டார்கள். பணத்தை வாரி இறைச்சால் பக வானே நம்மைத் தேடிண்டு வந்துடு வான்! கவல அப்படி இருக்கு.''

''அப்படியில்லே'' என்று ஏதோ சொல்ல வாயெடுத்த முதியவரை, ''பாட்டைக் கவனிக்கலாமே!'' என்றார் சுதர்சனம்.

பாட்டுத் தொடர்ந்தது. முகந்த னுக்குக்கூடப் பாட்டுப் பிடித்திருந் ததோ என்னவோ! அன்னையின் மடி யில் காலே வேகவேகமாக உதைத்துக் கையைக் கூப்பிச் சிரித்தான். பிர மீளா பாட்டின் அடிக்ளே மௌன மாகக் கவனித்து ரசித்தார்.

''சந்தர்ப காலத்தில் நீராடி, அவன் சந்நிதி வருவார் ஒரு கோடி. நாராய ணாராயண நாராயண, ஹரி ஹரி..நாராயண...''

''எத்தனே அழகா அவ்வை நடக்கிற தெல்லாம் இந்தப் பாட்டிலே வரு கிறது பாரும்மா?'' என்ருள். அம் மாவுக்கும் அத்தனே மகிழ்ச்சி.

''டெல்லி எங்கே, குருவாயூர் எங்கே? நேனேச்சால் வரவா முடி கிறது? வரும்போது தவறமால் எல்லாத்தையும் பார்க்க வேண் டாமா?'' என்ருள் தாய் பதினுக்கு. சுதர்சனம் தம்மை மறந்து பாட்டில் லயித்திருந்தார். ''உச்சிக் காலத் தில் தேதாரம், அவன் ஒவ்வொரு அழகுக்கும் அலங்காரம், பச்சைக் குழந்தையைப் பார்க்கும் போது பாவையர் தாய்மை பீங்காறும்.''

''என்ன பிரமீளா! பாட்டைக் கவ னிக்கியுயா?'' என்ருர் தலேயை அலச் பக்கம் திருப்பிப் புன்முறு வலுடன். அந்திவேளே தெருக்கவ சாலப்பரு மரங்களில் வண்டுகளின் ரீங்காரமும் இன்னிசைக்குச் சுருதி சேர்த்தது.

''ம். கவனிக்கிறேன்'' என்று அர்த்தத்தைப் புரிந்து கொண்டு பதில் கூறி விட்டு, மடியில் துள்ளும் சின்னக் கண்ணன் முகந்தனின் ரோஜாப்புக் கன்னத்தை வருடினுள்.

''இதென்ன, உங்க குருவா யூரப்பன் நிருவினியாடேப்பட் பாட் டாகவே பாடறுப்பே இருக்கே! கல்கத்தா வைருந்தாத் கோவிலேவே ஐந்நூறை அள்ளிவிட்டேன். அரை மணி நேரம் தரிசனம். டெல்லி பிர்லா மந்திர் லட்சுமிநாராயணன் கோவிலிலே க்யூ இருந்த இடம் தெரி யாமல் போய் நாங்கள் அத்தனே வசதி யாகத் தரிசனம் முடிச்சு வந்தோம். எல்லாம் இதோ பாருங்கோ, இந்த ஒரு சின்ன விலிட்டுக் காரே என்றே அட்டையோட மகிமை. அங்கே அங்கே இதைக் கையில் குடுத்தால் போதும். பகவானேச் சுத்தி நிற்கிற பட்டாளம் வாயே திறக்காமல் வழி விடும். அந்த நந்திகேள நகர்தினுல் தானே நமக்குத் தரிசனம் நடக்கும்?'' என்று கூறிப் பலமாகச் சிரித்தார். ''உங்க குருவாயூரப்பனும்! பேச்சைக் கவனியுங்கள்!'' என்ருர் சுதர்சனம் தாழ்ந்த குரலில். கார் பள்ளம் ஒன்றில் இறங்கி ஆடித்தின்றிக் துள்ளி மேலே வந்து ஓடியது. சுதர்சனம், திவாகரன் மனத்தில் படும்படி, ''பள் ளத்தையும் குருவாயூரப்பன்தான் ஏற்படுத்தி நம்மையும் காப்பாத்தி யிருக்கான் போலிருக்கு'' என்ருர். அவருக்கு அது உறைக்கவில்லே.

''நாலே நேரத்தில் சிவேலி-அவள் மாளிகை முழுதும் நெய்வேலி நெய் விளக்கேற்றப்பி பொய் இருள் அகற்றி - நித்தம் தருவான் சிவேலி''. அங்கே விழித்துக் கொண்டார் திவாகரன்.

''சிவேலி நடத்த மூவாயிரத்தைக் கொட்டிவிட்டு இங்கே வந்தாகொண் டிருக்கிறேன் சங்கமேசுவரா! ஏதோ தாம தரிசனத்துக்கு வந்தால்போல எண்ணி என்னே யார்னன்னு புரிஞ்சு கொள்ளாமல் அனுப்பிவிட்டீர்போகி ருர்கள்! நீங்க தேவஸ்தானத்துக்கு ரொம்பவும் தெரிஞ்சவர் என்று தானே என்னேயும் உங்களுக் கஸ்டம்ஸ் கலெக்டர் அனுப்பி யிருக்கார்? இத்தாருங்கள். இப்வே என் விலிட்டிங் கார்டு ஒண்றை உங்கள் டம் வச்சுக் கொள்ளுங்கள். சமயம் வரும்போது இதைத் தள்ளி விடும். அப்புறம் எந்தக் கூட்ட மாயிருந்தாலும் நமக்கு ஸ்பெஷல் தரிசனம் எப்படிக் கிடைக்கிறது என்று நீங்களே பார்த்துக் கொள்ள லாம்!'' அகம்பாவம் வார்த்தைக்கு வார்த்தை பொங்கி வழிந்தது.

நீருக்குர் நெருங்கிக் கார் குருவா யூர்த் திருப்பத்தில் ஒடிக்கொண் டிருந் தது. முருந்தன் அயர்ந்து தூங்கு கிருன். அவனுக்கு முதலாவதாக உணவு ஊட்டும் அன்ன ப்ராசன வினாவை மறுநாட் கலே குருவாயூர்ச் சத்திரவியில் நடத்துவதற்காக டெல் லியிலிருந்து தம் குடும்பத்தாருடன்

திவாகரன் ஐ. ஏ. எஸ். வந்திருக்கிறார். முன்றுமாத காலம் முகத்தைத் தொடர்பு கொண்டு தேவஸ்தானத்துக்குச் சீலேலி நடத்துவதற்கான கட்டணத் தொகையும் முன்னதாகவே அனுப்பி விட்டு, அவர்கள் தேதி தெரிவித்தவுடன் கிளம்பி வந்திருக்கிறார். எங்கே சென்றாலும் தம் செல்வாக்கை எந்த விதமும் பயன்படுத்தி வெற்றி கண்ட அவருக்கு, கொச்சிக் கஸ்டம்ஸ் கலெக்டர் காரைத் தயாராக வைத்திருந்து கொடுத்து அனுப்பியிருக்கிறார்.

குருவாயூர்க் குழந்தை முன் தம் பேரக் குழந்தைக்கு முதல் முறையாக உணவூட்டும் வைபவம் நடத்த வந்துள்ள அவருக்கு இதைச் சாதிப்பது மட்டும் என்ன கடினம்?

இரவு எட்டு மணிக்குக் குருவாயூரை அடைந்தனர். தங்கும் விடுதி தான் எத்தனை வசதி! அவரைச் சந்தித்து வரவேற்க அங்கே ஆட்கள் இருப்பார்கள் என்பார் கஸ்டம்ஸ் கலெக்டர். ஆனால் எட்டு மணிக்குள் தேவஸ்தான அதிகாரிகள் துங்கியா விட்டார்கள்? கார் டிரைவரும் சங்கமேசுவரனும் அவர் டெல்லியிலிருந்து குழந்தைக்கு அன்பும் ப்ரசனமும், சீலேலி பூஜையும் முடிக்க வந்திருப்பதைச் சொல்லத் தேவஸ்தானம் சென்றார்கள். சொல்லி விட்டும் வந்தனர். மறுநாள் எல்லாம் சிறப்பாக நடக்க ஏற்பாடுகள் செய்துள்ளதாகத் தகவல் கிடைத்தது.

சுதர்சனம் முதியவரிடம் அன்ன ப்ராசனம் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொண்டார். பிரமோற்சவமும் கவனமாகக் கேட்கும்படி கூறியிருந்தார். சங்கமேசுவரன் தமக்குத் தெரிந்ததைச் சொல்ல ஆரம்பிக்கவே, தங்கும் விடுதியில் உணவருந்தியபடி பிரமோ, திவாகரன், பிரமோவின் தாய் யாவரும் கேட்டுக் கொண்டனர்.

"குழந்தைக்கு ஆருவது மாதத்தில் செய்ய வேண்டிய மைல்காரம் இது. விடிப்புக் குழந்தைக்கு அன்னம் ஊட்டுவதால் அன்ன ப்ராசனம் என்று பெயர். நல்ல நாள் பார்த்துத் தம்பிகள் தித்தில காம்கஸ்ஸே முடித்து, வைதிக முறைப்படி அன்ன ப்ராசனத்துக்கு அங்கமாக ப்ரஜாபத்யம் செய்ய வேணும்."

"ப்ரஜாபத்யம் என்கிறீர்களே; அப்படி யென்ன?" என்று கேட்டார் சுதர்சனம்.

"அங்கை தாரணம். சரிதானே சங்கமேசுவரன்?" என்று உயர்ந்த குரலில் கேட்டார் திவாகரன். அதாவது என்னிடம் கேட்காமல், சங்கமேசுவரனிடம் விளக்கம் கேட்க, மாப்பிள்ளையாளனும் உனக்கு என்ன துணிச்சல் என்று சுதர்சனத்தை, அவர் அறியாமையைச் சுட்டிக் காட்டி மட்டம் தட்டுவது போலிருந்தது அந்தப் பதில்.

சங்கமேசுவரன் தொடர்ந்தார்: "ஆண் குழந்தைக்கு வலது கையிலும் பெண்ணுக்கு இடது கையிலும் கங்கணம் கட்ட வேணும். மறுபடியும் ஸெ சடங்குகளைச் செய்த பின் இன்ன நட்சத்திரம், இன்ன ராசியில் பிறந்த என்னுடைய இந்தக் குழந்தையை அன்ன ப்ராசன கர்மாவால் ஸம்ஸ்காரம் உள்ளவளாக்கச் செய்கிறேன் எனச் சங்கல்பம் செய்து, நவக்ரஹப்ரீதி செய்ய வேண்டும்" சங்கமேசுவரன் சற்று நிறுத்தினார்.

"மாப்பின்னா! பம்பாய் ஓஸி நேரு பளேடெரிய தில்லே, நவக்கிரங்களோ ...." என்று எழுந்து வேகமாகப் பேசத்தொடங்கிய வரை, "இத பாருங்கோ சாப்டுங்கோ இலையப் பார்த்து. போதும் அந்தக் கதை!" என்று எந்தத் துணிச்சலுடன் அவர் மனைவி அடக்கினாளோ அது அந்தக் குருவாயூரப்பனுக்குத்தான் தெரியும்.

எண் சாண் ஜம்பம் ஒரு சாணுக்குக் குறுகி உட்கார்ந்து விட்டது. சங்கமேசுவரன் எரிமலை எப்படி, எப்போது குமுறுமோ என்று பயந்தபடி மேலே சொல்வதற்குத் தயங்கினார். சுதர்சனம் அவரை ஊக்குவிக்கவே, வார்த்தைகள் தடுமாறத் தமக்குத் தெரிந்ததைச் சொன்னார்.

"ஸ்வர்ண பாத்திரத்தில் உப்பு, உறைப்பு இல்லாமல் அன்னத்தைத் தயிர், தேன், நெய் இவைகளுடன் சேர்த்து நாலு மந்திரங்களே சொல்லி ஒரு முறை குழந்தைக்கு ஊட்ட வேணும். ஹலதேவதை, ஒஷதி தேவதைகளின் அருளும் அதனல் உண்டாகும் ஆரோக்கியத்தையும் பெறுவதற்காக முதல் முறையாக அன்னத்தை ருசிக்கும் போதே அதை முறையாக ருசித்து, குழந்தை நோய் நொடியில் லாமலிருக்க இந்த அன்ன ப்ராசனம் செய்கிறோம். 'நிர்த்தம், ஒஷதி இவைகளின் ரசத்தை உனக்கு ஊட்டுகிறேன். அந்தத் நிர்த்தமும் ஒஷதியும் உனக்கு எல்லா வித நன்மைகளையும் கொடுக்கட்டும். நோயை உண்டு பண்ணமல் இருக்கட்டும்' என்பதே அடிப்படையாகும். குழந்தைக்குச் சுட்டப்பட்ட பெயரைக் கூறி, தங்க மோதிரத்தைக் கையில் வைத்துக் கொண்டு ஒரு முறை குழந்தைக்கு அன்னம் ஊட்ட வேண்டும். பிறகு ஆசீர்வாதம் செய்து, ப்ருஹஸ்பதி சம்பாவனே செய்து, ஆரத்தி எடுத்தால் இந்தக் கர்மா பூர்த்தியாகிறது" என்று சொல்லி முடித்தார்.

மாப்பின்னை கதர்னம், ஐ.ஏ.எஸ். னை ஏற இறங்க ஒரு முறை பார்த்தார். சிலே போல் உட்கார்ந்து கவனித்துக் கொண்டிருந்தார் அவர்.

"நான் பார்த்திருக்கிறேன். அன்ன ப்ராசனம் ஆனவுடன் குழந்தையின் எதிரில் சில பொம்மைகள்..." என்று தயங்கியபடி திவாகரனின் மனைவி ஏதோ கேட்கவே, அனல் கக்கும் விழிகளுடன் அவளைத் திரும்பிப் பார்த்தார். அவளுமா அவரை அசட்டை செய்கிறாள்?

"ஓ! அதைச் சொல்லவில்லையே! அன்ன ப்ராசனமானவுடன் அந்தக் குழந்தை எப்படி ஜீவிப்பான் என்று பரீட்சை செய்யும்படி மார்க்கண்டேயர் கூறியிருக்கும். குழந்தையின் எதிரில் சில பொம்மைகள், ஆயுதம், சாஸ்திர நூல்கள் முதலியவைகளை வைக்க வேண்டும். குழந்தை தன் பிஞ்சுக் கையால் அவைகளில் எதை முதலில் தொடுகிறதோ அது சம்பந்தமான ஜீவனத்தைக் கைக்கொள்வான் என்று தெரிந்துகொள்ளலாம்" என்றதும் எல்லார் முகங்களும் மலர்ந்தன. குனிந்து முகந்தனின் கன்னத்தில் முத்தமிட்டான் பிரமோ.

"ஆமாம் ஐயா! எல்லாம் பார்த்துப் பார்த்துச் செய்கிறோமே தவிர, இங்கே அன்னப்ராசனம் ஆன குழந்தைகளிலே எத்தனை இப்படி தாயினும், ஈரானிலும் ஈராக்கிலும் என்னசாப்பிட்டுவிடு, எந்த வேலை செஞ்சுண்டு, உடம்பை எப்படிக் கெடுத்தண்டு நிகிதாதோ?" என்றார் ஐ.ஏ.எஸ்.

"அப்பா! இதைச் சொல்லவா முகந்தனின் அன்னப்ராசனத்தைக் குருவாயூரில் நடத்த இத்தனை ஏற்பாடு செய்து கொண்டு வந்திருக்கிறோம்?" என்ற சற்றுக் கடுமையாகவே கேட்டு விட்டார் பிரமோ. பொறுமைக்கும் ஓர் எல்லே உண்டல்லவா? "கும்மா இரு. இவ்வளவு தூரம் வந்திருக்கிறோமே! அன்ன ப்ராசனம் என்ன்ல் என்ன, எதற்குச் செய்கிறோம் என்பதைத் தெரிந்து கொள்ளத்தான் சங்கமேசுவரனிடம் கேட்டேன். என் புள்ளி இங்கே அன்ன ப்ராசனம் முடித்து, தபாப் போகிறதோ, அயுதல்லா கோ மெனிக்கு அஸிஸ்டெண்ட் டாப்பர் போகிறதோ என்பதைக் குருவாயூரப்பன் தீர்மானிப்பான்! இதோ நாம் சாப்பிட்டு முடிச்சுட்டோம். மணி பத்து. காலையில் ரெண்டு மணிக்கு எழுந்தாக வேணும். நீங்களுக்கு எழுந்தாக வேணும். நீங்களுக்கு கட்டும்" என்று தம் கௌரவத்தை விட்டுக் கொடுக்காமல் பேசினார் மாப்பின்னை.

அதிகாலை அந்தக் குருவாயூர்க் கோவில் காட்சியைக் கண்ணுல் கண்டுதான் ரசிக்க வேண்டும். அந்த அழகைப் பிறர் எடுத்துச் சொல்லி எந்த விதமும் விளங்க வைக்க முடியாது.

அன்னப்ராசனம் முதலில் நடந்தாக வேண்டும். மாலையில் சீவேலி நடத்த முன்பே கட்டணம் செலுத்தி, தேதி தெரிந்து வந்திருக்கிறார். திவாகரன் ஐ.ஏ.எஸ். உண்டியலில் பத்துப் பைசாப் போடும் கும்பல்தான் அங்கே ஏராளம். கண்ணை சந்நிதியில் அந்தக் கூட்டத்தைச் சமாளிக்க முடியவில்லே. ஒன்றுமே உண்டியலில் போட வசதியற்றவர்கள், தோரணியின் போது கன்னத்தில் பட பட வென்று கைகளால் போட்டுக் கொள்ளத்தான் முடியும். அத்தகைய கூட்டம் கூடியிருப்பதைக் கண்டார் திவாகரன். அவர் கள் மீது இடித்துக் கொள்ளாமல் அழகாக ஒதுங்கி நின்று தம்முடைய பட்டாடைகள், வைர மோதிரம், தங்கச் சங்கிலி மின்ன, தம் குடும்பத்தார் பின் தொடர, ஸ்ரீகிருஷ்ணனின் அருகில் தம் பேரனுடன் நின்றுக வேண்டும் என்ற ஆவல் அவருக்கு.

சங்கமேசுவரனிடம் மாப்பிள்ளை சுதர்சனத்துக்கு ஏதோ அலாயின பற்றுதல் அவருக்கும் தமக்குத் தெரித்ததை அவர்களுக்குச் சொல்ல வேண்டு மென்று மிகவும் ஆவல். ஆனல் அவரைத் திவாகரன் பேச விட்டால் தானே?

"ஏய்! பிரமீள்! இந்த வீண் அகம்பாவம் உங்கப்பாவுக்கு எப்படித்தான் போகுமோ? இந்தப் பிரயாணத்தோடு இவருடன் வருவது போதும்" என்று சுதர்சனம் அலுத்துக் கொண்ட போது பிரமீளா, யார் பக்கம் பரிந்து பேசுவது என்று தெரியாமல், சுதர்சனத்தின் தோளைத் தொட்டு, "கொஞ்சம் நீங்கதான் பொறுமையா இருக்கக் கூடாதா? அப்பாவின் போக்கு அப்படித்தான்" என்று சமாதானப்படுத்தினாள். அலுல் சுதர்சனம் சமாதானமடையவில்லை. "சரி சரி, போ: இங்கே நாம் பேச வதை அங்கே இருந்து இமை கொட்டாமல் பார்ப்பதிலிருந்தே தம்மைப்பற்றிய குற்றப் பத்திரிகை தான் என்ன உங்க அப்பாவுக்குப் புரிஞ்சு விடும்" என்று அறுப்பி வைத்தார். பிரமீளா முகந்தன் எடுத்துக் கொள்ளத் தாயிடம் ஓடினாள்.

விடியற்காலை இரண்டு மணிக்கே சுதர்சனம் சங்கமேசுவரனுடன் புனித தீர்த்தக் குளத்துக்கு நீராடச் சென்று விட்டார். இவர்களுள் மெதுவாக நடந்தபடி பின் சென்ற: ஆராட்டு விழாவின்போது குருவாயூரப்பன் வீதி பிரகாரத்தை நீராட்டும் குளம் அது. "ஏதோ சின்னக் குளம் என்று நெஞ்சை விடாதீர்கள்: இதில் மூழ்கி எழுந்த ஜனமேஜய ராஜனுக்குப் பெருவியாதி தீர்த்துவிட்டது: நாராயணபட்டதிரிக்கு வந்த முடக்கு வாதம் போன இடம் தெரியவில்லை: குருவும் வாயுவும் ஒன்றுபோல் சேர்ந்த இடம் எங்கே இருக்குன்னு, காலிலே ஏறினது வழியிலே நிற்கிறவர்களை வழி கேட்டுண்டு இங்கே வரவில்லே. இருஞ்ஞவிக்காதைப் பிரதிஞ்செய்ய இதுவே ஏத்த இடம்னு தேர்ந்தெடுத்து அப்படிச் செஞ்சதால் தான் குருபவனபுரம்னு பேரே வந்தது: ரோக வாதரோகவெல்லாம் நீர்ப்பவன் குருவாயூரப்பன்!" என்று சங்கமேசுவரன், அந்தப் புலரும் போதில் தமக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் சுதர்சனத்துடன் பேசி வந்தார்:

நீராடித் திரும்புவதற்குள் எத்தனை எத்தனை அரிய தகவல்களைச் சுதர்சனம் தெரிந்து கொண்டு விட்டார்! பாதாள அஞ்சனம் என்ற சஞ்சீவிக் கல்லில் உருவெடுத்துள்ள கண்ணன் திருவுருவத்துக்குத் தினமும் புகும் எண்ணெயையும், சந்தனக் கும்பாயிய களம் என்பதையும், நீராதவியாதிகளையும் நீக்கும் சக்தி அதற்கு உண்டு என்பதையும் அறிந்த போது மெய் சிலிர்த்தது: இன்னக் கண்ணன் சிலத்தமுகத்தோடு முகையில் கதையையும் மறையில் தாமரை மலரையும் தாங்கி நிற்கும் நிலை தனின்றதைக் காணும் போது, மற்ற இருகைகளிலும் சங்கும் சக்கரமும் காட்சி தருவதைக் காணமல் இருப்போமா? உச்சவ காலத்திலும் சீவேலியின் போதும் இதே போன்ற தங்க விக்கிரகத்தான் ஊர்வலமாக எடுத்து வரப்படுமாம்:

தாமும் ஏதேனும் கேட்காவிடில் வெளரவக் குறைவு என்பதற்காக அன்ன ப்ராசனம் நடத்த குருவாயூர்க் கோவிலுக்குள் நுழையும் போது இவாகரன், சங்கமேசுவரவிடம் கேட்கத் தொடங்கினார்.

"இதென்னையா துவஜஸ்தம்பம் இத்தனே உயரம்? விலவருட தாரி சனமா காட்டாரூர் உங்க கண்ணன்?" என்ற ஆரம்பித்தார்: சிரித்துக் கொண்டார் சங்கமேசுவரன்:

"ஆமாம்! நாத்துப்பத்துடிக் கும்பம். நீலாம்பூர்க் காட்டிலே வளர்ந்த குறுந் தொட்டச் செடி. பெரிய மாமா வளர்ந்து அதனுடைய அடிமரத்தான் நித்தத்துவஜஸ்தம்பம். அது இப்ப நீங்கள் பார்ப்பது பழைய மரக் கும்பம் அல்ல: நங்கத் தகட்டைப் போர்த்தி இப்ப வச்சுக்கிற புதிய துவஜஸ்தம்பம் இது."

எல்லார் கவனமும் சங்கமேசுவரனின் பேச்சியேயே வயித்திருந்தன: பகவதி, ஐயப்பன், ஸ்ரீகோயில், கணபதி எல்லாம் தரிசித்தபின் உள்ளே சென்றனர்:

"பிரமீள்! இட்டப்பள்ளியிலேதான் நைவேத்தியப் பண்டங்களெல்லாம் செய்கிறார்களாம்: வாலிமடம் அங்கேதான் இருக்கிறதாம். இட்டப் பள்ளிக்கு மேற்கே பெரிய கவரை முப்பி ஒரு வாசலே மூடியிருக்கிறார்களாம்! அதற்கு அந்தப்பாம் பில் வமங்கை சுவாமி சமாதியிருக்கிற தாம். யாரையும் அங்கே போக இது வரை அநுமதித்ததே இல்லையாம்! உங்க அப்பா அங்கே போய் விளீட்டிங் கார்டைக் குடுத்துப் போய்த் தானே வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தால்?" சுதர்சனம் குறும்புச் சிரிப்புடன் பிரமீளாவிடம் தாழ்ந்த குரலில் கேட்டார். "கம்மா இருங்க" என்றன் அவர். பின்னல் வரும் தாய் காதிலும் இந்தப் பேச்சுக்குரல் விழத்தான் செய்தது:

"உலகம் பூராவும் தாய்மையான நீர்ப் பராமரிப்புப்பற்றிக் கவனம் செலுத்த மகாநாடு நடக்கிறது: குருவாயூர்பன் கோவில் தீர்த்தத்தை எத்தனாள் முடி வச்சிருக்காலும் அடியில் கருவேப்பிலை, மணலோ தெள்ளமல அத்தனை தூய்மையாயிருக்குமாம்: சங்கமேசுவரன் சொல்றார்: ஒரு சொம்பில் எடுத்து வச்சிருந்த ஆறு மாசத்துக்கப்புறம் எனக்குக் காட்டு!" என்ற ஐ.ஏ.எஸ்: நமக்கே உரிய பாணியில் மீனவிக்கு அணியிட்டார்:

தங்கக் கூரை வேய்ந்த கூத்தம் பலத்தையும், டோம் கவிந்தீர்தா போன்ற அதன் மேலே காணப்பட்ட தங்க முலாம் பூசிய ஈஸ்தூ தாரிக் குடங்களையும் பார்த்துவிட்டு எத்தனை காரெட் தங்கம் என்று ஐ.ஏ.எஸ்: கேட்காமல் இருந்தது அவர்களுக்கு ஆச்சர்யம்: பூபாளத்தை அடுத்து, பைரவி ராகத்தில் 'பாலகோபால' கார்த்தில் மிதந்து வர, உதிகால பூலையைக் கண்டுகளிக்கத் துடித்தார்கள்: அடுத்தடுத்துப் பார்த்தது மிதப்பு பந்திரடி பூஜை. உச்ச பூஜை. அத்தாம பூஜை எல்லாம் உண்டு: அங்கே உதயாஸ்தமன பூஜையிலேயே பதினேட்டுப் பூஜைகள் அடங்கியுள்ளனவே!" குருவாயூர் சென்றால் அருஇஞ்ஞள்ள மம்மியூரைக்கண் சென்று வெரோனிக்கு தரிசித்தே இரும்ப வேண்டுமாம். நிங்காசை அண்டார், ரோஹிணி பூஜைக்கு வந்திருந்தால் தெரியும், கண்ணனின் மகிமை: விருச்சிக மாசஏகாதசிக்கு வந்து பாருங்கள்! தித்தினரு விஷு பார்க்க வேண்டிய நாள்! மார்கழி மாசத்திலே வருகிற முதல் புதன் முழையை இன்னும் இங்கே இருஞ்ஞன் அவல் நின்ற நாளைக் கொண்டாடுகிறார்கள்: எழைக் குசேசவிடம் பிடி அவல் வாங்கித்தின்ற நான் அது என்பதாலே அன்றைக்கு இங்கே நைவேத்தியம் அவல்தான்!" என்று சங்கமேசுவரன் கூறிய விளக்கம் அவர்களின் மனிக்க வைத்தது:

ஆனல் இவாகரன் இதைக் கவனிக்கும் காமல் பொழையிழந்து நின்றார்: அது அந்தத் தேவல்தானைக்காரர்களுக்குத் தெரியவில்லை: கல்கத்தா வைஞ்தராத் கோவிலில் இவாகரனின் லிஸ்ட்டிங் கார்டு என்ற அட்டையைக் கண்டதும் எப்படி ஓடி வந்து வரவேற்றார் பட்டர்! ஓடினு ஓட்டத்துக்குப் பலனும் இருந்தது. பேஜார் மடத்தில் பூட்டின கதவைத் திறந்து இவாகரன் குடும் பத்தாரை உள்ளே அழைத்தது பொய்யா? பம்பாயில் நேரு பீனை டேரியத்தில் நவக்கிரகங்கள் அவரைச் சுற்ற ஆரம்பித்த கதையை இத்தக் குருவாயூரப்பன் இன்னும் புரிந்து கொள்ளவில்லே! சே! நிஜாமுதீன் ரெயில்வே ஸ்டேஷன் சூப்பிரண்டண்டுக்கு கூட விஷயம் புரிந்த 81-அவது டெக்கில் வெயிட்டிங் லிஸ்டில் இருந்தவருக்கு அதே வெயிட்டிங் லிஸ்டில் ஏமாவது ஆளாக மாற்றிக் கொடுத்த விவரம், இந்தக் குருவாயூரப்பனுக்குப் புரியவில்லையே! "சுதர்சன்! அன்ன ப்ராசனம் முடியட்டும்: நீங்கள் போய் அந்தத் தேவல்தான அதிகாரி கணப் பார்த்து 'ரேவல்க்கு மூவாயிரம் கட்டியிருக்கிறேம்: ரெண்டாயிரம் மைலுக்கப்பாலிருந்து குடும்பத்தோட வந்திருக்கோம்! நாம தரிசனம் பார்க்க வரலில்லே' என்பதைத் சொல்லிவிட்டு வாருங்கள்! பராரிக் கும்பலோடு நின்று வேடிக்கை பார்க்க கூட டெல்லியிலிருந்து கொம்பி இங்கே வந்தோம்? பரட்டைத் தலையும், டிரில் தாளியும் என்ன தரித்திரக் கும்பல் இது!"

மாப்பிள்ளை சுதர்சனம் அவசரக்குப் பதில் சொல்லவில்லே. தம் மனிவியைத் திரும்பிப் பார்த்தார்: பிரமீளா, அன்ன ப்ராசனம் செய்து கொள்ள வந்திருக்கும் அமாசக் குமந்தை யோட அப்பன் மாசம் நாலாயிரம் வாங்கற மானேஜிங் டைரக்டர்: அவனே எல்லாரோடும் என்ன இருஞ்ஞ இங்கே நிற்க லச்சாய் என்ன உன் பள்ளையைக் கேட்டுக் சொல்லேன்!" என்றார். கூட்டத் வினருக்கவர்களும், சங்கமேசுவரனும் அவர்களைத் திருதிருவென்ன பார்த்தனர்: அவர் முகம் ஸ்ரீவெளிறு சிவந்துவிட்டது:

மந்திரக் குமந்தைக்கு, உச்சிக் கால பூஜை, அதை அடுத்து ஒவ் வோர் அலங்காரம். அவற்றை மனமார ரசித்த மகிழ்ச்சி சுதர்சனத்துக்கு. பொறுமையிழந்து நிற்கும் இவாகரனே யாரும் எட்டியும் செய்யாமல் கூட்டம் நெருக்கித் தள்ளவே, சாதாரண ஜனங்கள் மத்தியில்தான் அவரும் குடும்பத் தோடு நிற்க வேண்டியிருந்தது

குழந்தைகளும் பெரியவர்களுமாக அவரைத் தள்ளிக் கொண்டு பிரகாரத்தைச் சுற்றி வந்தனர். நெருக்கடி மிகுந்த அந்தச் சந்நிதியருகில் அவர் தாம் நிற்பதை எளிதில் குறைவாக எண்ணிப் புறமாகத் தடித்தார். ஒவ்வோர் அலங்காரத்துக்கும் கண்ணனுக்குத் தோரா தனே நடக்கும்போது அவர் கரம் குவித்து வணங்கவில்லை. நிரம் தாழ்த்தி எவரையும் பார்க்க விரும்பமின்றி நின்றார்.

"குருவாயூர் தன்னில் அவன் தவறினின்றவன். ஒரு கொடியோடு மதுராவை ஆளினின்றவன். திருவேங்கடத்தில் அவன் அருளின்றவன், ஸ்ரீரங்கத்தில் பள்ளிகொள்கின்றவன்" என்ற பாட்டின் அடிகள் பலமாகக் கேட்கவே, சட்டென்று திரும்பினார் திவாகரன். இதென்ன கோலம் அங்கே ஒரு முடவனின் தரிசனம்?

அவர் அருகே, தள்ளுச் சக்கர வண்டியில் வந்த ஒரு முதியவரை வேலியாட்கள் கையைப் பிடித்துக் மேடு இறக்கியதும், கால்கள் ஊனமுற்றுப் பின்னிக் கிடந்த அவருக்கு அத்தினை வரவேற்பா? கோவில் வேலியாட்கள் அவரைக் கையைப் பிடித்துக் மேடு இறக்கியதும், தள்ளு வண்டி அப் புறம் சென்றது. அடுத்த விநாடி கூட்டம் வழி விட்டது. வரிசையர், சாதாரண மனிதர். நாலுமுழ வேட்டி, இடுப்பில் துண்டு, நெற்றியில் சந்தனம், விபூதி, குங்குமம். உடனே நிலத்தில் படுத்தார். உருளத் தொடங்கினார். "நாராயண ஹரி ஹரி நாராயண!" நிந்தச் சத்தத் துடன் அவர் பிராகாரத்தில் உருளு வதைப் பக்தி சிரத்தையோடு பார்க் கும் கண்கள் பனித்தன. அவரவர் வழி விடவே உருண்டு உருண்டு மீண்டும் சந்நிதிக்கு வந்தார். கோவில் நம்பூரி கையை நீட்டி அவரை அருகில் அழைத்தார். "யார் ஐயா நீந்த ஆள்? ஏவெலிக்கு மூவாயிரம் சுமையாக் கட்டினவனே உமக்குக் கண் தெரியலே! அன்ன ப்ரசனச் செலவுக்குச் சுருத்த பணத்துக்கு ஒதோ ரசீது வாங்கி வச்சிருக்கேன். கவனித்தீரா? சுமும் பத்தோடு கால்கடுக்க நிற்கிறோமோ எங்களுக்கு கூப்பிட்டுக் கொரவமா நடத்திச் சுவாமி தரிசனம் செஞ்சு வைக்கத் தெரியாதா உமக்கு? யார் நெத்தி பரதெரி? மொண்டி முடங்குக்கு இத்தனை கொரதையா?" சீறினார் நிவாகரன். வாதநோய்க்காரர் நாராயண பட்டதிரியை மறந்து விட்டார். ஜ.ஏ.எஸ். சுதர்சனம் அவருடைய படபடப்பைத் தணிக்க முயன்றார்: "தேவஸ்தானத்துக்கு நாம் வந்திருப்பதைச் சொல்லி டிரைவரை அனுப்பியிருக்கிறேன். சங்கரகேவரனும் போயிருக்கிறார்" என்றார். என்ன விபரீதத்தை அங்கே நடத்துவாரோ இந்த மனிதர்? கால் நன்றாக இருப்தால்தான் கடுக்கும் வரை நிற்கவத்திருக்கிறுன் கண்ணன்?

பிரமீளா மட்டும் எதையும் லட்சியம் செய்யாமல் தூணில் சாய்ந்தபடி வெள்ளிக் விண்ணத்திலிருந்த 'பாயசத்தை முருந்துகளுக்கு ஊட்டினாள்: உள்ளே கருவறையில் குழந்தை வடிவில் அழகே உருவாய், தீபாலங்காரத்துடன் நின்றபடி, வெளியே நடக்கும் விநோத மனிதர்களின் விசித்திரப் போக்கை வேடிக்கை பார்க்கும் குருவாயூரப்பனே கண் கொட்டாமல் பார்த்து நின்றுன். அவன் தாயும் அவனைப் போலவே மௌனமாக நின் ருள். "ஏன் சிரிக்கிருய் என்னைப் பார்த்து?" என்று வினாகரன் காரண மின்றிச் சீறினுர் அவர்கள்மீது.

கால்களே இழந்த மனிதருக்கு நம்பூதிரி பிரசாதம் வழங்குவதில் கவனமாக இருந்தாரே தவிர, திவாகரனின் கோபக்கினைகளுக்கு அவர் பயப்பட வில்லே. பிரசாதம் பெற்றுத் திரும்பிய அந்த ஊனமுற்றவரை மறுபடியும் கோவில் வேலியாட்கள், தள்ளுச்சக்கர வண்டியில் அமர்த்தி வெளியே அழைத்துச் சென்ற போது, திவாகரன் அந்த ஆட்களின் மேல் பாய முனேந்தார். 'மூவாயிரம் சேவலிக்கு. ஆயிரம் அன்ன ப்ராசனத்துக்கு. ரொலி செலவு ஆயிரம். ஆக ஐயாயிரம் கரைந்து விட்டதே!'

நல்ல வேளை. அவர் வந்திருக்கும் சேதி கேட்டுத் தேவஸ்தான அதிகாரி விரைந்தோடி வந்தார். அன்ன ப்ராசனம் நடந்த விவரம் பற்றித் திவாகரனிடம் கேட்டார். அடுத்துச் சேவலி நடப்பதற்கான ஏற்பாடுகளை செய்திருப்பதையும் சொன்னுர். திவாகரன் எவ்வாறு பாயப்போகிருரோ என்று சங்கடமுகவரன், தடியாய்த் தடித்தார். திவாகரன் பாய்ந்தே விட்டார்.

"நீங்க படித்தவர்தானே? இந்த விஞ்ட்டிங் கார்டை விசி எறிஞ்சால் எப்போர்ப்பட்டவனும்என் இருப்பிடம் தேடி வந்து என் காலிலுங்கே முடிப்பான் ஐயா! டெல்லி, பம்பாய், கல்கத்தா வி லே யே அப்படியென்ரல், மொண்டி, முடங்கல் கருண்டு விழுந்து கும்பிடும் இந்தக் கோவில் வீலே, இத்தனே பணத்தையும் கொட்டி, நிரமம் பார்க்காமல் வந்து நிற்கிறு என்னே அவமதிக்க ஏ'ப்பி ஐயா உமக்குத் துணிவு வந்தது? நிந்த ஆள் என்ன, நாராயணீயம் எழுதிய நாராயணபட்டதிரியா? உங்கள் நிர்வாக அதிகாரியிடம் இந்தக் கார்டைக் குடுங்கள். பார்த்ததும் ஸ்ரீ கிருஷ்ணனே பயந்துகொண்டு ஓடி வருவான் இங்கே!" என்ருர் ஆச்சு இரைத்தது. பேச்சுத் தடைப்பட்டது.

நீள்ளு வண்டியில் சென்ற ஊன முற்றவர் ஏதோ திரும்பி வந்தார்; திவாகரன் அருகில் வந்தார்; குழந்தை முருந்துகளுப் பார்த்து முறுவலித்தார்; ஆசீர்வதித்தார்: பிரமீளாவை அருகில் அழைத்தார்: குழந்தையின் கையில் கோயில் பிரசாதத்தை வைத்தார். தலேயை நிமிர்த்தினுர். இமை கொட்டாமல் இவற்றைத் கவனித்தபடி நித்தம் திவாகரனேப் பார்த்துச் சிரித்தார்?


"எதை வாரிக் குடித்திருப்பான் குருவாயூரப்பன் உமக்கு? என்ன சிரிப்பு, என்னைப் பார்த்து?" என்று சீறினுர் அவர்.

"பாஞ்சாலி புகழ்காக்கத் தன் தை கொடுத்தான்; அன்னிக்குப் பாரதப் போர்முடிக்கச் சங்கை எடுத்தான்; பாண்டவர்க்கு உரிமையுளள பங்கை அளுகுப் பார்த்துக் கொடுத்தான். படிப்பதற்குக் கீதை என்னும் பாடத்தை நமக்குக் கொடுத்திருக் கிறுவே ஐயா. இன்னும் எதை வாரிக் கொடுத்து என்னேயும் உய்மையும் திருப்பிப்பதத வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்?"

ஐ.ஏ.எஸ். மௌனமானுர்.

"நான் ஒய்வு பெற்ற பள்ளிக்கூட வாத்தியார். கேசவன் உயிரோட இருந்த வரைக்கும் அந்த யானேக்குப் பட்டம் கட்டும்போது என் கையால் ஸ்ரீ கிருஷ்ணன் பேரை எழுதி தெற்றி யிலே கட்டுவேன். நாராயணீயம் எழுதிய நாராயணபட்டதிரி அல்ல. கால் பக்கவாதம் வந்து இழுத்துவிடவே வண்டி வச்சண்டு தினசனத்துக்குத் தினமும் வரேன். நாராயணபட்டதிரி வண்டி கூட இல்லாமல் இங்கே வந்தவர். பணமோ பதவியோ இவ்வாத ஏழைக் குசேலன் ஸ்வாமி நான்! விஸிட்டிங் காரிடை அனுப்பியுஞ், தேவஸ்தான ஆபீஸ் அதிகாரி ஒரு வேளே உம்மைப் பார்க்க ஓடி வரலாம்: என் கண்ணன் நீர் கொண்டு வந்திருக்கிற விஸிட்டிங் கார்டு அட்டையைக் கண்டு ஓடி வரவோமாட்டான் ஐயா! கந் தைத் துணிமுடி வெரிந்த அவலே என்னேபோல இருந்த குசேலன் காட்டாமல் மறைசீக வச்சிருந்த போதும், அவனிடம் அது இருப்ப தைத் தெரிஞ்சண்டு தானே ஓடி வந்தான் பாருங்கோ! அப்படிப்பட்ட வன்தான் கண்ணன். இத்தினை வருஷமா உம் மீது இரக்கப் பட்டுப் பதவியோடு வருமானத்தை அவன் உமக்குக் கொடுக்தான்? அந்தப் பணத்திலிருந்து சீவலிக்கு அவனே உம்மிடமிருந்து எறுதுகள் கொண்டிருக்கிருன்! நீர் கொடுத்தா அவன் வாங்கக் காத்திருக்கிருன்? ஜெர்மன் மருந்து க் கம்பெனிக்காரன் தன் மருந்தை ஒதுக்கி விட்டுக் குருவாயூரப்பன் நல் லெண்ணெயை வாங்கிப் போய் வியாதியிலிருந்து விடுப்டார்ன் ஐயா! வரட்டுமா? பாருமி! பேசாத உம் பேரன் சிரிக்கிறுன்: உள்ளே அவனேப் போலவே அந்தக் கண்ணனும் மௌனமே சிரிப்புச் சிரிக்கிருன். பேசத் தெரிந்த நம் முன்னே, பேசத் தெரியாத அவர்கள் ரெண்டு பேரும் சொம்பப் பிரியவர்கள் ஐயா! விஸிட்டிங் கார்டு அட்டையை நம்பியே அட்டை போல அதைப் பிடிச்சண்டு கட்டை உள்ள வரையிலும் காலட்சேபம் பண்ண நேக்கு தீர்க்கா? வ..ரட்..டுமா?" என்று கேட்டுப் பலமாக அவர் சிரித்த போது, "ஏன் சிரித்தாய் என்னேப் பார்த்து!" என்ரு திவாகரன் கேட் டார்? கண்கள் மடையாய்த் திறந்து நீர் வடிக்க, வாய் புதைத்து, கை கட்டிப் பேசும் சக்தி இழந்து நின் ருர்? அந்த இரு குழந்தை வடிவங் களின் முன் மௌனமாக நின்று அந்த ஜ.ஏ.எஸ். அதன் விஸிட்டிங் கார்டு என்று கவனிப்பாரின்றி மேடை யிடக்கவே, பலரும் அதை மிதித்துச் சென்றதைக் கதர்சனம் கண்டு குனிந்து எடுத்தார்: ✻






கறப்பது முதல்... சுவைப்பது வரை.


'அ'ட்டாஆம் பால் கவையில் குன்ருது' என்று மேன்மக்களின் உயரிய பண்புக்குச் சான்ருக முதலை கூறுகிறது. முக்குண தோஷமும் இல்லாதது பால். சிசுமுதல் கிழவர்வரையில் பால் சிறந்த ஊட்ட உணவு. வெள்ளே நிறம் புனிதத்தின், அமைதியின் அடையாளம். நான்கைந்து கறவை மாட்டை வைத்துக் கொண்டு காலத்தை ஓட்டும் குடும்பங்கள் பல உள்ளன. பொட்டையும் பீண்ணுக்கையும் தின்று, அவையும் வஞ்சனே இல்லாமல் கறக்கின்றன.

காலேயில் எழுந்ததும் காபியின் முகத்தில் விழிக்கும் வழக்கம் ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடு இல்லாமல் வளர்ந்திருக் கிறது. 'அம்மா, பால்!' என்ற அழைப்பு, தேனுக இனிக்கிறது இல்லத்தரசிகளுக்கு.


பால் கறப்பது ஒரு தனிக் கலே. கறந்த பாலே அடிக்கடி விரலால் தொட்டு மாட்டின் காம்பின்மேல் தடவி, பீர் இழுப்பது













எல்லாருக்குமே மேலில் வந்துவிடாது. தகரக் குவளையை இரண்டு முழங்காலுக்கும் இடையில் இடுக்கிக்கொண்டு, இரண்டு கைகளாலும் கறக்கும் அநுபவசாலிகளும் இருக்கிறார்கள். லயம் தவறாத, 'சொர் சொர்' என்ற சப்தத்துடன் இரண்டு கை இழுப்புப் பீரும் தகரக் குவளையில் சுகீதமாக விழும்.


இந்த நாளில் கிராமத்தில் சுத்தமான பால் கிடைப்பது அரிதாக இருக்கிறது. எல்லாம் பட்டணப் பிரவேசம் செய்துவிடுகிறது. காலையில் மாம்பலம், சென்ட்ரல் ஸ்டேஷனில் பார்த்தால் ஒரே பால் குடங்கள்தாம். முதல் நாள் மாலைப் பால், காலைப் பால் இரண்டையும் ஒன்றுக்கொண்டு வந்துவிடுகிறார்கள். பாலை எடுத்து வருவதற்கே, காஞ்சிபுரம் பாஸஞ்சர் வண்டியில் தனிப் பெட்டி இருக்கிறது. பால் தவலைகளைப் பிளாட்பாரத்தில் இறக்கியதும் ஒரே பரபரப்பு. ஹோட்டல்களுக்கும் டீக் கடைகளுக்கும் தனியார் வாடிக்கை வீடுகளுக்கும் அவற்றைச் சுமந்து செல்வதில் ஒரே சுறுசுறுப்பு. தலைச்சுமை, கைச் சுமை என்று சான்கள் ஒட்டம் பிடிக்கின்றன.

தனியார் வைத்திருக்கும் பால் கடையில் காலை மாலை வேளையில் ஒரே கூட்டம். தகரக் குவளைகளிலிருந்து பெரிய வாளியில் பாலை ரிப்பாயுதில் இரண்டு நன்மைகள்! வாடிக்கையாளர்களின் எதிரில் கறந்த பாலை அப்படியே வாற்றுவதாகக் காட்டுவது. வாளியில் தண்ணீர் இருந்தாலும் சாமர்த்தியமாக ஊற்றுவது.











சென்னை போன்ற நகரத்தில் பால்வள அமிலிருந்து நிறுவனம் விநியோகம் செய்வதே அதிகம். பெரிய பெரிய 'டாங்கர்' களில் கோயம்புத்தூர், ஈரோடு போன்ற நகரங்களிலிருந்து பால் வருகிறது. டாங்கரிலிருந்து பாலைக் குழாய்மூலம் ஐந்து டிகிரி சென்டிகிரேடுக்கும் குறைந்த குளிர் அறையில் பெரிய பெரிய 'பால் டாங்கு'களில் சேகரித்துக்கொள்கிறார்கள். இங்கே பாலைச் சூடாக்கிக் குளிரச் செய்வதால், பால் கெடாமல் இருக்கிறது. யந்திரத்தின் மீன் பக்கத்தில் சுருளாக இருக்கும் பிளாஸ்டிக் தகட்டைப் பையாக மடித்து அரை லிட்டர் பால் நிரம்பியதும், வாயை மூடி இணைக்க, பைகள் நிமிஷத்துக்கு நூற்றுக் கணக்கில் குவிகின்றன. இருபது இருபது பால் பைகளாகப் பெட்டிகளில் எண்ணி வைக்கின்றனர். இந்தப் பிளாஸ்டிக் பால் பைகளைச் சேகரித்து வைக்கும் அறைக்குள் போனால் கைகள் சில்லிட்டுவிடுகின்றன. 'உல' என்ற குளிர்காற்று வீசுகிறது. அம்பத்தூர்ப் பால் பண்ணையிலிருந்து 1,50,000 அரை லிட்டர் பிளாஸ்டிக் பைகள் அன்றாடம் வெளியே போகின்றன.



மாதவரத்தில் தான் பாட்டில்களில் பால் விநியோகம் நடக்கிறது. வெந்நீர் ஆவியில் பாட்டில்கள் முக்குளித்துவிட்டு, கன்வேயர் பெல்ட்டுகளில் தகர்ந்து வருகின்றன. வரும் வழியிலேயே அரை லிட்டர் பால் நிரம்பி, அலுமினியம் மூடியும் பொருத்தப்பட்டு, உறையும் குளிர்பதன அறைக்குச் செல்கின்றன. இங்கிருந்து 1,50,000 லிட்டர் பால் பாட்டில்கள்,














பிளாஸ்டிக் பைகள், 'கான்'கள்மூலம் அன்றாடம் சென்னை நகர மக்களின் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது.

பால் வண்டி வருகிறதா என்று 'பால் பூத்'துக்களில் தவம் கிடப்பவர்களுக்கு அந்த வண்டியின் குறல்நாதம் கேட்டதுந் தான் எத்தனை மகிழ்ச்சி! கூடு அமைந்துவிடுகிறது.


மகாலாப் பால் சாப்பிட்டிருக்கிறீர்களா? ஏலம், லவங்கம் எல்லாம் போட்டு, முந்திரி, கசகசாவை அரைத்துப் போட்டுப் பெரிய அண்டாவில் காய்ச்சுவதைப் பார்த்திருக்கலாம். முந்திரி விற்கிற விலையில் அதை அரைத்துப் போடுவார்களா என்பது சந்தேகந்தான். பால் நன்றாக முறுக்கக் காய்ந்திருப்பதாலும், வாசனைப் பொருள்கள் போட்டிருப்பதாலும், கரண்டியால் தூக்கி ஏத்து ஆற்றும்போதே கம்மென்ற வாசனை உங்களைக் கவரும்.

பகலெல்லாம் உழைத்த களைப்புத் தீர, 'ஆவின்' அளிக்கும் இளிப்பும் மணமும் ஊட்டிய பாலை அருந்தி விடு திரும்புகிற வர்கள் பலர். இரவில் பால் குடித்துப் பழகிய குழந்தைகளுக்குப் பால் கொடுக்காவிட்டால் தூக்கமே வராது. இளஞ் சூடாக ஒரு கப் பால் உள்ளே போனால்தான் அந்தக் குழந்தைகளின் முகத்தில் உற்சாகம் பிறக்கும்.

மாட்டுக் கொட்டிலில் தொடங்கிச் சமையலறையில் நிறை வெய்தும் 'பாலின் பயண'த்தில் அது தயிர், வெண்ணெய், நெய், காபி என்று எத்தனை பிறவிகளை எடுத்துவிடுகிறது!

போட்டோ: டி. வி. விசுவநாத்.







யார்?

இத்தனை பெரிய கூடாரத்தை
இங்கு விரித்தவர் யார்? - அதில்
எத்தனை எத்தனை சித்திர நித்திலம்
ஏற்றி நிறைத்தவர் யார்?

முத்து நிலாவெனும் முத்திரை வட்டமாம்
மோகம் அமைத்துவர் யார்? - அதைச்
சித்தம் எலாம்மகிழ் சேர்பிறை யாகச்
செய்து வளர்ப்பவர் யார்?

ஆயிரம் ஆயிரம் மேகக் கூட்டம்
அலைய விடுப்பவர் யார்? - அதைப்
போய் மழையாகப் பூமகள் மீதில்
பொழியச் சொல்பவர் யார்!

காயும் கதிரின் கனலை ஆற்றிக்
கங்குல் விதைப்பவர் யார்? — இதைப்
பாயிரமாகப் பரவிட என்னுள்
பாடல் இசைப்பவர் யார்?

வந்து விடு!

சென்றே திரும்பி வந்துவிடு— நீனைக்
இன்றேன் விரும்பி வந்துவிடு!
கனவில் கலந்தோம் காட்சி நினைத்தோம்
நினைவு மறந்தோம் நிகழ்வில் நிலைத்தோம்
முனைவின் கனைப்பில் முழிழ்ந்த வியப்பில்
இனவு தவிர்த்தோம் தவித்துத் துடித்தோம்.
சென்றே திரும்பி வந்து விடு - இருக்
இன்றேன் விரும்பி வந்து விடு!
உள்ள மிணைந்தோம் உயிரி லணைந்தோம்
மெள்ளக் கனத்தோம் மேலி மழிந்தோம்
வெள்ள முலைப்பாய் வேக மனத்தால்
புள்ளி நிலைப்பாய்ப் புதுமை இசைத்தோம்
சென்றே திரும்பி வந்து விடு - அமைக்
இன்றேன் விரும்பி வந்து விடு!
இன்றெடு நேற்றை எதிர்வரு நாளை
வென்று நிலைப்போம் வியனுல கத்தில்
சென்ற பிறப்புகள் சேர்ந்த முழிப்பில்
இன்று மலர்வோம் இளிப் பிரிவில்லை;
சென்றே திரும்பி வந்து விடு - அடு
இன்றென் திரும்பி வந்து விடு!
கால நெடுந்தொலை கடந்தே இணைந்தோம்
கோலம் பலவகை கொண்டேயிர்த்தோம்
காலம் மாறினும் காதலில் மாறேரும்.
காலம் அழைக்கவே கடுகியே சென்ருய்;
சென்றே திரும்பி வந்து விடு - நினைக்
இன்றேன் விரும்பி வந்து விடு!

மதிவண்ணன்



பாரதிக் கனவு

உலகினைக் கவர்வது பரதக்கலை - அதன்
உயரிய சிந்தனை இமயமலை —(உலகினை..)

நிலவெறத் தமிழகம் படைத்த கலை;
நெஞ்சினில் நிறைந்திடும் உணர்ச்சிஅலை;
பல வகை அதிகளின் ஒலிக்கோலம் உலகில்
பாவராக தாளக் கலைப் பாலம்
கரணங்கள் நூற்றெட்டு நிலதாட்டுமே
கண் ணுலே பல நூறு கதைதீட்டுமே
அரன்ஆட்டம் ஆனந்த வழிகாட்டுமே
அபிநயம் ஆயிரம் பொருள்மீட்டுமே —(உலகினை..)

தன் வழி தேடிக் கைசெல் லும்
கைவழி தேடி மனம்செல் லும்
கண்ணும் கையும் மனமும் தேடிக்
காலும் ஒடும் ஜதிபோடும்
காண்பவர் உள்ளம் கலந்தாடும்
கலைகள் எல்லாம் பறந்தோடும்
எங்கும் இன்பம் வினையாடும்
எண்ணிய தெல்லாம் கைகூடும். —(உலகினை..)


'மஹா'



புதுமைச் சிற்பங்கள்

பொன் விழாக் கலைஞர்

பேசும் படங்கள் வரத் தொடங்கி ஐம்பது ஆண்டுகள் ஆகின்றன. சினிமாத் துறை பொன் விழாவைச் சிறப்பாகக் கொண்டாட இருக்கிறது. முதல் முதலில் வெளி வந்த பேசும் படம் 'ஆலம் ஆரா' (ஹிந்தி), 'காளிதாஸ்' (தமிழ்) ஆகிய படங்களில் நடித்த திரு எல்.வி. பிரசாத், அவர்கள் இன்று சினிமாத் துறையின் முன்னணித் தயாரிப்பாளராக, சொந்த ஸ்டுடியோ அமைப்புடன் விளங்குகிறார். பல படங்களை டைரக்ட் செய்திருக்கிறார். அன்று இளைஞராக கதாநாயகனை நடித்தார். இப்போதும் சமீபத்தில் வெளிவந்த 'ராஜ பார்வை' என்ற படத்தில் தாத்தாவாகமேற்றுச் சிறப்பாக நடித்திருக்கிறார். பேசும் சினிமாத் துறையுடன் தாமும் வளர்ந்துள்ளவர் திரு பிரசாத் அவர்கள். பதினைந்துக்கு மேல் இந்திப் படங்களும், ஏழு தமிழ், தெலுங்கு, கன்னடப் படங்களும் தயாரித்துள்ள இவரைப் பொன் விழாக் கலைஞர் என்று கூறுவதில் தவறு என்ன? இவர் தயாரித்த படங்கள் பல, சிறப்புப் பரிசுகளைப் பெற்றிருக்கின்றன. ஸ்டூடியோச் சொந்தக்காரர்கள் கௌன்ஸிலின் தலைவராக இவர் சினிமாத் துறை



சம்பந்தப்பட்ட பல அமைப்புக்களில் அங்கம் வகிக்கிறார்.

தாம் கண்டு அநுபவித்த ஐம்பதாண்டுக் கதையைக் கூறுகிறார்.

1930-ஆம் ஆண்டு, சினிமா உலகத்தில் நுழைந்து ஒரு நடிகராக வேண்டும், அத்துடன் அந்தத் துறையில் ஒரு பெரும் புள்ளியாகவும் வளர வேண்டும் என்ற ஒரே ஆசை; என் அருமை மனைவியையும், என் அன்புக் குழந்தையையும் வீட்டில் விட்டு விட்டு யாருக்கும் தெரியாமல் பம்பாய்க்கு ரெயில் ஏறினேன். அப்போது என் பையில் நூறு ரூபாய் தான் இருந்தது.

பம்பாய் போய்ச் சேர்ந்தவுடன் ஒரு ஹோட்டலில் தங்கினேன். மூன்று நாட்களுக்குள் என்னிடமிருந்த நூறு ரூபாய் குறைந்து, இருபது ரூபாயே மீதி இருந்தது. என்னுடைய நிலைமையைப் புரித்து கொண்ட அந்த ஹோட்டல் முதலாளி வேறு இடம் பார்த்துக் கொள்ளும்படி நாளுக்காக என்னிடம் சொன்னார்.

தங்குவதற்கு எங்கே செல்லது? தவிர, எனக்கு இந்தியும் தெரியாது; யாருடனும் பேச வேண்டுமானால், என்னுடைய அரை குறை ஆங்கிலத்தான் எனக்குக் கை கொடுத்து உதவியது. என்ன செய்வது என்ற சூழ்நிலைத்தில் நடுச் சாலையில் நின்று யோசித்தேன். அப்போது பக்கத்தில் கடை வைத்திருந்த ஒரு தையற் காரர் என்மீது இரக்கங் கொண்டு தம்முடைய கடையில் என்னைத் தங்கிக் கொள்ளச் சொன்னார்.

என் நன்றியை அவருக்குத் தெரிவித்தேன். அந்தச் சின்ன அறையில் ஒரு பக்கம் துணிகள், மற்றொரு புறம் தையல் யந்திரம். இதற்கிடையில் நானும் எப்படியோ சமாளித்துக் கொண்டு காலத்தைத் தள்ளினேன். பொழுது விடிந்தவுடன் எழுந்திருந்து கடையைக் கூட்டிச் சுத்தம் செய்து விட்டு வேலை தேடும் படலத்துக்குக் கிளம்பி விடுவேன்.

வேலைக்காகப் பம்பாய் நகரத்தின் தெருக்களைச் சுற்றினேன். கோஹினூர் மிலிஸ் கம்பெனியின் வாசலில் தவங்கிடந்தேன்; எந்த வேலையும் கிடைப்பதாக இல்லை; அர்வத்தை இழக்காமல் பம்பாயிலுள்ள மற்ற ஸ்டூடியோக்களின் வாசலில் காத்துக் கிடந்தேன். ஏதாவது வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு நின்ற நாட்கள் பல. ஆனல் வாசல் கதவுகளின் முன் நின்ற கால் கடுத்ததுதான் மிச்சம், வேலை எதுவும் கிடைக்கவில்லை.

தையற்கார நண்பர், சினிமாக் கம்பெனிகளில் வேலை செய்ய வேண்டும் என்ற என் ஆசையை அறிந்து, எனக்கு வீனஸ் பிக்சர்ஸில் வேலை வாங்கித் தந்தார். மாதம் பதினைந்து ரூபாய் சம்பளம். (கடையில் அந்தக் கம்பெனி படமும் எடுக்க வில்லை, சம்பளமும் கொடுக்கவில்லை. அது வேறு கதை.) வீனஸ் பிக்சர்ஸில் வேலை செய்து வந்த ஒருவர் எனக்கு (கார்னிவல்) களியாட்டம் நடக்கும் இடத்தில் வேலை வாங்கித் தந்தார். தினச் சம்பளம் ஒன்றரை ரூபாய். நாள் முழுதும் வீனஸ் பிக்சர்ஸில் வேலை செய்து விட்டு, மாலையில் களியாட்டம் நடக்கும் இடத்துக்குப் போய் அங்கே விடியற்காலை இரண்டு மணி வரை வேலை செய்து விட்டு அங்கிருந்து என்னுடைய அறைக்கு (தையல் கடைக்கு) ஐந்து மைல் நடந்து வருவேன்.

ஒரு நண்பனின் உதவியால் வீனஸ் பிக்சர்ஸ்லிருந்து, இந்தியன் பிக்சர்ஸ் என்ற சினிமாக் கம்பெனியில் சேர்ந்தேன்.

அவர்கள் எடுத்த, 'ஸ்டார் ஆப் தி ஈஸ்ட்' என்ற ஊமைப் படத்தில், ஒரு சின்ன வேஷத்தில் நடித்தேன். அந்தக் காலத்தில் சின்ன வேஷம் போடும் நடிகர்கள், பேசாமல் நடித்து விட்டுப் போய் விட முடியாது. தயாரிப்பில் இருக்கும் பல வேறு சின்ன வேஷக்காரர்களை அவர்கள் கவனித்துக் கொள்ள வேண்டும். அப்படி அவர்கள் வேலை செய்ய மறுத்தால், 'சோம்பேறி, அடக்கமில்லாதவன்' என்று பிறரிடமும் கூறி, மற்ற இடங்களில் வேலை கிடைக்காமலும் செய்து விடுவார்கள். செய்த வேலைக்காவது சம்பளம் கிடைக்குமா என்றால் அதுவும் கிடைக்காது. 'மேக்கப்' போட்டுக் கொண்டவர்கள் எல்லாம் நடிகர்கள் மட்டும் அல்ல, பல்வேறு உதவியாளர்களும் கூட. ரிப்ளக்டர், காமிரா ஸ்டாண்டு தூக்குவது முதலிய வேலைகளையும் செய்துதான் ஆக வேண்டும்.

ஒரு சமயம், அத்தர் நவாஸ், வெளிப்புறப் படப்பிடிப்புக்காக எங்களை மிகத் தூரத்திலுள்ள இடத்துக்கு அழைத்துச் சென்றார். எல்லாரையும் ஒரு பெரிய பங்களாவில் தங்கச் செய்தார். அந்தப் பங்களா ரெயில் நிலையத்திலிருந்து பதினைந்து மைல் தொலைவில் இருந்தது.

ஒரு நாள் இரவு எங்களை எல்லாம் பங்களாவில் விட்டு விட்டுக் கதவைப் பூட்டிக் கொண்டு போய் விட்டார். எங்களுக்கு ஆகாரம், ஏன், நிழல் டீக்குக்கூட வழியில்லை. இரண்டு நாள் காத்திருந்தோம். அவர் வருவதாகக் காணோம். வேறு வழியில்லாமல் பதினைந்து மைல் நடந்து பம்பாய் வந்து சேருவதற்குள்

வாழ்க்கையே வெறுத்து விட்டது என்று தான் கூறவேண்டும்.

பம்பாய் வந்து சேர்ந்ததும் மேலும் புதுப் பிரச்னைகள் முளைத்தன. வேலே இல்லாத் திண்டாட்டம். பரே தப் பிரயத்தனம் செய்து இம்பீரியல் பிலிம் கம்பெனியில் எனக்கு வேலே கிடைத்தது.

அந்த நாளில் சிறு வேஷங்களேச் செய்யும் நடிகர்களே மாதச் சம்பளத்தில் ஒப்பந்தம் செய்து கொள்வார்கள். அவர்கள் எந்த வேஷம் போடவும் எப்பொழுதும் தயாராய் இருக்க வேண்டும். கம்பெனி எடுக்கும் எல்லாப் படங் களிலும் நடிக்க வேண்டும்.

இம்பீரியல் கம்பெனியார் 'ஆலம் ஆரா' என்ற முதல் இந்தி பேசும் படத்தை எடுத்தார்கள்.

நடிகர்கள் பாடும் காட்சியில் நேரடி யாக ரிகார்டு செய்தார்கள். 'ப்ளே பாக்' முறை அந்தக் காலத்தில் கிடையாது. நாடக நடிகைகள் அவர்கள் சொந்தக் குரலிலேயே பாடிப் பேசி நடிக்க வேண்டும்.

எனக்கு நன்றாக நினைவு இருக் கிறது. நாங்கள் எல்லாரும் ஒரு பாட்டைப் பாடிக் கொண்டே நாட் டியம் ஆடும் காட்சியை எடுக்க, சோடப்தருக்குப் போய்ச் சேர்ந் தோம். அந்தக் காலத்தில் படம் எடுக்கும் முறை, இந்தக் காலத்தை விட முற்றும் மாறுபட்டது. காமிரா நகராமல் படமாக்கப்படும் முறை ஒரு கால கட்டத்தில் அதிகம் இருந்தது. அதற்குப் பிறகு கையில் துக்கிக் கொண்டு நகர்வது, பிறகு டிராலி வந்தது. கதாநாயகி; பாடிக் கொண்டே செல்வது போல் அமைக்க வேண்டுமானால், காமிரா ஒரு டிராலி யிலும், மைக்கும் மற்றெரு டிராலி யிலும், வாத்திய கோஷ்டி இன்னெரு டிராலியிலும் அமர்ந்திருக்க, நடிகை நடந்து செல்லும் வேகத்துக்கு ஏற்ப டிராலிகளே இழுத்துச் சென்று படம் பிடிக்க வேண்டும். ஒரு பாட் டைச் சில சமயங்களில் ஒரு நாள் முழுதும் படம் பிடிப்பார்கள். பல



1946-இல் 'கிருகப்பிரவேச'த்தில் கதாநாயகனுக..

'டேக்கு'கள் எடுக்கவேண்டியிருக்கும். எனினில் படம் எடுத்து முடியாது. மேகம் மூடினுல் தடங்கல், மைக்கின் மேல் அதிகக் காற்று வீசினுல் தடங் கல், வாத்தியக் கருவிகளின் சுருதி மாறி விட்டால் தடங்கல்-இப்படிப் பல தொந்தரவுகள்.

அந்தக் காலத்தில் நடிகர்களுக்கு, தாந்தவன், உயர்ந்தவன் என்ற மனப்பான்மை இல்லே. சம அந்தஸ்து தடனும், சகோதரபாவத்துடனும் பெரிய நடிகன், சிறிய நடிகன் என்ற வேற்றுமையில்லாமல் பழகி வந்தார் கள். பிரிதிவி, ராஜகபூர், மாஸ்டர் விட்டல், பிலிமோரியா, ஜகதிஷ் சேதி, நயாம் பள்ளி, மஹ்பூப்கான் முதலிய சிறந்த நடிகர்களெல்லாரும் அந்த நடிகர்களும் சரிசமமாகப் பழகினர் கள். 'நாங்கள் நடிக சமூகத்தைச் சேர்ந்தவர்கள்' என்றே எண்ணினர் கள்.

எனக்குத் தக்க வாய்ப்புக் கிடைக் காத காரணத்தால் படம் எடுக்கும் முறையையும் தொழில் நுணுக்கங் களேயும் தெரிந்துகொள்ள இங்கே வாய்ப்பில்லாமல் போய் விட்டது.

அந்தக் காலத்தில் முதல் தமிழ்ப் பேசும் படமான 'காளிதாஸ்' படத் தில் நான் கோவில் அர்ச்சகராக நடித்தேன். இதில் உள்ள சிறப்பு அம்சம் என்னவென்றால் இதில் கதா நாயகியாக நடித்த டி.பி. ராஜலட் சுமி தமிழில் பேசுவார். நாயகன் தெலுங்கில் பேசுவார்: இது தான் முதல் தமிழ் பேசும் படம். இதே போல் திருஷ்ணு பிசர்ஸாரின் முதல் தெலுங்கு பேசும் படமான 'பக்த பிரஹலாதா'வினும் நடித் தேன். இந்தப் படத்தின் டைரக்டர் நிரு எச்.எம். ரெட்டி.

இந்த நேரத்தில் எதிர்பாராத அதிர்ஷ்டமாய் நிரு கஜல்பர் அலி ஷாவின் மேடை உதவி டைரக்டராகப் பணி புரிய வாய்ப்புக் கிடைத்தது.

நிரு அலிஷா உணர்ச்சி வசப் படக்கூடியவர். அதிகமாகக் கோபம் வரும். சில சமயங்களில் கோபத் தில் கத்துவார். ஆனுல் நான் நிரு அலிஷாவுடன் வேலே செய்த வரை, அவருக்குக் கோபம் வரும் படியாக நான் நடந்து கொண்ட தில்லே. என்னுடைய வேலேத் திறமேக் கண்டு அவர் மகிழ்ந்தார்.

சில காலத்துக்குப் பிறகு இம்பீ ரியல் பிலிம் கம்பெனியில் ஆள் குறைப்புப் படலம் துவங்கியது. வெளியேற்றப் பட்டவர்களில் நானும் ஒருவன். மறுபடியும் வேலேயில்லாத் திண்டாட்டம். அந்தச் சமயம் கிருஷ்ணு சினிமாவில். காவல் காரனுக வேலே செய்தேன்.

அந்தச் சமயத்தில் நிரு ரெட்டி 'ரேதா கயம்வரம்' என்ற இந்திப் படத்தை டைரக்ட் செய்ய வந் தார். அதில் நடிக்க ஒரு வேஷம்



1980-இல் 'ராஜ பார்வை'யில் தாத்தாவாக..

கிடைத்தது. படம் முடியும் தறுவாயில் திரு ரெட்டிக்கும், பட முதலாளிக்கும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டுக் கம்பெனியை விட்டு அவர் விலகி விட்டார். ஆனால் நான் தொடர்ந்து வேலை செய்து வந்தேன். படம் வெளி வந்தது. படமுதலாளி என் கடின உழைப்பையும், நல்ல நடத்தையையும் கண்டு அந்தக் கம்பெனியில் மானேஜர் பதவியைக் கொடுத்தார். என்னுடைய துரதிருஷ்டம் கம்பெனியை விரைவிலேயே மூடி விடும் நிலை வந்துவிட்டது. மறுபடியும் வேலைப் பிரச்சினை. வேலை கிடைப்பது, வேலையை இழப்பது, வேலையில்லாமல் இருப்பது இவை என்றோ கூடப் பிறந்தனவோ என்று தோன்றும்படி ஆகி விட்டன. இது எனக்குப் பழகியும் போய் விட்டது.

ஆனால் இப்படி அல்லல்பட்டதால் எதையும் துணிச்சலோடு எதிர் கொள்ளும் மனப்பான்மை வளர்ந்து விட்டது. ஏமாற்றமும் அடைய வில்லை. நான் நிரைப்படத் துறையில் செய்யாத வேலை இல்லை. தயாரிப்பு நிர்வாகி ஆக, மானேஜராக, ஒலிப் பதிவு உதவியாளராக, இப்படிப் பல வேலைகளைச் செய்திருக்கிறேன். அதோடு, பல படங்களில் சிறு வேடங்களை ஏற்று நடித்தும் வந்தேன். இந்த நேரத்தில்தான் திரு எச். எம். ரெட்டி தமக்கு உதவியாளராக வேலை செய்ய என்னை அழைத்தார். ஒப்புக்கொண்டு அவருடனே சென்னைக்கு வந்தேன்.

திரு எச்.எம். ரெட்டி அவர்களின் உதவியாளராக வேலை செய்ததுடன் அவர் எடுத்த 'சத்யமே ஜயம்' என்ற படத்தில் கதாநாயகனுக்கவும் நடித்தேன்.

தண்டரை சுப்பிரமணியம் என் பவர், தாம் பம்பாயில் எடுக்கப் போகும் 'கஷ்ட ஜீவி' என்ற படத்துக்கு என்னை டைரக்டராக நியமித்தார். ஆனால், மூவாயிரம் அடிவரை எடுத்த படம் பூர்த்தியாக வில்லை. உதவி இயக்குநராகத் திரும்பவும் தொடர ஆரம்பித்தேன். சவால், லேடி டாக்டர், தர்ப்பண், நெக்பர்வின் முதலிய படங்களில் உதவியாளராகப் பணி ஆற்றினேன்.

நாடக மேடை அனுபவத்தையும் நான் விட்டு வைக்கவில்லை. பிரிவி நியேட்டர்களில் சேர்ந்து, இவால, சகுந்தலா முதலிய நாடகங்களில் என்ன வேடங்களை ஏற்று நடித்திருக்கிறேன்.

என்னப் பொறுத்தவரை பொன்ன வருடம் 1945-ஆம் ஆண்டு தான். 'திருப் பிரவேசம்' என்ற தெலுங்குப் படத்தை இயக்கவும் கதாநாயகனாக நடிக்கவும் சந்தர்ப்பம் வாய்த்தது. படம் பிரமாதமாக ஓடி வெற்றியையும் புகழையும் வாரிக் கொடுத்தது.

அன்று ஆரம்பித்த இயக்குநர் பொறுப்பு, நாற்பத்தைந்து படங்களை இயக்கி முடித்த பின் சிறிது ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கிறது. நான் தயாரித்த படங்கள் இருபத்தைந்து. ஒவ்வொன்றுக்கும் படப் பிடிப்புக் கொட்டகைகளைத் தேடிப் போவதில் உள்ள சிரமத்தை அறிந்து 1965 -ஆம் ஆண்டில் ப்ரஸாத் ஸ்டூடியோ தொடங்கினேன். சரியாகப் பதினேழ் ஆண்டுகளுக்குப் பிறகு 'கலர் லேப்' ஆரம்பமாயிற்று. பேசும் படத்துறை இப்போது தொழில் நுணுக்கத்தில் முன்னேறியிருக்கிறது. அதலால் அடுத்து 70 எம்.எம். வண்ணப் படங்கள் எடுக்க வசதியாக சோதனைச் சாலையையும் 'ஸ்டிரியோ போனிக்' முறையில் ஒலிப்பதிவுக் கூடம் ஒன்றையும் தொடங்க இருக்கிறேன். தொடக்கத்திலிருந்து இந்தத் துறையில் அல்லாடிப் பழகிய எனக்கு இந்தப் பொன் விழாக் கொண்டாட்டம் தனிப்பட்ட மகிழ்ச்சியை அளிக்கிறது.

*


பேட்டி: 'சலன்'

ஆனந்தமான தீபாவளி வாழ்த்துக்கள்



— L. ராங்கன்

பாதுகாப்பிற்கும் வளர்ச்சிக்கும்



திகும்பகோணம் எடி யூனியன் பாங்க் லிட்
பதிவு அலுவலகம் கும்பகோணம்-612001

APRC



The spark of an idea... the light to the future.

Creativity is the key word—and that's what Carborundum Universal is all about...creative technology at its best. Evolving new techniques to serve industry...making scarce materials go farther, anticipating tomorrow's needs.
There aren't many like us around.

CARBORUNDUM UNIVERSAL LTD.

Manufacturers of Bonded and Coated Abrasives, Abrasive Grains, Calcined Bauxite, Super Refractories and Electrocast Refractories.
MADRAS • CALCUTTA • BOMBAY • NEW DELHI
Service-conscious suppliers of basic tools for industry

OBM 3903

சமுதாய சேவை



-ஏ.நடராஜன்-

இடம்: சாலையை ஒட்டிய பூங்கா.

நண்பர்களுடன் ராஜன் பேசிக் கொண்டிருக்கிறான்:

ராஜன்: (சொற்பொழிவு போலப் பேசுகிறான்.) மனிதன் பிறக்கிறான், உண்கிறான். இறக்கிறான். இடையில் இருக்கும் வாழ்நாட்களை ஏன் வீணாக்க வேண்டும்? வாழ வேண்டும்! இன்பமாக வாழ வேண்டும்! எப்படியாவது இன்பமாக வாழ வேண்டும். இதுதான் நமது கொள்கை. உலகில் நாம் பிறந்தது எதற்காக? ஏதோ ஒரு மூலையில் உட்கார்ந்து கொள்ளவா? இல்லை, நமக்காகத்தான் உலகம் படைக்கப் பட்டிருக்கிறது. உலகம் எப்போது பிறந்ததோ, அப்போதே இன்பமும் பிறந்து விட்டது. நாம் விரும்பின பொருளை அடைய எந்த வழியையும் பின்பற்றலாம். அதில் தவறு கிடையாது!

(நண்பர்கள் கை தட்டுகிறார்கள்.)

மணி: நம்ப ராஜன் பட்டணம் போய்க் காலேஜிலே படிச்சுட்டு வந்தானும் வந்தான், ஒரேயடியாப் பொளந்து கட்டறான். பாத்தியா நீ?

துரை: ஆமா ஆமா! பொளந்து தான் கட்டறான். ஆனு, இங்கே யாருகிட்டேயும் வால் நீட்டினால் ஒட்ட நறுக்கிடுவாங்க.

ராஜன்: என்னப்பா, எதை நறுக்கிடுவாங்க? நான் அங்கே பேசிக் கிட்டிருக்கேன். நீங்க இங்கே குட்டிப் பிரசங்கம் அடிச்சிக்கிட்டிருக்கீங்க; என்ன விஷயம்னு தான் சொல்லுங்களேன், நானும் கலந்துக் கறேன்.

மணி: எல்லாம் உன்லேட பிரதாபத்தைப் பத்தித்தான் பேசிக்கிட்டிருக்கோம். பட்டணம் போயிட்டு வந்தாலும் வந்தே, ஆளே மாறிப் போயிட்டியே!

ராஜன்: முன்னே நான் பட்டை தீட்டாத வைரம். இப்ப நான் பட்டை தீட்டப்பட்ட வைரம். அவ்வளவுதான்.

துரை: ஏம்பா, அங்கே நீ தெறையப் படிச்சியோ?

ராஜன்: (அலட்சியமாக) உம்.. அறிவு என்ன அச்சடிச்ச புஸ்தகத் திலா அடங்கிக்கிடக்குது? இல்லே, பள்ளிக்கூடத்து நாலு சுவர்களுக் குள்ளேயா முடங்கிக் கிடக்குது? வெளி உலகத்திலேருந்துதாம்பா நான் நெறையத் தெரிஞ்சுக்கிட் டேன்; மாலே நேரத்திலே ரீட்டா டிரஸ் பண்ணிக்கிட்டு ஒய்யாரமாப் பவனி வருவோம் பாரு. சே! அந்த உற்சாகம் தனி உற்சாகந்தான் போ. ஆயிரம் கொடுத்தாலும் அது இங்கே வராது.

மணி: திருக்குறள், பாரதியார் பாட்டெல்லாம் நெறையப் படிச்சிருப் பியே?

ராஜன்: யார்ரா இவன் கத்த ராமத்தாளு இருக்கே! நான் எதைப் பத்திப் பேசறேன்! இவன் எதைப் பத்தியோ பேசறான்!

துரை: இல்லேப்பா நாங்களுந் தான் ....

ராஜன்: அப்படிக் கேளு, சொல் றேன். மணிக்கணக்காச் சொல்றேன். கடற்கரையிலே உலவிய நாட்கள், கல்லூரி கேண்டீனில் செஞ்ச கலாட் டா, மேட்லி ஷோ விஷமங்கள்! அப்பப்பா, எத்தனையோ விஷயம் இருக்கு. சொல்றேன் வா.

(அந்தச் சமயத்தில் டக் டக் என்று செருப்பொலியுடன் ஒரு பெண் செல்கிறாள்.)

ராஜ: (அடித் தொண்டையில்) பிரதர், யார் இந்த அன்ன நடை அழகு?

மணி: உஸ்! சத்தம் போடா தேப்பா! அவதான் நம்ம ஊருக்குப் புதுச்சா வந்திருக்கிற இன்ஸ்பெக்டர் ரோட மக, மாதவினு பேரு. கிட்ட ஏதும் நெருங்கிடாதே, கத்த நேரப்புடு!

ராஜ: டேய்! டேய்! என்னடா இது? பார்த்தா அழகா இருக்கா. அவளோப் போய் நெருப்புன்னு வர்ணிக்கறயே?

மணி: அவ குணத்தைச் சொன் னேம்பா.

ராஜ: அப்படின்னு, கிட்ட நெருங்க முடியாதுங்கறே.

மணி: ஆமாங்கறேன்.

ராஜ: நெருப்பாடே நான் வினை யாடேறன்.

துரை: என்னய்யா சொல்றே?

ராஜ: கிட்ட நெருங்கினுச் சுட்டுடு வான்னு சொன்னியே! அவ கிட்டே நெருங்கிப் பேசி அவனே என்பக்கம் இழுக்கலே, நான் ராஜன் இல்லே. இதெல்லாம் எனக்குச் சர்வசாதார ணம். இந்த விஷயத்திலே வெற்றி பெறலேன்னு அப்புறம் நான் பட்ட ணத்துலே போய்க் கத்துக்கிட்டது எல்லாம் எதுக்குத்தான் உபயோகப் படறது?

(காட்சி மாற்றம்)

இடம்: இன்ஸ்பெக்டர் வீடு.

இன்ஸ்பெக்டர்: மாதவி, வந்துட்டியாம்மா? இந்நேரம் உனக்காகநால காத்துக்கிட்டிருந்தேன். சாப்பிட வாம்மா, நேரத்துக்குச் சாப்பிடவா வது வந்துடக் கூடாதம்மா?

மாதவி: மன்னிச்சுடுங்கப்பா. இந்த ஊர் எல்லையிலே இருக்கற சேரிக் குழந்தைகளோடு பேசிக் கிட்டிருந்தேன். நேரம் போனதே தெரியல்லேப்பா! ஏம்பா நான் வர்ர துக்கு லேட்டாலு நீங்களாவது சாப் பிட்டிருக்கப்படாது? எவ்வளவு நேரம் எனக்காகக் காத்துக்கிட்டே உட் கார்ந்து இருப்பீங்க?

இன்ஸ்: நம்ம குடும்பத்திலே நாம இருக்கறதே ரெண்டு பேரு. இதிலே தனித்தனியே ஏன் சாப்பிட ணும்? ஒண்ணு உக்காந்து சாப் பிட்டா ஏதோ ஒரு நெறப்பு.

மாத: மன்னிச்சுடுங்கப்பா: இன் னமே எங்கே போனாலும் சாப் பாட்டு நேரத்துக்கு ரெடியா ஒடி வாந்துடறேன்; போதுமா? என் னப்பா ஒரு மாதிரியா இருக்கீங்க? எங்கே, சிரிங்கப்பா. சிரிச்சாத்தான் நான் சாப்பிடுவேன்.

இன்ஸ்: என்னம்மா இதெல்லாம்?

மாத: அப்பா, அப்பா, ஒரு விஷயம். நம்ப ஊர்க் கோடியிலே இருக்கற சேரிக்குப் போயிருந்தேன்னு சொன்னேன் பாருங்கப்பா. அங்கே இருக்கிற பொம்மனங்களையெல்லாம் கூப்பிட்டுப் பேசிக்கிட்டு இருந்தேன். எவ்வளவு நல்ல மனசு அவுங்களுக்குத் தெரியுமா?

இன்ஸ்: அம்மா மாதவி, நீ பாட் டுக்குக் கண்ட கண்ட இடத்துக்குப் போறது நல்லாவே இல்லேம்மா. பின்னாயச்சேன்னு தாயில்லாப் பிள்ளேன்னு உனக்கு நான் சொம்பவும் செல்லம் கொடுத்துட்டேம்மா.

மாத: நான் என்ன சின்னப் புள்ளே யாப்பா? எனக்கு நல்லது கெட்டது, விவரம் தெரியாதா? அஞ்சின்ன மாதிரி வீரத்தோடதானே சிறு வயசிலிருந்து என்னே வளர்த்திருக் கீங்க.

இன்ஸ்: என்னதான் இருந்தாலும் பெண்ணுப் பெத்தவங்க கவலப் படறதம் இருக்க முடியுமாம்மா?

மாத: போங்கப்பா. நீங்களும் எல்லா அப்பாக்களேயும் போலப் பயப்படுறீங்க; நீங்க பழைய யுகத்தில்

பிரதிநிதி. நான் புது யுகத்தின பிரதிநிதி.

(பாடுமெலோன்)

ஆண்கனிப் பார்த்ததுமே , இவள்
அஞ்சி மறைவதில்லை,
கோணி மினுக்காமல், செங்கை
குலுக்கி வரவேற்பாள்.
கற்பை அறிப்பவளே இவள்
கண்ணில் போற் கருவாள்.
அற்புதச் சுக்தி கொண்டாள்,
புதுஉல காக்கும் பெண்மணியே!

இன்ஸ்: அப்படின்ஸ இந்த வீட்டுக் குள்ளே ரெண்டு யுகத்தோட பிரதி நிதிகே இருக்கோம்னு சொல்றியா?

மாத: ரெண்டு யுகமும் தனித் தனியா இல்லேப்பா. ரெண்டு யுகமும் சந்திச்சாச்சு.

(கதவு தட்டும் ஒலி.)

ராஜ: மன்னிக்கணும். உள்ளே வரலாமா?

இன்ஸ்: வாங்க. உட்காருங்க; உங்களுக்கு என்ன வேணும்?

ராஜ: என் பேரு ராஜன். இந்த ஊரைச் சேர்ந்தவன். சமீபத்தில் தான் பட்டணத்திலேருந்து திரும்பி னேன். தங்களுடைய மகள் எங்க ஊர்ச் சேரி மக்களுக்கு ரொம்பவும் சேவை சேஞ்க வர்றதாக் கேள்விப் பட்டேன். நன்றி சொல்லித் நீருவது என்ஜை கடமைன்னு உடனே ஓடி வந்தேன். நானும் ஒரு சமூகத் தொண்டன்தான்.

மாத: அப்படியா? ரொம்ப மகிழ்ச்சி!

இன்ஸ்: சரி, சரி. புது யுகத்தின் பிரதிநிதி இன்ஜெத்தர் வந்துட் டாரா? எனக்குக் கொஞ்சம் வேலே யிருக்கு. நீங்க பேசிகிட்ட் டிருங்க, நான் வர்றேன்;

ராஜ: நான் உண்மையில் தொண்டு செய்வதைப் பா ரா ட் டு கி றே ன். சமூதாயத்தின் மேல் மட்டத்தி லிருக்கும் சிலர் சமூதாய ஒரு சநிதலைக்காடுன்னுட்டுத் தப்புக் கணக்குப் போட்டுக்கிட்டு இருக் காங்க. சமுதாயத்தின் அடித்தளத் தில் இருக்கும் எத்தனேயோ கோடி மக்களுக்குச் சமுதாயம் ஒரு நெருஞ் சிக் காடாதான் உறத்துது? மேல் மட்டத்தில் இருப்பவர்கள் தங்களேச் சுற்றியிருக்கும் சூழ்நிலேதான் உலகம் ஙூட்டு நிலக்காமே ஏழைகள் உலகத்தையும் கருணேயோடு பார்க்க வேணும்.

மாத: ரொம்பவும் புரட்கிகரமா இருக்கு, உங்களுடைய கருத்து. ஏதோ நான் செய்யும சேவைக்கெல் லாம் உதவி கெடைச்சாப் பரவாயில் லேன்னு நெனச்சுக்கிட்டு இருந்தேன்;

ராஜ: உதவிக்கு ஆளா? இதோ இன்றே இப்பொழுதே தயார்.

மாத: நன்றி.

ராஜ! என்கிட்டே சில நிட்டங் கள்ளாம் இருக்கு; அதைச் சொல் றேன். பிடிச்சிருந்தா பிறகு பேச லாம்;

மாத: சொல்லுங்க.

ராஜ: இந்த ஊர் மக்களின் நன் மைக்காக 'மக்கள் முன்னேற்றச் சங்கம்'னுட்டு ஒரு சங்கத்தை நிறுவு வோம். முக்கியமான வர்களே யெல் லாம் அதிலே அங்கத்தினர்களாக்கு வோம். நலிந்தோர்க்குப் பரிகாரம் தேடுவதே சங்கத்தின் முக்கிய வேலே. சேரிப் புனரமைப்பு போன்ற வேலே களையும் மேற்கொள்வோம், என்ன சொல்றிங்க?

மாத: சபாஷ்! அருமையான யோசனே! என் ஒப்புதலே இப்போதே தர்றேன்.

ராஜ: நமது சங்கத்துக்கு நிதி வேண்டும் அல்லவா?

மாத: ஆமாம்.

ராஜ: அதற்கும் நான் ஏற்பாடு செய்யறேன். நம்ம ஆபத்சகாயம் பாட்டுக் கச்சேரியும் குறும்பூர்க் குசலாம்பாள் நாட்டியக் கச்சேரி யும் ஏற்பாடு செஞ்சு வேண்டிய நிதி யைத் திரட்டிக்குவோம்.

மாத: உங்க உதவிக்கு நான் எப்படி நன்றி சொல்றதுன்னு தெரிய லீங்க.

ராஜ: பரவாயில்லீங்க. சேவை மனப் பான்மை என் உடம்போட பொறந் த துங்க. அப்ப நான் போய்ட்டு வர்றேங்க, பிறகு சந்திக்கிறேன்.

(காட்சி மாற்றம்)

மணி: என்னப்பா, ராஜன்? நேவைரம் எப்படி இருக்கு?

ராஜ: எத்த நேவரத்தைக் கேக் குறே அண்னே? மார்க்கட் நெல வரமா? மணிலாக் கொட்டையின் வீலே என்னுன்னு சொல்லட்டுமா?

துரை: அதானப்பா அல்லோக்கு என்னமோ சவால் விட்டுவிட்டுக் கெம்பினியே? அந்தச் சங்கதி என்னுன்னாலு கேட்டா நீ என்ன டான்ஞ, மல்லாக் கொட்டையைப் பத்திப் பேசறே!

ராஜ: (அலட்சியமாக) நீ என்ன மோ கெருப்பு கிருப்புன்னு சொன் னியே நெருங்கியாச்சுப்பா. இவிடே மேற்கொண்டு என்ன நடக்கு துன்னு பாரு.

துரை: அடே உண்மையிலேயே அசகாயப் புலிதாம்பா?

ராஜ: மாதவியோட விருப்பம் என்னுன்னு தெரிஞ்சிக்கிட்டேன்; நாலு வார்த்தை, அதற்கு அநுசர ணேயா? அப்படியே வார்த்தை ஜாலம், கொட்டினேன் பாரு. ஆளு அப்படியே அசந்து போயிட்டீச. ஆளு ஒரு சங்கடம். மாதவிக்காகச் சேரிக்கும் அங்கேயும் இங்கேயும் அலேய வேண்டி யிருக்கு? கஷ்டப்படாமே சுகம் கெடைக்குமா?

மணி:எனக்கென்னவோ நீ வெற்றி பெறுவேன்னு தோணலேப்பா.

ராஜ: போடா அவநம்பிக்கை! முயற்சி திருவினேயாக்கும்கிற பழ மொழியை அப்படியே முழுசா நம்பு றவண்டா நான்.

துரை: 'கிட்டாதாயின் வெட் டென மற' அப்படிங்கறதையும் மறந்துடக்கூடாது.

ராஜ: நான் யாரு தெரியும்லே? என் பெயர் என்ன? ராஜன், ஞாபகம் இருக்கட்டும். இந்த ராஜன் அகராதியிலே முடியாததுங்கற வார்த்தையே கெடையாது.

(நண்பர்கள் சென்ற பிறகு தனக்குள்ளே நினைத்துப் பார்க்கிறான்)

ராஜ: மாதவியோட பழக ஆரம் பிச்சு எத்தனே நாளாச்சு? இன்னும் ஒரு தடவையாவது மனசு தெறந்து பேசுலேயே! எத்தனேயோ இடத் துக்குக் கூடவே போயிட்டு வர்றேன். கொஞ்சம் கூடக் கலாரசனே இல்லாத பொண்ணு இருக்காளே, இந்தமாதவி! இந்த வலியிலே வீழவேண்டு இன் ஞெருவலியை அவமேலில் வீசறேன் மாதவி என்ற மூன்றெழுத்து அழகி என நெஞ்சத்துச் சிறையில் அகப்பட் டுக் கொண்டார். இதிலிருந்து அவள் தப்ப முடியுமா?

(காட்சி மாற்றம்)

இடம்: இன்ஸ்பெக்டர் வீடு.

இன்ஸ்: மாதவி, நான் சொல் றேன்னு கோவிச்சுக்காதேம்மா. நீ இனிமே வெளியே போய்ச் சுத்த றதை நான் அனுமதிக்க முடியா தும்மா. உன்னுடைய பொதுநலச் சேவையை எல்லாம் மூட்டை கட்டி வச்சுடும்மா.

மாத: (கொஞ்சலாக) அப்பா, அப்பா! என்னப்பா? நீங்க சொல்றது உங்களுக்கு நல்லா இருக்கா? எங்க சங்கம் ஆரம்பிச்ச பெறகு எவ்வளவு நல்ல காரியங்கள் செஞ்சிருக் கோம் அப்படிங்கிறதை மறந்துட் டீங்களே அப்பா?

இன்ஸ்: ஊருக்கு நல்ல காரியமா இருக்கலாம். ஆனு இப்ப நம்ம குடும்பத்துப் பேர் நாலு பேர் வாயிலே அடி பட வேண்டாங்கிறதுதான் என் அப்பிபிராயம்.

மாத: ஊருலே நாலு சொல் வாங்க. நாம உண்மைக்குப் பயப் பட்டாப் போதும்பா. ஊருக்கெல் லாம் பயப்பட வேண்டாம்.

இன்ஸ்: உலகம் தெரியாத பொண்ணாம நீ.

(சில நாட்களுக்குப் பிறகு மாதவி வீட்டில் தனியே இருக்கும்போது ராஜன் வருகிறான். அவன் வரும் போதே சாராய நெடியும் உடன் வரு கிறது.)

மாத: வாங்க மிஸ்டர் ராஜன், வணக்கம்.

ராஜன்: வணக்கம் மிஸ் மாதவி! உங்க அப்பா வேலியே புறப்பட்டாப் பலே இருக்கே?

மாத: ஆமாம். நாமும் சங்கத் துக்குக் கௌம்பலாமா? உங்களுக் காகத் தான் காத்துக்கிட் டிருந்தேன்.

ராஜ: அட்டா! எப்போது பார்த் தா லும் சங்கந்தானு? கொஞ் ச நேரம் இங்கேயே உக்காந்து வேற கலவையான விஷயமாப் பேசிக்கிட் டிருக்கலாமே!

மாத: என்ன ராஜன், இப்படிப் பேசுறீங்க? நமக்கு எவ்வளவு முக்கிய மான வேலேயெல்லாம் இ ரு க் கு? அதை விட்டுட்டு இங்கே அரட்டை அடிக்க நேரம் ஏது?

ராஜ: நமக்கு எப்பத்தான் வேலே யில்லே? குடிசை ஒரத்திலேயும் சேரி யிலேயும் எப்பப் பார்த்தாலும் சுத்திச் சுத்தி ஒரே போர் அடிச்சுப் போச்சு.

மாத: (நகைத்து) அதுக்குள்ளாற சலிப்பு வந்தாச்சா?

ராஜ: பொன்னான நேரத்தை வீணுக்கியது போதும். நான் சொல்ற தைக் கேளு மாதவி. பொது ஜன சேவை, சமூக சேவைன்னுட்டு இவியும் புலம்ப வேண்டாம். இன்ப மயமான வாழ்க்கைக்கு வழி காட்ட றேன். உன் சொகுசான மேனி சாதாரணப் புழுதிக் தரையில் தவழக் கூடாது. நசத்திலே அழுக்குப் படாமே வாழ வழி காட்டறேன். நாம் என்ன தான் முயன்றாலும் மாளிகையும் குடிசையும் ஒன்றுகி விடாது. நீ சின்னஞ்சிறு மலர். அந்த மலருக் குரியவன் நான். (நெருங்குகிறான்.)

மாத: சீ! எட்டி நில்.

ராஜ: கடு சொல் பேசக்கூட உனக்குத் தெரியுமா, மாதவி?

மாத: கடு சொல் என்ன? நீ வரம்பு மீறினால் சுட்டெரிக்கவும் தெரியும்;

ராஜ: சொ கு சு மொ ழி பே க கண்ணே! நான் எப்படியும் உன்னை அடைந்தே தீர வேண்டும்.



அதற்காகத்தான் இத்தனை நாள் உன்னோடு சகதியிலும் சேரியிலும் சுத்தினேன்;

மாத: சேவை மனப்பான்மை உன்னுடன் பிறந்தது என்று சொன்னியே; அதெல்லாம் வெறும் கதை தானு?

ராஜ: உனக்காக என் உல்லாச வாழ்க்கையையெல்லாம் உதறித் தள்ளி இருக்கிறேன் மாதவி;

மாத: அதற்காக என்னை உன் உல்லாச புரிக்கு அழைக்கிறியா?

ராஜ: ஆம் மாதவி. நீ ரொம்பவும் புத்திசாலி. விஷயத்தை எவ்வளவு விரைவாக ஊகிக்கிறாய்?

மாத: சீ மடையனே! எட்டி நில். உன்னைப் போய்ப் பெரிய மனிதன் என்று நினைத்துக்கொண்டிருந்தேனே! நான் எவ்வளவு பெரிய முட்டாள்? அ! நீ வெறும் அற்பப் பதரி!

ராஜ: என்ன சொன்னாய்?

மாத: பெண்கள் வீரியாட்டுப் பொம்மைகள் அல்ல, நீ இஷ்டப்படி வீரியாடுவதற்கு. வெளியே போடா மடையா! (கொதித்து எழுகிறாள்)

ராஜ: என்ன, வீரியாடுகிறியா என்னிடம்?

மாத: இதோ பார்? என் கையிலே என்ன இருக்கிறது?

ராஜ: (பயந்தபடியே) துப்பாக்கி..

மாத: ஆமாம். நீ வரம்பு மீறினால் நான் என்ன செய்வேன் என்பது எனக்கே தெரியாது. தொட்டிலே ஆட்டும் கை, தேவையானால் துப்பாக்கியும் பிடிக்கும். பெண்கள் என்றால் ஏதோ இன்னுக்கு ரையென்று இலிமேல் நெனைக்காதே. ம்! சீக்கிரம் இந்த இடத்தைக் காலி செய். இனி உன் நிழல் கூட இங்கே படுவது பாவம், போ, வெளியே! (குனிந்த தலையுடன் ராஜன் வெளியேறுகிறான்.)

இன்ன: (மறைந்திருந்து உள்ளே வருகிறார்) புலிக்குப் பிறந்தது பூனைக் குட்டி ஆகாதுதான்!

மாத: அப்பா! (ஓடிவந்து தத்தையைப் பிடித்துக் கொள்கிறாள்)

இன்ன: ஆம் அம்மா; இந்த நேரம் நான் மறைந்திருந்து எல்லாத்தையும் பார்த்துக்கிட்டுத்தான் இருந்தேன். என்ன தைரியம் அம்மா உனக்கு?


மாத: நான் ஏமாந்துட்டேன். மனிதர்களை எடை போட எனக்குத் தெரியலே அப்பா.

இன்ன: புது யுகப் பிறவிகளிடையே தங்கமும் இருக்கு. பித்தளையும் இருக்கு. மின்னுவதெல்லாம், தங்கமுன்னு நெனைக்கூடாதே! உண்மையும் பொய்யும் கலந்ததுதான் உலகம். நீ நெனைக்கிற மாதிரி உலகம் இன்னும் பக்குவம் பெறலேம்மா!

மாத: புரியுது, அப்பா புரியுது.

literoof

ASPHALT ROOFING SHEETS



Proudly Announce

Introduction of

"EXPO-DEL"

EIGHT-COR

6' LONG SHEETS

(Gulf Red - Painted)

Also available in

Janatha Popular

Deluxe Super Deluxe

Manufacturers

Light Roofings Limited

literoof MADRAS

Regd. Office:

226, LLOYD'S ROAD, MADRAS 600 086

Regional Offices:

New Delhi - Bombay - Calcutta



"ஏம்மா உங்க வீட்டை இவருக்கு நீங்களிற்கப் போறீங்களா?''

ரிஜிஸ்டர் ஆபீலில் மாமூலாகக் கேட்கப்படும் கேள்விதான் அது. ஆனல் 'எனக்கு இஷ்டம் இல்லே. என் வயிற்றில் பிறந்த ராவிகள் என்னைக் குத்திப் பிடுங்குறார்கள். தொல்லே தாங்காமல் விற்கிறேன்' என்று கூற முடியுமா?

சற்றிலும் நின்ற தன் பிள்ளைகளே அவள் பார்த்தாள். வீட்டை வாங்க முவ் வந்திருக்கும் செட்டியார் பக்கத் நிலேயே நின்று கொண்டிருந்தார். அவர் புன்முறவுடன் தலே அசைத் தார்:

''ஆ..மாம்..'' என்று குரல் நடுங்கக் கூறினுள்.

கோதையிடமும் அவளுடைய நான்கு பிள்ளேகளிடமும் வாங்க வேண்டிய இடங்களில் வரிசையாகக் கையெழுத்து வாங்கிக் கொண்டனர். செட்டியார் தயாராகக் கவர்களில் போட்டு வைத்திருந்த பணத்தை நான்கு பிள்ளேகளிடமும் கொடுக்க, அவர்களும் இளித்துக் கொண்டே வாங்கிக் கொள்வதைத் தூரத்தில் இருந்தபடியே கோதை கவனித்துக் கொண்டிருந்தாள்.

மனத்துக்குள் அவள் புலம்பினுள்: ''என்னே மல்லிச்சிடுங்க. உங்களுக்குக் கொடுத்த சத்தியத்தை என்னுலே காப்பாத்த முடியல்லே. உங்க பிள்ளேகளே என்னே அங்கம் 'அங்கமா வெட்டாத குறையாப் பங்கு கேட்டுச் சித்திரவதை செய்தாங்க. உங்க கயிலை விட்டுக் கட்டின வீட்டை வித்துத் தொலேச்சுட்டேன். நாய்களுக்கு எலும்புத் துண்டு போடறப்போலே அதோ உங்க பிள்ளேகளுக்குப் பங்கு பிரிச்சுக் கொடுத்தாறது.''

கோதை பிள்ளேகளைக் கவனித் தாள். கடைப் பிள்ளே முரளி கவரைப் பாண்ட் பாக்கெட்டில் திணித் துக் கொண்டான். தொகை சரியாக இருக்கிறதா என்று எண்ணிப் பார்க் கும் சிரமத்தைக் கூட அவன் எடுத்துக் கொள்ளவில்லே. யாராவது பிடுங்கிக் கொள்வார்களோ என்று பயப் படுவதுபோலத் தன் நண்பனின் காரில் படுவதுபோலத் தன் நண்பனின் காரில் படுவதுபோலத் தன் நண்பனின் காரில் அவசரமாக ஏறிக் கொண்டான். அதில் உடகார்ந்தபடியே அண்ணன் மார்களுக்குக் கை அசைத்து விடை பெற்றுக் கொண்டான்.

மற்றவர்கள் முதலில் பாகம் கேட்டுப் புரட்சிக் கொடி தூக்கியவன் இந்த முரளிதான். பெற்றவளுக்குத் தெரியாமல் ஜாதி விட்டு எங்கேயோ ஒரு கோவிலில் கல்யாணமும் செய்து கொண்டு, அதைத் தெரிவித்த அதே நிமிஷத்தில் தனது பங்கைப் பிரித்துக் கொடுக்கும்படி நாக் கூசாமல் கேட் டவன். அன்றைய தினமே அவனு டன் பேசுவதை விட்டு விட்டாள். அவனும் பெண்டாட்டியுடன் தனி யாக அன்றே வெளியேறி விட்டான்.

மூன்றாவது பிள்ளே பணத்தை நிதானமாக எண்ணினுன். கூடவே வந் திருந்த மனேவியிடம் தன் பொறுப்புத் தீர்ந்தது போல ஒப்புவித்து விட் டான். இருவரும் செட்டியாரிடம் மட்டும் விடை பெற்றுக் கொண்டு ஸ்கூட்டரில் பறந்து விட்டனர். கோதையைத் திரும்பிக்கூடப் பார்க்க வில்லே.

இவர்களாவது கோதையையும் அந்த வீட்டையும் விட்டுவிட்டுத் தனிக் குடித்தனம் நடத்துபவர்கள். இந்த மூத்த பிள்ளே சேஷாத்திரி, கூடவே இருந்துகொண்டு கடைசி ஒரு மாதத்தில் எப்படி வதைத்து விட் டான்! பெண்டாட்டி குமுந்தைகளே வெளியூரில் மைத்துனன் வீட்டுக்கு அனுப்பிவிட்டு, தான் வீட்டில் இருந்து கொண்டு ஒவ்வொரு வேளேயும் சாப் பிடாமல், 'நீயே சாப்பிட்டுக்கோ, நீயே வீட்டை அநுபவிச்சுக்கோ' என்ற ரீதியில் எப்படி ஆட்டி வைத் தான்.

முதல்வர்கள் இருவரும் செட்டியா ரிடம் பேசிக் கொண்டிருந்தார்கள். இரண்டாவது பிள்ளேராகு அங்கிருந்த படியே கை அசைத்துக் கோதையிடம் விடை பெற்றுக்கொண்டான். முதல்

பையன் எங்கே ஒட்டிக்கொண்டு விடு வானோ என்று பயத்தவன்போல் கொஞ்ச நேரத்தில் வந்து நின்று, ''போயிட்டு வரேம்மா'' என்று சொல்லிக் கொண்டு அவனும் போய் விட்டான்.

அவர்களுக்கு வேண்டியது கிடைத்துவிட்டது. அம்மா கை யெழுத்து இல்லாமல் வீடு விலே போனது என்ற விதத்தில் போனவர் செய்துவிட்டார். ''உன்னே உன் பிள்ளைகள் ஏலம் கூவி நடுச் சந்தியில் நிறுத்துவார்கள். அதனுல் இந்த வீட்டைப் பத்திரமா உன் காலத்துக்கு வச்சுக்கோ'' என்று சொல்லி, ''வித்தமாட்டேன்'' என்ற சத்திய மும் அவளிடம் வாங்கிக் கொண்டார்.

வீடு ஒழிந்து விட்டது. உண்மையி லேயே நடுச் சந்தியில்தான் அவள் நிற்கிருள். அவளால் வேறு என்ன செய்ய முடியும்?

ஒவ்வொருத்தனும் தன் பங்கு என்று ஒவ்வொரு பகுதியையும் பூட்டி வைத்து விட்டுப் போனதால், குடித்த னமும் வைக்க முடியவில்லே. பொங்கித் தின்னக் கையில் நாலு காசும் இல்லே. வீடு நிழல் கொடுக்கும். சோறு கூடவா போடும்?

செட்டியார் அருகில் வந்து நின்ருர். ''அம்மா! எழுந்திருங்க, போக லாம்.''

கோதை அழுது விட்டாள். ''நான் எங்கே போறது?''

''என்னம்மா இது? குழந்தைமாதிரி அழுகுறீங்க? வாங்க. நான் வீலே கொடுத்தாவும், அது உங்க காலத்துக்கு உங்களுக்கு நிழல் கொடுக் கும். பின் பக்கம் உங்க ஒரு ஆளுக்கு இருக்க, சாப்பிட ஒரு அறை கொடுக் கிறேங்க. நாலோடே அஞ்சா என்னே யும் ஒரு புன்னேயா நெனச்சுக்கிட்டு இருந்து வாங்க. இதோ, உங்களுக் குச் சேர வேண்டிய பணம். இதை நல்ல பார்ட்டிகிட்டே குடுத்து வட்டி வாங்கித் தரேன். நீங்க பொழைச் சுக்கப் போதும்.''

கோதை சந்தேகத்துடன் செட்டி யாரைப் பார்த்தாள். செட்டியார் சிரித்தார்.

''அம்மா, நீங்க தப்பா நெனச்சட் டீங்க. உங்க பிள்ளேகள் சொல்லி நான் செய்யல்லே. 'பாவிங்க! அம்மா நீ என்னோட வந்து இரு'ன்னு சொல்லாத அவங்க சொல்லியா இதை நான் செப்பேன்? உங்களேப் பத்தி அவங்க எந்தக் கவலேயும் பட றதா இல்லே. நானேதான் உங்களேக் கெஞ்சறேன். என் இடத்திலே, உண்மையிலே அது உங்க வீடுதாங்க, வந்து நிம்மதியா இருங்க.''

செட்டியார் நீட்டிய பணத்தை வாங்கக் கோதை மறுத்துவிட்டாள். ''எனக் கெதுக்குங்க? வக்கில் விஜய ராகவனிடம் பேசி ரெண்டு பேருமா ஏற்பாடு செய்யுங்க. என் புருஷன் போன இடத்திலேயே என் கடைசி மூச்சை நிறுத்த நான் ஆசைப்பட றேன். அது வரையிலும் என் அரை வயித்துக் கஞ்சிக்கு உதவினுப் போதும்.''

செட்டியார் தல்லவராக இருந் தார். தம் குடும்பத்தின் பெரியவர் என்ற மாதிரியில் மதிப்புடனும் மரி யாதையுடனும் நடந்து கொண் டார். குடும்பத்தினரையும் பழகச் செய்தார். கோதையும் பிள்ளேகளே நினைத்தால்தானே எந்த வேதனையும் என்பதுபோலக் கூடியவரையில் அவர் களே அடிக்கடி நினைத்துப் பார்க்கா மல் இருந்தாள்.

ஆனல் குற்றுயிராக அடித்துப் போட்டு விட்டுப் போன பிள்ளேகள் சிறிது இடைவெளி கொடுத்து விட்டு, இருக்கும் கொஞ்ச நஞ்ச உயிரையும் போக்க நினைத்தது போல ஒருவர் மாற்றி ஒருவர் வர ஆரம்பித்தனர்.

அப்போதும் முரளி அவளிடம் வராமல் வக்கில் வீட்டிற்கு வந்து வாயில் வந்தபடி கத்தினன்.

காரணம் ஒன்றுமில்லே. தங்களுக் குப் பணம் வந்த மயக்கத்தில் வேறு எதுவும் கொன்றவில்லே அவர்களுக்கு. இந்த இரண்டு மூன்று மாத இடை வெளிக்குப் பிறகு அவரவர்களுடைய மனேவி சுட்டிக் காட்டிய பிறகுதான் இந்தப் படித்த முட்டாள்களுக்கு அம்மாவுக்கும் ஒரு பங்கு இருக்கும் நினேவு வந்திருக்கிறது.

முதலில் மூத்தவன் வந்தான். கழுகுக்கு மூக்கில் வேர்ப்பது போல் அதைத் தெரிந்து கொண்டு மறு நாளே இரண்டாவது பிள்ளேயும், மூன்ருவது பிள்ளேயும் சேர்ந்து வந்து விட்டார்கள்.

ஒருவருவது அந்தப் பணத்துக்காக அந்த அம்மாவை அழைத்துப் போகத் தயாராக இல்லே. அம்மாவின் பலவீனத்தை உபயோகித்துக் கொண்டு, தங்களில் ஒருத்தன் அந்தப் பணத்தை அடித்துக் கொண்டு போய் விடப் போகிருனே என்ற பயம்.

நல்ல வேளையாகச் செட்டியாரோ, வக்கிலோ அவர்கள் நால்வரிடமும் பணத்தைப் பற்றிய தகவல் எதையும் தெரிவிக்கவில்லே.



அது போகட்டும். இவர்கள் வேலை பார்க்க ஆனை ஏதாவது ஏற்பாடு செய்திருக்கிறார்களா? ஒருத்தன் வந்ததும், அவன் வந்த மணி, நிமிஷம் தவறாமல் தெரிந்து கொண்டு பேசுகிறார்களே! ஒவ்வொருத்தனும் எப்படி இதைத் தெரிந்து கொள்கிறார்கள்?

ஆனால், அம்மா முதல் நாள் சாப்பிட்டாளா, அவள் செலவுக்கு என்ன செய்கிறாள் என்பது அவர்களுக்கு கவலை இல்லை. அப்பாவுடன் அம்மாவின் பசியும், பாசபந்தமும் மறைந்து விட்டதாக நினைக்கிறார்களா?

கோதை சிரித்துக் கொண்டாள். ''என்ன? நீயே சிரிச்சுக்கறே?''

கோதை நிமிர்ந்து பார்த்தாள். இரண்டாவது பிள்ளை ரகு நின்று கொண்டிருந்தான்.

''வாப்பா ரகு, வா.''

''நான் வரது இருக்கட்டும். உன் புள்ளை என்ன நெனச்சிண்டிருக்கான்?''

''நீ எந்தப் புள்ளையைச் சொல்றே?''

''எல்லாம் உன் மூத்த புள்ளையைத் தான் சொல்றேன். உன் தலையைத் தடவிப் பணத்தை வாங்கிண்டு போனால் நாங்கள் சும்மா இருப்போமா?''

கோதை மௌனமாக இருந்தாள். ரகு மீண்டும் தொடர்ந்தான்.

''நேத்திக்கு முரளி என் வீட்டுக்கு வந்தான். வக்கீல் ஏதோ உளறினான். யாரு உன்னைத் தங்களுடன் அழைச்சிண்டுப் போய் வச்சுக்கிறளோ, அவனுக்குத்தாள் அத்தப் பணம் சேரும்னு சொல்றானே!''

''சொன்னாரா? இருக்கலாம். அதிலே ஒண்ணும் தப்பு இருக்கிறதாத் தெரியலியே?''

''ஏன் இல்லே?'' என்று சீறி விழுந்த ரகு தொடர்ந்து கூறினான்; ''முரளி வீட்டிலே நீ போய் இருக்கமாட்டே. என் மீனவி விமலாவுக்கும் உனக்கும் ஒத்துக்காது. அலை மன்னி மாதிரி அவளுக்கு வேஷம் போட்டு ஏமாத்தத் தெரியாது. இதோ பாரு. சொல்லிட்டேம்மா? சேஷன்தான் கொள்ளி போடறவன், குடும்பத்துக்கு மூத்தவன்னு, ஏதாவது பைத்தியக்காரத்தனமா நெனச்சிண்டு அங்கே போய் இருந்துண்டு, அவன்கிட்டே பணத்தைக் குடுத்துத் தொலச்சே, நாங்க சும்மா இருக்க மாட்டோம்.''

''ரகு, பத்தியிலே உட்கார்த்துட்டு இலையிலே விழறதை நிம்மதியாச் சாப்பிடணும். மத்தவன் இலையிலே விழறதைப் பார்த்துண்டே இருந்தா, நமக்குக் கிடைக்கறதைக் கூடச் சாப்பிட முடியாது. அதை விடு. எனக்குன்னு என் உடலும் உயிரும் ஒட்டி இருக்கப் பணம் வச்சிருக்கேன். நான் எப்படி இன்னொருத்தனுக்குக் குடுக்க முடியும்?''

''உனக்குத் தேவை ரெண்டு வேளைச் சோறும், ரெண்டு புடைவையுந் தானே? நாங்க நாலு பேர் சேர்ந்து அதைத் தர மாட்டோமா? எங்களை நம்பாமே நீ உனக்குன்னு தனியாப் பணம் வைச்சுக்க ஆசைப்படறே!''

''நம்பிக்கைங்கறது பரஸ்பரம் வேணும்டா ரகு! அம்மாவைப் புள்ளைகளும் நம்பணும். என் வரையிலும் எல்லாரும் ஒண்ணுதான் எனக்கு.''

''கடைசியாது: ஒரு கண் வெண்ணெய், ஒரு கண் சுண்ணாம்பு.''

''ரகு, உனக்கு ஒண்ணு தெரியுமா? உங்க நாலு பேரையும் நான் பெத்துப் பால் குடுத்ததையும் வளர்த்ததையும் நீயே ஒத்துக் கொள்ள வேண்டு நெனக்கறேன். ஆனா, பாலை அளவு பார்த்து நான் குடுக்கல்லேடா. சேஷன் பொறந்து மூணு மாசத்தான் பால் குடுத்தேன். எனக்குப் பிரமாதமா உடம்புக்கு வந்து ஆஸ்பத்திரியிலே இருந்தேன்.''

''மருந்துகள் நெறையச் சாப்பிட்டு உடம்பைப் பார்த்துண்டதாலே,



எமது மனமார்ந்த தீபாவளி வாழ்த்துக்கள்

சுகந்த மணம் வீசும் ஊதுபத்திகள் அகர்பத்திகள் பூஜைக்கும் வீடுகளுக்கும்
விரும்பி வாங்குவது உயர்ந்த முறையில் தயாரிக்கப்படுவது

SASTRYS!



sudarshan



INCENSE STICKS
A NEW INVENTION IN PERFUME WORLD

தயாரிப்பாளர்கள்
வெங்கடேச்வரா அகர்பத்தி பாக்டரி
P. B. No. 1 சிந்தாமணி-563 125
கிளை: 15, அக்கிப்பெட்.
பெங்களூர்-53

சென்னை நகர ஏஜண்ட்
N.R. ஈஸ்வரி
No. 2, வீராசாமி பிள்ளை தெரு
பெரியமேடு, சென்னை-3

LR. SWAMI PP.

OUR HEARTY DEEPAVALI GREETINGS TO ALL



THE PALGHAT CHIT FUNDS PRIVATE LIMITED

Registered Office: 16, Nana Street,
Thyagarayanagar, Madras-600 017 Phone: 442583

NEW CHITS

Group	Capital Rs.	Monthly Rs.	Duration Months
CM	1,00,000/-	1,000/-	100
CB	10,000/-	100/-	100
CC	5,000/-	50/-	100

LAST DATE FOR RECEIPT OF APPLICATION 1-12-1981

For details contact any of our Branches:

City: George Town (Phone: 23651, Ayanavaram (Phone: 615090), Purasawalkam (Phone: 662315), The Palghat Credit Corporation, T.Nagar (Phone: 442583)

Other Branches: Palghat (Phone: 4403, Coimbatore (Phone: 22491) and Hyderabad (Phone: 35935)

Prize amounts are released on Securities only and not on Sureties.

35 YEARS STANDING IN CHIT BUSINESS

LR. SWAMI/PP

உனக்கும் உண்மே அடுத்து ஹரி பொறந்த போதும் பால் தெறைய இருந்தது. ரெண்டு பேரும் முணு, நாலுவயசு வரையிலும் குடிச்சிங்க. ஆனு, பாவம் முரளிக்கு முதலிலே அந்தத் தாய்ப்பாலே ருசிக்கும் அதிர்ஷ்டம் கெடைக்கலே. எனக்கு வயசாய்ப் பிறந்ததினுலேயோ என்னவோ எனக்குப் பாலே இல்லாமப் போச்சு.''

''இப்ப எதுக்கு அத்தக் கதையெல்லாம்?''

''எல்லாம் அவசியத்தான். அது எப்படி. எத்த விதத்தில் குறைக்கலாம்னு உங்களுக்குச் சண்டை போடத் தெரியாத பருவம் அது. அம்மான்னு ஒரே நம்பிக்கையிலே வளர்ந்திங்க; நான் அதே நம்பிக்கையை இப்பவும் உங்களிடம் எதிர் பார்க்கிறேன். அம்மா மோசம் செய்வாளான்னு உங்களில் ஒருத்தனுக்காவது ஒரு தடவையாவது கேள்வி எழுந்திருக்கா?'' ரகு மௌனமாக இருந்தான்.

''நான் அன்னிக்கும் மாறல்ல, இன்னிக்கும் மாறலே. போகிறது, சாப்பிடருயா?''

''வேண்டாம். விமலாவுக்குக் கோபம் வந்தும். அவ காத்தின் டிருப்பா.'' ரகு எழுந்து சென்று விட்டான்.

'இன்று சமாதானமாகிப் போய் விட்டான். இவன் வந்தது தெரிந்து மீண்டும் அவர்கள் இருவரும் வருவார்கள். இவனே மீண்டும் சந்தேகம் ஏற்பட்டு வருவான்.' கோதைக்குத் திடீரென்று ஒரு விரக்தியும் வெறுப்பும் ஏற்பட்டன.

அன்று இரவே வக்கீல் விஜயராகவனே வரச் சொல்லிச் செட்டியாரிடம் கூறினுள். அவர் நேரே பேரி மூலம் உடனே வர வழைத்து விட்டார்.

வக்கீல் வந்ததும் மெல்லத் தன் முடிவைக் கூறினுள். அவரும் அதில் இருந்த செட்டியாரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''நான் ரோம்பத் தூரம் போகல்லே. சோலிங்கபுரம் உங்களுக்குத் தெரியும். அங்கே இருந்து என் வாழ்நாளைக் கொஞ்ச நஞ்சம் இருக்கறதையும் தள்ளிடறேன். என் புள்ளைகளுக்கு என் இருப்பிடத்தைச் சொல்லாமல் இருந்தாப் போதும். இந்தப் பிறுங்கல் எண்ணத் தொடராமல் இருந்தாகணும்.''

''அது சரிம்மா. உங்க காலத்துக் கப்புறம் இந்தப் பணத்துக்கு..'' வக்கீல் கூறிமுடிப்பதற்குள் கோதை இடைமறித்தாள்.

''அந்தக் கோவிலுக்கே சேரட்டும். பகவான் எனக்கு நன்னு புரியவெச்சுட்டார். பணம் பாதாளம்; பாங்கிலே பணம் போட்டு வெச்சா அது இந்த ஜன்மத்திலே மட்டுந்தான் உதவும். ஒருத்தருக்குத்தான் பயன் டும். நாம் செய்ய காரியம், புண்யம் இருக்கே. அதுதான் பாங்கிலே போட்டு வைக்கிற மாதிரி, இந்த ஜன்மத்துக்கு மட்டும் இல்லே; வரப் போற ஜன்மங்களுக்கும் உதவும். ஒரு தலைமுறை மட்டும் இல்லே, பல தலை முறைகளுக்கும் உதவும். அவர் வெச்சுட்டுப் போன வீடு பிள வைத்தான் உண்டாக்கிக்குது; அதனுலே என் குழந்தைகளுக்குக் குறைஞ்ச பட்சம் என் பங்காவது புண்ணியம் தேடி வைக்கச் செல வழிக்க ஆசைப்படறன்.''

''அது சரிம்மா. நீங்க ஏன் மறைஞ்ச அநாதை மாதிரி அவிப் படணும்? நடந்துவிலே போய் மனச் சாந்தியா இருந்துட்டு வரலாமே?''

கோதை விரக்தியாகச் சிரித்தாள். அழுகையும் சிரிப்பும் ஒலிக்கப் பேசினுள்: ''இந்தக் காலத்திலே குழந்தைன் அதிகமாகப் பெத்துக்கறதை யாரும் ஆதரிக்கிறதில்லே. தனி மரம் தோப்பாகாதுன்னு நீங்களே சொன்ன நான், நிறையக் குழந்தைகள் இருந்தால் பித்காலத்தில் ஆதரவா இருக்கும்னு சொல்லிண்டிருந்தேன். நானு குரவில் ஒரு குரல் கூட, 'அம்மா, நீ எங்ஙேடே வாம்மான்னு கேட்கல்லே. எதிரியைப் பார்க்கற மாதிரி சந்தேகப் பார்வைதான். என்னேடு உறவாடித்து. பரிவோ, பாசமோ அத்தப் பார்வையிலே நான் என்னனவு தேடியும் கெடைக்கல்லே. இந்த வேதனையை நானு புள்ளைகளிடம் பட்டதை விட, ஒன்ரே, ரெண்டோ புள்ளைகளிடம் பட்டால், கொஞ்சம் பொறுத்துக்கும்படியாய் இருக்கும் இல்லியா?'' கோதை புடவைத் தலைப்பால் முகத்தை மூடிக்கொண்டு அழுதாள்.

குடி இருந்த கோவிலின் பெருமையை உணராத கோதையின் பிள்ளைகளும், கோவிலைக் கொள்ளே யடித்துச் சிலைகளையும் நகைகளையும் கனவாடும் கயவர்களும் வக்கில் விஜய ராகவனின் மனத்தரரில் ஒரே தட்டில் நின்றனர். *

தினகரனே!



நீக்கும்படை விரித் திரியும் நினகர! நின்
போக்குவர வுக்குமுற்றப் புள்ளி யிடையாதோ?
ஏக்கம் அகற்றியிர்க் கின்னுனவை நல்குகிறுய்!
ஆக்கம் பெருகுவதன் அனலாலே யாமன்றே?

உடலோ அனற்பிழம்பாம்! உள்ளமோ தண்கருணை!
கடலிலே நீர்முகந்து காளியில் ஊற்றின்ற
அடலார்ந்த மேகமுன்றன் ஆகிணயால் அல்வப்போது
இடந்தோந்து மண்மகளின் இதயம் குளிர்விக்கும்.

சந்திரனுர் வரவுக்குச் சமுத்திரத்தில் போயொளிப்பாய்.
விந்தைமதி நிந்துன்ற வெண்ணிலவும் நீவிரும்பித்
தந்தவொளி யாருமெவில் தன்னியே சந்துவக்கும்
எந்தை, நின் வள்ளலென இயம்பிடவும் வேண்டுமோ?

காற்றழுத்த மண்டலத்தைக் கடலிலே ஒவ்வொருகால்
தோற்றுவித்துப் பூமியினத் துயரிலே ஆழ்த்துவதும்
கூற்றுவனே வரவழைத்துக் கொள்ளுவிருந் தளிப்பதுவும்
ஏற்றமிகும் செயலென்றே எண்ணுவையோ எரியோயே!

''தேவன் விதித்தவிதிக் கேற்ற வினைசெய்வேன்
ஏதும் அவரவர்செய் இன்பதுன்பக் காரணமாம்
போதில்லே நின்றுரைக்க'' என்றே புகன்ருேடும்
ஆதவனே! நின்பெருமை ஆறறிய வல்லாரே?



உடல் ஊனமுற்றோர் நலனுக்காக அண்ணாவின் அரசு ஆற்றிடும் அரும் பணிகள்



உடல் ஊனமுற்றோருக்கான இந்த அனைத்துலக ஆண்டில், தமிழ் நாடு அரசு உடல் ஊனமுற்றோரின் நல வாழ்வுக்காக பல்வேறு திட்டங்களை உருவாக்கி செயல் படுத்தி வருகிறது.

கடந்த ஒரு ஆண்டில் உடல் ஊனமுற்றோர் நலனுக்காக ஆற்றிய அரும் பணிகள்.

ஊனமுற்றோர் நலன்:

ஊனமுற்றோருக்கு ரு. 13 இலட்சம் செலவில் 1,666 கருவிகள்.

ரு. 3.41 இலட்சம் செலவில் 70 ஊனமுற்றோருக்கு பயிற்சி.

ரு. 1.76 இலட்சம் செலவில் 46 ஆசிரியருக்கு பயிற்சி.

42 ஊனமுற்றோர் பள்ளிகளுக்கு ரு. 33.25 இலட்சம் நிதியுதவி.

ஊனமுற்றோர் 94 பேர்களுக்கு பெட்டிக் கடை வைக்க ரு. 0.99 இலட்சம் மானியம்.

ரு. 2.00 இலட்சம் செலவில் பயிற்சி பெற்ற 130 ஊனமுற்றோருக்கு பயிற்சியும் வேலை வாய்ப்பும்.

ஊனமுற்றோருக்கு சிறப்பு பணியாற்ற மதுரையில் ஒரு பிராந்திய மறுவாழ்வு நிலையம்.

ஊனமுற்றோர் 86 பேர்களுக்கு சுய தொழில் செய்ய ரு. 1.25 இலட்சம் மானியம்.

அவர்களது துயர் துடைக்க மேலும் தொடர்ந்து பணியாற்றுகிறது.

இயக்குநர்,
செய்தி மக்கள் தொடர்புத் துறை
தமிழ்நாடு அரசு,
சென்னை-600 009.

DIPR|61843|81-1.

Deepavali Greetings...

We produce a range of chemicals basic to better living

INORGANIC CHEMICALS
- Caustic soda
- Stable bleaching powder
- Hydrochloric acid
- Liquid chlorine
- Calcium chloride
- Aluminium sulphate
- Potassium chlorate
- Silicon tetrachloride
- Bromine • Bleach liquor

ORGANIC CHEMICALS
- Methyl chloride
- Methylene chloride
- Chloroform
- Carbon tetrachloride
- Chlorinated paraffin wax
- Ethyl silicate



THE METTUR CHEMICAL & INDUSTRIAL CORPORATION LIMITED
Mettur Dam-636 402-Salem Dt. Tamil Nadu.

R. Parthasarathy.

பாட்டனாரின் முதுகுவலி, பாட்டியின் உடல்வலி,
அம்மாவின் தலைவலி,
அப்பாவின் ஜலதோஷம், மகனின் சளுக்கு
அனைத்துக்கும்
நிவாரணம் அளிக்க
இவ்வந்தோறும்
இருக்க வேண்டிய
நல்ல மருந்து.













அமிர்தாஞ்சனம்


வலி, ஜலதோஷம், சுளுக்கு ஆகியவற்றிற்கு சிறிதளவு அமிர்தாஞ்சனம் தடவுங்கள். அதன் சிறப்பான பத்து மருந்துகளின் கலவை வியக்கத்தக்க வகையில் உங்களுக்கு நிமிஷத்தில் நிவாரணமளிப்பதை உணர்வீர்கள்.
சிக்கனமான ஜாடி, சிறிய பாட்டில் மற்றும் மலிவு விலையில்
அடக்கமான டப்பாவிலும் கிடைக்கிறது.

அமிர்தாஞ்சனம் 80 ஆண்டுகளுக்கு
மேலாக நம்பகமான குடும்ப நிவாரணி.

அனைவருக்கும் எமது
தீபாவளி நல்வாழ்த்துக்கள்

இணையில்லா செயல்
திறன் கொண்டது

LPC®



DEEPWELL
TWO STAGE
PACKER TYPE
JET PUMPS

சுலபமாக நிறுவலாம் •
குறைந்த பராமரிப்பு செலவு •

LPC®

ஜெட் பம்புகள்

THE EL P. EM. INDUSTRIALS
POST BOX NO 1053
393, METTUPALAYAM ROAD
COIMBATORE - 641002
PHONE OFFICE 24997• WORKS 22757
GRAMS NAIDUBROS

OSR

சென்டெக்ஸ்

தயாரிப்பாளர்கள் & ஏற்றுமதியாளர்கள்

படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள், மேஜை விரிப்புகள், அலங்காரத் துணிகள், டவல்கள், டெர்ரி டவல்கள், மற்றும் திரைச் சீலைகள், சீர்சர்க்கர் முதலியன...

எங்கள் பிரத்யேக ஷோ ரூம்கள்:

உம்மிடியார் அங்காடி மையம்
எல். ஐ. சி. எதிரில், 811, அண்ணா சாலை
சென்னை - 600 002

நீலகிரிஸ் டெக்ஸ்டைல்ஸ்
நீலகிரிஸ் பில்டிங்ஸ்,
11, பிரிகேட் ரோட், பெங்களூர்.

சென்னிமலை நெசவாளர்கள்
கூட்டுறவு சங்கம் லிமிடெட்
சென்னிமலை, தமிழ்நாடு.

எம். பி. நாச்சிமுத்து, பி.ஏ.பி.எல்.,
தலைவர்

Elegant



72 ஆண்டுகளாகப் புகழ் பெற்றது

ஆர். எஸ். பதி மருந்து

(R E G D.)

- தலைவலி
- ஃப்ளூ
- ஜலதோஷம்
- கைகால் வலி

முதலியவைகளுக்குச் சிறந்த மருந்து

சேல்ஸ் டாக்ஸ் லிசென்ஸ். டிரக் லிசென்ஸ் உள்ள வியாபாரிகள் எங்களுக்கு நேரிடையாக ஆர்டர் எழுதவும்

தயாரிப்பாளர்கள்:

ஆர். எஸ். பதி அன் கோ.

214 & 215, மேலமாசி வீதி—தபால் பெட்டி எண் 99

மதுரை-625 001

—Crown Services



ॐ

பரிசுத்தமான

கோபால்

கற்பூர பில்லைகள்



வைரத்தைப்போல் பிரகாசிக்கும்
ஆண்டவன் அருளையும் கூட்டிவைக்கும்.

அழகிய அட்டை
பெட்டிகளிலும் பிளாஸ்டிக்
டப்பிகளிலும் கிடைக்கும்



தயாரிப்பாளர்கள்:

ஆர். கோபாலகிருஷ்ணன் & சன்

கோபால் கேம்பர் ஒர்க்ஸ்
90, தெலுங்கு பிரமணர்தெரு
கோயமுத்தூர்-641 001

ஏஜென்சி இல்லாத ஊர்களிலிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படும்

அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்



—ஆத்மாஸ்

Edited and Published by R. Narayanaswamy, for and on behalf of the Kalaimagal Office and Printed at M.L.J. Press Private Ltd., 87, Mundakakanni Amman Koil Street, Madras-600 004.
Managing Editor: K. V. Jagannathan.

20616

மொரார்ஜீ :பேப்ரிக்ஸ்

ஏனென்றல் டிசைன்கள் எவ்வளவுதான் கண்ணுக்கு அழகாக இருந்தாலும் நல்ல அடிப்படை அம்சங்கள் அவசியம் இருக்க வேண்டும்

நீங்கள் மொரார்ஜீ மில்ஸ் வழங்கும் துணிகளை வாங்கும் போது பகட்டான டிசைன்கள், எடுப்பான வண்ணங்களுக்கு மேலான ஒன்று உங்களுக்குக் கிடைக்கிறது. அதுதான் அவற்றின் தரம். அந்த உயர்வான தரம்தான் மொரார்ஜீ நெய்யும் ஒவ்வொரு இழையுடனும் கவனமாக பின்னப்பட்டு உருவாக்கப் பட்டுள்ளது. இன்று அது நூறு ஆண்டுகளுக்கும் மேலாக பூரணத்வம் பெற்று அற்புதக் கலையாக விளங்குகிறது.

ஏனென்றல் நாங்கள் டிசைனுக்கு எவ்வளவுதான் கண்ணுக்கு அழகாக இருந்தாலும் நல்ல அடிப்படை அம்சங்கள் அவசியம் இருக்க வேண்டும் என்று உறுதியாக நம்புகிறோம்.

சூட்டிங்குகள்
- ஷர்ட்டிங்குகள்
- புடவைகள்
- ட்ரெஸ் மெட்டீரியல்கள்

MORARJEE MILLS

தி மொரார்ஜீ கோகுல்தாஸ் ஸ்பின்னிங் & வீவிங் கம். லிட்.
டாக்டர் அம்பேத்கர் ரோடு, பரேல், பம்பாய 400 012.

Contour Ads-MM-342/81 Tam

மொரார்ஜீ மில்ஸ்

Regd. No. M. 2748

காந்தமென அலங்காரம் கவர்ந்திழுக்க

சாந்தமுள்ள பொட்டுவீர் நெற்றியிலே.



கவிபாடுதே உங்கள் கண்கள்...கவர்ச்சி காட்டுதே சோர இதழ்கள். கட்டழகு மலருதே. நெற்றி கொண்ட சிங்கார் குங்குமத்தால்.

சிங்கார்...உன்னத பொருட்களால் உருவானது. உங்கள் உள்ள நிலைக்கும் உடை அழகுக்கும் ஏற்ற வண்ணங்களிலே.

சிங்கார்

குங்குமப் பொட்டு

–இந்தியாவின்

ஒப்பற்ற

அழகுதிலகம்.